36
(Regis)tered No. M. 2330
"SIDDHANTHAM"
Vol. 20—No. 1

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க்கங்காகும்'—திருமந்திரம்

(மலர்) 20 | விய தை 1947 ஜனவரி | இதழ் 1

உள்ளுறை — பக்கம்


| | |
|---|---|
| சமாஜப் பணி ... | 1 |
| வரவேற்பு ... | 8 |
| சைவர் மகாநாட்டுத் திறப்புரை ... | 10 |
| சைவ இளைஞர் மகாநாட்டுத் திறப்புரை ... | 17 |
| சைவ மங்கையர் மகாநாட்டுத் திறப்புரை ... | 19 |
| சைவர் மகாநாட்டு நிகழ்ச்சிகள் ... | 21 |
| சைவ இளைஞர் மகாநாட்டு நிகழ்ச்சிகள் ... | 27 |
| சைவமங்கையர் மகாநாட்டு நிகழ்ச்சிகள் ... | 28 |
| தீர்மானங்கள் ... | 29 |
| சைவர் மகாநாட்டுத் தலைமை உரை ... | 30 |


பத்திராசிரியர் : ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.
உதவிப் பத்திராசிரியர் : கி. சிவராமன், எம். ஏ.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.
(ஆண்)டுச் சந்தா ரூபா 2. 1947 தனிப் பிரதி அணா 3.

சமாஜத்திற்கு உறுப்பினர் சேர்த்துத்தருவதாக திருச்செங்கோடு சைவ சித்தாந்த சமாஜ நிறைவு விழாவில் உறுதி கூறினவர்களும் உறுப்பினர் தொகையும் வருமாறு:

| | |
|---|---|
| திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை வேலூர். | 100 |
| இராவ்பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் BABL | 100 |
| திரு. W. T. மாசிலாமணி முதலியார் இந்து மத பாடசாலை வாலாஜாபாத் | 100 |
| திரு. A. கங்கணர் சோதி சன்மார்க்கம் மதுரை. | 100 |
| திரு. கனகசபாபதிப் பிள்ளை | 50 |
| ,, முத்துகிருஷ்ண பிள்ளை | 25 |
| திடிசைக்கிழார் அ. சிதம்பரனார் | 25 |
| திரு. P. M. T. தேனப்பச் செட்டியார் புதுக்கோட்டை | 25 |
| வரவேற்புக் கழகத்தார் | 12 |
| முருகேச முதலியார் பொத்தனூர் புதுப்பாளையம் | 10 |
| திருச்செங்கோடு-தி. மோ. அர்த்தநாரி | 10 |
| அம்மை சங்கரர் மைலம் | 10 |
| இ. சங்கர குமரப்பிள்ளை ஆத்துக்குடி | 10 |
| கு. மதுரை முதலியார் அரிமளம் | 10 |
| கா. இராமநாதன் செட்டியார் B. A. B. L. | 10 |
| அ. மு. பரமசிவானந்தம் B. O. L. | 10 |
| சின்னசாமி ரெட்டியார் | 10 |
| காஞ்சனமாலை அம்மையார் | 10 |
| இராவ் சாகேப் S. வையாபுரிப் பிள்ளை B. A. B. L., | 10 |
| V. P. தங்கவேல் இளைஞர் கழகம் | I0 |
| பு. ரா. சுவாமிநாதன் M. A. L. T. அண்ணாமலை நகர் | 5 |
| G. கல்யாணம் M. A. [Dip Econ] | 5 |
| K. சிவராமன் M. A. | 5 |
| மௌனம் சோம சுந்தரத் தம்பிரான் | 5 |
| நமச்சிவாய முதலியார் | 5 |
| இரத்தின சபாபதி முதலியார் | 5 |
| க. வச்சிரவேலு முதலியார் B A. L. T. | 5 |
| O. M. இராஜவேலு முதலியார் சித்தூர் | 5 |
| A. இராமசாமி கோட்டையூர் | 5 |
| சிவ குப்புசாமி ஆம்பூர் | 3 |
| சோ ம குமாரசாமி பிள்ளை சேலம் | 5 |
| V. K. விருத்தாசலம் செட்டியார் தஞ்சை | 5 |
| தட்சலிங்கம் தாம்பரம் | 5 |
| பஞ்சநதம் பிள்ளை | 5 |
| A. இராமய்யா | 5 |
| சதாசிவ ஐயர் | 5 |
| தங்க விநாயகம் கொடுமுடி | 5 |
| அ. கு. காமாட்சி M. A. சேலம் | 5 |
| R. சேது அம்மாள் வைத்திய கல்லூரி வேலூர் | 5 |
| K. குப்புசாமி கௌண்டர் பாண்டிபட்டி | 5 |
| M. R. சுப்பிரமணிய குருக்கள் விருதுநகர் | 5 |

சமாஜ உறுப்பினர்கள் சேர்த்துத் தர முன்வருபவர்கள் தங்கள் பெயரையும் உறுப்பினர் எண்ணிக்கையையும் தெரிவித்தால் அடுத்து வரும் இதழ்களில் வெளியிடுவோம்

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

மலர் 20 | வியய தை 1947 ஜனவரி | இதழ் 1

## சமாஜப் பணி

[பத்திராசிரியர்]

திருச்செங்கோட்டில், சென்ற டிசம்பர் 25, 26, 27-ந் தேதிகளில், சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் ஆண்டு விழாவும், சைவர் மகாநாடும் நடைபெற்றன. அதுகாலை கூடிய கூட்டங்களில் அறிஞர்கள் பலர், சமாஜம் இனிச் செய்யவேண்டிய பணிகளைப்பற்றிப் பெரிதும் வற்புறுத்திப் பேசினர். இவர்கள் கருத்துக்களைத் தழுவிச் சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இவற்றின் விவரங்களை இச்சஞ்சிகையின் பிறிதோர் பகுதியிற் காணலாம். இங்கு அப்பணிகளின் இன்றியமையாமையைப்பற்றிச் சிறிது விளக்கி, அவற்றுள் விரைந்து கவனிக்கத் தக்கவைகளை எடுத்துக்காட்டி அமைவாம்.

நம் சைவ சமயமானது உண்மை நிறைவிலும் பண்டைப் பெருமைகளிலும் மிகவும் உயர்ந்ததொன்றே. ஆயினும் சில தலைமுறைகளாகச் சைவ சமுதாய வாழ்வில் ஒரு தளர்ச்சி தோன்றி வளர்ந்து வந்துள்ளது. சமய உண்மைகளை உள்ளவாறு எடுத்துரைப்பார் தொகை சுருங்கிவிட்டது. தவறான எண்ணங்களும் கண்மூடி வழக்கங்களும் புகுந்துவிட்டன. சமய நிலையங்களிற் பெரும்பாலன தம் ஞானபாகப் பணியைச் செவ்வனே செய்யத் தவறிவிட்டன. கிரியைகள்தாமும், பல இடங்களில் ஆகம விதிப்படி உள்ளுணர்வுடன் நிகழாமற் போனதால், தெய்வ சாந்நித்தியமும் பண்டைக் காலத்திற்

59922



போல் விளக்கமுற்றுத் திகழவில்லை. அவசியமாக வேண்டிய
ஆதரவுகள் குறைந்துவிட்டன. இப்படித் தளர்நிலை முதிர்ந்த
போது, அகப் பகை தோன்றிற்று. புறப் பகை பெரிதும்
வலுத்தது. சைவச் சிறுவர் சிறுமியர் கற்கும் பள்ளிகள்
பெரும்பாலனவற்றில் சைவ சமய உணர்ச்சி கிடைத்தற்கு
வாய்ப்பே இல்லை. புறச் சமயத்தவர் தம் மதத்தைப் பரப்பும்
நோக்கோடு வைத்து நடத்தும் கல்வி நிலையங்களில், இந்துக்
களின் சமய உணர்ச்சி நேர்முகமாகவும் மறைமுகமாகவும்
ஒடுக்கி அழிக்கப்பட்டு வந்துள்ளது. இத்தகைய கல்விக்
கூடங்களில் கற்றுத் தேர்ந்து வாழ்க்கை நடாத்தும் பெற்றோர்
கள், தம் பண்டையோர் சமயத்திற் பற்றின்றி யொழுகுதல்
வியப்பன்று. இந்நிலை பல ஆண்டுகளாய் நீடித்திருந்து, சம
யத்தில் அசட்டை, வெறுப்பு, பகைமை என்னும் உணர்ச்சி
களை ஆங்காங்கே எழுப்பிவிட்டுள்ளது. உண்மையை எடுத்
துக் காலத்திற்கேற்றவாறு பள்ளிகளிலும் கோயில்களிலும்
ஊர்களிலும் போதிக்கத் தவறினமையே முக்கிய காரண
மாகும். ஏனைய காரணங்களும் உள. விரிப்பிற் பெருகும்.

எவ்வாறோ நிகழ்ந்துள்ள இத்தளர்ச்சியை நீக்கி, நம்
அரும்பெருஞ் சமயத்தை மீண்டும் உயிருடையதாக்கி, வாழ்க்
கையை வளம்படுத்த வழிதேடுதல் அவசியம். ' இம்முயற்சி
எற்றுக்கு ? கால பேதத்தினால் தொன்மதங்கள் தொலைதலும்
புது மதங்கள் புகுதலும் இயல்புதானே ? நம் நாட்டில்
புதுவதாய்ப் புகுந்த பிறநாட்டு மதங்கள் இரண்டும் பாவி
இந்து மதத்தையும் நாகரிகத்தையும் அழித்துவிட்டால் என்ன
முழுகிப்போய்விடும் ; இந்து சமுதாயத்தில் இந்நாளில் எத்
தனையோ ஊழல்கள் காண்கின்றனவே. இவைகட் கிடந்தந்த
இம்மதம் ஒழியட்டுமே ' என்று சிலர் எண்ணுகின்றனர். சரித்
திரக் கண்கொண்டு இம்மதங்களின் இம்மை விளைவுகளெல்
லாம் அமைதியொடு காண்போர் இங்ஙனம் எண்ணார்கள். ( நம்
இந்துசமுதாயத்தில் சில குறைபாடுகள் இப்போதிருப்பது உண்
மையே ; நெடுநாள் சுகத்துடனிருந்த ஒருவனுக்கு ஒரு நோய்
வந்தால், " நோய் நாடி, நோய் முதல்நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி " மருத்துவஞ் செய்து நோயை நீக்

R673 — 21, 1 — 2



போல் இந்துவாகும்படி செய்ய முயலுதே நேரிதாகும். நோய்
வளர்ந்ததென்று ஆளைக் கொன்றுவிட எவரும் எண்ணார். இம்
முறையே சமய சமுதாயத் தளர்ச்சி நீக்கத்திற்கும் கொள்ளப்
படவேண்டும். (இந்து சமுதாயம் என்னும் உடம்பு பிணி
வாய்ப்பட்டிருப்பினும், மூப்புச் சாக்காட்டு நிலைமையை
அடைந்துவிடவில்லை. மருந்துண்டு, மாசகற்றி, மீண்டும்
தேசுடன் விளங்கும் திண்மையை அன்றுபோல் இன்றும்
பெற்றுள்ளது. ஆதலின், அதனைக் காக்க முயலுதலே நல்
லோர் கடன். பிற சமய சமுதாயங்களை நோக்கினும், அவை
கள்பாலும் பல மாசுகள் முன்பும் கண்டன ; இன்றும் உள்
ளன. இது உலக இயற்கையே. எனவே, இந்து சமயத்
தைத் தொலைத்துவிட்டு, வேறு சமயத்தை மேற்கொள்ளினும்,
மக்கள் வாழ்வு மேன்மையடைந்துவிடும் என்னும் நிச்சய
மில்லை. கிறிஸ்து மதத்தை மேற்கொண்ட நாடுகள்தாமே
இரு பெரு உலக யுத்தத்தை மூட்டி நடத்தியவை ! கடந்த
நூற்றாண்டுகளிலும் எத்தனை போர்கள் ! எவ்வளவு கொடுமை
கள் ! உலக சரிதம் காண்போர்க்கு உண்மை விளங்கும்.)

மற்றுமொரு காரணமுள்ளது : இருபதாம் நூற்றாண்
டில் நாடு, நிறம், மொழி, சமயம், கலை இவைகளில் வேறுபா
டுடைய பலதேச மக்களும் ஒன்று சேர்ந்து வாழக் கற்றுக்
கொள்ளல் மிகவும் அவசியம். எல்லா நாட்டு அறிஞர்களும்
இவ்வுண்மையை உணர்ந்து வருகின்றனர். சர்வதேச மகா
சபைகள் தோன்றி உலகை நீதிமுறையில் செலுத்திச் சமாதா
னத்தை நிலைநாட்ட அரும்பாடுபடுவதை யாரே அறியார் !
இஃதெல்லாம், ஒரு கூட்டத்தார் பிற கூட்டத்தார்களைத் தம்மி
னும் இழிந்தவரெனவும், தம் கூட்டத்திற் சேர்ந்தாலன்றி நற்
கதி பெறாது நரகே பெறுவர் எனவும் நம்பி, அதன்படி தீவிர
மான பிரசாரமும் மதமாற்றமும் செய்துகொண்டிருக்கும்
வரையில், பகற்கனவாகவே முடியும். இக்குறுகிய மனப்
பான்மை உலக முன்னேற்றத்திற்குப் பெரு முட்டுக்கட்டையா
யிருக்கின்றது. சமய விஷயத்திலும் சமரச மனப்பான்மை
இன்று மிகவும் இன்றியமையாதது. அதனை என்றும் தன்
சிறப்பியல்பாகக் கொண்டு எம்மதத்தையும் தழுவிக்கொண்டு

நிற்கும் நம் சைவம் - பொதுவாக நம் இந்து மதம் - இக்கால
உலக மேம்பாட்டிற்கு மிகவும் ஏற்புடையது. இப்பெரிய
உண்மையைப் பிறநாட்டவர் யாவரும் உணருங் காலம் அணுகி
வருகிறது.

எனவே, நமது சமயத்தை மாசகன்ற நன்னிலையில்
வைத்து, அதன்வழி நம் வாழ்வை நடாத்துதலும், பிற சகோ
தரர்கட்கும் அதன் இயல்பைத் தெரிவித்தலும் நம் மாண்பாய
கடமைகளாகும். இவ்வுணர்ச்சியுடன், சைவ சமயிகள் தமக்கு
ஏற்பட்டுள்ள கடமைகளைத் திறம்படச் செய்து உலக சமாதா
னத்திற்கு உதவவேண்டும்.

இக்கடமைகள் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும்
அமைந்துள்ளன. இங்குக் குறிப்பிடப்படுவன சைவ சித்தாந்த
மகா சமாஜத்தின் வாயிலாகச் செய்யத்தக்க கடமைகள் மட்
டுமேயாகும். சிறந்த சமயச் சொற்பொழிவுகளாற்றல், நல்ல
தமிழ் நூல்களை அரியமுறையில் அடக்கவிலைப் பதிப்புக்களாக
வெளியிடல், மாதப் பத்திரிகையொன்று நடத்துதல் என்னும்
பணிகளைச் சமாஜம் பல ஆண்டுகளாக இன்றுவரை இனிது
செய்துவந்து சைவத்திற்கு ஆக்கந் தேடிவந்துள்ளது. காலத்
தின் தேவைக்கேற்ப, இன்னும் சில கடமைகள் மேற்கொள்ள
இப்போது கருதுகின்றது.

நம் சமய நிலையங்களிற் பல தம் சமயக் கடமைகளைச்
செவ்வையாய்ச் செய்யவில்லை என்பது மேலே குறிக்கப்பட்
டது. இக்கடமைகள் எவை என்பதை அன்பர்கள் நன்கறிவர்.
சித்தாந்தத்தின் முன்னைய இதழ்களில் விவரங்கள் வந்துள.
இக்கடமைகள் இக்காலத்தின் தேவைக்கேற்றபடித் திறம்பட
நடக்கவேண்டும் என்று அரசாங்கத்தாரிடம் திடமாய்த் தெரி
விக்கவேண்டிய அவசியம் உள்ளது. அறநிலையச் சொத்துக்
களைப் பாதுகாத்தலும் மீதிவைத்து வளர்த்தலுமட்டும் சாலா;
சமயப் பாதுகாப்பு வளர்ச்சிக்கான ஆக்கவேலைகள் பல நடை
பெறவேண்டும். இது செய்யுமாறு தம் கீழுள்ள அதிகாரி
களுக்கு அரசாங்கத்தார் கட்டளை பிறப்பிக்கவேண்டும்.
சமாஜம் போன்ற சமயப் பெருந்தாபனங்கள் இத்தேவையைத்
தக்கமுறையில் அரசாங்கத்தாரிடம் தெரிவிக்கவேண்டியது



முக்கிய கடமை. ஜனநாயக ஆட்சி நிலவும் காலமாதலின்,
பெருந் தொகையினரை உறுப்பினராகக்கொண்டு, நியாய
வரம்பில் நின்று தொண்டாற்றும் சபைகளின் விண்ணப்பமே
நன்கு மதிக்கப்பெறும். இதற்கும், சமுதாயத்தில் நேரே
பணி செய்தற்கும் நம் சமாஜத்தில் அங்கத்தினர் பல்லாயிரவ
ராய்ச் சேர்தல் அவசியம். சமாஜ விழாவில் இத்தேவை பெரி
தும் வற்புறுத்தப்பட்டது. பல அன்பர்கள் சில மாதங்கட்குள்
பல புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துத் தருவதாக வாக்
களித்துள்ளனர். ஆண்டு விழாவிற்கு வர இயலாது நின்
றிருந்த சைவ நன்மக்கள் பிறர் பலரும் இவ்வுதவியைச்
செய்யுமாறு பெரிதும் வேண்டப்படுகின்றனர். சமாஜக்
கோட்பாட்டை ஒப்புக்கொண்டு அதிற் சேர விரும்பும் அங்
கத்தினர் செலுத்தவேண்டிய ஆண்டுச் சந்தா இரண்டு ரூபாய்
தான். அதனைச் சமாஜப்பொதுக்காரியதரிசிக்கு நேரே அனுப்பி
விட்டால், சமாஜப் பத்திரிகையாகிய 'சித்தாந்தம்' இலவச
மாகக் கிடைக்கும். சைவ சகோதர சகோதரிகள் தம் அரும்
பெரும் சமயத்தில் வைத்துள்ள பற்றின் அளவை, இம்முயற்சி
யின் வெற்றியளவைக் கொண்டு, அறிஞர் ஒருவாறு களிப்பர்.
இவ்வாண்டே, குறைந்தது ஐயாயிரம் அங்கத்தவர்களைச்
சேர்த்துவிட்டால் நம் சமுதாயத்திற்கு எவ்வளவு பெருமையா
யிருக்கும்! எவ்வளவு அரும்பணி செய்ய இயலும்! அன்பர்கள்
அன்புடன் கவனிப்பார்களாக.

சைவ சமய போதகர்கள் பன்னூற்றுவர் தேவை. சமய
அறநிலையங்களின் சார்பில் அவர்கள் நியமிக்கப்படுதல் நேர்
முறை. அது நிகழும்வரை நமது சமாஜமே சில போதகர்களை
நியமித்து உபகரிக்கலாம். சமய போதகர்கட்கு இன்றியமை
யாது வேண்டும் சமய நூற்பயிற்சி, போதனுமுறைப் பயிற்சி
இவைகளைத் தருதற்கும் வழிதேடவேண்டும். இனி, மாணவ
ருலகிலுஞ் சென்று, அன்பும் அறிவும் செறிந்த முறையில்,
நம் சமய மாணவர்கட்கு, அவர்கள் சமயம்பற்றிய போதனை
தர ஏற்பாடு செய்தல்வேண்டும். மாணவர் விடுதிகள் ஆங்காங்
கமைத்து நடாத்துதல் ஒரு சிறந்த முறையாகும். முதலில்,
சென்னை மாநகரில் சைவ மாணவர் விடுதியொன்று தொடங்கி

நடத்துதல் அவசியமென்று பல அறிஞர்கள் கருதுகின்றனர்.
இவ்வாண்டிலேயே அம்முயற்சியைத் தொடங்குதற்காக ஒரு
தனிக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. பிற நகரங்களிலுள்ள
சைவப் பெரியார்களும் இத்துறையில் பணியாற்ற வழியுளதா
என்று ஆராய்தல் நன்று. அவர்கள் செய்யும் முயற்சிகளின்
பயனைச் சமாஜப் பொதுக்காரியதரிசிக்குத் தெரிவிக்கலாம்.

ஏழை மாணவர் இல்லங்களும், அநாதைப் பெண்கள் ஆச்
சிரமங்களும் ஆங்காங்குத் தோன்றுதலும் அவசியமாகவே
காண்கின்றது. பெண்ணுலகிற்குப் பணிசெய்யப் போதிய
பெண்மணிகள இந்து சமுதாயத்தில் இப்போது கிடைக்க
வில்லை. முற்காலத்தில் பெண் துறவிகள் பலர் தமக்கெனத்
திருமடங்கள் அமைத்துக்கொண்டு, பணி புரிந்துவந்தமை
கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. இப்போது அது வெறும்
படுங்கதையாய்விட்டது. அநாதைப் பெண்கள் ஆச்சிரமங்களை
உயர்குடிப்பிறந்த இந்துப் பெண்கள் நடத்திவர முற்படுவரேல்
சமயம், பொதுக் கல்வி இத்துறைகளில் நல்ல பணி செய்தற்
குப் பல மங்கையர்க்கரசிகளும் புனிதவதிகளும் கிடைத்தல்
கூடும். தக்க இடத்தில் ஒரு ஆச்சிரமமேனும் தொடங்க
நமது சமய மங்கையர்க்கரசியர் மனங்கொள்ளுவார்களாக.

சமாஜம் தொடங்கி நடத்திவந்த அரிய பிரசுரவேலை
தொடர்ந்து நடைபெறவேண்டும். அதனோடு, தற்காலச் சமயக்
குழப்பங்களிலகப்பட்டுத் தடுமாறும் நம் சமயிகட்குத் தெளிவு
பிறப்பிக்கும் வகையில், சிறு நூல்கள் பல வெளியிட்டு உதவும்
முயற்சியையும் மேற்கொள்ளவேண்டும். இவைபோன்ற பணி
கள் இன்னும் சிலவுள.

இவற்றையெல்லாம் இனிமேல் மகா சமாஜம் தொடங்க
வும் கண்காணிக்கவும் வேண்டிய காலம் வந்துவிட்டது. ஆத
லின், மாகாணத் தலைநகரமாகிய சென்னைமா நகரில் தக்க
கட்டிடமொன்று சமாஜத்திற்கிருக்க வேண்டும். இதுபற்றிக்
கடந்த சில ஆண்டுகளாகப் பேசி வந்துள்ளோம். உலகப்
போரின் விளைவுபோன்ற சில தடைகளால் தவக்கமேற்பட்
டிருந்தது. இனி, விரைந்து சைவ மாட்சிக்கு ஏற்றவகையில்
ஒரு மாளிகை அமைக்கச் சைவரனைவரும் மனங்கொள்ள



வேண்டும். சென்னைக்கு வரும் சமாஜ உறுப்பினர்கள் தங்கிச்
செல்லவும், நூல் நிலையமமைக்கவும், சமாஜப் பணிகள் பல
இனிது நிகழ வசதியளிக்கவும் வல்லதாக அம்மாளிகை அமை
தல் சைவ சமயத்திற்குப் பொன்றுப் பெருமையைத் தரும்.
இவைபோன்ற தேவைகளின் அவசரத்தை உணர்ந்து, சென்
னைத் திருவாளர் அ. சோமசுந்தரம் செட்டியார், M. A. அவர்
கள், தற்சமயம் மாதம் ஒன்று ரூ. 50 வீதம் சமாஜத்திற்கு
நன்கொடையாக அளிப்பதாகத் தாமாகவே எழுதித் தெரிவித்
துள்ளார்கள். இரண்டுமாத நன்கொடையாக நூறு ரூபாயை
யும் அனுப்பிவிட்டார்கள். சமாஜப் பிரசுரங்கள் சில வெளி
வருதற்கும் பொருளுதவி முன்பு புரிந்துள்ள இப்புண்ணியர்
இப்போது காட்டியுள்ள புதுவழி, பிற செல்வர்களாலும் பின்
பற்றத் தகுந்ததென்பது தேற்றம்.

மேலே குறித்தவை போன்ற முறைகள் நம் சைவ சித்
தாந்த மகா சமாஜமானது ஆள்பலம், பொருட் பலம், அருட்
பலம் முதலிய எல்லா பலமும் பெற்றுப் பெரிய அளவில் தன்
கடமைகளைச் செய்யவேண்டும் என்று சைவ அன்பர்களனைவ
ரும் பிரார்த்திப்பார்களாக. தத்தம்மாலியன்ற உதவிகளனைத்
தையும் தாராளமாய்ச் செய்வார்களாக.

## வருந்துகிறோம்

கோட்டையூர் தேனப்பச் செட்டியார் அவர்கள்
திருச்செங்கோடு மகாநாட்டிலிருந்து ஊர்திரும்பும்போது
ஈரோடு புகை நிலையத்தில் திடீரென உயிர் துறந்தது
கேட்டு மிக வருந்துகிறோம். அவர்கள் பலவாண்டுகளாக
சமாஜ உறுப்பினராயிருந்து அருந்தொண்டு செய்து
வந்தார். ஆண்டுதோறும் மகாநாடுகளுக்குத் தவறாமல்
வந்து கலந்து கொள்வார். சமயத்திலும் சமாஜத்திலும்
மிகப் பற்றுடையவர். அன்னார் குடும்பத்தினர்க்கு எங்கள்
உளமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்
கிறோம்.

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 41-வது ஆண்டு நிறைவு விழா, திருச்செங்கோடு

# வ ர வே ற் பு

சைவர்களே, சைவாபிமானிகளே,

சிவத்தலம் இது. மாதொருபாகன் மகிழ்ந்து எழுந்தருளி யிருப்பது. சைவசமயாசாரியர் பாடல் பெற்றது. சிவகுமாரன் இருக்குமிடம். அருணகிரியார் அருட்பாடல் பெற்றது. இத்தகைய சிவப்பெருமை பெற்ற தலத்திற்கு உங்களை விருப் புடன் வரவேற்கிறோம். வருக ! வருக !!

இவ்வூரில் சுமார் 20 வருடங்களுக்குமுன் சைவ சமாஜம் இருந்து வந்தது. அப்போது மந்திரியாயிருந்த ஸ்ரீமான். சிவ ஞானம் பிள்ளை அவர்கள் தலைமையில் சைவ சமாஜ மகாநாடும் ஒன்று நடந்தது. இப்போது கூடும் மகாநாடு எங்களுக்கு மிகவும் உவப்பினை உண்டாக்குகிறது.

நமது தென்னாட்டின் பூர்வீக மதமாகிய சைவ சமயம் இத்தெய்வத் தமிழ் நாட்டில் வேர் ஊன்றியுள்ளது. அதனை வளர்க்க முன்னர் சைவ சமயாசிரியர்கள் தோன்றினர். அவர் கள் காலத்தே தோன்றிய தேவார, திருவாசக அருட்பாக்கள் நம் சைவ சமயம் நிலைபெறச் செய்து வருகின்றன.

பின்னர் தோன்றிய சைவ மடாலயங்கள் பெரும்பொருள் வருவாய் பெற்றும் நன்முறையில் சைவ சமயத்தை வளர்க் காமையால் நம் தமிழர் சமயம் வளர்ச்சி குறைந்து இருக்கக் காண்கின்றோம்.

இப்பொழுது சைவ அன்பர்கள் பலர் ஆங்கிலமும் தமிழும் வல்லாராய் சமய உணர்ச்சி மிகுதியும் பெற்று சைவ சமய வளர்ச்சிக்கு வருந்தி உழைக்கச் சைவ சமாஜம் நிறுவி யுள்ளதை அறிந்து மகிழ்வு கொள்ளுகிறோம்.



மேலும் அத்தகைய அறிவாளிகள் / சைவ சமாஜத்தை இவ்வூர் வாசிகளாகிய நாங்கள் அறியும்படி இவ்வூரில் கூட்ட எளிவந்தமைக்கு நாங்கள் நன்றியறிதலுடையோம்.

தற்காலம் இந்துமதம் தத்தளிக்கின்றது. சைவ சமயம் தன் சிறப்புக் குன்றியிருக்கின்றது. பிறமதத்தவரோ நம்மவ ரைத் தம்மதத்துக்கு இழுக்கின்றனர். அதனை நீக்க அறிவாளி களாகிய நீங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருப்பது போற்றத் தகுந்தது.

மேலும் அடக்க விலைப்பதிப்பில் சைவ நூல்களை வெளி யிட்டும், மதப் பிரசாரகர்களை வெளியூர்களுக்கனுப்பியும், தொண்டாற்றிவரும் சைவ சமாஜத்தைப் பற்றி கேட்டறிந்த, பத்திரிகை வாயிலாகப் படித்தறிந்த நாங்கள் இவ்வூருக்கும் உளதோ அப்பேறு என்று ஏங்கிக் கொண்டிருந்தோம். அவ் வேக்கத்தினைப் போக்கத் தாங்கள் இங்கு கூடியிருப்பது கண்டு பெரிதும் மனக்கிளர்ச்சி கொண்டுள்ளோம்.

கடைசியாக வேண்டுகோள் ஒன்று. வரவேற்புக் கழகத் தினராகிய நாங்கள் இம்மூன்று நாளும் புரியக்கூடிய தொண்டி னில் தவறுகள் ஏற்படின் பங்கிடுமுறைக் காலத்தினைக் கருதி மன்னிப்பீர்கள் என்பதே அவ்வேண்டுகோள்.

சைவ சிகாமணிகளே! மறுமுறையும் உங்கள் அனை வரையும் உள்ளன்போடு வரவேற்கின்றோம்.

சைவம் ஓங்குக !

திருச்செங்கோடு
25—12—1945

இங்ஙனம்
வரவேற்புக் கழகத்தார்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்
## 41-வது ஆண்டு நிறைவு விழா, திருச்செங்கோ
# சைவர் மகாநாட்டுத் திறப்புரை

[ சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் ]

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

அன்புடையீர்! அம்மைமீர்! ஐயன்மீர்!

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம் உரித்தாகுக.
இம்மகாநாட்டைத் தொடங்கி வைக்கும் பெருமையை
என்பாற் சார்த்தியமைக்காக எனது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றேன்; நேரில் வந்து மகாநாட்டில்
கலந்துகொண்டு எனது உரையினை நிகழ்த்தாதபடி இற்றை
நாள் எனது உடல்நலம் குறைந்துள்ளது; பயணத்துக்கும்
பேச்சுக்கும் உதவாவண்ணம் எனதுடலை இப்போது ஆக்கி
வைத்தது திருவருட் சம்மதம். அதற்கு யான் செய்யத்தக்க
தொன்றுமில்லை. நேரில் வாராது கடிதமூலம் எனதுரையினை
நிகழ்த்த நேர்ந்தமைபற்றி என்னை மன்னிக்குமாறு உங்களை
வேண்டிக் கொள்கின்றேன். ஆயினும் என் உள்ளம் முழுதும்
உங்களுடனிருக்குமென்பதனை உறுதி கூறுவேன்.

இனி, மகாநாட்டைத் தொடங்கி வைத்தல் பற்றிச்
சில மொழிகள் பேசுவேன்; திறந்து வைத்தல் என்பது
ஆங்கிலரிடம் நாம் பெற்ற பிரசாதமாகிய மரபு வழக்குக்களுள்
ஒன்று என்று நினைக்கின்றேன். மகாநாடு என்ற பொருள்
பெட்டியுட்போல மூடிவைக்கப்பட்டிருந்தாலன்றோ அதனைத்
திறந்து வைத்தல் வேண்டும்? தொடங்கி வைத்தல் என்பது
தக்க மரபு என்று கருதி மேற்கொண்டேன்.



மகாநாடு தொடக்கம் செய்து வைப்போரின் பெருங்
கடமை பற்றிச் சில எண்ணங்கள் என் மனத்துள் எழுகின்
றன. மகாநாடு என்பது பேரெண்ணங்களை
நாடி முடித்தற்கு நிலைக்களமாகவுள்ள

மகாநாடு

தோரமைப்பாகிய கூட்டம் எனப் பொருள்
படுமென்று கருதுகின்றேன். எனவே அதற்குரிய அவைக்
களமும் அவையினரும் முதலிய பொருளும் பயனும் என
நால்வகைப்படும் அஃதன் அமைப்பு. இந்நால்வகையினையும்
பற்றிச் சுட்டிக் கூறித் தோற்றுவாய் செய்தல் தொடங்குவிப்
போரின் கடமையாகும். நாற்பது நீண்ட ஆண்டுகளாகச்
சைவப் பெரும்பணிகள் செய்து நிலவும் மகா சமாஜத்தின்
நாற்பத்தொன்றாவது ஆண்டு நிறைவு விழா இஃதாகும்.
இதனைத் தோற்றுவாய் செய்து வைக்கும் தகுதி எனக்கில்லை
என்பதனை நன்குணர்வேன்; தகுதி வேண்டாது பயன்
மட்டும் வேண்டுவோர் திரள்மிகும் இந்நாளில் எனது தகுதி
யின்மைபற்றி என்னை? நீங்கள் அழைத்ததே போதியதாம்
என்று அப்பெருங் கடமையினை மேற்கொண்டு செல்வேன்.

இத்துணை ஆண்டுகளாக நமது சமாஜம் பெரும் பெரும்
பணிகளைச் சிறக்கச் செய்திருக்கின்றது.
சித்தாந்தமென்னும் மாதாந்த பத்திரிகையும்,
நாட் கூட்டம், வாரக் கூட்டம், மாதக் கூட்

செய்த பெரும் பணிகள்

டம், ஆண்டுக் கூட்ட விழா, சிறப்புக் கூட்
டம், கோடைகால வகுப்பு என்பனவாதியாகப் பலதலங்களில்
கூட்டங்களும், திருமுறைகள் முதலிய சைவத் தெய்வ நூற்
களின் அடக்க விலைப்பதிப்புக்களும் பிறவும் நமது சமாஜத்தின்
சைவம் பற்றிய இடைவிடா ஊக்கமுடைய பெரும்பணி
களுக்கு இணையற்ற சான்று பகர்கின்றன. ஒருவர் செய்யும்
வேலை பயன்பட்டதென்பது பகைவர்களுடைய உறைப்பான
தாக்குதலிற்பட்டபோது தான் விளங்கும். சைவத்துக்கு நமது
சமாசமும் நெல்லைச் சைவசித்தாந்தக் கழகமும் என இரண்டு
தாபனங்கள் தான் வேலை செய்கின்றன என்று ஒரு சமணன்
புலம்பத் தொடங்கினன். அவன் கருதியது இத்துணைப் பெரிய
சமயத்திற்குப் பணிசெய்ய இரண்டு தாபனங்களே உள்ளன

என்பதாம் ; ஆயின், " இருவர்தம் பாங்குமன்றிச் சைவ மக்கெய்தாதாக " என்றபடி இருவராலே சமணழிந்து சைவம் பெருகிய சரிதத்தை அவன் மறந்தனன்போலும் ! ஆனால் இந்நாளில் சைவ ஆக்கத்திற்கு இன்னும் பலப்பல முயற்சிகள் வேண்டப்படுவன என்பதும் உண்மையே; இத்துணை காலமும்

**செய்யநின்ற பணிகள்**

சாத்திரங்களை ஓதியும் ஓதுவித்தும் பயிற்றியும் பணி செய்தோம் ; இவை சாத்திரோபதேசம் என்ற பகுதியில் வருவன. Theory என்பர் நவீனர். இனி, அதனை ஒட்டிய ஒழுக்க நிலையில் உலகினைப் பயிற்றுதலும் வழிகாட்டுதலும் நமது கடமையாகும். இதனை Practice என்பர். இவை சிவஞான போதம் பின் ஆறு சூத்திரங்களுள்ளே சாதனமும் பயனுமாய்ச்

**சைவ ஒழுக்கம்**

சொல்லப்படுவன ; சாதனங்களின்றிப் பயனுமில்லையாகும். திருவைந்தெழுத்தும் திருநீறும் குருவருளும் இன்றியமையாத சாதனங்களாகும். தீக்கைப்பேறு குருவருளால் பெறக்கூடும். சமயவிசேடயாதி தீக்கைகளும் சரியையாதி நானெறியும் சைவத்துச் சிறப்பங்கங்கள்; " ஓர்ந்திடும் சுத்த சைவத்துக்குயிரதே " என்று சரியைப்பற்றிப் பேசினர் திருமூலர் ; கடுந்துறவு பூண்ட ஞானியாகிய ஆளுடைய அரசுகள் உழவாரப்பணியாகிய சரியைத் தொழில் விடாது பற்றினர் : " கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை, கொண்டடியேனிட்டுக் கூறி நின்றுன் பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன் " என்பது அரசுகளது இறுதித் திருப்பதிகம் ; " பூமாலை புலந்தேத்தேன் " என்பது மணிவாசகம். இனி, அருண் முறையில் எல்லா உயிர்க்கும் ஒன்றுபோலன்றி அவ்வவ்வான்மாக்களின் பக்குவபேதம்நோக்கி இறைவன் அருள்கின்றான் என்பது சைவ சித்தாந்தத்தின் சிறப்பாகிய முடிந்த உண்மைகளுள் ஒன்று.

**கோயில்கள்**

இனி, " ஆலயந்தானு மரனெனத் தொழுமே " என்ற போதம் 12ம் சூத்திரத்தின்படி ஆலயங்களைச் சிவனெனவே கொண்டு வழிபடுதல் சைவ இருதயமான முடிந்த உண்மை. ஆதலின் ஆலயங்களைச் சீர்கேடு வாராது காத்தல் என்பது எல்லாச்



சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்ததொன்றாயினும் சைவர்க்குச் சிறந்த கடமையாகும் ; ஏனையோரெல்லாம் ஆலயங்களைத் தாந்தாங் கண்டவாறு இறைவனைச்சென்று வணங்குதற்குரிய இடமாகவே கொண்டமைகுவர் ; அவர்கட்கெல்லாம் ஆலயம் சடப்பொருளாயமையும். ஆனால் சைவமோ ஆலயங்களையே சிவனாக வழிபொருளாகக்கொள்ளும் ; சைவர்களுக்கு ஆலயம் சித்துப் பொருளாம்; உடம்பினுள் உயிர்போலச் சிவனுறைந்து விளங்கும் இடம் ஆலயம் ; ஏனையோர் ஆலயத்தில் வழிபட நாம் ஆலயத்தையே வழிபடுவோம் ;

" நாடு நகரு நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமா னென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே "

—திருமந்திரம்

கோயிற் பணங்களை-மீதமானவற்றை என்று சொல்கிறார்கள்! பொதுக்கல்விக்கோ வேறு வகைக்கோ செலவிடுதல் என்றதொரு முயற்சி இப்போது அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ளார்கள். அவர்கள் வைத்த கோவிற்பணியாளர்களாகிய இந்து மதச் சொத்துப் பரிபாலகர்கள் (H. R. E. Board) அதற்கு ஒத்துப்பாடுபவர்களாகத் தானே இருப்பார்கள். கோயிலில் வழிபடுவோர்களாகிய சைவமக்கள்தான் இந்த அநீதியான பாவ காரியத்தில் நமது அரசாங்கம் புகாதபடி தடுக்கவேண்டியவர்கள்.

கோயில்களுக்கு இந்தப் பணங்களைக் கொடுக்கின்றவர்கள் அங்குச் செல்லும் அபிமானிகளேயன்றி அரசாங்கத்தாரன்று. அவர்கள் கோயிற் செலவுக்கென்றே கொடுக்கிறார்கள் : பொதுக் கல்விக்கென்றன்று. ஆதலின் ஒப்புவித்த பொருளை ஒப்புவித்தாரது கருத்துக்கு மாறாகச் செலவிட்டால் அது நம்பிக்கைத் துரோகமும் சொத்து மாறுபாடும் ஆகிய குற்றமேயாகும். அரசாங்கத்தார் அதிகாரத்தாலோ அகங்காரத்தாலோ அதனைச் செய்தால் அதன் குற்றத்தன்மை மாறிவிடாது. இனி, மீதம் பொருள் என்பதேது ? அவ்வக்கோயில்

களுக்கு வரும் பொருள்கள் நியாயமானபடி அங்கங்கும்
செலவு செய்யப்போதிய காரியங்கள் அங்கங்கும்
கின்றன. அப்படிச் செய்யாமல் விட்ட குற்றம் இருக்
தாருடையதும் அவர்கள் பணியாளராகிய போர்டாருடையது
மேயாகும். அண்மையில் திருச்செந்தூரின் தேவைகள் என்ற
பெயர் பூண்டதொரு சிறு நூல், முன் அங்கு ஆணையாளராயி
ருந்து இப்போது சிரங்கத்தில் ஆணையாளராயுள்ள அரசாங்கத்
J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ளார்
கள். அதனைப் பார்த்தால் இவர்கள் கண்வைத்துள்ள திரு.
களுள் ஒன்றாகிய திருச்செந்தூரின் பரிதாப நிலைமை நன்கு
விளங்கும். அதிகாரிகளும் அரசாங்கமும் வெட்கப்படாமலி
ருக்க முடியாது. இவர்களது திருட்டி பட்ட மற்றப் பெருங்
கோயில்களின் நிலைமையும் இவ்வாறேதான்; சிரங்கக் கோயில்
தேவைகளுக்கென்று சில ஆண்டுகளின் முன் அதிர்ஷ்டச்
சீட்டு ஒன்று (Lottery) போட்டு நிதிசேர்த்த செய்தி
அன்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள். மதுரை, இராமேசு
வரம் திருவேங்கடம் பழனி முதலியவை பெரும் வருவா
யுள்ளவை எனக் கூறப்படுகின்றன. இவற்றின் கோயிற்றேவை
களுக்கு - இவர்கள் கருதும் பொதுப்பணியன்று - ஏதாவது
திட்டம் உண்டா? உண்டாயின் அவற்றைக் கவனிப்பாருண்
டா? பெருங்கோயில் மீதம் - என்ற பெயரால் பணம்
எடுத்துக்கொள்ள வருபவர்கள் பணமில்லாத சிறு கோயில்
களைப் பற்றி எண்ணினார்களா? கோயில் (கட்டடம்) இல்லாத
கோயில் - சுவர் இல்லாத கோயில் - மேற்கூரையில்லாத
கோயில் - கதவு இல்லாத கோயில் - சோறில்லாத - துணி
யில்லாத கோயில் என்றிவற்றைக் கவனிக்க இவர்களுக்குக்
கடமையுண்டா? இல்லையா? இவற்றையெல்லாம் வற்புறுத்தி
நமது அரசாங்கத்தார் இந்த அக்கிரமமான முயற்சிகளில் ஈடு
படாது தடுப்பதும், கோயில்களின் சமயச்சார்பான கடமை
களைக் கவனித்து நிறைவேற்றும் படிக்கும், இப்போது செய்
வதுபோல் கேவலம் கணக்குத் தணிக்கை, பணம் பறிப்பும்
சேர்க்கையும் முதலிய சொத்துச் சார்புகளோடு நின்றுவிடாத
படி வற்புறுத்துவதும் சைவமக்களின் கடமையாகும்.



அன்பர்களே!

இதுவரையும் அவையினரும் பொருளும் பயனும் பற்றிச்
சில பேசினேன். இனி அவைக்களம் பற்றிச் சில மொழிகள்
கூறி எனதுரையினை நிறைவாக்குவேன்.

நமது சமாஜ விழா இத்திருநகரிற் கூடுதல் இதுவே
முதன்முறை என்று நினைக்கின்றேன். முன்னை நாளில் தமிழ்ச்
சைவ அரசாங்கத் தலைநகராக இப்பெருநகர் விளங்கிற்று
என்பது கொடிமாடச் செங்குன்றூர் என்னும் இதன் பெய
ராலே விளங்கும்; சரித்திரமும் அவ்வாறே பேசுகின்றது.
நமது பாரதநாடு சுதந்தரமுள்ள பெருநாடாக விளங்கும்
இந்நாளில் சைவ ராசதானியில் நமது சமாஜ விழாக்கொண்
டாட நேர்ந்திருப்பது தெய்வீகமாகிய பொருத்தமாகும்.
சைவமும் தமிழும் தலைமை பெற்றோங்கி வளர்தற்கு இது
நல்ல அறிகுறியேயாம். நமது ஆசாரியப் பெருமானாகிய
ஆளுடைய பிள்ளையார் இங்கு எழுந்தருளித் தமது எண்
ணிறந்த பரிசனங்களையெல்லாம் இங்கு விடுத்துவைத்து
“அப்பாலைக் குடபுலத்திலானூர் மகிழும் தானங்கள் எப்பாலுஞ்
சென்றிறைஞ்சி” மீண்டருளினார் என்பது சரிதம்; அவரது
திருநீலகண்டப் பதிகத்தினால் அந்நாளில் பரவியிருந்த நளிர்
சுரநோய் நீங்கி அத்திருவாக்கின் உண்மையினை நிலைநாட்டியது;
அத்திருவாக்கின் பயன் இன்றும் காணக்கிடைக்கின்றது;
இனி உண்மைச் சமயமாகிய சைவத்தை மறைத்து நிற்கும்
அறியாமை பற்றிய பல நோய்களும் மறைந்தொழிதற்கும்
என்பதற்கும் இஃது ஓர் அறிகுறியாகும்.

இனி இறைவர் மாதொரு பாகராய் அம்மையப்பராய்
இளங்கொம்பனாளோடு இணைந்தும் பிணைந்தும் உயிர்கட்கு
அருளுகின்றார் என்பது சைவத்தில் எங்கும் பரக்கக்காணும்
உண்மை. மாதொரு பாகராகிய அத்திருவுருவம் நேரே காணக்
கிடைப்பது இப்பெரும்பதியிலேதான்; அது நமது இறை
வரது, “தொன்மைக்கோலம்” என்றருளுகின்றார் மணிவாச
கப்பெருமானார்.

" தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ

திருவாசக

எனவே அம்மையப்பரது திருவருளும் நேரே அவ்வருட் கோலத்தின் திருநோக்கத்தினால் நமது சமாஜ முயற்சி களுக்கு ஆக்கப்பாடு மிகுதியும் சாரும் என்பதற்கு அறிகுறி யாம்.

இனி, இத்திருப்பதியானது தேவாரப் பாடல் பெற்றதும் அற்புதம் நிகழப் பெற்றதுமாகிய பெருமையுடனே "செங் கோடனைக் கண்டு தொழ, நாலாயிரங் கண்படைத்திலனே யந்த நான்முகனே" என்று அருணகிரியார் புகழ்ந்து போற்றிய முருகப்பெருமானது பெருமைதாங்கிய குன்றுதோறாடலாக வும் உள்ளது. முருகப்பெருமான் இவ்வலிய கலியுகத்தில் தேற்றமாக விளங்கும் கண்கண்ட கடவுளாகவும் சைவாசாரிய ராகவும், தமிழ்ப் பேராசிரியராகவும் உள்ளமையால் அவரது அருட் கடைக்கண்ணோக்கமும் நமது முயற்சிகளை ஓங்கி வளரும்படி ஊக்கி வளர்க்கும் என்பதற்கறிகுறியாம்.

இனி இவ்விழாவில் மாபெரும் தலைவர்களும் தமிழ்ப் பெரும் புலவாணர்களும் வந்து குழுமியுள்ளார்கள். இம்மூன்று நாளும் அவர்களது அரும்பெரும் கருத்துக்கள் நமக்குப் பேருதவிபுரிவன.

எல்லாம்வல்ல முழுமுதலாகிய சிவபெருமானது இன்னரு ளால் இம்மகாநாடு இனிது நடைபெறுக என்று வாழ்த்துகின் றேன். என்னையும் பொருட்படுத்தி இம்மகாநாட்டைத் தொடங்கிவைக்கும் பெரும் பணியைத் தந்த உங்கள் பெருந் தன்மைக்கு நன்றி செலுத்துகின்றேன்.

சேக்கிழார் நிலையம்
கோவை
24-12-46

C. K. சுப்பிரமணிய முதலியார்

# சைவ இளைஞர் மகாநாட்டுத் திறப்புரை

[திரு. இராவ்பகதூர் -
C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A, B.L.]

சைவ இளைஞர்களே !

இப்பொழுது நமது நாட்டிற்கும் சமயத்திற்கும் நெருக் கடியான நிலை தோன்றியிருக்கிறது. இதுவரைக்கும் பல நூற்றாண்டுகளாக இவ்வித நெருக்கடி தோன்றவில்லை. முற் காலங்களில் வெளிநாட்டிலிருந்து நம் நாட்டின்மீது பேராசை பிடித்து, நாட்டைக் கவர்ந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை யுடன் பல பேர்கள் படையெடுத்து வந்தார்கள். அப் படையெடுப்புக்களால் நம் நாட்டின் சமயநிலை அழிந்துபோக வில்லை. பலவந்தத்தினால் எச்சமயமும் அழியாது. கத்தி முனையால் சமயங்களைக் குத்தித்தள்ள முடியாது. ஆகவே, நூற்றுக்கணக்கான படையெடுப்புகளால் நமது சமயங்கள் அழிக்கப்படவில்லை. பகைவரின் எதிர்ப்புகளால் சமயம் முன் னேறுமே ஒழிய அழியாது. அதுதான் நாளதுவரை ஏற்பட்ட சமயச் சரிதம்.

இப்போதோ அந்த நிலை மாறிவிட்டது. சமயங்களுக்கு வெளிநாட்டுப் பகை இல்லை. ஆனால் உள்நாட்டுப் பகையே வந்துவிட்டது. நம்முடைய ஜனங்களே, சமயங்ககளில் நம்பிக்கை இல்லாமல் அதனை எதிர்த்துச் சூறையாட வருகிறார்கள். மேலும் சமய நிலையங்களில் சமயப் பரப்பிற் காக வைத்துள்ள பொருள்களை வேறுவிதங்களுக்குப் பயன் படுத்த எண்ணுகிறார்கள். இவ்வித எண்ணம் வெளிவரவே நாடு எங்கும் அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படி யிருந்தும் நம்முடைய அதிகாரிகள் சமய நிலையங்களில் உள்ள பொருள்களை எடுத்து லௌகீக செலவுகளுக்குப் பயன்படுத்தி விடுவதாக ஆரவாரிக்கிறார்கள். இதனால் மிகுதியான கெடுதி நேரிடும்.

யம் சேர்ந்திருந்த காலத்து ஞானசம்பந்தரை வருகவென்று அழைத்துச் சைவநெறியை நிலைநாட்டிப் பாண்டிமண்டலத்தை வாழ்வித்த பெருமை, மங்கையர்க்கரசியைச் சார்ந்ததல்லவா ! இறவாத இன்ப அன்பு வேண்டி ஆலங்காட்டில் அவனடி தங்கிய அம்மையை - புனிதவதியை - அறியாத சைவர் யார் ? அவர்கள் வளர்த்த சைவம் இன்றுவரை தழைத்து வந்துள்ளது.

இன்று சைவத்துக்கு ஏற்பட்டுள்ள இடர்கள் பல. சைவம் பலவகையிலும் பலம் குன்றிவருகின்றது. பிற சமயத்தவர்கள் நம்மை நெருக்கும் சமயம் நேர்ந்துள்ளது. எங்கும் இந்து சமயத்துக்கு இடர்கள் நேர்ந்து வருவதைக் காண்கின்றோம். மகமதிய மதம் ஒருபுறம், கிறிஸ்தவம் ஒருபுறம் நெருக்க ஆரம்பித்துவிட்டன. இந்நிலையில் சைவர்கள், சிறப்பாகச் சைவ மங்கையர் வாளா இருத்தல் ஆகாது. பிற சமயத்தவரைச் சைவத்திற்கு அழைத்த பெருமை நான் மேலே கூறியபடி சைவ மங்கையரைச் சார்ந்தது. இன்று அத்தகைய நிலையிலே மங்கையரைத் தட்டி எழுப்பத்தக்க தலைவர் இம்மகாநாட்டைத் தலைமைதாங்கி நிற்கின்றார்கள். அவர்தம் தலைமையில் கூடிய இந்தக் கூட்டம், வரும நாட்களில் சைவம் வளர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வீறுபெற்ற சைவப் பெண்ணினம் உறங்கலாகாது ; விழித்தெழுதல் வேண்டும். எழுந்து சைவம் வளர வீடுதொறும், தெருத்தொறும், ஊர்தொறும், நாடுதொறும் ஆக்கவேலைக்கு ஆவன செய்யவேண்டும். அந்த உறுதியை இறைவன் சைவ மங்கையருக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இம்மகாநாட்டைத் திறந்துவைக்கிறேன்.

வாழ்க சைவம் ! வளர்க சிவநெறி !!

# சமாஜ
# 41-வது ஆண்டு நிறைவு விழா
## சைவர் மகாநாட்டு நிகழ்ச்சிகள்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் நாற்பத்தோராம் ஆண்டு நிறைவு விழாவும் அதையொட்டிய சைவர் மகாநாடு, சைவ இளைஞர் மகாநாடு, சைவ மங்கையர் மகாநாடுகளும் திருச்செங்கோடு என்னும் திருத்தலத்தில் 1946-ம் ஆண்டு டிசம்பர் 25, 26, 27, புதன் வியாழன் வெள்ளிகளில் சிறப்பாக நடைபெற்றன.

24உ செவ்வாய்க்கிழமை மாலை ஆடவர்களும் பெண்டிரும் திரளாக நாமாவளி சொல்லிக்கொண்டு ஊருக்கு அருகாமையில் உள்ள சேரிக்குச் சென்று பணிகள் செய்தார்கள். பல இடங்களிலிருந்தும் வந்திருந்த சைவ மங்கையர்கள் சேரிக் குழந்தைகளுக்கு எண்ணெய் தடவித் தங்கள் கையாலேயே தலைவாரி முகங் கழுவித் திருநீறணிவித்தார்கள். சேரி மாதருக்கும் ஆடவர்க்கும் திருநீறு வழங்கப்பட்டது. சேரி மக்களனைவரும் நாமாவளி சொல்லித் துதித்தனர். திருவாளர்கள் இராவ்பகதூர் C. M. இராமச்சந்திர செட்டியார், B.A., B.L. காஞ்சி பொன்னுசாமியடிகள், திருமதிகள் சின்னமணியம்மையார், அ. கு. காமாட்சியம்மையார், M.A., முதலியோர் அறிவுரைகள் பகர்ந்தனர். திருமதி அ. கு. காமாட்சியம்மையார் அவர்கள் துணிகள், சட்டைகள் பல வழங்கினார்கள். உள்ளூர் வாசியாகிய திரு. மாணிக்க வாத்தியார் சமாஜத்தின் சேரிப் பணியைப் பாராட்டிச் சேரியர் சார்பாக வந்தனம் கூறினார்கள்.

முதல்நாள் (25-12-46) காலையில் மேளவாத்தியம் விருதுகளோடு மகாநாட்டுத் தலைவர்களும் அன்பர்களும் வரவேற்புக் குழுவினரும் ஊர்வலமாகத் திருக்கோவிலுக்குச் சென்றனர். கைலாசநாதன் திருமுன்னர் வழிபாடு செய்த பின்னர் திரு

முருகாற்றுப்படை உரையுடன் அடக்கவிலைப்பதிப்பாக வெளியிடப்பட்டது. அந்நூலை வெளியிடுமுகத்தான் பொதுக் காரியதரிசி . இராவ்பகதூர் - அரங்கசாமி முதலியார் B. A., இராவ்பகதூர்-C. M. இராமச்சந்திரச் செட்டியார் B.A.,B.L., சைவர் மகாநாட்டுத் தலைவர் இராவ்சாகேப் - S. வையாபுரிப் பிள்ளை B.A., B.L. முதலியோர் முருகன் பெருமையைப்பற்றிப் பேசினார்கள்.

பின்னர், கோயிலின் நூற்றுக்கால் மண்டபத்தில் ஒலிபெருக்கியோடு அமைந்த பந்தரில் மகாநாடு கூடியது. வரவேற்புக் குழுவினர் சார்பில் திரு. R. V. கோபால் அவர்கள் வரவேற்புரையை வாசித்துத் தலைவர்களையும் சொற்பொழிவாளர்களையும் சமாஜத்தினரையும் பிறரையும் அன்போடு வரவேற்றார்கள். அறிக்கையிற் கண்டபடி திரு. சிவக்கவிமணி - C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் உடல்நலக் குறைவினால் நேரில்வந்து மகாநாட்டைத் திறந்துவைக்க இயலவில்லை ; ஆயினும் கடிதமூலம், மகாநாடு இனிது நடைபெற வாழ்த்தினார்கள். (அன்னார் 'திறப்புரை' இவ்விதழில் வெளிவந்துள்ளது.) பிறகு திரு. Dr. விசுவலிங்கம் (மலேயா) அவர்களைச் சைவர் மகாநாட்டுத் திறப்பாளராகவும், திரு. இராவ்பகதூர்-C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களை இளைஞர் மகாநாட்டுத் திறப்பாளராகவும் இருக்கும்படி சமாஜ பொதுக்காரியதரிசி முன்மொழிந்தார்கள். அங்ஙனமே திறப்பாளர்கள் திறப்புப் பேருரையை நிகழ்த்தினார்கள். பின்னர் சமாஜப் பொதுக் காரியதர்சி, சமாஜ 40-வது ஆண்டறிக்கை படிக்க, அது அரகர முழக்கத்தோடு அங்கீகரிக்கப்பட்டது. சைவர் மகாநாட்டுத் தலைவர் இராவ்சாகேப் - எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் அரும்பெரும் கருத்துக்கள் நிறைந்த நீண்டதொரு தலைமைப்பேருரையை நிகழ்த்தினார்கள். பிறகு சைவ இளைஞர் மகாநாட்டின் தலைவர் திரு. K. சிவராமன் M.A., அவர்களும் தம் தலைமையுரையை நிகழ்த்தினர்.

மாலை 5 மணிக்குச் சைவர் மகாநாடு கூடியது. திரு. ஜலகண்டபுரம் - வரதநஞ்சையப் பிள்ளை அவர்கள், ' மக்கள் வாழ்க்கையில் அமைந்த சமயம் ' என்னும் தலைப்பில் பற்பல



அருமையான கருத்துக்களைத் திறம்பட விளக்கிப் பேரவையினரை மகிழ்வித்தனர். அடுத்து திரு. அ. கு. சாமாட்சி அம்மையார் M. A. அவர்கள், 'நம் பணி' என்னும் பொருள்பற்றி அழகியதொரு சொற்பொழிவு செய்தார்கள். ' நம் பணி ' என்பது நாமனைவரும் செய்யும் பணி என்றும், அஃது உடற் பணி, சமூகப் பணி, ஆன்மப் பணி என மூவகைப்படுமென்றும் சமூகப் பணியே ஆன்மப் பணிக்குச் சிறந்த சாதனமென்றும் சமூகப் பணியின்றி ஆன்மப் பணி நிறைவுறாது என்றும் கூறினார்கள். பிறகு, திரு. துடிசைகிழார் - அ. சிதம்பரனார் அவர்கள், ' இருபல்லவ அடியார்கள் ' என்ற பொருள்பற்றி ஆராய்ச்சி நிறைந்ததொரு சொற்பொழிவு செய்தார்கள். அவர் பேசிய அரச அடியார்கள் ஐயடிகள் காடவர்கோனும், கழற்சிங்கருமாவர். தலைவரவர்கள் மேற்கண்ட சொற்பொழிவுகளைப் பற்றிக் கருத்துரை கூறியபின் இரவு 9 மணிக்கு முதல்நாள் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

இரண்டாநாள் காலை 8 மணிக்கு மீண்டும் சைவர் மகாநாடு தொடங்கியது. திரு. இராவ்பகதூர் - C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள், ' குழந்தையார் சிவஞானம் ' என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். அரிய சாத்திரக் கருத்துக்களைச் சிறியவர்களும் புரிந்துகொள்ளும்படி கதைகள், எடுத்துக்காட்டுக்கள் துணைகொண்டு விளக்கினார்கள். அடுததாற்போல திரு. வித்வான்-வை. குஞ்சிதபாதம் அவர்கள், ' திருவந்தாதி ' என்னுந் தலைப்பில் சமாஜம் செய்யவேண்டிய பணிகளைப்பற்றியும், காரைக்காலம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதியில் உள்ள அரிய கருத்துக்களைப்பற்றியும் பேசினார்கள். பின்னர் இளைஞர் மகாநாட்டுத் தலைவர் திரு. K. சிவராமன் M. A. அவர்கள், ' ஆராய்ச்சியும் அநுபவமும் ' என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். மேனாட்டில் கிரேக்கர் காலத்திலிருந்து இன்றுவரை நிகழும் தத்துவ ஆராய்ச்சி நம் சமயாசாரியர் பெற்றதுபோன்ற 'அநுபவ' நிலையின் துணையில்லாமையால் முடிவு காணமாட்டாமல் அலமருகின்றது என்றும், 'அநுபவ நிலையின்' இயல்பு, ஆக்கம் முதலிய பண்புகள் இவையென்றும் பேசினார்கள். அடுத்தாற்போல, பெருஞ்சொற்

கொண்டல் - புரிசை முருகேச முதலியா அவர்கள், ‘ முருக
வேள் அவதாரம்’ என்னும் பொருள்பற்றி மிகச் சிறந்தவொரு
சொற்பொழிவு செய்தார்கள். பிற்பகல் 2 மணி ஆகியும்
அவையினர் பகலுணவைப்பற்றிச் சிறிதுஞ் சிந்திக்காமல்
கேட்டின்புற்றனர். அத்துடன் காலை மகாநாடு முடிவு பெற்
றது.

அன்று மாலை 5 மணிக்குச் சைவர் மகாநாடு மீண்டுங்
கூடியது. சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் ஆசிரியர்
வித்துவான் - அ. மு. பரமசிவானந்தம், B. O. L., அவர்கள்
‘ வாழ்க்கை வாழ்வதற்கே ’ என்னும் பொருள்பற்றி வீரம்
நிறைந்தவொரு சொற்பொழிவு செய்தார்கள். உலகிற் பிறந்
தது வாழ்வதற்கே என்றும், அவ்வாழ்க்கை வஞ்சமற்றதா
யிருக்கவேண்டுமென்றும் மொழிந்தார்கள். பிறகு திரு. கா.
இராமநாதன் செட்டியார் (அட்வகேட், மயிலாப்பூர்) அவர்கள்
‘ அன்பு எது ’ என்னுந் தலைப்பில் அன்பு இருக்கும் இடத்தை
யும் அன்பின் வகைகளையும் பண்புகளையும்பற்றி அரியவொரு
சொற்பொழிவு செய்தார்கள். அதற்குப் பிறகு தூத்துக்குடி
பாகம்பிரியாள் சங்கத் தலைவர் திரு. சிவகாமி அம்மையார்
அவர்கள், ‘ கேட்டாரும் அறியாதான் ’ என்னும் பொருள்
பற்றி இனிய சொற்பொழிவொன்று ஆற்றினார்கள். தலைவர்
கருத்துரைக்குப் பின்பு இரவு 10—12 மணிவரை பெருஞ்
சொற்கொண்டல் - புரிசை முருகேச முதலியார் அவர்கள்
‘ அருச்சுனன் தவம் ’ என்பதுபற்றித் தமிழின் இயல் இசை
நாடகப்பண்புகள் புலப்பட நீண்டதோர் சொற்பொழிவு செய்
தார்கள்.

மூன்றாம்நாள் காலை 7 மணிக்கு வரவேற்புக் கழக நிதி
யாளர் வீட்டில் சமாஜக் காரியக் கூட்டம் கூடியது.
செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். முடிவுகள் பல
விவாதிக்கப்பட்டு நிறைவேறின. பலரும் சமாஜத்திற்கு
உறுப்பினர்களைச் சேர்த்துத் தர வாக்களித்தார்கள். பின்னர்
வழக்கம்போல் நூற்றுக்கால் மண்டபத்தில் சைவர் மகாநாடு
தொடங்கியது. திரு. நடராஜ நாடார் (ஸப்-ஜட்ஜ், கர்நூல்)
அவர்கள், சமாஜம் நடத்தும் சைவ
தேர்வில் வெற்றி



பெற்றோர்க்குப் பட்டமளித்தார்கள். சாத்திரப் படிப்பு மிகத்
தேவையென்றும் அடுத்துவரும் தேர்வுகளிற் பலரும் பங்
கெடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் பட்டமளிப்பு உரையில்
வற்புறுத்திக்கூறினார்கள். பின்னர் சைவமங்கையர் மகாநாட்டுத்
தலைவியார் திருமதி. புஷ்பம் நடராஜன் அவர்கள் ‘அடியார்கள்
உறவு’ என்னும் பொருள்பற்றி உயர்ந்தவொரு சொற்பொழிவு
ஆற்றினர். அடுத்து திரு. கா. வச்சிரவேல் முதலியார், B. A.,
L. T. அவர்கள், ‘ களிறும் கித்தியும் ’ என்னும் சாத்திரக்
கருத்துக்கள் நிறைந்தவொரு சொற்பொழிவு செய்தார்கள்.
தலைவரவர்கள் தமது கருத்துரையை விரிவாக எடுத்துரைத்
தார்கள். அன்று மாலை 5 மணிக்குச் ‘சித்தாந்தம்’ பத்திராசிரி
யர் S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், ‘ சமயப் பணி ’ என்
னும் பொருள்பற்றி உணர்ச்சிமிக்கவொரு சொற்பொழிவு
செய்தனர். பின்னர் திருவாளர் K. M. பாலசுப்பிரமணிய
முதலியார் B. A., B.L. அவர்கள், ‘ அடியார்கள் நகைச்சுவை ’
என்னும் பொருள்பற்றி நீண்டவொரு சொற்பொழிவு செய்
தார்கள். திருவாளர் கா. இராமநாதன் செட்டியார் B.A.,B.L.
அவர்கள் மகாநாட்டுத் தலைவர்க்கும், திறப்பாளர், வாழ்த்தா
ளர், இளைஞர் தலைவர், மங்கையர் தலைவியார், சொற்பொழிவா
ளர், வரவேற்புக் கழகத்தினர், பேரவையினர் ஆகிய அனை
வர்க்கும் நன்றி கூறினர். தலைவர் அவர்கள் மூன்றுநாள்
பேச்சுக்களையும் தொகுத்து மிக அழகியவொரு முடிப்புரை
கூறினர்.

தலைவர் கூறின முடிப்புரையின் தொகுப்பு வருமாறு :—
மகாநாட்டில் மூன்றுநாட்களும் நிகழ்ந்த சொற்பொழிவுகள்
ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதத்தில் சைவசமயத்திற்கு ஆக்கந்
தேடும் நோக்கமுடையது என்றும், ‘அற்புதத் திருவந்தாதி ’,
‘ வாழ்க்கை வாழ்வதற்கே ’, ‘ சமாஜப் பணி ’, ‘ அடியார்
நகைச்சுவை’ என்ற நான்கு சொற்பொழிவுகளும் பொதுவாகச்
சமயச் சீர்திருத்தத்தை வற்புறுத்தின என்றும், ‘ நம் பணி ’,
‘ அன்பு எது ’ என்ற இரண்டும் சைவ சமயச் சீர்திருத்தக்
கருத்துக்களை வெளியிட்டனவென்றும், ‘ மக்கள் வாழ்க்கை
யில் அமைந்த சமயம் ’, ‘ குழந்தையார் சிவஞானம் ’, ‘ அடி

யார்கள் உறவு' என்ற மூன்றும் சைவ சமய உண்மைகளை மக்களுக்கு எளிதிற் புலப்படுத்தும் பிரசாரங்களாயிருந்தன வென்றும், 'அற்புதத் திருவந்தாதி', 'கேட்டாரும் அறியாதான்' என்ற சொற்பொழிவுகள் பத்திச் சுவையின் மேம்பாட்டை நுவன்றனவென்றும், கடைசியாக, 'இரு பல்லவ அடியார்கள்', 'ஆராய்ச்சியும் அனுபவமும்', 'களிறும் சித்தியும்' என்ற மூன்றும் ஆராய்ச்சித்திறன் மிக்கனவாயும் சமய அறிவிற்கு ஆராய்ச்சி தேவையென்பதை வற்புறுத்துவனவா வாயும் இருந்தனவென்றும் கூறினார். இம்மகாநாட்டை இனிது நடத்திய சமாஜத்திற்குத் தன் வந்தனத்தையும், வாழ்த்தையும்,

'சைவம் தழைக்க தமிழ்தழைக்க தண்ணருளின்
மெய்வந்த சீலம் மிகத்தழைக்க—சைவ
உலகிற் குறுபுக ழீங்தோங்கு சமாஜம்
இலகிடுக என்று மினிது'

என்ற வெண்பாவாலும், இம்மாநாட்டை இத்துணைச் சிறப்பாக நடத்தித் தந்த திருச்செங்கோட்டு வாசிகளுக்குத் தன் நன்றியறிதலை,

'பைங்கோட்டு நீள்மரங்கள் செறிந்தோங்கி
நிழற்றுகுன்றப் பாப்பின்மீதே
வெண்கோட்டி னிமையமடப் பிடியோடு
மேவுதிரு மேனிகொண்டு
கண்கோட்டிக் காதல்புரிந் தருள்கின்ற
பெருமானார் காட்சிதந்த
செங்கோட்டு மாநகரார் செய்ததிருத்
தொண்டின்சீர் செப்பலாமோ'

என்ற பாவினாலும் தலைவர் வெளியிட்டார்.

இந்த மூன்று நாள்களிலும். சேலம் அட்வகேட் தி
சுப்பிரமணிய முதலியார் புதல்வியார் திருமதி ஜெயம்மா



திருமதிகள் அ. மு. காமாட்சியம்மையார் M. A., சேது அம்மாள், காஞ்சனமாலையம்மையார், கோயில் ஆதிசைவச் சிறுவர்கள், திருவாளர் பு. ரா. சுவாமிநாதன் M.A.L.T., முதலியோர் இன்னிசை பாடி அவையினரை மகிழ்வித்தார்கள்.

## சைவர் இளைஞர் மகாநாட்டு நிகழ்ச்சிகள்

25-12-46 புதன்கிழமை மாலை 2-30 மணிக்கு இளைஞர் மகாநாடு கூடியது.

திருவாளர் G. கல்யாணம். M. A. (Dip in Econ.) அவர்கள் தமிழ்நாட்டில் கோயில்கள் வளர்ந்த வரலாற்றையும் இன்று நம்நாட்டில் கோயில்கள் இருக்கும் நிலையையும் பற்றி அரியதோர் சொற்பொழிவு ஆற்றினார்கள். பின்னர் ஆசிரியர் சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள் சமயக்கல்வி பற்றிய சில சீர்திருத்தங்களை வற்புறுத்தினார்கள். அடுத்தாற்போல பெரிய நாயகன் பாளையம், இராமகிருஷ்ண வித்யாலயம், தமிழாசிரியர் திரு. ச. கா. சண்முகம் அவர்கள் 'சிறுவரும் சமயமும்' என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். சமாஜ வெளியீடாகிய 'சித்தாந்தத்'தில் 'சிறுவர் பகுதி' ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்று விண்ணபித்துக் கொண்டார்கள். மயிலம் ஆசிரியர் அம்பை சங்கரனார் அவர்கள் 'இளைஞரும் சைவமும்' என்னும் பொருள்பற்றிப் பேசினர். ஈரோடு திரு. சுப்பிரமணியம் அவர்கள் 'சிலப்பதிகாரம்' என்னும் தலைப்பில் 'வழக்குரை காதை'யில் உள்ள அழகிய பகுதிகளை எடுத்து விளக்கினார்கள். கடைசியாக மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சைவசித்தாந்த நுணுக்கங்கள் பலவற்றை இளைஞர்கள் அறியும் வண்ணம் எடுத்துக் கூறினார்கள்.

27-12-46 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இளைஞர் மகாநாடு மீண்டும் கூடியது. திருச்செங்கோட்டு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் திரு. அண்ணாமலை, திரு. கணபதி ஆகிய இருவரும் சைவ இளைஞர்கள் ஆற்றவேண்டிய கடனைப் பற்றி

யும் சமாஜத்தில் இளைஞர்கள் பங்கெடுத்துக்கொள்ள வேண்டிய
பொறுப்பைப் பற்றியும் அழகாகப் பேசினார்கள். அடுத்தாற்
போல் தூத்துக்குடி பாகம் பிரியாள் சங்கத் தலைவியார் மகளு
ராகிய திரு. ஈசுரமூர்த்தி அவர்கள் 'சிறுவர் விளையாட்டு'
என்னும் பொருள்பற்றி அழகிய சொற்பொழி வொன்றாற்றி
ஞர்கள். பின்னர் திரு. M. சிவராமன் அவர்கள் 'சைவமும்
நாமும்' என்னும் பொருள்பற்றிப் பேசினார். கடைசியாக
ஈரோடு ஆசிரியர் தங்கவேல் அவர்கள் 'காதல் மணம்'
என்னும் பொருள்பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நடத்
தினர். தலைவர் அன்று நடந்த பேச்சுக்களிற் சிறந்த பகுதிகள்
பலவற்றை எடுத்துக்காட்டி, இளைஞர்களாகிய தங்கள் பேச்சில்
குற்றங் குறைகளிருத்தல் கூடுமென்றும் அக்குறைகளை யறிந்து
நிரப்புதல் அவையினர் கடன் என்றும் கூறி முடித்தார்கள்.

## சைவமங்கையர் மகாநாட்டு நிகழ்ச்சிகள்

26-12-46 வியாழன் மாலை 4 மணிக்குச் சைவமங்கையர்
மகாநாடு தொடங்கியது. தலைவியர் அவர்கள் தம் தலைமை
யுரையை நிகழ்த்தினார்கள். அவ்வமயம் மங்கையர் பலரும்
தேவாரம் திருவாசகம் முதலிய பாடிச் சிறப்பித்தார்கள்.
27-12-46 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மகாநாடு
மீண்டும் கூடியது. கீழ்க்கண்டவர்கள் அம்மகாநாட்டில்
பேசினார்கள்.

விருதுநகர் திருமதி தில்லையம்மாள்—சமயமும் பெண்களும்
தூத்துக்குடி திருமதி சிவகாமி அம்மாள்—பெண்கல்வி
விருதுநகர் திருமதி சின்னமணி அம்மாள்—ஞானகுரு
மயிலை காஞ்சனமாலை அம்மாள்—சமயப்பணி

தலைவியர் முடிப்புரை கூறுகையில் மங்கையர் சமய
வளர்ச்சிக்காகச் செய்யவேண்டிய பணிகளை வகைப்படுத்தி,
ஊர்தோறும் மங்கையர் சங்கங்கள் சமயமுழக்கம் செய்ய
வேண்டும் என்று உரைத்தார்கள்.

## திருச்செங்கோடு சமாஜ ஆண்டுநிறைவு விழாவில் நிறைவேறிய தீர்மானங்கள்

(1) சென்னையில் சங்க நிலையம் ஏற்படுத்துவது, அதில்
சங்கக் காரியாலயம் வைப்பது, அதிர் ஓர் நூல் நிலையம் ஏற்
படுத்துவது, அதில் சைவமக்கள் சென்னைக்கு வந்தால் தங்க
வசதி அளிப்பது, சமாஜத்திற்கு ஒரு பணியாளரை நியமிப்பது
ஆகியவற்றை விரைந்து முடிவு செய்வதற்காகத் திருவாளர்கள்
C. M. இராமசந்திரஞ் செட்டியார் B. A. B. L. கா.
இராமனுதன் செட்டியார் B. A. B. L. க. அரங்கசாமி
முதலியார் B. A. ஆகியோர் கூடிய உட்கழகம் அமைக்கப்
பட்டது. (2) 'சித்தாந்தத்'தைப் பெருக்கும் வழியில் சிறந்த
முறையில் வெளியிடல் வேண்டும் (3) சைவமாணவர்களுக்குச்
சென்னையில் உணவு விடுதி ஏற்படுத்துதல் (4) நமது சமயத்த
வர்கள் பிற சமயங்களிற் புகாமல் இருக்க ஆவன செய்தலும்
பிறசமயத்தவர் நம்சமயம் சேர வந்தால் சேர்த்துக்கொள்ளு
தலும் அவசியமாகும். (5) இந்து சமய நிலையங்களில் (மடம்
கோயில் முதலியன) கிடைக்கும் பொருள்களை ஆலய வழிபாடு,
சமயப்பிரசாரம், நிலையநிர்வாகம், சமயமக்களின் இடவசதி
சுகாதாரவசதி முதலியவற்றிற்கு விரைவிற் செலவு செய்து
எஞ்சிநிற்பதை ஏழைமக்களது நிலையை உயர்த்துவதற்கான
வழிகளை விரைந்து செய்யவேண்டும் என்றும், பிறவகையில்
செலவு செய்தல் முறையல்லவென்றும் முடிவுசெய்யப்பட்டது.
(6) சமயநிலையங்களிலும் சமயச்சடங்குகளிலும் கூடியவரை
யில் ஆடம்பரமில்லாமல் செலவுகளைக் குறைத்து நடத்துவது.
(7) திருச்செங்கோடு முதலிய ஆலயங்களைத் திறந்துவிட்ட
தமிழ்நாட்டுக் கோயிற்றலைவர்களைப் பாராட்டுவதுடன் அதற்கு
ஆதரவாயிருந்த அரசியலாரையும் பாராட்டுகின்றது. (8)
திறவாத கோயில்களையெல்லாம் திறந்துவிடுமாறு உரியார்களைக்
கேட்டுக்கொள்கிறது. (9) சைவ சமயத்தின் வளர்ச்சிக்காக
மாதம் ரூபாய் 50 தர இசைந்து இரண்டு மாதங்கட்கு ரூபாய்
100 அனுப்பிய சென்னை, இராயபுரம் ருக்மணி - குக்கர்
உரிமையாளர் அ. சோமசுந்தரஞ் செட்டியார் M. A. அவர்
களைப் பாராட்டுகின்றது.

## சைவ சித்தாந்த மகா சமாஜம் 41-வது ஆண்டு விழா, 1946

# சைவர் மகாநாட்டுத் தலைமையுரை

சைவச்செல்வர்களே, செல்வியர்களே, அன்பர்களே,

நமது சைவசித்தாந்த மகா சமாஜம் பெருந்தமிழாசிரியர்
களாலும் சைவவுலகில் தலைசிறந்து விளங்கியவர்களாலும் நிறு
வப்பட்டது. சென்ற நாற்பது ஆண்டுகளாகத் தமிழுக்கும் சைவ
சமயத்திற்கும் அளவிடுதற்கரிய பெருந்தொண்டு இயற்றி
வந்திருக்கிறது. இப்பொழுது, தன் அரிய தகுதிக்கேற்ப,
தமிழ்நாட்டில் பெரும்புகழ் பெற்று விளங்குகிறது. இத்தகைய
சமாஜத்தின் ஆண்டு விழாவில் தலைமைவகிக்கும் பேறு எளிதிற்
கிடைப்பதன்று. எனக்கு இப்பேறு இன்று வாய்த்திருக்கிறது.
ஆகவே இந்நாள் என் வாழ்நாளில் நான் என்றும் போற்றத்
தகும் ஒரு நன்னாள். இப்பேற்றினை எனக்கு அன்பு மேலீட்
டால் அளித்த காரியதரிசிகள் ராவ்பகதூர் கே. அரங்கசாமி
முதலியாரவர்களுக்கும், கே. இராமநாதன்செட்டியாரவர்களுக்
கும், செயற்குழுவினர்க்கும், சமாஜப் பொதுக் குழுவினர்க்கும்
எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு தலைமைவகித்துச் சமாஜ ஆண்டு விழாக்
களைச் சிறப்புற நடத்திய பெரியோர்களின் பெருந்தகுதி என்
மனத்தில் ஆழ்ந்து பதிந்து கிடக்கிறது. அப்பெரியோர்களிற்
சிலர் இங்கு இருக்கின்றார்கள். எனது நண்பர் திரு. ம. பால
சுப்பிரமணிய முதலியாரவர்களை முற்படக் கூறுவேன். அவர்
கள்வெகுகாலமாக, 22 ஆண்டுகளாக,சமாஜத்தின்காரியதரிசியா
யிருந்து அரும்பணி புரிந்துள்ளவர்கள்; சமாஜம் குறுகிய நோக்
கம் கொள்ளாமற் பரந்த நோக்கத்தாற் பணிபுரிந்து பெருமை
யெய்தும்படி செய்தவர்கள்; நூல்கள் வெளியிட்டுத் தமிழ்மக்
களுக்கு உபகாரம் புரிந்தவர்கள்; இவ்வகை வெளியீட்டில்,
சமயவேற்றுமை பாராட்டாது, சைவம், வைஷ்ணவம், ஜைனம்
முதலியவற்றுக்குரிய இலக்கியங்களைப் பதிப்பிடுதலும் சமா



ஜத்தின் கடமையே என்பதைப் பிரசுர வாயிலாகத் தெளிவித்
தவர்கள்; சித்தாந்த சாஸ்திரங்களையும் சைவ இலக்கியங்களை
யும் நன்கு பரிசோதித்துப் பதிப்பிட்டவர்கள்; சங்க இலக்
கியங்களனைத்தையும் ஒரே தொகுதியில் பலவகை ஆராய்ச்சிக்
குறிப்புகளுடன் வெளியிட்டவர்கள்; மாதந்தோறும் சித்தாந்
தம், சைவ முதலியன பற்றிப் பிரசங்கம் நிகழ்வதற்கு வேண்
டும் ஏற்பாடு செய்தவர்கள்; ஆண்டுதோறும் சித்தாந்தம்
பற்றிய பரீக்ஷைகள் நடத்தி, மாணவர்களிடையே சாஸ்திர
வுணர்ச்சியைப் பரப்பிவருபவர்கள்; வேனிற் காலவகுப்புக்கள்
நடத்தி, பல அன்பர்களுடைய உதவிகொண்டு சித்தாந்த
சாஸ்திரவிளக்கஞ் செய்துவருபவர்கள்; இந்த ஆண்டிலே,
ஸ்ரீலஸ்ரீ தருமபுர ஆதீனத்துப் பண்டார ஸந்நிதிகளுடைய
ஆதரவிலே, சம்பந்தர் தேவாரத்தில் முதல் திருமுறைக்குத்
தக்க வித்துவானைக் கொண்டு உரையெழுதி முற்றுவித்
தவர்கள்; நூல் வெளியீட்டுப் பணியில் முதலியாரவர்களுடன்
ஒத்துழைத்து வருபவர்கள் எனது அருமை நண்பர் திரு.
டி. கே. நாராயணசாமி நாயுடு அவர்கள்.

எனது நண்பர் ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ்
செட்டியாரவர்கள் இங்கே வந்துள்ளார்கள். இவர்கள் தலைமை
வகித்தும் சொற்பொழிவாற்றியும் பணிபுரிந்து வந்திருப்ப
துடன், சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழக உறுப்பின
ராக இருந்த காலத்து, நமது நாட்டுத் திருக்கோயில்களின்
வரலாறுகளைச் சரித்திர நெறியில் எழுதுவித்து வைதிகசமயங்
களுக்குப் பெருந்தொண்டு புரிந்தவர்கள். இவர்களைப்
போன்ற பல பெரியோர்கள் இங்கே விஜயம் செய்திருக்கிறார்
கள்.

இங்கே வர இயலாமற் போயினும், தாம் இருக்குமிடங்
களிலிருந்தே நமக்கு ஆசி அளித்து வருகின்ற தலைவர்கள்
சிலரை நாம் நினைத்துப் போற்றுதல் வேண்டும். முதலாவது
எனது தமிழாசிரியர் மறைமலையடிகளைக் கூறல்தகும். இவர்கள்
சமாஜத்தை நிறுவியவர்களுள் ஒருவர்; தமது தமிழ்வளம்
படைத்த நூல்களாலும், இனிய சொற்பொழிவுகளாலும்
நமது தமிழன்னைக்கு அரும்பெரும் பணிகள் ஆற்றியுள்ளவர்

கள்; சைவ சித்தாந்த உணர்ச்சியில் தலைசிறந்தவர்கள். சிவக்கவிமணி திருவாளர் சி. கே. சுப்பிரமணியமுதலியாரவர்களையும் இங்கே குறிப்பிடல்தகும். இவர்களது பெரிய புராண உரையும் உருக்கமான பக்திப் பிரசங்கங்களும், சைவ அடியார்களது, உள்ளத்தைக் குழைவித்துவருவன. பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியாரவர்களைக் குறித்து நான் உங்களுக்குச் சொல்லவேண்டுமென்ற அவசியம் இல்லை. இவர்கள் பெரியபுராண நயம் பற்றியும் திருவாசக நயம் பற்றியும் செய்துவந்த சொற்பொழிவுகள், சுக்ரநீதி மொழிபெயர்ப்பு முதலியன இவர்களுடைய வடமொழி தென்மொழியுணர்ச்சியையும் சொல்நயம் பொருள்நயங்களை உணருகின்ற கூர்ந்த அறிவையும் கேட்போரை வசீகரிக்கும் ஆற்றலையும் புலப்படுத்துகின்றன. திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் இந்த சமாஜத்திற்கு ஊன்றுகோலா யிருந்து உதவி வருபவர்கள். இவர்களுடைய பரந்த அறிவும் கல்வியும், இவர்களுடைய உணர்ச்சிவேக மிக்க தமிழ்நூல்களும், மக்கள் உள்ளத்தை ஊக்க வெறியினால் நிரப்பிக் குதித்துக் கூத்தாடச் செய்யவல்ல அரிய சொற்பொழிவாற்றலும் நம்மவர்களால் என்றும் போற்றுதற்குரியன. திண்ணிய தூண்போல் நின்று சைவ சித்தாந்தத்தைத் தாங்கி வருபவர்கள் திரு ந. சிவகுருநாத பிள்ளையவர்கள். இங்ஙனம் பலர்.

பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பில் நின்று நமக்கு ஆசியருளும் பெரியார் சிலரைக் குறித்தும் நாம் நினைவு கூர்தல் தகும். ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளது திருநாமமே முதற்கண் நம் மனத்தில் தோன்றுவது. வடமொழி தென்மொழிகளிற் பயின்ற பரந்த கல்வியும், ஆழ்ந்த சைவ சாஸ்திர உணர்ச்சியும், மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் போதித்து அன்னோரை நல்வழிப்படுத்த வேண்டுமென்ற பேரருளும், தம்மை அணுகினோர்மீது இவர்கள் கொண்டிருந்த பேரன்பும், இவர்களது நிரம்பிய சொல்வன்மையும் தமிழுலகத்திலே இவர்களுக்குப் பெரும்புகழை விளைத்தன. சமாஜ ஆண்டு விழாக்களில் இவர்கள் ஏழு முறைகள் தலைமைதாங்கிப் பெருஞ்சிறப்புற நடாத்தினார்கள். சுவாமி

களைப் போலவே, திரு ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையவர்களையும் நினைதல் வேண்டும். இவர்கள் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் இவ்விரண்டினையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இவற்றின் பெருமையை உலகறியச் செய்தார்கள்; Light of Truth என்ற சித்தாந்த தீபிகைப் பத்திரிகையை ஆங்கிலத்தில் நடத்தி, சைவசாஸ்திர விஷயங்கள் பலவும் நன்கு பரிசோதனை செய்யப்படுவதற்கு ஒருவாயிலாக அதனை ஆக்கினார்கள். நமது சமாஜம் தொடங்கப்பெற்றபொழுது துணை நின்றுதவியவர்களுள் இவர்களும் ஒருவர். பண்டித நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும் இங்கே கூறற்குரியவர். இலக்கிய இலக்கணக் கல்வியில் இவர்கள் சிறந்து விளங்கியது போலவே, சைவ சாஸ்திரக் கல்வியிலும் இவர்கள் மேம்பட்டவர்கள். ஒருமுறை தலைமைவகித்து, இந்த சமாஜ ஆண்டுவிழாவைப் பெருஞ்சிறப்புறச் செய்தனர். திரு வி. உலகநாத முதலியாரவர்களையும் நாம் நன்றி பூர்வம் நினைத்தல் வேண்டும். இவர்கள் சமாஜ ஆலோசனைக் கூட்டங்களில் பல ஆண்டுகள் உடனிருந்து உதவி, சமாஜ நூற்பதிப்புக்கள் திருத்தமாய் அழகுற வெளிவருவதற்குப் பெரிதுந் துணை புரிந்தவர்கள்.

இத்தகையாரை யெண்ணுந்தோறும் என்மனம் ஒருபால் பெருமிதத்தால் விம்முகின்றது; மற்றொருபால் கவலைபால் தகர்க்கப்படுகின்றது. முன்பு பணிபுரிந்த இத்தலைவர்களுக்கு ஒப்பாக யானும் எனது கடமையை ஆற்ற முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இல்லை. எனினும், இங்கே கூடியிருக்குச், அன்பர்களது பேராதரவையே முழுதும் நம்பி, எனக்கும் சமாஜத்தார் இட்ட கட்டளையை ஒருவாறு நிறைவேற்றத் துணிகின்றேன்.

(தொடரும்)

## சமாஜ உறுப்பினரின் பணிப் பிரிவினை

'சித்தாந்தம்' வெளியீடு தொடர்பான கடிதப்போக்குவரத்துக்கள், மகாநாடு மாதக் கூட்டம், கோடைவகுப்பு இவைபற்றிய விவரங்கள் இவற்றுக்கு கா. இராமநாதன் செட்டியார் 73. T.S.V. கோயில் தெரு மயிலாப்பூர் சென்னை, என்ற முகவரிக்கும் ஏனைய சமாஜ விவரங்களுக்கு 'பொதுக் காரியதரிசி 9, வைத்திராமய்யர் தெரு தியாகராய நகர் சென்னை' என்ற முகவரிக்கும் எழுதவும்.

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 20 | விய மாசி 1947 பிப்ரவரி | இதழ்

## போற்றுகிறோம்

இன்று, இந்திய சரித்திரத்திலேயே மிக முக்கியமான ஒரு கட்டத்திற்கு வந்திருக்கிறோம் என்பதைப் பள்ளிச் சிறுவரும் அறிவர். நம் நாட்டு அரசியல் பொருளாதாரம் சமூக நிலை இவற்றோடு சமய நிலையும் பெரிய மாறுதலுக்கு உள்ளாகப் போகின்றது என்பது உறுதி. இந் நிலையில் காலத்திற்கேற்ற பணியாகக் கோயில்களை இந்து சமூகத்தினர் ஒதுக்கப்பட்டவர்கள் என்று கருதிய ஹரிஜனப் பெருமக்களுக்குத் திறந்துவிடும் அருந் தொண்டில் தருமையாதீனத்தாரே ஈடுபட்டிருப்பது மிக மிகப் போற்றத் தக்கது.

தமிழ்நாடு செய்த தவப் பயனாகிய ஞானசம்பந்தப் பெருந்தகை அவதரிக்கக் கொடுத்துவைத்த திருவூர் காழியம்பதி. திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவியாரும் புடைசூழவே சம்பந்தர் பெருமான் கோயில் தோறும் சென்று இசைபாடி இறைவனை மகிழ்வித்த மாண்பினைச் சைவ உலகம் நன்கறியும். சீகாழியம்பதியில் சட்டநாதசுவாமி கோயிலைத் தருமபுர மடாதிபதி அவர்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டிருப்பது மிகவும் பொருத்தமே. அரசியல் குழப்பங்களால் சிறிது அயர்வெய்தி நிற்கும் இந்து சமயத்திற்கும் சிறப்பாகச் சைவ

சமயத்திற்கும் பேராக்கம் செய்ய வல்ல
அரும்பணிகளில் நம் நாட்டுப் பிற மடாதிபதிகளும் தரும
கர்த்தர்களும் ஈடுபடுவார்கள் என்பதில் இனி ஐயமில்லை.

---

# ஆதீனங்களின் பணி 1946

[1946-ல் திருப்பனந்தாள் மடத்தினர் தொண்டும் தருமையா
தீனத்தார் செய்த தொண்டும் திருப்பனந்தாள் மடத்தினர் விடுத்துள்ள
அறிக்கை மூலமும் தருமையாதீனத்தார் வெளியிட்டுள்ள "ஞான சம்
பந்த" மலரிலிருந்தும் தெரியவருகிறது. முன்னதன் சுருக்கத்தை
இப்பொழுது தருகிறோம். வரும் இதழில் தருமையாதீனத் தொண்டை
சுருக்கித் தருவோம். இதர ஆதீனங்கள் சென்ற ஆண்டில் செய்த
தொண்டை எழுதி அனுப்பின் மகிழ்ச்சியுடன் வெளியிடுவோம் 47-ம்
வருஷம் செய்யும் பணிக்குத் திட்டம் உளவேல் அதனையும் தெரிந்து
கொள்ள விரும்புகிறோம். ப-ர்.]

" திருப்பனந்தாள் காசி வாசி ஆதீனத்தார் இதுவரை
வைத்துள்ள கட்டளைகளைச் சேர்த்து வெளியிட்டுள்ளார்
கள். சென்ற ஆண்டிலும் பல பணிக்குப் பணம் ஒதுக்கி
வைத்துள்ளார்கள். ரூபா ஐயாயிரம் அரசாங்கப் பத்
திரமாகத் திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தாரிடம்
கொடுத்துத் தேவாரம் பண்ணுடன் பாடும் மாணவருக்கு
பரிசு ரூபாய் 100 அளிக்க ஏற்பாடாகியுள்ளது. அவ்
வாறே கொச்சின் ராஜ்யத்திலும் ஒரு பரிசு வைக்கப்பெற்
றிருக்கிறது. சீகாழி, திருவாரூர், திருவையாறு உயர்தரப்
பள்ளிக்கூட மாணவர்களுக்கும் திருப்பனந்தாள் செந்
தமிழ்க் கல்லூரி மாணவர்களுக்கும் தேவாரப் பரிசுக்காக
ரூபா பத்தாயிரம் ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது.
ரூபா அறுபதினாயிரம் சித்தாந்தப் பேராசிரியர் நியமிக்க,
காசி இந்து பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கப் பெற்றி



ருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சித்தாந்த பாடம் எடுத்துக் கொள்ளும் ஏழை மாணவர்களுக்குப் உதவிச் சம்பளம் கொடுக்க ரூபாய் முப்பதாயிரம் அப் பல்கலைக் கழகத்தில் நிதியாக வைக்க ஏற்பாடாகிறது. ஒன்றரை லட்சம் பெறுமான நிலத்தை 'ஸ்ரீ காசி வாசி தமிழ்க் கல்லூரி' நடத்த ஒதுக்கி வைத்துள்ளார்கள். மிருக வைத்தியத்திற்கும், ஆஸ்பத்திரிக்கும், படித்துறை கட்டவும், கும்பகோணத்தில் மணிக்கூண்டு கட்டவும் பணம் செலவு செய்யப்படுகிறது.

இந்த ஆதீனத்தார் வருவாயில் பெரும் பகுதியையும் சொத்தில் சிலவற்றையும் காலத்திற்கேற்ற நல்ல பணிகளுக்கு செலவிட்டிருப்பது போற்றத் தக்கது.

---

# வாழ்க்கை வாழ்வதற்கே

(அ. மு. பரமசிவானந்தம்)

உலகில் எண்ணற்ற உயிர்கள் தோன்றுகின்றன ; வளர்கின்றன ; வாழ்கின்றன ; வீழ்கின்றன ; அத்தகைய உயிரினங்களில் சிறந்தவனாக மதிக்கப்படுபவன் மனிதனுவான். எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவியே ஏற்றமுற்ற தென்பது எச்சமயத்தோரும் ஏற்றுக் கொண்ட ஒரு முடிபு. தாம் ஆற்றும் செயலும், பேசும் சொல்லும், நினைக்கும் நினைவும் நன்மை தருவன அன்றித் தீமை சேர்ப்பன என்று பகுத்தறிந்து, நல்லது ஆற்றவேண்டும் என்ற சிந்தை கொண்டு வாழ்வது மனிதனால்தான் முடியும். அத்தகைய நலம் உணரும் நற்பிறவி பெற்ற மக்களினத்திலே பிறந்த பல்லோர் எதற்காகப் பிறந்தோம் என்பதையும் எண்ணிப் பார்க்காது வீணுக்குக் காலம் கழிப்பவர்களாக நிற்பது காண நெஞ்சம் நைகின்றது.

மக்களினம் தோன்றிய நாள்தொட்டு இன்றுவரை இடை
யிடையே பல அறிஞர்கள் தோன்றி, மக்கள் வாழ்க்கை
செப்பமுறும் வகையில் பலப்பல பாடி, எழுதியும்,
வாழ்ந்து வழிகாட்டியும் சென்று இருக்கின்றார்கள். அவர்
தம் வழிகண்டு மொழிகொள்ளின் உண்மை நன்கு விளங்
கும். வாழ்க்கை நமக்கு இறைவன் அளித்துள்ளான்.
பெற்ற வாழ்க்கையை உற்ற வழியில் பயன்படுத்தி
வையத்து வாழ்வாங்கு வாழ்க்கை நடத்துவதே சாலச்
சிறந்தது என்பது அறிஞர்கள் கண்ட முடிபு. ஆகவே
உலகிடைப் பிறந்தால் வாழப்பிறந்தவரே யன்றி வீணுகத்
துறவுகொண்டு ஆழப்பிறந்தாரல்லர்.

நாட்டில் சிலர் உலகம் பொய்யென்றும் அதை விட்டுக்
காட்டிடை வாழ வேண்டுமென்றும், கந்த மூலாதிகள்
உண்ண வேண்டுமென்றும் காவியுடுத்தும் தாழ்சடை
வைத்தும் காலங் கழிக்க வேண்டுமென்றும் வற்புறுத்து
வதைக் காண்கின்றோம்! காண்கின்ற அனைத்தும் பொய்
யென்று வெறுத்துக் கண்மூடி. மௌனியாகி வாழ்தல்
சிறந்தது என்று பேசும் சாக்குருவி வேதாந்தம் மக்கள்
வாழ்க்கைக்கு வேண்டப்படாததொன்றாகும். உலகில்
பிறந்த பயன் இறைவனால் நமக்கென உண்டாக்கப்பட்ட
அனைத்து நலனையும் பெற்று அவற்றின் வழி தாம்இயங்கி,
இன்பமுற்று, மற்றவரையும் அத்தகைய இன்ப நிலையில்
வாழவைக்க வழிகோலுவதே சிறந்ததுஎன்பது அறிஞர்
முடிபு. இறைவன் தோற்றங்களைப் பொய்யெனப் பழித்து
ரைத்து வெறுத்து நிற்பின் அது அத்தோற்றங்கட்குக் கார
ணமாய் இறைவனையே பழித்தலாக முடியுமன்றோ? ‘தங்கச்
சிலைபோல் நிற்கின்றாள் என்மனைவி! அவள் பொய்யா?’
என்று இந்த நூற்றாண்டில் வாழ்ந்த கவி பாரதி கேட்கி
றார். என்ன பதில் சொல்ல முடியும்? தமிழரது பண்டை
நாள் வாழ்வினைச் சற்று சிந்தித்துப் பார்ப்பின் அவர்
கொண்ட அறவாழ்வு நன்கு புலப்படும். ‘அறன் எனப்



பட்டதே இல்வாழ்க்கை’ என்று தேற்றேகரங் கொடுத்து
இல்வாழ்வின் ஏற்றத்தை வற்புறுத்திய வள்ளுவர் வழி
வந்த த்மிழ் மக்கள் இல்லறமல்லாதவற்றை நல்லறமாக
ஏற்பார்களோ! ஏற்கார். அவர்கள் முடிவு வாழ்க்கை
வாழ்வதற்கே என்பதாகும்.

பௌத்த சமணத்துறவுக் கொள்கை நாட்டில் கால்
கொள்வதற்கு முன், சங்க காலத் தமிழ் நாட்டிலே
துறவு நிலை சிறந்து நிற்கவில்லை. சங்க இலக்கியங்களெல்
லாம் அகப் பாட்டுகளாக அமைந்து மக்கள் வாழ்க்கையை
வளமாக்கும் வகையில் அமைந்தன. கருத்தொருமித்த
காதல் மிக்க - தலைவனும் தலைவியும் கலந்து தாமும்
மகிழ்ந்து - வாழ்வின் இனிமையில் உலக உயர்நிலை கண்டு
நிற்பதை விளக்குவன அல்லவா அவைகள்? இரண்
டொரு பாடல் இறைவனை நோக்கிப் பாடப்பட்டனவாக
அமையினும் அவை அவ்விறைவனைப் போற்றும் முறை
யில் அமைந்தனவே அன்றித் துறவு நிலையை வற்புறுத்தக்
காண்கிலோம். அவ்விறைவனும் அம்மையப்பனாக ஆணும்
பெண்ணுமாக அடியார்க்கு அருள் நல்குகின்றான். காட்
டிடத்தும் மலையிடத்தும் கனிந்த இயற்கை நலம் கண்ட
தமிழர் அவ்வியற்கையோடியைந்த இறைவனை எண்ணி
அவரை அம்மை அப்பராக வழிபட்டார்கள். இந்த வகை
யில் பெற்ற இன்பத்தைக் கொண்டு உற்ற வகையில் உல
கிடை வாழ்வதா? அன்றி இறைவன் தோற்றத்தை ஏள
னம் செய்து காட்டிடை ஆழ்ந்து மாள்வதா?

துறவுநிலை நாட்டில் மிக்ககாலம் பௌத்த சமணர்தம்
காலமாகும். அவர்தம் துறவுத்தொடக்கமே இன்றும் நாட்
டில் காண்கின்றது. இதன் உண்மையை ஆராயின்
சைவத்தின் நிலை நன்குபுலப்படும். தமழ் நாட்டுச் சரித்தி
ரத்தை எழுதிய சிறநத வல்லுநர் ஒருவர் சைவத்திற்கும்
சமணத்திற்கும் உள்ள வேறுபாடு இல்லறத்திற்கும் துற
வறத்திற்கும் உள்ள வேறுபாட்டின் அளவினதே என்று

முடிவு கட்டுகின்றார். இந்த உண்மையை தேவாரமும்தெளிவுறுத்தும். தேவாரத்தே சமணரைப்பற்றி வருகின்ற பல குறிப்புக்களை காண்கின்றோம். அதில் அச்சமணர் உடை வெறுத்து, உண்ணும் உணவினை வெறுத்து வெற்றுடம்பினராய் இற்றொழிலினராய் - மயிர் பறித்துப் புக்குழலும் துறவு நெறியினையே பெரும்பாலும் வற்புறுத்துவதைக் காண்கின்றோம். சம்பந்தர் அத்துறவிகள் வாழக் கொடுத்து வைக்காதவர்கள் என்று இகழ்கின்றார், நோன்பென்று கருதி உள்ளத்தைத் துறக்கும் உலுத்தர் என்கின்றார். மங்கையைக் கண்டு கதவடைக்கும் கள்வர் என்கிறார் அப்பர். இவர்தம் முடிவுகள் துறவுநிலை கொள்பவர் கள்வர், யோக்கியமற்றவர் என்பதே ஆகும். அவர் தம் வாக்கிலேயே அவற்றைக் காணல் அமைவுடைத்து.

‘பர்க்கிய மின்றி இருதலை போகமும் பற்றும் விட்டார்’
(1-116. 1)

தெருவத்திடை திரிந்து தின்னும் சிறுநோன்பர் (2-121-10.)

‘காவிசேர் கண்மடவார் கண்டோடி கதவடைக்கும் கள்வனேன்
(4. 5. 6.)

என்பன அவர் தம் மொழிகள். எனவே வெற்புத் துறவு-வேண்டா வாழ்க்கை என்பன சமணர் கொண்ட கொள்கைகள் என்பதும் அவற்றைச் சைவர் அறவே வெறுத்தனர் என்பதும் கண்கூடு,

அப்பரும் சம்பந்தரும் தம்தம் மனத்தினை நோக்கிக் கூறும் சொற்கள் நலம் பயப்பன. நெடுங்காலம் சம்பந்தர் துறவினால்தான் இன்பம் பெற இயலும் என எண்ணி இருப்பார் போலும். பிறகு உண்மை உணர்ந்த நிலையில், இல்வாழ்வில் தான் துன்ப நீக்கமும் இன்ப [illegible]க்கமும் உண்டு என்று உணர்ந்தார். உணர்ந்து கூறுகின்றார். சில நாள்



துக்கு வழிகண்ட வகையில் மனமே துறவியார்க்கல்லாது துன்ப நீங்காதெனத் தூங்கினாயே. இதோ இல்வாழ்விலும் இன்பம் உண்டே ! உறக்கம் விழி ! உண்மையை உணர்’ என்று உபதேசம் செய்கிறார். செய்தவழிச் சிறக்கவும் முற்படுகின்றார். மணம் செய்துகொள்ளவும் இசைகிறார், மணமும் நடை பெறுகின்றது. எனவே சம்பந்தர் முடிவு இல்லற வாழ்விலிருந்தே, இன்பத்தினிடையிலிருந்தே, இறைவனை அடைய இயலும் என்ற உண்மையை மேற்கொண்டதாகும்.

அப்பர் தனது முதுமைப் பருவத்தில் கழிந்ததை எல்லாம் எண்ணுகின்றார். இளமையில் இல்லறத்திலிருந்தோன் நல்லாரோடு கூடிக் குலவி அவரோடு கலந்து இன்பிலே உலகை உய்விக்கும் நெறியினை விட்டதை எண்ணுகின்றார்.

‘தளையவிழ் கோதைநல்லார் தங்களோடின்பம் எய்த
இளையனும் அல்லேன் எந்தாய் என்செய்வான் தோன்றினேனே’

என்பது அவர் வாக்கு.

சுந்தரர்: இவர் இருவரினும் ஒருபடி மிஞ்சிச் செல்கின்றனர். வாக்கிலும், சொல்லிலும், மங்கை இருவருடன் மகிழ்ந்தே. இறைவன் தோழராக அமர்ந்து வேண்டிய பொன்னும், மெய்ப்பொருளும், போகமும் அவனருளப் பெற்று வாழ்விடை வாழ்ந்து ‘வாழ்க்கை வாழ்வதற்கே என்ற ஏற்றத்தைச் செயலில் காட்டினார். இல்லிருப்பார் யாரென்றும், துறவு நிலையிலே இருமைப் போகமும் இழந்து காடும் நாடும், ஊரும் நீரும் தேடி உழல்பவர் யாரென்றும் நன்கு விளக்குகின்றார். அவர் தம் அடிகள் இவை ;—

மறையிடை துணிந்தவர் மனையிடை இருப்ப
வஞ்சனை செய்பவர் பொய்கையு மாயத்

'துறையுறக் குளித்துளதாக வைத்துய்த்த
உண்மை எனும் தகவின்மையை ஓரேன்'

என்று உறுதி கூறுகின்றார். அறமுணர்ந்த நல்லார். அற மாற்றும் நல்லார், சிந்தையில் செம்மைகொண்ட நல்லார் மனைவாழ்க்கையில் வாழ்ந்திருப்ப மற்றைய வஞ்ச மனத் தவரே தம் பொய்யும் பிற தீமைகளும் மறைய துறை யாடியும், குளமூழ்கியும் உண்மையாளர்போல் நடிப்ப தையும், அவரது உண்மை யற்ற தகவின்மையையும் தாம் வெறுப்பதைத் தெற்றெனத் தெளிவுபடுத்துகின்றார். மற்றும் அவரே மனமாசுடையோர் அணியும் சடையினை எள்ளி நகையாடுகின்றார்.

'தன்னில் ஆசறு சித்தமும் இன்றித்
தவமுயன்று அவமாயின பேசிப்
பின்னலார் சடைக் கட்டிஎன் பணிந்தால்
பெரிது நீந்துத லரிது'

(7. 64. 7.)

என்பது அவர் வாக்கு. ஆகவே, சமய முதற் குரவராகிய- தேவாரப் பாட்டிசைத்து இறைவனை உலகுக்குக் காட்டிய உயர்ந்தோராகிய மூவரும் இல்லறமே துறவறத்தின் ஏற்ற முடையது என்பதை நன்கு விளக்கிக் காட்டியுள்ளார் கள். இவற்றை யெல்லாம் கற்றுத் தெளிந்தபின் வாழ்க்கை வாழ்வதற்கா? அன்றி விழலுக் கிறைத்துத் தாழ்வதற்கா? என்பதன் முடிவு காண்பதரிதன்று.

இவ்வாறு சமய முதற்குரவர்கள் விளக்கிய 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற கொள்கை ஏற்றமுடையது. பெற்ற இன்பத்தையும், துன்பத்தையும் உற்றார்க்கும், மற்றார்க் கும் பகிர்ந்து கொடுத்து, 'தாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கொள்கையை மேற்கொண்டு வாழ் விடை வாழ்பவனே வீரனாவான். இந்த வீரவாழ்க்கையை மூவர் விளக்கியதோடல்லது சேக்கிழாரும் திறம்படக் கூறியுள்ளார்.



அறுபத்து மூன்று நாயன்மார்களுள் பெரும்பாலோர் இல்வாழ்வில் இருந்தே இன்பந்துய்த்து இறையருள் பெற் றவர். அவர் உள்ளத்தே அன்பு முகிழ்த்ததே. இல் வாழ்வான் தான் தனக்கென வாழாத் தாளாளனாய் மற் றாரை உற்றுநேசிக்கும் தன்மையாளனாய், உள்ளத்தே ஈர அன்பினை உடையவனாய் வாழ இயலும். மற்றத் துறவியோ தானே உயரவேண்டும் மற்றவையும் மற்ற வரும் தாழ் நிலையில் உள்ளமையால் பொய்யென்று எண் ணித் தனக்கென வாழ்பவன். இல்வாழ்வான், எல்லாம் உடையவன், அவன் வீரன் எதுவரினும் வருக என்று ஏற்று வாழ்விடை வரும் இன்ப துன்பத்திற்கு எதிர் நின்று வெற்றி காண்கின்றான். துறவி கோழை, வரும் இன்பத்திற்கும். துன்பத்திற்கும் தோற்று ஓடுகின்றான். இவற்றையெல்லாம் சேக்கிழார்,

ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் எம்மால் விளம்பும் தகையதோ

என்ற இரண்டடிகளிலே விளக்கிச் சென்றுவிட்டார்.

இவ்வாறு வலியுறுத்தப்பட்ட சைவத்தினிடை துறவு நிலை எப்படி கால் கொண்டது என்பதை எண்ணுதலும் சாலச் சிறந்தது. தொல்காப்பியர் சடங்கு உண்டான மைக்குக் காரணம் காட்டுகின்றார். மணமுறை தமிழ் நாட் டில் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி அமைந்த காலம் ஒன்று இருந்தது. தலைவன் தலைவி இருவரும் கருத்தொரு மித்து 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று தாம் கண்ட முடிவின்படி வாழ்ந்தகாலம் அது. அவர்தம் வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு சான்று பகர யானும் உடன் இருக்க வில்லை. தாம் மணந்த காலத்தே கழியருகே இருந்த நாரையே சான்றாயது என்ற கொள்கையைக் 'குருகும் உண்டு யாம் மணந்த ஞான்றே' என்ற குறுந்தொகையின் பழைய அடி நமக்கு நினைவூட்டுகின்றது. அத்தகைய மண

முறையில் சடங்கு இல்லை! விதி இல்லை! கட்டளை இல்லை! கயமை இல்லை! ஆனால் சடங்கு புகக் காலம் வந்தது. வாழ் விடை பொய்யும் வழுவும் புகுந்தது. அதற்காகச் சடங்கும் புகுந்தது.

> ' பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப '

என்பது தொல்காப்பியர் மொழி. இதே நிலையிலே தான் ஒருவேளை துறவு நிலையும் புகுந்திருக்கலாம். வாழ் விடை பொய்யும் வழுவும் புகுந்திருக்கலாம். இத்தகைய பொய்யும் வழுவும் புகும் வாழ்வில் வாழ்வதைவிட இதை விட்டு ஓடுவதே மேல் என்று எண்ணி இருக்கலாம். ஓடி இருக்கலாம், ஆனால் அவ்வாறு ஓடுபவர்கள் எதை நினைத்து ஓடினார்களோ - எந்தப் பொய்யும் வழுவும் கண்டு கலங்கினார்களோ அவற்றைச் செய்ய மேற்கொள்ளச் சிறிதும் தயங்குவதில்லை. மற்றும் அத்தகைய கொள்கைகளைக் கண்டு ஓடுபவனைக் காட்டிலும் எது வரினும் வருக என்று எதிரேற்று நிற்கும் வீரனே சிறந்தவன் என்பது உலகம் ஒருசேர ஒப்பமுடிந்த உண்மை. அத்தகைய எதிர்ப்புக்கு அஞ்சி ஓடுபவன் கோழை - நடுக்கம் உடையவன் - வாழ வகை அறியாதவன். அவனிலும் கீழ் மகன் துறவு ஒழுக்கத்தே தூய்மை இல்லாதவன். அவனது கூடா ஒழுக்கத்தையே வன்மையாகக் கண்டிக்கிறார் வள்ளுவர். அவனையே சுந்தரர் துச்சமாக எண்ணி எள்ளிநகையாடுகின்றார். அத்தகைய போலித் துறவியர் தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகின்றது. அந்த நிலை ஒழிந்து வாழ்க்கை வாழ்வதற்கே என்ற மெய்ம்மை வளரும் நாளே சைவம் வாழும் நாள். அந்நாள் விரைந்து வருவதாக!

---

# கேள்விகள்

[' சித்தாந்தம் ஐயங்கள் பலவற்றைத் தீர்த்துக்கொள்ளவும், அரிய கருத்துக்களையும் விவரங்களையும் தெரிந்து கொள்ளவும் இடமளிக்க முன் வருகிறது. உறுப்பினர் யாவரும் தங்கள் ஐயங்களைத் தெரிவித் தால் அவற்றை வெளியிடுகிறோம். அறிஞர்களை அவற்றிற்கு எளிய முறையில் சுருக்கமாக மேற்கோளோடு விடை எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். வேண்டியபோது பத்திராதிபர் குழுவையும் கலந்து விடை எழுத முயல்வோம். ப - ர்.]

1. சமாஜத்தில் பெரிய புராணமும் திருவாசகமும் முதலில் வெளியிட முயற்சி நடந்து வருகிறது. அதற்கு முன் பணம் கொடுத்து உதவ விரும்புவோர் காரிய தரிசிக்கு எழுதலாம்.

**காரியதரிசி.**

**கி. இலக்குமணன் - தியாகராய நகர் சென்னை.**

2. 'இந்து' மதம் என்பதெது? இந்தப் பெயரின் வரலாறு என்ன?

3. சைவ மதத்திலிருந்து பிற மதம் புகுந்தவரை திருப்பி ஏற்றுக் கொள்வதைத் தவிர பிற மதத்தினரை சைவத்தில் சேர்த்துக் கொள்ள சைவ சமயம் இடம் தருகிறதா? அவ்வாறு சேர்த்துக் கொள்வது அவசியமா?

4. நம் கோயிலுக்குள் பிற மதத்தினர் போவதை நம் சமயம் ஒப்புகிறதா?

---

# பணி செய்க!

[கார்லைல்]

இவ்வுலகத்தில் கடைசியாகச் சொல்லப் பெற்றுவரும் உபதேசம்: " உன் பணியை அறிக. அதனைச் செய்க."

“உன்னை நீ அறி” என்று முன்னர் சொல்லப்பட்டது.
அதன்படி நீ அறிய முயன்ருய்; அவஸ்தைப்பட்டாய்.
அம்முயற்சி போதும் போதும். உன்னை நீ ஒரு நாளும்
அறிய மாட்டாய். அது நிச்சயம். உன்னை அறிவது உன்
வேலையல்ல. நீ அறிய முடியாத பேர்வழி. ஆகையால்,
எப்பணி செய்ய முடியுமென ஆராய்க. ஆராய்ந்தறிந்த
பின் அப்பணியில் பின் வாங்காது வீரன்போல் நிற்க.

பணியால் வரும் பயன் அளவற்றது என்று எழுதி
வைத்தார்கள். பணியால் மனிதன் சிறப்படைகிருன்.
அதனுல் அடர்ந்த காடு நல்ல நாடாகும். தரிசு நன்செய்
ஆகும். பாழுமிடம் பட்டினமாகும். அது மட்டுமல்ல.
மனதில் உள்ள கல்லும் முள்ளும் அகலும். பாலைவனம்
பச்சைப் பசேலென மாறும். பணி உயர்ந்ததாயினும் சரி,
தாழ்ந்ததாயினும் சரி, பணி தொடங்கிய உடனே
மனம் அமைதிபெற ஆரம்பிக்கிறது. சந்தேகம், ஆசை,
துக்கம், கோபம், தாபம் யாவும் நரகத்து நாய்கள். மனித
னின் ஆன்மாவைத் தொந்தரவு செய்யும். மனிதன் மனம்
வேலையில் ஆண்மையோடு குவிந்தபோது, இந்த நாய்கள்
குலைக்காது; முணு முணுக்காது. தம் இடத்திற்கு ஓடி
மறையும். அப்பொழுதுதான் மனிதன் மனிதனுகிருன்.
பணி அவனுக்கு ஒரு ஒளியைத் தருகிறது. நெருப்பைப்
போல் பரிசுத்தம் செய்கிறது. குற்றங்கள் பொசுங்கி
விடும். புகை நீங்கும். பிரகாசத்தோடும் அருளோடும்
நின்று எரியும்.

(கா. ராம. மொழிபெயர்ப்பு)

**“ வித்தகம் பேச வேண்டாம்**
**பணி செய வேண்டும் ”**

---

### சைவ சித்தாந்த மகா சமாஜம் நடத்தும்

# சைவப்புலவர் தேர்வுகள்

## (1947—1950)

இத்தேர்வுகள் சென்னை, சிதம்பரம், தஞ்சை, திரிசிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், கோயன்புத்தூர், யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களில் விண்ணப்பிக்கும் இளைஞர்கள் சௌகரியத்துக்குத் தக்கபடி ஏற்படும் தேர்வு நிலயங்களில் நடைபெறும். தேர்வுக்கு இரண்டு ரூபா பிரவேசக் கட்டணம் செலுத்தல்வேண்டும். தேர்வுக்கு ஆண்டு வரையறையின்றி எவரும் விண்ணப்பிக்கலாம். தேர்வில் வெற்றிபெறுவோர் **சைவப் புலவர்** என்ற பட்டம் பெறுவர்.

**மனுத்தாளும் பிரவேசக் கட்டணமும் செப்டம்பர்மூ 20உ அனுப்பப்படுதல்வேண்டும்.** பிரவேசக் கட்டணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. வேருெரு தேர்வுக்காகவோ விண்ணப்பதாரருக்காகவோ வரவு வைக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கட்குத் தேர்வு நிலைய நுழைவுச் சீட்டு நவம்பர்மீ 10உ சாதாரணத் தபால் மூலம் அனுப்பப்படும். தேர்வுகளின் முடிபு **“சித்தாந்தம்”** **“இந்துசாதனம்”** ஆகிய இரு பத்திரிகைகளிலும் டிசம்பர்மீ 10உ வெளியிடப்படும். பட்டங்களும் பரிசுகளும் சமாஜ அடுத்த ஆண்டு விழாவில் வழங்கப்படும்.

ஒவ்வொன்றுக்கும் மூன்று மணிப்பொழுதில் விடை எழுதக்கூடிய இரண்டு வினுத்தாள்கள் தேர்வுக்குண்டு. ஒவ்வொரு பகுதியிலும் நூற்றுக்கு இருபத்தைந்து வீதமும் மொத்தத்தில் நூற்றுக்கு முப்பத்தைந்து வீதமும் பெறுவோர் மூன்றும் வகுப்பிலும், மொத்தத்தில் நூற்றுக்கு ஐம்பது அறுபது வீதங்கள் பெறுவோர் முறையே இரண்டாவது, முதல் வகுப்புக்களிலும் தேறினவராவர். தேர்வில் முதற் பரிசு ரூபா 50. இத்தொகையைக்கொண்டு தங்கப் பதக்கம், புத்தகம் முதலியன பரிசு பெறுவோர் கருத்துக்

கிணங்க அளிக்கப்படும். இரண்டாவது மூன்ருவது பரிசுகளாகச் சமாஜ வெளியீடுகளும் பிறவும் தரப்படும். ஒரு தேர்வில் ஐவர் தேறினுலல்லது பரிசுகள் வழங்கப்படமாட்டா. இளஞ்சைவப் புலவர்தேர்வு இவ்வாண்டுகளில் நடைபெருது.

## 1947 - 1950 வருஷங்களின் பாடதிட்டம்

**சைவப்புலவர் தேர்வு I இலக்கியப்பகுதி :**—(1) தேவாரத்திரட்டு முழுமையும் திரு. கயப்பாக்கம் சதாசிவசெட்டியா ரவர்கள் உரையுடன் (2) திருக்கோவையார் உரையுடன் (3) பெரிய புராணத்துள் அப்பர் சுவாமிகள் புராணம் முழுமையும் திரு C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் விருத்தியுரையுடன். அகத்தியர்

II **சாத்திரப்பகுதி :**—(1) சிவஞான பாடியம் முழுமையும் (2) சிவநெறிப்பிரகாசம் முழுமையும் (சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு) (3) சித்தாந்த அஷ்டகம் சமாஜப் பதிப்பு (பக்கம் 865-1105)

விண்ணப்பத்தாளில் குறிக்கவேண்டிய விவரங்கள் கீழ்வருவன வாகும்:—விண்ணப்பதாரர் முழுப்பெயர், தகப்பனுர் பெயர், சமயம் சாதி குலம் தொழில் வயது இருப்பிடம் தபால் விலாசம், விண்ணப் பம் செய்யும் தேதி, பிரவேசக் கட்டணம் செலுத்தும் தேதி, விண்ணப்பதாரர் கையொப்பம் ஆகியவை. அச்சிட்ட விண்ணப்பத் தாள், மேற்கூறிய தேர்வுவிவர அறிக்கை முதலியவற்றை இந்திய ஓரணு தபால்பில்லை யனுப்பிச் சமாஜக் காரியதரிசியிடம் பெற்றுக் கொள்க.

9, வைத்தியராமையர் தெரு<br>தியாகராயநகர்,<br>சென்னை.

இங்ஙனம்<br>க. **அரங்கசாமி**<br>பொதுக்காரியதரிசி

---

# மதிப்புரை

[மதிப்புரைக்கு நூல்களை அனுப்புவோர் தவருமல் இரண்டு பிரதி களை அனுப்புமாறு நினைவூட்டுகிரோம். ப-ர்.]

'**அழகை வெறுத்த அழகி**'; ஆசிரியை வ. பா. தாமரைக் கண்ணி அம்மாள் : தினமணி வெளியீடு. விலை அணு 8.

ஆங்கிலத்தில் பெருவாரியாக வெளிவரும் 'பெங்கு வின்' 'பெலிகன்' வெளியீடுகளை நினைப்பூட்டும் முறை யில் தினமணி வெளியீடுகள் பல வெளிவந்துள்ளன திறமை மிக்க ஆசிரியை வ. பா. தாமரைக்கண்ணி அம்மாள் அவர்கள் எழுதிய அழகிய ஏழு எழுத்தோவி யங்களைத் தொகுத்து மிகக் குறைந்த விலைக்கு வெளியிட் டுள்ள தினமணி காரியாலயத்தாருக்குத் தமிழ் நாடு கடமைப்பட்டுள்ளது.

'கொண்டவன் பெருமை' 'ஒரு குறளுக்குக் கம்பர் கண்ட உரை, முதலிய கட்டுரைகள், ஆசிரியையின் மதி நுட்பத்திற்கும் நூலறிவிற்கும் பெருஞ்சான்று பகர்வ துடன் ஒரு அழகிய கதையைப் படித்தவுடன் ஏற்படும் இனிமையுணர்ச்சியைப் படிப்போர் உள்ளத்தில் உண்டாக் குகின்றன. சேக்கிழார் ஒரு அழகியின் கதையை அழகுறக் கூறியுள்ள பாங்கினை ஆராய்ச்சித் திறம்பட விளக்கி யுள்ளார்கள். அழகியின் பேய்வடிவம் தமிழ் நாட்டு மகளிர் கற்புடை மாண்பிற்கு ஓர் மலையிலக்கு. கோவல னது முடிவு பெண்களை மதியா ஆடவர்களுக்கு ஒரு பயங் கரமான எச்சரிக்கை, என்பன போன்ற அழகிய கருத்துக் கள் அறிஞர்களுக்கு விருந்து போல்வன.

நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் பெண்ணின் பெருமையை வளர்த்த வகையினை விளக்குவதையே நோக்கமாகக் கொண்ட இந்நூல், 'பெண்ணின் பெருமையையே' பேசும் அறமுடைய திரு. வி. க. அவர்களுக்கு உரிமையாக்கப் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் ஒவ்வொரு பெண்மணியின் கையிலும் இருக்கவேண்டிய நூல் என்று கூறுவதைவிட ஒவ்வொரு ஆடவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல் என்று கூறத் தோன்றுகிறது.

அழகிய மறுமலர்ச்சி நடையில் வள்ளுவர் இளங்கோ சேக்கிழார் கம்பர் முதலிய நல்லிசைப் புலவர்களைத் தமிழ் மக்களுக்கு அறிமுகஞ் செய்ய எழுந்த முதற்புத்தகம் இதுவே.

**திருநீடூர்த் திருப்பதிகம்:** சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகமும் அத்தலச் சிறப்பும் இந்நூலில் உள. தருமபுர ஆதீனத்தார் இலவச வெளியீடு.

**திருப்புன்கூர்த் திருப்பதிகங்கள்:** திருநாளைப் போவாருக்காக நந்தி பெருமான் சற்று விலகின இடம். இதற்கு மூவர் பதிகங்களும் உண்டு. மூவர் பதிகங்களையும் தந்து அத்துடன் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டிற்கும் பொருள் விளக்கம் சேர்த்துள்ளார்கள். இது தருமபுர ஆதீனத்தார் இலவச வெளியீடு.

**திரு அன்னியூர்த் திருப்பதிகங்கள்:** இத்தலம் திருநீடூர் என்னும் தலத்திற்கு மேற்கே யுள்ளது. அதற்குள்ள சம்பந்தர் பதிகமும் அரசர் பதிகமும் பொருள் விளக்கத்தோடு இப்புத்தகத்தில் உள. இதுவும் தருமபுர ஆதீனத்தார் இலவச வெளியீடு.

---

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

# 41-ஆவது ஆண்டு அறிக்கை

இச் சமாஜம் 1905-ஆவது ஆண்டில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் நிறுவப் பெற்றது. பத்து ஆண்டுகளுக்குப் பின் சபைப்பதிவு சட்டபடி பதிவு செய்யப்பட்டது.

இச் சமாஜத்தின் நோக்கம் சைவ சமயத்தைப் பரவச் செய்து, தமிழ் மொழியை வளரச் செய்வதேயாம். இந் நோக்கம் முற்றுப் பெறுதற்குப் பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில:—

1. பத்திரிகை வெளியிடுதல்
2. நூல்களை அச்சிட்டு அடக்க விலைக்கு வழங்கல்
3. கூட்டங்களை நடத்தல்

1. **பத்திரிகை:** "சித்தாந்தம்" என்னும் திங்கள் வெளியீடு, 31 ஆண்டுகளாக சமாஜ அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த யுத்த காலத்தில் காகிதப் பஞ்சத்தால் இவ் வெளியீட்டின் அளவு சுருங்கிற்று. 1946-ம் ஆண்டில் இப் பஞ்சம் ஒருவாறு நீங்கி பழைய அளவுக்கு வளர்ந்து வருகிறது. டிசம்பர் திங்கள் வெளியீடு 48 பக்கங்களை யுடையதாயிற்று. இந்த அளவு குறைபடாதென்று நம்பலாம்.

2. **நூல்கள் வெளியீடு:** சைவத் திருமுறைகளும் சித்தாந்த சாத்திர நூல்களும், பிற சமய நூல்களும், தமிழ் இலக்கிய நூல்களும் இதுவரை வெளிவந்த பிரதிகள் 60,550. இதில் இந்த ஆண்டு அச்சிட்ட "முருகன் முந்நூல்" 2000

பிரதிகள் அடங்கினவை. இவை எல்லாம் அடக்க விலைப் பதிப்புகளே. இவைகளைத் தவிர சிறு நூல்கள் பல இனமாக வழங்கப்பட்டன.

3. கூட்டங்கள் : ஆண்டு விழாவுடன், மாதக் கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் எட்டு மாதக் கூட்டங்கள் நிகழ்ந்தன. அவை :—

ஜனவரி — பெருநகர்
பிப்ரவரி — திருப்போரூர்
ஏப்ரல் — அங்கம்பாக்கம்
மே — திருநாவலூர்
ஜூன் — பெங்களூர்
ஜூலை — காரைக்குடி
செப்டம்பர் — பெங்களூர்
அக்டோபர் — இராயப்பேட்டை

நிர்வாகக் கூட்டம் : சமாஜ நிர்வாகக் கூட்டம் நான்கும், பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றன.

கோடை சித்தாந்த வகுப்பு : கோயம்புத்தூர் ஜில்லா பெரியநாயக்கன் பாளையத்திலுள்ள இராம கிருஷ்ண வித்யாலய விடுதியில் மே மாதத்தில் 12 நாட்கள் சித்தாந்த வகுப்பு நடந்தது. சிவஞான போதம் 12 சூத்திரங்களையும், பொது விஷயங்களைப் பற்றியும், சிறந்த ஆசிரியர்கள் பாடம் சொன்னார்கள். வெள்ளைக்கிணர் சுப்பையா கவுண்டர் முதலியோர் முன்னின்று நடத்தினர். வகுப்பைத் திறந்து வைத்து ஆதரவளித்தார், கல்வி மந்திரி கனம் அவினாசிலிங்கம் செட்டியாரவர்.

சைவத் தேர்வு : வழக்கம் போல் இந்த ஆண்டும் சைவத் தேர்வுகள் நடந்தன.



கணக்கு : 41-ம் ஆண்டு 1—12—45 முதல் 30-11-46 வரை வரவு செலவு கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடு (copy list):—

| ஆண்டு வரவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சந்தா | 700 | 0 | 0 |
| இணைத்தல் சந்தா | 3 | 0 | 0 |
| புத்தக விற்பனை | 24 | 8 | 0 |
| இண்டியன் பேங்க் | 200 | 0 | 0 |
| வட்டி | 105 | 11 | 6 |
| தபால் | 28 | 8 | 0 |
| சில்லரை | 0 | 6 | 0 |
| பரீக்ஷை கட்டணம் | 18 | 0 | 0 |
| நன்கொடை | 6 | 0 | 0 |
| ஆயுள் சந்தா | 175 | 0 | 0 |
| ஞானியார் நிதி | 101 | 0 | 0 |
| கோடை வகுப்பு | 661 | 0 | 0 |
| அட்வான்ஸ் வாபீசு | 20 | 0 | 0 |
| ஆரம்ப இருப்பு | 10 | 12 | 3 |
| ஆக மொத்தம் ரூ. | 2,053 | 13 | 9 |

| செலவு | | | |
|---|---|---|---|
| தபால் | 128 | 7 | 9 |
| சில்லரை | 17 | 8 | 6 |
| இண்டியன் பேங்க் | 611 | 2 | 6 |
| சித்தாந்தம் காகிதம் | 319 | 4 | 6 |
| அச்சுக் கூலி | 465 | 13 | 6 |
| இனம் | 7 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| கோடை வகுப்பு | 469 | 0 | 0 |
| அட்வான்ஸ் | 20 | 0 | 0 |
| முடிவு இருப்பு | 15 | 9 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 2,053 | 13 | 9 |
| இருப்பு (as per account) | 5,738 | 4 | 6 |
| இதில் உயர் திரு ஞானியார் நிதி | 808 | 2 | 6 |

சென்னையில் சமாஜத்திற்கென ஒரு கட்டடம் அமைக்கப் பொருளுதவி புரியும்படி பிப்ரவரி மாதத்திய "சித்தாந்தம்" வெளியீட்டில் ஒரு வேண்டுகோள் அனுப்பப்பட்டது. இது இன்னும் பலன் தரவில்லை.

நன்றி : இந்த ஆண்டு சமாஜத் தொண்டில் கலந்து கொண்ட எல்லா அன்பர்களுக்கும் சமாஜம் நன்றி பாராட்டுகிறது.

---

## சமாஜ செயற்குழு கூட்டம்

ஷை கூட்டம் : 15-2-46 சனிக்கிழமை - பகல் - 4 மணிக்கு தியாகராயநகர், வைத்தியராமய்யர் தெரு - 9-வது நெம்பர் - சமாஜ காரியாலத்தில் - நடைபெறும்.

விஷயம் :— 1 சித்தாந்தம் - ஆசிரியர் ராஜினமா

2 திரு. A. சோமசுந்தரம் செட்டியார் நன்கொடையை பயன்படுத்தும் விதம்

3 சமாஜ - மாதக்கணக்கு

4 பிரசாரம்

5 வரவேற்புக் காரியதரிசி

6 வேலைத் திட்டம்

---

### சைவ சித்தாந்த மகா சமாஜம் 41-வது ஆண்டு விழா, 1946

# சைவர் மகாநாட்டுத் தலைமையுரை

*[ராவ் பகதூர் - S. வையாபுரிப் பிள்ளை]*

(சென்ற இதழ் தொடர்ச்சி)

எனது நண்பர் திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் செய்துள்ள அரும் பணிகளை முன்பு குறிப்பிட்டேன். அப்பணிகள் யாவும் தக்க சமயத்தில், கால நிலைக்கு ஏற்பச் செய்யப்பட்டன. காலஞ் செல்லச் செல்ல, சமுதாய நிலையும் மக்கள்நிலையும், அரசியல் நிலையும் மாறிக்கொண்டேயிருக்கும். மக்களது கருத்துக்களும் நோக்கங்களும் அங்ஙனமே மாறிக் கொண்டிருக்கும். இவைகள் எக்காலத்தும் ஒரே தன்மையதாயிருக்கமாட்டா. வாழ்வின் இயல்பே இவ்வகை மாறுதல்தான். எதுவும் ஒரேபடித்தாய் நில்லாமைதான் இவ்வுலகத்து நிலைபெற்று நிற்பது. இதுபற்றியே, தோலாமொழித்தேவரும் 'நில்லாமை சால நிலைபெற்றதன்றே' என்று கூறினர். காலம் என்னும் பெருநதி பெருக்கெடுத்துப் பாய்ந்து நுரைத்துக் கொந்தளித்துக் குமிழியிட்டுக் கரைகளைத் தகர்த்து, எல்லாவற்றையும் வாரிச்சுருட்டிக்கொண்டு வேகமாய் ஓடிக்கொண்டேயிருக்கிறது. இதன் பேராற்றலை நோக்கி, இக்காலத்தையே கடவுளாகக் கொண்டாரும் நம்மவருள் உளர்.

காலமே கடவு ளாகக் கண்டனம் தொழிலுக் கென்னின்,
காலமோ அறிவின் றாகும் ; ஆயினுங் காரியங்கள்
காலமே தரவே காண்டும் ; காரணன் விதியி னுக்குக்
காலமும் கடவு ளேவ லால்துணைக் கார ணம்காண்.

என்ற சித்தியார்ச் செய்யுள் இதற்குச் சான்று. உலகத் தோற்ற
நாசங்களுக்குக் காலம் துணைக் காரணமாகும் என்பது இதன்
கருத்து. ஸ்திதிக்குக் காலத்தின் தொழிலில் இடமில்லாமை
யறியலாம். ஆகவே பள்ளத்தை மேடாக்கியும், மேட்டினைப்
பள்ளமாக்கியும், அடிநிலத்தைப் பெயர்த்தெறிந்தும், கால
நதி சென்றுகொண்டிருக்கிறது. சராசரங்களெல்லாம் அதன்
வயப்பட்டு ஒழுகுகின்றன. அதன் வழிப்பட்டொழுகி, இயற்கை
யாற்றல்களுக்கும் மாறிக்கொண்டேயிருக்கும் சூழ்நிலைகளுக்
கும் தக்கவாறு, மாறி யமைந்துவருவனவே உயிருள்ளனவாய்
நிற்கும். ஏனையவோ எனின், அவை உயிரிழ அழிந்து வுறுதல்
திண்ணம்.

நமது சைவ சமயம் பல பல நூற்றுண்டுகளாகக் கால
நெறியோடு ஒத்தியங்கிச் சென்றது. கி. பி. முதல் நூற்றுண்டி
லிருந்து இதன் வாழ்க்கை தமிழ் நாட்டில் அறியக் கிடக்கின்
றது. தொடக்கத்தில் கிரியைகளின்றி வணக்க மாத்திரமாய்
இது அமைந்திருந்தமை சங்க நூற் சான்றுகளால் அறி
யலாம். கி. பி. 5-ம் நூற்றுண்டிலிருந்து நமது சமயத்திற்கு
ஒரு புது வாழ்க்கை ஏற்பட்டது. பக்தி நெறியானது தமிழ்
நாட்டில் பெருக்கெடுத்துப் பரவியது. சைனம் முதலிய
பிற சமயங்களோடு வாதிட்டு வெற்றிகொண்டது. பின்
இராஜாங்க சமயமாக இது அமைந்தது. அரசர்கள்
கோயில்கள் எடுப்பித்துப் போற்றி வந்தனர். அப்பர்,
சம்பந்தர், சுந்தரர் முதலிய அருணெறிச் செல்வர்களுடைய
திருப்பாடல் நமது சமயத்திற்குப் புத்துயிரளித்தது.
இவர்கள் சைவசமயாசாரியர்கள் என்றே கொண்டாடப்பட்ட
னர். மணிவாசகப் பெருந்தகையாரது திருவாசகம் சைவ சம
யத்தின் பெருமைக்கு வரம்பாக நின்றது. இங்ஙனமாகப்
பக்திநெறியோடொத்து நமது சமயம் வளர்ந்து வரலாயிற்று.
மக்கள் வாழ்க்கையின் உயிராயமைந்து, அதற்கு இனிய பண்பு



அளித்து, அதனை ஆற்றலுடையதாய்ச் செய்துவந்தது. திடீ
ரெனச் சண்டமாருதம் கிளம்பிற்று. தத்துவ விசாரணைகள்
நாடெங்கும் நடைபெற்றன. மக்கள் உள்ளம் ஒருநிலைப்படாது
தத்தளித்தது.

> விரத மே பர மாக வேதியருஞ்
> சரத மாகவே சாத்திரங் காட்டினர்
> சமய வாதிகளும் தத்தம் மதங்களே
> அமைவ தாக அரற்றி மலைந்தனர்
> மிண்டிய மாயா வாத மென்னும்
> சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்(து)

என்று திருவாசகத்தில் வரும் அடிகள் மாணிக்கவாசக சுவாமி
கள் வாழ்ந்த காலத்தே நிகழ்ந்த தத்துவ விசாரணைச் சண்ட
மாருதத்தையே குறிக்கின்றன என்று கொள்ளலாம். ஸ்ரீ சங்க
ராச்சாரியாரும் இக்காலத்தே வாழ்ந்து தமது வேதாந்த
சூத்திர பாஷ்யத்தால்அத்வைத நிர்ணயம் செய்துவந்தனர். பல
இடங்களுக்கும் சென்று மற்றைச் சமயவாதிகளோடு தர்க்கம்
புரிந்தனர். மக்களது அடிப்படையுணர்ச்சி யொன்றினின்று
எழுந்த சமயமும் (Religion) தத்துவ சாஸ்திரத்தின்
உதவியின்றித் தனித்து நிற்பது இயலாமற் போயிற்று. பக்தி
நெறி முதன்முதல் செழித்திருந்த காலத்து வைதிக சமயம்
அதன் வழிப்பட்டு விளங்கியதுபோலவே, இப்பொழுது பக்தி
யுடன் தத்துவ விசாரணைகளையும் தன்மேல் இட்டுக்கொண்டு
புதிய சூழ்நிலைக்குத் தக்கவாறு தன்னை அமைத்துக்கொள்ள
முயன்றது. இவ்வாறாக நமது சைவ சமயமும் தனது பூர்விகக்
கொள்கைகளுக்கு ஏற்ப, ஒரு சில தத்துவக் கொள்கைகளை
அனுசரித்து ஒழுகியது. சைவ சித்தாந்தம் இவ்வாறு
தோன்றியதேயாகும். ஆகவே வேத புராணங்களின் வழியாகத்
தோன்றி, மக்கள் உள்ளத்தில் பரந்து, பக்தி மார்க்கத்தில்

ஒழுகி, தத்துவ சாஸ்திரத்தின் சார்பினாலே நமது சமயம்
வாழ்ந்து வருவதாயிற்று. தத்துவ சாஸ்திரக் கொள்கைகள்
சங்கரரின் அத்வைதக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டன
வாய் ஆகமங்களின் வழிப்பட்டனவாய் அமைந்தன. இந்த
உண்மையையே,

> வேதம்பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
> ஓதும் தமிழ்அதனின் உள்ளுறுநெய்—போதமிகு
> நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
> செய்ததமிழ் நூலின் திறம்

என்ற வெண்பா ஒருவாறு உணர்த்துகிறது.

சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் பன்னிரண்டாம் நூற்
றூண்டில் தோன்றிப் பின் பெருகலாயின. இவற்றின் உரைகள்
தத்துவக் கருத்துக்களை நன்கு விளக்கிவந்தன. சைவ மடங்கள்
சைவ சமயபரிபாலனத்துக்கென்று ஏற்பட்டு, சைவசமயத்திற்கு
ஊன்றுகோல்போல் உதவி, சமய சாஸ்திரக் கல்வியைப் போற்றி
வளர்த்துவரலாயின. அன்றியும் இம்மடங்கள் சைவ மக்களுக்
குக் குருபீடங்களாக விளங்கி, அவர்களுக்குச் சமய உணர்ச்சி
யையும் சாஸ்திர உணர்ச்சியையும் பயில்வித்து வந்தன. பொது
மக்கள் புராணவாயிலாகச் சாஸ்திரக் கருத்துக்களை அறிந்து
கொள்ளுதல் எளிது என்று கருதிச் சாஸ்திரம் அறிந்தகவிஞர்
கள் புராணங்கள் இயற்றத் தொடங்கினார்கள். புராணங்களுள்
முதன்மைபெற்று விளங்குவன பெரிய புராணம், கோயிற்
புராணம் முதலியன. பக்தியும் சாஸ்திரக் கருத்தும் தமிழ்
நாட்டிற் பரவுவதற்குப் புராணங்களே பெருங் கருவிகளாக
அமைந்துவிட்டன.

இப் புராணங்களும் சென்ற நூற்றூண்டின் இறுதியோடு
முடிந்துவிட்டன என்றே கூறவேண்டும். இவற்றிலுள்ள
கதைகளை வாசித்துப் பயன் பெறுவதில் தமிழ் மக்களுக்கு



ஊக்கமின்றிப் போயிற்று. இவற்றில் நம்பிக்கைதானும்
இல்லையென்றாகிவிட்டது. மடங்களின் சைவ சமய பரிபாலன
முயற்சியிலும் தளர்வு தோன்றத் தொடங்கிற்று. முதலில்
அவற்றுக்கு இருந்த மகிமை சிறிது சிறிதாகக் குறைவு படத்
தலைப்பட்டது. சைவ சீலமும் ஒழுக்கமும் குன்றிவிட்டன.
இக் காரணங்களால் சைவ சமயம் காலத்தின் வேகத்தோடு
ஒத்தியங்கிச் செல்லாதபடி, ஒருபுறமாய் ஒதுக்கப்பட்டது.
நமது சைவசித்தாந்த சமாஜம் இந்நிலையை ஒருவாறு உணர்ந்து
புது வழிகளில் முயன்று சைவ சமயத்தை இயக்குதற்கு முற்
பட்டது. நான் இங்கே கூறியது சிறிது மிகைப்படச் சொல்லு
தல் என்று சிலர்க்குத் தோன்றலாம். ஆனால் உண்மை அப்படி
யன்று. சைவ சமயத்தின் சரித்திரத்தைக் கூர்ந்துணர்ந்தவர்
கள் என் கருத்தோடு முற்றும் உடன்படுவார்கள். இன்று
சைவ இளைஞர் மகாநாடு நடைபெறுகின்றது. இவ்வாறே
சைவ மங்கையர் மகாநாடும் நடைபெறுகின்றது. இவ்வகை
மகாநாடுகள் புதுமுறைகளல்லவா? இளைஞர்கள் மாணவர்களா
யிருந்து கற்கவேண்டியவராயிருக்க, இவர்கள் மகாநாடு கூடி,
கருத்துக்களை வெளியிட்டுச் சமய இயக்கத்தை நெறிப்படுத்து
வது பண்டைக் காலத்தில் இல்லை. இப்பொழுதுதான் ஏற்பட்
டுள்ளது. சைவ மங்கையர்களும் மகா நாடுகளில் தங்கள்
கருத்துக்களை தெரிவித்து, சைவ சமய முன்னேற்றத்தில்
பங்கு கொள்ளுதல் இப்பொழுது சில ஆண்டுகளாகத்தான்
நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு நிறைவு விழாவின் நிகழ்ச்சி முறையின்
இறுதியில், ‘ அருகாமையிலுள்ள சேரிகளில் சமாஜத்தினர்
24-12-46-ல் தொண்டு செய்வர் ’ எனக் காணப்படுகிறது.
இதுவும் சமய முன்னேற்றத்திற்குரிய ஒரு புது வழியாக
நமது சமாஜத்தாரால் கொள்ளப்பட்டதாகும்.

மேற்சுட்டியபடி சைவ சமயத்தின் க்ஷீண நிலையை ஒரு
வாறு உணர்ந்து அதற்கு உரம் கொடுக்கும் பரிகாரச் செயல்
களைச் சமாஜம் செய்து வந்தபோதிலும், தற்காலத்து நமது
சமயத்தை எதிரிட்டு நிற்கும் சக்திகளனைத்தையும் தெரிந்து
கொண்டோமென்று எண்ணுவதற்கில்லை. இவையனைத்தை
யும் தெரிந்துகொண்டாலன்றி நாம் மேற்கொள்ளும் பரிகார
முயற்சிகளும் வேண்டிய அளவு பயன்படமாட்டா. சைவ
சமயமும் நாளுக்குநாள் மெலிந்து கொண்டே செல்லும்.
ஆதலால் இப்பொழுது இருக்கும் சமயநிலையை நாம் நன்றாக
உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். முதலாவதாக நமது இளை
ஞர்களை எடுத்துக்கொள்வோம். அவர்களுடைய மனப்
போக்கு முற்றும் மாறிவிட்டது. சமயம் என்ற சொல்கூட
அவர்களுக்கு அருவருப்பைத் தருவதாக உள்ளது. தெய்வ
பக்தியும் விசுவாசமும் நாளுக்குநாள் குறைந்து வருகிறது
என்றுதான் கூறவேண்டும். அவர்கள்மீது பழிசுமத்துவதும்
தகாதென்று தோன்றுகிறது. ஒருகாலத்தில் நம்மவர்கள்
புராணக் கதைகள் பலவற்றை நம்பி வந்தனர். அவற்றின்மீது
கட்டப்பெற்ற சமயங்களைப் பின்பற்றி ஒழுகி வந்தனர். ஆனால்
இப்பொழுதுள்ள நம் சந்ததியார்களுக்குப் புராணங்களை
நம்புவதில் மனம் ஒருப்படவில்லை. கிரீஸ் தேசத்தில் 'மித்ஸ்'
(myths) என்று சொல்லப்படுவன நமது புராணக் கதைகளை
ஒத்தன. அவைகளை உண்மையென்று பூர்விக கிரேக்கர்கள்
நம்பி வந்தனர். ஆனால் பிற்காலத்தில் அவற்றைச் செய்யுட்
களில் அமைப்பதற்கேற்ற கற்பனைக் கதைகளெனமட்டும்
கொண்டார்கள்; அவ் அஸ்திவாரத்தின்மீது தோன்றிய மதத்
தில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். அதுபோன்ற ஒரு
நிலைமைதான் இப்பொழுது நம் நாட்டில் இருந்து வருகிறது.
நம் இளைஞர்கள் பெரிய புராணத்தைக் கற்கின்றார்கள் ; கற்ற
அறிஞர்கள் வாயிலாகக் கேட்கின்றார்கள். ஆனால் அதன்



இலக்கியச் சுவைதான் நம் இளைஞர்களுக்குப் பெரும் பயனைத் தோன்றுகின்றதேயன்றி, அதன் பக்திச் சுவையில் ஈடுபடுவார் பெரும்பாலும் இல்லை.

இரண்டாவதாக, தற்காலத்தில் நாம் பயின்றுவரும் கல்வியும் அதன் நோக்கமும் சமய உணர்ச்சிக்கு அநுகூலமாக அமையவில்லை. கல்வி முறையிலே சமயத்திற்குரிய கல்வி விஷயங்கள் இருத்தற்கிடமில்லை. இருந்தால் பொதுக் கல்வியின் நலத்தைக் கெடுத்துவிடும் என்றுகூடச் சொல்லலாம். பல சமயங்களைச் சார்ந்தவர்களுக்கும் பொதுப்பட உள்ள கல்வியையே அரசியலார் கவனித்தல்கூடும். பள்ளிக்கூடங்களில் ஹிந்துக்கள், மகமதியர்கள், கிறிஸ்தவர்கள் முதலிய பல சமயங்களைச் சார்ந்தவர்களும் ஒன்றாகப்படித்து வருகிறார்கள். இவர்களுக்குச் சமயக் கல்வியைக் கலாசாலைகளில் போதித்து வருவதென்றால் சிறிதும் இயலாத காரியமாகும். பலவகையான சச்சரவுகளும் ஏற்படக்கூடும். இதற்கு அரசாங்கத்தினர் இடம் கொடாமல் இருப்பதே நலமாகும். அன்றியும் பொதுக் கல்விச் சாலைகளில் கல்வி போதிக்கும் நோக்கமே சமய உணர்ச்சியன்று.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

என்று வள்ளுவர் கூறிய கருத்துக்குப் பிரசங்க மேடைகளிலன்றி வேறு இடங்களில் ஆதரவு உண்டோ என்பது பெரிதும் ஐயப்பாட்டுக்கு இடமாகவே யிருக்கிறது. பொதுக் கல்வியின் நோக்கமெல்லாம் உலக வாழ்க்கைக்கு ஒருவனைத் தகுதியுடையவன் ஆக்குவதேயாகும். இந் நோக்கம் எவ்வளவு சிறிய அளவில் கைகூடுவதாயினும், அதனையே மக்கள் விரும்பிப் பொதுக் கல்வியில் ஈடுபடுகின்றார்கள். ஆதலால்

பொதுக் கல்வி சமய உணர்ச்சிக்குச் சிறிதும் பயன்படுவதாய்க் காணவில்லை.

மூன்றாவது, இப்பொதுக் கல்வியின் பயனாகவும் தற்காலத்தில் மேல் நாட்டிலுள்ள கல்வியறிவின் பயனாகவும் ஏற்பட்டுள்ள விஞ்ஞான உணர்ச்சி சமயத்திற்குப் பிரதிகூலமாயுள்ளது. எதனையும் ஆராய்ந்து துணிய வேண்டும் என்ற மனப்பான்மை விஞ்ஞான உணர்ச்சியினால் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. சமய விஷயத்தையும்கூட இம் மனப்பான்மை பாதிக்கிறது. முன்னோர் கருத்துக்களையும் நமது பூர்விக சாஸ்திரங்களையும் கருத்துக்களையும் ஆராய்ச்சி முறையில் பார்த்து அவற்றின் வன்மைமென்மைகளைச் சீர்தூக்குதல் வேண்டும் என்று ஒருவன் கருதினால், அவனுக்குச் சமயப் பற்று உண்டாவதற்கு இடம் இராதல்லவா ? ஒரு சிலர் 'விஞ்ஞான சாஸ்திரங்களை விரிவாகக் கற்றால் சமயப்பற்று உண்டாகும் ; அவ்வாறன்றி அரைகுறையாய்ப் படிப்பதனால்தான் சமுதாயக் கட்டுப்பாட்டுக்கு இன்றியமையாததாயுள்ள சமயப் பற்று ஏற்படாமல் போய்விடுகிறது' என்று சொல்லலாம். நாம் இங்கே நோக்குவது பொதுப்பட விஞ்ஞானக் கல்வியினால் உண்டாகிற விளைவுமட்டுந்தான். விஞ்ஞானத்தை நிரம்ப விரிவாகக் கற்றால் என்ன பயனை அது தரும் என்ற கேள்வியை நாம் எடுத்துக் கொள்ளவில்லை. இவ்வாறு சொல்பவர்களும்கூட விஞ்ஞானக் கல்வியின் பொது விளைவு நாம் கூறியதே என்பதை ஒருவாறு ஒப்புக்கொள்ளுகிறார்கள். இப்பொழுது நமது நாட்டில் விஞ்ஞானக் கல்வி வேண்டுமென்று பரந்த கிளர்ச்சி உண்டாகியிருக்கிறது. இது நமது நாட்டின் அபிவிருத்திக்கு அவசியம் என்றே தோன்றுகிறது. இக்காரணத்தாலும் நமது சமய உணர்ச்சி குன்றிவருகிறதென்றே சொல்லுதல் வேண்டும்.



நான்காவதாக, தற்காலத்து வாழ்க்கைப் போராட்டத்தைக் கூறுதல் வேண்டும். முற்காலங்களில் இருந்ததுபோல, எளிய திருப்திகரமான வாழ்க்கை இல்லாமற் போய்விட்டது. எவ்வகையான முயற்சியிலும் போட்டி ஏற்பட்டுவிட்டது. அந்தப் போட்டிகளில் சமயத்தைப் பற்றிய நினைவே உண்டாகாமற் போய்விடுகிறது. நாளுக்குநாள் இப்போட்டி வலுவேறிக் கொண்டு வருகிறது. இதுவும் சமய உணர்ச்சிக்குப் பெரியதோர் இடையூறாக அமைந்துள்ளது.

ஐந்தாவதாகக் கூறவேண்டுவது சமுதாய நோக்கமாம். அரசியல் நோக்கமும் இதன்கண் அடங்கும். சமயம், ஜாதி முதலியவற்றால் பிரிவுபட்டுக் கிடக்கின்ற நமது தேசத்து மக்களை ஒன்றுபடுத்துவதே அரசியலார் நோக்கமும் சமுதாய நோக்கமுமாக இருந்துவருகிறது. நமதுநாடு பிற நாடுகளைப் போல் சுதந்திர உரிமையோடு தலையெடுத்து நிற்க வேண்டுமானால், இவ்வொற்றுமை மிகவும் இன்றியமையாதது. பாரதியாரும் 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே' என்று நமது சமுதாய லட்சியத்தை உணர்த்தியிருக்கிறார். இதனால், பரந்த மதப்பாகுபாடுகளன்றி, சிறு மதப்பிரிவுகள் நம்மவர்களால் பொருட்படுத்தப்படவில்லை. உதாரணமாக, ஹிந்து, கிறிஸ்தவன், என்ற பாகுபாட்டை நாம் வைத்திருக்கிறோம். ஆனால் சைவம் வைஷ்ணவம் என்ற பாகுபாட்டை நாம் மிகுதியாய்ப் பாராட்டுவதில்லை. பரம்பரைச் சைவ வேளாளர்களுள் வைஷ்ணவ வேளாளர்கள் கொண்டுகொடுத்து மணவினை செய்வது நாம் அறிந்ததே. இவ்வாறே பிராம்மணர்களுள்ளும் பிற பிரிவினர்களுள்ளும் கலப்பு மணவினைகள் நடக்கக் காண்கிறோம். இவ்வகையான மணவினைகள் கால அளவில் மிகுதியாகுமே தவிர, சிறிதும் குறைவுபடமாட்டா. இதனாலும் நமது சைவசமய உணர்ச்சியும் பற்றும் ஒருவாறு குறைந்து கொண்டு வருகின்றன என்றுதான் சொல்லவேண்டும்.

முற்காலங்களில் அரசர்கள் தாம் பின்பற்றிவரும் சம
யங்களுக்குப் பெரிதும் ஆதரவளித்துப் போற்றிவந்தார்
கள். நம்முடைய திருக்கோயில்கள் இதற்கு ஒரு சான்று
கும். அரசர்கள் பெயரால் திருக்கோயில்களுக்குப் பெயர்
கள் இடுதலும் பண்டைக் காலத்து வழக்கமாகும்.
தஞ்சை ராஜராஜேசுவரம், பரமேசுர விண்ணகரம்
என்ற பெயர்களால் இதன் உண்மை உணரலாம். ஆனால்
தற்காலத்தில் அவ்வகையான அரசாங்க ஆதரவு சமயங்க
ளுக்கு ஏற்பட வழியில்லை. அரசியலார் சமயங்களோடு தங்க
ளைச் சார்புபடுத்திக்கொள்வது தற்கால நிலைக்குப் பொருந்து
வதன்று. ஆகவே அரசியலார் நோக்கமும் சமய உணர்ச்சிக்
குப் பயன்படுவதாக இல்லை.

ஆறாவதாக, மற்றைச் சமயங்களின் செல்வாக்கும் நமது
சமய உணர்ச்சிக்கு இடையூறாக உள்ளது. உதாரணமாக,
கிறிஸ்தவ சமயம், மகமதிய சமயம் இவ்விரண்டினையும் எடுத்
துக் காட்டலாம். இச்சமயங்கள் பிற சமயங்களிலுள்ளவர்
களைத் தமது மதங்களைத் தழுவுமாறு தூண்டுகின்றன. இத
னால் சமய உணர்ச்சி குன்றுவதோடு சமுதாயக் கட்டுப்பாடும்
அழிந்துவிடுகிறது. அன்றியும் இவை போன்ற சமயங்களின்
கொள்கைகளை நம் சமயத்தவர்கள் அடிக்கடி கேட்டுவருவத
னால், சமயத்தின்மீது ஓர் உதாசினபுத்தி ஏற்பட்டுவிடுகிறது.
இப்பொழுது பௌத்த சமயக் கொள்கைகளுக்குப் போரத
ரவு நம்முடைய சைவ சமயிகளிடையிலே காணப்படுகிறது.
ஒரு காலத்தில் சைவ சமயமும் பௌத்தமும் பெரும்
போரிட்டு ஒன்றையொன்று தாக்கிவந்தன. அக் காலத்தில்
பௌத்தம் தலைவணங்கிப் போயிற்று. சம்பந்தர் தமது
தேவாரத்தில் பதிகந்தோறும் பௌத்தர்களைக் கடிந்தும் பழித்
தும் கூறியிருப்பதை நாம் அறிவோம். இந்நிலைமை இப்



பொழுது முற்றும் மாறிவிட்டது. ஒரு பார்வையில் இது நல
மென்றே தோன்றுகிறது. பரந்த நோக்கம் ஏற்படுவது எப்
பொழுதும் பாராட்டத் தக்கதுதான். ஆனால், இது காரண
மாக, நமது சமயத்தைப் பற்றிய உணர்ச்சி குறைந்து வருகிற
தென்பதும் உண்மையே.

ஏழாவதாக, நமதுசமயத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கு
என்று ஏற்பட்ட மடங்கள் வேண்டும் அளவு அதனைக் கண்
காணியாது இருப்பதும் சமயப் பற்றுக் குறைவதற்கு ஒரு
காரணமாகும். இதை விரித்துக் கூறுவது பயனற்ற வேலை.
ஆனால் நான் கூறியதன் உண்மை யாவருக்கும் எளிதில் புல
னாகக் கூடியதே. ஒரு விஷயம் இங்கே தனிப்பட எடுத்துச்
சொல்லுந் தகுதி வாய்ந்தது. இப்பொழுது சில ஆண்டு
களாக நமது மடங்களின் தலைவர்கள் சமயத்தைப் பேணுவ
தில் ஊக்கங்கொண்டு பெரிதும் உழைத்து வருகிறார்கள்.
சமய சாஸ்திரங்கள் பலவும் இவர்களால் இப்பொழுது வெளி
யிடப்பட்டுவருகின்றன. சமயம் பற்றிப் பிறர் செய்துவரும்
முயற்சிகளுக்கு இவர்கள் ஆதரவளித்தும் வருகிறார்கள்.
என்றாலும் இம் முயற்சியின் அளவு போதியதென்று கருத
முடியவில்லை. இம்முயற்சியும் தக்க நெறியில் செல்லுகின்றது
எனவும் சொல்ல முடியவில்லை. தற்காலத்துள்ள கல்வி
யின் பரப்பும் பிற சமயிகள் செய்து வருகின்ற முயற்சிகளின்
தன்மையும் நாம் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.
பிறரைத் திருப்தி செய்வதற்கும், அரசியலார் சட்டத்தின்
பொருட்டும் செய்கின்ற சிறு முயற்சிகள் பயன்தர மாட்டா.
கல்வியறிவு நிரம்பிய பெரியோர்களின் ஒத்துழைப்பு இல்
லாமைதான் நமது மடத்துத் தலைவர்கள் தக்கவாறு வேண்டு
மளவு நமது சமயத்தைப் பேணாமைக்குக் காரணமென்றுகூடச்

சொல்லத்தோன்றுகிறது. ஆகவே மடங்களின் நிலைமை சமயப் பற்றின் வளர்ச்சிக்கு வேண்டுமளவு உதவுவதாக இல்லை.

முடிவில், நமது சமயக் கொள்கைகள் தினந்தோறும் வளர்ந்து வருகிற அறிவு வளர்ச்சிக்கு ஒத்திணங்கிச் செல்லவில்லை. பண்டைக்காலத்தில் நம் மூதாதையர் கொண்டிருந்த நம்பிக்கைகளை நமது சமயம் இன்னும் அடிப்படையாகக்கொண்டிருக்கிறது. தற்காலத்திலே உள்ள நூலறிவு மேன் மேலும் வளர்ந்துகொண்டே வருகிறது. பிரகிருதியைப் பற்றிய அறிவு நாள்தோறும் பெருகிவருகிறது. இவ்வகையான அறிவுப் பெருக்கங்களைப் புறக்கணித்துச் செல்லுகின்றன நமது சமயங்கள். இதனால் சமய சாஸ்திரக் கொள்கைகளுக்கே வலிமையில்லாமல் போகின்றது. நமது பொது மக்களும் சமய சாஸ்திரங்களை நெகிழ்ந்து சோரவிடும் நிலைமை உண்டாகியிருக்கிறது.

மேற்குறித்த இடையூறுகளோடு நமது சமயப்பற்றுப் போராட வேண்டுவதாக உள்ளது. பலவகையிலும் நாம் முயன்று முன்னேறினாலன்றி நமது சமயம் வெற்றியுறுவதற்கு வழியில்லை. நமது சமாஜம் அரிய வேலைகள் செய்துவந்துள்ளது. ஆனால், இன்னும் பலபடியாக பலதுறைகளிலும், விரிந்த நோக்கத்துடனும், பரந்த அறிவுடனும் சமாஜம் பணிபுரிந்துவர முற்படுதல் வேண்டும்.

இனிச் செய்யவேண்டும் பணிகளை இரண்டு கூறாக வகுக்கலாம். இப்பொழுதுள்ளபடி நமது சித்தாந்த சாஸ்திரங்களை நன்கு உணர்ந்து கொள்ளுவதற்கு வேண்டும் பணிகள் ஒரு வகை. மற்றொருவகை நமது முடிவான கொள்கைகள் மேலை நாட்டுத் தத்துவ விசாரணைகளோடு ஒத்து நிற்கக்கூடிய அளவில் விஞ்ஞான சாஸ்திரங்களை அடிப்படையாகக்கொண்டு அமைக்கும் பணி மற்றொரு வகை.

(தொடரும்)

அநுபந்தம்

## சென்னை, சைவ சித்தாந்த மகா சமாசம்

# 1947, பிப்ரவரி திங்கட் கூட்டம்

*அன்பினீர் !*

*நிகழும் விய, மாசி திங்கள் 4-ம் நாள் (16—2—'47) ஞாயிற்றுக்கிழமை, சைவ சித்தாந்த மகா சமாசத்தின் பிப்ரவரி திங்கட் கூட்டம் வாலாஜாபாத், இந்துமத பாடசாலை, வள்ளலார் இல்லத்தில் நிகழ்ச்சியிற் கண்டாங்கு நடைபெறும்.*

*அதுபோழ்து சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. வித்துவான் மு. வரதராசனார்* B. O. L., M. O, L. *அவர்கள் தலைமையேற்க இசைந்துள்ளார்கள்.*

*அன்று இரவு 9 மணிக்கு நடைபெறும் அப்பர் நாடகத்திற்கு உயர்திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்* B. A., B. L. *அவர்கள் தலைமை யேற்பார்கள்.*

*தாங்கள் உடன் வந்திருந்து கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்,*

இங்ஙனம்

**க. அரங்கசாமி**
*சமாசச் செயலாளர்.*

**இந்துமத பாடசாலையார்**
*வாலாஜாபாத்*

# வாலாஜாபாத்
# இந்துமத பாடசாலை
# வள்ளலார் மாணவரில்லம்

## தோற்றுவாய்

இறை திருவருள் துணைக்கொண்டு இந்துமத பாட சாலை 1946-ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 4-ஆம் நாள் துவங்கப்பெற்றது. அதன் சார்பில் ஒரு பெரிய தொழிற் சாலையும், மாணவர் இல்லமும் தோற்றுவிக்கப்பெற்றன. பள்ளி நான்கு சிறுவர்களோடும், இல்லம் ஒரே சிறுவனோ டும் தொடங்கப்பெற்றன.

## வாலாஜாபாத்

இந்துமத பாடசாலை வாலாபாத்தில் உள்ளது. வாலாஜாபாத் செங்கல்பட்டிலிருந்து அரக்கோணம் போகும் இருப்புப் பாதையில் உள்ள வண்டித்தொடர் நிலையம். இந்நிலையத்திலிருந்து தெற்கே நோக்க மாணவர் இல்லம் தெரியும். இரவாயினும் ஆங்குள்ள மின் விளக்கு கள் காட்சியளிக்கும்.

## இந்துமத பாடசாலை

இன்று பள்ளியில் எழுநூறு சிறுவர் சிறுமியர் கல்வி கற்கின்றனர்; அவர்களில் நான்கிலொரு பகுதியினர் பழந் தமிழ் மக்களாவர். பாடசாலையில் எட்டு வகுப்புக்கள் உள்ளன.

## மாணவர் கற்பவை

சென்னை மாகாண அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டம் கையாளப்படுகின்றது. தாய்மொழிக்கு ஏற்றம் கொடுக்கப்பெற்றுள்ளது. இதன் கல்வி நிலையைக் கல்வி யாளர்கள் பலர் போற்றிப் பாராட்டியுள்ளனர்.

## திருவருள் உணர்ச்சி

மக்கள் சமயப் பூசலின்றி, கடவுள் உணர்ச்சியோடு வாழவேண்டுமென்னும் நோக்கத்துடன் இப்பள்ளியில் முதலிலிருந்தே சமயப் பாடம் நடத்தப் பெறுகின்றது. பொதுவான சமய உண்மைகளையெல்லாம் மாணவர்களுக் குக் கற்பிக்கின்றனர்.

## திருவள்ளுவர் தொழிற்சாலை

பாடசாலையின் சார்பில் திருவள்ளுவர் தொழிற்சாலை உள்ளது. அஃது ஒரு தனிக்கட்டிடத்தில் அமைந்திருக் கின்றது. அங்குப் பத்துக்கு மேற்பட்ட தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன.

## விளையாட்டுப் படை

குழந்தைகளுக்குப் பலவித உடற்பயிற்சிகளும் விளை யாட்டுகளும் கற்பிக்கப் பெறுகின்றன. அவர்கள் யோக ஆசனப் பயிற்சிகளும் பண்டைக் காலத்துச் சிலம்பப் பயிற்சிகளும் பெறுகின்றார்கள். மாணவர்கள் விளையாட்டு கள் காண்பதற்கு அரிய காட்சியாகும். பாலாற்று மணலில் 400 மாணவர்கள் வரிசையாக நின்று உடற் பயிற்சிசெய்வது காண்போர் கண்களுக்கு நல்விருந்தாகும்.

## வள்ளலார் இல்லம்

பாலாற்றின் கரை. பசுமை நிறைந்த சோலை. இனிய காற்று. தேவையான சூரிய ஒளி. அங்கு மாணவர் இல்லம் அமைந்துள்ளது.

இல்லத்தில் இப்பொழுது 400 சிறுர் உறைகின்றனர். அவர்கள் பல கோட்டங்களைச் சேர்ந்தவர்கள். அவர் களில் 170 பேர் ஆதித்திராவிடர். பாடசாலையில் பகலில் படிக்கும் மற்ற ஆதித்திராவிடச் சிறுவர்களுக்கும் நண் பகலுணவு இல்லத்தில் அளிக்கிறார்கள்.

மாணவர் இல்லத்தில் கடவுள் அன்பும், உடன் பிறப் புணர்ச்சியும் வளர்கின்றன. மாணவர்கள் கவலையின்றிக் கற்கின்றனர். அவ்வில்லத்தின் ஆட்சி மாணவர்களிடமே உள்ளது. மாணவர்களில் தேர்ந்தெடுத்த பத்து அமைச்சர் கள் உள்ளனர். இல்லம் குழந்தைகளின் இன்ப நிலையம்.

## பாடசாலையின் உறுப்புகள்

இந்துமத பாடசாலையும், வள்ளலாரில்லமும் இவற் றின் உறுப்புக்களான மெய்கண்டார் கழகம், ஞான சம்பந்த நூல் நிலையம், வாகீச இதழ் நிலையம், சுந்தரானந்த இசையரங்கு, வீமன் விளையாட்டு வெற்றிப்படை முதலி யனவும் அறிஞர்களால் பார்வையிடுதற் குறியவை.

காலை 8- 9. வள்ளலார் இல்லம், திருவள்ளுவர் தொழிற்சாலை ஆகியவற்றைப் பார்வையிடல்

9-11. மாணவர்தம் ஆடலும் பாடலும்

மாலை 3-30. விழாத் தொடக்கம்

இறை வணக்கம்

தலைவர் முன்னுரை

சொற்பொழிவுகள்

க. மாணவரும் சமயமும்

பொ. குருசாமி B.O.L. (Hons) அவர்கள்

உ. 'கல்விக்கோயில்'

வித்துவான்-அன்பு கணபதி அவர்கள்

ங. 'திருவாசகம்'

வித்துவான்-ஆ. நமசிவாய முதலியார் அவர்கள்

ச. 'சமயத்தின் பெருநோக்கம்'

C. M. சனார்த்தனம் B.A; B. Com அவர்கள்

ரு. 'திருப்பாவை'

மு. வெங்கடசாமி, B.O.L. Hons அவர்கள்

சு. 'வாழ்க்கையும் சமயமும்'

சு. கி. சானகிராமன் அவர்கள்

எ. 'குலசேகரர்'.

பாஷ்ய ராமாநுஜம் அவர்கள்

தலைவர் முடிவுரை

நன்றி கூறலும் வாழ்த்தும்

இரவு 9. வள்ளலார் இல்லத்து மாணவர்களால் அப்பர் நாடகம்.

# திருமுருகாற்றுப்படை

இந்த ஆண்டு சமாச வெளியீடாகச் செங்கோட்டிலே வெளிவந்த நூல் திருமுருகாற்றுப்படை ‘செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங்கண் படைத்திலனே’ என்று பாடிய புகழ் பொருந்திய ஊரிலே அம்முருகனுக்கு முதலில் உரித்தாகிய இந்நூலை வெளியிட்டது ஏற்புடைத்தாகும். இந்நூலுக்குக் கீழ் வெளியிட்டுள்ள குறிப்புக்கள், திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களால் எழுதப்பட்டன. அடக்கவிலைப் பதிப்பாக வெளிவந்துள்ளது. விலை அணா 2. ஒன்பது பிரதிகள் ரூ. 1. சமாசச் செயலாளர், 9, வைத்தியராம ஐயர் தெரு, தியாகராயநகர், சென்னை என்ற முகவரியில் பெறலாம்.

Regd. M. 2330. "SIDDHANTHAM" Vol. 20. No. 2

தற்சமயம் கிடைக்கக்கூடிய

# சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 0 | 14 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு .... | 1 | 0 |
| திருமந்திரம் ... | 1 | 8 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை அரும்பத உரையுடன் ... | 0 | 10 |
| சீவக சிந்தாமணி .... | 1 | 12 |
| சங்கநூற்புலவரகராதி .... | 0 | 1 |
| முருகன் மூந்நூல் (திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரநுபூதி) .... | 0 | 3 |
| திருமுருகாற்றுப்படை (உரையுடன்) ... | 0 | 2 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

## குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர்கள் (மலர் ஒன்றுக்கு 12 இதழ்கள்) மலர் ஒன்றுக்கு 1 ரூபா வீதம் விற்கப்படும். வேண்டியவர்கள் தபாற் செலவுடன் சமாசச் செயலாளருக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

மலர் **3 (1930), 4 (1931), 5 (1932), 6 (1933), 11 (1938), 13 (1940), 14 (1941), 15 (1942), 16 (1943), 18 (1945).**

செயலாளர்,
9, வைத்தியராமையர் தெரு,
தியாகராயநகர், சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P. I. Card No. M. S. 115) and Edited & Published by S. Satchithanandam Pillai, B.A., L.T. for the Saiva Siddhanta Maha Samajam, at 9, Vaidyaramayyar St, Thyagarayanager, Madras. P. I. Card No. M. S. 81.

20 No. M. 2330 "SIDDHANTHAM" Vol. 20—No. 8

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க்கங்காகும்'—திருமந்திரம்

20 | விய பங்குனி 1947 மார்ச் | இதழ் 3

உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| ஒளிபரப்பு ... | 65 |
| மங்கையர்க்கரசியார் மாண்பு ... | 71 |
| 1947 உத்தியோகஸ்தர் தேர்தல் ... | 78 |
| சைவர் மகாநாட்டுத் தலைமை உரை ... | 81 |


பத்திராசிரியர்: ராவ்பகதூர்-C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.
உதவிப் பத்திராசிரியர்: கி. சிவராமன், எம். ஏ.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2.

Reg. M. 2330

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 20 | விய பங்குனி 1947 மார்ச் | இதழ் 3

## ஒளிபரப்பு

(ஆசிரியர்)

புதுமனை புகுதல்:—நான் ஒரு புதுமனை புகுகின்றேன். அம்மனையோ பழையமனை தான். ஆனால் நான் புகுவது தான் புதியது. அது புதுமனை புகுவது அல்லவோ? நான் புகும் மனை இப்போது சிறியதே. அதனைப் பெரிதாக்கலாமா என்பது என் கேள்வி. "சிறுகக்கட்டி பெருக வாழ்" என்பது ஆன்றோர்மொழி. ஆகவே நான் புகும்மனை சிறியதாக இருந்த போதிலும் அதனைப் பெருகவாழ வேண்டியது என் கடமை ஆகும். அவ்வாறு பெருக வாழுவேனு என்று ஏக்கம் ஒருபுறம் தோன்றுகிறது. ஏன் வாழக்கூடாது என்ற ஒரு உறுதியும் மறுபுறம் வருகிறது. ஏக்கத்தை எதிர்த்து உறுதியைக்கொள்ளுவதே சரி என்று திடப்படுத்திக்கொண்டேன். புதுமனை புகும் சடங்கு நடக்கிறபோது அன்பர்களுடைய ஆசிபெறுவது நம் வழக்கம். அன்பர்களுடைய ஆசியை நன்கு பெறவே அவர்களுக்கு என் அன்பு ஆகிய அழைப்பை அனுப்புகிறேன். அன்பர்கள் நல்லுரைகளாகிய ஆசிகளை அனுப்பிப் புதுமனை புகும் சடங்கை நிறைவேற்றித் தருவதல்லாமல் புதுமனையில் என் வாழ்க்கையையும் சிறப்பித்துத் தருவார்களாக! நான்

புகும் புதுமனை இன்னதென்று அன்பர்கள் அறிந்திருப்பார்கள். அதுவே சித்தாந்தத்தின் ஆசிரிய பீடம் என்பது.

2. இட அமைதி :—புதுமனை புகுகிறவர்கள் அம்மனையில் உள்ள பகுதிகளையும் பொருள்களையும் தம் நோக்கத்திற்கும் வழக்கத்திற்கும் தக்கபடி அமைத்துக்கொள்ளுவார்கள். நாற்காலி, பலகை, படுக்கை, பொருள் அறை, சமயல்அறை, நீர்உள் முதலியவைகளையும் தம் தம் சௌகரியத்திற்கு ஏற்றபடி அமைப்பது உண்டு. சிறப்பாக நூல் அறை, படிப்பு அறை, விளக்கு அமைப்பு இவைகளை ஒழுங்குபடுத்துவது படித்த மக்களின் இயல்பு. நானும் இப்புது வீட்டில் பொருட் சிறப்பு, கருத்து அமைப்பு, அவை வெளிவரும் முறை இயல்பு இவைகளைச் சிறிது மாற்றலாமா என்பதே ஓர் எண்ணம். அதனைச் சிந்தித்து அன்பர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டால் அவர்கள் எண்ணத்துடன் கலந்து சில மாறுதல்களை இயற்றலாம் என்பது என் நினைவுதான்.

3. எண்ணப் போக்கு :—உலகில் எண்ணப் போக்கு மாறிக்கொண்டு வருகிறது. பிறநாடுகளில் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டால் நம்நாட்டிலோ அவைகளுக்குப் பின்வாங்காத முறையில் பல மாறுபாடுகள் தோன்ற முயலுகின்றன. அரசியல் மாறுபாடுகளை ஒத்து சமய நம்பிக்கைகளிலும் வழக்கங்களிலும் மாறுபாடுகள் தோன்றுகின்றன. அம்மாறுபாடுகள் மிக விரைவில் வரத்தொடங்குகின்றன. வெகு உறுதியாக இருந்த நிலைகளும் சிறிது சிறிதாகத் தளர்ச்சி அடைகின்றன. ஒருநாளில் வெடித்து அழிந்து போகக்கூடிய நிலைக்கும் அவைகள் வந்திருக்கின்றன. ஆனால் மாறுபாடுகள் எல்லாம் முடிவு பெற்று ஒரு திரமான நிலைக்கு வந்த பிறகு நோக்கினால் பழைய மதுவை புதுப்புட்டிகளில் போடுவதையே அது ஒக்கும் என அறியலாம்.



4. கோயில் திறப்பு :—இந்நாளில் மிக வேகமாகக் கேட்பது கோயில்கள் ‘பட், பட்’ என்று திறந்துவிடும் ஒலிதான். ஆனால், கோயில்கள் மூடிக்கிடந்தனவோ என்று கேட்கலாம். “மூடப்படவில்லை; திறந்துதான் இருக்கின்றன. சில துரதிட்டசாலிகள் உள்ளே போகப்படாது என்று தடை செய்யப்பட்டிருக்கிறார்கள்” என்று தான் கூறமுடியும். அவர்கள் கோயிலுக்குள்ளே போவதில்லையா என்றால், “அப்படியும் அல்ல, போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்; வெளிப்படையாகப் போவது இல்லை; அவ்விதம் போவதற்குத் தற்கால ஆங்கிலச் சட்டம் தடை செய்கிறது” என்றே விடை கூறவேண்டும். அச்சட்டம் வழக்கம் என்ற பாறையின்மீது கட்டப்பட்டுள்ளது. ஆகவே அப்பாறையைத் தகர்க்க வேண்டும் என்பதே தற்போதைய கிளர்ச்சி. ஆனால், கோயில்களைத் திறந்துவிட்டால் பிறகு எல்லாச் சம்பத்தும் தடுக்கப்பட்ட ஏழை மக்களுக்கு வந்துவிடுமா என்று கேட்டால் அதுவும் இல்லை; அதுவும் செய்யவேண்டும்; புதுக்கோயில் கதவு திறந்தால் போதாது; அகக்கோயில் திறக்கப்படவேண்டும் என்றே விடை கூறவேண்டும்.

5. ஒருகுட முழுக்கு :—எங்கள் ஊருக்கு அடுத்த நான்கு கல்லில் ஒரு பஞ்சாலை இருக்கிறது. அதன் அதிபர் ஒரு சிறந்த சைவ அன்பர். அவ்வாலையில் பல வகுப்பார்களும் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு சமயப் பழக்கமும் சமயக் கல்வியும் புகட்டவேண்டும் என்பது அவர் அவா. ஆகவே ஆலைக்கு அடுத்தாற்போல் ஒரு அழகிய கோயில் ஒன்று கட்டி அதில் பிள்ளையாரைத் தாபித்தார். தம் ஆலையில் வேலை செய்யும் நன்மக்களுக்கு அறிவு ஊட்டும் கடவுளாக அப்பிள்ளையாரை வைத்து அம்மூர்த்திக்கு ஞானக்கணபதி என்ற திருநாமமும் சூட்டினார். குடமுழுக்கு நடந்தது. பல பெரியார்கள் பாமாலைகளும் சாத்தினார்கள். அத்திருவிழா நடக்கையில்

எல்லாம் கோயிலுக்கு எதிரே ஏழை மக்கள் பறைகளை ஏந்திக்கொண்டு குரவைக்கூத்து ஆடிப்பாடிக் கொண்டு இருந்தார்கள். அக்கூத்தைக் கண்டு மகிழ்ந்தவர்களில் ஒருவர். "இவர்கள் எத்தனை அன்போடு ஆடுகிறார்கள்; நம்மைக் காட்டிலும் கடவுள் அன்பு இவர்களுக்கு மிகுதி; ஆனால் கோயிலுக்குள் வருவதற்கு இசையமாட்டார்கள்." என்றார். இது என்ன விபரீதம், இவர்களுடைய அகக்கோயிலைத்திறக்க வேண்டாமா என்று எண்ணினேன்.

6. சேரிப்பணி :—தீண்டாமை ஒழிக்கவும் சமயப் பிரசாரம் செய்யவும் பல செல்வவான்கள் நாப்பறை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தீண்டாமை என்பது சைவத்திலும் தமிழ் நூல்களிலும் இல்லை. இது பிற்காலத்தில் அரசியல் சார்பாக முளைத்த ஒரு புல்லுருவி. இதனைக் களைவது வெகு எளிது. எல்லா ஊர்களிலும் சேரிகள் இருக்கின்றன. அச்சேரிகளில் உள்ளவர்கள் மிக ஏழைகள். படிப்பு என்பது அங்கே இன்னும் சரியாகப் புகவில்லை. ஏனைய சமயத்தார்கள் இதனை அறிந்து அங்கே தொண்டு செய்யப் புகுந்திருக்கிறார்கள். நமது சம்பந்தர் இந்தத் திருத்தொண்டில் ஈடுபட்டவரே. அவரை வழிபடும் நாமோ அதனை வெறுக்கிறோம். உண்மையாகத் திருத்தொண்டு செய்பவர்கள் தங்கள் மிகுதிப் பணத்தில் ஒரு சிறு பகுதியை இந்தப் பணிக்குச் செலவிடலாம். ஒவ்வொரு சேரியிலும் ஒரு சிறுவீடு விலைக்குப்பெற்று அதில் ஒரு சைவப் பிரசாரசாலை ஏற்படுத்தி அங்கே தொண்டு செய்தால் அதைவிடப் புனித வேலை உலகில் இல்லை. இதுதான் அகக் கோயிலைத் திறப்பதற்கு வழி. இதுவே திருச்செங்கோட்டில் சென்ற சமாசக் கூட்டத்தின்போது தொண்டர்கள் நேரில் கண்டறிந்த சிறந்த செய்கை ஆகும்.

7. மிகுதித் தொகை :—நமது கோயில்களின் இயல்புகளை அறியாதவர்கள் அங்கே நடைபெறும் தற்காலத்திரு



விழாக்களைக் கண்டால் நாக்கில் நீர் ஊறுவதுண்டு. இதனைப்
பணமும் கேளிக்கையாகவும் போகின்றதே என்று பரிதாப
மும் கொள்வார்கள். உண்மையான நாட்டுப்பற்று உள்ள
மக்கள் இவ்விதமாக வீண் ஆடம்பரங்களில் செய்யும் பணத்
தை மீதிப்படுத்தி ஏன் பொதுமக்களுக்கு அறிவு ஊட்டக்
கூடாது என்று கேட்கிறார்கள். அக்கேள்வி நியாயமான
கேள்வியே. ஆனால் உண்மையில் மீதிப்பணம் இருக்கிறதா
என்று யார் கவனித்தார்கள்? கோயில்களுக்குத் தொகைகளைக்
கொடுத்தவர்கள் எந்த கருத்தைக் கொண்டு கொடுத்தார்கள்.
அக்கருத்து நிறைவேற்றப்படுகின்றதா என்ற கேள்விகளை
ஆராயாது நாடெங்கும் ஒரே கூக்குரல் கேட்கப்படுகின்றது.
கோயில்களிலே சில சமயச் சடங்குகள் உண்டு. அவை எந்தச்
சமயங்களிலும் உண்டு. அவைகளுக்கும் மேலாக சமயப் பிர
சாரம் உண்டு. அவைகளுக்கும் மேலாக சமய அன்பர்
களுக்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டியது உண்டு. இவைகளுக்
குச் செலவானது போக மிகுதி இருக்கிறதா என்று ஆராய்ந்து
பார்த்தால் எதிலும் மிகுதி இருப்பது இல்லை என்று அறிய
லாம். நமது கண்முன்பாகச் செய்யப்படும் கேளிக்கைகளோ
சமயச்சடங்குகள் அல்ல. அறியாத மக்கள் அதிகாரத்துக்கு
வந்தால் மக்களை வசப்படுத்தி இன்பத்தை ஊட்ட இவ்வாகாத
செயல்களைச் செய்கிறார்கள். இவைகளைக் கொண்டு சமய நிலை
யங்களில் மிகுதிப்பணம் உண்டு என்று கூறுதல் விபரீதக்
கொள்கை ஆகும்.

8. சித்தாந்த ஆராய்ச்சி :—நமது நாட்டில் சித்தாந்த ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பட்ட பல நிலையங்கள் அவ்வாராய்ச்சி மிகவும் கடினம் என்று அதில் ஈடுபடாமல் வேறு எந்தக் காரணத்தைக் கொண்டோ அதில் ஈடுபடாமல் வேறு வகைகளில் ஈடுபடத் தொடங்குகிறார்கள். ஆகவே, சென்னைப் பல்கலைக் கழகமாவது அதனைச் செய்யட்டும்

என்று ஒருவர் கூறினார். அக்கழகத்தார்களும் அதனைச்செய்வதாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அச்செயலுக்கு எனத் தனியாகப் பொருள் அங்கு இல்லை. செல்வர்களும் செல்வநிலையங்களும் இச்செயலுக்கு உதவிபுரியும்படி இடம் தந்திருக்கிறார்கள். அச்செய்தி முந்தி இச்சித்தாந்தத்தில் எழுதப்பட்டது. ஆனால் இதுவரை ஒருவரும் உதவிபுரிவதாக முன்வரவில்லை. சைவசித்தாந்த ஆராய்ச்சிக்கு என்று பொருள் வைத்திருக்கும் நிலையங்கள் இப்பேர் உதவியைச்செய்ய முன்வரமாட்டார்களா? நமது நாட்டில் சமய வரட்சி அத்தனை ஏற்பட்டுவிட்டதா?

தென்னாட்டுச் சரிதம் :—சென்ற ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஒரு பரிசு வழங்குவதாக வெளியிட்டார்கள். எவர் ஒருவர் தென்னாட்டுச் சரித்திரத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுகிறார்களோ அவர்களுக்குப் பெரும் பரிசு கொடுப்பதாகக் கூறினார்கள். இந்த ஆண்டு அறிக்கையில் அப்பரிசு பெறுவதற்கு எவரும் முன் வரவில்லை என்று எழுதி இருக்கிறார்கள். இதனை நம்ப முடியுமா என்று எண்ணினேன். நமது நாட்டிலே ஆயிரக்கணக்கான புலவர்களும் நூற்றுக்கணக்கான தமிழ்ப் பட்டதாரிகளும் இருக்க இவர்களில் ஒருவராவது இப்பொற்கிழி பெற முன் வரவில்லையே என்று ஏங்கினேன். இந்த ஏக்கம் எப்போது அகலுமோ அறியேன். அடுத்த ஆண்டில் "ஒட்டக்கூத்தரின் பா ஆராய்ச்சி" என்பதைப்பற்றி எந்த அரசியல் கல்லூரியில் தேர்ந்தமாணவன் எழுதுகிறானோ அவனுக்கு ஒரு பரிசு அளிக்கப்படும் என்று கண்டிருக்கிறது. இதனையாவது நமது தமிழ் அன்பர்கள் கவனிப்பார்களாக! வலிய வந்த ஸ்ரீதேவியை உதைத்துத் தள்ளும் காலமும் வந்துவிட்டதா என்று கூறுவதோ?

---

# மங்கையர்க்கரசியார் மாண்பு

[ச. சிவகாமியம்மையார், தூத்துக்குடி]

அறிவு :—அம்மையாரது அறிவு அரசனது முகக்குறியிலிருந்தே அவன் உள்ளத்தை உணரும் ஆற்றலும், காலத்திற்கேற்பக் காரியங்களை நடத்திச் செல்லும் வலிமையும் உடையதாக இருந்ததென்பதை "என்னுயிர்க்குயிராய் உள்ள இறைவ நீ உற்றதென்னோ, உன்னுளம் மகிழ்ச்சியின்றி முகம் புலர்ந்திருந்தாய்" என்றும், "அன்னவர் வாது செய்தால் வென்றவர் பக்கம் சேர்ந்து உன்னுவதுறுதியாகும்" என்றும், அரசனோடு கூறும் வாக்கியங்களினால் தெளிவாகிறது.

அன்பு :—இனி அம்மையாரின் அன்பைப்பற்றி என்ன தான் சொல்லிக் காட்டமுடியும். அவரது அன்பு விரிந்து பரந்தது. ஆழமும், அகலமும் உடையது. தென்னவனாகிய பாண்டியன் உய்வதற்கு, பாண்டிநாடு உய்வதற்கு அம்மையாரது அன்பு மூலகாரணம். அம்மையாரது அன்பு ஒருவரிடத்தில் மாத்திரம் கட்டுப்பட்டிருக்கவில்லை. தன் கணவனிடத்தே அன்பு, தன் நாட்டினிடத்தே அன்பு, தன் குடிகளிடத்தே அன்பு, தான் மேற்கொண்டொழுகிய சமயத்தினிடத்திலே அன்பு, ஒப்பற்ற பரம்பொருளாகிய சிவபொருமானிடத்திலே ஒப்பற்ற அன்பு. இந்த ஒப்பற்ற குணங்களைப் பாராட்டியே ஞானசம்பந்தர் திரு ஆலவாய் கோவிலைப் "பாண்டிமா தேவியார் பணிசெய்து நாள்தொறும் பரவும் கோயில்" என்றும், "பத்தியார்கின்ற பாண்டிமாதேவியார்" என்றும் குறிப்பிடுவதோடு அதே பதிகத்திலே அம்மையார் எல்லாக் குணங்களும் நிரம்பப்பெற்றவர் என்பதைப் "பண்ணலம் புணரும் பாண்டிமாதேவி" எனப்பாடி இருக்கிறார்.

இத்தகைய பண்புக்குணம் ஒருவருக்கு எப்பொழுது வரும்? கட்டுப்படாத அன்பு வளர்ந்தோங்குவதாலும், பழமையான பெரிய குடிப்பிறப்பினாலும் உண்டாகும் என்பதை திருவள்ளுவர்,

> " அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
> பண்புடைமை யென்னும் வழக்கு "

என்று கூறுகிறார். அம்மையாரோ தாம் வாழ, தம் நாடு வாழ, தம்நாயகன்வாழ இறைவனிடம் விண்ணப்பிக்கிறார். திருஞான சம்பந்தரும், சேக்கிழார் பெருமானும் அம்மையாரைப் பற்றிக் கூறும் இடங்களிலெல்லாம் " வளவர்கோன் பாவை," " வளவர் குலக்கொழுந்து ", " மண்ணெலாந்திகழ மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன் தன் மகள் ", " பருங்கையானை வளவர் கோன் பாவையார் " என்றெல்லாம் அவர் பிறந்த குடியைப் போற்றுவதன் காரணம், தமிழரசியல் மாறிவிட்ட காலத்திலுங்கூட, தமிழர் கொண்ட கடவுட் கொள்கை மாறுபடாமல் இன்றைக்கும் போற்றுந்தகையில் நிற்பது. " அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு " எனவரும் இலக்கணத்திற்குத் தகநின்று ஒரு புறாவிற்காகத் தனது சரீரத்திலுள்ள தசைப் பகுதி முழுதுமே அறுத்துக்கொடுத்த சோழர் மரபில் தோன்றிய அம்மையாரின் அன்பன்றோ, ஒரு பசுங்கன்றின் பொருட்டு " ஒரு மைந்தன் குலத்துள்ளான் " என்பதையும் பாராது தேர்க்காலின் கீழ் தன்மைந்தனைக் கிடத்தி தேரை ஓட்டித் தனது செங்கோலைத் துலாக்கோலில் வைத்து நிறுத்தி அரசாண்ட அரசர் குலத்தின் கொழுந்தாக வந்தவதரித்த அம்மையின் அருளன்றோ.

திருவள்ளுவர் எல்லையற்ற அன்பு, அருள் என்னும் குழந்தைக்குத் தாய் என்பதை " அருள் என்னும் அன்பீன் குழவி " எனக் கூறினார். சிவப்பிரகாச சுவாமிகளோ அம்மை



யாரை இந்த அருளென்னும் தாய்க்கு அரசி எனப் போற்றுகின்றார். அம்மையார் ஞானசம்பந்தரிடத்திலே கொண்டிருந்த அன்பு ஒரு ஒப்பற்ற தாயின் தலையன்பாகும். அம்மையாரது அன்பைப் பாராட்டி சிவப்பிரகாச சுவாமிகள் ஞானசம்பந்தரிடத்திலே கேட்கும் கேள்வி மிக அழகு வாய்ந்தது.

ஞானசம்பந்த பெருந்தகையே உனக்கு இரண்டு அருள் தாய் உண்டு. ஒரு தாய் நீ அழுதபின்னே வந்து பால் கொடுத்தாள். மற்றொரு தாயோ நீ பிரம தீர்த்தக்கரையிலே நின்று அம்மே! அப்பா! என அழுதாய் என்று கேட்ட மாத்திரத்திலே அன்பினால் அகங்குழைந்து கொங்கைகளில் பால் சுரக்க நின்றாள். இந்த இரண்டு தாய்களில் எந்தத் தாய் அதிக அன்புடையவள். நீயே சொல் என்ற கருத்தோடு,

> " இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
> முலைசுரந்த அன்னையோ முன்னின் கிலைவிளம்பக்
> கொங்கைசுரந்த அருட்கோமகளோ சம்பந்தா
> இங்குயர்ந்தாள் யார் சொல் எனக்கு "

என்று கூறுவாரானால் அம்மையாரின் அன்பைப் பற்றி என்னதான் எழுத முடியும்? எப்படித்தான் சிந்திக்கமுடியும்.

ஒழுக்கம் :—இனி மாண்புயர்குணத்தின் அம்சமாகிய ஒழுக்கம் என்பது பற்றிச் சிந்திப்போம். கல்விக்குப் பயன் அறிவு, அறிவுக்குப் பயன் ஒழுக்கம். ஒரு பெண்ணின் அடக்க வொடுக்கமே அவளது ஒழுக்கத்தைக் காட்டும். பரிமேலழ கரும் ஒழுக்கத்திற்குக் காரணமாக இருப்பது அடக்கம் என்ற குறிப்பைத் தந்திருக்கிறார்.

தமிழ்நாட்டுப் பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப் பென்ற அடக்கத்தில் தலைசிறந்த நாகரிகமுடையவர்கள்.

இங்கு அம்மையார் ஞானசம்பந்தரைப் பாண்டிநாடுற்ற இடுக்கண் தீர்க்க அழைக்கின்றார். அவரும் மதுரையை

நோக்கி வருகின்றார். அம்மையாரின் கணவனாகிய பாண்டியனோ அம்மையாரது உரிமையில் இடைநிற்கவில்லை. ஆதலின் மந்திரி குலச்சிறையாருடன் தாமும் சென்று ஞானசம்பந்தரை வரவேற்கலாமே அப்படிச் செய்கின்றாரில்லை. மந்திரியாரை நோக்கி முன்னே சென்று "இங்கு எழுந்தருள உய்ந்தோம்" என்று சொல்லி ஞானசம்பந்தரை வரவேற்குமாறு பணித்துப் பின்னேதான் திருக்கோவிலிலே ஒரு ஓரமாகவே ஒதுங்கிச் செல்கிறார். சம்பந்தர் பெருமானும், மந்திரி குலச்சிறையாரும் வரும்போது மந்திரி குலச்சிறையார் அதோ தலைமீது குவித்த கரத்துடன் எதிரே காணப்படும் அவரே "வளவர்கோன் பாவையார்" என்று சொல்ல, சம்பந்தர் அம்மையார் அருகே விரைந்து நெருங்க அதன்பிறகே அம்மையார் ஞானபோனகர் திருவடிகளில் விழுந்து வணங்குகிறார். சம்பந்தர் தமது திருக்கையால் தூக்குகிறார். அம்மையார் மகிழ்ச்சியோடு யானும் என்கணவரும் செய்த தவம் என்னவென்றும் சொல்வேன் என்று அடக்கமாகவே பதில் சொல்லுகிறார்.

தமிழ்நாட்டுப் பெண்கள் தன்னலமற்ற தொண்டர்கள் தாங்கள் மட்டும் வாழ, நலம்பெற நினைக்கமாட்டார்கள். தங்கள் கணவருக்காகவே, தங்கள் பிள்ளைகளுக்காகவே, தன் உடன் தோன்றலார்க்காகவே, தம் நாட்டிற்கு நலஞ்செய்யவே, வாழ்ந்தார்கள், வாழ்கின்றார்கள், இனியும் வாழ்வார்கள். இதுவே தமிழ்நாட்டுப் பெண்களின் ஒப்புயர்வற்ற மாண்புக் குணம். இவைகளையெல்லாம் காரைக்கால் அம்மையார், திலகவதி அம்மையார், மங்கையர்க்கரசியார், சிறுத்தொண்டர், மனைவியார் இயற்பகையார் மனைவியார் முதலிய பல பெண்ணரசிகளின் வாயிலாக அருள்மொழித் தேவர் காட்டும் படம் மிக அழகு வாய்ந்தது.

சிறுத்தொண்டர் புராணத்திலே உத்திராபதியாக வந்த விருந்தினர் விருப்பப்படி தமது ஒரு மகனைக் கறிசமைப்



பதற்கு தொண்டர் தமது மனையாளிடம் "எனை இங்கு உய்ப, நீ பயந்தான் தன்னை அழைப்போம்" என்று தம்மை மாத்திரம் ஒருமைச் சொல்லால் சுட்டுகின்றார். ஆனால் மனையறத்தின் வேராகி நின்ற திருவெண்காட்டு அம்மையாரோ "செய்ய மணியே சீராளா சிவனார் அடியார் யாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்றார் வாராய்" எனப் பன்மையில் கூறவும் காண்கிறோம். அதுபோல இங்கு அரசியார் சம்பந்த ரிடத்திலே "யானும் என் பதியும் செய்தவம் என்கொல்" என்று கூறுவது எத்தகைய சிறப்பு வாய்ந்தது.

ஆண்மை:—ஆண்மை ஆளுந்தன்மை எனப்பொருளாகும். ஆண்மை ஆடவரிடத்து வீரத்தோடு காணப்படும். பெண்களிடத்தில் சாந்த நிலையில் ஆளுந்தன்மையாக அமைகின்றது.

இங்கு அம்மையாரிடத்து என்ன ஆளுந்தன்மை காண்கின்றோம்? கூன்பாண்டியனது செங்கோல் சிறிது வளைந்தது. அது வளையாத வண்ணம் அரசியார் தமது ஆளுந்தன்மையால் முயன்று முடிக்கின்றார். அரசன் சமணனானான். திருக்கோவில் பூசைகள் நின்றுவிடும்போல் இருந்தன. திருக்கோவில் பூசைகள் நின்றுவிட்டால் என்ன ஆகும்?

"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னவர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே"

என்பது திருமந்திரம் கூறுகின்ற நீதி. ஆகவே அரசியார் தமது ஆளுந்தன்மையால் திருக்கோவில் பூசைகள் முட்டின்றி நடக்க ஏற்பாடு செய்தார் அம்மையார். சம்பந்தரைக் கொண்டு கூன் பாண்டியனது கூனை மாத்திரமா நிமிர்த்தினார்! இல்லை. பாண்டியனது வளைந்த செங்கோலையே நிமிர்த்தினார்கள். அது

மாத்திரமா தமது வாக்கின் வன்மையால் அரசனையும் ஆளுகின்றார். புறச்சமய வழியே நிற்கும் தன் கணவனாகிய அரசனிடத்திலே "ஆலவாய் அமர்ந்தாரைக் கும்பிடவேண்டும்" என்று கூறி விடைபெறுவதும், "வென்றவர் பக்கம் சேர்வீர்" ஞானசம்பந்தர் "விரும்பி நோக்கில் தீய இப்பிணியே அன்றி பிறவியும் தீரும்" என்று கூறுவதும் ஆகிய இடங்களிலெல்லாம் அம்மை தமது வாக்கின் வன்மையால் அரசனையே ஆளும் திறமையும், அதில் வெற்றிகாணும் பெற்றிமையும், நாடாளும் திறமையும், எண்ணி எண்ணி இறும்பூதெய்துவதொரு செய்தியாகும்.

**தாளாண்மை** :—தாளாண்மை என்பது விடாமுயற்சியாகும். இங்கு அம்மையாரது விடாமுயற்சியே பாண்டியனது வளைந்த செங்கோல் நிமிர்வதற்கு முதற்காரணமாக இருந்தது. பாண்டியனும், நாட்டவர்களும் சமணசமயம் புகுந்தனர். பாண்டியநாடு சமணசமயத்தின் இடர்ப்பாட்டில் தளர்ந்தது. அரசியாரோ விடாமுயற்சியுடையராய் நாள்தொறும் அங்கயற்கண்ணி பங்கனிடம் தன்னாட்டிற்கு நேர்ந்த இடர் நீங்கவேண்டும் என முறையிடுகின்றார். பாண்டியன் வினையைப் போக்க இறைவனை வேண்டுகின்றார். காலத்தை நோக்கி காத்து நிற்கின்றார். காலம் கிடைத்தவுடன் தாமதமின்றி மந்திரி குலச்சிறையாரைத் துணைகொண்டு பாண்டிநாடுற்ற தீங்கு தீர்த்தற்கு ஆளுடைய பிள்ளை வருமாறு தூதின்மூலம் வேண்டுகின்றார். அவரும் உடன் மதுரை நோக்கி வரவே, குலச்சிறையாரை எதிர்கொண்டழைக்க அனுப்பிவிட்டுத் தாமும் அரசனிடம் கோவிலுக்குச் செல்ல உத்தரவு வாங்கிக் கொண்டு திருக்கோவிலில் சென்று சம்பந்தரை வரவேற்கின்றார். பொல்லாத சமணர்களிடையே அரசனாகிய தனது கணவனும் அப்பொல்லாங்கான நெறியிலே நிற்க பல ஆயிரம் அடியார்கட்குத் திருமடம் காட்டி விருந்தளிக்கும் ஆற்றல்



அரசியாரிடம் இருந்ததென்றால் அவரது உள்ளத்தில் எத்தகைய உறுதியும் முயற்சியும் இருந்திருக்க வேண்டும்.

**வீரம்** :—வீரம் இரண்டு வகைப்படும். ஒன்று அன்பும், ஆற்றலும், அமைதியும் கூடியது. மற்றொன்று கோபமும், முரட்டுச் செயலும் உடையது.

பாண்டிநாடுற்ற இடுக்கண் தீர்த்தற்கு அரசியாரது உள்ளத்தில் எழுந்த வீரம் அமைதியோடு கூடியது. குலச்சிறையார், சம்பந்தப் பெருந்தகையார் இவர்களது பக்கபலம் கொண்டு சமணர்களிடையே ஒரு அறப்போர் நிகழ்த்துகின்றார். அது கத்தியின்றி, யுத்தமின்றி நடத்திய வீரப் போராகும். சமணர்கள் திருஞானசம்பந்தர் வதிந்த திருமடத்தில் இரவிலே தீமூட்டியதகாத செயலைக் கேட்டபோது ஞானசம்பந்தருக்கு யாதாயினும் தீங்கு நேருமாயின் தம் உயிரையே விட்டுவிடத் தீர்மானிப்பாராயின் அம்மையாரின் அன்பும், ஆற்றலும், அமைதியுமுள்ள வீரத்தைப்பற்றி விளம்பும் ஆற்றல் அரிதினும் அரிதே.

அமைதியோடு கூடிய வீரமே உலகத்தில் என்றும் வெற்றியளிப்பது. வெறியோடு கூடிய வீரம் உலகத்தில் ஒரு நாளும் வெற்றியைத் தராது. அமைதியோடு கூடிய வீரமும், தாம் கொண்ட கொள்கை நிறைவேறாது விடிலோ அல்லது தம்மால் அன்பு செய்யப்பட்டவர்கட்குத் தீங்கு நேரிலோ, தம் உயிரையே நல்கும் தீரமும், பெண்களிடத்திலே சிறப்பாக உண்டு என்பதும் இந்நாள் பெருமகனாகிய காந்தியடிகளும் கூறுகின்ற உண்மையாகும்.

# 1947 உத்தியோகஸ்தர் தேர்தல்

**தலைவர் :** திரு. இராவசாஹேப் S. வையாபுரி பிள்ளை.

**துணைத்தலைவர் :** திரு. வி. க. கலியாணசுந்தரனார், V. C. சுப்பையா கவுண்டர், வெள்ளைக்கிணறு.

**பொதுக்காரியதரிசி :** இராவ்பகதூர் க. அரங்கசாமி முதலியார்.

**துணைக்காரியதரிசி :** அ. மு. பரமசிவானந்தம்.

**பொருட்காப்பாளர் :** S. T. அரசு (திருநாவுக்கரசு) T. நகர்

**இதழாசிரியர் :** ச. சச்சிதானந்தம் பிள்ளை.

**துணை இதழாசிரியர் :** K. சிவராமன்.

**வரவேற்புக்கரியதரிசி :** V. C. சுப்பையா கவுண்டர் பிரதிநிதி.

**பதினொரு அங்கத்தினர்கள் :** 1. கா. இராமநாதன் செட்டியார், 2. அ. சோமசுந்தரஞ் செட்டியார், 3. C. சுந்தரவிநாயக முதலியார், 4. ச. நடேச முதலியார், 5. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், 6. A. தேவராஜ முதலியார், 7. M. சிவராமன், 8. வே. தியாகராஜ முதலியார் 9. S. திருநாவுக்கரசு, 10. P. சமரபுரி முதலியார், 11. P. ஆலால சுந்தரஞ் செட்டியார்.

**மாதகணக்குப் பரிசோதகர் :** M. சுப்பிரமணிய பிள்ளை.

**ஆண்டுக்கணக்குப் பரிசோதகர்:** ம. பாலசுப்பிரமணிய முதலியார்

**பத்திராசிரியர் கழகம் :** திரு. வி. கலியாணசுந்தரனார், தலைவர், அமைச்சர், பத்திராசிரியர், C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், அ. கு. காமாட்சி அம்மாள், G. கல்யாணம் பிள்ளை, கா. இராமநாதன் செட்டியார், அ. மு. பரமசிவானந்தம்.

**ஆராய்ச்சிகழகம் :** ம. பாலசுப்பிரமணிய முதலியார், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், வையாபுரி பிள்ளை, C. M. இராமசந்திரஞ் செட்டியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை.

## வெளியூர் ஆலோசனை அங்கத்தினர்

**செங்கற்பட்டு :** கி. இராமலிங்க முதலியார், வா. தி. மாசிலாமணி முதலியார், ஆதிநாராயண முதலியார்.



**தென்னாற்காடு :** முத்துகிருஷ்ண பிள்ளை, சின்னசாமி ரெட்டியார், நாராயணசாமி நாயுடு.

**வடஆற்காடு :** புரிசை சு. முருகேச முதலியார், கிருஷ்ணையர், M. V. சுவாமிநாத முதலியார்.

**தஞ்சாவூர் :** நீ. கந்தசாமிப் பிள்ளை, T. N. சபாபதி முதலியார், மஞ்சட்கொல்லை இராமசாமி முதலியார்.

**திருச்சிராப்பள்ளி :** மௌன சோமசுந்தரத் தம்பிரான், பஞ்சநதம் பிள்ளை, கனகசபாபதிப் பிள்ளை.

**இராமநாதபுரம் :** O. A. P. Rm. அருணசலஞ் செட்டியார் உளும். மெ. க. ப. செ. மெய்யப்ப செட்டியார், A. L. S. P. PL. சுப்பிரமணியஞ் செட்டியார்.

**திருநெல்வேலி :** சங்கர. குமாரப் பிள்ளை, மு. சுப்பிரமணியஞ் செட்டியார், துரைசாமி நாடார்.

**மதுரை :** கங்கணர், வித். சிவக்கொழுந்து, மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் பிரதிநிதி.

**கோயன்புத்தூர் :** S. R. P. பொன்னுசாமி செட்டியார், இராமகிருஷ்ண நாயுடு (பெரியநாயக்கன் பாளையம்) V. V. C. R முருகேச முதலியார்.

**சேலம் :** சைவப்புலவர் S. A. மணிவாசகம் பிரதிநிதி, R. V. கோபால்.

**புதுக்கோட்டை :** ப. செ. முருகப்ப செட்டியார், P. RMCT. சிதம்பரஞ் செட்டியார், பிரதிநிதி.

**மைசூர் :** A. A. இரத்தினசபாபதி முதலியார், T. கிருஷ்ணசாமி முதலியார், மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் பிரதிநிதி.

**திருவாங்கூர் :** வையாபுரிப் பிள்ளை பிரதிநிதிகள்.

**இலங்கை :** அருள் தியாகராசா, S. அண்ணாமலைப் பிள்ளை, N. ஏகாம்பரம் பிள்ளை.

**நீலகிரி :** காரியதரிசி பிரதிநிதிகள்.

**கோச்சி மலையாளம் :** காரியதரிசி பிரதிநிதிகள்.

**சித்தூர் :** இராஜவேலு முதலியாரும் பிரதிநிதிகளும்.

**தீர்மானங்கள்** 1. சென்னையில் சங்க நிலயம் ஏற்படுத்துவது, அதில் சங்கக்காரியாலயம் வைப்பது, அதில் ஓர் நூல் நிலயம் ஏற்படுத்துவது, அதில் சைவ மக்கள் சென்னைக்கு வந்தால் தங்க வசதி அளிப்பது, சமாசத்திற்கு ஒரு பணியாளரை நியமிப்பது ஆகியவற்றை விரைந்து முடிவு செயவதற்காகத் திருவாளர்கள் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், கா. இராமநாதன் செட்டியார், க. அரங்கசாமி முதலியார் ஆகியோர் கூடிய உட்கழகம் அமைக்கப்பட்டது.

2. சித்தாந்தத்தைப் பெருக்கும் வழியில் சிறந்த முறையில் வெளியிடவேண்டும்.

3. சைவ மாணவர்களுக்குச் சென்னையில் உணவு விடுதி ஏற்படுத்துதல்.

4. நமது சமயத்தவர்களை பிறசமயங்களில் புகாமல் இருக்க ஆவன செய்தலும் பிறசமயத்தவர் நம்சமயம் சேரவந்தால் சேர்த்துக்கொள்ளுதலும் அவசியமாகும்.

5. இந்து சமய நிலயங்களில் (மடம் கோயில் முதலியன) கிடைக்கும் பொருள்களை ஆலய வழிபாடு சமயப் பிரசாரம் நிலய நிர்வாகம் சமயமக்களின் இடவசதி சுகாதார வசதி முதலியவற்றிற்கு விரைவில் செலவு செய்து எஞ்சி நிற்பதை ஏழைமக்களது நிலைஉயர்த்துவதற்கான வழிகளை விரைந்து செய்யவேண்டும் என்றும் பிறவகையில் செலவு செய்தல் முறையல்லவென்றும் முடிவு செய்யப்பட்டது

6. சமய நிலயங்களிலும் சமயச்சடங்குகளிலும் கூடிய வரையில் ஆடம்பரமில்லாமல் செலவுகளை அறிவுக்கு உட்பட்ட வகையில் குறைத்து நடத்துவது.

7. திருச்செங்கோடு முதலிய ஆலயங்களைத் திறந்துவிட்ட தமிழ்நாட்டுக் கோயில் தலைவர்களைப் பாராட்டுவதுடன் அதற்கு ஆதரவாயிருந்த அரசியலாரையும் பாராட்டுகின்றது.

8. திறவாத கோயில்களையெல்லாம் திறந்து விடுமாறு உரியவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

9. சைவசமயத்தின் வளர்ச்சிக்காக மாதம் ரூ. 50 தர இசைந்து இரண்டு மாதங்கட்கு ரூ. 100 அனுப்பிய சென்னை இராயபுரம் ருக்மணி குக்கர் உரிமையாளர் அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களைப் பாராட்டுகின்றது.

---

சைவ சித்தாந்த மகா சமாஜம் 41-வது ஆண்டு விழா, 1946

# சைவர் மகாநாட்டுத் தலைமையுரை

[ராவ்ஸாகிப் -S. வையாபுரிப் பிள்ளை]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

சைவச் செல்வர்களே! செல்வியர்களே! அன்பர்களே!

இருவகைப் பணிகளுள் முதல் வகையைக் குறித்துச் சில சொல்ல விரும்புகிறேன். நமது சமய சாஸ்திர நூல்கள் இன்னும் வரையறுத்த பாடங்களுடனும் துணைக்கருவிகளுடனும் வெளிவரவில்லை. அவை யின்ன வென்பது கூட இன்னும் உறுதிப்படவில்லை. பதினான்கு சாஸ்திரங்கள் சைவ சித்தாந்தத்துக்கு உரியன என்று அச்சுப் புத்தகங்கள் கூறிவருகின்றன. அவை

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்த அருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று

ன்ற வெண்பாவிற் காணப்படுவன. ஆனால் இதில் உள்ள
உண்மை நெறி விளக்கம் உமாபதிசிவம் இயற்றியதன்று என்
பதும், பதினான்கு சாஸ்திரங்களுள் அது அடங்கியதன்று
என்பதும், தென்னாட்டிலுள்ள சாஸ்திரச் சுவடிகளால் விளங்
கும். இங்குள்ள சுவடிகளில், இந்நூலுக்குப் பதிலாக, துக
ளறுபோதம் காணப்படுகின்றது. முதன்முதல் இவ்விஷயத்
தைத் தெரிவித்தவர்கள் எனது நண்பர் காலஞ்சென்ற திரு
எஸ். அநவரதவிநாயகம் பிள்ளையவர்கள். நமது ஸமாஜத்தார்
1934ல் வெளியிட்ட சித்தாந்த சாஸ்திரப் பதிப்பில் இத்துக
ளறுபோதம் சேர்க்கப்பட்டிருந்தது. 1940ல் வெளி வந்த
இரண்டாம் பதிப்பில் இந்நூல் நீக்கப்பட்டுள்ளது. காரணம்
'பழைய மரபு' என்று காணப்படுகிறது. இந்நூலைப் பின்
பற்றிச் செய்த உண்மைநெறி விளக்கம் இதற்குரிய இடத்தை
ஆக்கிரமித்துக்கொண்டது. உண்மைநெறி விளக்கம் இந்
நனம் வந்த வழி நூலே யென்பது 'துகளறுபோதம் முப்
பது அவதாரமும் உண்மைநெறி விளக்கம் ஆறு பாட்டிலும்
தசகாரியமாய் அடங்கிவருவதற்கு வகை' என்று இந்நூலுரை

யில் வருதலால் அறியலாம். ஆதலால் துகளறுபோதமே பதினான்கு சாஸ்திரங்களுள் ஒன்றாகும். உண்மையில் இதுவே பழைய மரபுமாகும்.

இவ்வாறே திருந்திய பாடங்களை அமைத்துச் சாஸ்திர நூல்களைப் பதிப்பிடுதலும் அவசியமான ஒரு பணியாகும். ஏட்டுப் பிரதிகளின் உதவிகொண்டும், உரைகளின் உதவிகொண்டும், பிறநூல்களின் உதவிகொண்டும், பாடங்கள் திருந்த அமைதல் வேண்டும். இதன் அவசியத்தை ஒரு சிலர் உணரமாட்டார்கள். அவர்களைச் சாஸ்திரம் வல்லவர்களென்றும் கூறமுடியாது; தமிழ் வல்லவர்களென்றும் கூறமுடியாது. அவர்கள் கூற்றைப் பொருட்படுத்தாது இப்பதிப்பிடுந் தொழிலைத் தக்கவர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். ஓர் உதாரணங் காட்டி மேற்செல்கிறேன். திருவாசகத்தில்,

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன்அவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்

என்று வரும் அருமை மணிமொழியை நீங்கள் அறிவீர்கள். இதனைத் திருக்களிற்றுப்படியார் எடுத்தாளுகின்றது. ஸமாஜப் பதிப்பில் முற்பதிப்புக்களுக்கிணங்க, முதலடி,

பாய்பரி யொன்(று) அந்தப் பரமானந் தப்பரனை

என்று காணப்படுகிறது. ஆனால் 'பரமேசுவரன் கொடுக்கப்பட்ட மேலாகிய ஆனந்தமாகிய பிரயோசனத்தை' என்று உரையுள்ளது. இவ்வுரை 'பாய்பரியோன் றந்த பரமானந்தப் பயனை' என்பதுதான் உரிய பாடமென்பதைத் தெளிவிக்கிறது. 'பரிமேற்கொண்டான் தந்த அந்தமிலா ஆனந்தம்' என்ற மணி



மொழிப் பகுதியை இவ்வடி உட்கொண்டது. களிற்றுப்படியின் ஏட்டுப் பிரதியைத் தவறாக வாசித்ததன் விளைவே ஸமாஜப் பதிப்பு முதலியவற்றில் காணப்படுவது. இதுபோன்ற பிழைகள் நமது சமய சாஸ்திரங்களிலும் சைவ நூல்கள் பிறவற்றிலும் காணப்படுதல் பெரிதும் வருந்தத் தக்கது.

இனி, அடுத்து நாம் செய்யவேண்டிய பணி, நமது சமய நூல்கள் முதலியவற்றிற்குத் திருந்திய ஆராய்ச்சியுரைகள் எழுதுதலாம். எளிய நடையில் இயன்ற உரையென்றால், நம்மவர்களுக்கு ஒத்துக்கொள்வதில்லை. இலக்கண சூத்திரங்களைக் காட்டி 'அற்றன்று; நன்று கடாயினாய்' முதலிய படாடோபத் தொடர்களைப் பெய்து, மூலத்தின் கருத்தைக் கற்பவர்கள் உணர்ந்துகொள்ளாமற் செய்துவிடுவதே நல்ல உரையின் இயல்பாம் என்று நம்மவருள் ஒரு சிலர் கருதுகின்றனர். சித்தாந்த சாஸ்திரங்களில் மிகச் சிறந்தன சிவஞானபோதம், சித்தியார் (சுபக்கம்), சிவப்பிரகாசம் என்பனவாம். இம்மூன்றும் ஒரே நெறியில் அமைக்கப்பட்டவை. இவை முறையே முதல்நூல், வழிநூல், சார்புநூல் எனப்படுபவை. சிவஞானபோதம் இயற்றியருளிய மெய்கண்ட தேவரது சிஷ்யர், சித்தியார் இயற்றிய அருணந்தி சிவாசாரியார். இவ் அருணந்தியின் சிஷ்யராகிய மறைஞான சம்பந்தரின் சிஷ்யர் சிவப்பிரகாசம் இயற்றிய உமாபதி சிவாசாரியார் இவர்காறும், குரு சிஷ்ய பரம்பரை தவறாமல், உபதேசம் கிரமமாக நிகழ்ந்து வந்திருக்கிறது. ஆகவே சாஸ்திரக் கருத்துக்களை நாம் உணர்ந்துகொள்வதில் இம்மூன்றும் ஒருங்கொத்துப் பயன் படுவன. ஒன்றன் கருத்துத் தெளிவாக இல்லாதவிடத்து பிறிதொன்றன் உதவியால் நாம் தெளிந்துகொள்ளலாம். இந்த முறையில் நாம் கற்பதுவே சரியெனத் தோன்றுகிறது. யாவரும் ஒத்துக்கொள்ளத் தக்க இம்முறையை விடுத்து, சொற்கிடக்கை முறைக்கும் பொருந்தாத

படி, சொற்களை அலைத்துத் திரித்து வேண்டும் பொருள் பெறவைத்த உரைகள் செவ்வியன ஆகமாட்டா. நான் குறித்துள்ள முறையில், ஒப்புநோக்குப் பகுதிகளை மேற்கோள் காட்டிக் கருத்துக்களை விளக்கியெழுதிய உரைகள் நமது சமய சாஸ்திரங்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும்.

சித்தாந்த சாத்திரங்கள் சிலவற்றிற்குரிய பேருரைகளைப் பற்றிச் சில வார்த்தைகள் இங்கே இயைபுடையன. சிவஞான போதத்திற்கு ஸ்ரீ சிவஞான சுவாமிகள் இயற்றிய திராவிட மாபாடியம் பெரும்புகழ் பெற்று விளங்குகிறது. பல சமய சாஸ்திரங்களையும், பல ஆகமங்களையும் நுட்பமாக ஆராய்ந்ததன் பெரும் பயனாக இது அமைந்துள்ளது. மூலத்தின் உண்மைப் பொருளை இது உணர்த்துகின்றதா என்பது ஐயுறவின்பாற்படினும், சித்தாந்தக் கொள்கைகளை விளக்குவதில் ஒப்புயர்வற்றதாகும். சிவஞான சுவாமிகள் தாமே எழுதிய உரைப்பிரதி திருவாவடுதுறையாதீனத்தில் உள்ளது. இதனை நோக்கிச் செப்பஞ் செய்த ஒரு பதிப்பு வெளிவருதல் இன்றியமையாததாம்.

இங்ஙனமே சித்தியாருக்குத் தருமையாதீனத்து வெள்ளியம்பலத் தம்பிரான் இயற்றிய ஞானாபரண விளக்கம் என்னும் பேருரையும் பெருந்தகுதி வாய்ந்தது. இன்றுகாறும் இவ்வுரை அச்சில் வெளிவராதது சைவவுலகத்திற்கு ஒரு பெருங் குறையாகும். இக்குறை விரைவில் நீங்கும்படி இறைவன் அருள்புரிக!

இங்ஙனமே உரையில்லாத தேவாரம், திருவாசகம் முதலிய அருள் நூல்களுக்கும் உரைவகுப்பது அவசியமாகும். இவ்வுரைகள், நாலாயிரத் திவ்ய பிரபந்தத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளை முதலியோர் இயற்றியன போன்று, அவ்வந் நூற் காலத்துத் தமிழ் மரபை விளக்கிக் கருத்தின் அழகைப் புலப்படுத்தி, பக்தியையூட்டவல்லனவாய் அமைதல்வேண்டும்.



சுந்தரமூர்த்திகள் தேவாரத்திற்கு ஓர் உரை பல ஆண்டுகளுக்குமுன் வெளிவந்துள்ளது. இத்தேவாரம் ஒருகுறிப்புரையுடன் திரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்களால் ஸமாஜப் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. சம்பந்தர் தேவாரத்தில் முதல் திருமுறைக்கு ஓர் உரை, தருமையாதீனத்தின் ஆதரவில் எழுதப்பட்டுள்ளமைபற்றி முன்பே கூறினேன். அவ்வுரையின் பதிப்பு உரிமையை நமது ஸமாஜத்திற்கே அவ் ஆதீனத்தார் அளித்துவிட்ட செய்தி இங்கே மகிழ்ச்சியுடன் பாராட்டிக் கூறத் தக்கது. திருமூலர் திருமந்திரத்திற்கு உரை வகுப்பது எளிதன்று. திரு. விஸ்வநாதப் பிள்ளை குறிப்புரையொன்று வெளியிட்டனர். இவ்வுரை அத்துணையாகப் பயன் தருவதன்று. மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து நூறு தெரிவுச் செய்யுட்களுக்கு எழுதிய உரையொன்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. இது பயன்படலாம். ஆகமங்களிலும் தந்திர நூல்களிலும் நல்ல தகுதியுடையவர்களே திருமந்திரத்திற்கு உரையெழுதுதற்கு உரியவர்கள். இத்தகையோர்கள் உரையிடுதற்கு முன்வரல் வேண்டும்.

சைவ நூல்களுக்கு உரையிடுவதேயன்றி, சைவம் பற்றிய வரலாற்று நூல்கள் எழுதுவதும் ஓர் அரிய பணியாகும். சைவசமய வரலாறு பற்றித் தமிழில் இதுவரை யாதொரு நூலும் தோன்றியதில்லை. டாக்டர் பண்டார்க்கர் சைவம், வைஷ்ணவம் முதலியவற்றின் வரலாறு பற்றி யெழுதிய ஆங்கில நூலொன்று உண்டு. அது மிக அருமையான நூல். ஆனால் தென்னாட்டுச் சைவம்பற்றி நுட்பமாக அதில் ஆராயப்படவில்லை. சைவ சித்தாந்த வரலாறுபற்றியும் சிறந்த நூலாக யாதொன்றையும் கூறமுடியவில்லை. திரு. எஸ். அநவரத விநாயகம் பிள்ளை சைவ சித்தாந்த வரலாறு என்ற ஒரு சிறு நூல் எழுதி வெளியிட்டனர். இந்நூலில், சைவ சித்தாந்த சாஸ்திரங்களின் விவரக் குறிப்புக்கள்தாம் முக்கியமாக உள்

என. சில கருத்து வேற்றுமையால் சைவ சித்தாந்த உண்மை வரலாறு என்ற பெயருள்ள நூலொன்று காலஞ்சென்ற நண்பர் திரு கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எழுதினார்கள். தமிழ்ச் சிவஞானபோதம் வடமொழிச் சிவஞானபோதத்தின் மொழிபெயர்ப்பா அன்றா என்ற கேள்வியே முக்கியமாக இவர்களால் விசாரணை செய்யப்பட்டுள்ளது. சிவஞான சுவாமிகள் முதலிய நமது முன்னோர்களது கருத்துக்கு மாறாக மொழிபெயர்ப்பு அன்று என இவர்கள் முடிவுசெய்தார்கள். இவ்விரு நூல்களையும் சைவ சித்தாந்த நூல் வரலாறு எனக் குறிக்கலாம். ஆனால் நான் கருதும் வரலாறு வேறொருவகையைச் சார்ந்தது. சைவ சித்தாந்தக் கருத்து வரலாறு (History of Siddhantic Thought) என்று இதனைக் குறிப்பிடுதல் தகும். சித்தாந்த சமயம் தோன்றிய சூழ்நிலை யாது? எவ்வெம் மதக் கருத்துக்கள் இதில் ஒப்புக்கொள்ளப்பட்டன? எந்த எந்த நூல்கள் ஆதாரமாகக் கொள்ளப்பட்டன? முந்து நூல்களில் காணும் சித்தாந்தக் கருத்துக்கள் யாவை? புதுக் கருத்துக்கள் எப்போது தோன்றின? இக்கருத்துக்களனைத்தும் ஒரு சமயத்திற்குரிய தொகுப்பாக (System) எதன் பொருட்டு, எப்பொழுது தோன்றின? இக்கருத்துக்கள் நாளடைவில் எவ்வகை மாறுபாடுகளை அடைந்தன? சித்தாந்தத்திற்கும் விசிஷ்டாத்வைத சமயத்திற்கும் உரிய சம்பந்தம் யாது? ஸ்ரீ சங்கரரது அத்வைதத்திற்கும் இதற்கும் தொடர்பு யாதேனும் உண்டா? வைதிக சித்தாந்தங்களுள் இதன் பதவி யாது? என்பன போன்ற விஷயங்களை முழுவதும் ஆராய்ந்து சரித்திர முறையில் எழுதப்படும் வரலாற்று நூல்தான் நான் மனத்துட்கொண்டது. இவ்வரலாற்று நூல் இந்திய சமய சாஸ்திரங்கள் அனைத்திலும் தக்க பயிற்சிபெற்று, மேனாட்டுத் தத்துவ சாஸ்திரங்களிலும் நல்ல அறிவுடையவர்களால் எழுதப்படுதல் வேண்டும். அப்பொழுதுதான் சிறந்த நூலாக விளங்குதல்



கூடும். இத்தகைய நூல்களுக்குச் சைவசமய ஆராய்ச்சியும் சைவ சித்தாந்த ஆராய்ச்சியும் அவசியமாம். அது ஒரு தனித் துறையாகும். இத்துறையில் முயல்வோர்க்கு ஸர். எஸ். இராதா கிருஷ்ணன், தாஸ் குப்தா முதலியோரது நூல்கள் பெரிதும் பயன்படுவன.

இனி நமது சித்தாந்தக் கொள்கைகள் மேன்மேலுஞ் சிறந்து மேம்படுதற்குரிய முறைகளைத் தெரிந்து நாம் முயல வேண்டுவதுதான் இரண்டாவது வகைப் பணியாக நான் முன்பு குறிப்பிட்டது. தத்துவ விசாரணையில் மேலைநாட்டு முறை களுக்கும் நமது நாட்டு முறைகளுக்குமுள்ள சில வேறுபாடு கள் இங்கே கவனித்தற்குரியன. முதலாவது மேலைநாடுகளில் தத்துவ விசாரணையும் சமயமும் வேறு வேறானவை; இரண்டிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஆகவே, சமயம் பற்றிய கதைகள், தெய்வம் பற்றிய கதைகள், அடியார்கள் சரித்திரங்கள் முதலியன மேனாட்டுத் தத்துவ விசாரணையைப் பாதிக்கமாட்டா. நமது நாட்டில் தத்துவ விசாரணையும் சமய மும் நெருங்கிய தொடர்பு உடையன; ஒன்றன்மீது ஒன்று கட்டப்பெற்றுள்ளதென்று கூறலாம். தத்துவம் பற்றிய வாத பேதங்களுக்கும் தெய்வம் பற்றிய கொள்கைகளுக்கும் மதம் சமயம் என்ற சொற்கள் தாமே வழங்குவது இதனைப் புலப்படுத் தும். ஆகவே முற்கூறிய கதைகள் சரித்திரங்கள் முதலியன நம் நாட்டுத் தத்துவ விசாரணையைப் பாதிக்கின்றன. தத்துவ விசாரணையின் முடிவு சமயவுணர்ச்சி மிக்கு முத்திக்குரிய நெறிகளை அடைதல் என்பதுதான் நம் நாட்டினர் கொள்கை. இரண்டாவது வேறுபாடு தத்துவக் கொள்கைகளைப்பற்றியது. மேலைநாடுகளில் முற்பட விசாரணைசெய்த தத்துவ ஞானி களின் கொள்கைகளைப் பின்வந்த தத்துவ ஞானிகள் ஒப்புக் கொள்வதில்லை. உதாரணமாக ப்ளேட்டோ கூறியதை அரிஸ் டாட்டில் ஒப்புக்கொண்டதில்லை; ஸ்பிநோஜாவின் கொள்கை

ளைக் காண்ட் ஒப்புக்கொண்டதில்லை. நமது நாட்டில் அங்ஙன மன்று. சமயத்திற்கு முரண்பாடில்லையேல், பூர்விகர்களுடைய தத்துவக் கொள்கைகளைப் பின்வந்தோர் தழுவிக்கொண்டனர். உதாரணமாக, சாங்கிய முடிவுகளை நமது சித்தாந்தமும் ஒப்புக் கொண்டு, அவற்றின்மீது தன் முடிபுகளை ஏற்றிவிட்டதைக் கூறலாம். இதனால் பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட (Metaphysical) விஷயங்களைப் புதிதாக விசாரணை செய்யும் வழக்கமே யில்லாமற்போய்விட்டது. எத்தனையோ அடிப் படைக் கொள்கைகள் தீர்க்க விசாரணையின்றியே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. மூன்றாவது வேறுபாடு தத்துவ விசாரணையின் ஆதாரம் பற்றியது. மேலைநாடுகளில் விஞ் ஞானத் துறைகள் பலவற்றிலுமுள்ள முடிவுகளை மேற்கொண்டு அவற்றின்மீது இவ்விசாரணையை நிகழ்த்தி வருகின்றனர். இதனால் தத்துவ சாஸ்திரத்தை விஞ்ஞான அரசி (The Queen of Sciences) என்று கூறுவர். நமது நாட்டில் விஞ்ஞான முடிபுகளுக்கும், தத்துவ முடிபுகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இதனால் விளைந்த விளைவு யாதெனின், நம்நாட்டுத் தத்துவ விசாரணைக்கு முன்னேற்றம் இல்லை. வெகு காலத்திற்கு முன்னரே அது முற்றுப்புள்ளி பெற்றுவிட்டது. சித்தாந்தம் அதாவது முடிந்த முடிபு என நமது சமயம் கொள்ளப்படலாயிற்று. மேலைநாடுகளில் தத்துவ விசாரணை இன்றும் வளர்ந்துகொண்டே வரும் அறிவுத்துறைகளுள் ஒன்றாக உள்ளது.

நமது சித்தாந்தக் கொள்கைகள் மேம்படவேண்டுமாயின், மேலைநாட்டுத் தத்துவ விசாரணை நெறியை ஓரளவு பின்பற்ற வேண்டுவது அவசியமென்றே தோன்றுகிறது. நம் கொள்கை களுள் அடிப்படையானதாய், பெருஞ்சிறப்புடையவாயுள்ளன வற்றை நாம் கைவிடுதல் கூடாது. உதாரணமாக, பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மையை நாம் கைக்கொண்டே



தீரவேண்டும். ஆனால் இவற்றின் உண்மையையும், இயல்பை
யும், ஞானத்தையுணரு முறையையும் பற்றி மேனாட்டார்
கையாண்டு வரும் விசாரணை நெறியை மேற்கொள்ளுதல்
பயன்படுவதாகும். சிவஞான போத நூலைப் பிரமாண இயல்,
இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என நான்கு இயல்
களாகப்பகுப்பர். இவற்றுள் முதல் மூன்று இயல்களில் கூறுவன
மேலைநாட்டு நெறிகளினால் ஆராயத்தக்கனவே. அவ்வாறு ஆரா
யும்போது அந்நாட்டினர் பெரிதும் பின்பற்றிவரும் உளநூற்
கருத்துக்களையும் தருக்கநூற் கருத்துக்களையும் அடிப்படை
யாகக் கொண்டு ஆராய்தல்வேண்டும். நாம் உளக் கூறுபாடு
களைச் சுருக்கமாக அமைத்துவிட்டோம். மனம் புத்தி சித்தம்
அகங்காரம் என்ற நான்கு பிரிவுகளை மாத்திரம் கொண்டிருக்
கின்றோம். மேல்நாட்டினர் இவற்றை விரிவாக ஆராய்ந்திருக்
கிறார்கள். இவ்வாராய்ச்சி நிகழ்ந்துகொண்டே வருகிறது;
பலபடியாகப் பரிசோதனை முறையில் (Experimental) நிகழ்
கிறது. குழந்தைகளின் மன இயல்பு, நேர்மையில் (Abnormal)
மன இயல்பு, சமூக (Social) மன இயல்பு முதலியவற்றைத்
தனித்தனியாக ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். மனிதனது
மன இயல்பை உணருதற்கு இம்முறையைக் காட்டிலும் சிறந்த
முறை இல்லை. இங்ஙனமே தருக்க நெறியிலும் மேல்நாட்டின
ரைப் பின்பற்றுதல் அவசியமாகும். ஓர் உதாரணத்தால்
இதனைத் தெளிவிக்கின்றேன். ஆன்மாவின் உண்மையை,

உளதுஇலது என்றலின், எனதுஉடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினை இன்மையின், உணர்த்த உணர்தலின்,
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா

என்ற சூத்திரத்தால் சிவஞானபோதம் துணிகின்றது. இதில்
காணும் தருக்க நெறி மேலைநாட்டு அறிஞர்களுக்கு உடன்

பாடாக மாட்டாது. ஆன்மா என்பது ஒன்று உண்டு என்றதனை மனத்திற்கொண்டே இச்சூத்திரம் தோன்றியுள்ளது. தத்துவ விசாரணையினால் ஏற்பட்ட முடிவு அன்று இது. எதன் உண்மையை நாம் நிரூபித்தல் வேண்டுமோ, அதன் உண்மையையே முற்பட முடிவுசெய்து கைக்கொண்டு, அதற்கு ஏதோ சில காரணங்களை இச்சூத்திரம் காட்டுவதாகவே மேல்நாட்டு அறிஞர்கள் கருதுவார்கள். இதுபோன்ற தருக்க நெறிகளை நாம் நீக்கிவிட்டுப் பலர்க்கும் ஒப்பமுடிந்த மேலைநாட்டுத் தருக்க நெறியைப் பின்பற்றி ஆன்ம உண்மையை நிறுவுதல் கூடும். அதுவே நாம் கைக்கொள்ளவேண்டும் நெறியாகும். இங்ஙனமே பல அம்சங்களிலும் மேல்நாட்டு நெறிகளைப் பின்பற்றுதல் நன்மை பயப்பதாகும்.

நான் இந்நெறியை வற்புறுத்திக் கூறுவதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. ஆசாரியனிடமிருந்து உபதேசம் பெற்று ஆன்ம ஞானத்தை அடைந்து வந்த காலம் முடிந்துவிட்டது. நமது இளைஞர்கள் தாங்களே விஷயங்களைச் சிந்தித்து அறிந்துகொள்ள வேண்டும் என்ற அவாக்கொண்டவர்களாய் இருக்கிறார்கள். 'வேதத்தில் சொல்லியிருக்கிறது; உபநிடதத்தில் சொல்லியிருக்கிறது; அதனால் உண்மைதான்' என்று கூறி நம் இளைஞர்கள் மனத்தில் நம்பிக்கையை உண்டுபண்ணமுடியாது. ஆகலால் காட்சிப் பிரமாணம், அனுமானப்பிரமாணம் உரைப்பிரமாணம் என்ற மூன்றனுள், மூன்றாவதனை நீக்கி, முதலிரண்டு பிரமாணங்களின் மூலமாகவே பொருள் நிச்சயம் செய்தல்வேண்டும். அவ்வாறு செய்யாமற் போனால், நமது இளைஞருட் பெரும்பாலார் சித்தாந்தக் கொள்கைகளில் அவநம்பிக்கையுற்று, நாஸ்திகர்களாய்ப் போய்விடுவார்கள். அந்நிலைமையைத் தடுக்க வேண்டுவது நம்மனோரது கடமையாகும். மேற்சுட்டிய வழியொன்றினால் மட்டுமே இது இயல்வதாகும். மேல்நாடுகளில்



ஆதிகாலந்தொட்டு நிகழ்ந்துவந்திருக்கிற தத்துவ விசாரணையின் சரித்திரம் இங்கே நமக்குப் பெரிதும் பயன்படும். Will Durant என்ற அமெரிக்க ஆசிரியர் எழுதிய The Story of Philosophy என்ற அழகிய நூலைச் தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பித்து, அதனை நம் இளைஞர்கள் கையில் சேர்ப்போமானால், அது மிகவும் பயன்படுவதாகும். ஆங்கிலத்தில் தத்துவ சாஸ்திர சரித்திரங் குறித்து எத்தனையோ நூல்கள் உள்ளன. தமிழில் ஒரு நூல்கூட இல்லாமை வருந்தத்தக்கது. இவ்வகை நூல்கள் இல்லாமையால்தான் சித்தாந்த உணர்ச்சி பரவுவதற்கு இடமில்லாமலிருக்கிறது. ஸமாஜத்தின் காரியதரிசியாகிய திரு கே. இராமநாதன் செட்டியாரவர்கள் இவ்வழியிற் சிறிது உழைத்துவருவது பாராட்டிக்கூறத்தக்கது.

மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திரங்களுக்குரியவாய்க் கூறப்படும் துறைகள் ஐந்து. அவை தருக்கம், சௌந்தர்யநூல், ஒழுக்கநூல், ஸமுதாய நூல் அல்லது அரசியல்நூல், அபௌதிக நூல் என்பன. இவற்றுள் தருக்கம் கருது முறையிலும் ஆராய்ச்சியிலும் தலைசிறந்த உத்தமமான நெறியைப் பற்றிக் கூறும் நூலாம். புறநோக்கு, அகநோக்கு, பொதுவினின்று ஊகம், சிறப்பினின்று ஊகம், கற்பிதக்கோள், பரிசோதனை, பகுப்பு நெறிமை, தொகுப்புநெறிமை என்பனபோன்ற விஷயங்களைத் தருக்கம் நெறிப்படுத்த முயல்கின்றது. சௌந்தர்யநூல் உத்தம வுருவம் அல்லது அழகு பற்றி யுணர்த்துவதாம்; இதுவே நுண்கலைகளின் தத்துவங்களைத் தெரிவிப்பது. ஒழுக்கநூல் உத்தம வொழுக்கம் பற்றியது. நன்மை தீமை முதலியவற்றை விளக்குவது. ஸமுதாய நூல் உத்தமமான ஸமூக அமைப்புப் பற்றியது; அரசியல் நூலும் இதன் கண் அடங்கும். இவை நான்கும் உத்தம லட்சியங்களை உலகத்தில் அமைந்திருக்கின்ற நிலைகளோடு பொருத்தியுணர முயல்வனவாம். அபௌதிகநூல் (Metal physics) இங்ஙனமன்று-

இந்நூல் பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட முடிவான பொருள்களை அறியமுயல்வது. அசித்து சித்து, இவற்றின் இயல்பு முதலியனவும், இவையிரண்டிற்குமுரிய தொடர்பும், பிறவும் இவ்வகை நூலுக்குரிய விஷயங்கள். ஆங்கிலத்திலுள்ள அசித்துண்மை நூல் (Ontology), உளநூல் (Psychology), காட்சியறிவுநூல் (Epistemology) முதலியன இதனுள் அடங்கும். நமது சித்தாந்தக் கருத்துக்களையும் இயன்றவரை இங்ஙனம் பகுத்து, மேனாட்டுத் தத்துவ விசாரணைநெறியைப் பின்பற்றி விளக்குதல்வேண்டும்.

இறுதியாக நாம் செய்யவேண்டும் ஒரு பணியைக் குறித்துச் சில கூறி, எனது தலைமையுரையை முடிக்கிறேன். தத்துவ விசாரணையின் முடிந்த நோக்கம் முத்தியேயென்று நமது நூல்கள் பறைசாற்றும். இரண்டறக் கலத்தல் முதலிய முத்தியின் இயல்பைக் குறித்துச் சிற்றறிவினராகிய நாம் போர்புரியவேண்டும் அவசியமில்லை ; பயனற்ற வேலையுமாகும். இதுபற்றிச் சொல்லவேண்டுவனவற்றை யெல்லாம், நமது முன்னோர்கள் சொல்லிமுடித்துவிட்டார்கள். இவ்விசாரணையால் இகவாழ்வில் நாமெய்தும் பயன் பற்றியே சில சொல்ல விரும்புகிறேன். சிறந்த நல்லொழுக்கமே, உத்தம வொழுக்கமே, நான் இங்குக் கருதிய இகப்பயன். தத்துவ சாஸ்திரத்தின் ஒரு கூறாக ஒழுக்க நூலினை மேனாட்டறிஞர்கள் கொண்டுள்ளார்கள். இதனை மேலே குறித்துள்ளேன். வள்ளுவர்,

ஒழுக்கம் விழுப்பந் தரலால், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

என்றனர். சைவநூல்களுள் திருமூலர் திருமந்திர மாலையில் தான் ஒழுக்கம் ஒருவாறு வற்புறுத்தப்படுகிறது.

அறம் அறியார் அண்ணல் பாதம்நினையுந்
திறம் அறியார் ; சிவலோக நகர்க்குப்



புறம் அறியார் பலர் பொய்ம்மொழி கேட்டு
மறம் அறிவார் பகை மன்னி நின்றாரே

என்ற திருமந்திரத்தால் இதனை யுணரலாம். ஒழுக்கம் என்ப
தனால் சைவ ஆசாரங்களைக் குறிக்கவில்லை. இவ்வகை ஆசாரங்
கள் சைவசமய நெறி முதலிய நூல்களிற் காணப்படும்.
ஆசாரங்கள் காலத்திற்கும் இடத்திற்கும் தக்கபடி மாறுவன
வாகும். உதாரணமாக,

முந்து திதியாறு மும்மூன்றும் ஐம்மூன்றும்
தந்தசுத்தி செய்யாமை சால்பு

எனச் சைவ சமயநெறி கூறுகிறது. ஷஷ்டி, நவமி, அமாவாசை,
பௌர்ணமிகளில் இல்லறத்திருப்பவன் தந்தசுத்தி செய்யக்
கூடாது என்று சொல்லியிருக்கிறது. இவ் ஆசாரத்தை நம்மவர்
கள் தற்காலத்தில் அனுஷ்டிப்பார்களா ? இவையெல்லாம் மாறி
விடும்; இவற்றைக் காட்டினும் மிக அடிப்படையாயுள்ள
கொல்லாமை முதலிய அனைவர்க்கும் ஒப்ப முடிந்த ஒழுக்கங்
களையே நான் குறிப்பது. சைவ நன்மக்கள் பன்னூறாண்டு
களாகச் சிறந்த ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகியமை
யினாலே, 'சைவம்' என்ற சொல்லிற்கே 'புலாலுண்ணாமை
என்ற பொருள் ஏற்பட்டுவிட்டது. நாமும் நம் சந்ததியாரும்
இந்நிலையினின்றுந் தவறுதல்கூடாது.

இவ்வளவில் நின்றாலும் போதாது. கொல்லாமை முதலி
யன எதிர்மறை (Negative) ஒழுக்கங்களாம். உடன்பாட்டு
(Positive)ஒழுக்கமும் இன்றியமையாது வேண்டப்படுவதாம்.
இவ்விரண்டாவது வகை ஒழுக்கத்திற்கு உதாரணங்களாக
இனியவைகூறல், அடக்கமுடைமை, நடுவு நிலைமை, பொறை
யுடைமை, ஒப்புரவறிதல், வாய்மை முதலியவற்றைக் கூறலாம்.

இவற்றிற்கெல்லாம் அடிநிலமாயிருப்பது அன்புடைமையாகும் அன்பின் பல உருவ வேறுபாடுகளே மேற்கூறியனவெல்லாம். அன்பு இல்லையாயின் வேறு எவ்வகை ஒழுக்கத்தாலும் பயன் இல்லை. 'அன்பின் வழியது உயிர் நிலை' என்றனர் வள்ளுவர். நமது இல்வாழ்வே அன்புப் பயிற்சியை முற்றப்பெறுதற்குரிய ஒரு பள்ளிச்சாலை யென்றனர் நமது நாட்டுத் தத்துவப் பேரறி ஞர்களுள் ஒருவராகிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை :

தனக்கென வாழுந் தனி மிருகத்தின்
மனக்கோண் நிமிர்த்து மற்றையர் இன்பமும்
துன்பமுந் தனதா அன்பு பாராட்ட
மெள்ள மெள்ளத் தன் உள்ளம் விரித்துப்
பொறையுஞ் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிது தன் சித்தந் தெளித்துத்
தானெனும் நினைப்பும் தனக்கெனும் இச்சையும்
தூய்வுறச் செய்து, மற்றொன்றாய் நின்ற
எங்கும் நிறைந்த பேரின்ப வெள்ளம்
மூங்கி அதனுள் மூழ்கிட யாரையும்
பக்குவஞ் செய்யும் நற் பள்ளிச்சாலை, இவ்
இல்லறம்

என்பது அவருடைய அருமை வாக்கு. சைவ சமயத்தின் தனிமுடி மணியாய் விளங்குவது இவ் அன்பு. அன்புமயந்தான் சிவம் என்றனர் திருமூலர்.

அன்பு சிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவ மாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவ மாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே

என்பது திருமந்திரம். அன்பு மந்திரம்தான் நம் அனைவரையும் பிணித்து ஒன்றுபடச் செய்யவல்லது. இதன்முன் சாதி



சமயம், கோத்திரம், குலம் முதலிய நோய்கள் அனைத்தும் நீங்கிவிடும். அப்பர் சுவாமிகள்

சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங்கொண் டென்செய்வீர்

என்று அருளிச்செய்தனர். இவைகளெல்லாம் நாளடைவில் ஒழியவேண்டுவன. தீண்டாமையை ஒழித்தல்வேண்டும். அது சைவக் கொள்கைக்கு முரண்பட்டது. திருநாளைப் போவார் சரிதம் இதற்குச் சான்று. அன்பு என்னும் சமய கொள்கையினைப் பாரத நாடு முழுமையும் பின்பற்ற வேண்டும் நாள் வந்துவிட்டது. சைவ சமயிகளாகிய நாம் அன்பொழுக்கத்தைப் பேணி, பாரதமாதாவின் உத்தம மக்களாக விளங்குவோமாக.

அன்பொழுக்கத்தில், தலைசிறந்தவர்கள் இத்திருச்செங் கோட்டுப் பதியிலேயுள்ள சைவப் பெருமக்கள். விருந்தினராய் வந்திருக்கும் நம் அனைவர்க்கும் அவர்கள் செய்துவரும் உபசாரங்கள் இதனை நன்கு விளக்குகின்றன. அவர்களுக்கு நமது நன்றி யுரியது.

இதுவரை என் சிறுசொற்களை மிக்க அன்புடன் கேட்டு என்னைக் கௌரவப்படுத்திய உங்களனைவர்க்கும் எனது நன்றி.

இன்று நமது தேசம் விடுதலையின் திருவாயில் முற்றத் தே வந்துவிட்டது. அங்கே குளிர்வாடை மிகுதியாய் வீசு கின்றது. நளிர்சுரமும் தேசத்து அடியார்களை வருத்திக் கொண்டிருக்கிறது. நாம் இன்று கூடியிருக்கும் இப்பதியிலே கோயில்கொண்டெழுந்தருளியுள்ள இறைவன் அடியார்களது நளிர்சுரத்தைச் சுமார் ஆயிரத்துமுந்நூறு ஆண்டுகட்கு முன்னர் நீக்கியருளினர். அதுபோலவே விடுதலையுலகின் முற்

றத்தே வாட்டிவருத்தும் நளிர்சுரத்தையும் நீக்கியருளி நமக்கு உய்தியைத் தந்தருள எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்வோமாக !

சைவம் தழைக்க ! சித்தாந்தம் ஓங்குக ! அன்புநெறி வெல்க !

சைவம் தழைக்க, தமிழ்தழைக்க, தண்ணருளின்
மெய்வந்த சீலம் மிகத்தழைக்க—சைவ
உலகிற் குறுபுகழ்ீ தோங்கு சமாஜம்
இலகிடுக என்றும் இனிது.

---

20
...tered No. M. 2330

"SIDDHANTHAM"
Vol. 20—No. 4

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க்கங்காகும்'—திருமந்திரம்

...20 | சர்வசித்து சித்திரை 1947 ஏப்ரல் | இதழ் 4

உள்ளுறை


| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| ஒவிபாட்டு | ... | 97 |
| தசாங்கம் | ... | 102 |
| நடையலங்காரி | ... | 108 |
| என் இந்தக் கஷ்டம்? | ... | 116 |
| சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைமை உரை | ... | 118 |


...ரியர் : இராவ்பகதூர்-C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.
உதவிப் பத்திராசிரியர் : K. சிவராமன், M. A.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.

## பிப்ரவரி மாதக் கூட்டம்

23-ஆம் தேதி தாம்பரம் நேஷனல் பள்ளிக்கூடத்தில் பிப்ரவரி மாதக் கூட்டம் நடந்தது. திருமுறையையும் நடராஜர் படத்தையும் விமானத்தில் அலங்காரம் செய்து திருமுறை பாராயணத்துடன் டாக்டர். பாலவேலாயுதம் அவர்கள் வீட்டிலிருந்து கூட்டத்துக்கு வலம் வலமாகச் சென்றார்கள். திரு. ஆலாலசுந்தரஞ் செட்டியார் M. A. வரவேற்றார். அருள் திரு. சோமசுந்தரத் தம்பிரான் தலைமை வகித்தார்கள். திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் 'திருமுறை [illegible]' என்னும் பொருள்பற்றியும், 'கலைகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் "விநாயகர்" என்னும் பொருள்பற்றியும் பேசினார்கள். சமாஜத்தின் சார்பாகத் திரு. சமாபுரி முதலியார் அவர்கள் நன்றியுரை கூறினார்கள்.

## மயிலாப்பூர் திருவிழாச் சொற்பொழிவுகள்

மயிலை வெள்ளீசுவரர் ஆலயத்தில், 29-3-47 சனிக்கிழமை தொடங்கி 2-4-47 புதன் வரை ஐந்து நாள்களும் சொற்பொழிவுகள் நடந்தன. இராவ்பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் 'விநாயகர் தத்துவம்' என்பது பற்றியும் திரு. பூ. சமாபுரி முதலியார் 'சங்கரன் சலதிலன்' என்னும் பொருள்பற்றியும், திரு. ரா. சண்முக சுந்தரஞ் செட்டியார் 'அம்பிகை' என்னும் தலைப்பிலும், திருப்புகழ் மணி திரு. T. M. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் 'அனுபூதி சாரம்' என்னும் பொருள் பற்றியும், திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் M. A. "அடியார் அருளிய நெறி" என்பது பற்றியும் பேசினார்கள்.

## சித்தாந்தக் கோடை வகுப்பு

இவ்வாண்டு மே மாதம் நடைபெறும் கோடை வகுப்பிற்கு வந்து கலந்துகொள்ள விரும்புவோர் சமாஜக் காரியதரிசி, 73, T. S. V. கோயில் தெரு மயிலாப்பூர் சென்னை என்ற முகவரிக்கு ஏப்ரல் 25 தேதிக்குள் விண்ணபித்துக்கொள்ள வேண்டியது. உண்டி உறையுளுக்காகக் கட்டணம் 12 ரூபாயும் வகுப்பு நுழைவுக்கட்டணம் 2 ரூபாயும் ஆகமொத்தம் ரூபாய் 14 ஐயும் விண்ணப்பத்தோடு சேர்த்து அனுப்புதல் வேண்டும். வகுப்பிற் சேர்வோர் ஒருமுறையேனும் சிவஞானபோதச் சிற்றுரை முதலிய நூல்களைப் படித்திருத்தல் வேண்டும்.

* * * *

வடலூர் இராமலிங்கசுவாமிகள் சமரச சன்மார்க்க சங்கம் இரண்டாவது ஆண்டு விழா, நாளது சித்திரைத் திங்கள் 20, 21, (3, 4-5-47) நாள்களில், உயர்திரு. R. P. சேதுப்பிள்ளை B. A. B. L. சென்னை சர்வகலாசாலை, அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் திரு. A. முத்துசிவன் B. A. (Hons) இலக்குவனார். M. O. L., திரு. இளவழகனார் நாகர்கோயில் [illegible] K. ஆறுமுக நாவலர் முதலியோர் சொற்பொழி

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 20 | சர்வசித்து சித்திரை 1947 ஏப்ரல் | இதழ் 4

THE REGISTRAR OF BOOKS 1 9 APR 1947 MADRAS

## ஒலி பரப்பு

(ஆசிரியர்)

ஒரு பொற் கொல்லன் அரண்மனையில் ஓர் அணியைத் திருடிவிட்டான். ஒரு பாவமும் அறியாத ஓர் உயர் குடி வாணிபன்மீது தருணம் பார்த்து அக் கொல்லன் திருட்டுக் குற்றம் சாட்டி விட்டான். அரசனே தீர ஆராயாது அவ் வணிகனைத் தண்டித்தான். குற்றம் செய்தவன் ஒருவன்; தண்டிக்கப்பட்டவன் வேறொருவன். சிலபேர் ஒரு பரீட்சையில் வினாத் தாளைத் திருடிவிட்டனர். அது அறிந்து அதிகாரிகள் பரீட்சையை நிறுத்திவிட்டார்கள். அதனால் பல்லாயிரக்கணக்கான பேர்கள் பரீட்சைக்கு எழுத முடியாமல் நிறுத்தி விடப்பட்டார்கள். அவர்கள் ஒரு குற்றமும் செய்யாதவர்கள் அவர்களுடைய மனக்கவலை பொருட்செலவு இவைகள் சகிக்க முடியாமல் இருக்கின்றன. இந்தத் தண்டனை அவர்களுக்கு ஏன் வந்தது? அரசனே ஆராயாமல் செய்த தீர்ப்பை அறிந்ததும் பிராணனை விட்டான். கொல்லனும் தண்டனை அடைந்தான். இருவருக்கும் தண்டனை கிடைத்தது. பரீட்சையில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப் படுகிறார்களா? ஒருவர் குற்றம் செய்யப் பல்லாயிரக்கணக்கான பேருக்குத்

கவலையும் கேடும் தந்த அதிகாரிகள் பச்சாதாபப் படுவார்களா?
இதை ஆராயுங்கள். வாணிபன் தண்டனை பெற்றதற்கு அவ
னுடைய முற்கால வினை என்று நூலில் சமாதானம் சொல்லப்
பட்டது. இங்கே பல்லாயிரக் கணக்கான மாணவ மாணவி
கள் துயரப்படுவதற்கு யார் எது காரணம்? நமது சித்தாந்தத்
தில் இதற்கு என்ன விடை எழுதுவீர்கள் ?

* * * *

ஓர் இளவரசன் மற்றோர் இளவரசியைக் கண்டு காத
லித்தான். தான் திருமணம் செய்து கொள்வதாகவும்
முடிவு செய்து கொண்டான். அந்தச் செய்தியை இளவரசி
அறியாள். ஆனால் இளவரசனோ தன்னைப் பொறுத்தமட்டில்
முடிவு ஆகிவிட்டபடியால் பாதி திருமணம் ஆகிவிட்டது
என்று மகிழ்ச்சி அடைந்தான். நமது சமாசம் சென்ற
ஆண்டு விழாவில் ஆக்க வேலைகள் செய்வதாக முடிவு கட்
டிற்று. அப்போது மிக மகிழ்ச்சி அடைந்தோம்; பாதி
கவலை தீர்ந்தது என்று எண்ணினோம். ஆனால் மூன்று மாதம்
ஆகியும் வேலை ஏதாவது நடந்ததோ? இளவரசன் இளவரசி
யைக் கண்டு காதலை வெளிப்படுத்தி அவளுடைய காதலைப்
பெற்றாலன்றோ மறு பாதி வேலை முடிவுபெறும்? சமாசம்
முடிவு செய்த ஆக்க வேலைகளில் பிரசாரம், சமாச நிலையம்,
மாணவர் விடுதி இவைகள் குறிக்கப்பட்ட பணிகள். இவை
களைச் சமாஜம் எப்போது எவ்வாறு அடைகிறது ? அதற்கு
வேண்டிய ஆர்வமும், வினை முடித்தலும் வேண்டாமா ? பாதி
திருமணம் ஆனதாக மகிழ்ச்சி எய்துவதில் என்ன சுவை இருக்
கிறது? அதுவட்டுச் சக்கரை அன்றோ? பிரசாரகரை ஏற்படுத்த
வேண்டும். நிலையத்திற்கு இடம் தேடல்வேண்டும். மாணவர்
விடுதி அமைத்தல் வேண்டும். திருமணம் செய்வித்தால் புண்
ணியம் உண்டு என்பர். இந்த ஆக்க வேலைகளைச் செய்ய



உதவி புரிந்தால் அதைவிட பெரிய புண்ணியம் உண்டு. இந்
தப் புண்ணியத்தைப் பெற்றுக் கொள்ளச் சைவப் பெரு
மக்கள் முன் வருவார்களா? “ சேர வாருங்கள் ” என்றார்
தாயுமானப் பெருந்தகையார்.

* * * *

இள வேனில் வந்துவிட்டது. பங்குனி முதற்கொண்டு
சித்திரை முழுதும் ஆயிரக் கணக்கான மக்கள் வெள்ளி
மலைக்கு (கோவை ஜில்லா) செல்லுவார்கள் ; குடும்பத்தோடு
அடிவாரமாகிய பூண்டியிலே தங்குவார்கள். பிறகு ஆடவர்
கள் மாத்திரம் மலை யேறுவார்கள். இயற்கை அன்னையை
எல்லா எழிலுடனும் இங்கேதான் காணலாம். இடையில்
பல இடங்களில் அருமையான அருவிகள் ஓடும். அச்சுனை
நீரை அருந்திவிட்டு மேலே ஏறி ஆண்டிகளைப் பனி நீரில்
குளித்துவிட்டுச் சுவாமி கிரியில் இயற்கைக் குகைகளில் மஞ்ச
லிங்க ரூபமாய் எழுந்தருளி யிருக்கும் வெள்ளியங்கிரியைத்
தொழுதுவிட்டு ஒன்றிரண்டு நாட்கள் ஆண்டி சுனையில் தங்கி
விட்டுக் கீழே இறங்குவார்கள். அடிவாரம் வந்து சேருகை
யில் “ அரோஹர ” என்ற பேரொலி கணங்கள் தோறும்
எதிர் ஒலி செய்யும். அப்போது அடிவாரத்தில் காத்துக்
கொண்டிருக்கும் மனைவிமார்கள் பழம், தேங்காய், சூடம்,
தீர்த்தம் முதலிய எடுத்துக்கொண்டு செல்வார்கள் ; வெள்ளி
யங்கிரி நாதனைக் கண்டு தொழுது புனித நெஞ்சோடு வரும்
தங்கள் கணவன்மார்கள் அப்பன்மார்கள் முதலிய பெரியோர்
களுக்குப் பாத பூஜை செய்து தீர்த்தத்தை அருந்துவார்கள்.
இந்த வழக்கம் கொங்கு நாட்டில் இன்னும் நடைபெறுகிறது.

வயது வந்த பெண்கள் மலையேறக் கூடாது என்ற வழக்
கம் உண்டு. ஆகவே, அன்னார்கள் அடிவாரத்திலேயே தங்கி
விடுவார்கள். ஈசனைத் தரிசித்த ஆடவர்களைத் தரிசித்தாலே

ஈசனைத் தரிசித்த புண்ணியம் வரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. இது ஒரு முறை.

சென்னையிலேயும் பிற நகரங்களிலேயும் வெள்ளிக்கிழமைகளில் இசுலாமியர்கள் மசூதிகளுக்குத் தொழுகைக்குச் செல்லுவார்கள். தொழுத பிறகு திரும்பி வரும்போது பல இந்து தாய்மார்கள் தங்கள் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளை எடுத்துக் கொண்டு நிற்பார்கள். தொழுதுவிட்டுத் திரும்பும் முசுலிம் பெரியார்கள் இக் குழந்தைகளின் மீது கருணை கொண்டு வலதுகை நீட்டிக் குழந்தைகளின்மீது ஊதுவார்கள். அவ் வெச்சில் காற்றுப் பட்டால் குழந்தைகளின் நோய் நீங்கி விடுமாம். இது மற்றொரு முறையான நம்பிக்கை. சைவ மக்களே ! இவைகளை ஒரு சிறிது ஆலோசித்து சன்மார்க்கத்திற்குத் தக்க வழியைத் தேடுங்கள்.

* * * *

பத்தாவது நூற்றாண்டில் இராஜராஜனும் அவன் மகன் இராஜேந்திரனும் தமிழர் நாகரிகத்தைப் பிற நாடுகளுக்குக் கொண்டு செலுத்தினர். வடக்கே கலிங்கம், மகேந்திரம், கங்கைக்கரை வரையிலும் தமிழர் சமயத்தைக் கொண்டு செலுத்திக் கோயில்களையும் கட்டினர். தமிழ்ச் சாசனங்களைப் பொறித்ததுமன்றிப் புலிக்கொடியையும் பொறித்தனர். கிழக்கே கடல் கடந்து கடாரம், சாவகம் முதலிய தீவுகளுக்கும் சைவத்தைப் பரப்பினர். தெற்கே ஈழத்தையும் கைப்பற்றி ஆண்டனர். இவ்வாறு சைவத்தைப் பரப்பினது பத்தாவது நூற்றாண்டில். பிறகு இவ்விதச் சமயப் பரப்பு நடக்கவில்லை என எண்ணுகிறோம். காரணம் தமிழர்களுடைய தனியரசு மறைந்ததே ஆகும். என்றால் பிற் காலத்திலும் தமிழ்க் குடிகள் வாணிப முறைக்கோ வேறு தொழிலுக்கோ சென்றபோது தங்கள் சமய நிலையங்களைத் ஸ்தாபித்து இருக்கிறார்



கள். மத்திய மாகாணத்தில் நாகபுரியில் 1875ல் அங்கு தொழிலுக்காகச் சென்ற திரு. சுப்பராய முதலியார் நாக நதிக்கரையில் சங்கமேசுவர ஆலயம் ஸ்தாபித்து தமிழ்ச் சாசனம் தீட்டி யிருக்கிறார். இதிலே சிவபெருமான், அம்மை, நந்தி முதலிய மூலவர்களும் உற்சவ விக்கிரகங்களும் இருக்கின்றன. இனிப் பிற நாடுகளிலும் தமிழ் மக்கள் சைவ ஆலயங்களை ஏற்படுத்தியிருக்கலாம். தெரிந்தால் பதிப்பிக்கப்படும். சமயப் பரப்பை நாம் அறிய வேண்டுவது கடமை யல்லவா ?

---

## தருமையாதீனப் பணி 1946.

தருமை ஆதீனத்தார் பல துறைகளில் பணியாற்றி வருகிறார்கள். ஏழைகளுக்கும் ஆதித்திராவிட மக்களுக்கும் பல இடங்களில் அன்னமளிக்கப்பட்டு வருகிறது. திருவருட்பயன், உண்மை விளக்கம், வினா வெண்பா, கொடிக் கவி, உண்மை நெறி விளக்கம் முதலிய நூல்கள் ஆங்கில மொழிபெயர்ப்போடு வெளி வந்துள்ளன. கோயில்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. முதல் திருமுறைக்கு உரை யெழுதப்பட்டு முடிந்தது. குருமூர்த்தங்களுக்கும் கற்கோயில்கள் எடுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தேவஸ்தான நிர்வாகங்கள் முறைப்படி நடைபெறுகின்றன. கீழ்த் திசைப் பல்கலைக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டு அதில் தனித் தமிழ் T. D. வித்வான் தேர்விற்கும் வடமொழி சாகித்ய சிரோமணி தேர்விற்கும் மாணவர்கள் பயிற்றப்படுகிறார்கள். எவ்வளவு மாணவர்கள் இப்பொழுது பயில்கிறார்கள் என்று தெரியவில்லை. பல தலங்களின் தேவாரங்கள் பொருட்குறிப்போடு வெளியிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

# தசாங்கம்*

(வித்வான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை)

தமிழ் மொழியில் சங்க இலக்கியங்களுள், ஐம்பெருங் காப்பியங்கள், இதிகாசங்கள் முதலிய பேரிலக்கியங்கள் தோன்றிக் கற்பார்க்கு இலக்கியச் சுவை யின்பம் அளித்து வருவது போலவே, பிற்காலத்தில் பிரபந்தங்கள் என்று சொல்லப்படும் சிற்றிலக்கியங்கள் தோன்றிக் கற்பார்க்குக் கவி யின்பம் ஊட்டி வருகின்றன. இச்சிற்றிலக்கியங்கள், அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ், மாலை, தசாங்கம் முதலவாகத் தொண்ணூற்றாறு வகைப் படுமென்பர் இலக்கண நூலார். இங்ஙனம் புலவர்கள் புதுவதாகப் புனைவன வெல்லாம் 'விருந்து' எனப் பெயர் பெறும் என்பர் தொல்காப்பியர். "விருந்தே தானும் புதுவது புணர்ந்த யாப்பின் மேற்றே" என்பது விருந்தின் இலக்கணத்தைக் குறிக்கும் தொல்காப்பி யச் சூத்திரம். அஃதாவது புதுக் கருத்துக்களை அமைத்துப் புலவர்களால் பாடப்பெறுஞ் செய்யுள் நூல்கள் 'விருந்து' என்னும் பெயர்பெறும் என்பது. அறுசுவை உண்டி நாவி னுக்கு இன்பமளித்து உடலுக்கு நன்மை தருவதுபோலப் புதுக் கருத்துக்களைத் தழுவிப் புலவர்களால் இயற்றப்படும் செய்யுள் நூல்களாகிய பிரபந்தங்களும் அறிவுக்கு விருந்தாய் இன்பமளித்து உயிர்க்கு உறுதி பயப்பனவாய் இருத்தலால் இவற்றைத் தொல்காப்பியர் 'விருந்து' என்று கூறினர் போலும்!

இப்போது பிரபந்த வகைகளுள் ஒன்றாகிய 'தசாங்கம்' என்னும் நூலின் இயல்பைப் பற்றி ஆராய்வோம். கடவுள

* 13-12-46ல் சென்னை அகில இந்திய வானொலியில் நிகழ்ந்த இப்பேச்சு அந்நிலையத்தார் அநுமதியுடன் வெளியிடப்படுகிறது.



ரையோ மக்களிற் சிறந்தவர்களையோ புகழ்ந்து பாடுங்கால் அவர்களுடைய மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசம், செங்கோல் ஆகிய பத்து உறுப்புக் களையுங் குறித்துச் சிறப்பித்துப் பாடப்பெறும் நூல் தசாங் கம் எனப் பெயர்பெறும். 'தசம்' என்றால் பத்து. 'அங் கம்' என்றால் உறுப்பு. ஆகவே தசாங்கம் என்பதற்குப் பத்து உறுப்புக்களைக் குறித்துப் பாடப்படும் ஒரு சிறு நூல் என்பது பொருள். மேற் கூறிய பத்து உறுப்புக்களுள் சில வற்றை நீக்கி, வேறு சில உறுப்புக்களைச் சேர்த்தும் பாடுவ துண்டு.

இதன் இலக்கணத்தைக் குணவீர பண்டிதரால் வச்ச ணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியலுள் கூறப்பட் டுள்ள

"புல்லு மலையாறு நாடூர் புனைதார்மா
கொல்லுங் களிறு கொடிமுரசம்—வல்லகோ
லென்றிவை நஞ்செழுத்தோ டோலா வகை யுரைப்ப
நின்ற தசாங்கமெண நேர்."

என்னும் வெண்பாவால் அறியலாம். இப் பாடலுள் தசாங் கத்துக்குரிய பத்து உறுப்புக்களும், அதைப் பாடும் முறையுங் கூறப்பட்டுள்ளன. இப் பிரபந்தத்துக்கு ஆகாதென்று விலக் கப்பட்ட நஞ்செழுத்தாகிய 'யா, ரா, லா, யோ, ரோ, லோ' என்னும் உயிர்மெய் எழுத்துக்களும், ய், ர், ல் என்னும் மெய் எழுத்துக்களும், ஆய்த எழுத்தும், உயிரளபெடை ஒற்றள பெடைகளும், மகரக் குறுக்கமும், ஆய்தக் குறுக்கமும் ஆகிய பதினைந்து எழுத்துக்களும் தசாங்கப் பாடல்களின் முன்னும் பின்னும் வாராமற் பாடல்வேண்டும். அமுத எழுத் தாகிய 'க, ச, த, ந, ப, ம, வ' என்னும் மெய் எழுத்துக் கள் ஏழும், 'அ, இ, உ, எ' என்னும் உயிர்க்குற்றெழுத்துக்

கள் நான்கும் ஆகிய பதினொரெழுத்துக்களும் பாடல்களின் முதல் இறுதிகளில் அமையப் பாடல்வேண்டும். இங்ஙனம் எழுத்துப் பொருத்தங்கள் அமையப் பாடப்பெறுந் தசாங்கம் எத்தனை செய்புட்களால் பாடப்படல் வேண்டுமென்பதைக் கீழ்வரும்

"நேருந் தசாங்கத்தை நேரிசை வெண்பாவா
லீரைம்பது தொண்ணூ றீண்டெழுபா—னைம்பான்
றோர்ந்துரைக்கிற் சின்னப் பூவீரைந்தாற் செப்பினல்
மகர்ந்த தசாங்க நிலை."

என்னுஞ் செய்யுளால் அறிக. அஃதாவது தசாங்கங்களையும் நேரிசை வெண்பா நூறாலும், தொண்ணூறாலும், எழுபதாலும், ஐம்பதாலும், முப்பதாலும் பாடப்பெறுவது சின்னப் பூ எனப் பெயர் பெறும். பத்து உறுப்புக்களையும் பத்து வெண்பாக்களால் பாடி முடிப்பது தசாங்கமாகும். இதற்குத் தசாங்கப் பத்து என்றும் பெபருண்டு. இத் தசாங்கத்தைப் பத்து ஆசிரிய விருத்தங்களால் பாடினல் அது தசாங்கத்து அயல் எனப் பெயர் பெறும் என்பது.

இதுவரையும் தசாங்கத்தின் இலக்கணம் என்ன என்பது பற்றிச் சற்று ஆராய்ந்தோம். இனி இவ்விலக்கண அமைதிக் கேற்பப் பண்டு தொட்டுத் தமிழ் நூலாசிரியர்கள் இப் பத்துறுப்புக்களைப்பற்றிப் பாராட்டிக் கூறியுள்ளார்களா என்பதைக் கவனிப்போம்:

சங்க காலம் முதற்கொண்டே தமிழ் நூல்களில் கடவுளர்க்கும், மன்னர் முதலியவர்க்கும் இவ் வுறுப்புக்கள் சிற்சில இடங்களில் கூறப்பட்டுள்ளன. "கண்ணிகார் நறுங் கொன்றை காமர், வண்ணமார்பில் தாருங்கொன்றை, ஊர்தி வால் வெள்ளேற சிறந்த, சீர்கெழு கொடியும் அவ்வேறென்ப" என வரும் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் அடிகளால் சிவபெருமானுக்குரியமாலை, கொன்றை மலர்மாலை என்பதும் வாகனம், வெள்ளேறு என்பதும் கொடி, ரிஷபக் கொடி என்பதும் விளங்கும். பிரமனுக்கு அன்னக் கொடியும், திருமாலுக்குங் கருடக் கொடியும், முருகனுக்குச் சேவற் கொடியும் கூறுவதுமரபு.



மற்றும் தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர்க்குத் தார், கொடி முதலிய உறுப்புக்கள் உண்டு. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கண நூலுள் புறத்திணை இயலில் வரும்

"வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந்தானையர் மலைந்த பூவும்"

என்னுஞ் சூத்திரத்தில் சேரனுக்குப் பனம்பூ மாலையும், சோழனுக்கு ஆத்தி மாலையும், பாண்டியனுக்கு வேப்பம்பூ மாலையும் உரிய அடையாளமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றையே கோவூர் கிழார் என்னும் சங்கப் புலவர் 'இரும்பனை வெண்தோடு' என்று தொடங்கும் புறநானூற்றுச் செய்யுளில் மூவேந்தர்க்குரிய மாலையாகக் கூறியுள்ளார். சேரர் விற்கொடியினையும், சோழர் புலிக் கொடியினையும், பாண்டியர் கயற் கொடியினையும் தத்தமக்குரிய கொடிகளாகக் கொண்டு திகழ்ந்தனர். இம் மூவர்க்கும் முறையே சேர, சோழ, பாண்டிய நாடுகள் உரியனவாகும். இங்ஙனமே ஊர், மலை முதலிய உறுப்புக்களும் ஆங்காங்கே கூறப் பெற்றுள்ளன.

பாண்டவர் தலைவனுகிய தருமனுக்கு முரசு கொடியும், கௌரவர் தலைவனுகிய துரியோதனனுக்கு நஞ்சுமிழும் நாகக் கொடியும், இலங்கை வேந்தனுகிய இராவணனுக்கு வீணைக் கொடியும் உரியனவாகஇருந்தன என்பதைப் பாரதம், இராமா

யணம் ஆகிய இதிகாசங்களால் அறிகிறோம். கொடி, தார் முதலிய உறுப்புக்களை தேவர்களிலும் அரசர்களிலும் வேறு பிரித்து ஒவ்வொருவரையும் இன்னாரெனச் சுட்டி அறிதற்கு ஏதுவா யிருத்தலின், அவரவர் தழுவிக் கொண்ட பொருள் களை உறுப்புக்களாகக் கூறுவது மரபு என்று தெரிகிறது.

சேரன் செங்குட்டவன் வடநாட்டரசரை வென்று இமயமலையில் விற்கொடியை நிலைநாட்டி வந்தானென்றும், ஒரு காலத்தில் கரிகாற் சோழன் புலிக்கொடியை இமயத்திற் பொறித்து வந்தானென்றும், ஒரு சமயம் பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் பனி மலையில் கயற் கொடி யைப் பறக்கவிட்டா னென்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன. இதனால் ஓர் அரசனுடைய ஆட்சி இந்த எல்லைவரை பரவி இருந்த தென்பதற்கு அறிகுறியாக அவர்களுடைய கொடியை அவ்வெல்லையில் நிலைநாட்டிப் பறக்க விட்டனரென் பது தெளிவாகும்.

இக் காலத்திலும் தன்னரசு பெற்று விளங்கும் நன்னாடு களிலெல்லாம் தத்தம் கொள்கைகட்கு ஏற்ற அடையாளங் கள் எழுதப்பட்ட கொடிகளைப் பறக்க விடுவதைக் காண்கின் றோம். ஒரு மன்னனுடைய ஆட்சி நிலவுவதற்குச் சிறந்த அடையாளமாக விளங்குவது அன்னவன் கொடியே யாகும். இக் கொடிகளை அரசாங்க ஆட்சி நிலையங்களிலும், அரசாங் கச் சேனை அணி வகுப்பிலும், கப்பலின் உச்சியிலும், கடற் றுறைமுகத்திலும் இன்றும் பறக்க விட்டிருப்பதைக் காண் கிறோம். இந்த இருபதாம் நூற்றாண்டில் அரச அங்கமாகக் கொடி, குதிரைப் படை, யானைப் படை முதலிய உறுப்புக் கள் சிறந்து விளங்குவது போலவே பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ் வேந்தர் ஆட்சி நிலவிய காலத்தில் கொடி முத லியவற்றைச் சிறந்த உறுப்புக்களாக அரசர்கள் பெற்றுத் திகழ்ந்தனர் என்ற செய்தியைத் தசாங்கம் என்ற பிரபந்தத் தால் அறிந்து நாம் வியக்காமல் இருக்க முடியாது.



கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய அருட் கவி ஞராகிய மாணிக்க வாசக சுவாமிகள் இயற்றி அருளிய திருவாசகத்தில் ' திருத்தசாங்கம் ' என்னும் ஒரு பதிகம் காணப்படுகிறது. அது பத்து வெண்பாப் பாடல்களால் ஆகியது. அதில் முறையே சிவபெருமானுடைய பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, வாகனம், படை, முரசு, மாலை, கொடி என்னும் பத்து உறுப்புக்களும் பத்துப் பாடல்களில் கூறப் பட்டுள்ளன. அவ் வுறுப்புக்கள் எவையெனப் பார்ப்போம் : சிவபெருமானுடைய பெயர் - ஆரூரன், செம் பெருமான், தேவர் பிரான். நாடு - தென்பாண்டி நாடு. ஊர் - உத்தர கோச மங்கை. ஆறு - ஆநந்தம். மலை - முத்திமலை. வாக னம் - வான் புரவி. படை - கழுக்கடை யென்னும் சூலம், முரசு - நாதப் பறை. மாலை - தாளி அறுகு ; கொடி - ஏறு - அதாவது ரிஷபக் கொடி.

இவற்றுள் உதாரணமாகக் கொடியைக் குறிக்கும் பாட லொன்றைக் காண்போம் :-

" சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங்கொடி கூறாய்—சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல் விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாம் கொடி "

இப் பாடலில் மாணிக்க வாசகர் கிளியைப் பார்த்து, ' சோலையில் வாழும் பசிய கிளியே தூயநீர் நிறைந்த திருப் பெருந்துறைக்குத் தலைவனாகிய சிவபெருமானுடைய அழகு விளங்குங் கொடியைப் புகழ்வாயாக ! அது யாதெனில் பகை வர் மிகுதியும் திடுக்கிட்டு அஞ்சும்படி உயர்வாகத் தோன்றி அழகுடன் விளங்கும் குற்றமற்ற காளை எழுதப்பட்ட கொடி' என்று கூறியுள்ளார். அறத்தின் வடிவாகிய ரிஷபமே சிவ பெருமானுக்குக் கொடியாகவும், ஊர்தியாகவும், முத்திரை யாகவும் அமைந்துள்ள தென்பர் ஆன்றோர்.

இதுவரையுங் கூறியதிலிருந்து, கடவுளர், அரசர் முதலியவர்களுடைய மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, கொடி, முரசு, செங்கோல் ஆகிய பத்து அங்கங்களையும் புகழ்ந்து வெண்பாவால் பாடப்படுவது தசாங்கம் என்னும் பிரபந்தமாகு மென்பதும், அது ஒவ்வொருவரையுஞ் சிறப்பாகச் சுட்டியறிவதற்கு, நல்லிசைப் புலவர்களால் வகுக்கப்பட்ட ஒரு பிரபந்த வகை என்பதும், இதனால் முன்னையோர் நாகரிகமும் வாழ்க்கைச் சிறப்பும் அறிந்து இலக்கியச் சுவையினையும் துய்க்கலாம் என்பதும் விளங்கும்.

---

# நடையலங்காரி

தாமரைக்கண்ணி

நங்கையொருத்தி ஒரு நம்பியின் அழகைக் கண்டு ஆசை கொள்வதும், அதுபோன்றே நம்பியொருவன் ஒரு நங்கையின் வனப்பைக் கண்டு தன்வச மிழப்பதும் உலகியற்கை. இதுதான் காதல் தத்துவத்தின் அடிப்படை. நாம் வாழும் இந்நில உலகம் முதலான எத்தனை எத்தனையோ அண்டங்களில் உயிர்வர்க்கங்கள் இடையறாது நிலைத்திருக்கும்படிச் செய்யும் பொருட்டு இயற்கை கையாளும் கருவியும் இதுவேதான்.

அத்தகைய காதல் சுவை முதன்மையாயுள்ள காட்சிகளை வருணிப்பதென்றால் புலவர்களுக்கு ஓர் அலாதி ஊக்கம் பிறந்துவிடும். மீன்குட்டி தண்ணீரில் நீந்துவதுபோலத்தான். அது அவர்களுடைய சொந்தக் காரியமுந்தானே! அவரவர்களுடைய வாழ்க்கையில் நடந்த காதல் நாடகங்களில் உண்டான குறைபாடுகளையெல்லாம் களைந்து, ஒரு பரிபூரணமான காதல் காட்சியைச் சித்திரித்து, தங்கள் தாகத்தையும் ஒருவாறு தீர்த்துக் கொள்வார்கள்.

சாதாரண புலவர்கள் நிலையே இப்படியென்றால், புலவர் பெருமானாகிய கம்பரைப்பற்றிக் கேட்கவேண்டுமா? வெறும் வாயை மெல்லும் அவருக்கு, சுவையான அவல் கிடைத்து



விட்டால் சும்மா விட்டு விடுவாரா? கோதாவரி நதிக்கரையில் இராமபிரானும் சீதையும் தனித்திருக்கும்போது கம்பருக்கு இத்தகைய ஓர் அரிய வாய்ப்பு கிடைத்து விடுகிறது. ஆற்றங்கரையில் நீர்குடிக்கும் ஒரு கட்டத்திலே அன்னப்பறவையொன்று ஒய்யாரமாக நடந்து செல்வதைக் கண்ட இராமர் அதன் நடை தன் காதலியாகிய சீதையின் நடையழகுக்கு ஒவ்வாததைக் கண்டு புன்னகை புரிந்ததையும், உன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் ஆற்றில் நீர்குடிக்க வந்த ஒரு யானை திரும்பிச் செல்வதைக் கண்ட சீதை அதனுடைய நடை தன் காதலனது பெருமித நடைக்கு ஈடாகாததைக்கண்டு எப்போதுமில்லாதபடி ஒரு புதுமாதிரியாக முறுவலித்ததையும் ஒரு பாட்டினால் கம்பர் நமக்குக் காட்டுகிறார். இது ஓர் உயர்தரச் சொல்லோவியம், உயிரோவியம், கம்பசித்திரம் என்றெல்லாம் கம்பராமாயண ரசிகர்கள் சொல்வார்கள். இவை யாவும் உண்மையே.

* * *

ஆனால் ஒரு பெண் மற்றொரு பெண்ணின் அழகை வாயாரப் புகழ்வதென்பது நாம் அவ்வளவாகக் கேட்டிராத ஒரு செய்தியாகும். இது இயற்கை நியதிக்கு விரோதமுமாகும்.

இப்படிப்பட்ட உலகியற்கைக்கு மாறான ஒரு நிகழ்ச்சியைக் கம்பர் தமது காவியத்தில் மற்றோரிடத்தில் நமக்குக் காட்டுகிறார். அதுவும் இச்செயல் கொடிய அரக்கியாகிய சூர்ப்பணகையின்பால் நிகழ்வதாகச் சொல்கிறார். நானும் பார்த்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவரையில், சூர்ப்பணகை சீதையின் சிறப்பைப்பற்றி இராவணனிடம் வானளாவப் புகழ்ந்துரைத்ததைப்போல் வேறு எந்த இலக்கியத்திலும் ஒருத்தி மற்றொருத்தியைப் புகழ்ந்துரைத்ததில்லை. சீதையின் பேரழகாகிய மதுவுண்டு மயங்கிப்போன சூர்ப்பணகை, எவ்வளவோ அடக்கி வைத்தும், அம்மயக்கத்திலே தன்னையும்மீறி அந்த அழகைப்பற்றி வெளியில் கொட்டியிருப்பது ஒரு காரணமாயிருக்கலாம். ஆம், இதுதான் உண்மை. “ஐயோ, இவள் அழகில் ஈடுபட்ட என் கண்கள் பிற பொருள்களைப் பார்க்கமாட்டோ

மென்கின்றனவே ! புறவுறுப்புக்களாகிய கண்கள்தாம் அப்படி
யென்றால், என் கருத்துக்கூட இவள் ரூபசௌந்தரியத்தில்
நிலைத்து நின்றுவிட்டதே. பெண்ணாய்ப் பிறந்த எனக்கே
இந்தப் பாடென்றால், இவளைக்காணும் ஆடவர் என்ன பாடு
படுவார்களோ " என்று சூர்ப்பணகை பிரலாபிக்கிறாள்.

எனினும், சீதையைப் பற்றிய ஆசையை இராவணன்
உள்ளத்தில் எழுப்பி அவன் மனத்தை முறுக்கேறச் செய்த
தற்குச் சூர்ப்பணகைக்கு வேறு காரணங்களும் இருந்தன.
முதலாவதாக, காம வசத்தனாகிய இராவணன் சீதையின் அழ
கில் ஈடுபட்டு அவளை அபகரித்துவந்துவிட்டால், இராமர் சூர்ப்
பணகையை ஆசை நாயகியாக ஏற்றுக்கொள்வதற்குத் தடை
யொன்று மிராது. இரண்டாவதாக, அது முடியாமற்போய்,
இராவணனுடைய தகாத செயலைக் கண்டு இராமர் வெகுண்டு,
இலங்கையின்மேல் படையெடுத்து, இராவணனைக் கொன்று
ரென்றால், காலகேயருடன் நடந்த போரில் இராவணன் தன்
மைத்துனனாகிய சூர்ப்பணகையின் கணவனைக் கொன்றதற்
காக அவன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொண்டபடியாயிற்று. மூன்
றாவதாக, அதுவும் கைகூடாமற்போய், இராவணன் இராம
இலட்சுமணர்களைக் கொன்றுவிட்டானென்றால், தன் மூக்கை
யரிந்து அவமானப்படுத்திய அந்த ' மானிடப்பதர்கள் ' மீது
பழி தீர்த்துக்கொண்டபடியாயிற்று. இப்படியெல்லாம் நினைத்
துத்தான், இராவணனது குலத்தை மூலநாசம் பெற முடிப்
பதற்குக் கங்கணங் கட்டிக்கொண்ட சூர்ப்பணகை சீதையின்
அழகை அப்படியெல்லாம் வருணித்தாள்.

இயல்பாகவே தீயகுணம் படைத்தவர்கள் ஏதோ ஒரு
நற்காரியம் செய்வதுபோல் தோன்றினாலும், அதிலும்
ஏதாகிலும் ஒரு விஷமம் இருக்குமென்று கம்பர் இவ்வாறாக
நமக்கு எச்சரிக்கை செய்கிறார்.

* * *

சுயநலக்காரணம் ஒன்றுமேயில்லாமல், ஒரு பெண்
மற்றொருத்தியின் வனப்பை வாயாரப் புகழ்கிறாளென்றால்,
அப்பெண், மகா உத்தமி என்று நாம் நினைக்கிறோமல்லவா ?



ஆம், அப்படிப்பட்ட ஓர் உத்தமி தமிழ்நாட்டில் சுமார் இரண்
டாயிரம் ஆண்டுகட்குமுன் இருந்தாள். பிறர் அழகைக் கண்டு
தான் திருப்திகொள்ள வேண்டிய அளவுக்கு அவளிடம் அழகு
இல்லாதிருந்ததா ? இல்லவேயில்லை. அவளே ஒரு பேரழகி.
அது மட்டுமா, ஆடலிலும் பாடலிலும் அக்காலத்தில்
அவளுக்கு ஈடும் எடுப்புமாக வேறு யாருமே கிடையாது.
அவள் ஓர் இசைவாணி ; நடனராணி; உயர்தர நாகரிகத்துக்கு
மேல் வரம்பாக நின்றவள்; அவள் கள்ளங்கபடமற்ற வெள்ளை
யுள்ளம் படைத்தவள்; நுண்ணிய கலைப்புலமை நிரம்பியவள்.
அதனாற்றான், உண்மையான அழகும் அலங்காரமும் எங்கெல்
லாம் இருந்தனவோ அங்கெல்லாம் அவள் உள்ளம் பள்ளத்திற்
பாயும் வெள்ளமெனச் சென்றது. அவ்வுத்தமியின் கண்ணை
யும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்த அந்த மற்றொரு பெண்
நடையழகில் பேரெடுத்த ...ள். எனவே, நடனசிங்காரி நடை
யல...காரியிடம் தன் மனத்தைப் பறிகொடுத்ததில் வியப்பில்லை
யல்லவா ?

தமது நாட்டியப்பெண் அந்த மற்றொரு பெண்ணின்
நடையலங்காரத்தை எப்படி வியந்தாள், பாராட்டினாள்,
வாழ்த்தினாள் என்று தெரிந்துகொள்ள உங்களுக்கு ஆவலா
யிருக்கிறதல்லவா ? சரி, அந்த நாட்டியப்பெண் பேசுவதைக்
கேளுங்கள் :

' ஓ, ரூபசௌந்தரீ, இருபக்கத்திலும் வண்டுகள் மிக்
கொலிக்க, அழகிய பூவாடையைப் போர்த்து, கரியகயற்கண்
விழித்து அசைந்து நீ நடக்கும் அழகுதான் என்னே ! நீ வாழ்
வாயாக !'

என்ன காரணத்தினாலோ அந்த ரூபசௌந்தரி இதற்குப்
பதில் சொல்லவேயில்லை. தங்களது புகழைக் கேட்க விரும்
பாத பெரியார்களைப் போன்று அவள் நாணிக் கோணிக்
கொண்டு நடந்த வண்ணமாகவே யிருந்தாள். ஆனால், குறிப்
பிற் குறிப்பறியும் மேதாவியாகிய நமது இசைவாணி, அந்த
மற்றொரு பெண்ணின் நடையலங்காரத்துக்குக் காரணத்தைத்
தெரிந்துகொண்டாள். அவளே அதைச் சொல்லட்டும் :

" அடிபெண்ணே, நீ பாக்கியவதி. உன் கணவன் அறநெறி கோடாத ஒழுக்கமுள்ளவன். நீ தலைநிமிர்ந்து அசைந்தாடி நடப்பதில் என்ன அதிசயம்."

இசைவாணி மேலும் பேசுகிறாள்:

" ஓ, அழகீ, பூக்கள் நிறைந்த சோலையில் மயில்கள் ஆடவும் குயில்கள் விரும்பி இசை பாடவும், அழகிய மலர் மாலைகள் உன் திருமேனியில் புரண்டு அசையவும், நீ நடக்கும் அழகுதான் என்னே ! நீ வாழ்வாயாக !"

இதற்கும் அந்த நடையலங்காரி வழக்கம்போல் மௌனம் சாதித்தாள். ஆனால் நமது நாட்டியப்பெண்ணா சும்மாவிடுபவள் ? அவள் குறிப்பாகத் தெரிந்துகொண்ட காரணத்தைக் கூறுவதைக் கேளுங்கள் :

" தாயே, நீ புண்ணியவதி; உனக்குக் கொண்டவன்பலமுண்டு. உன் கணவன்ஒரு வீரன். அவன் கையில் பளபளப்பான வேல் ஏந்தியிருக்கிறான். அதை அவன் பாய்ச்ச வேண்டியதில்லை. பகைவர்கள் அதைக் கண்டாலே நடுங்குவார்கள். உனக்கு ஒரு தீங்கும் வாரதபடி அவன் காப்பான். நீ ஒய்யாரமாய் நடப்பதற்கு வேறுகாரணமும் வேண்டுமோ?"

* * *

இத்துணைக் கலைப்புலமையும் நாகரிகமும் பெருந்தன்மையும் வாய்ந்த அந்த உத்தமி யாரென்று தெரிந்துகொள்ள நீங்கள் துடிப்பதைப் பார்க்கிறேன். என்னை மன்னியுங்கள். இதோ சொல்லிவிடுகிறேன். உங்கள் பொறுமையை இன்னமும் சோதிக்கமாட்டேன்.

அவள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழ அரசர்களின் துறைமுகத் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவள். நான் முன்பே சொல்லியபடி ஆடல், பாடல், அழகுகளில் இணையற்றவள். காவிரிப்பூம்பட்டினத்து மக்களுக்கு அவள்தான் உயிர். அங்கே ஆண்டுதோறும் நடக்கும் இந்திரவிழா அவள் இருந்தால்தான் சோபிக்கும். இல்லையேல், பொலிவிழந்துபோகும். அவள் அரச குடும்பத்தினரின் பேராதரவைப் பெற்றவள். சேற்றில் செந்தாமரை முளைத்ததுபோல், நாடகக்கணிகையர் குலத்தில் தோன்றியும் கற்புக்கடம் பூண்ட பொற்புடைப் பத்தினியாகத் திகழ்ந்தவள். கோவலனுக்குக் கண்மணிகுரலிசையும் யாழிசையும் ஒன்றாக இழையும்படி, விண்ணவரும் மண்ணவரும் வியப்பெய்தப் பண்ணொன்ற இசைபாடி யாழ்மிழற்றும் சதுரப்பாடுடையவள். சிலப்பதிகாரக் கதைத் தலைவி ஒருவேளை இவளாயிருக்கக்கூடுமோ என்று புலவர் பெருமக்கள் ஐயுறும் அளவுக்கு, அக்காவியத்தில் முதன்மை பெற்றிருப்பவள். உத்தமக் கவிஞர்கள் தாங்களிருக்கும் நிலையிலிருந்துகொண்டே தங்களுடைய எல்லையற்ற கற்பனாசக்தியினால் உலகத்தில் யாரை வேண்டுமானாலும் தத்ரூபமாகப் படமெழுதிக் காட்டக்கூடிய கைத்திறன் வாய்ந்தவர்கள் என்னும் உண்மையை அறியாத சிலர், " இளங்கோவடிகள் உண்மையில் ஒரு சமணத்துறவிதானா ?" என்று சந்தேகிக்கக் கூடிய அளவுக்கு அவரால் வசீகரமாகச் சித்திரிக்கப் பெற்றிருப்பவள்.



அந்த நடனசிங்காரி யார் ?

அவள்தான் சகல கலையவல்லியாகிய மாதவி !

* * *

ஓ, நீங்கள் மூக்கின்மேல் விரல்வைத்து அதிசயிப்பதற்குக் காரணம் தெரிந்துகொண்டேன். ' நடனசிங்காரியாகிய மாதவியே கண்டு வியந்த அந்த நடையலங்காரி யார் ?' என்றுதானே கேட்கிறீர்கள். அவளையும் இதோ காட்டிவிடுகிறேன்.

அந்த நடையலங்காரி எங்களைப்போல் ஒரு மானிடப் பெண் அல்ல; அவள் ஒரு தெய்வப்பெண்; சாகா வரம் பெற்றவள்; எத்தனை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்தும் தனது சீரிளமைத்திறம் மாறாமலே இருக்கிறாள்; ' சோழ வளநாடு சோறுடைத்து ' என்னும் பெருமையை அந்நாட்டுக்கு அளித்தவள்; தான் உல்லாசமாய் நடைபயின்று சென்ற இடங்களிலெல்லாம் சோலைகளையும் தோப்புகளையும் பூந்தோட்டங்களையும் செந்நெல் வயல்களையும் பசும்புல் வெளிகளையும் தோற்றுவித்தவள். ' பார் அவள் பாதம் தீண்ட பாக்கியம் படைத்தது. ' ஆமாம், ஒரு மாயாவி தனது மாத்திரக் கோலினால் ஜாலவித்தைகள் செய்வதுபோல், அவள்

திருவடிபட்ட இடங்களிலெல்லாம் திடீர் திடீரென்று வானளாவும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் கோட்டைகொத்தளங்களும் பெரிய பெரிய நகரங்களும் மேகமண்டலத்தை எட்டும் கோயில்களும் தோன்றின. தன்னைக் கட்டியணைத்துக் காப்பவர்களுக்கு அவள் வற்றாத வளஞ்சுரப்பவள்; தான் அலங்கார நடைபயின்று சென்ற வழியில் எத்தனையோ சாம்ராஜ்யங்களின் தோற்றத்தையும் வாழ்வையும் அழிவையும் கண்டவள்; இனியும் காணப்போகிறவள். தான் ஆடி அசைந்து செல்லும் வழியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தெய்வங்களின் திருவடிகளை வருடிக் கொண்டே செல்பவள்; பன்னெடுங் காலமாகத் தமிழ்நாட்டையும் தமிழ்மக்களையும் தமிழையும் தமிழ்ப்பண்பு, நாகரிகம், கலை, இசைகளையும் காத்து வளர்த்து வருபவள்.

அவள் அழகாக நடந்து போகும்போது தோன்றிய ஒவ்வோர் அசைவையும் நெளிவையும் குழைவையும் தமிழ்மக்கள் எவ்வளவு அருமையாக அறிந்து அனுபவித்துப் பாராட்டினார்களென்பதற்கு ஓர் உதாரணம் தருவேன்: தஞ்சாவூர் ஜில்லாவிலே திருவேரகம் என்னும் சுவாமிமலைக்குச் சமீபத்திலுள்ள ஒருசோலையில் அவள் ஒருநாள் மாலைப்போது அழகு நடை பயின்றபோது, சுற்றிலுமுள்ள வனப்புமிக்க இயற்கைக் காட்சி அவள் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தது. தனது கருங்கயற்கண் விழித்து ஒல்கி, வலப்பக்கமாக ஒய்யாரமாய் ஒரு சுழல் சுழன்று சுற்றி நின்றாள். இந்த சுழற்சியைக் கண்ட அக்காலத்தில் தமிழ்மக்கள் பூரித்துப் பரவசமாய்ப் போய்விட்டார்கள். அவள் வலமாகச் சுழன்ற இடத்துக்கு வலஞ்சுழி என்றே பேர் வைத்துவிட்டார்கள். பிறகு அதைச் சுற்றி ஓர் ஊர் தோன்றியது. வலஞ்சுழியோடு தொடர்பு கொண்டால் தம் புகழ் பரவுமென்று நினைத்த சிவபெருமான் அவசரம் அவசரமாக அந்த ஊரில் ஒரு கோயிலை ஏற்படுத்திக் கொண்டு நிலையாகத் தங்கிவிட்டார். இந்த நினைப்பில் அவர் ஏமாற்றமடையவில்லை. ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் 'திருவலஞ்சுழி வாணனை வாயாரப்பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபட்டு' தேவாரப் பதிகங்களை அருளிச்செய்தனர்.



அந்த நடையலங்காரி யார்?
அவளே அன்னை காவேரி.
அவள்தான்—பொன்னி

* * *

"சிராப்பள்ளி குன்றுடையானைக் கூற என் உள்ளம் குளிருமே" என்று ஞானசம்பந்தர் பாடியிருக்கிறார். சாமானியப் பெண்ணாகிய எனக்கு அத்துணை மனப்பக்குவம் ஏது? ஆகவே, அந்தத் தாயுமான தயாபரமூர்த்தியைக் கண்டு மனங்குளிர நான் அடிக்கடித் திருச்சிராப்பள்ளிக்குப் போவதுண்டு. அண்மையில் அவ்வாறு அங்கு ஒருமுறை சென்றபோது, மாதவியும் கண்டு வியந்த பொன்னியின் நடையலங்காரத்தைக் கண்டு வரலாமென்னும் ஆசையுடன் சென்றிருந்தேன். சுமார் இரண்டு மைல் தூரம் அவளோடு நடந்தேன். கரை நெடுக அமைந்துள்ள கோயில் கோபுரங்களின் தங்கக் கலசங்கள் காவேரியின் தண்ணீரில் பிரதிபிம்பித்து, அவள் பொன்னி என்பதை நிரூபித்தன. பொன்னி ஒரு மந்தகாசப் புன்னகை தோன்ற தனது அலைக்கரங்களால் என்னைத் தொட்டு நிறுத்தி,

நில்லும், எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டுமம்மா!

என்று சொல்லிவிட்டு, மேலும் நடக்கத் தொடங்கினாள்.

"பொன்னித்தாயே, உன் கட்டளைப்படியே நான் நிற்கிறேன். ஆனால், நீ மட்டும் நில்லாமல் உன் நடையழகை என்றென்றைக்கும் காணும் நல்வினையை எங்களுக்குக் கொடு. பண்டு போலவே இன்றும் இனியும் தமிழ்நாட்டையும் தமிழரையும் தமிழ்க்கலைகளையும் காப்பாற்றிக்கொடு. இதுதான் உன்னிடம் நான் வேண்டும் வரம்" என்று சொல்லிவிட்டுச் சென்னைக்குத் திரும்பினேன்.

குறிப்பு:—இக்கட்டுரையில், மாதவியின் வாய்மொழியாக எடுத்தாளப்பட்ட கருத்துக்களைத் தம்மகத்தேகொண்ட சிலப்பதிகார ஆற்று வரிப்பாடல்கள் வருமாறு:—

மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய்வாழி காவேரி

கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின்கணவன்
திருந்துசெங்கோல் வளையாமை அறிந்தோன்வாழி காவேரி.

பூவர்சோலை மயிலாலப் புரிந்துகுயில்கள் இசைபாடக்
காமர்மாலை அருகசைய நடந்தாய்வாழி காவேரி
காமர்மாலை அருகசைய நடந்தவெல்லாம் நின்கணவன்
நாமவேலின் திறங்கண்டே அறிந்தேன்வாழி காவேரி.

---

# ஏன் இந்தக் கஷ்டம்?

கா. ராம.

எங்கள் பெரிய அம்மாளுக்கு என் பேரில் பிரியம். அவள் 'அப்பா, எப்பொழுது பார்த்தாலும் படித்துக்கொண்டேயிருக்கிறாய். கண் கெட்டுப் போகாதா? படித்த புத்தகங்கள் போதாவா?' என்றாள். என்ன பதில்சொல்வது? 'அம்மா, என் தலையில் ஒரு புழு இருக்கிறது; ஆகையால் எவ்வளவு படித்தாலும் போதவில்லை' என்று சொன்னேன்.

அறிவுடைய மாணவன் ஒருவன் கோடை விடுமுறையில் என்னைக் காணவந்தான். சித்தாந்த சாஸ்திரம் படிக்கும்படி தூண்டினேன்; "சைவனாய்ப் பிறந்து கல்வியும் பெற்றவர்கள் சித்தாந்த சாஸ்திரங்களை ஒரு முறையேனும் படிக்க வேண்டாமா? பிற மதத்தார் தங்கள் நூல்களை எப்படிப் போற்றுகின்றனர்?" என்றேன். மாணவன் கூறுகிறான்: "ஒழுக்கத்தோடு நல்லவனாக இருந்தால் போதாதா? பிறருக்குத் தீங்கு விளைக்காதே என்பதுதானே சாஸ்திரங்களின் முடிபு? சாஸ்திரப் படிப்பு சோறு போடாது. படிப்பதால் காலந்தான் வீணாகும். இக் கடவுள் பெரியவர் அக்கடவுள் பெரியவர் என்பதற்குக் காரணங்களைப் படித்தால் சண்டைதானே மிச்சம். புரியாத விஷயங்களில் மூளையைச் சிதறவிடாமல், மனச் சாந்தியோடு இருக்கலாகாதா?'

இக்கேள்வி சம்பந்தமாக வால்டேர் (Voltaire) என்ற பிரான்சு ஆசிரியர் ஒரு கதை சொல்லுகிறார்:

'ஒரு நல்ல பிராமணர் இருந்தார்; அவர் நிரம்பப் படித்தவர். அவர் எப்பொழுதும் 'ஏன் பிறந்து தொலைந்தோம்?' என்று சொல்லுவார். ஒரு நாள் நான் அதனைக் கேட்டு, அவ்வாறு வருந்துவதின் காரணத்தை வினவினேன். அவர் சொன்னார்: "ஐயா, நான் சாஸ்திரங்களை நாற்பது ஆண்டுகளாகப் படித்து ஆராய்ந்தேன். இவ்வளவு காலமும் வீணாயிற்றே என்று என் மனம் பதைக்கிறது. ஐயோ! சென்ற காலம் ஒரு நாளும் திரும்பாதே! என்னுடல் ஜடத்தாலாயது என்று நம்புகிறேன். அச் சடத்திற்குள் அறிவு விளங்கும் விதமும், தோன்றிய விதமும் எனக்கு நன்கு விளங்கவில்லை. அறிவின் தன்மை யென்ன? ஆற்றல் என்ன? சிறிதும் அறியேன். பல பொருள்களைப்பற்றிப் பாக்கப் பேசுவேன். பேசி முடிந்ததும் சந்தேகங்கள் கிளம்புகின்றன. யான் சொன்னதை நினைத்தால் எனக்கே வெட்கமாயிருக்கிறது."

அன்றையதினமே அடுத்தவீட்டுக்கிழவியைச்சந்தித்தேன். அவளுக்குக் கொஞ்சமும் படிப்பில்லை; கேள்வியறிவும் இல்லை. ஆன்மா என்னவென்று அம்மையைக் கேட்டேன். அவள் அந்தக் கேள்வியைப் புரிந்துகொண்டதாகவே தெரியவில்லை. இவ்விஷயங்களைப் பற்றி அவள் வாழ்க்கையில் ஒரு நிமிஷமேனும் சிந்தித்ததில்லை. தினமும் விஷ்ணுவைக் கும்பிட்டுவிட்டு, ஒரு கரண்டி கங்கைத் தீர்த்தம் குடிப்பாள்; இதனால் தான் பெரும்பேறு பெற்றவளாக நினைத்துக் கொள்வாள். அவள் சந்தோஷத்தைப் பார்த்துவிட்டு, பிராமணரிடம் சொன்னேன்: "ஐயரே, கிட்டத்து வீட்டுக் கிழவியைப் பாருங்கள். ஓர் எழுத்தும் படிக்கவில்லையாயினும் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறாள். அவளுக்கு எதுவும் சந்தேகமில்லை; கவலையில்லை. தாங்கள் நாற்பதாண்டு படித்தும் இவ்வளவு அவஸ்தைப் படுகிறீர்கள்."

பிராம்மணர் கூறினார்: "நீங்கள் சொல்வது உண்மையே. அந்த அம்மாவைப்போல் நானும் படியாதிருந்தால், எவ்வளவோ அமைதியுடனிருப்பேன். இவ்வாறு பலமுறை முன்னரும் எண்ணியதுண்டு. ஆயினும் அறியாமையில் கட்டுண்டு கிடக்கும் அமைதியை யான் விரும்பியதேயில்லை."

இப்பதில் என் மனதில் பதிந்தது; தெளிந்தேன்; வீடு திரும்பினேன்.

சைவசித்தாந்த மகா சமாஜம் 41-வது ஆண்டுவிழா
திருச்செங்கோடு

## சைவ மங்கையர் மகாநாட்டுத்

# தலைமையுரை

சகோதர சகோதரிகளே,

சித்தாந்த நூல்களை நன்கு கற்றுணராத யான் சைவ மங்கையர் மகாநாட்டில் தலைமை வகிக்கப் போந்தது நகைப்புக் கிடமாகும். எனினும் தலைமைவகித்தபின் மெள்ள மெள்ளப் படித்துக் கொள்ளலாம் என்ற முன்னைய காரியதரிசி அவர்கள் ஆலோசனையின் பேரில் தலைமை ஏற்க இசைந்தேன். பெரியோர்கள் பொறுத்தருள்வார்களாக.

### தற்காலம்

கோடானு கோடி மக்களை கொல்வித்த யுத்தம் முடிந்தும் உலகில் இன்னும் அமைதி நிலவவில்லை. எங்கும் பிணக்குகளும், பூசல்களும் போட்டிகளும் மலிந்து கிடக்கின்றன. சமாதானத்தை உலகில் நிலைநாட்ட வேண்டுமென்று எல்லா நாடுகளும் கூடிக்கூடி ஆலோசிக்கின்றன; முடிவின்றிப் பேசுகின்றன. ஆனால் ஒவ்வொரு நாடும், தேசமும், சமூகமும் தானே வாழவேண்டும், தன் வியாபாரமே பெருகவேண்டும், தன் புகழே எட்டுத்திக்கும் ஓங்கவேண்டுமென்று அவாவுறுகிறதேயொழிய, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற எண்ணம் கால்கொள்ளவில்லை. மக்கள் உணவிற்கும் உடைக்கும் நாம் எப்பொழுதும் அறிந்திராத வண்ணம் திண்டாடுகிறார்கள். நான்கு முழத்துணிக்குச் சங்கிலித் தொடரில் மணிக்கணக்காக மனிதர்கள் காத்திருத்தல் சரித்திரத்திலேயே காணாத-கேளாத ஓர் அதிசயமல்லவா?

தங்களுடைய கஷ்டம் ஜனநாயகத்தால் தீராதா! பொது உடமையால் குறையாதா!! பிரிந்து வாழ்வதால் நிவர்த்தியாகாதா!!! என்றெல்லாம் ஜனங்கள் தவிக்கிறார்கள்; முயற்சி செய்தும் பார்க்கிறார்கள்.

### இந்தியாவின் நிலை

இந்தியாவின் நிலையோ இன்னும் மோசம். சமயதத்துவங்களிலும், சமய ஆராய்ச்சியிலும், ஞான சாதனங்களிலும் உலகுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்ந்த இந்தியாவின் விடுதலைக்கு முட்டுக்கட்டை போடுவது சமயப்பிணக்கு! சமயத்தின் பேராலே ஓயாத சண்டை!! குலை நடுங்கும்படியான கோரக் கொலைகள்! அட்டூழியங்கள்!! அறியாத குழந்தைகளும் அபலைப் பெண்களும் அடைந்த துன்பத்திற்கு அளவில்லை. எங்கும் அறங்குன்றி மறக்கிளர்ச்சிகளே தலைவிரித்தாடுகின்றன.

மூவேந்தரில் ஒருவனான சேரமன்னன் யானையில் போகிறான். எதிரில் உவர்பொதி சுமந்து வண்ணான் வருகிறான். மழையினால் கரைந்த உவர் அவன் மேனியை வெண்மையாக்கிற்று. அவ்வெண்மையானது அரசனுக்குத் திருநீற்றொளியை ஞாபகப்படுத்திற்று. உடனே அரசன் யானைமீதிருந்து இழிந்து வண்ணானைத் தழுவிக்கொண்டான். வண்ணான் 'இறையே அடியேன் அடிவண்ணான்' என்றான். அரசன் 'அடியேன் அடிச்சேரன்' என்று கூறி மீண்டும் தழுவிக்கொண்டான்.

மறையவர் குலத்தோன்றலாகிய சம்பந்தரும் பாணர் குலச்செல்வராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணரும் உடன்சென்று ஆலயங்கள் தோறும் வழிபட்டுள்ளார்கள். இதுவே நமது சமயத்தின் முன்னைய நிலை. இப்பொழுதோ ஜின்னாசாகிப் இங்கிலாந்திற்குப் போய் "மகமதியருடைய பள்ளி வாசல்களிலே உயர்வு தாழ்வில்லை. நானும் எனது கார் ஓட்டுபவனும் அருகில் நின்று தொழுவோம்; இந்துக்களிடையே அங்ஙனமில்லை" என்கிறார். நாமோ அவருக்கு மறுப்புக் கூறவும் துணியவில்லை; நமது ஆலயங்கள் யாவற்றையும் உடனே யாவருக்கும் திறந்துவிடுவதற்கும் முன்வரவில்லை; அதிலும் மிகவும் தாமதமே காட்டப்படுகிறது.

### புரட்சி

நாடு நலம் பெறுவதற்குத் தலைவர்களெல்லாம் கூடிக்கூடி ஆனமட்டும் முயல்கிறார்கள். சமாதானத்திற்கான அறிகுறி சிறிதும் காணப்படவில்லை. காரணம் யாது? பிணக்குகளுக்கு அடிப்படையான காரணம் கல்லப்படவில்லை. யான் எனது

என்னும் ஆணவம் உலகைச் சீர்குலைத்து வருகிறது. உலகில் சமாதானம் நிலவ வேண்டுமானால் ஒரு பெரும்புரட்சி ஏற்படல் வேண்டும். எத்தகைய புரட்சி? யுத்தப் புரட்சியினால் ஒருக்காலும் சமாதானம் ஏற்படாது. ஒரு யுத்தம் முடிந்தால் அது மற்றொரு யுத்தத்திற்கு அடிகோலும் என்பது வெள்ளிடைமலை. விஞ்ஞான ஆராய்ச்சிகளாலும் அமைதி ஏற்படப் போவதில்லை. அணுகுண்டு வெளிவந்தால் அதற்கும் கொடிய நாசகாரிதான் பின்வருமே ஒழிய சமாதான தேவதை வாராது. ஆகவே, தற்சமயம் நமக்கு இன்றியமையாதது யுத்தப் புரட்சியல்ல; உள்நாட்டுக் கலகமல்ல. அன்புப்புரட்சி அவசியம் எழல் வேண்டும்; அறக்கிளர்ச்சி மேலோங்கல்வேண்டும். அப்பொழுதே அருளாட்சி ஏற்படும்; வேற்றுமையும் பகையும் அக்கிரமமும் மடியும்; ஒற்றுமையும், நீதியும் இன்பமும்பெருகும்.

## சாதிக்க வல்லார் யார் ?

நாட்டில் ஏற்பட்ட அநீதிகளும் அக்கிரமங்களும் நமக்கு ஒரு பெருங்கறையை ஏற்படுத்திவிட்டன. அக்கறையைப் போக்கக் கழுவாய் தேடவேண்டியது இந்தியாவில் பிறந்த ஆண்பெண் ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும். ஒருவரும் விலக்கில்லை. அன்புப் புரட்சிக்கான அஸ்திவாரம் நம் நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னே உலகம் போற்றும் உத்தமரால் ஆரம்பிக்கப்பட்டது. உலகநோக்கெல்லாம் நம்பால் திரும்பியுள்ளது. ஆகையால் நமது தொன்மைச் சிறப்பிற்கும், பெருந்தன்மைக்கும் ஏற்ற வகையிலே அன்புப் புரட்சிசெய்ய யாவரும் முன்வருவோமாக.

தெய்வ பக்தியும், எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற செந்தண்மையும் பூண்ட அறவோர்களே அன்புப் புரட்சியை முன்னின்று நடத்த வல்லார்கள். இதற்கு ஆயுதபலமோ, தேகபலமோ, ஆட்பலமோ தேவையில்லை. ஆத்மபலமே அவசியம்.

சமயப் பூசல்களால் நாட்டில் அநீதி ஏற்பட்டது. இது முதல்தரமன்று. அங்கங்கே இவ்வாறான சச்சரவுகள் ஏற்பட்டபோது அறிஞர்கள் முன்வந்து அன்பினால் அடக்கியுள்ளார்கள். தமிழ்நாட்டிலே அறமார்க்கமாகிய அமண மதத்



தின் போரால் கொலைகள் மறைந்துறைந்தபோது திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இயற்றிய அன்புப்புரட்சி நினைவு கூறத்தக்கது.

## சைவ சித்தாந்தம்

சைவ சித்தாந்தம் ஓர் அகண்ட சமரச ஞானக்கடல். அதில் எல்லாச் சமயங்களும் வந்து கலக்கின்றன. மக்களின் பரிபக்குவத்திற்கும் மனப்பான்மைக்கும் தக்கவாறு அதில் முன்னேறப் பலபடிகள் உண்டு. எந்தச் சமயத்தவரையும் அது வெறுப்பதில்லை. இவ்வாறான அருள் நெறியை எப்பாரும் எப்பதமும் எங்கணும் பரப்பி, சமரசமும் சன்மார்க்கமும் நிலைபெறச் சைவர்களாகிய நாம் உழைத்தல் வேண்டும்.

## பெண்கள் பணி

அன்புப்புரட்சி நிகழவேண்டிய காலத்தில், அருளாட்சி ஓங்கவேண்டிய காலத்தில் பெண்களின் தொண்டு நாட்டிற்கு இன்றியமையாதது. மென்மை, பொறுமை, தாய்மை, சால்பு தன்னலமற்ற பணி முதலியவற்றிற்கு உறைவிடமான பெண்களே இவ்வறத்தொண்டினை எளிதில் சாதிக்க வல்லவர்கள்.

முதலாவதாக நமது வீடுகளில் கவனியுங்கள். இரண்டு குழந்தைகள் சண்டை போட்டுக்கொண்டிருக்கும்போது தாய் வந்தாளேயாயின், ஏதோ நல்லவார்த்தை சொல்லிச் சமாதானப் படுத்துவாள். அதே சந்தர்ப்பத்தில் தகப்பன் தலையிடுவானானால் கேட்கவும் வேண்டுமா ? இருவருக்கும் இரண்டடிவைக்க, பிள்ளைகள் அலற, இவர் அதற்குமேல் கத்த, ஒரே இரைச்சல் ! வீடு அல்லோலப்படும்.

சமீபத்தில் உலக சமாதான மகாநாட்டில் இந்தியருக்கும் ஆப்ரிக்க வெள்ளையருக்கும் ஏற்பட்ட வழக்கில் ஒரு பெண்மணியால் எவ்வளவு இனிமையாக-எளிதாகக் காரியத்தைச் சாதிக்கமுடியும் என்பது வெளிப்பட்டதல்லவா ? அது இந்தியாவிற்கு ஏற்பட்ட வெற்றி என்றுகூறுவதைவிடப் பெண் சக்திக்கு ஏற்பட்ட வெற்றி என்று சொல்வது மிகப் பொருந்தும்.

'மங்கையர்க்குத்தனியரசி எங்கள் தெய்வ'மாகிய பாண்டி மாதேவி காலமறிந்து செய்த அன்புப் புரட்சியினாலும் தெய்வத் தொண்டினாலுமே இந்தத் தமிழ் நாடுற்ற இடர்நீங்கி வெண்ணீற்று ஒளிபரவியது.

தூண்டு தவவிளக்கு அனைய திலகவதி அம்மையார் அனைத்துயிர்களும் உய்ய வேண்டுமென்று அருள்கொண்டு தவம் கிடந்ததாற்றான் அப்பர் சுவாமிகள் சைவத்தின் மெய்ம்மையை உணர்ந்தார். எங்கணும் அருள் நெறியைப் பரப்பினார். அருமைச் சகோதரிகளே ! நாம் இவைகளைப் பற்றிப் பேசிவிட்டுக் கலைவதில் பயனில்லை. மங்கையர்க்கரசியாரும், திலகவதியம்மையாரும் செய்த அருட்பணி செய்ய வேண்டிய மகத்தான பொறுப்பு நமக்கிருக்கிறது. உலகெங்கும் பெண்கள் வீறுகொண்டெழுந்து முன்னேறுகிறார்கள். சைவ மங்கையர்களாகிய நாம் பிற்பட்டு நிற்பது அழகல்ல. நாம் நமது கடமையை உணர்ந்துகொள்ளவில்லை; நமது சக்தியை அறிந்துகொள்ளவில்லை. ஆன்ம சக்திக்கு நிகராக உலகில் எந்தச் சக்தியுமில்லை. நம்மில் அனேகருடைய சக்தி வீட்டிலே மண்டிக்கிடந்து வீணாகிறது. அவைகளை ஒன்றுதிரட்டிச் சமய சேவைக்கும் அன்புப் பணிக்கும் பயன்படுத்துவோமாக.

## மூட வழக்கங்கள்

பெண்களிடையே காலத்திற்கும், சமூகத்திற்கும் பொருந்தாத பல மூடப்பழக்கவழக்கங்கள் சமயத்தின்பேரால் குடிகொண்டுள்ளன. சில சகோதரர்கள் அவைகளையெல்லாம் உதறிவிட வேண்டுமென்று எவ்வளவு வற்புறுத்தியும் பெண்கள் சிறிதும்விட்டுக் கொடுப்பதில்லை. சமயப் பெருமைக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஒவ்வாத வழக்கங்களை நாம் உடனே அகற்றி விடல்வேண்டும்.

இறைவன் அன்புடன் வழிபடுபவர்களுக்கு அருள் செய்யக் காத்திருக்கிறான். சாதாரண காலங்களில் நாம் கடவுளைப்பற்றி அதிகமாக நினைப்பதில்லை. ஆனால் குழந்தைக்குச் சுகமில்லையானால், வீட்டில் ஏதாவது கஷ்டம் நேர்ந்ததென்றால் கடவுளுக்குத் தேங்காய் பழம், பொன் பொருள் எல்லாம்



கொடுப்பதாக வேண்டிக்கொள்கிறோம். இச்செயல்கள் தெய்வ பக்தியில் நமக்குள்ள குறையையே காட்டுகின்றன.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும்—சுடருருவில்
என்பராக் கோலத்து எரியாடும் எம்மனார்க்கு
அன்ப ராதுஎன் நெஞ்சவர்க்கு

என்ற காரைக்காலம்மையாரின் திண்ணிய பக்தி கவனிக்கத் தக்கது.

## மனைமாட்சி

நாம் வணங்கும் கடவுள் பெண்ணின் நல்லாளோடு கூடிய பெருந்தகை. நாம் கூடியிருக்குமிடம் பாதி மாதுடன் பகிர்ந்தவன் உறையும் பழம்பதி. நாம் மேற்கொண்டுள்ளது அன்பும் அறனும் பெருகும் இல்லறமாகிய நல்லறம். பண்டைத்தமிழ்ப் பெண்கள் வீட்டிற்கு அரசிகளாக விளங்கினார்கள்; நல்ல கல்வி அறிவு பெற்றிருந்தார்கள். அவர்கள் மனையறத்திலே தெய்வ நலம் பொலிந்தது; இன்பம் பெருகியது.

தற்காலத்திலே பெண்கள் வீட்டின் அடிமைபோல் கருதப்படுகிறார்கள். மனைமாட்சி குன்றியது. துன்பம் பெருகுகிறது.

சமயத்தின் பெயரால் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பலப்பல. ஒருத்தி பெண்ணாகப் பிறந்த ஒரு காரணத்திற்காக அவளுக்கு இளமையில் தகுந்த கல்வி கற்பிக்கப்படுவதில்லை. பெற்றோருடைய சொத்தில் அவளுக்குப் பங்கு கிடைப்பதில்லை. அவள் விரும்பின நாயகனை மணக்க, சந்தர்ப்பமளிப்பதில்லை. சுருங்கக்கூறின் அவள் அறிவு வளர்ந்து உள்ளம் பண்படுவதற்குச் சந்தர்ப்பம் கிடையாது. இதனாலெல்லாம் நாட்டிற்கு ஏற்பட்ட இன்னல்கள் அநேகம். மீண்டும் ஆணும் பெண்ணும் சரிநிகர் என்ற கொள்கையானது மங்கையோர் பங்கன் மகிழ்ந்து வாழும் இப்பதியிலே சமயத்தின் பெயரால் நிலைநாட்டப்படுவதாக.

சமயத்தைப்பற்றி நமது பெண்களிடையே இன்னும் பல தப்பபிப்பிராயங்கள் நிலவி வருகின்றன. குளித்து மெழுகிட்

பூசைகள் செய்வதும் நாள் கிழமைகளைக் கொண்டாடுவதும் கோவிலுக்குப் போய் வருவதுமே தெய்வவழிபாடு என்று கருதுகிறார்கள். குடும்ப நன்மைக்காகச் செய்யும் ஒவ்வொரு பணியும் தூயதெய்வப்பணி என்று கருதிச் செய்தல்வேண்டும். அப்பொழுது பணிசெய்வதில் ஆர்வமும் ஊக்கமும் ஏற்படுகின்றன. இல்லறத்தில் இன்பமும் சமாதானமும் நிலவுகின்றன.

> அறத்தாற்றில் இல்வாழ்க்கை யாற்றில் புறத்தாற்றில்
> போய்ஒப் பெறுவ தெவன்?

அறநெறியிலே செல்லும் இல்லறமானது துறவறத்தைவிடச் சிறந்ததாகும்.

மனைமாட்சியினால் பெண்கள் எளிதில் மேனிலையடையலாம் என்பதைத் திருத்தொண்டர் புராணத்திலே தெளிவாகக் காணலாம். கணவனுடைய சிவத்தொண்டிற்கு முட்டுவாராமல் காப்பாற்றி இருவருக்கும் நன்மையைத் தேடிக்கொண்ட உத்தமிகள் இளையான்குடிமாற நாயனார் இபற்பகை நாயனார் சிறுத்தொண்ட நாயனார் முதலியோரின் வாழ்க்கைத் துணைவியர்கள் ஆவார்கள்.

கணவன் தீநெறி புகுந்தக்கால் தங்கள் பக்தியினாலும் ஒழுக்கத்தினாலும் உறுதியினாலும் அவனைத் திருத்தி இருவரும் மேனிலையடைய வழிகோலியவர்கள் திருநீலகண்ட நாயனார் மனைவியும் மங்கையர்க்கரசியாரும் போன்ற வீர மங்கையர்கள்.

மாதினியார், இசைஞானியார், பவித்திரையார், திருஞான சம்பந்தர் தாய் போன்ற உத்தமிகள் தவம் கிடந்து "அலகில் கலை துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல்" வரும் அருட்செல்வர்களைப் பெற்று மனைமாட்சியை மங்கலமாக்கி யுள்ளார்கள்.

இப்பொழுதோ பல குடும்பங்களில் பெண்கள் தங்கள் நாயகன் சிவநெறியில் ஒழுகும்போது உடனின்று உற்சாகமாக உதவி செய்வதில்லை. அவன் தவறான நெறியில் புகுந்தால் பக்குவமாகத் திருத்தாது சச்சரவிட்டு இல்வாழ்க்



கையை நரகவாழ்க்கை யாக்குகிறார்கள். அல்லது வாளா விருக்கிறார்கள்.

பெண்கள் இல்லறத்தில் தங்களுக்குள்ள பொறுப்பைச் சரியாக உணர்ந்து கொள்வார்களாக.

## நவ நாகரிகம்

நவநாகரிகமானது பெண்களைப் பெரும்பாலும் மேனிலைக்கு உயர்த்துவதைவிடுத்துக் கீழ்நிலைக்கே புகுத்துகின்றது. காலத்திற்கு ஏற்ற வகையில் உண்ணவும், உடுத்தவும், கல்வி கற்கவுமான நாகரிக வாழ்க்கை யாவருக்கும் அவசியமே. ஆனால்,

> வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
> தாழ்வெனும் தன்மையொடும் சைவமாஞ் சமயம் சாரும்
> ஊழ்பெறல் அரிது.

என்றபடி பெறற்கரிய மானிட வாழ்வில் செந்நெறியாகிய சைவநெறியிலே பிறந்துள்ளோம். வாழ்க்கையில் நாம் செய்யவேண்டிய கடமைகளை, நாம் அடையவேண்டிய இலட்சியத்தை மறப்பிக்கும் நாகரிகம் கேடு விளைவிப்பதாகும்.

நமது இளம்பெண்கள் நகைகளுக்கும், துணிகளுக்கும் செலுத்தும் கவனத்தில் ஒரு சிறிது சமயப்பணிக்கும் தெய்வ வழிபாட்டிற்கும் செலவிட்டால் அவர்களுக்கும் நாட்டிற்கும் எவ்வளவோ நன்மை செய்தவர்கள் ஆவார்கள்.

## குற்றம் யாருடையது?

பெண்கள் சமயப்பணியோ அறத்தொண்டோ செய்ய வெளிவருவதில்லை என்று குறை கூறப்படுகிறது. குற்றம் யாருடையது? அவர்களை நெடுங்காலமாக வீட்டிற்குள்ளேயே அடைத்து வைத்து உலக ஞானமே தெரியாமற் செய்து விட்டவர்கள் ஆடவர்களே என்று சொன்னால் இங்குக் கூடியிருக்கும் சகோதரர்கள் என்மேல் கோபித்துக்கொள்ள மாட்டார்களென்றே கருதுகிறேன்.

பல ஆண்டுகளாகக் கூண்டில் அடைபட்டுக் கிடந்த கிளிக்கு வீட்டைச் சுற்றி வரத்தெரியுமே தவிர, வெளியே

பறக்கத் தெரியாது. அது போலப் பலகால் உள்ளே இருந்த பெண்களுக்கு வெளிவருவது கடினமாகவே தோன்றுகிறது.

இப்பொழுது கூட எந்த சபைகளிலும் முந்தி உட்கார்ந்திருக்கும் பல சகோதரர்களின் வீட்டுப் பெண்மணிகளை நாம் சபைகளில் கண்ணால் கூடப் பார்த்திருக்கமாட்டோம். 'பெண்கள் வரவில்லையா?' என்றால் ஏதாவது சாக்குச் சொல்லி விடுகிறார்கள்.

உண்மையாக, சமய முன்னேற்றத்திலும் சமயப் பணியிலும் ஆர்வமுள்ள சகோதரர்கள் முதலில் தங்கள் வீட்டிலுள்ள பெண்மணிகள் சமய அறிவு பெறவும் சமயப் பணி செய்யவும் துணை செய்தல் வேண்டும்.

## எங்கள் நன்றி

பெண்ணின் பெருமையையும் உரிமையையும் எடுத்துக் காட்டி, உறங்கிக்கிடக்கும் பெண் சக்தியை எழுப்பி அறப் பணியில் புகுத்த அரும்பாடு பட்டுவரும் பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆவார்கள். அவர்களுக்குப் பெண்ணுலகும் சைவ மங்கையர்களும் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். பெண்கள் விடுதலைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும். சொல்லாலும் செயலாலும் தொண்டாற்றும் பெருந்தகையாளர் யாவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கோவில் வருமானம்

நமது கோயில்களில் தினசரி பூசைக்காகவும் சமய வளர்ச்சிக்காகவும் நமது ஆன்றோர்கள் கணக்கற்ற செல்வமும் சொத்துகளும் வைத்துள்ளார்கள். அவைகளிலிருந்து ஏராளமான வருமானம் வருகிறது. இன்னும் சமயப்பற்றுள்ள மக்கள் ஆலயங்களுக்குச் செலுத்தும் காணிக்கைகளும், நன்கொடைகளும் அதிகம். அப்பொருள்கள் காலத்திற்குத் தக்கவாறு சமயப்பிரசாரங்களுக்கும் ஆலயத் திருப்பணிகளுக்கும் சமயவிஷயமான இதர காரியங்களுக்கும் சரிவரச் செலவு செய்யப்படாததால், சர்க்கார், அதை வேறு பொது விஷயங்களுக்குச் செலவிட உளங் கொண்டார்கள்.



இவ்வளவு செல்வமிருந்தும் நமது சமய வளர்ச்சி குன்றி வந்திருக்கிறது. செல்வம் வேறுவழியில் திருப்பப்பட்டு விட்டால் பின்பு சொல்லவே தேவையில்லை.

ஆகவே, சைவமக்கள் கோயில் வருமானத்தை இதர காரியங்களுக்குச் செலவிடுவதை ஒன்றுகூடிக் கண்டிப்பாகத் தடுப்பதுடன், அப்பொருள்களை நல்ல முறையில் சமயவளர்ச்சிக்கும், சமயத்தை ஒட்டிய வாழ்க்கை வளர்ச்சிக்கும் பயன்படுமாறு செய்தல்வேண்டும். முக்கியமாக இந்துமதப் பெண்கள் சமயஞானமும் கல்வி அறிவும் பெறுவதற்கு வேண்டிய சாதனங்களை அமைத்தல்வேண்டும். கஷ்டப்படும் பெண்களுக்கு ஆஸ்ரமங்கள் ஏற்படுத்தி அவர்களுக்குச் சமயப்பயிற்சி அளித்து அவர்கள் மூலமாகச் சமயப்பிரசாரங்கள் செய்தல்வேண்டும்.

## கிராமப் பிரசாரம்

நமது நாட்டில் கிராமங்களே அதிகம். கிராமத்துப் பெண்களுக்குப் போதிய சமய ஞானமும் கல்வி ஞானமுமில்லாததால், அவர்கள் சமயத்தின் உண்மைத் தத்துவங்களை அறிந்து கொள்ளாமல், சமயத்தின் பேரால் அர்த்தமற்ற பலவழக்கங்களை அனுசரித்து வருகிறார்கள். ஆகையினால் பிற மதத்தவர்கள் நமது சமயத்தை இகழ்ந்து கூறவும், நமது சமயத்தவரை தங்கள் மதத்தில் சேர்த்துக் கொள்ளவும் ஏதுவாகிறது.

நாம் சைவப் பெண் தொண்டர் படை ஒன்று திரட்டிக் கிராமங்கள் தோறும் சென்று சமய உண்மைகளைப் பிரசாரம் செய்ய முற்படல்வேண்டும். இது பெண் தன்மைக்கு உகந்த தொண்டாகும். பிறமதத்தில் பலபெண்கள் ஆர்வத்துடன் சமயப்பணி செய்வதைக்காணலாம். நம்முள்ளும் எத்தனையோ பெண்கள் சமயப்பணிசெய்ய ஆர்வத்துடனிருக்கிறார்கள். முன்னின்று நடத்துவதற்குப் பெரியோர்களின் ஆதரவு முதலில் தேவை.

இரண்டாவதாகக் கிராமத்து மக்கள் எவ்வளவு உழைத்தாலும் உண்ண உணவுக்கும் உடுத்த உடைக்கும் போதுவதில்லை

வாழ்க்கை வசதியில்லாதவர்களுக்கு சமயத்தைப் பற்றி அறிய விருப்பமேது? ஆகவே, அவர்கள் வாழ்க்கைத் தரமும் கல்வியும் அபிவிருத்தியடைதல் வேண்டும். இவற்றிற்கெல்லாம் கோயில் வருமானம் பயன்பட்டால் கிராமங்கள் எங்கும் சைவ மணம் கமழும்.

## நமது சமாஜம்

நமது சமாஜம் சென்ற 41 ஆண்டுகளாக அருந்தொண்டுகள் ஆற்றியிருக்கின்றன. சைவ மங்கையர் மகாநாடுகள் கூட்டுவிப்பதும், மகாநாடுகளில் பெண்கள் கலந்து கொள்ளச் சந்தர்ப்பமளிப்பதும், 'சித்தாந்த' பத்திரிகையில் பெண்கள் கட்டுரையை வரவேற்பதும் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்தில் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகின்றன.

இன்னும் நமது சமாஜம் மகத்தான ஆக்கவேலை செய்ய வேண்டியிருக்கிறது. நமது சமயத்தில் புகுந்துள்ள மாசுகள் அகலவும், சைவர்கள் யாவரும் உயர்ந்த சமயஞானம் பெறவும், சமயத்தின் உதவியால் நாட்டவர் யாவரும் அன்புடன் ஒன்றுபட்டு வாழவும் பாடுபடுவோமாக.

## சகோதரிகளுக்கு ஒருவேண்டுகோள்

சகோதரிகளே! கோவலன் ஒருவன் அநியாயமாகக் கொல்லப்பட்டதற்காக மதுரையையே அழித்த கண்ணகியின் வீரத்தமிழ் மரபில் வந்தவர்கள் நாம். நம்முடைய தேசத்தில் எத்தனையோ பேர் அநியாயமாகக் கொலைசெய்யப் படுவதைக் கேட்டும் வாளாயிருப்பது சரியல்ல; நமது வீரத்திற்கு உகந்ததல்ல. அரசாங்கமே இன்னசெய்வதென்று திகைக்கும் போது நாம் யாது செய்வதென்று கருதவேண்டாம். சிறு துளி பெருவெள்ளம். நமது பணி கடுகளவேயாயினும் அது விரைந்து வெளிவருவதாக. சைவத் தாய்மார்களே! சகோதரிகளே! நாம் ஒன்றுபட்டு உயர இறைவன் துணைபுரிவாராக.

"ஆழ்க தீயதெல்லாம் அரன்நாமம் சூழ்க
வையகமும் துயர் தீர்கவே."

...நடைபெற்றவர். வேயர்தன் விழா சிறப்பாக நடைபெற வேண்டிய உதவி ...ன் புரியுமாறு வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள்.

* * * *

'சித்தாந்த' ஆசிரியர் குழு ஒவ்வொரு மாதம் இரண்டாம் தேதி ...றும் பிற்பகல் 4 மணிக்குச் சாது அச்சகத்திலே கூடும். ஆசிரியர் ...ழு உறுப்பினர் அனைவரும் தவறாமல் அதுபொழுது வந்து சேர ...ண்டுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

திரு. Dr. A. விஸ்வலிங்கம், கோலாலம்பூர், சமாஜ ஆயுள் ...றுப்பினராகச் சேர்ந்து, சமாஜத்திற்கு 25 ரூபாய் நன்கொடையும் ...ளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் ...கிறோம்.

* * * *

சமாஜத்தில் புது அங்கத்தினர் சேர்க்க வாக்குறுதி கொடுத்த எண்ணும் 3-4-47 வரையில் சேர்த்த எண்ணும்.

| | | |
|---|---|---|
| ச. சச்சிதானந்தம் பிள்ளை | 100 | 35 |
| C. M. இராமச்சந்திரம் செட்டியார் | 100 | 26 |
| P. R. சுவாமிநாதன் | 5 | 7 |
| G. கல்யாணம் | 5 | 5 |
| W. T. மாசிலாமணி முதலியார் | 100 | 18 |
| S. கனகசபாபதி பிள்ளை | 50 | 50 |
| துடிசைக்கிழார் | 25 | 3 |
| M. சின்னசாமி செட்டியார் | 10 | 15 |
| கா. இராமநாதன் செட்டியார் | 10 | 10 |
| ச. வஜ்ஜிரவேல் முதலியார் | 5 | 2 |
| O. M. இராஜவேலு முதலியார் | 5 | 5 |
| P. M. T. தேனப்ப செட்டியார் | 25 | 10 |
| கு. மதுரை முதலியார் | 10 | 10 |
| இ. சங்கரகுமாரப் பிள்ளை | 10 | 15 |
| கு. காமாக்ஷி அம்மையார் | 5 | 5 |
| R. சேது | 5 | 2 |
| தில்லையப்பன் | 5 | 6 |
| M. R. சுப்ரமண்ய குருக்கள் | 5 | 2 |
| திருச்செங்கோடு வரவேற்புக் கழகத்தார் | 12 | 12 |
| அ. மாணிக்கவாசகம், போத்தனூர் | 5 | 5 |
| S. வையாபுரி பிள்ளை | 10 | 10 |
| இராவ்சாகேப். S. நமசிவாய முதலியார் | 5 | 3 |
| P. ஆலாலசுந்தரம் | | 2 |
| A. A. இரத்தினசபாபதி முதலியார் | 5 | 2 |
| குப்புசாமி, ஆம்பூர் | 3 | 3 |
| ...ஞ்சாதம் பிள்ளை | 5 | 5 |

## நற்சமயம் கிடைக்கக்கூடிய
# சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 0 | 14 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு .... | 1 | 0 |
| திருமந்திரம் ... | 1 | 8 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை அரும்பத உரையுடன் ... | 0 | 10 |
| சீவக சிந்தாமணி .... | 1 | 12 |
| சங்கநூற்புலவரகராதி .... | 0 | 1 |
| முருகன் மூன்நூல் (திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரநுபூதி) .... | 0 | 3 |
| திருமுருகாற்றுப்படை (உரையுடன்) ... | 0 | 2 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

## குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர்கள் (மலர் ஒன்றுக்கு 12 இதழ்கள்) மலர் ஒன்றுக்கு 1 ரூபா வீதம் விற்கப்படும். வேண்டியவர்கள் தபாற் செலவுடன் சமாசச் செயலாளருக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**மலர் 3 (1930), 4 (1931), 5 (1932), 6 (1933), 11 (1938), 13 (1940), 14 (1941), 15 (1942), 16 (1943), 18 (1945).**

செயலாளர்,
9, வைத்தியராமையர் தெரு,
தியாகராயநகர், சென்னை.

Printed at the Sadhu Press, 19, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by Rao Bahadur C.M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta MahaSamajam, at 9, Vaidyaramayyar St., Thyagarayanagar, Madras, P. I. Card No. M. S. 81.

24

stered No. M 2330. "SIDDHANTHAM" Vol. 20—No. 5

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க்கங்காகும்'—திருமந்திரம்

மலர் 20 | சர்வசித்து வைகாசி 1947 மே | இதழ் 5

உள்ளுறை பக்கம்

ஒலிபரப்பு ... 129
ஒரு முறையீடு ... 137
தாயான ஈசன் ... 140
நம் பணி ... 146
காரைக்காலம்மையார் ... 152
சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைமை உரை ... 157

பத்திராசிரியர் : இராவ்பகதூர்-C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.
உதவிப் பத்திராசிரியர் : K. சிவராமன், M. A.
சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2.

## சித்தாந்தக் கோடை வகுப்பு

இவ்வாண்டு கோடைச் சித்தாந்த வகுப்பு ஸ்ரீவில்லிபுத்தூரில் 16-5-47 வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்குத் தொடங்கும். வகுப்பிற்கு வந்து கலந்து கொள்வோர் ஒரு நாள் முன்பே அங்கு வந்து சேரவேண்டியது. முகவரி c/o தாசில்தார் - ஸ்ரீவில்லிபுத்தூர். 24-5-47ல் சேக்கிழார் திருநாளும் கொண்டாடப்படும்.

வரவேற்புக் குழுவின் பெயர் விவரங்கள் :

1. வரவேற்புக் கழகத் தலைவர் :—

இராவ்பகதூர் - திரு. R. V. இராமசுந்தரம் பிள்ளை, இராஜ பாளையம்.

2. உபதலைவர்கள் :

திரு. P. A. C. இராமசாமி இராஜா, இராஜபாளையம்.
திரு. பாலையா பிள்ளை என்ற சிவகாமிநாத பிள்ளை. ஸ்ரீவில்லிபுத்தூர்.

3. கூட்டு அமைச்சர்கள் :

திரு. R. சுந்திரன் பிள்ளை, B.A., B.L.
திரு. சிதம்பரம் பிள்ளை, B,A., B.L.

4. உறுப்பினர்கள் :—

திருவாளர்கள் - R. G. நல்லகுற்றாலம் பிள்ளை, P. V. சுப்பராஜா, கோவிந்தன், B. A., G. முத்துசாமி, கோமதி நாயகம் பிள்ளை, சிவக்கொழுந்து முதலியார், வைத்தியலிங்கம் தேவர், சுப்பிரமணிய ஐயர், B.A., B.L, வெள்ளை செட்டியார், வீரபத்திர பிள்ளை, R. கிருஷ்ணசாமி நாயுடு.

---

## புதிய அங்கத்தினர்க்கு அறிக்கை.

10-4-47க்குப் பின் சமாஜ அங்கத்தினராய்ச் சேர்ந்தவர்களுக்குச் 'சித்தாந்தம்' மேமாத இதழ் அனுப்பப்பட்டிருக்கிறது. முந்திய இதழ்களிற் கைவச மிருப்பனவை பின்னிட்டு அனுப்பப்படும்.

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 20 | சர்வசித்து வைகாசி 1947 மே | இதழ் 5

## ஒலிபரப்பு

(ஆசிரியர்)

திருவிழாக்கள் : பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தி திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா நடந்தது. அதனைக்கண்டு களித்தார் ஒரு பெரியார். 'அவர் மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும் உழவாரத் தனிப் படையும்' தாங்கிய பெருமான். அத்திருவிழாவில் தான் கண்ட அருங்காட்சியை ஞானமுண்ட பிள்ளையாருக்கு விரித்து உரைத்தார். அவ்வுரை அழகிய திருப்பதிகமாக இப்போது விளங்குகிறது. 'அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்' என்று அவ் வண்ணத்தை வெகு உருக்கமாக அவர் வருணிக்கின்றார். அத்திருவிழாவில் பக்தர்களும் முனிவர்களும் சூழ்ந்து போனார்கள். அக்கங்கே முத்துக்கள் தொங்கிய விதானங்களை நாற்றினார்கள். ஆடவரும் மகளிரும் பவனி வரும் கடவுளை வணங்கினார்கள். எல்லா மக்களும் பிறவிப் பிணிதீரும் என்று நம்பித் துதித்தார்கள். எங்கும் கடவுளை வணங்கும் செம்மையே பார்க்கப்பட்டது. இந்த முறையில் அத்திருவாதிரைத் திருநாளைப் போற்றி அப்பெரியார் புகழ்ந்தார். அப்புகழைக் கேட்டமாத்திரத்தில் பிள்ளை

யார் அவ்வாலயத்திற்கு ஏகவேண்டும் என்ற ஆர்வம் கொண்டார்.

சென்ற வாரத்தில் திருமயிலையில் பங்குனி உத்திரத் திருவிழா நடந்தது. ஆறு ஆண்டுகளாக நின்றிருந்த திருவிழா மீண்டும் தொடங்கவே, பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடினார்கள். பெரும் கோஷத்தோடு திருவிழா நடந்தது. அதனைக் கண்ட பலபேர் பலவிதமாய் வருணித்திருக்கிறார்கள். ஒரு செய்தித் தாளில் அது மிகவும் புகழ்ந்துரைக்கப் பெற்றிருக்கிறது. மற்றொரு செய்தித் தாளோ ஒரு சித்திரப்படம் மூலமாக அதனை விவரித்திருக்கிறது. கடவுளர் திருவுலா இரவு 12 மணிவாக்கில் நடைபெற்றது. அப்போதும் கூட்டம் அளவுகடந்து இருந்தது. கொடிகள் தோரணங்கள் படர்ந்தன. அவைகளில் சுருட்டுப் பெயர்களும் பீடிப்படங்களும் இருந்தன. முத்துத் தொங்கல்களுக்கு மாறாக இரப்பர் கூண்டுகள் பறந்தன. அழகிய தின்பண்டங்கள், போலி நகைகள், மலிந்த விளையாட்டுப் பொம்மைகள் எங்கும் நிரம்பிக் கிடந்தன. கூச்சல்களும், பேச்சுகளும் எச்சில்களுமே நிறைந்தன. அக்கூட்டங்களில், வேடிக்கைப் பொம்மைகளையும் விலையுயர்ந்த குழல் இசைகளையும் வந்தமக்கள் ஆவலுடன் பார்த்தார்கள்; கேட்டார்கள். திருமறைஓதும் திருக்கூட்டமும் பொதுமறைஓதும் அருங்கூட்டமும் எங்கு மறைந்தனவோ தெரியவில்லை. இவ்வாறான வரலாறு வெளிவந்தது. ஒரு சமயக்கூட்டம் அடுத்திருந்த கோயிலில் சில சமயச் சொற்பொழிவுகளை நடத்தினதாம். ஆனால் பத்து இருபது மக்களும் வரவில்லையாம். இந்தப் படத்தைப் பார்த்தும் வருணனையைக் கேட்டும் எந்தப்பிள்ளை அத்திருவிழாவைக் கண்டு களிக்க முன்வருவான் ?

* * * * *

2. அப்பர் சுவாமிகள் தில்லையில் நடராசப் பெருமானைத் தரிசிக்கச் சென்றார். செல்லும்போதே துதிசெய்துகொண்டு



தெருவின் வழியாகப் போகின்றார். அப்போது ஏழுநிலை கோபுரத்தைக் கண்டவுடனே உடல் நிலம்பொருந்தப் பணிந்து தொழுகின்றார் ; பிறகு உள்ளே சென்று நடராசப் பெருமானைத் துதிக்கின்றார் ? பிறகு திருக்கோயிலை வலம் வருகின்றார். இது முன்னாளில் அன்பர்கள் கோயிலிலே வழிபடும்படியான முறை. அவ்வாறு உடல் தோயும்படியாகப் பணிய வேண்டியிருப்பின் நிலம் தூய்மையதாக இருந்திருக்க வேண்டும். வலம் வருகையில் அவ்வாறு வலம் வரும் இடம் முழுவதும் கோயிலின் புனித இடமாக இருந்திருத்தல் வேண்டும். புனிதம் சிறிதும் குறையாதபடி சுவாமிகளே புல் பூண்டுகளைச் செதுக்கித் தூய்மை ஆக்குவதற்காக உழவாரத் திருப்பணி செய்து வந்தார். அவ்விதம் செய்ததைக் கண்ட ஆலயப் பணிவிடையாளரும் ஏனையமக்களும் வாளா இருப்பார்களா ? இதனால் திருக்கோயில்கள் தூய்மை பெற்றிருந்தன. அசுத்தம் உண்டாக்கக்கூடிய கடைகள் முதலியன அவ்வெல்லைக்குள் இருந்திருக்க முடியாதல்லவா ?

ஆனால் இப்போது என்ன காண்கிறோம்? திருமயிலைக்குத் தரிசிக்கச் செல்லுகிறவர்கள் வெளிக்கோபுரத்தைக் கண்டு உடல் தோயச் சேவிக்க முடியுமா ? அவ்விதம் செய்தால் நடமாடுகிறவர்களுடைய எச்சில்தான் உடலில்படும் அல்லவா ? ஆலயத்து உள் பிரகாரத்திலும் தூய்மை என்பது எதுகாறும் இருக்கின்றது ? இனி ஆலயத்தை வலம் வரும்போது புனித இடத்தை மட்டும் வலம் வருகிறோமா ? சில ஆண்டுகளுக்கு முந்தி திரு மதிலைச்சுற்றி அழகிய நந்தவனம் வைக்கப்பட்டிருந்தது. ஈசனுக்கு உகந்த பல பூச்செடிகளும் தென்னை, மா முதலிய மரங்களும் அதற்குள் இருந்தன. வலம் வரும்போது இப்புனித நந்தவனத்தைச் சுற்றி வந்தோம். இப்பொழுதோ சில தென்னைகளைத் தவிர பூச்செடிகளெல்லாம் மறைந்தன. தென்னை மரங்களிலும் மாடுகளையும் எருமை

களையும் கட்டிவிடுகிறார்கள். வெளிபோன இடம் தெரியவில்லை. போதாக்குறைக்கு வடமேற்கு மூலையில் நந்தவனத்தின் ஒரு பகுதியில் ஒரு நகைக்கடையைக் கட்டியிருக்கிறார்கள். வலம் வருகிறவர்கள். இக்கடையையும் அதிலுள்ள போலி நகைகளையும், அங்கு ஈடுபடும் லௌகீக மக்களையுமே சுற்றவேண்டியிருக்கிறது. ஆலயத்திற்கு வருவாய் போதாதென்றோ நந்தவனத்தைக் கடையாக்கி வருகின்றார்கள்? ஏற்கனவே உள்ள பொருள்களின் மதிப்பு குறைந்து போயிற்றோ? பவனிவரும் பெருமானும் பெருமானோடு வரும் அடியார்களும் உலகார்த்தமான கடைகளைத்தான் சுற்ற வேண்டிவரும்.

தற்காலத்தில் எந்தக் கோயிலைப் பார்த்தாலும் பொருள் வருவாயை உத்தேசித்து ஆலயத்து முன் மண்டபங்களைக் கடைகளாக்கி வருகிறார்கள். சமய நிலையங்களின் தூய்மை பறந்து போய்விட்டது. அதற்கு மாறாக வர்த்தகமும் வர்த்தகத்தைச் சேர்ந்த பேராசைமுதலிய கேடுகளும் கோயில்களில் புகுந்துவிட்டன. அப்பர் கண்ட காட்சிக்கும் நாம் காணும் காட்சிக்கும் உள்ள பேதத்தை உணர்ந்துகொள்ளலாம்.

* * * * *

3. உலகத்தில் மாறுதல் ஏற்படுவதுண்டு. அவைகளில் அரசியல் மாறுதல், சமய மாறுதல், நில அமைப்பு மாறுதல் முதலியன ஏற்படும். இவைகளினாலே பல சமயநிலையங்கள் அழிவுற்றும் புதைபட்டும் போவதுண்டு. சிந்துநதி நாகரிகம் விளங்கியிருந்த காலத்தில் இருந்த நகரங்கள் மண்ணுள் புதைந்து போயின. சமீபகாலத்தில் அவைகள் தோண்டி எடுக்கப்பட்டன. புதுச்சேரிக்கு அருகே அரிக்குமேடு என்ற இடத்தில் பண்டைய சின்னங்கள் தோண்டப்பட்டன. நடுநாட்டில் கடற்கரைக்கு அருகில் மணல் மேட்டிற்குள் புதைந்திருந்த பாடல்பெற்ற தலமான திருச்சோபுரத்து ஆலயம் தோண்டி வெளிப்படுத்தப்பட்டது. ஆலயங்களேயன்றி



மண்டபங்களும் உற்சவ மூர்த்திகளும் மறைந்துபோயிருந்தவைகள் தோண்டி எடுக்கப்படுகின்றன. இந்த முயற்சியில் முறையாக வேலைசெய்யின் பல சமய சரித்திரப் பொருள்களைக் காணக்கூடும்.

பொல்லாச்சித் தாலுக்காவில் தென் சிற்றாருக்கு அருகில் ஒரு நிலத்தைச் சீர்ப்படுத்தியபோது நில மட்டத்திற்குக் கீழே ஓர் அழகிய சோமாஸ்கந்த மூர்த்தி கிடைத்தது. அம்மூர்த்தி எவ்வாறு அங்கு புதைபட்டதோ அறிய முடியவில்லை. அருகில் ஒரு பெரிய ஆலயம் இருந்திருத்தல்வேண்டும் கலாபகாலத்தில் அவ்வாலயத்து உற்சவமூர்த்திகள் நிலத்திற்குள் புதைபட்டிருத்தல் வேண்டும். தற்செயலாய்க் கிடைத்த இவ்வழகிய மூர்த்தியை ஒரு இடத்தில் வைத்து பூஜைசெய்து வருகிறார்கள். ஆனால் முறைப்படி செய்யவேண்டுமாயின் மற்ற மூர்த்திகளையும் சோதித்துப்பார்த்து எந்த ஆலயத்திற்கு அவை சேர்ந்தனவோ அந்த ஆலயத்திற்கு அனுப்பிவிடுதல் ஒழுங்காகும். அசாக்கிரதையினால் அரசியலார் ஏற்படுத்தியிருக்கும் கண்காட்சிச் சாலைகளுக்கு அவைகளை அனுப்பிவிடுவது ஒழுங்கு அல்ல.

* * * * *

4. பண்டைச் சரித்திரத்தை ஆராய்ச்சி செய்வது ஒரு சிறந்த கலையாகும். அவ்வாராய்ச்சியிலேயும் சமய சரித்திரத்தை அறிவதற்காகச் செய்யும் ஆராய்ச்சி மிகச்சிறந்தது. சுந்தர மூர்த்திகளும் சேரமான் பெருமானும் இறுதிக்காலத்தில் வாழ்ந்திருந்த திருவஞ்சைக்களம் எத்தன்மையில் இருந்தது? சேரமான் பெருமானுடைய அரண்மனை எங்கு இருந்தது? என்ற கேள்விகள் அறிஞர் மனத்தில் உறுத்திக்கொண்டிருக்கின்றன. கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தார் சென்ற பல ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சியிலீடுபட்டனர்; கொச்சி அரசாங்கத்தாரையும் இவ்வாராய்ச்சியிலீடுபடுத்தினர்

அவ்வாராய்ச்சியின் பலனாக அவ்வரசியலாரின் பண்டைக் கலை இலாகா தலைவர் அனுஜன் அச்சன் என்பவர் இந்த ஆண்டில் தாம் செய்த ஆராய்ச்சியின் முடிவுகளைப் பதிப்பித்திருக்கிறார். அந்நூலை எமக்கு அனுப்பியுள்ளார். சேரமான் பறம்பு என்ற இடத்திலும், கொடுங் கோளூருக்கு அருகில் பெரியாறு கடலில் சேரும் அழிமுகம் என்பதிலும் அதற்குச்சுற்றிலுமுள்ள இடங்களிலும் தோண்டி எடுத்த சின்னங்கள் பண்டை பாத்திரங்கள் முதலியவைகளின் படங்களை வெளியிட்டிருக்கிறார். ஏழு பெரிய படங்களும் அவைகளில் பல சிறிய படங்களும் இருக்கின்றன. அவைகளில் ஒன்று பண்டைக் கிணற்றிற் கருகில் இருக்கும் ஒரு சிவலிங்கமும் ஆகும். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளினால் பல அருமையான செய்திகள் கிடைக்கக் கூடும். சேரமான் பெருமானைப் பற்றி வழங்கும் பல கதைகளையும் உண்மைகளையும் அவைகளால் அறியக்கூடும். தற்கால ஆராய்ச்சியின் மூலமாக சேரமான் பெருமாள் முகமதியராகி மெக்கா சென்றாரென்ற கதை மறுக்கப்படுகிறது. பெரிய புராணத்தில் காணும் சரிதம் உண்மையாக இருக்கவேண்டும் என்று பல ஆதாரங்களின் மூலமாகவே உறுதி செய்யப்பட்டு வருகிறது. கொச்சி அரசியலார் தங்கள் ஆளுகைக்குள் இருக்கும் ஆலயங்களின் வரலாறுகளை ஆராய்ந்து எழுதுவதற்கு ஒரு தனி உத்தியோகஸ்தரை நியமித்துள்ளார்கள். அவருக்கு நம்மாலான உதவியும் புரியக் கடமைப்பட்டுள்ளோம். அவர் செய்துவரும் ஆராய்ச்சியினால் சைவ சமய நிலையங்களின் உண்மையான சரிதம் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறோம்.

* * *

5. சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்திய தத்துவக்கலை என்ற ஒரு பகுதியுண்டு. அது ஆராய்ச்சிப் பகுதியோடு சேர்ந்தது. அதற்குச் சென்ற ஆண்டில் ரூ. 18877 செல



வழித்தனர். அடுத்த ஆண்டிற்கு ரூ. 20404 ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் அத்வைதம் முதலிய தத்துவங்கள் மிகுதியாக ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன. சைவ சித்தாந்தம் வைணவ சித்தாந்தம் என்பவைகளுக்குத் தனியான ஆராய்ச்சியாளர்களை நியமிக்க வேண்டுமென்று முந்தி அக்கழகம் தீர்மானித்தது. ஆனால் அத்தீர்மானம் செயல் முறையில் வரவில்லை. தனிகர்கள் உதவி வந்தாலொழிய அது நிறைவேறுவது மிகக் கடினமாம்! இதனை முந்தியே கூறியுள்ளோம்.

ஆனால் இதுவரை ஏதாவது ஆக்கவேலை நடந்திருக்கிறதா என்று கேட்கலாம். சைவ சரிதத்தைப் பற்றி ஒரு சிறிதே ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. சைவ சித்தாந்திற்காகத் தனியாக ஒரு பாடதிட்டம் ஏற்பட்டும் அதன்படி பாடம் நடத்தினதாகத் தெரியவில்லை. ஒரு ஆசிரியர் மாத்திரம் சைவ சித்தாந்தத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து வருவதாக அறிக்கையில் கண்டுள்ளது. அவ்வாராய்ச்சி எப்போது வெளிவருமோ தெரியவில்லை!

* * *

மேலும் பல்கலைக் கழகத்தில் கீழ்நாட்டுக் கலைகளைப் பற்றி ஒரு பகுதியுண்டு. அதற்கு ரூ. 87260 செலவழிக்கப் பட்டது. அதில் நாட்டு மொழிகள், வடமொழி, இஸ்லாமியப் பகுதி முதலியவைகள் அடங்கியுள்ளன. வடமொழிக்கு ரூ. 22000 - ம் இஸ்லாமியப் பகுதிக்கு ரூ. 18667 - ம் செலவழிக்கப்பட்டன. நாட்டு மொழிகளிலே தமிழுக்கு ரூ. 14291 மாத்திரம் செலவழிக்கப்பட் டிருக்கிறது. தமிழுக்கென்று ஏற்பட்டிருக்கும் ஆசிரியர்கள் செய்த வேலையைச் சரியாக வெளிப்படுத்தவில்லை. அதைப் பற்றிக் கேள்வி கேட்டகாலத்தில் அடியிற்கண்ட விடைகள் வெளி வந்தன. சென்ற ஐந்து ஆண்டுகளில் திரிகடுகம், சிறு பஞ்ச

மூலம், தொல்காப்பியம் எழுத்ததிகார ஆராய்ச்சி, ஸ்ரீ புராணம் என்ற நூல்கள் மட்டும் வெளியிடப்பட்டன. சென்ற பத்து ஆண்டுகளில் தமிழ் வெளியீடுகளுக்காகச் செலவழித்தது ரூ. 4638. அதில் ஸ்ரீ புராணத்திற்கு மாத்திரம் ரூ 3758. ஆகவே ஸ்ரீ புராணம் என்ற சமண மணிப்பிரவாள நூல் போகலாக ஏனைய தமிழ் நூல்களுக்கு ரூ. 880 மட்டும் செலவாயிருக்கிறது. இந்தக் கணக்கைப் பார்த்தால் சென்னைப் பல்கலைக் கழகம் தமிழுக்காகப் பாடுபட்டிருக்கிற வேலை போதுமா என்று எவரும் கேட்கக் கூடுமல்லவா?

* * *

7. வழிபாட்டு முறை: விவிலிய நூலில் ஒரு ஆணை விதிக்கப்பட்டிருக்கிறது. 'பன்றிகளின் முன் முத்துக்களை எறியாதே" என்பது அது ஆகும். இதில் பன்றிகள் யார் என்பது தான் ஒரு கேள்வி.

இந்தக் கருத்தை உட்கொண்டுதானே நமது நாட்டில் சமய நிலையங்களைச் சிலவகுப்பார்களுக்கு அருளாதிருந்தார்கள். அருளப்பட்ட சிலவகுப்பார்களில் அச்செந்துக்கள் இல்லையோ என்பது மற்றொரு கேள்வி.

ஆனால் இப்பொழுது எல்லோரும் சமய நிலயங்களுக்குள் செல்லலாம் என்று ஏற்பட்டுவிட்டது. இதுவரை செல்லாத வகுப்பைச் சேர்ந்த நண்பர் ஒருவர் என்னிடம் வந்து அவருடைய கருத்தை வெளியிட்டார். 'இவைகளைத் திறக்கும்படி யார் கேட்டார்கள்? உள்ளே சென்றதினால் எனக்கென்ன பயன்? வயிறு நிரம்புமா?' என்றார். இந்த ஐயத்தை நீக்க வேண்டியது சமயப் பெரியார்களின் கடமை அல்லவா?

புறக் கோயிலைக் காட்டிலும் அகக்கோயில் திறக்க வேண்டியது முக்கியம் அல்லவா? இதனை நன்றாக அறிந்து தருமபுர ஆதீனத்து மகாசந்நிதானம் தற்போது 'ஆலய வழிபாடு' என்ற சிறு நூலை இலவசப் பதிப்பாக வெளியிட உத்திரவிட்



டிருக்கிறார்கள். அச்சிறு நூல் அருமையான கருத்துக்களை ஆண்டிருக்கிறது. கோயிலிலே எவ்வாறு வழிபடவேண்டும்? செய்யக்கூடாதன எவை? செய்ய வேண்டியன எவை? கோயிலை வைத்துக்கொள்ள வேண்டிய முறை எது? முதலியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கோயிலுக்குள் சென்றால் எவ்வாறு வணங்குவது என்பதற்கு சில எடுத்துக்காட்டுப் பாசுரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தத் திருத்தொண்டு மிகவும் அருமையானது. இதனை வேறு சமயநிலைய அதிகாரிகள் கைக்கொள்ளுவார்களாக! சைவ உலகம் இந்தச் செயலுக்கு மகா சந்நிதானத்திற்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது.

---

# ஒரு முறையீடு

(அ. மு. பரமசிவானந்தம், பி. ஓ. எல்.)

பிப்ரவரித் திங்கள் 'சித்தாந்த' இதழில் நான் எழுதிய 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற கட்டுரையை அனைவரும் ஒரு முறை படித்திருக்கலாம். அக்கட்டுரையில் சில பகுதி சிலருக்குக் கருத்து வேறுபாட்டைத் தருகின்றது என்று செயலாளர் மூலமாகவும், திரு. கா. இராமநாதன் செட்டியார் மூலமாகவும் அறிந்தேன். கொள்கைகள் கருத்து மாறுபாட்டுக்கு உட்பட்டனவேயாகும். கருத்துக்களை நன்கு வெளிப்படுத்துவதே அறிஞர் உள்ளத்திறப்பாகும். எனது கட்டுரையால் நான் வழுக்கி வீழ்ந்திருப்பினும் இருப்பேன். அதை எடுத்துக் காட்டல் அமைவுடைத்தே.

மேலே குறிப்பிட்ட கட்டுரையில் அச்சுப்பிழையாக நேர்ந்தது ஒன்றுண்டு. 'காலிசேர் கண்மடாவார் அண்டோடிச் கதவடைக்கும் கள்வனேன்' என்ற அப்பர் தொடருக்கு மங்கை

துறவியாயினும் இல்வாழ்வானாயினும் அக்குறிக்கோள் உடையவன் சைவன். அக்குறிக்கோளைச் செயலில் காட்டுபவன் - உண்மை உழைப்பின் வழிகாட்டியவன் சைவன். அவன் வாழ்க!

என் கட்டுரைபற்றி இன்னும் ஐயப்பாடுகளும் பிறவும் உளவேல் எனக்கு நேராக எழுதின் கூடியவரை ஐயப்பாடுகளை விளக்க முயல்வதோடல்லாது, நான் பிழைபட்டிருப்பினும் திருந்திக்கொள்ளுகிறேன்.

---

# "தாயான ஈசன்"

[திருமதி புஷ்பம் நடராஜன் அவர்கள்]

தாயன்பு போல் தன்னல மற்றதும் புனிதமானதும் உலகில் வேறொன்றில்லை. தாயே அன்பிற்கும் கருணைக்கும் பொறுமைக்கும் சகிப்பிற்கும் எடுத்துக்காட்டு. அன்னையின் பெருமைக்கு அளவில்லை. ஆகவே நாம்பிறந்த நாட்டையும் நாம் பேசும் மொழியையும் தாய்நாடு, தாய்மொழி என்று சிறப்பாகக் கூறிக்கொள்கிறோம். உலகிற்கு முதல்வனாகிய கடவுளையும் தாயாக வழிபடுகிறோம்.

குழந்தை தனக்கு வேண்டிய பொருளைத் தாயிடம் கேட்டு எளிதாகப் பெற்றுக்கொள்கிறது. வியாதியாலோ துன்பத்தாலோ துயருறும்போது நமது வாய் நம்மையறியாமலே அலமருகிறது. பக்தர்கள் இறைவனை அம்மையே! அன்னையே! தாயே! என்று கூவி அழைக்கிறார்கள். தாய் தன் குழந்தைகளின் துன்பத்தைத் துடைக்க விரைந்து ஓடி வருகிறாள். அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கிறாள்.



மாணிக்க வாசகர் திருவாசகத்தில் பல இடங்களில் சிவபெருமானைத் தாயாகவும் [தன்னை நாயாகவும் நினைந்து] பாடுகிறார். முதலில் சிவபுராணத்திலேயே "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்று கூறியுள்ளார். இங்ஙனம் அவர் இறைவனைத் தாயாக் கொள்ளக் காரணம் என்ன என்பதனை ஆராய்வோம்:

தாயானவள் தனது குழந்தைக்கு வேளாவேளைக்குப் பாலூட்டிச் சீராட்டிப் பாராட்டிக் கருத்துடன் வளர்க்கிறாள். குழந்தை நோயுற்றால் தானே மருந்துண்டு பத்தியம் காக்கிறாள். குழந்தைக்கு முதல் ஆசிரியையாக இருந்து குழந்தை பேசவும் மெள்ள மெள்ள உலக விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் கற்பிக்கிறாள். தனது குழந்தை எதிர்காலத்தில் சிறப்புடன் விளங்குவதற்குத் தாயே காரணமாகிறாள்.

ஆனால் தாய்மார்கள் ஒரே தன்மை உடையவர்கள் அல்ல. இந்தியாவில் குழந்தை மரணவிகிதம் அதிகமாகயிருப்பதற்குத் தாய்மார்களே காரணமென்றால் தவறில்லை. பல அன்னைமார்கள் அறியாமையினாலே குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுத்தும், தொந்தரவு செய்யும் போதெல்லாம் உடம்பிற்கு ஒவ்வாத பண்டங்களை வாங்கிக்கொடுத்தும் தங்கள் பிள்ளைகளுக்குத் தாங்களே எமனாகிவிடுகிறார்கள்.

பச்சிளங்குழந்தைகளுக்கு தாய்ப்பாலே சிறந்த ஆகாரம். ஆனால் சில நாகரீகமங்கையர்கள் குழந்தைகளுக்குப் பால் ஊட்டுவது நாகரீகமல்ல என்று தவறுதலாகக் கருதித் தாய்ப்பாலை மறக்கடித்து விடுகிறார்கள். அதனால் பல குழந்தைகள் சவலையாகி வியாதியுற்று நொந்து மடிகின்றன.

ஆனால் உத்தமமான தாயோ உரிய காலத்திலே பால் ஊட்டி, குழந்தை நோயில்லாமல் வளருவதில் கவனம் செலுத்துகிறாள்.

"பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து"

"தாயாய் முலையைத் தருவானே தாராதொழிந்தாற் சவலையாய் நாயேன் கழிந்து போவேனோ"

என்ற அடிகள் இறைவன் உயிர்களாகிய குழந்தைகளுக்குத் தாயிற் சிறந்த தாயாக அருள் பாலிக்கிறான் என்பதையும், அவனுடைய திருவருள் பெறாவிடின் உயிர்கள் சவலையாகக் கழிந்து போகும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

குழந்தைகளுக்கு இயல்பிலே இது அம்மா, அப்பா, தாத்தா என்று அறிந்துகொள்ளும் தன்மை கிடையாது. தாய் ஒவ்வொருவராகக் காட்டித் தெரிவித்தால்தான் தெரிந்து கொள்ளும்.

அதுபோலவே உயிர்களும் இறைவனைத் தாமாக அறிந்து கொள்வதில்லை. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" என்றவாறு அவன் திருவருளாலேயே அவனைத் தெரிந்து வழிபட முடியும். அதனை வாதவூரர்,

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை"

என்கிறார்.

குழந்தைகள் பொம்மைகள் மாதிரி வைத்த இடத்தில் இருப்பதில்லை. நாம் அவர்கள் எதைச் செய்யக்கூடாது என்று நினைப்போமோ அதைக் கட்டாயம் செய்து தீருவார்கள். ஒரு வீட்டில் நுழைந்தவுடன் சாமான்கள் மேலுங் கீழும் கிடப்பதையும் இரைச்சலும் கூச்சலும் உண்டாவதையும் கண்டோமானால் அந்தவீட்டில் நிறையக் குழந்தைகள் இருக்கின்றன என்று சொல்லாமலே தெரிந்துகொள்வோம்.



நாம் ஒரு அழகிய கண்ணாடி சாமான் வைத்திருக்கிறோம். அதை நமது தோழிகள் வரும்போதெல்லாம் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஒரு அம்மையார் தனது அருமைச் சிறுவனுடன் நம்வீட்டிற்கு வருகிறாள். வழக்கம் போல் அவளிடம் அதைக்காட்டுகிறோம். அவள் "என்ன அழகு! எத்தனை ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட பொருள் இந்தக்காலத்தில் கிடைக்காது' என்று மெச்சுகிறாள். நமக்கு ஆனந்தம் பொங்குகிறது. அந்தச் சமயத்தில் அவள் சிறுவன் 'நானும் பார்க்கிறேன்' என ஓடிவந்து இழுக்கிறான். சாமான் படார் என்று கீழே விழுந்து உடைகிறது.

அப்பொழுது நமக்கு அந்தக் குழந்தையை அடித்து நொறுக்கி விடலாமா என்று ஆத்திரமும் கோபமும் ஏற்படும். அந்தச் சிறுபையனின் செயலை உயிருள்ள அளவும் மறக்க மாட்டோம். வருகிறவர்கள் போகிறவர்களிட மெல்லாம் சொல்லிக் காட்டுவோம்.

ஆனால் அதே சாமானை நமது குழந்தை உடைத்து விட்டால் உடனே கோபத்தில் நான்கு அடி அடித்துவிட்டாலும், 'சாமான் போனாலும் போகிறது குழந்தையைக் கன்னம் வீங்க அடித்துவிட்டோமே? என்று பச்சாதாபப் படுவோம். குழந்தையையும் அப்பொழுதே மன்னித்து விடுவோம்.

உயிர்களாகிய நாம் அவனை அறிந்து உய்வதற்காகக் கடவுள் தனு கரண புவன போகங்களைக் கொடுத்திருக்கிறார்; நமது அறியாமையை அகற்றி நாம் சிறந்த வழியில் ஒழுக வேண்டுமென்பதற்காகப் பெரியோர்கள் வாயிலாக உயர்ந்த நெறிகளையும் வகுத்திருக்கிறார். என்றாலும் நமது வாழ்க்கையில் நாம் செய்யும் பிழைகளும், குற்றங்களும் கணக்கற்றவை!

ஆர அமர உட்கார்ந்து நமது ஏடுகளைப் புரட்டினால் எத்தனை தவறுதல்கள் ! எத்தனை வழுக்கல்கள் ! செய்யவேண் டியவைகள் பலப் பல செய்யப்படவில்லை. வேண்டாதவைகள் அநேகம் செய்யப்பட்டுள்ளன. ஒரு நிமிடம் உள்ளம் ஒரு முகப்பட்டு நிற்கவில்லை. மனப் பேயானது புலன்கள் வழியே, காட்டிலும் மேட்டிலும் அலைந்து பற்றத்தகாதவைகளைப் பற் றிக்கொண்டு ஆடும் ஆட்டம் எடுத்துக்கூறும் தன்மையதல்ல. இவைகளையெல்லாம் நினைக்கும் போது இந்தப் பிழைகள் நிவர்த்தியாவதெங்கே? நாம் மேனிலை அடைவதெங்கே என்று நடுக்கமுண்டாகிறது.

ஆயினும் அன்னையினும் தயவுடைய பெரியோன் யாது செய்கிறான் ?

"பேயனதுள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை" என்றவாறு பெருந்தன்மையுடன் நாம் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்துக் கொள்வதுடன், மென்மேலும் நாம் முன்னேறுவதற்கு உள்நின்று ஊக்குகின்றான்.

தாயன்பானது தனது பிள்ளைகளின் சிறு செயலையும் பெருமையாகக் கொள்ளுமாறு செய்கின்றது. தனது பிள் ளையின் வேலையோ, கல்வியோ மிகவும் அற்பமாக இருந்த போதிலும், தாய் 'என்பிள்ளை இந்த வேலையை அற்புதமாகச் செய்கிறான். படிப்பிலே மிகக் கெட்டிக்காரன்' என்றெல்லாம் சொல்லிப் பெருமிதமடைகிறாள்.

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளிலேயே எல்லாம் ஒன்றுபோ இருக்கலாம். தாய் கெட்டிக்காரக் குழந்தையை மெச்சிக் கொண்டு மோழையை அசட்டை செய்வதில்லை. மட்டியாக இருக்கும் பிள்ளையைப் போற்றி மேன்மேலும் உற்சாகமூட்டி அது திருந்துவதற்கு உதவிசெய்வாள். விருப்பதில்லை. சிலர் கெட்டிக்காரராகவும் சிலர் மட்டியாகவும்



இப்பேருலகிலே நாம் கற்றுள்ள கல்வியோ, ஈட்டும் பொருளோ செய்யும் பணியோ மிகச் சிறிது ; மிக மிக அற்ப மானது. அறிஞர்களும் ஆன்றோர்களும் செய்த செயற்கரிய செயல்களோடு நமது பணியை ஒப்பிட்டுப்பார்த்தால், "சீ இவ்வளவுதானா !" என்று கருத்தழிய நேரிடும். "மற்றவர்கள் இதைப்பார்த்துச் சிரிக்கமாட்டார்களா !" என்று கூட எண்ணுவோம்.

அருளன்னையாகக் கூறப்படும் இறைவன் என்ன எண்ணு கிறான் ? நம்பணி எவ்வளவு குறைவாக இருந்தபோதிலும் 'சீ இது அற்பம்' என்று கருதுகின்றானில்லை. நமது சிறு பணிகளையும் இகழாது "சீயேதுமில்லாது என்செய்பணிகள் கொண்டருளும்" கருணையாளனாக விளங்குகிறான்.

சிறு குழந்தையானது கொஞ்சநேரம் பொம்மைகளை வைத்துக் கொண்டு தோழர்களோடு விளையாடுகிறது. ஆனால் தாயைக்கண்டவுடன் அவைகளையெல்லாம் எறிந்து விட்டுத் தாயிடம் ஓடிவந்து விடுகிறது. தாயின் மடியிலே அதுபெறும் ஆனந்தம் வேறொன்றிலும் பெறுவதில்லை.

ஒருவன் சொந்த ஊரைவிட்டு வேறு ஊரிலே மனைவி மக்களுடனே, மிகுந்த செல்வம் ஈட்டி மகிழ்வுடன் வாழ்கிறான். தாய், கிராமத்தில் ஒருசிறுவீட்டில் தனியாகவசிக்கிறாள். அவன் எவ்வளவு சந்தோஷமாக வாழ்ந்தபோதிலும் தாயினிடத்தில் வந்து இளமையின் சூழ்நிலையில் சிலகாலம் வசிப்பதில் ஏற்படும் ஆனந்தம் அலாதிதான்.

அதுபோலவே இறைவனைத் தாயாக வழிபடுவதில் தனி இன்பமும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. உலக செல்வங்களை யெல்லாம்விட தாயாகிய இறைவனுடைய கருணையே உயிர் களுக்கு நிலையான இன்பமும் மன அமைதியும் கொடுக்க வல்லன.

ஆகவே, உருத்தெரியாக் காலத்தே மக்களின் உட்புகுந்து, தன்னைத்தானே அறிவித்து, இயல்பாகவுள்ள அறியாமையினால் உயிர்கள் செய்யும் பிழைகளைப் பொறுத்து, அவர்களின் சிறு பணிகளையும அன்புடன் ஏற்றுக்கொண்டு பேரானந்தம் அளிக்கும் இறைவன் தாயினும் பெரிதும் தயவுடைய தாயா

இருன். ஆகவே "கருணையே வடிவான அன்னையின் திரு
வடியாகிய தாமரையைச் சுற்றிச் சுற்றி ரீங்காரம் செய்து
கொண்டு அருள் தேனை உண்டு மகிழ் என்று மனமாகிய
தும்பியை மாணிக்க வாசகர் வேண்டிக்கொள்கிருர்.

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை
பேயேனதுள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனை
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பி"

மேற்கூறிய கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு நாம்
பாட்டை இரண்டு மூன்று தரம் திரும்பத் திரும்பப் பாடினுல்
மனது தானகவே தாயின் சேவடியில் மதுவுண்டு ரீங்காரம்
செய்யும். நம்மாலான பணியை நாமும் செய்ய வேண்டு
மென்ற ஆவல் எழும்.

---

# நம் பணி

(திருமதி. அ. கு. காமாட்சியம்மையார் எம். ஏ.)

"நம்பணி" —நம்முடைய—பணி நாம் செய்யவேண்
டிய பணி என்று பொருள் பெறும். பணி என்ருல் செய்கை,
தொழில், ஊழியம், தொண்டு, கட்டளை என்பனவற்
றைக் குறிக்கும். பல்வேறுபட்ட இப்பொருள்களாலே நம்
முள் ஒவ்வொருவருக்கும்—ஆணயினும் சரி பெண்ணயினும்
சரி—பல்வகைப்பட்ட பணிகள் இருக்கின்றன என்று புலனு
கும். இவ்வுலகில் இயங்கும் ஒவ்வொரு உயிர்க்கும செய்கை
உண்டு; ஒருதொழிலும் உண்டு. ஊழியம், தொண்டும் செய்ய
வும் வேண்டும். இது இறைவனது கட்டளை.

1. முதற்பணி:—மேற்கூறிய பணிகளை மூவகைப்படுத்த
லாம்: 1. முதற்பணி, 2. சமூகப்பணி, 3. ஆன்மப்பணி. இவற்
றுள் முதற்பணி என்பது யாவர்க்கும் உண்டு; உலகத்தில் உயிர்
படைத்த ஒவ்வொன்றிற்கு முண்டு. செய்தொழில் என்பது
புழு முதல் மிகச் சிறந்த மனிதன் வரை யிருக்கின்றது. கேவ
லம் ஒரு காகத்தைப் பார்த்து மனிதன் நகைக்கலாம். ஆனல்

உலகின் அசுத்தத்தை நீக்கும் அந்த உயர்தொழிலில் அதற்
கும் ஒரு சிறு பங்குண்டு என்பதைச் சாதாரன மனிதன் மறக்
கின்ருன். மக்களுள்ளேயும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு
பணியுண்டு; கடமைகளுண்டு. ஒவ்வொருவனுக்கும் சிறுபிள்ளைப்
பருவத்தில் வேளைக்குவேளை உண்டு உறங்கி வளருவதே முதல்
தொழிலா யமைந்துள்ளது. பிள்ளைப்பருவத்தில் இவற்ருேடு
படிக்குந் தொழிலும் பெரியோர் தம்மைச் செலுத்தும் பாதை
யில் செல்லுதலும் சேருகின்றன. இல்லறத்தை ஏற்கும்போது
இல்லப்பணி, மக்களையும் மனைவியையும் உற்ருர் உறவினரை
யும் பேணுதல் முதலியவை பெரும்பணியாய் விடுகின்றன.
அதுபோலவே போர் வீரனுக்குரிய முதற்பணி போர் புரிவ
தாகும். போர்புரிதல் நீதியாமா? தக்கதோர் பணியாமா? என்
ருல், போரின் விளைவுகளை அறிந்தும், நீதிக்காகவோ நாட்டின்
நலத்திற்காகவோ, வயிற்றுப் பிழைப்புக்காகவோ போர்புரியும்
பணியில் ஈடுபட்டுவிட்டால் அவனுடைய தர்மமான பணி
செம்மையாகப் போர்புரிவதேயாகும். மக்களாய்ப்பிறந்த ஒவ்
வொருவரும் தத்தம் பணிகளைச் செம்மையாய்ச் செய்யக்
கடவர். இவ்வாறு ஒவ்வொருவரும் அவரவருடைய பணி
யைச் செய்தால்தான், ஒரு மனையாட்சியோ, நகர ஆட்சியோ,
நாட்டாட்சியோ, உலக ஆட்சியோ சரிவர நடைபெறும். மக்
களின் ஒத்துழைப்பாலேயே உலக வாழ்க்கை இயங்குகிறது.

2. சமூகப்பணி:—இவ்வின்றியமையாத முதற்பணியை
யாவரும் அறிந்தோ அறியாமலோ வேடிக்கைக்காகவோ வயிற்
றுப் பிழைப்புக்காகவோ இயந்திரம் போல செய்துதான் வரு
கின்ருேம். ஆனல் இத்தகைய பணியை முதற்பணி என்று
முன்னமே கூறினேம். முதற்பணி என்றதனலேயே இரண்
டாம் பணி மூன்றும் பணி ஆகிய ஏனைய பணிகள் ஒன்றிரண்
டேனுமுள என்பது புலனுகும். இரண்டாவதாக நிற்பது சமூ
கப் பணி என்பது. ஒருவன் சமூகத்திற்கு அல்லது தனதில்லம்,
உற்ருர் உறவினர், ஏனைய உயிர்கட்குச் செய்யும் பணியெல்
லாம் சமூகப் பணியேயாகும். சமூகப்பணிக்கு ஒருவித எல்லை
யும் கிடையாது. அண்டை வீட்டாருக்கு அவ்வப்போது செய்
யும் சிறு உதவியிலிருந்து பரந்த நம் தேசத்திற்காகச் செய்யும்

தேச சேவைவரை எல்லாவற்றையுமே சமூகப்பணி என்ன
லாம்.

மக்களாய்ப்பிறந்த நம்முள் ஒவ்வொருவரும் அவரவர்
உடற்சக்திக் கேற்றவாறும், பொருட்சக்திக் கேற்றவாறும்
இத்தகைய சமூகப்பணியை செய்யக் கடமைப் பட்டுள்ளோம்.
ஆனால் சமூகப்பணியால் முன்னர் கூறப்பட்ட முதற்பணி அதிக
மாகப் பாதியாதவாறு பார்த்துக்கொள்வது நம் கடமையாகும்.
மனைவியும் மக்களும் அரும்பசியால் வாடிவதங்க, இருந்தவேலை
யையும் இழக்கவிட்டுவிட்டுத் தேசசேவையோ, சமூகப்பணியோ
செய்யப்புகும் ஒருவனை அறிவுலகம் வெறுக்கும். முதற்பணி
யைச் செவ்வனே செய்தலே பெருந்தவஞ்செய்தற்கு நிகராகும்
என்றுதான், "தவஞ்செய்வார் தம் கருமம் செய்வார்" என்று
வள்ளுவனார் கூறினார் போலும்! முதற்பணிதான் முதற்பணி.
ஆனால், கூடிய வரையில் அதோடு நில்லாமல் கொஞ்சமேனும்
பொதுத் தொண்டாற்ற முயலல்வேண்டும். உடல் பொருள்
ஆவி ஆகிய மூன்றால் செய்யலாம்; மனமொழி மெய்யால் செய்
யலாம். நாம் இவ்வுலகில் என் பிறந்தோம்? எதற்காக வந்தோம்?
வேளைக்கு வேளை உண்டு உறங்குவதற்கு மட்டுமா? இது
பற்றியே தாயுமானார் 'யோசிக்கும் வேளையில் பசி தீர
உண்பதும் உறங்குவதுமாக முடியும்' என்றார். இவ்வாறு
ஆராயும்போது, ஏதேனும் ஒரு சிறு தொண்டேனும் செய்வ
தற்கே இவ்வுடலெடுத்தோம் என்பது புலனாகும். இவ்வாறு
குறிக்கோளைக் கொண்டு வாழ்நாள் முழுவதும் அதற்குரிய
விடாது பணியை இடைவிடாது செய்தல்வேண்டும். எவ்வளவு
கற்றாலும், அறிவுஞ்செல்வமும் பெற்றாலும், குறிக்கோளில்லா
விடில் வாழ்நாளெலாம் வீழ்நாளே என்ற உண்மையை விளக்
கவே "குறிக்கோளிலாது கெட்டேன்" என்று தமது பிற்
காலத்தில் அப்பமூர்த்திகள் அரற்றுகின்றனர். தமது வாழ்
வின் முற்பகுதியில் நாவுக்கரசடிகள் நல்லறிவும் நூலறிவும்
பெற்றும் அவற்றால் தம் குழுவின் பட்டம் பதவிகள் பெற்
றிருந்தும் உயர்ந்ததோர் குறிள் கோளிலாமையால் "கெட்
டேன்" என்கிறார். அவரது திருக்கரத்தில் இடைவிடாது
தோற்றமளிக்கும் உழவாரப்படை அவரது திருக்கரத்



தொண்டை அடியார்க்கு அறிவுறுத்தும் பணியின் சின்ன
மாய்ப் பொலிகின்றது.

பெரிய புராணத்து அடியார்களும் அவர்தம் மனைவியரும்
அடியார்க்கு உண்டியளிப்பது, உடையளிப்பது, ஓடளிப்பது,
திருவிளக்கேற்றுவது போன்ற பணிகளைத் தம் வாழ்க்கைக்
குறிக்கோளாகக் கொண்டு தம் மானம், மனைவி, மக்கள்
உயிர், போவதாயினும் தம் குறிக்கோளைச் சிறிதேனும்
நெகிழவிடாது தம்பணியைச் செவ்வனே செய்து வந்தனர்.
அவ்வாறு தம் பணியில் அவர்கள் கொண்ட உறுதியே
போற்றத்தக்க தன்றி, அவராற்றிய பணி உயர்ந்ததா தாழ்ந்
ததா என்பது ஆராயத் தக்கதல்ல. எப்பணியை ஏற்றாலும்
அப்பணியைத் தளரா உறுதியுடன் செய்தல்வேண்டும்.

இனியவை கூறல், ஏழைக் கிரங்கல், அன்ன மளித்தல்,
எழுத்தறிவித்தல், தேசப்பணி, சமயப்பணி முதலாய பணி
களைத் தாமே செய்தல், செய்யத் தூண்டுதல், செய்யப் பொரு
ளுதவி புரிதல் ஆகிய இவைகளெல்லாம் சமூகப்பணியே யாகும்.
இப்பணியைச் செய்யும்போதும், நம்பணி எனினும் இறை
பணி என்றே நினைத்துச் செய்தல் வேண்டும்.

> " பாராதி தனிலுள்ள செயலெல்லாம் முடிவிலே
> பார்க்கில் நின்செய லல்லவோ "

என்ற எண்ணம் வந்தால்தான் அகங்காரம் நீங்கி அன்பு
எழும். பணிஎன்ற சொல்லைப்பார்த்தாலும், பணிந்து, வளைந்து
வணங்கிச் செய்கின்றதே பணியாகும் என்ற பொருள்
தொனித்து நிற்கிறது. பணிய என்றால், தாழ வணங்க
இறங்க, குறைய என்று பொருள் பெறும். இறங்குதல்
வேண்டும். நம்மினும் அறிவிலோ ஆற்றலிலோ, செல்வத்
திலோ கல்வியிலோ குறைந்த மக்களிடையே பணியாற்ற
வேண்டின் நாம் நம் நிலையினின்றும் அவர்தம் நிலைக்கு இறங்
குதல்வேண்டும். பணியாற்ற பணிவுவேண்டும். இங்குக் கூறும்
பணி அடிமைத்தனத்தைக் குறிப்பதல்ல.

> " பணியுமாம் என்றும் பெருமை "
> " பெருக்கத்து வேண்டும் பணிவு "

என்று வள்ளுவனார் குறிப்பிடும் பணியே இங்கே வேண்
டற்பாலது. பணிவொடு கூடிய இப்பணியே—அன்பினால்
வனைய உயிர்களனைத்தையும் அன்பராய்க் கருதிச் செய்யும்
பணியே—அன்பர் பணியாகும். இத்தகைய அன்பர் பணியா
லடையும் இன்பமே உயர்ந்த இன்பமாகும்.

" அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே "

**ஆன்மப்பணி:** ஒவ்வொருவரும் மேற்கூறிய முதற்பணி
சமூகப்பணியோடு நமது ஆன்ம முன்னேற்றத்திற்காகச் செய்
யும் பணியை ஆன்மப் பணி எனலாம். அன்பர்பணி அல்லது
சமூகப் பணியாகிய முற்கூறிய தொன்றில் ஈடுபட்டாலே
போதுமே—முக்தி கிட்டுமே என்றுபலர் வாதிக்கலாம். " நட
மாடும்கோயிலுக் காற்றும்பணி படமாடும் பரமற்கங்காகுமே"
என்று மேற்கோளொன்றுங் காட்டலாம். தெய்வ நம்பிக்கை
யில்லா விடினும், இறையுணர்ச்சி இல்லாவிடினும் உண்மை
யான சமூகப்பணியே உய்வளிக்கும் உயர்வுடையது என்று
தற்கால அறிஞர் பலர் கூறுகின்றனர். உயர்ந்த எண்ணங்கள்
வாய்ந்த, உன்னதக் குறிக்கோளைக் கொண்ட தியாகம்
நிறைந்த சேவா வாழ்க்கையே சாலச்சிறந்த தென்பதில்
உண்மை இருந்தாலும் தெய்வ நம்பிக்கையோடு கலந்த சமூகப்
பணிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. மகாத்மா காந்தியின் தேச
சேவைக்குப் பெருமை யளிப்பது, அவர்க்கு, கடவுள் உண்
டென்ற உணர்ச்சியும் கடவுள் பக்தியுமேயாகும். நாம் ஆற்றும்
பணிக்கு, புத்துயிர் அளிப்பதும் சித்தொளி வீசுவதும் இறை
யுணர்ச்சியேயாகும். நம்மை ஆளும் பரமன் நம் ஒவ்வொருவ
ருள்ளத் துள்ளும் ஒளிந்தவாறே நம் செயலனைத்தையும்
கண்காணிக்கின்றான் என்ற எண்ணம் இருப்பின் அது நம்மைத்
தவநெறிக்குச் செலுத்தா விடினும் அவநெறியிலேனும்
செல்லாதிருக்கத் துணைபுரியும்.

" கண்காணி யில்லென்று கள்ளம்பல செய்வார்
கண்காணி யில்லா யிடமில்லை காணுங்கால்



கண்காணியாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே.

என்பது திருமூலர் திருவாக்கு.

இறையுணர்வொடு கூடிய சமூகப்பணியே மிகச் சிறந்த
தாகும். அறச்சிந்தனையை அறவே ஒழித்து உயிர்ப்பணியைய
உள்ளத்தும் நினையாது செய்யும் இறைவழிபாடு இறைவனுக்
கேற்காது. உயிர்கட்கு ஆற்றும் உயிர்ப்பணி இறைவனுக்குச்
செல்லுமே யன்றி இறைவனுக் கேற்கும் இறைவழிபாடு உயி
ரினத்திற்குச் செல்லாது எனும் மாபெரும் உண்மையை, " பட
மாடக்கோயில் பகவற்கொன் றீயில், நடமாடக்கோயில் நம்பர்க்
கங்காகா, நடமாடக்கோயில் நம்பர்க் கொன்றீயில் படமாடக்
கோயில் பகவற்கங்காமே " எனத் திருமூலர் மிக அழகாக
எடுத்துக் கூறுகின்றார்.

சமயப் பணியைப் போற்றுவர் சமயப் பெரியாரெலாம்;
சமூகப்பணியே சாலச் சிறந்தென்பர் சமூகத்தொண்டர்கள்.

" இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே "
" செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே "

என்பர் அன்பர் சம்பந்தப் பெருமான்.

" அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல் "

என்று பாடுவார் பாரதியார்.

அறிவும் ஆற்றலும் படைத்த மக்களினத்துள் ஒவ்வொரு
வரும் தமக்குற்ற பணியை செவ்வனே செய்யக் கடமைப்பட்
டுள்ளனர். கற்பதெல்லாம் பணி செய்தற்கே என்ற உண்மை
யைச் சம்பந்தர் "கற்றதுறப் பணிசெய்து காண்டு மென்பார்"
என்றும், பிறவாமையை அடைதற்கும் பணியே துணை
புரியும் எனும் அரிய கருத்தை, "பிறப்பறுத் துய்யவேண்
டில் பணியுடைத் தொழில்கள் பூண்டு" என்றும் கூறுகின்
றார். தொண்டருள் தொண்டராய்த் திகழ்ந்த திருநாவுக்கர

சரோ பணிக்கெனத் தனிப்பதிக மொன்றையே வகுத்துள்ளார். அதை "பணிசெய்"ப் பதிகம் என்றே கூறலாம் திருச்சோற்றுத்துறை பதிகமொன்றில், (5. 33.) பதிகத்தின் பதினொரு பாட்டுக்கள் ஒவ்வொன்றின் ஈற்றடியிலும் பணிசெய்வதன் பான்மையைப் பகர்கின்றார்.

'வல்லையாய்ப் பணிசெய் மடநெஞ்சமே' (வல்லையாய் = விரைவாய்)
'பத்தியாய்ப் பணிசெய் ,, '
'பட்டியாய்ப் பணிசெய் ,, ' (பட்டி = பிள்ளை or நாய்)
'வாதியாய்ப் பணிசெய் ,, '
'நீட்டிநீ பணிசெய் ,, ' (நீட்டி = இடையறாது)
'தங்கிநீ பணிசெய் ,, '
'பூணியாய்ப் பணிசெய் ,, ' (பூணி = எருது)
'பற்றி நீ பணிசெய் ,, '
'புல்லி நீ பணிசெய் ,, ' (புல்லி = விரும்பி)
'உண்டு நீ பணிசெய் ,, ' (தேகத்தையும் பாதுகாத்துப் பணிசெய்)
'தாழ்ந்து நீ பணிசெய் ,, '

பணி செய்வதற்கு அரும் பெருந்துணையாய் அமைந்திருக்கிறது அப்பர் பதிகம். அதன் வழி நின்று, அறநெறி பேணி, அன்பைப் பெருக்கி அரும்பணியாற்றி அரனருள் பெறுவோம்.

---

# காரைக்கால் அம்மையார்

[பத்திராசியர்]

காலம் :—பண்டைச் சிவனடியார்களில் பெண் மக்களில் நான்கு பெண்மணிகள் குலத்திற் கொருவராக சிறந்து விளங்கியுள்ளார்கள். அவர்களில் வணிககுல திலகமாய் விளங்கியவர் காரைக்கால் அம்மையார். ஏனைய சிவனடியார்களைக் காட்டிலும் இவர் காலத்தில் முற்பட்டவர்எனச் சொல்ல வேண்டும். தெய்வீகத் தமிழில் அருட்பாக்களைப் பாடி சமயக்



கொள்கைகளை நாட்டில் பரவச் செய்ததிலும் அம்மையாரே மிகவும் முற்பட்டவர். தேவாரம் அருளிச் செய்த மூவரிலும் அம்மையார் முற்பட்டவர். அம்மையார் தலையால் நடந்த திருவாலங்காட்டை மிதித்தலாகாது என அன்பால் உரைத்த ஞானசம்பந்தப் பெருமானுக்கும் வெகு முந்தியவர் அன்றோ அம்மையார்? வெண்பாக்களில் அந்தாதித்தொடையும் பாக்களில் போற்றித் தொடர்களாகப் பப்பத்துப் பாடல்கள் என்ற பதிக முறையையும் முதன் முதலில் தமிழ் இலக்கியத்தில் கையாண்டவர் அம்மையாரே. நாடகச் சங்கத்தார் காலத்தில் அம்மையார் பெயராவது அவரது பாடல்களின் மேற்கோளாவது காணப்படுவதில்லை. ஆகவே, அம்மையார் சங்கத்தார் காலத்திற்குப் பிந்தியும் (முதல் நூ) சமயாசாரியர்கள் காலத்திற்கு முந்தியும் (6 நூ) இருந்திருத்தல் வேண்டும்.

ஊர் :—உலக வழக்கில் வழங்குகிற பெயரினாலேயே அம்மையார் அவதரித்த ஊரின்பெயர் தெரிகிறது. இப்போதைப் போலவே அக்காலத்திலும் காரைக்கால் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்தது. அவ்வூர் வாணிகப் பெருங்குடிகள் செல்வ வளம் படைத்த ஊர். வணிகப் பெருமக்கள் உள் நாட்டுப் பண்டமாற்றலால் செல்வம் பெருக்கியது மாத்திரம் அன்றித் திரைகடல் ஓடியும் செல்வம் பெருக்கினார்கள் ; அந்தக் காலத்தில் நாவாய்களைக் கட்டிக் கடலில் வெகு தூரத்திற்கப்பால் இருந்த தீவுகளுக்குச் சென்று வாணிபம் புரிந்து வந்தார்கள். அவ்வித வாணிபத்தை அக்கால மன்னர்களான சோழர்கள் ஆதரித்ததன்றி அவ்வாணிபத்தைப் பாதுகாக்கப் போர்க் கப்பல்களையுந் திரட்டிவைத்திருந்தார்கள். அவ்வித வாணிப மேம்பாடு சங்ககாலம் முதல் நடுக்காலத்துச் சோழ வம்சத்து இராசராசன் சந்ததியார்கள் காலம்வரை சிறந்து விளங்கியது. ஆகவே, அம்மையார் காலத்திலும் கடல் வாணிபம் மிகச் சிறந்தது எனல்வேண்டும். அம்மையார் தந்தையாரும் கணவனாரும் இவ்வித வாணிபத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அம்மையார் கணவர் மரக்கலங்களைக் கட்டச் செய்தும் பண்டவகைகளைத் திரட்டியும் மீகாமன்களையும் நாவாய் ஆட்களையும் ஏற்படுத்தியும் தானும் வெளிநாடுகளுக்

குச்சென்று இறுதியில் பாண்டி மண்டலத்து ஒரு துறைமுகத்
தில் குடி ஏறியதையும் அவர் புராணத்தில் காணலாம். அக்கா
லத்தில், நாவாய், வாணிபத்திற்கு வெளி நாட்டுத் தீவுகளை
யன்றி உள் நாட்டில் வங்கக்கடற்கரையில் இருந்த பல துறை
முகங்களும் பயன்பட்டு வந்தன.

அவைகளில் சிறந்தவை காரைக்கால், நாகை, பாண்டி
நாட்டுக் கொற்கை முதலியன. பரமதத்தன் இறுதியில் சென்று
குடியேறின துறையின் பெயரைச் சேக்கிழார் குறிக்கவில்லை.
ஆனால் அது பொருநையாறு (தாம்பிரபரணி) கடலில் சேரும்
இடமென்றும், அதன் பெயர் கனகலம் என்றும் வடமொழி
நூல் கூறும். பொருநை நதி இந்நாளில் கடலில் சேருவ
தில்லை; ஒரு பெரிய கண்மாயில் விழுகிறது. அக்காலத்தில்
சேர்ந்திருக்கலாம். அது கொற்கையோ காயலோ ஆக இருக்
கலாம். ஆகவே, அக்காலத்தில் வங்கக்கடல் ஓரமாகப் பல
துறைமுகங்கள் இருந்தன. அவைகளில் தமிழ் வணிகர்
குடியேறி வாணிபம் புரிந்தார்கள், மரக்கலங்களைக் கட்டி
அவைகளின் மூலம் வாணிபம் செய்து வந்தார்கள் எனத்
தெரிகிறது. இந்நாளிலோ அவ்வாணிபம் தமிழ் மக்கள்
கைவிட்டு சோனகர், விவிலியர் கைக்குள் ஓடி அடைக்கலம்
புகுந்து விட்டது எனச் சொல்லல் வேண்டும். எப்போது
தமிழ் மக்களிடம் வருமோ!

ஊரில் சைவப் பெருமை :—காரைக்காலில் வணிக
மக்கள் சைவத்துறையில் சிறந்து விளங்கினர். மூவர்கள்
தோன்றின நாட்களுக்கு முந்திய காரைக்காலில் சைவம்
சிறந்து இருந்தது. மூவர்கள் அந்நகரருகில் சென்றபோது
அதைச் சுற்றியிருந்த சிவாலயங்களைக் கண்டு போற்றினார்கள்.
சம்பந்தர் திருத்தெளிச்சேரி, தருமபுரம், கோட்டாறு, வேட்
டக்குடி முதலிய தலங்களில் பாடியுள்ளார். திருத்தெளிச்
சேரி தற்காலத்தில் காரைக்காலில் ஒரு பகுதி. கோயிற்பத்து
என்று கூறப்படும் "பூவலர்ந்தன—" என்ற பதிகத்தை இங்கு
அருளிச் செய்துள்ளார். தருமபுரம் அந்நகரிலே மற்றொரு



பகுதி. அது திருநீலகண்டயாழ்ப்பாண நாயனாருடைய அம்
மான் இல்லம் இருந்த தலம். அங்குதான் யாழ்மூறிப் பதிகம்
அருளிச் செய்யப்பட்டது. நல்லாறு அதற்கடுத்து 3 கல்லில்
உள்ள ஒரு சிறந்த ஊர். அங்கு பாடிய திருப்பதிகம்தான்
மதுரையில் தீயில் எரியாமல் நின்று சைவத்தைக் காப்பாற்
றியது. கோட்டாறு காரைக்காலிலிருந்து 10 கல் அளவில்
உள்ளது. "வேதியர் விண்ணவர் ஏத்த நின்றான்" என்ற
பதிகம் அருளப்பட்ட ஊர். வேட்டக்குடி காரைக்காலுக்கு
வடக்கே 4 கல்லில் மணற்கரையில் உள்ள ஊர். அங்கே
"வண்டிரைக்கும்" என்ற பதிகம் பாடப்பட்டது. இவையன்
றித் தக்களூர், அளப்பூர் என்ற தலங்கள் அருகில் உள்ளன.
அப்பர் சுவாமிகளால் ஆளப்பட்ட தலம் திருநள்ளாறு. சுந்தர
மூர்த்திகளால் ஆளப்பட்டதும் நள்ளாறே.

ஆகவே மூவராலும் ஆளப்பட்ட சைவ ஆலயங்களால்
பெருமை பெற்றது காரைக்கால் உள்ள நாடாகும்.

இவ்வாலயங்களே யன்றி ஊர் நடுவிலும் மூன்று சிறந்த
ஆலயங்கள் உள்ளன. அவை சைவ வைணவ முருகப்பிரான்
கோயில்கள். இனி அம்மையார் ஆலயம் தற்காலத்தில் புதுமுறை
யில் கட்டப்பட்டு அழகாக இருக்கிறது. ஆண்டுக்கு ஒருமுறை
மாம்பழத் திருநாள் என்ற அம்மையார் சரிதப்பகுதி ஒரு
திருவிழாவாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. சோனகர்களும்
விவிலியர்களும் இவ்வூரை மிகவும் ஆக்கிரமித்திருந்தபோதி
லும் அம்மையார் ஊன்றிவிட்ட சைவ வித்து இன்னும்
அழியாமல் தழைத்து ஓங்கி வளருகிறது.

அம்மையார் அடைந்த நிலை :—அம்மையார் அருள்
பெற்று இறுதியில் அடைந்த இடம் தொண்டை நாட்டுத்
திருவாலங் காடாகும். பேய்வடிவம் தாங்கிச் சிவபெருமானை
அடைய வேண்டித் திருக்கயிலை செல்ல அங்கே பெருமானுஷ்

திருவாலங்காட்டிற்குச் செல்லும்படி ஆணை பெற்றுத் தலையாலே நடந்து அடைந்த புனிதத்தலம். அவ்வித பெருமை பெற்றதினால்தான் அதனை மிதிக்கவும் சம்பந்தர் அஞ்சி வெளியே தங்கினார். தூக்கத்தில் பெருமான் தோன்றி ஏவினதினால் ஊர்புக்கு ஆலயத்தில் வழிபட்டு, 'துஞ்ச வருவாரும் தொழுவாரும்' என்ற பதிகம் பாடினார். சம்பந்தர். காலத்திற்கு முந்தியே இத்தலம் மிகப் புகழ்பெற்றிருந்தது. பழையனூர் நீலி என்ற அரக்கி செய்த வஞ்சனையால் ஒரு வணிகன் உயிர் துறக்க அதற்காக வேளாளர்கள் தீப்பாய்ந்து சபதங் காத்த ஊர். அச்செய்தியைக் குறிக்கும் சிறிய சிவாலயம் இன்னும் இருக்கிறது. பண்டைநாளில் ஊரின் பெயர் பழையனூர் ; கோயிலின் பெயர் ஆலங்காடு. நடராசப் பெருமானின் 5 தாண்டவங்களில் ஊர்த்துவ தாண்டவம் இங்கு நடைபெற்றது. காளியுடன் வாதாடத்தான் ஊர்த்துவ தாண்டவம் செய்து அவளைத் தோற்கடித்து நாணச் செய்த இடம். தற்காலத்தில் ஆலயம் புதுப்பிக்கப்பெற்றுப் பண்டைய சின்னங்கள் எல்லாம் அழிக்கப்பெற்றிருக்கிறது. ஆனால் வெளிமதில் அழிக்கப்படவில்லை. அதில் 'வராகம் வாள்' முதலிய குறி காணப்படுவதால் விஜயநகரத்து மன்னர்களால் கட்டப்பட்டதென்றறிக (1500).

சிவபெருமானிடம் அம்மையார் வரம் வேண்டுகையில் "மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்க" என்ற செய்தியை முன்னிட்டு எல்லாப் பெரிய சிவாலயங்களிலும் சிற்ப மண்டபங்களில் காளி நடனத்திற்கு எதிர்த்தூணில் ஊர்த்துவதாண்டவ மூர்த்தியும் அம்மூர்த்தியின் கீழ் அம்மையாரின் எலும்புருவமும் செதுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். (திருப்போரூர், மதுரை, நெல்லை முதலியவைகளில் காண்க). ஆனால் திருவாலங்காட்டிலோ அவ்வாறிருக்கக் காண்கிலோம். விவரம் ஆராய்க.



ஏனைய தலங்கள்: அம்மையார் திருஅடி பட்டதலங்கள் காரைக்கால், பாண்டிநாட்டுநகர், கைலை, திருவாலங்காடு என்பன. காரைக்காலிலும் ஆலங்காட்டிலும் சின்னங்கள் உண்டு. மற்ற இரண்டிலும் அறியோம். ஆனால் எல்லாச் சிவாலயங்களிலும் நாயன்மார்களில் ஒருவராக எடுத்தாளப் பெற்று அவரது திருவுருவம் அமைக்கப் பெற்றிருக்கிறது. சிற்பம் செய்யப்பெற்ற ஆலயங்களில் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் அடியில் அம்மையார் உருவம் இன்றியமையாதபடி அமைக்கப் பெற்றிருக்கிறது.

உருவ அமைப்புகள் :—அம்மையார் எல்லா ஆலயங்களிலும் பேயுருவமாகவே அமைக்கப் பெற்றிருக்கிறார். அதுவன்றோ அற்புத நிகழ்ச்சியை எடுத்தாளுவது, அப்போதன்றோ அருள் வந்தடைந்தது.

---

### சைவசித்தாந்த சமாஜம் 41-வது ஆண்டு விழா

## திருச்செங்கோடு இளைஞர் மகாநாட்டுத்

# தலைமையுரை

[திரு. கி. சிவராமன். எம். ஏ.]

அன்புடையீர்

சமய உலகத்திற்குள் அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கும்பொழுதே ஆற்றலைமீறிய பணியொன்று எதிர்ந்துள்ளது. 'மெய்ஞ்ஞான தெய்வ'மாகிய செங்கோட்டு வேலனின் உறுதுணையையும் உங்கள் அன்பையும் போதரவாகக் கொண்டு அப்பணியை ஒருவாறு நிறைவேற்ற முற்படுகின்றேன்.

இதுபோன்ற பல ஆண்டு நிறைவு விழாக்களிற் கலந்து கொண்டு கற்றுத் தேர்ந்த தலைமையுரைகள் - சொற்பொழி

வுகள் பலவற்றைக் கேட்டு மகிழ்ந்தவர்கள் உங்களிற் பலரிருக்
கலாம். அன்னார் என் இளமையுரையில் சைவ சமயத்தின்
ஒக்கம் உண்மை முதலிய அரும்பொருள்களை எதிர்பார்க்க
மாட்டார்கள். நானும் அவைபற்றித் துணிந்துபேச முற்பட்
டேனில்லை. சைவ சமய உண்மைகளை ஒல்லும் வகையில்
எடுத்தோதுவதற்குப் பேச்சாளர்களும் புலவர்களும் இம்மா
நாட்டிற்கு வந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். சைவ இளைஞர்
பலரும் அணித்தே இம்மேடையிற் சித்தாந்த முழக்கம்
செய்யப் போகின்றார்கள். என்பணி இவற்றிற்குத் தோற்று
வாய் செய்வதுபோல சமயத்தைப்பற்றிய சில பொதுக்கருத்
துக்கள் - இன்றைய உலகில் சமயம் வகிக்கும் இடம், சமயத்
தின் இன்றியமையாமை- இவைபற்றிச் சில கூறுவதுதான்.

மனிதனுக்கும் சமயத்திற்குமுள்ள தொடர்பு ஒவ்வொரு
காலத்திலுமுள்ள நாட்டம், கலை, நாகரீகம், அரசியல், சமூக
நிலை முதலியவற்றால் பாதிக்கப்படுகின்றது என்பது சரித்
திரம் குறிக்கும் உண்மை. காலத்திற்குக் காலம் மன்பதை
வேறுபட்ட உட்சார்புகளோடு சமயமென்பதை ஆராய்ந்து
வந்திருக்கிறது. 'சைவ சித்தாந்தத்தின் வரலாற்றினை நோக்
குவோமானாற் கூட இவ்வுண்மை நன்கு போதரும். முத
னூல் - வழிநூல் - புடைநூல் வழக்கின் உட்கருத்தும் இது
தான். காலவேறுபாடு பற்றி ஒருநூலுக்குப் பெருமை சிறுமை
கூறுதல் ஆராய்ச்சிக் கழகன்று என்னும் கருத்தில் உமாபதி
சிவம்,

"தொன்மையவாமெனு மெவையும் நன்றாகா இன்று
தோன்றிய நூலெனு மெவையும் தீதாகா"

என்று கூறுவதும் இவ்வுண்மையைத் துலக்குகிறது.

சமயத்தைச் சரித்திரக் கண் கொண்டு ஆராய்வதுதான்
இக்கால நிலைக்கு மிகவும் ஏற்புடையது. பிறர் மதம் மறுத்



துத் தன் கோளை நிறுவுதல் என்னும் 'பூர்வபக்க-சித்தாந்த' முறையினை விட சமயத்தைச் சரித்திரப் போக்கு என்னும் பின்னணியில் வைத்தாராயும் வரலாற்று முறை (Historical method) தான் இன்று சமயவாராய்ச்சியிற் தலைப்படுவோரால் மேற்கொள்ளப் படுகிறது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் சரித்திரம் நாமனைவரும் அறிந்ததே. ஒன்றை ஒன்று அறியாமல் திகழ்ந்த மக்களினங்கள் நாடுகள் யாவும் நெருங்கி உறவாடவேண்டிய ஒரு நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. இன்றுவரை தனித்தே தேங்கி வளர்ந்த ஒவ்வொரு நாட்டின் கலை, பண்பு, சமயாசாரம் முதலியவெல்லாம் இன்று ஒன்றோடு ஒன்று கலந்தே வளர்ச்சியுற வேண்டியிருக்கிறது. இவற்றைக் காலத்திற் கியைந்த முறையில் வளம்படுத்திக் கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்பட்டுள்ளது. நம் இந்திய நாட்டின் சமய நுணுக்கங்களை இக்கால ஆராய்ச்சிக் கியைய எழுதி வெளியிட்டு மேனாட்டு அறிவுலக மதிப்பில் நம் நாட்டை உயர்த்திய சர். எஸ். இராதாகிருஷ்ணன் கூற்றொன்று என் நினைவிற்கு வருகிறது. "The chief energies of the thinking Indians should be thrown into the problems of how to bring religion into line with the spirit of science to meet and interpret the claims of temperamant and individuality, how to organize the divergent influences on the basis of ancient faith."

*Indian Philosophy, Vol. II pages 777—778.*

இது அறிவியலாராய்ச்சி மிகுந்த காலம். இன்று நுண்மாண் நுழைபுலமுடைய மக்கள் நாட்டமெல்லாம் அறிவியல் (science) துறையிலேயே செல்கிறது. விஞ்ஞானத்தின் முன்னேற்றம்

நம்மைத் திடுக்கிடச் செய்கிறது. சென்ற மூவாயிரம் ஆண்டுகள் காணாப் புதுமைகளை யெல்லாம் இந்த ஒரு முப்பதாண்டு கண்டுவிட்டன என்று கூறுகிறார் எச். ஜி. வெல்ஸ். உதாரணமாக வானநூல் (ashonomy) அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றிக் கூறும்போது ஒரு ஆசிரியர் கூறுவதைக் கேளுங்கள் :

ஒரு குழந்தை பிறந்த சில மாதகாலத்தில் அதன் அறைச் சுவர்களுக் கப்பாலும் 'உலகம்' இருக்கிறது. அதன் பெற்றோர்களைத் தவிர இன்னும் சிலரும் இவ்வுலகில் இருக்கிறார்கள் என்ற உணர்வை அடைகிறது. இந்நிலவுலகம் ஞாயிறு முதலிய கிரகங்களைத் தவிர கடவுள் படைப்பில் வேறு உலகங்கள் இருத்தல் கூடும் என்று நம் முன்னோர்கள் எண்ணினார்கள் இல்லை. இன்றோ வெனின் பல்லாயிரக் கணக்கான கிரகங்களின் கூட்டமாகிய ஞாயிற்றின் தொகுதியே (Star System) அத்தகைய பலகோடிக் கணக்கான தொகுதிகளாகிய அண்டத்தின் ஒரு மிகச் சிறிய பகுதி என்னும் உண்மை தெளிவாய் விட்டது.

(தொடரும்)

## மதிப்புரை

மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்பல் வேண்டும்.

1. *A plan for Tiruchendur* :—ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்., திருச்செந்தூரைப் பலவழிகளிலும் முன்னேற்றுவதற்கென்று வகுக்கும் திட்டங்கள் அடங்கிய ஒரு சிறுநூல். ஆசிரியர் திருச்செந்தூர்க் கோயிலின் தேவைகளை நேரே கண்டறிந்து எடுத்துக் கூறுகிறார். இந்து மக்களுக்குச் சமயக் கல்வி போதிக்கும் கல்லூரிகள் தேவை என்றும் திருச்செந்தூரில் அத்தகைய ஒரு கல்லூரியை ஏற்படுத்தல் மிக மிக இன்றியமையாதது என்றும், கிறிஸ்துவ அரசியல் போய் தேசிய அரசியல் வந்துள்ள இன்று இந்து மக்கள் நன்மைக்காக அறநிலயங்களும் சமயக் கல்லூரிகளும் சீர்பெற அமைதல் வேண்டும் என்றும் ஆசிரியர் கூறுவது மிகவும் பொருத்தமானதே. ஊரில் உள்ள சிவக்கொழுந்தீசுவரர் கோயிலில் குருக்கள்களுக்காக ஒரு சைவாகம பாடசாலை ஏற்படுத்தல் நல்ல தென்றும் அதிற் படித்துத் தேர்வோர்களையே அறநிலயப் பாதுகாப்பாளர் கோயில்களில் தேவை எழும்போது பொறுக்கி எடுக்க ஏற்பாடு செய்தல் வேண்டும் என்றும் ஆசிரியர் கூறுகிறார். பிற்சேர்க்கையாகப் பழனி ஈசான சிவாச்சாரியார் வகுத்தபடி ஐந்து வருட பாட திட்டமொன்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி ஆண்டறிக்கை **1946, 47** :—திரு. காசிவாசி சாமிநாத சுவாமிகள் நினைவாக நிறுவப்பெற்ற இக்கல்லூரி இந்த ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழக இணைப்புப் பெற்று வித்துவான் தேர்விற்கு மாணவர்களைப் பயிற்றுவிக்கிறது. இதில் குறிப்பிட வேண்டியது, பல்கலைக் கழகப் பாடதிட்டங்களோடு சமய பாடமாக சிவஞான சித்தியார் சுபக்கம் நடத்தப்பெறுவது.

000-க்கு மேற்பட்ட நூல்களைக் கொண்ட 'சகலகலாவல்லி நூல் நிலயம்' கல்லூரியை அரண் செய்கிறது.

3. கணபதி கந்தர் தேவாரத்திரட்டு :— திருப்பனந்தாள் காசிமட வெளியீடு.

இந்நூலின் முற்சேர்க்கையாகத் திருப்பனந்தாள் காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசி வாசி அருணந்தித் தம்பிரான் அவர்களால் ஏற்படுத்தப்பெற்றுள்ள எட்டு நிதியங்களின் (endowments) விவரங்களும் சுவாமிகள் செய்துள்ள பொது நன்மைக்கான தருமங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. விநாயகரைப்பற்றியும் முருகரைப்பற்றியும் பன்னிரு திருமுறைகளிலும் வந்துள்ள திருப்பாசுரங்களைத் தொகுத்துள்ளார்கள். தக்க குறிப்புரையும் தோற்றுவாயும் சேர்த்திருப்பின் இன்னும் பயனுடையதாயிருந்திருக்கும். இந்நூல் புகழ்பெற்ற காசி வாசி சாமிநாத சுவாமிகளின் மூன்றாவது ஆண்டு நிறைவு நாள் [illegible]வாக வெளிவருகின்றது.

4. 1. திரு எதிர்கொள்பாடித் திருப்பதிகம், 2. திரு ஒற்றியூர்த் திருப்பதிகங்கள், 3. திரு மயிலாப்பூர்த் திருப்பதிகம் :—இவை மூன்றும் தருமபுர ஆதீன வெளியீடுகள். தருமையாதீன மகா சன்னிதானத்தின் ஜன்மநட்சத்திரத் திருநாளில் சிவத்தலங்களில் ஆராதனை காலத்தில் அன்பர்கள் பாராயணம் செய்யும் பொருட்டு வழங்கப்பட்ட தலப்பதிகங்கள். சமய குரவர் வரலாறுகளோடு அவ்வப் பதிகங்களின் பொழிப்புரையாவது கொடுக்கப்பெற்றிருக்குமானல் பின்னும் பயனுடையதாயிருக்கும்.

5. ஆலய வழிபாடு - தருமபுர ஆதீனம்:—கோவில் வழிபாட்டின் தேவை, வழிபாட்டுமுறை, கோவிலிற் செய்வன தவிர்வன-முதலிய பொருள்களை விளக்கும் ஒரு சிறு உரைநடைநூல். சிவாலய, விஷ்ணுவாலயங்களிற் சொல்லவேண்டிய தோத்திரங்கள் சில ஈற்றில் தரப்பட்டுள்ளன.

Printed at the Sadhu Press, 19, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by Rao Bahadur C.M. Ramachandran Chettiar, B.A.,B.L., for the Saiva Siddhanta MahaSamajam, at 9, Vaidyaramayyar St, Thyagarayanagar, Madras, P. I. Card No. M. S. 81.

691

istered No. M 2330.

691

"SIDDHANTHAM"
Vol. 20 – No. 6

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடனடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே'

. 20 | சர்வசித்து ஆனி 1947 ஜூன் | இதழ் 6

உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| ஒலிபரப்பு | ... 161 |
| . தலப்பகுதி—வேடன் பூசித்த புனிதத் தலம் | ... 169 |
| 3. சாத்திரப்பகுதி— | |
| 1. முழுமையும் முப்பொருளும் | ... 175 |
| 2. கிழவியின் சிவஞானம் | ... 177 |
| . சமயப்பகுதி—சமூவாய் உண்டோ ? | ... 180 |
| கவிப்பகுதி—ஒரு பாட்டில் கட்டளைகள் இரண்டு | ... 188 |
| . சரிதப்பகுதி—வயர் குடிகள் | ... 194 |
| 7. நூற்பகுதி—மிருகேந்திரக் கட்டுரை | ... 199 |
| 8 விரிவுரைப்பகுதி—சைவ இளைஞர் ம. த. உரை | ... 204 |


திராசிரியர் :
ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ., பி.
உதவிப் பத்திராசிரியர் : கி. சிவராமன், எம். ஏ.,

சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2.

## கோடை வகுப்பில் பொதுக் கூட்டங்கள்

ஒவ்வொரு நாள் மாலையிலும் ஸ்ரீ வில்லிபுத்தூரில் பல
இடங்களிலும் வேறுபல ஊர்களிலும் பொதுக் கூட்டங்கள்
நடைபெற்றன. முதல் நாள் கூட்டம் மே 17ம் தேதி
ஆண்டாள் கோயிலில் திரு. R. G. நல்லதற்றுலம் பிள்ளை
தலைமையில் திரு. திருமலைசுவாமி அய்யங்காரும், திரு. N.
இராமகிருஷ்ணனும் முறையே 'திருப்பாவையும் திருவெம்
பாவையும்', 'உலகச்சமயம்' என்னும் பொருள்பற்றியும்,
மே 18-ம் தேதி முனிசிபல் ஆபீசில் வக்கீல் திரு.
சிதம்பரம் பிள்ளையவர்கள் தலைமையில் திரு. கோவிந்த
னும், தூத்துக்குடி பாகம்பிரியாள் சங்கத் தலைவர் திரு.
சிவகாமி அம்மையாரும் 'அப்பர் கண்ட சைவம்',
'திருவாசகம்' என்னும் பொருள் பற்றியும், மே 19ம் தேதி
ஊருணிப்பட்டி மாணிக்கவாசக சங்கத்தில் திரு. கா. இராம
நாதன் செட்டியார் தலைமையில் திரு. ச. போத்தி மூப்பனர்,
திரு. ஆ. வ. ஆறுமுக மூப்பனர், திரு. ஆ. சுந்தர மகாலிங்கம்,
திரு. ஔவை-துரைசாமி பிள்ளையவர்கள் 'சேரமான் பெரு
மாள்', 'நன்றியறிதல்', 'ஔவையார்', 'அறஞ்செய விரும்பு'
என்னும் பொருள் பற்றியும், 20ம் தேதி மூன்று மைலில்
உள்ள விஷ்ணு பதியாகிய திருவண்ணாமலையில் தாசில்தார்
திரு. G. கலியாணம் M. A., தலைமையில் அலங்கார பட்டர்,
திரு. S. மயிலப்ப பிள்ளை, திரு. C. சுந்தரம் பிள்ளை 'மூர்த்தி
யமைப்பு', 'நீலகண்டர்', 'சிவஞான முனிவரும் செந்தமிழும்'
என்ற பொருள் பற்றியும், மே 21ம் தேதி இராஜபாளையம்
போர்டு ஹைஸ்கூலில் இராமகிருஷ்ண சேவா சங்கத்தின்
ஆதரவில் திரு. P. S. குமாரசுவாமி ராஜா தலைமையில்
திரு. G. கலியாணம் M. A., திரு. சிவகாமி அம்மையார்
'நாலுபேர் போன வழி', 'அருள் உருவம் உண்டு' என்ற
பொருள் குறித்தும், 22ம் தேதி முனிசிபல் ஆபீசில் திரு.
சிவகாமி அம்மையார் தலைமையில் திரு. T. K. சுப்பிரமணிய
பிள்ளை, இராவ்பகதூர் K. அரங்கசாமி முதலியார், B. A.,
'சுந்தரர்', 'திருக்குறளும் சமயமும்' என்ற பொருள்
குறித்தும், மறுநாள் ஆண்டாள் சந்நிதியில் கமிஷனர் திரு.
S. அரங்கசாமி முதலியார் தலைமையில் திரு. சின்னமணி
அம்மையார், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை 'சிவயோகம்

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 20 | சர்வசித்து ஆனி 1947 ஜூன் | இதழ் 6

1. பகுதி

## ஒலிபரப்பு

(பத்திராசிரியர்)

### 1. ஆன்ம உணர்ச்சி

"ஓர் இளைஞனுக்குப் பயிற்சி தரும் முறைகளில் அடிப்படையான கொள்கை, அவனுக்குள் ஆன்ம உணர்ச்சியைப் பெரும் பகுதியாக உண்டுபண்ணுவதேயாகும். அவ்வாறு எந்த நாட்டார் தங்கள் இளைஞர்களுக்கென்று ஏற்படுத்தியிருக்கும் பயிற்சியில் ஆன்மீக உணர்ச்சியைச் சேர்க்காமல் வாளா இருக்கின்றார்களோ, அந்த நாட்டார் நிரந்தரமான வெற்றியை அடையமாட்டார்கள்," என்று உயர்திரு "மாண்ட்கோமெரி" என்ற ஓர் அறிஞர் கூறியிருக்கிறார். இந்தக் கருத்தைச் சிறிது ஆராயுங்கள்.

தற்காலத்தில் நமது நாட்டில் முளைத்து வரும் ஒரு இயக்கத்தில் ஆன்மீக உணர்ச்சி இருக்கக்கூடாது என்ற கொள்கையே முதிர்ந்து கொண்டு வருகிறது. பகுத்தறிவு ஒன்று இருந்தால் போதுமானது என்ற அடிப்படையைக் கொண்டு உள்ளது அந்நோக்கம். தமிழ் அறிஞர்கள் பலபேர்

இந்த முறையில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த முறை பெருட பாலும் இந்து சமயத்தார்களிலேதான் பெருகிக்கொண்டு வருகிறது. இசுலாமியர்களிலும் கிறிஸ்துவர்களிலும் இந்த இயக்கம் வளரவில்லை. முளைக்கவுமில்லை. ஏனெனில் அச்சமயங் களில் இன்றும் ஆன்மீக உணர்ச்சி இளைஞர் பயிற்சியில் சிறந்து கிடக்கின்றது. ஆனால் இந்து வாலிபர்களில் ஆன்மீக உணர்ச்சி மறைவதற்குக் காரணம் பொருளற்ற சடங்குகளை யாகும். சடங்குகளைச் சுருக்கி ஆன்மீக உணர்ச்சியைப் புகட்டு வதே தக்க செயலாகும். சம்பந்தர் காலத்திலும் சடங்கு களுக்கு வீண்பெருமை கொடுத்ததினால் அல்லவோ சமணம் இழிவு அடைந்தது. அந்த நிலைமைக்கு நமது சமயவர்களும் போகாமல் ஆன்மீக உணர்ச்சியைப் பெருக்குவோமாக.

## 2. ஆசிரியர்கள் நிலைமை

சென்ற பெரும் போரின் காரணமாக அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் பள்ளிக்கூட ஆசிரியர்களில் 1940-41 ஆண்டில் இருந்த எண்ணிக்கையில் 100-க்கு 50 வீதம் தற்போது குறைந்துவிட்டார்களாம். அதனால் இப்போது 6000 பள்ளிகள் மூடப்பட்டும் போய்விட்டனவாம். கலாசாலை மாணவர்கள் ஆசிரியத் தொழிலுக்குச் செல்ல மறுக்கின்றார்களாம். இந்த நிலைமைக்குக் காரணம் போதாத ஊதியமும், ஆசிரியத் தொழிலில் பொதுமக்கள் வைத்திருக்கும் மதிப்புக் குறைவும், பெற்றோர்கள் பாடசாலைகளில் வைக்கவேண்டிய கவனக் குறைவுமேயாம் என்று கூறப்படுகிறது.

மேலே கூறிய நிலைகள் முற்றிலும் நமது நாட்டில் உண்டு. இதனை அறிந்து ஆசிரியர்கள், சிறப்பாகத் தொடக்கப் பள்ளி களில் ஈடுபடும் ஆசிரியர்கள், நாடு எங்கும் கிளர்ச்சி செய்து வருவதை நேரில் காண்கிறோம். அப்படியிருந்தும் அவ களுக்குத் தகுந்த பரிகாரம் கிடைத்தபாடில்லை. வயிற்றுக்குப்



போதிய கஞ்சி இல்லாமல் போனால் எவ்வாறு ஒருவர் பாடுபடக் கூடும்? பஞ்சாலைத் தொழிலாளி பெறும் ஊதியத்திலும் ஆசிரியன் ஊதியம் குறைவு. தச்சன் கொல்லன் முதலிய தொழிலாளியைக் காட்டிலும் குறைவான நிலையில் அறிவு பெற்ற ஆசிரியன் இருக்கிறான். இது இழிவானது அல்லவா?

ஆனால் இலங்கையைப் பாருங்கள். அங்கு விலைவாசிகள் ஏறத்தொடங்கவே ஆசிரியர்களின் ஊதியமும் உயர்த்தப் பட்டது. தொடக்கப் பாடசாலை ஆசிரியர்களுக்கு 100, 150ம் தமிழ்ப் பண்டிதர்களுக்கு 150, 200ம் உயர்தரப்பள்ளி ஆசிரியர் களுக்கு 200, 250ம் கிடைக்கின்றன. அந்தச் செழிப்பான நிலையில் இருந்ததினால் அன்றோ பள்ளி ஆசிரியர்களை சேர்ந்து ஒரு பெரிய அகில இலங்கைச் சைவ மகாநாடு நடத்தினார்கள். அவர்கள் சைவ சமயப் பிரசாரத்தில் ஈடுபட்ட நிலையை நேரில் கண்டு வியந்தேன். நமது நாட்டு ஆசிரியர்கள் இந்த நிலையை எப்போது அடையப்போகிறார்கள்?

## 3. சமய மாற்றம்

1946-ல் காதலிக் மதத்தார் ஐந்து லட்சம் மக்களைத் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டதாக ஒரு அறிக்கை கிடைத்திருக்கிறது. இந்த ஐந்து லட்ச மக்களும் பிறசமயங் களிலிருந்து வந்திருக்க வேண்டும் அல்லவா? இவர்கள் இவ்வாறு சமயம் மாறினதற்குப் பல வேறு காரணங்கள் இருக்கலாம். நம்பிக்கை ஒன்றே காரணம் என்று சொல்லு வதற்கில்லை. இவர்களில் இந்துக்களில் ஒரு பெரும் பகுதி இருக்கக்கூடும். இதனைத் தடுக்க இந்துக்கள் என்ன முயற்சி செய்தார்கள்; இனி செய்வார்கள்.

பெருவாரியான பேர் இவ்விதம் மாறினதற்குக் காரணம் என்ன? மாறுதல் செய்விப்பவர்களுக்குத் தம்மதத்தில் உள்ள பெருநம்பிக்கை ஒன்று. தம் சமயத்தை அனுசரித்தால் தான்

மனிதனுக்கு ஈடேற்றம் உண்டு என்ற நம்பிக்கை மற்றொன்று.
அதனாலே தம் மதத்தைப் பரவச்செய்வதில் ஒரு பெருத்த
ஆர்வம் தோன்றியிருப்பதே அதற்குக் காரணம் அல்லவா?

இதைப் போலவே கி. பி. ஆறு, ஏழு நூற்றாண்டுகளில்
தமிழ்நாட்டில் தங்கள் சமயத்தைப் பரப்ப வந்த சமணர்கள்
தீவிர வேலை செய்தார்கள். கோட்டி முதல் தொண்டமான்
வரை எல்லாரும் சமணர்கள் ஆனார்கள். அவ்வெற்றியில் சமண
குரவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. அம்மகிழ்ச்சியைப் போக்கடித்
தவர்கள் சம்பந்தரும் அப்பரும். வெகு எளிதாகத் திருநீறு
கொடுத்து எல்லாரையும் திருப்பிவிட்டார்கள். எண்ணிக்கை
யில் இருந்த நம்பிக்கை என்ன ஆயிற்று? இப்போதும் இந்துக்
கள் பிறசமயத்தாரைத் தம் மதத்தில் சேர்த்துக்கொண்டால்
எண்ணிக்கையில் பிறமதத்தார்களுக்கு இருக்கும் மோகம்
குறைந்துவிடும் அல்லவா?

## 4. இக்கரைக்கு அக்கரை பச்சை

நெடுந்தூரத்தில் இருந்து பார்த்தால் மலைத்தொடர்கள்
நீல நிறமாகவும் பெரும் சுவர்போலச் செங்குத்தாகவும்
கண்ணுக்கு இனிமையாகவும் தோன்றுகின்றன. அருகில்
சென்று பார்த்தால் கற்களும் குழிகளும் கள்ளிகளும் நிறைந்து
கரடுமுரடான பரப்பைக் கொண்டிருக்கும். ஆற்றின் இக்கரை
யில் இருந்தால் அக்கரை பச்சையாகத் தோன்றும். ஆற்றைக்
கடந்து அக்கரை சென்று பார்த்தால் நிலத்தில் உட்காரவும்
முடியாது, கால் வைக்கவும் அஞ்சுவோம். அத்தனை அசுத்த
மாக நிலம் இருக்கக்கூடும்.

நமதுநாட்டு ஆலயங்களில் ஆராதனை முதலிய சடங்குகள்
எந்த அறிவுள்ள மனிதனும் வெறுக்கத்தக்க முறையில் தற்
போது கையாளப்பட்டு வருகின்றன. மேற்பார்வையாளர்கள்
பண வருவாயைத்தான் கவனிக்கிறார்கள். பணிவிடையாளர்



களோ ஊதியத்தைத்தான் பெரும்பான்மையாக எண்ணுகிறார்
கள். வைதீக முறைகள் எக்கேடு கெட்டால் என்ன, எவ்வாறு
செய்தாலும் என்ன, யாருக்குத் தெரிகிறது, என்ற எண்ணமே
பெரும்பாலாய்த் திருத்தொண்டாற்றுகிறவர்களுடைய மனப்
போக்கு. இந்த நிலைமையில் நமது ஆலயங்கள் வாணிப விடுதி
கள் ஆகிக்கொண்டு வருகின்றன.

ஆனால் யாழ்ப்பாணச் சரகத்தில் உள்ள நிலை மிகப்
பரிசுத்தமானது என்று எண்ணி இருந்தேன். அங்கே நேரில்
சென்று பார்க்கையில் ஒரு சிறிது ஏமாற்றம் அடைந்தேன்.
கடலுக்கு அக்கரை அல்லவா? எல்லாம் பச்சைப்பசேல் என்று
தான் தோன்றும். நேரில் காண அங்கும் குறைவுகளைக் கண்
டேன். யாழ்ப்பாணத்து நல்லூர் கந்தகோட்டத்திற்குச்
சென்றேன். அது மிகவும் புனிதமான பண்டைக்கோயில்.
அன்பர்கள் ஆயிரக்கணக்கில் பெருமானை வணங்க வருவார்கள்.
எல்லாரும் மிகுந்த ஆசாரத்துடன் ஆலயத்திற்குள் நுழைவார்
கள். ஆலயத்திற்குள் மிகவும் துப்புரவாகத்தான் எல்லாம்
இருக்கின்றன. மிகுந்த மகிழ்ச்சியோடு நானும் இருந்தேன்.
ஆனால் தீபாராதனை ஆனதும் திருவிளக்குகளையும் தூபங்களை
யும் பணிவிடையாளன் வாயினால் ஊதியணைத்தான். இது
அனுசிதம் அல்லவோ? அர்த்தயாமக் கட்டளை 8 மணிக்குத்
தொடங்கி $8\frac{1}{2}$ மணிக்குள் முடிந்தது. பள்ளியறை உற்சவமும்
$8\frac{1}{2}$ மணிக்கே முடிவுபெற்றது. "விரைவில் படுக்கப்போ,
விரைவில் எழுந்திரு, நீ நீண்டநாள் பிழைப்பாய்" என்பது
ஆங்கிலப் பழமொழி. இம்மொழியை முருகப்பெருமானுக்கும்
அர்ச்சக மூர்த்திகள் கற்பிக்கிறார்கள்போலும். இம்மூர்த்திகள்
தென்னிந்தியாவிலிருந்து இந்த இறக்குமதியானவர்களோ
என்று எண்ணினேன்.

## 5. வழிபாட்டு ஒழுக்கம்

" வனமுறை வேடன் அருளியபூசை மகிழ் கதிர்காமம் " என்று ஓர் அன்பன் கதிர்காமத்தைப் பாடத்தொடங்கினல், நமது நெஞ்சு என்ன குதூகலம் அடைகிறது, சொல்லவும் வேண்டுமா ? கதிர்காமம் என்ற ஒரு சொல்லைக்கேட்டதும் மனதில் ஒருவித பரபரப்பு தோன்றும். அதுவே அந்தப் புனிதத்தலத்தின் மகிமையைக் காட்டுகிறது. அந்த இடத்தின் இயற்கை அழகுகள் இப்புனிதத்தன்மைக்கு ஏற்றதாகவே இருக்கின்றன. ஆனல் அங்குள்ள மக்களின் நிலைமையைச் சிறிது அறிந்தால் நாம் என்ன சொல்லுவோமோ. பரபரப்பு எங்கு குறைந்துவிடுமோ என்று கேட்டு விடுவோமோ.

சமீபத்தில் கதிர்காமம் சென்றேன். ஆலயம் சர்வ சாதாரணமானது. வெறும் ஓட்டுக் கட்டடம். ஆனல் அங்கு புனிதம் இருக்கக்கூடாதா ? இருக்கலாம். ஆராதனையைப் பார்த்தேன். பெருமானிடம் நம்பிக்கை கொண்டு இருக்க முடியாத சிங்களப்பூசாரி பூசை செய்தான். அவன் ஆடையைப் பார்த்தேன். அடியில் லுங்கி (சாரம்) மேலே அங்கி(சொக்காய்). அவன் குளித்துவிட்டு வந்தானே என்று யாரைக் கேட்பது ? அவன் குடும்பத்தில் இருப்பவன்.வீட்டுப் பெண்கள் ஐரோப்பிய உடையில் திகழ்ந்தார்கள். இப்படிப்பட்ட ஆசாரத்தில் முருகக் கடவுள் வழிபாடு நம்நாட்டில் ஏற்படுமா ?

மூலத்தானம் திரையால் மூடப்பட்டுள்ளது. அன்பர்கள் காணும் பூசை அந்தத் திரைக்குச் செய்யும் பூசைதான். உள்ளே செல்லும் கப்புருளன் என்ற அப்பூசாரி என்ன செய்கிறன் என்று யாரும் அறியார்கள். மூலத்தானம் மூடப்பட்டுள்ளது என்றும், அங்கிருக்கும் மூர்த்தியை அந்தக் கப்புருளனும் அறியான் என்றும், அவன் எதிரியாகிய வடநாட்டுப் பூசாரி சொன்னர். இவ்விரு பூசாரிமார்களுக்கும் எப்போதும்



சண்டை. காரணம் கொலையும் நடக்கக்கூடிய பகைமை. இந்த நிலைமைக்கு இப்புனித இடம் இப்போது இழிந்துவிட்டது. நமது புனிதத்தலங்கள் தொழிற்சாலைகள் ஆக்கிவிட்ட காரணத்தினல் அல்லவா இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கருதியே 2000 ஆண்டுகளுக்கு முந்தி " இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆய் அலன் " என்று சங்கப்புலவர் அறஞ்செய்தலை குறித்துக் கூறியுள்ளார். அப்படியிருக்க சமய நிலையங்களைப்பற்றி இன்னும் உறுதியாக இருக்கவேண்டாமா ? அவைகள் புனித இடங்கள், விவகார இடங்கள் அல்ல என்று எண்ண வேண்டும்.

## 6. சில தகாத வழக்கங்கள்

தவத்தின் பெயரால் உடலை வருத்தித் துன்புறுத்தும் செயல்கள் பல நமது நாட்டில் நடைபெறுகின்றன. திருவிழாக் காலங்களில் பொருள் பெறும் பொருட்டு இரவலர்கள் இக்கொடிய வழக்கங்களைக் கைக்கொள்ளுதல் உண்டு. அவர்களைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. குடும்பங்களில் ஏதாவது வருத்தம் நேரிடின் அதனை நீக்குதற் பொருட்டுக் கோரிக்கைகளைச் செய்வதாக வேண்டிக்கொண்டு உடம்புகளைத் துன்புறுத்துவது சைவசமயத்திற்கு ஏற்றதல்ல. நாயனரும் இதைப்பற்றிக் கண்டித்துள்ளார். கன்னம், நாக்கு, முதுகு இவைகளில் அலகுகளை ஏற்றிக்கொண்டு ஆலயங்களுக்குக் காவடி யெடுப்பதும், தேர் இழுப்பதும், அக்கினிகுண்டம் மிதித்தலும், நெருப்புச்சட்டி எடுத்தலும் முதலிய கொடிய செயல்கள் தூய்மையான சமயத்திற்கு அழகோ ? இவைகள் பழைய கிராமத் தெய்வங்களின் பழக்கங்கள் அல்லவா ? இவைகளும் கடல்கடந்து இலங்கைக்குக் குடியேறிப்போனது ஒரு விந்தை.

தேயிலைத் தோட்டங்களுக்குக் குடியேறிச் சென்ற பாமரத் தொழிலாளர்கள் இவ்விதக் கொடிய பழக்கங்களை

மதத்தின் பேரால் அங்கேயும் செய்யத் தொடங்கியிருக்கிறார்
கள். அத்தகைய மக்களே பெரும்பான்மையாகக் கதிர்காமம்
செல்லுவது உண்டு. அங்கே தூய்மையான தொழுகையைக்
கொள்ளுவதற்கு மாறாக இக்கொடிய செயல்களைக் கொள்ளு
வது தகாத செயல் ஆகும். கல்வி அறிவில்லாத மக்கள்
நம்பிக்கை நிரம்பியவர்களாகி இக்கொடிய செயல்களை இக்கால
மும் செய்கிறார்கள். இவைகள் நீங்கித் தூய்மையான வணக்கம்
எப்போது நடைபெறுமோ.

இலங்கையில் தமிழ் மக்கள் எல்லாரும் சைவர்களே.
அப்படியிருந்தும் சைவ உணவில் அவர்கள் எல்லாருக்கும்
நம்பிக்கையில்லை எனக்கேட்டு வருந்த வேண்டியிருக்கிறது. சில
ஊர்களில் துட்ட தேவதை ஆலயங்கள் இன்னமும்
இருக்கின்றன. அவைகளில் உயிர்ப்பலி நடக்கிறதாம். இது
மூடக்கொள்கை என்று சைவர்கள் அறிவார்கள். அப்படி
யிருந்தும் ஏனோ இச்செயல் செய்யப்படுகின்றது. கடவுளின்
பெயரால் கடவுள் படைத்த உயிரைக் கடவுளின் முன்பு
கொன்றால் அக்கடவுளுக்கு இன்பமாக இருக்குமா? தெல்லிப்
பழைமாவிட்ட புரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் ஒரு பள்ளி
மாணவன் இந்தக் கெட்ட வழக்கத்தைக் கண்டித்து ஒரு கதை
சொன்னான். அது வெகு உருக்கமாகவும் நீதிபுகட்டுவதாகவும்
இருந்தது. இதனை யாழ்ப்பாண மாகாணத்துச் சைவமக்கள்
அறிந்து போற்றுவார்களாக.

2. தலப்பகுதி

# வேடன் பூசித்த புனிதத் தலம்

(கதிர்காமம்)

## 1. வனத்தில் கோயில்

ஒரு பெரிய வனாந்திரம். மரங்கள் வானை அளாவி நிற்கின்றன. இடையிடையே மலைகள் அடர்ந்திருக்கின்றன. இவைகளிடையே பள்ளத்தாக்கில் ஒரு கொடிவழி வளைந்து வளைந்து செல்கின்றது. அவ்வழியே மேடும் பள்ளமும் தாண்டிப் பத்து கல் சென்றால் ஒரு குளிர்ந்த நீரோடை ஓடும். கோடைக்காலத்தில் மூன்றடி நீர் இருக்கும். மழைக்காலத்தில் பத்தடி வெள்ளம் பெருகும். அப்போது கயிற்றுப்பாலத்தின் வழியேதான் அதனைக் கடக்கவேண்டும். எதிர்க்கரையில் இருதெரு அடங்கிய ஒரு சிற்றூர். அதன் மேற்புறத்தில் ஒரு கோயில் இருக்கிறது. அதுதான் புகழ்பெற்ற இப்புனிதத் தலம். ஓடைதான் மாணிக்கக் கங்கை.

## 2. கோயில் அமைப்பு

கோயில் இரண்டு பகுதிகளைக்கொண்டது. ஒவ்வொருபகுதியும் ஒவ்வொரு திருமதிலையும் ஒரு வாயிலையும் கொண்டது. தென்பகுதியின் நடுவில் முருகக்கடவுள் ஆலயமும் அதற்கடுத்துப் பிள்ளையார் ஆலயமும் இருக்கின்றன. பெருமாள் ஆலயம் ஒன்று புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. இவைகளுக்கு ஒருபுறமாக யானை நிற்கும் ஒரு சிறு கொட்டிலிருக்கிறது. திருவிழாக் காலத்தில் அங்கே யானையை நிறுத்தி அதன்மீது மூர்த்தியை ஏற்றுவார்கள். இவ்வாலயங்களுக்குப் பின்னால் ஒரு பெரிய அரசமர மேடையிருக்கிறது. அதற்கும் பின்னால் மதில் ஓரமாகப் பத்தினிக் கடவுள் கோயில் முதலியவைகளிருக்கின்றன.

## 3. அம்மன் கோயில்கள்

வடபுறப்பகுதியில் தெய்வயானையம்மன் கோயிலிருக்
கின்றது. அதற்குக் கிழக்கே அதனை வழிபடும் வடநாட்டு
அந்தணன் மடம் இருக்கின்றது. அதற்கு வெளியே மடாதிபதி
கள் சமாதிகள் இருக்கின்றன. இனி ஊரின் கிழபுறத்தில் ஒரு
பெரிய வெள்ளரசு நிற்கிறது. அதனை பௌத்தர்கள் வணங்கு
கிறார்கள். அதற்கும் கிழக்கே வள்ளியம்மை கோயில் ஒன்று
உண்டு. அதற்கு ஒரு புறம் ஒரு பெரியவரின் சமாதியும்
மறுபுறம் ஒரு இசுலாமிய துறவியின் சமாதியும் இருக்கின்றன.
ஆகவே இத்தலத்தைச் சைவர்களும், பௌத்தர்களும்,
இசுலாமியர்களும் புனிதமாகக் கொண்டாடுகிறார்கள்.

## 4. ஊர் அமைப்பு

ஊரிலுள்ள இரண்டு தெருக்களும் ஆற்றைப்போல
அதனை ஒட்டி கீழ்மேலாக அமைந்திருக்கின்றன. பொது
வாக அன்பர்கள் தங்குவதற்காக ஏற்பட்ட மடங்களே அங்கு
உள்ளன. நகரத்தார் மடமும் சடையம்மை மடமும் பெரி
யவை. சில வீடுகளும் கடைகளும் இருக்கின்றன. அரசிய
லார் வைத்தியசாலையும் ஒன்றுண்டு. நிரந்தரமான குடிகள்
சுமார் 150-ம் வழிபடும் மக்கள் சுமார் 100 பேரும் எப்
போதும் இருப்பார்கள். ஆனால் திருவிழாக் காலங்களில்
பல்லாயிரம் பேர் வருவார்கள்.

## 5. வழிபாடு

முருகக் கடவுள் வள்ளியம்மை கோயில்களில் கப்புறாளன்
என்ற சிங்களப் பூசாரி பூசிக்கிறான். தெய்வயானைக் கோயிலில்
வடநாட்டு பிராமணன் பூசிக்கின்றான். பெரும் பான்மையாக
சைவர்களால் போற்றப்பட்ட போதிலும் சைவப் பூசாரி
இங்கு இல்லை. பூசாரிகள் வாயைத் துணியால் கட்டிக்கொண்டு



பூசை செய்வார்கள். மூலத்தானத்திற்கு முன்னால் திரை
போடப்பட்டிருக்கும். அன்பர்கள் வெளியே நிற்கவேண்டும்.
பூசாரி முதலில் அத்திரையிலுள்ள உருவத்திற்குப் பூசை செய்
வான். பிறகு உள்ளே சென்று பூசை செய்வான். வெளியில்
வந்து தீபத்தைக் காட்டித் திருநீறும் பிரசாதமும் கொடுப்பான்.
அன்பர்கள் திரைக்குள் இருக்கும் மூர்த்தியைப் பார்க்க முடி
யாது. பூசாரியும் அதைப்பற்றிச் சொல்வதும் கிடையாது.

## 6. திருவிழா

ஆடி மாதத்தில் பத்துநாள் திருவிழா நடக்கும். பல்லா
யிரக் கணக்கான தமிழர்கள் அதற்குச் செல்லுவார்கள். தினந்
தோறும் திரைக்குள்ளிருந்து ஒரு பெட்டியைப் பூசாரி
வெளியே எடுத்து வருவான். அதை ஒரு யானையின்மேல்
ஏற்றிச் செல்வார்கள். அப்பெட்டிக்குத்தான் திருஉலா நடக்
கும். ஆயிரக் கணக்கான பக்தர்கள் முன் செல்வார்கள்.
வள்ளியம்மைக் கோயிலில் சிறிது நேரம் அம் மூர்த்தியை
எழுந்தருளப் பண்ணுவார்கள். பிறகு பூசை முடிந்ததும் அது
யானையின் பேரில் ஊர்வலம் கொண்டு செல்லப்படும். பிறகு
அப்பெட்டி மூலத்தானம் சேர்க்கப்படும். அப்பெட்டியில்
என்ன இருக்கிறதென்று யாருக்கும் தெரியாது. அப்பெட்டியே
புனிதப் பொருளாக அன்பர்கள் வழிபடுவார்கள்.

## 7. வேண்டுதல்கள்

திருவிழாவுக்குச் செல்லுபவர்கள் சைவர்களே. அவர்
களில் பெரும் பான்மையானவர்கள் தேயிலைத் தோட்டங்களில்
வேலை செய்யும் ஆட்கள். இவர்கள் இங்கே எழுந்தருளியிருக்
கும் மூர்த்தியின் பேரில் மிதமிஞ்சிய அன்பு கொண்டவர்கள்.
தங்கள் குடும்பங்களில் நோய் முதலியவை ஏற்பட்டால்
வேண்டுதல்களைக் கோரிக்கொள்வார்கள். அடுத்த திருவிழா
வில் காவடி எடுத்துக்கொண்டுபோய் அதனை நிறைவேற்றுவார்

கள். மாணிக்கக் கங்கையிலிருந்து குளித்துவிட்டு அலகுகள் குத்திக்கொண்டு ஆலயம் செல்வார்கள், பூத்தேர் இழுப்பதும் உண்டு. இவர்களுடைய தவச் செயல்கள் கொடியவைகளாகப் பார்க்கின்றவர்களுக்குத் தோன்றின போதிலும் அதனைச் செய்கிறவர்கள் வருத்தப்படுவதாகத் தெரிவதில்லை. இவ்வாறு வெகு மும்முறமாக திருவிழா நடைபெறும்.

## 8. மேல் பார்வை

ஆலயத்துக் கட்டடங்கள் சாதாரணமானவை. செங்கல்லாலும் மரத்தாலும் வில்லைகளாலும் கட்டப்பட்டவை. பிள்ளையார் கோயில் மாத்திரம் இப்போது கருங்கல்லால் கட்டப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தின் மேற் பார்வை சிங்களக் கப்புறாளர்களாலும் வடநாட்டு அந்தணர்களாலும் ஆளப்படுகின்றன. ஆலய வருவாய் இவ்விருவருமே பங்கிட்டுக் கொள்ளுகிறார்கள். இவ்விருவருக்கும் அடிக்கடி விவகாரங்கள் நடைபெறுகின்றன. ஆனால் சைவ மக்கள் இதனைப்பற்றி ஆராய்வதே இல்லை. மிதமிஞ்சிய ஆர்வம் இருக்கும்போது விவகாரம் மனதில் தோன்றுமா ?

## 9. சரித்திரம்

இத்தலம் மிகப் பழமையானது. ஆதியில் இப்பகுதியில் வேடர்கள் என்ற காட்டு மனிதர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் வழிபட்டதை அருணகிரிநாதர் "வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர் காமம் உடையோனே" என்று திருப்புகழில் அருளியிருக்கின்றார். பிறகு இந்நாட்டை ஆண்ட சிங்கள அரசர்கள் இவ்வாலயத்தைப் புதுப்பித்தார்கள். அவர்களில் ஓர் அரசனை லோகேசுவரன் (1059 கி. பி.) என்போன் கதிர் காமத்தைத் தலை நகராக்கி இங்கே ஆண்டான். ஆகவே சிங்களவர்கள் பூசாரிகளானது வியப்பல்ல. பதினாறுவது நூற்றாண்டில் இந்நாட்டில் புகுந்த போர்த்துகல் நாட்டு



பரங்கியர்கள் திருகோணமலை முதலிய கோயில்களை அழித்ததுபோல இதனையும் அழிக்க வந்தார்கள். ஆனால் முருகப் பெருமானின் திருவருளால் வனாந்திரத்தில் சுற்றிச்சுற்றி இடந்தெரியாமல் திரும்பி விட்டார்களாம். 150 ஆண்டுகளுக்கு முந்தி பால்குடி பாபா என்ற ஒரு வடநாட்டு அந்தணர் இங்கே வந்தார். அவர் திருப்பணி செய்து ஆலயத்தின் மேற்பார்வை பெற்றார். பிறகு பலவிவகாரங்களாகி இப்போது ஆலயப் பார்வை இருபிரிவாகி இருக்கிறது.

## 10. தல மகிமை

இத்தலம் அருணகிரி நாதரால் பலவாறு புகழப்பெற்று உள்ளது. சைவமக்கள் மிகுந்த ஆர்வத்தோடு செல்லுகிறார்கள். பல அற்புதங்கள் நிகழ்ந்ததாக ஐதீகங்கள் உண்டு. ஒரு வயது முதிர்ந்த அம்மை அருகில் உள்ள செல்லக் கதிர் காமத்திற்குச் செல்லுகையில் வழிபிசகிப்போய் இருபது நாள் வரை ஊண் உணவுமின்றி இருந்தனளாம். பெருமான் தோன்றி ஊண் அளித்தாராம். பிறகு கதிர்காமம் வந்து சேர்ந்தனளாம். இதைப்போல பல அற்புதக் கதைகள் உண்டு.

## 11. அருகிலுள்ள புனித இடங்கள்

அருகில் மூன்று கல் அளவில் உள்ளது செல்லக் கதிர் காமம் என்ற தலம். இது வனத்தின் நடுவில் உள்ளது. காட்டு மிருகங்கள் உள்ள பயங்கரமான வன இடமெனினும் ஆயிரக் கணக்கான மக்கள் அபாயமின்றிச் செல்வார்கள். இனி 5 கல் அளவில் உள்ளது கதிரமலை. இதன்மேல் ஏறுவது கடினம். அங்கே இருப்பது வெற்றிவேல். இங்கேயும் யாத்திரிகள் சென்று வழிபடுவார்கள்.

## 12. பிரபந்தங்கள்

கதிர்காமத்தைப்பற்றித் திருப்புகழையன்றி கதிரைமலைப் பள்ளு, கதிர் காமப் பிள்ளைத் தமிழ் முதலிய அருமையான நூல்கள் உண்டு. பிள்ளைத் தமிழ் பாடியவர் கருணாலய பாண்டியப் புலவர். இவ்விரண்டு நூல்களும் பல குறிப்புரைகளோடு வெளிவந்துள்ளன. இவைகளையன்றி, கதிரேசன் பேரில் பேரின்பக்காதல், ஆனந்தக் களிப்பு, ஏசல், கும்மி, க்ஷேத்திர மான்மியம், மாலை, சந்தப் பதிகம். பதிகம், தாண்டகம், சிந்து, கீர்த்தனம், தோத்திரப்பாமாலை, மெய்ஞ்ஞான மாலை, கலம்பகம், யாத்திரை முதலிய பல நூல்கள் வெளிவந்துள்ளன. மக்கள் நெஞ்சில் எழும் உணர்ச்சிகளை நூல் மூலமாக வெளிவந்தவற்றைத் தொகுத்து வைத்தாலே ஒரு கல்விக் களஞ்சியம் ஆகும்.

## 13. அடையும் வழி

இலங்கையின் தலைநகரிலிருந்து காலி வழியாக மாத்தறை என்ற ஊரைப் புகைவண்டி மூலமாக அடையலாம். அதன் நீளம் 125 கல். மாத்தறையிலிருந்து விசை வண்டி (மோட்டார்) 65 மைல் சென்றால் திசை மாறாமை என்ற ஊர் அடையலாம். அது செழிப்பான ஊர். தங்க இடம் உண்டு. அங்கிருந்து 11 கல் காட்டுவழியாகச் சென்றால் கதிர் காமம் அடையலாம். இது கரையோரமான வழி. கிழக்குக் கரையோரமாக மட்டக் களப்பிலிருந்து ஒரு வழியும், மலை நாட்டு வழியாக வண்டாரவளையிலிருந்து ஒரு வழியும் இருக்கின்றன. இவைகள் மிகக் கடுமையானவைகள். தமிழர்கள் கொழும்பிலிருந்து செல்வதே நல்லது.

## 14. ஒழிபு

பொதுவாகக் கதிர்காம யாத்திரைக்கு ஆடி மாதத்தில் திருவிழாவின்போது மிகுதியாக மக்கள் செல்லுவார்கள். அப்



போது சென்றால் பல வசதிகள் கிடைக்கும். ஆனால் அமைதியாகத் தரிசனம் செய்யமுடியாது. சாதாரண நாள்களில் சென்றால் வெகு நன்றாக எல்லாவற்றையும் பார்க்கக்கூடும். இந்தக் காலத்தில் விசைவண்டி வசதி இருக்கும்போது எந்தச் சமயத்திலும் செல்லலாம். அங்கு சிலநாள் தங்கி இருக்க வேண்டும் என்றால் மலைச்சுரம் வராத பருவத்தில் செல்வதே நல்லது.

---

## 3. சாத்திரப் பகுதி

# முழுமையும் முப்பொருளும்

**(சிவக்கவி மணியவர்கள் கூறியது)**

பல ஆண்டுகளின் முன்னர் சென்னையில் ஒரு சைவ சமயக் கூட்டம் கூடிற்று. அப்போது பல அரிய பெரிய புலவர்கள் வந்திருந்தார்கள். கோவையிலிருந்து தமிழ்ப் பண்டிதர் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் தமிழ்ப் புலமையிலும் சைவ ஒழுக்கத்திலும் மிகச் சிறந்தவர்கள். ஆனால் நகர வாழ்க்கையில் மிகுதியாக ஈடுபடாதவர்கள். அச்சபைக்கு ஓர் அத்துவைதி ஒருவர் வந்து உட்கார்ந்தார். அவரோ தருக்க வாதத்தில் புகழ்பெற்றவர். எந்த சபையிலும் சிக்கலான கேள்விகளைக் கேட்டுப் பேச்சாளர்களையும் தலைவர்களையும் திண்டாடச் செய்பவர். அப்படிச் செய்து பிற சமயிகளைக் கோபப்படுத்துவதே அவருடைய தொழில். ஆகவே அவரைக் கண்டால் சாதுவான அறிஞர்களுக்கு மிகுந்த அச்சம். அவர் வந்ததைக் கண்டதும் சில பெரியார்கள் விலகத் தொடங்கினார்கள். அங்கு வந்திருந்த ஓர் அறிஞர் மெதுவாகத் திருச்சிற்றம்பலப் பிள்ளையவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டு மெல்ல புறத்தே நின்றார். இச்சூதுவாதங்

கலை அறியாத பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள். கூட்டம் தொடங்கியது.

அங்கு வந்திருந்த அத்துவைதியார் தலைவரையும் கேள்வி கேட்கும் தன்மை உடையவர் என்று கூறினோம். சிறிது நேரத்திற்குள் அந்த பாணத்தைவிடத் தொடங்கினார். 'கடவுள் பூர்ணம் ஆனவர் அல்லவா? என்றும் உள்ளவர் அல்லவா? பசு பாசம்போன்ற வேறு பொருள்கள் என்றும்உள்ள பொருள்கள் ஆகஇருப்பின் கடவுள் பூர்ணத்தன்மைக்கு இழுக்கு அல்லவா? கடவுள் உள்ளபோது வேறு முழுப்பொருள்கள் எவ்வாறு இருக்கமுடியும்' என்றார். இந்த கேள்வியை அவர் போடவே சபையில் இருந்தவர்கள் திடுக்கிட்டுப்போனார்கள். இக்கேள்விக்கு என்ன விடை கூறப்போகிறார்கள் தலைவர் என்று அஞ்சினார்கள். பிள்ளையவர்கள் அஞ்சா நெஞ்சுபடைத்தவர்கள். ஆனால் பொறுமையே உருவமாக உள்ளவர்கள். சமயத்திற்கு ஏற்ற கூரியமதி உடையவர்கள். உடனே அடியிற்கண்ட விடை அளித்தார்கள்.

"ஓர் அறையில் விளக்கு ஒன்று எரிகிறது. அவ்விளக்கின் ஒளி அறைமுழுதும் பரவியிருக்கிறது. அது முழுமைத் தன்மை பொருந்தி உள்ளது தானே."

"ஆமாம்."

"அதே அறையில் வேறொரு விளக்கு வைக்க முடியாதா?"

"முடியும்."

"அவ்விளக்கும் அதே ஒளி தாராதா? அதுவும் முழுமை பெற்றது தானே?"

"ஆமாம்."

"அப்படியானால் ஒரு முழுமைப்பொருள் உள்ள இடத்தில் வேறொரு முழுமைப்பொருள் இருப்பதில் இழுக்கு இல்லையே!"



இவ்விடையைக் கேட்டு அத்துவைதி விலவிலத்துப் போனார். மறுப்பேச்சின்றி அமர்ந்துவிட்டார். அதனைக்கண்ட பிள்ளையவர்கள் அவர்மீது இரக்கம்கொண்டு அடியிற் கண்டபடி கூறினார்.

"ஆனால் ஒன்று. அறிவுமயமான கடவுளும், அறிவில்லாத உலகமும் ஒரே தன்மையான முழுமைப்பொருள் ஆகுமா? என்று கேளுங்கள். விளக்கு ஒன்றை இரண்டிற்கும் உவமை சொல்வது ஏகதேசமாகத்தான். உள்ள பொருள் இரண்டு இருக்கலாம் என்பதற்காகத்தான் அது சொல்லப்பட்டது. கடவுள் அறிவுப்பொருள், உலகம் அறிவு இல்லாத பொருள். இரண்டும் இயல்பு முறையில் வெவ்வேறு தன்மை உள்ள பொருள்கள். ஆகவே அவைகள் ஒரே இடத்தில் ஏன் இருக்கலாகாது? ஆதலினால் முப்பொருள்களும் உள்ள பொருள்களே" என்று விவரித்துப் பேசினார். அத்துவைதி திருப்தி அடைந்து கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டார்.

---

## 2. கிழவியின் சிவஞானம்*

### ஒரு சிறுகதை

நான் தமிழ் படித்தவன். பாட்டும் எழுதவரும். இவ்விரண்டும் இருந்தால் போதும், வறுமை என்னும் பேய் ஒருவனை உறவுகொண்டாடிக் கொண்டு அணையும். ஆகவே எனக்குக் குறைவுகள் பல. அவைகளை நிறைவுபடுத்துவதற்குப் பலபேரிடம் கோரிக்கைகளை எடுத்துக்கொண்டு செல்லவேண்டி வரும். அப்படிப்பட்டவர்கள் பலவிதமாக இருப்பர். அவர்கள் எனக்குக் கொடுத்த பலவித வரவேற்புகளிலிருந்து பல படிப்

* இந்த வரலாறு ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் ஒரு பிரசங்கத்தில் சொன்னதை வைத்துக்கொண்டு எழுதியது

புக்களை அறிந்துகொண்டதுண்டு. சிலரைச் சந்தித்துப் பலபடிப்பினைகளைக் கற்றுக்கொண்டேன். சிலரைச் சந்திக்காமலே பல படிப்புக்களைக் கற்றதுண்டு. மகன் இறக்கும மட்டும் படிக்கலாமல்லவா? அந்த அனுபவம் எனக்கு மிகுதியும் உண்டு. நான் ஒருமுறை கற்றுக்கொண்ட படிப்பினையை இங்கு எழுதுகிறேன்.

ஒருநாள் ஓர் அவசியமான கோரிக்கை ஒன்று வந்துவிட்டது. அதைப்பற்றி இரவு முழுவதும் சிந்தித்துக்கொண்டே இருந்தேன். அடுத்த ஊரில் ஒரு தனிகர் இருக்கிறார் என்ற ஞாபகம் வந்தது. அவர் சமீபத்தில் இலங்கைக்குச் சென்று பெரும்பொருள் சம்பாதித்து வந்திருக்கிறார் என்றும் பல நிலங்களை ஒன்றுக்கு மும்மடங்கு பொருள் கொண்டு வாங்குகிறார் என்றும் வதந்தி இருந்தது. இலங்கைக்குச் சென்றிருந்ததினால் அவருக்குத் தமிழ் ஞானம் இருக்கும் என்று யூகித்து அவரிடம் எனது தமிழ்ப்புலமையைக் காட்டினால் காரியம் சித்திக்கும் என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டு அவர்மீது ஒரு வாழ்த்துப்பா பாடி அழகிய தாளில் தீட்டிக்கொண்டேன். காலை விடிந்தது. சிற்றுண்டி அருந்திவிட்டு அவ்வூருக்கு நடந்துசென்றேன்.

ஊர் வாயிலில் ஒரு அரசமரமேடை இருந்தது. அதன் மீது ஒரு முதிய அம்மை உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவளை விளித்து, "அம்மா இலங்கையிலிருந்து புதிதாக இவ்வூர் வந்திருக்கும் வர்த்தகர் எந்தத் தெருவில் இருக்கிறார்" என்று கேட்டேன்.

"சுவாமீ, அந்த ஆணவம் பிடித்த பணக்காரனையா கேட்கிறீர்கள்? அவன் உடை என்ன, தலைப்பாகை என்ன, உத்தரியம் என்ன, ஜோடு என்ன? நீங்கள் சாதுவாகத் தோன்றுகிறீர்கள். அவனிடம் உறவு வைத்துக்கொள்ளுதல் சரியல்ல" என்று வெடுக்கென்று சொன்னாள். 'இதென்ன இறங்குந்துறை நீச்சாயிருக்கிறதே' என்று எண்ணி வீடு



திரும்பினேன். ஆணவத்துடைய இலக்கணம் இக்கல்லாத கிழவி அறிந்திருக்கிறாள் என்று வியந்தேன்.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. என்னுடைய குறைவுகள் தீர்ந்தபாடில்லை. புதிதான கோரிக்கை ஒன்று வந்தது. மீண்டும் அச்சீமானைக் காணலாம், இப்போது அவனுடைய குணம் மாறியிருக்கக்கூடும் என்று எண்ணி அவ்வூர் சென்றேன். அதே அரசமரத்து மேடையின்மேல் அதே முதியவள் இருந்தாள். "சுவாமி, என்ன சங்கதி" என்று விளித்தாள். பேச மனம் சகிக்கவில்லை. இருந்தாலும் என்ன செய்வது. "அந்த இலங்கை வர்த்தகனைக்காண வந்தேன்" என்றேன். "சுவாமி, அவனை ஏன் காண்கிறீர்கள்? அவன் இப்போது வேசியர் மாயையில் சிக்கி இருக்கிறான். அவனிடம் எதுவும் எதிர்பார்க்க முடியாது" என்றாள். "ஆகா, ஆணவத்திலிருந்து மாயையில் இறங்கி விட்டானா இவன்? இதனை இக்கிழவி எப்படி அறிந்தாள்" என்று எண்ணிக்கொண்டே திரும்பினேன்.

மறுபடியும் இரண்டு ஆண்டுகள் சென்றன. மீண்டும் புதிய குறைவு ஒன்று ஏற்பட்டது. அதனைத் தீர்ப்பதற்கு எந்த முறையும் தோன்றவில்லை. இலங்கை வர்த்தகன் நினைவே வந்தது. உடனே புறப்பட்டேன். என் விதியைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? அதே அரசமரத்து மேடையில் அக்கிழவியே உட்கார்ந்துகொண்டிருந்தாள். இவளுக்குச் சாவே வராதா என்றும் நினைக்கவேண்டி வந்தது. எனக்கு இருமுறை ஆசிரியை ஆனாள். அவள் சாகவேண்டும் என்று எண்ணினது அபசாரம் என்று எண்ணியே நொந்துகொண்டு அவளைத் தவிர்க்க முடியாமல் எதிரே சென்று "அம்மா, அந்த இலங்கை வர்த்தகன் எப்படி இருக்கிறான்" என்றேன். "அவனா, இப்போது நோய் வாய்ப்பட்டுக் கருமத்தை அனுபவித்து வருகிறான்" என்றாள். சரி, இனி பயனில்லை என்று எண்ணி அம்முதியவளுக்கு வணக்கம் சொல்லி விட்டுத்

திரும்பினேன். ஒரு கல்லாதப் பட்டிக்காட்டுக் கிழவி எத்தனை அநுபவம் படைத்திருக்கிறாள். அவள் வாயில் வருவது எல்லாம் சித்தாந்த உண்மையாகவே இருக்கின்றது என்று எண்ணினேன். ஒரே ஆள் ஆணவம் பிடித்திருந்தான். அப்போது பணம் இருந்தது. அதனைக் கெட்ட வழியில் செல வழித்து வேசியர் மாயையில் விழுந்தான். அதன் காரணமாக நோய் என்னும் கருமத்தை அநுபவிக்கிறான். இம்மூன்று மலங்களின் இலக்கணங்களை கற்றறிந்தவர்களும் அறிய முடிவதில்லை. கிழவி வெறும் உலக அநுபவத்தில் இச்சொற் களை ஆண்டுவிட்டாள் என்று வியப்பு அடைந்தேன். என் காரியம் சித்திக்காமல் போனபோதிலும் மும்மலங்களின் இலக்கணங்களை ஒரு கல்லாத கிழவியிடம் அறிந்தேன் என்று மிக மகிழ்ச்சியுடன் வீடுபோய்ச் சேர்ந்தேன்.

---

## 4. சமயப் பகுதி

# கழுவாய் உண்டோ?

(பண்டிதர். அ. கிருஷ்ணசாமி நாயுடு)

கழுவாய், பிராயச்சித்தம், பாவமன்னிப்பு, சாந்தி முதலியன ஒரு பொருளைக் கொண்டன. இக் கழுவாய் முதலியன எதற்காக ஆன்றோர்களால் ஏற்படுத்தப்பட்டன என்பதை ஆராய்தல் வேண்டும். மக்கள் எவ்வளவு தெரிந்தவர்களாயிருந்தபோதிலும் தெரியாமல் தவறு செய்துவிடுகின்றனர். தெரியாமல் செய்வதற்குத்தான் மன்னிப்பு. அதைத்தான் பாவ மன்னிப்பு என்பர். முதலில் தெரியாமல் செய்து மன்னிப்புப் பெற்று வந்த மனிதர் வரவரத் தெரிந்தும் செய்து மன்னிப்புப் பெறலாயினர். இதனால் ஒருவன் பாவம்



செய்வதற்கும், செய்தபாவம் இன்னொன்றினால் மறைந்து விடுவதற்கும், பாவமன்னிப்புக் காரணமாயிற்று.

இத்தகைய பிராயச்சித்தத்தைப்பற்றி எவர் கொள்கைகள் எப்படியிருப்பினும், தெய்வப் புலவர் திருவள்ளுவர் கொள்கை, சேக்கிழார் சுவாமிகள் கொள்கை என்ன என இங்கு ஆராய்தற் கெடுத்தல் வேண்டும். திருவள்ளுவர், சேக்கிழார் போன்ற பெரும் புலவர்கள், தம்நாட்டு மக்கள் இன்னின்னவாறு ஒழுகல் வேண்டுமென்னும் முடிவான கொள்கைகளைத் தத்தம் திருவுள்ளங்களில் தெளிவாகக் கொண்டே நூல்களை இயற்றுகின்றனர். அக்கொள்கைகள் பழையன ஆயினும் சரி, புதியன ஆயினும் சரி, பழையன வற்றை மறுத்துப் புதியனவற்றைப் புகுத்தவேண்டியன ஆயினும் சரி, அவற்றை வீரமுடன் முன்வந்து மக்களுக்குச் சொல்லுகின்றனர்.

திருவள்ளுவனார் காலத்தில் ஒருவனுடைய நோய்கள் தணிய வேண்டுமென்றாலோ, இறக்கும் தருவாயிலுள்ள ஒருவன் பிழைக்க வேண்டுமென்றாலோ, தமக்கு நன்மைகள் வரவேண்டும் என்றாலோ பிறவுயிர்களைக் கொல்லும் வழக்கம் இருந்தது. இவற்றுள் நோயும் இறப்பும் தவிர்ப்பதற்குச் சாந்தி என்றும் நன்மை தருவதற்கு வேள்வி என்றும் பெயர் வைத்தனர். உணவுக்காகக் கொல்லுதலும் நன்மை என்றனர்.

இவற்றுள் ஒன்றிற்காகவேனும் கொல்லுதல் கூடாதென் பதே திருவள்ளுவர் கொள்கையாகும். அதனைக் கொல்லாமை என்னும் அதிகாரத்தில் வற்புறுத்தியுள்ளார். சாந்திக்காகக் கொல்வதைப்பற்றி,

தன்உயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை —குறள் - 327

எனச் சொல்லுகின்றனர். இதற்கு ஆசிரியர் பரிமேலழகர் "ஒன்றினால் தன் உயிர் போவதாயினும் அதனைக் கொல்ல வேண்டாம்" என்றும், ஆசிரியர் மணக்குடவர் "தன் உயிர் போவதாயிருந்தாலும் அதைத் தடுப்பதற்குச் சாந்தியாகப் பிற உயிரைக் கொல்ல வேண்டாம்" என்றும் உரைகள் எழுதி யிருக்கின்றனர். இவ்வுரைகளுள் முன்னையது மணக்குடவர் உரை. அம்மணக்குடவர் உரையே திருவள்ளுவர் கொள்கை யாகும்.

திருவள்ளுவர் காலத்தில் சாந்தி சாந்தி என்னும் பெயர் வைத்துப் பல வழிகளிலும் பல உயிர்களை மக்கள் கொன்று தின்று வந்தனர். அதைக் கண்டு அறஆழி அந்தணன் ஆம் திருவள்ளுவரின் திருவுள்ளம் கலங்கிவிட்டது. அந்தோ! பிற உயிர்களைக் கொல்வதால் தமது உயிர் சாந்தம் அடையும் என்ற அறியாமையில் மக்கள் ஆழ்ந்தனரே! என மனங் கசிந்தனர். சாந்திகள் செய்தால் உயிர்கள் பிழைக்கும் என எழுதிய நூல்களை வெறுத்தனர். அவை அறநூல்களா? மறைமுகமாக மக்களைத் தூண்டும் கொலை நூல்கள் எனச் சினந்தனர். எனவே சாந்தி என்ற பெயரில் எவ்வுயிரையும் கொல்லல் ஆகாதென்பதே திருவள்ளுவனாரின் கொள்கை.

மனுநீதிகண்ட சோழன் மகன் வீதிவிடங்கன் தேர் ஓட்டிச் செல்லும்பொழுது அத் தேர்க்காலில் பசுங்கன்று சிக்கி இறந்துவிட்டது. இதற்காக வீதிவிடங்கன் தனது துயரைத் தீர்ப்பதற்கு மறையவரிடம் சென்றான். ஏன்? தான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் என்னவென்று தெரிந்து அம் முறைப்படி பிராயசித்தம் செய்து நல்லவன் ஆகலாம் என்பதற்காகச் சென்றான்.

மநுநீதிச் சோழன் வீதிவிடங்கன் செய்த பாவத்திற்கு என்ன செய்யலாம் என மந்திரிகளைக்கூட்டி யோசனை கேட்டான். மந்திரிகள் மன்னவனை வணங்கி "சிந்தை தளர்ந்து



நோவது கன்று செத்ததற்குப் பரிகாரமாகாது. பசுவைக் கொன்றவர்களுக்கு வேத அந்தணர்கள் விதித்த பிராயச்சித்தத்தின் படி மைந்தனுக்குப் பிராயச்சித்தம் செய்தல் அறம்" என்றனர். அதற்குச் சோழன், "பிராயச்சித்தம் செய்வது வழக்கம் என்று நீங்கள் மொழிந்த சொற்கள் இளங்கன்றை இழந்து வருந்தும் பசு அடையும் வருத்தத்திற்கு மருந்தாகுமா? நான் மைந்தனை இழக்கின்றேன் என்று நீங்கள் எல்லாரும் என் மைந்தனைக் காப்பதற்காகச் சொல்லிய வஞ்சனையாகிய பிராயச்சித்தத்திற்கு நான் இசைந்தால் தருமதேவதை சலிப்படைய மாட்டாளா? இச் சழக்கு இன்று நான் இசைந்தால் தருமந்தான் சலியாதோ."

என் மகன் செய்த பாதகத்திற்குக் கழுவாய் செய்வதற்கு இசைந்த நான், அந்நியன் செய்த கொலைக்கு அவனைக் கொல்வேனா ஆனால், தொன்மையான மனு நூலில் சொல்லிய பிராயச்சித்தம்—ஓர் உயிரைக் கொன்றவனைக் கொல்லவேண்டும் என்னும் பிராயச்சித்தம் — மநுச் சோழனால் அழிந்து போயிற்று என்னும் வார்த்தையை, உலகத்தில் நிலை நிற்கும் படி மொழிந்தீர். இதுதான் மந்திரிகள் வழக்கமோ, என்று சொல்லிய பின்பு, தானே தேரை ஓட்டிச் சென்று தன் மகனைத் தேர்க்காலில் அகப்படுத்தித் தண்டித்தான். இங்கு சேக்கிழார் கூறும் தெய்வச் செய்யுளைக் காண்போம்.

> "ஒருமைந்தன் தன்குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்
> தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
> மருமந்தன் தேர்ஆழி உறஊர்ந்தான் மநுவேந்தன்
> அருமந்த அரசாட்சி அரிதோமற்று எளிதோதான்."

இதில் சேக்கிழார் சுவாமிகள் கழுவாயைச் சழக்கு என்றும் மகனுக்குத் தண்டனையாகக் கொலையை விதித்தல் தருமம் என்றும் சொல்லுவதைப் பெரிதும் ஆராய்தல் வேண்டும்.

தவறு செய்தவனுக்குத் தண்டனை விதிக்காமல் பிராயச்சித்தம்
செய்வித்தல் வஞ்சனை யல்லது சழக்கு ஆகும். கொலைகளுள்
பசுவின் கொலைக்குப் பிராயச்சித்தமாகப் பலவகை முறைகள்
வடமொழித் தரும நூல்களில் உள்ளன. அவற்றுள் பாசர
ஸ்மிருதி பிராயச்சித்த காண்டம். 36-வது சுலோகத்தில்
"கோவதத்தைச் செய்தவன் பிராஜாபத்ய கிருச்சிரவிரதம்
இருக்கவேண்டும்" என்றும், 42-வது சுலோகத்தில் "பசுவைக்
கொன்றவன் பிராமண போஜனம் செய்து வைத்த பிறகு
சந்தேகமில்லாமல் சுத்தியடைகிறான்" என்றும் சொல்லப்பட்
டுள்ளன. மநுதர்ம நூலிலும் இவ்வாறே விதித்துள்ளது. இப்
பிராயச்சித்தங்கள் மநுச்சோழன் மனதிற்குப் பிடிக்கவில்லை.
மநுதர்ம நூலில் சொல்லும் விதிப்படி நடந்ததால் மநுநீதி
கண்ட சோழன் எனப் பெயர் பெற்ற மநுச் சோழனுக்கு,
மநுதர்ம விதிகள் பிடிக்கவில்லை யென்றல் தகுமோ? என்னில்
தகும். எங்ஙனம்? மநுநூல்கள் பல இருந்தன. அவற்றுள்
தொல் மநுநூல் என்பது ஒன்று. அத் தொல் மநுநூலில்
விதித்த முறைப்படி நடப்பவன் மநுச் சோழன். அத் தொல்
மநுநூல் கொலைக் குற்றத்திற்குக் கொலைத் தண்டனை விதித்
திருக்கும். கொலைக்குக் கொலைதான் பிராயச்சித்தம். மற்றவை
பிராயச்சித்தங்கள் அல்ல. இதைச் செவ்வனே தெரிந்த
சேக்கிழார் சுவாமிகள் "தொன் மநுநூல்" என்று குறிப்பிடு
கின்றார். அத்தொல் மநுநூல் இப்பொழுது இல்லை; இல்லை.
மகன் செய்த கொலையைத் தவறுதல் குற்றமாக எண்ணி
மநுச்சோழன் மன்னிக்கவும் எண்ணவில்லை. ஏன்? பணப்
பலம், ஆள் பலம், உடல் பலம் உள்ளவர்கள் செய்யும் கொலை
கள் அனைத்தும் தவறுதல் குற்றத்தின்பால் வந்துவிடும்.
மன்னித்தால் கொலைகள் பெருகிவிடும். அதற்கும் அரசன்
இடந்தரலாகாது. பிராயச்சித்தங்கள் விதித்தால் கொலை செய்
பவனுக்குப் பயமேயில்லை. சிறிது பணந்தானே செலவு



1, 10, 100, 1000 பேர்களுக்குச் சோறு போடுவதுதானே. இதனால் வருவது பெருமையல்லவா என்ற மகிழ்ச்சியில் மற்றும் கொலைகளைச் செய்வதற்கு ஊக்கம் அளிப்பதாகும். அதற்கும் அரசன் இடந்தரலாகாது. இதை எண்ணிச் சேக்கிழார் "இச்சழக்கு இன்று நான் இசைந்தால் தருமம் தான் சலியாதோ" என வஞ்சகப் பிராயச்சித்தம் ஒன்றுள்ளதே எனத் தன் மனம் சாலவும் சலித்ததைத் "தருமந்தான் சலியாதோ" எனத் தரும தேவதையின்மேல் வைத்துக் கூறுகின்றார். இது கவி மரபு. குற்றத்திற்குத் தண்டனைதான் பிராயச்சித்தமேயன்றி மற்றைய ஆரவாரங்கள் பிராயச்சித்தங்கள் அல்ல என்பதைத் தெளிய ஆராய்ந்து சேக்கிழார் சுவாமிகள்

*தருமம் தன்வழிச் செல்கை கடன்என்று தன்மைந்தன்*
*மருமம்தன் தேர்ஆழி உறஊர்ந்தான் மநுவேந்தன்*

எனச் சொல்வதைக் காண்க. இங்குக் கொலைக் குற்றத்திற்குக் கொலைத் தண்டனையே தருமம் ஆயிற்று. இதனால் குற்றத்திற்குக் கழுவாய் செய்வது சழக்கு அல்லது வஞ்சனை என்பதும் தண்டனை கொடுப்பதே தருமம் என்பதும் சேக்கிழாரின் சித்தாந்தம்.

இச் சித்தாந்தத்தை வலியுறுத்துவதற்காகப் பின்னரும் ஒரு தண்டனை நிகழ்ச்சியைப் பாடியுள்ளார். என்ன? சுந்தரமூர்த்திகள் சங்கிலி நாச்சியாரை மணக்கும்பொழுது "உன்னை விட்டுப் பிரியேன்" எனச் சொல்லி மணந்தார். பின்னர் "பிரியேன்" என்று சொல்லிய சொல்லிலிருந்து தம் மனத்தைப் பிரித்தார், திருவொற்றியூரினின்றும் பிரிந்தார். பிரியேன் என்ற சொல்லினின்றும் பிறழ்ந்த குற்றத்திற்காக இரண்டு கண்களையும் இழந்தார். தெளிவாகச் சொல்லின் வார்த்தை தவறிய குற்றத்திற்காகக் குருடாக்கப்பட்டார்

என்பதே உண்மை. சுந்தர மூர்த்திகள் கண்ணிழந்த தண்டனையினின்றும் தப்புவதற்காகப் பலப்பல கழுவாய்களைக் கண்டார். அக் கழுவாய்களின் திரட்சியே சில தேவாரப் பதிகங்கள். ஒரு கழுவாய்ச் செய்யுளைக் காண்போம் :

பிழையுளன பொறுத்திடுவர் என்றுஅடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதேபடலம் என்கண்மறைப் பித்தாய்
குழைவிரவு வடிகாதா ! கோயிலுளாயே என்ன !
உழையுடையான் உள்ளிருந்து உளோம், போகீர் என்றானே.

இச்செய்யுளின் சோகரசம் கேட்டால் காது கறைகின்றது ; உன்னினால் உள்ளம் உருகுகின்றது. உரைத்தால் வாய் வறளுகின்றது. ஆயின் என் ? கண்ணிழந்த தண்டனைக்குக் கழுவாய் கண்டோமா ? இல்லை இல்லை. கண்ணிழந்த தண்டனையைப் பல நாள் சுந்தரமூர்த்திகள் அநுபவித்தார். திருவருளால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டவரன்றோ சுந்தரமூர்த்தி சுவாமிகள். அத்தகைய சுவாமிகளுந் தண்டனை யநுபவிக்க வேண்டுமா ? ஆம், தண்டனை அனுபவிக்கவேண்டும். என் ? தவறு செய்தவர் யாராயினும் என்ன ? அதிலும் சுந்தரமூர்த்திகள் தெரிந்தே தவறு செய்தனர். அதனை “ அடியேன் பிழைத்தக்கால்” என்ற சுந்தரமூர்த்திகளின் திருவாய்மொழியே தெளிவாக்குதல் காண்க.

தமது நெஞ்சம் அறிந்தே குற்றத்தை ஒருவர் செய்வாராயின் அவரின் தோற்றம், சுந்தர மூர்த்திகளின் தோற்றம் போல் ஆகாயம் வரையும் உயர்ந்திருப்பினும் அத்தோற்றம் என்ன பயனைச் செய்யும் ? அக்குற்றத்திற்கு வரும் தண்டனையைத் தடுக்க முடியுமா ? எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

வான்உயர் தோற்றம் என் செய்யும் ? தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

—குறள் - 272



என வினவுகின்றார். இக்குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர் பரிமேலழகர் அறியாது செய்த குற்றம் அல்லது அறிந்துவைத்துச் செய்த குற்றம் கழுவப்படாமையின் நெஞ்சு குற்றத்ததாயேவிடும், விடவே நின்ற வேடமாத்திரத்திற்குப் புறத்தாரை வெருட்டுவதல்லது வேறு பயன் இல்லை என்பதாம் என்பதைச் செவ்வனே சிந்தித்தல் வேண்டும்.

“சுந்தரமூர்த்தி சுவாமிகள் மிக மிக உயர்ந்த நிலைமையில் உள்ளவர் யாதொரு குற்றமும் செய்யமாட்டார். குற்றம் செய்தவர்க்குப் பிராயச்சித்தம் இல்லை ; யாராயினும் தண்டிக்கப்படுவார் ” என்பதைத் தானே நடந்து காட்டினார் எனச் சிலர் சொல்லுவர். சரி, சரி. சுந்தரமூர்த்திகள் தாமே நடந்து காட்டிலென் ! பிறர் நடத்தக் காட்டிலென் ! குற்றத்திற்குப் பிராயச்சித்தம் இல்லை. தண்டனை உண்டென்பதே மூர்த்திகளின் சரித்திரத்தால் தெரிந்த உண்மை.

சுந்தரரே பதிகங்களைப் பாடிப் பாவ மன்னிப்புப் பெறவில்லை என்றால் மற்றவர் அப்பதிகங்களைப் பாடிப் பாவ மன்னிப்புப் பெற முடியுமா ? கொலை, களவு, பொய், வஞ்சகம், கூடா ஒழுக்கம் முதலியன உள்ளவர்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம், பாராயணம் முதலியவற்றால் கழுவாய் உண்டென்னும் அறியாமையை அகற்றுக ; தண்டனை உண்டென்னும் தெளிவை அடைக ; அடைக. சுந்தரர் போன்றோரே தண்டனை அடைந்தனர் என்றால் நாம் எம்மாத்திரம் என்று மனம் கசிக ; கசிக. தாம் செய்த தவறுகளுக்குத் தண்டனைகள் மூன்று வகையில் வரும் என முன்னோர் மொழிந்தனர். 1. தம் உடம்பைப் பற்றிய நோய்கள் வடிவம் ஆக வருவன. 2. தமக்குப் பிறர் செய்யும் துன்பங்கள் வடிவமாக வருவன. 3. எதிர்பாராமல் நேரும் சாவுகள் வடிவமாக வருவன. இம் மூன்றினுள் ஒரு வகையான தண்டனை வரவே வரும்.

செய்த குற்றத்திற்காகக் கருத்துக் கசிந்து, கசிந்து மூர்த்தி, தலம் முதலியவற்றிற்குச் செல்வோரின் மனப் தூய்மை பெறும். பின்னர், கொலை, களவு, முதலிய குற்றங் கள் செய்யமாட்டான். சுந்தரமூர்த்திகள் திருவாரூர் போகும் வரையிலும் பார்வையிழந்த தண்டனையை நுகர்ந்துகொண்டே சென்றார். திருவாரூர் போய்த் திருக் கண்களின் படலம் நீங்கப் பெற்றார். ஞானவொளி பெற்றார். வானளாவிய உயர் நிலையை யடைந்தார். மற்றவரும் உயர் நிலையை யடையும் வழியைக் காட்டினார்.

சுந்தரர் செவ்வறம் வாழ்க !
சேக்கிழார் சொல்லறம் வாழ்க !

---

## 5. கவிப் பகுதி

# ஒரு பாட்டில் கட்கடைகள் இரண்டு

"சிவக்கவிமணி"

### 1. கட்கடை

கள்-கடை என்பது கட்கடை என்றாகும் என்பர் தமிழ்ப் புலவர்கள். இதைப்பற்றிச் சித்தாந்தத்தில் எழுதுவதற்கு என்ன பொருத்தம் ? இதைக்கூட எழுதலாமா ? என்று எனது நண்பர் கோபத்தோடு கேட்டார். எங்கள் கோவைத் தமிழ்ச் சங்கத்தில் சில ஆண்டுகளின் முன் ஒரு ஆண்டு விழா நடந்தது. அப்போது தலைமைதாங்கியவர் திரு. டி. கே. சி. அவர்கள். பேச்சாளர் திரு. கோவிந்தசாமி ராசு அவர்கள். தலைவர் முன்னுரை $1\frac{1}{2}$ மணி நேரம் நிகழ்ந்தது. அதில் அவர் முன் னுளில் கள்ளுண்பதைப் பற்றிக் கம்பர் மிக ருசிகரமாகப் பாடி யுள்ளார் என்று வற்புறுத்தி அனேக உதாரணங்களுடன்



அவரது வழக்கம்போல் பேசினார். தலைவரது முன்னுரைப் பேச்சு நீண்டுபட்டபடியால் பேச்சாளருக்கு 20 நிமிஷங்களே தரப்பட்டன. அவர் பொருள் " கம்பன் கண்ட இலங்கை " என்பது. அவர் பற்பல தலைப்புக்களில் அப்பொருளைப் பற்றிப் பேசக் குறிப்புக்கள் கொண்டிருந்தார். ஆயினும் காலக்குறை வினால் ஒரு தலைப்புப்பற்றி மட்டும் பேசி முடித்தார். அஃதா வது அந்நாளில் இலங்கையில் அரக்கர்களது பெண் மக்களும் கள்ளுண்டார்கள் என்பது பற்றிக் கம்பர் கூறிய மிக ருசிகர மான பகுதிகள். அதன் பிறகு தலைவர் முடிப்புரை 1 மணி நேரம் நிகழ்ந்தது. அதில் அவர் கூறியது கம்பர் மட்டுமா ? திருவிளையாடற் புராணத்தில் குடம் குடமாகக் கள் இருக் கிறது என்று பரஞ்சோதியார் பாட்டுக்களும் சித்திரக்கருத்துக் களும் பற்றிப் பேசி முடித்தார். அன்று விழா முழுதும் கள் மயமாகவே; இல்லை, கள்ளுப் பேச்சு மயமாகவே, முடிந்தது.

இது கிடக்கத் திருக்குறளிலும் கள்ளுக்கு இடமுண்டு ; திருமந்திரத்திலுமுண்டு ; சித்தாந்த சாத்திரத்திலுமுண்டு ; " உண்ணற்க கள்ளை ; உணில் உண்க", "மாயக் கள்ளுண்டா ரென்றுந்தீபர " என்றெல்லாம் பெரியோர்கள் பேசியிருக்கச் சித்தாந்தத்தில் ஏன் நான் இதுபற்றி எழுதக்கூடாது ? என்று என்னிடம் வினவிய அவருக்கு அவரைவிடக் கோபத்துடன் வினவி விடை கூறினேன்.

நான் இங்குக் கூறும் கட்கடை வேறு ; இந்தக் கள்ளுக் கடைகளை காங்கிரசுக்காரர்கூட மூடிவிட முடியாது. அவற்றில் குடிக்கின்றவர்களுக்குத் தண்டனை விதிக்கவும் முடியாது. கோயமுத்தூர்ச் சில்லாக் கட்கடைகளை மூடி வறள அடித்துவிட்டால் அந்தத் " தண்ணீர் " எல்லாம் அடுத்த பாலக்காடு, திருச்சி ( கரூர் ) கடைகளில் ஓடி நிரம்பிவிடுகிறது. இரயில் வண்டியில் போகின்றவர்கள் இந்த அனுபவங்களை நன்றாய் அறிவார்கள். இந்தச் சில்லா ஆட்கள் போகும்போது

இருக்கும் நிலை வேறு; திரும்பி வரும்போது நிலை வேறு: வரும்போது உருவமே வேறு; இருக்கும் பாட்டமும் உண்டு. அந்த அடையாளங்களை நான் விரிக்க வேண்டாம். ஆட்டமும்

நான் எழுத எடுத்துக்கொண்ட கட்கடைகளும் இம் மாதிரிதான். ஆனால் அவை பலபேர் ஒருங்குகூடிக் குடிக்கக் கூடியனவல்ல. ஒன்றிரண்டு பேர்தான் போகலாம். நாள்தோறும் புதிது புதிதாக வெவ்வேறு வைக்கப்படும். இவை தனித்தனி நாளாங்கடி எனப்படும் கடைகள்; இவற்றின் வாயில் திறந்து இருக்கும். பலவிதமாகிய புட்பாலங்காரம். நம் கடைகள் போலக் கள் வெளியே காண இருக்காது: உள்ளே தானி ருக்கும். இவற்றுக்கு வரிவட்டம் ஒன்றும் இல்லை. இவற்றுட் குடிக்க வருகின்றவர்கள் தனித்தனி வான விமானங்களில் பறந்து வந்து விமானத்தோடிழிந்து உட் சென்று குடித்துப் பறந்து போய்விடுவார்கள். பல கடைகளில் பறந்து பறந்து குடித்தால்தான் இவர்களுக்கு வயிறு நிரம்பும். நம்மவருட் குடிகாரர்போல இவர்கள் இந்தக் கடைகளிருக்கும் ஆபாசமான சூழல்களை லட்சியம் செய்வதுமில்லை; குடித்து வெளி வரும்போது கோலமும் வேறுதான்; பாட்டுக்கும் குறைவில்லை. அந்தக் கடைகளில் சுவர்களிலும் தம்பங்களிலும் உள்ள புதிதாகிய மஞ்சட் பூச்சுக்கள் இக்குடிகாரர்களின்மேல் ஒட்டிக்கொள்ள இவர்கள் அந்தப் பூச்சு நிறமாக வெளியே வருவார்கள்.

இனி, இந்தக் குடிகாரர்கள் யார்? இந்த "நாளங்காடி"கள் எவை? (அங்காடி—கடை இது தனித்தமிழ்ச் சொல்; சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களில் வழங்குவது; தெலுங்கில் இப்போது பேச்சு வழக்கில் வழங்குகின்றது; நாளங்காடி - Daily Market). இத்தன்மைகள் எவை? என்றால் மார்கழி மாதத்தில் வீடுகளின் முன் வாயிலில்



சாணப்பிள்ளையார் வைத்து அதில் பறங்கி பூசனி முதலிய பூக்களை வைப்பர். அவற்றுள்ளே தேனீக்கள் பறந்து வந்து பூக்களில் உள்ளேயிருக்கும் மதுவுண்டு செல்லும்; வரும்போது சிவந்தநிறம்; போகும்போது பூந்தாதுக்களாகிய மஞ்சட்பூச்சு; பண்பாடிப் பறப்பன; இந்த பாட்டு ஆபாசப் பாட்டன்று; செவ்வழி செல்லும் நல்ல பண்.

இத்தோற்றங்களை யெல்லாம் மிக அழகுபட வைத்துத் தமது தெய்வ நலம்படைத்த அருள்வாக்கில் பாடுகிறார் ஞானக் குழந்தையாகிய பிள்ளையார்,

"சேறு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்தவண்டு
வேறயவுருவாகிச் செவ்வழி நற்பண்பாடு மிழலையாமே"

நமது கள்-கடைகள் எல்லாம் மிகுந்த ஆபாசமாய் அருவருக்கத்தக்க நிலையிலுள்ளனவாயிருக்க இவைகள்மட்டும் இவ்வாறு மணமும் குணமும் அழகும் இன்பமும் பொருந்தி விளங்குவது ஏன்? இந்தப் பாட்டை இன்னொரு முறை வேறு கண்கொண்டு பார்ப்போம்.

## 2. கட்கடை

கண்-கடை என்பது கட்கடை எனவரும் என்பர் தமிழுணர்ந்த பெரியோர். இதுவே நிலை மாறிக் கடைக்கண் எனவும் வரும்; ஆசாரியனது அருட்கடைக் கண்பார்வை பதிந்தவுடனே உயிர்களின் ஆபாசக்கட்டுக்கள் நீங்கிச் சிவத் தன்மை பெறும், செம்மை வழியிலே நின்று அவை சிவனைப் பாடி உய்யும் என்பது உண்மை நூல்களின் கருத்தல்லவா? செங்கழுநீர் மலர் கண்போல உள்ளது. அதன் இனிய பார்வைக்குள்ளே உயிர்படுதல் "செங்கழுநீர்த்தாதாடி" என்றார். "மதுவுண்டு" என்பது இறைவரது பார்வையில் வரும்

ஆனந்தம் ; "செவ்வழி" சிவநெறி ; நற்பண் பாடுதல் அதனில்
திளைத்தல் ; ஆன்மாதற்போதம் நீங்கிச் சிவன் வசமாகுதல்
வேறாய உருவாகி எனப்பட்டது. என இவ்வாறு உயர்ந்த
தொரு பொருட் குறிப்பினை உள்ளுறையாகத் தாழ்ந்த உலகப்
பொருளில் வைத்துக் கண்டுகொள்க. இனி இந்த (கண்-கடை)
கடைக்கண் பார்வைசெய்து செவ்வழி நற்பண்பாடும் தன்மை
செய்பவர் யார் ? அவன் வன் அவ்வாறு செய்கிறான் ?
எவ்வாறு செய்கிறான் ? என்றால் அவன் குளிர்ந்த தண்ணளி
யுடையவன் என்றால், அவன் கங்கையைச் சூடியவன். கங்கை
(நீர்) உலகம் உண்டாகி வளர்ச்சி பெறுதற்குக் காரணம்.
அவ்வாறு வளர்ந்து உலகம் நிலைபெற்று அமைதிபெறுதற்கு
நெருப்புச்சூடு மற்றொரு காரணம். அவ்விறைவன் அதற்குக்
கருவிகளாகி நீரையும் நெருப்பையும் வைத்துக்கொண்டி
ருக்கின்றான். உயிர்கள்மேல் இயல்பாகக் கொண்ட கருணை
யினாலே அவன் இவற்றை எப்போதும் செய்துகொண்டிருக்
கின்றான். உலகங்களைப் படைக்கின்றான்-காப்பாற்றுகின்றான்-
இளைப்பாறும் பொருட்டு அழிக்கின்றான்-மறைக்கின்றான்-
பின்னர் முடிவில் ஒப்பற்ற ஆனந்தத்தில் வைக்கின்றான்.
இவைகளே அவனது அருட்கூத்து எனப்படும். இதுபற்றிப்
பிள்ளையார் பாட்டை மேலும் பார்ப்போம்.

"ஆறுடு சடைமுடியன் அனலாடு மலர்க்கையன் இமயப்பாவை
கூறுடைந் திருவுருவன் கூத்தாடுங் குணமுடையோன் குளிருங்கோயில்"

என்பது அத்திருப்பாட்டின் முன் இரண்டடிகள். ஆறு-கங்கை;
அனல் - இறைவர் கையில் ஏந்தி உலகங்களைக் காலாந்தரத்திற்
சங்கரிக்கும் குறிப்புடன்வைத்தது; இமயப்பாவை கூறுடுதல்-
இறைவர் என்றென்றும் எல்லா வுயிர்களின்மேலும் இயல்
பாகவே மேற்கொண்டிருக்கும் கருணை ; கூத்து-படைத்தல்,
காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்றும் அவரது



ஐந்தொழில அருட்கூத்து ; இத்தொழில்களினாலே புவன
போகங்களை உளவாக்கி உயிர்களுக்கு உடம்பும் கரணங்களை
யும் தந்து வினைப்பயன்களை ஊட்டிக் கழிப்பித்து அவற்றை
ஆனந்த மயமாக்கித் தனது இன்பத்துள் வைக்கின்றான்.
அவனே உலகத்துள் உலகவர்போலவே அருட்குருவாக வந்து
கள்-கடையாகிய உலகானுபவங்களாகிய சேற்றிலே அழுந்தி
அதுவே பொருளாக மெல்லக் கிடந்துவாழும் உயிர்களைத்
தனது அருட்பார்வைக்குள்ளாக்கிப் புனிதமாக்குகின்றான்
என்பது சேறுடு செங்கழுநீர் என்ற குறிப்பு; சேறு-உலகானுப
வங்கள் ; சேறுடு செங்கழுநீர்-சேற்றில் முளைத்த செங்கழுநீர்ப்
பூ ; உலகானுபவங்களுள்ளே நின்றபடியே வாய்க்கும் அருட்
குருவின் பார்வையாகிய தீக்கை. (சாட்சுஷதீக்கை) முன்
னிரண்டடிகளுக்கும் பின்னிரண்டடிகளுக்கும் இடையில்
பொருந்த இச்சொற்கள் "சேறுடு செங்கழுநீர்" என வந்தது.
பின்வருவன அவன் செய்கையின் காரியம் என்ற குறிப்புத்
தருவன. இப்போது முழுப்பாட்டையும் பார்ப்போம்.

'ஆறுடு சடைமுடியன் அனலாடு மலர்க்கைய னிமயப்பாவை
கூறுடு திருவுருவன் கூத்தாடுங் குணமுடையோன் குளிருங்கோயில்
சேறுடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற் பண்பாடுமிழலையாமே' [தேவாரம்
பண்-மேகராகக் குறிஞ்சி-திருவீழிமிழலை-திருஞானசம்பந்த நாயனார்

உலகானுபவங்களாகிய கள்ளுக்கடையிலே அழுந்தி அழி
யும் மாக்கள் இறைவரது அருளின் கண்-கடையினாலே அவ்
வுலக அனுபவங்களையே செவ்வழியாகக்கொண்டு அவனைத்
துதித்து உய்வார்களாக.

அழியும் உலக இன்பங்களையே பற்றி பொழிந்து அழி
வையே தரும் வெறுங் கவியின்பங்களை நயப்பவர்களே!
இத்தெய்வக் கவி நலத்தைச் சிறிது அனுபவியுங்கள். இப்பாட்
டின் கருத்தும் குறிப்புமேயன்றி இதன் இயலும் இசையுமே
உங்களைப் பேரானந்தத்தில் அழுத்திவிடும்.

---

இது யாழ்ப்பாணத்தில் சைவ மாநாட்டில் "பிள்ளையார் தமிழ்"
என்பது பற்றி நிகழ்த்திய சொற்பொழிவில் ஒரு பகுதியின் சுருக்கம்.

# ஏயர் குடிகள்

## வேளாளர் குடிப் பிரிவுகள்

உழுதுண்டு வாழ்பவரே நாட்டுக் குடிகள். தமிழில் வேளாளர் என்பர். வேள் என்றால் நிலம், அவர்களைத் ஆள்பவர் வேளாளர். அவ்வேளாளர்கள் நாட்டின் அதனை பொறுத்துப் பல குடிகளாகப் பிரிந்து வாழ்வார்கள். பெயரைப் யில் பாண்டி வேளாளர், சோழ வேளாளர், அவ்வகை ளர், கொங்கு வேளாளர், தொண்டை சேரகுல வேளா துளுவ வேளாளர், கார் மண்டல வேளாளர், மண்டல வேளாளர், ளர், முதலிய பல பிரிவுகளாக இருக்கின்றனர். ஏயர்குடி வேளா ளர்கள் ஒரு நாட்டைவிட்டு வேறொரு நாட்டிற்குக் குடியேறின இவ் வேளா லும் தம் சொந்த நாட்டின் பெயரையே வகித்துக்கொண்டு வாழ்வார்கள். தொண்டை மண்டல வேளாளர்களும் துளுவ வேளாளர்களும் ஏனைய நாடுகளில் வசிப்பதை இன்றும் காண லாம். இவ்வகைப் பிரிவுகளிலே வயர் நாட்டிலிருந்து தென் ளுட்டில் குடியேறின வேளாளர்கள் வயர் குடிகள் அல்லது ஏயர் கோக் குடிகள் என்னப்பட்டார்கள். கோ என்றால் சிறந்தவர்கள் அல்லது தலைவர்கள் என்று பொருள். சேர சோழ பாண்டியர்களுக்குக் 'கோ' என்ற அடைமொழி சிறப் பாக வழங்கி வந்ததை அறியலாம். இந்த வயர்கோக் குடிகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியே தென்னுட்டில் குடியேறி யிருந்தார்கள்.

## ஏயர் குடி

மேலும் வேளாளர்கள் நிலத்தை உழுது பயிரிட்டும் உழுதிட்டும் வாழ்ந்து வந்ததல்லாமல் நிலத்தைக் காக்கும் தொழிலையும் பூண்டிருந்தார்கள். வேள் என்றால் நிலம் என்று முன்னமே கூறியிருக்கிறோம். ஆகவே மண்ணைக் காக்கும் தொழிலும் அவர்களுக்கு உண்டு. தமிழ்நாட்டில் இவர்களை சேனையில் சேர்ந்து மன்னனுக்காகப் போர் புரிந்து நிலத்தைக் காத்து வந்தார்கள். புகழனார் சேனையில் சேர்ந்து போரிட்டு உடல் துறந்ததை அறிவோம். மேலும் சேனாபதித் தொழி லும் சில குடிகளுக்கு உண்டு. இந்தப் பெருமைகளை வேளா ளர் கொண்டிருந்தார்கள்.



## கலிக்காமர்

தென்னுட்டில் 9-ம் நூற்றாண்டில் ஏயர் நாட்டிலிருந்து குடியேறிய சில வேளாளர் குடிகள் இருந்தன. அவர்கள் உழுது பயிரிடுதல் மட்டுமன்றிச் சேனாபதித் தொழிலையும் கொண்டிருந்தார்கள். அவ்விதக் குடி ஒன்று சோழ நாட்டுத் திருப்பெருமங்கலத்தில் இருந்தது. அப்படிப்பட்ட பெருங் குடியில் அவ்வூரில் கலிக்காமர் என்ற ஒரு அடியார் அவதரித் தார். அவர் திருப்புன்கூர் என்ற தலத்தில் திருப்பணி செய்து விளங்கி இருந்தார். சிவனடியாராக இருந்து சிவாபராதம் செய்வதை மிகவும் கண்டித்து வந்தார்.

## சரிதை

அவர் நாளில் சுந்தர மூர்த்திகள் திருவாரூரில் பரவை நாச்சியாருக்காகச் சிவபிரானைத் தூது அனுப்பினார் என்று கேள்விப்பட்டார். உடனே அவர்மீது வெறுப்புற்று அவரைக் காணுதலும் கூடாதென்று உறுதியுடன் வாழ்ந்தார். இவ்விரு அன்பர்களையும் நண்பர்களாக்கும் நிமித்தம் பெருமான் கலிக் காமருக்கு சூலைநோய் கொடுத்தருளினார். சுந்தரர் அது கேட்டு ஈசன் ஏவலால் அவரைக் காணச் சென்றார். கலிக் காமரோ மனஉறுதி உடையவர். வாளினால் தன் வயிற்றைச் சேதித்துக் கொண்டார். சுந்தரர் சென்று நடந்த செய்தி கண்டு தானும் உடலை மாய்த்துக்கொள்ள எண்ணினார். உடனே பெருமான் தோன்றி கலிக்காமரைப் பிழைப்பிக்கப் பின்னர் இருவரும் நண்பர்கள் ஆயினர். இது பெரிய புராணச் சரிதம். இதனால் ஏயர்கோன் கலிக்காமர் சுந்தரர் காலத்தில் திகழ்ந்திருந்த செய்தி நமக்குக் கிடைக்கிறது. இவர் ஏயர் நாட்டு வேளாளர். பெருமங்கலத்தில் குடியேறினவர். சேனா பதித் தொழிலைப் பூண்டவர் என்ற செய்திகளை அறிவோம்.

## ஏயர் நாடு

இனி, ஏயர் நாடு என்பது-வடமொழிச்சொல். ஹேஹயர்
நாடு என்பதன் தமிழ்த் திரிபு. ஹேஹய நாடு என்பது
மத்திய இந்தியாவில் இருந்த ஒரு நாடு. பரதகண்டத்து 56
நாடுகளில் ஒன்று. பண்டைய வடமொழிப் புராணங்களின்படி
இந்நாடு மகத தேசத்திற்கு நேர் தெற்கில் உள்ளது. சித்திரகூட
மலை அடிவாரம் முதல் உத்கல தேசம் வரையில் கிழக்கிலும்
மகேந்திரமலை வரையில் தெற்கிலும் நீண்டுள்ளது. இந்நாட்டு
மலைகள் சித்திரகூடம், பகுரூபம், காகளம் என்பவைகள்.
நதி மகாநதி. இது காகள மலையில் உற்பத்தியாகி உத்கல
நாட்டின் நடுவில் ஓடி கிழக் கடலில் விழுகிறது. வேறு பல
சிற்றாறுகளும் உண்டு. இவ்வாறுகளே இந்நாட்டின் செழிப்
புக்குக் காரணம்.

## நாட்டு வளம்

மேலும், இந்நாட்டிற்கு மேற்கே சோணை நதி ஓடி கங்கை
யில் கலக்கிறது. இந்நதிக்கும் மகேந்திரகிரிக்கும் இடையில்
தண்டகாரணியம் என்ற பெரிய வனம் இருந்தது. முற்காலத்
தில் இவ்வனத்தில் விசுவாவசு என்ற கந்தருவன் வானர
ரூபத்துடனும், தனு என்ற அசுரன் கபந்தன் என்ற விரூப
உருவத்துடனும் வாழ்ந்தார்களாம். இக் கபந்தனை வன
வாசத்தின்போது சீதையை எடுத்துச் சென்ற காரணத்
திற்காக இராமபிரான் கொன்றதை இராமாயணத்தில் படிக்
கிறோம்.

தண்டகத்தில் புலி கரடி முதலிய கொடிய மிருகங்கள்
உண்டு. மலைகள், மேடு பள்ளங்கள், புதர்கள், முதலியவை
அடர்ந்திருக்கும். இதில் மனித சஞ்சாரம் இல்லை.

## புராணக் கதை

இந்நாட்டிற்கு மாஹிஷ்மதி என்பது தலை நகர். இதற்
கருகில் மேகலகிரி என்ற மலை உண்டு. இதன் அடிவாரத்தில்
தான் இத்தலைநகர் கட்டப்பட்டிருந்தது. அதனாலே இதற்கு
கிரிதுர்க்கம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. முன் காலத்
தில் இந்நகரில் கார்த்த வீரியார்ச்சுனன் என்ற அரசன் ஆண்டு
வந்தான். தத்தாத்திரேயருடைய அனுக்கிரகத்தினால் இவனுக்கு



1000 கைகள் கிடைத்தனவாம். மிகவும் பராக்கிரமசாலியாகி
இருக்க, திக்கு விஜயம் செய்த இராவணன் இவனால் கட்டுண்டு
கிடந்தான். புலஸ்தியரால் விடுதலை அடைந்தான். இவன்
பல தீவுகளில் யாகங்கள் செய்தானும். இறுதியில் பரசுராம
னால் கொல்லப்பட்டான். இவன் வம்சத்தில் உதித்த
ஹேமாங்கதன் முதலிய அசுரர்களின் சரிதம் பத்ம புராணத்
தில் கூறப்பட்டுள்ளது. இது புராண வரலாறு.

## ஆந்திரத்தில் குடியேற்றம்

இனி ஹேஹய நாட்டிற்குச் சேதி நாடு என்று மற்றொரு
பெயரும் உண்டாம். இந்நாட்டின் பெருநகர்களுள் ஒன்று
திரிபுரம் என்பது. இதிலே சில ஆண்டுகளுக்கு முன் தேசிய
மகா சபை கூடினது அறிவோம். இங்கு இருந்த ஹேஹய
வம்சத்தார் சிலர் தெலுங்கு சீமையில் பல்நாடு என்ற பிராந்தி
யத்தில் குடியேறினராம். தமது முந்திய ஊரை எண்ணிப்
புதிதாகக் குடியேறின இடத்தில் திரிபுராந்தகம் முதலிய ஊர்
களைத் தாபித்தனர் என்று ஓர் ஆந்திர ஆராய்ச்சியாளர் எழுதி
யிருக்கிறார்.

## பல்நாடு

குண்டூர் ஜில்லாவில் கிருஷ்ணாநதி யோரத்தில் உள்ள
நாடு பல்நாடு என்ற பெயரைக் கொண்டது. இந்நாட்டில்
ஏழு எட்டு நூற்றாண்டுகளுக்கு முந்தி அங்கு ஆண்டுவந்த
அரச குடும்பத்தில் ஒரு தாயாதிப் போர் நடந்தது. அந்தப்
போர் பின்னால் மிகப் பிரசித்தி பெற்று அப்போரில் கலந்து
கொண்ட வீரர்களைத் தெய்வீக புருடர்களாகப் பாவித்து
வணங்கத் தொடங்கினார்கள். அந்த வீரர்களுக்குப் பல கோயில்
களும் ஏற்பட்டன. ஆண்டுதோறும் யுத்தம் நடந்த காரியம்
பூடியில் திருவிழாவும் நடக்கிறது. அந்த யுத்தக் கதையை
காவியமாகவும் நாட்டுப் பாடலாகவும் பெரிய கவிகள் பாடி
யுள்ளார்கள். அவைகளில் சிறந்த காவியம் ஸ்ரீ நாதர் இயற்றிய
'பல்நாடி வீர சரித்திரம்' என்பது. அச்சரித்திரத்தின்படி
அவ்வரச வம்சம் ஹேஹய நாட்டிலிருந்து வந்ததென்று கூறப்
பட்டுள்ளது.

## வீரர் சரிதம்

ஹேஹய நாட்டில் பாலமாசாபுரி அல்லது ஜம்புணுபுரி என்ற ஒரு பட்டணமிருந்தது. அதனை அனுகுராஜன் என்ற ஓர் அரசன் பரிபாலித்து வந்தான். இவன் கார்த்தவீரியார்ச்சுனனுடைய ஏழாம் தலைமுறை சந்ததியில் வந்தவன். கார்த்தவீரியன் செய்த பாபச் செயல்களை எண்ணி துயரப்பட்டுப் பிராமணர்களை ஆலோசனை கேட்க அவர்கள் தீர்த்த யாத்திரை புறப்படுமாறு சொல்ல, அப்படியே கார் எண்ணெய் தடவிய உடைகளைக் கட்டிக்கொண்டு ஆந்திர தேசத்தில் யாத்திரை செய்தனன். வழியில் அமராபதி அடைந்து அங்கே கிருஷ்ணா நதியில் நீராடினான். கருப்பு உடைகள் தூய்மை பெற்று வெள்ளையாயின. பிராமணர்களும் பாவம் தொலைந்ததென்றனர். அருகில் இருந்த சந்திவோலு அரசனின் மகள் மைலாப்பாளைத் திருமணம் செய்ய அவனுக்கு பல்நாடு கிடைத்தது. அதிலே குரிஜாலா என்ற ஊரிலிருந்து ஸ்ரீகமையாக அரசு புரிந்தான். அனுகுராஜனுக்கு ஓர் அரசியிடம் நலகாமராஜனும் மற்றொரு அரசியிடம் மலிதேவராஜனும் பிறந்தார்கள். இவனுடைய மந்திரி தொட்ட நாயுடு. அனுகுராஜன் இறக்க நலகாமராஜன் பட்டத்திற்கு வந்தான். தொட்ட நாயுடு இறக்க அவன் மகன் பிரம்ம நாயுடு மந்திரியானான். ஆனல் நலகாமராஜனுக்கு நாகாம்பாள் என்ற நாயகராலு மந்திரிணியானாள். அவள் சொல்படி அரசன் ஆடினான். அது கண்ட பிரம நாயுடு இளைய அரசனை அழைத்துக்கொண்டு மாசர்லா என்ற இடத்தில் அரசு புரிந்து வந்தான். மாசர்லா வெகு சிறப்போடு திகழ்வதைக் கண்ட நாயகராலு பிரம நாயனை அழைத்துக் கோழிச்சண்டை பிடிக்கச்செய்து தோற்கடித்து அவனையும் இளவரசனையும் நாடு கடத்திவிட்டாள். ஏழு வருடம் வெளிநாட்டில் இருந்துவிட்டு திரும்பி வந்து அரசு கேட்க அவள் மறுத்துவிட்டாள். பிரம நாயுடு பிறகு காரம்பூடியில் போர் நடந்தது. அதில் பிரம நாயுடு குமாரன் பாலசந்திரன் தன் வீரத்தைக் காட்டினான். இந்த யுத்தத்தில் அனேக வீரர்கள் உயிர் துறந்தார்கள். இதுதான் பல்நாடி வீர சரித்திரம்.



## காமன் என்ற அடைமொழி

இந்த சரித்திரப்படி ஹேஹய நாட்டிலே கார்த்தவீரியார்ச்சுனனுடைய 7-வது சந்ததியாக அனுகுராஜன் உதித்தான். அவன் பல் நாட்டிற்கு வந்து அரசனாகிறான். அவன் மகன் நலகாமராஜன். இந்தப் பெயரைக் கண்டால் கலிக்காமருடைய பெயரோடு ஒத்திருக்கக் காண்போம். ஹேஹய வம்சத்து வீரர்கள் காமன் என்ற அடைமொழி வைத்துக் கொண்டார்கள் போலும். ஆகவே பல்நாட்டு வீரன் நலகாமனும் ஏயர்கோன் கலிக்காமரும் ஒரே குலத்தவர்களாக இருக்கக்கூடும். இருவரும் சேனை வீரர்கள் என்பதை அறிய வேண்டும்.

## கற்பனை

மேலும், தமிழ்நாட்டில் மதுரைக்கு மேற்கில் உள்ள பாளையக்காரர்களில் காமராஜ் என்ற பெயர்கள் சாதாரணமாக இருக்கின்றன. இவர்கள் பெரும்பாலும் விஜயநகரத்து ஆட்சியில் தெலுங்கு நாட்டிலிருந்து அதிகாரம் வகிக்க வந்தவர்கள். இந்தப் பெயரைப் பார்த்தால் இவர்களுடைய மூதாதைகள் ஹேஹய நாட்டிலிருந்து வந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ண முடியும் அல்லவா?

---

7. நூற்பகுதி

# மிருகேந்திரக் கட்டுரை

(வித்வான் - ஔவை. துரைசாமிப் பிள்ளை)

### கட்டுரை 4.

பிற சமயங்களை யாராய்ந்து விளக்குமுகத்தால் சித்தாந்த சைவத்தின் உயர்வை வலியுறுத்திய மிருகேந்திரம், பதிப் பொருளாகிய சிவத்தை உண்டென காட்டி அதன் இலக்கணத்தை யெடுத்தோதுகிறது.

உடல், கருவி, உலகம், உலகபோகங்கள் யாவும் காரியப் பொருள்களாகும். இவை அவயவப் பகுப்புடையவாய்க் குடம்

படம் (உடை) முதலியனபோலச் செயப்படு பொருளாய் இருக்கின்றன. குடம் படம் முதலிய செயப்படு பொருள்களைக் கொண்டு செய்வோனொருவன் உண்டென்பதை யாவரும் இனி துணர்வதனால், இவற்றைப்போன்ற உடல் கருவியுலகங்களும் செய்வோனொருவனையுடையவாகும் என்பது மேலும், குடம் படங்களின் வேலைப்பாட்டின் துணியப்படும். பெருமைகளைக் காண்போர் அவற்றைச் செய்தோனுடைய அருமை அறிவு செயல்களை வியப்பதுபோல, உடல் கருவியுலகங்களின் அழகும் அமைப்பும் அருமையும் பெருமையும் காணுமிடத்து, இவற்றைச் செய்வோன் வரம்பிலாத அறிவும் செயல்களும் உடையனாவனென்பது விளங்கும். இவ்வாறு உடல் கருவி புலகு களைப் படைக்கும் வரம்பிலா அறிவும் செயலுமுடைய முதல்வனே பதிப்பொருளாவான். ஆகவே, உலகு முழுமைக் கும் உடம்பு கருவி முதலிய அனைத்துக்கும் எல்லாவற்றிற் கும் உயர்வற வுயர்ந்த முதற்பொருள் அவனே என்பது தெளிவாம்.

இம்முதற் பொருள் காலங்கடந்தது; இடத்தால் வரைந்து கட்டப்படுவதன்று; காரியப்பொருள்களை முறை யாகவும் ஒருசேரவும் படைக்கும் பேராற்றலையுடையது. காலத்துக்குட்பட்டவை முன்னின்றுப் பின்தோன்று தலும் தோன்றிப் பின் மறைதலும் உடையனவாயிருப்ப, இம் முதற்பொருள் முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாயப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் இப்பெற்றிய தாய் இருத்தலால் நித்தமெனப்படும். இதுபற்றியே, மிரு கேந்திரம், "நித்தியம் கலா நவச்சேதாச்" என்று கூறு கிறது. இவ்விடமென வரைந்து கட்டுதற்கின்றி எங்கும் என்றும் எப்பொருளிலும் நிறைந்திருத்தலால் "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற" பரம்பொருள் என்றற்கு, "நம்பிரசேசகம்" என்று இயம்புகிறது.

இனி, இவ்வுலகிற் காணப்படும் செயப்படுபொருள்களை நோக்கின், அவற்றைச் செய்வோனும், செய்தற்குரிய முதற் பொருளும் இருந்தாலும், செயற்படுதற்குரிய கருவி இன்றி யமையாது வேண்டப்படுதலை யறிகின்றோம். இவ்வாறே உலகுடம்புகளை நோக்குமிடத்தும், முதல்வனுக்குக் கருவி



யொன்று வேண்டுமென்பது விளங்கும். (கருவி வடமொழியிற் காரணமென வழங்கும்.) விளங்கவே, அக்காரணமும் காரியமும் அநாதியே அவன்பால் இயல்பாக வுண்டென்று காண்கின் றோம். இக்காரணமும் காரியமும் அநாதியே இயல்பாக இருப்பன என்பதை, "அநாகாமிச, தத்ரூபம் கார்யஸ்ய அநாதி சம்ஸ்திதே:" என மிருகேந்திரம் கூறுகிறது.

முதல்வன்பால் உள்ள இக்காரணம் சத்தி (ஆற்றல்) எனப்படும். இச்சத்தி இச்சை வடிவினது. முதல்வன் அறிவு வடிவினனாதலால், அவனது சத்தியும் அசேதனமன்று. இதுதான் ஒன்றே; ஆயினும், அறியப்படுவனவும் செய்யப் படுவனவும் பலவாதலால், இச்சிற்சத்தியும் பல பல வடிவாக இருக்கும்.

முதல்வனுக்குக் காரணமாவது சத்தியே யென்பதை மிருகேந்திரம், "காரணஞ்ச, நசத்தியஸ்ய:" என்றும், அஃது அசேதனமன் றென்பதை, "சக்தி நா சேதாத்" என்றும் கூறுகிறது. இதனை விளக்கப்போந்த நாராயண கண்டர், யோகிகட்குச் சத்து எங்ஙனமோ அங்ஙனமே ஈசனுக்குச் சத்தியே காரணம் என்ற கருத்துப்பட கிரணகமம், "இச்சைவ காரணம் தஸ்ய, யதா சத்யோகிநோ மதா" என்று சொல்லுகிறதென்பர்.

இனி, இம்முதல்வன் படைப்பு முதலிய தொழில்களைக் கன்மத்துக்கேற்ப மாயையை முதற்காரணமாகக் கொண் டன்றிச் செயவதில்லை யாதலால், கன்மமாயைகளே இப்படைத் தல் முதலியவற்றைச் செய்யலாம்; முதல்வன் ஒருவன் வேண்டாவே எனச்சாங்கியர் கேட்கின்றனர். விதையானது, முளை முதலியனவாகப் பரிணமிப்பதுபோல, மாயையும் மான் முதலிய தத்துவங்களாகப் பரிணமித்தல் அதற்கு இயல்பு; அது முக்குணவடிவிற்று என்ற கருத்தமைய,

"சத்யதா, பரிணாமைக ஸ்வஹாவம், தத்ரசத்ததா,
அந்யாநபேட்சி பீஜாதி சாமக்ரீய ஸ்வதந்குரோ
மகதாதி வீகாரேண பரிணாம ஸ்வஹாவசய
திருகுணாத்ம பிரதானஞ்ச தேனசாக்ஷ்ய மஹேஸ்வரம்"

என்று சாங்கியர் கூறுவர். இவர்களை மறுப்பார், கன்மம், மாயை மூலப்பகுதி யென்பன சடப்பொருள்கள்; அவை

தாமே தொழிற்படா. ஆன்மா சுதந்திரமில்லாதது பரிண மிக்கும் இயல்புடையதன்று; ஆகவே, பாரிசேடத்தால், இவற்றின் வேறாக முதல்வன் உண்டென்பது தெற்றெனத் தெளியப்படும். இதனை மிருகேந்திரம்,

"கார்யம் நஸ்த்திதி ஜன்மாத் பீஜஸ்ய பாகிரகோணே:
பாரிஷேசாம்ம ஹேசஸ்ய முக்தஸ்ய ஸிவயேவசஹ"

என்று கூறுகிறது.

இவ்விடத்தே "செயப்படுபொருளையும் செய்வோனையும் ஒருங்குடன் கண்டவன் அல்லுழிச் செயப்படு பொருளைக் கண்டவழிச் சாதி சாமானியம் பற்றி இதுவும் செய்வோனையுடைத்தென்று அநுமானத்தாற் றுணிதல் பொருந்து"மென்பதற்குச் சிவஞான பாடியம் கூறும் கடா விடைகள் மிருகேந்திர வுரையின்கண் பட்ட நாராயணரால் நிகழ்த்தப்படுகின்றன. அவை இவ்விடத்து வேண்டா.

இனி, உலகில நிகழும் செய்கைகளெல்லாம் தேகத்தோடு கூடிய தேகிகளாற் செய்யப்படுவது கொண்டு, உலகுடம்பு களைச் செய்யும் முதல்வனும் தேகமுடையனாதல் வேண்டுமென ஓர் எண்ணம் எழுகிறது. தேகமுடையனாயின், தேகிகளாகிய நம்மைப்போல அம் முதல்வனும் சுகதுக்கங்களும் சிற்றறிவு சிறு தொழில்களும் உடையனாவர். இவை தேகத்தின் இயல்பு கள். தேகம் மலகன்மங்களால் உண்டாவன. முதல்வன் மல முதலியனவுடையனல்லன்; ஆகவே, அவற்கு நம்மைப் போலும் தேகம் கிடையாது; அவனது தேகம் சத்தி மயமானது என மிருகேந்திரம் கூறுகிறது,

"மலாப்யசம் வஹாஸ்ச்யாக்தம்வ பூர்ணோதாத்ருசம் பிரபோஹஹ"

என்பது காண்க. இவ்வாராய்ச்சி பவுட்கரத்திலும் செய்யப் படுகிறது.

முதல்வனது சத்திவடிவான தேகம் படைத்தல் முதலிய தொழில்கள் ஐந்திற்குமேற்ப ஐவகை மந்திரவடிவாகக் கூறப் படும். அவை ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தி யோசாதம் என்பன. அவற்றுள் ஈசானமாவது அருளல் என்னும் தொழிற்கு ஏதுவாவது. இது கை கால் முதலிய அவயவத்தோடு கூடியதன்று என்பதற்கு, "நாவயவஸ்தநோ:"



என்று மிருகேந்திரம் கூறும். மக்கள் தேவர் முதலியோர் தேகங்களை யதிட்டித்து நின்று அறிவுவிளக்கம் செய்வது தற்புருடம் என்பது. தூயஞான வடிவாய்ச் சாந்தமாய் இருப்பது அகோரம் என்பது. அகத்தாத்துவாக்களை இயக்கு முறையில் கோரவடிவம் உபசாரமாகக் கூறப்படுவது பற்றி சாந்தநிலை அகோரமெனப்பட்டது. ஆன்மாக்களைத் தாழ்ந்த தன்மையவான அறம்பொருள் இன்பங்களை நுகரப்பண்ணு வது வாமம்; இது வாமதேவ குஹ்யம் என்றும் வழங்கும். எண்ணியவாறே உயிர்கட்கு வடிவுகளை வழங்குதல் யோகியர்க்கு வேண்டும் வடிவிற் போதரல் முதலிய செயல் வடிவுகட்குரிய விரைவுக்கேதுவாவது சத்தியோசாதம். "அவரவர் நினைந்த வடிவில் விரைந்து சேறலின்" எனப் பரிமேலழகர் முதலி யோர் கூறுதல காண்க. விரைவு வடிவு கோடலின்று. இதனை மிருகேந்திரம், "நமூர்த்தே:" என்று கூறுதல் காண்க.

இவ்வாறு மந்திரதேகம் ஐந்தாகக் கூறப்படினும், முதல் வனுக்கென்த் தேகம் கிடையாது; அவனது சத்தியே இவ் வடிவாய்ப் பயன்படும்; அதுவே தேகமென உபசாரமாகக் கூறப்படுகிறது. அச்சத்தியும் ஒன்றே. ஆயினும் செயல்வகை பலவாதல் பற்றிப் பெரியோர். வாமம் முதலிய பல போதங் களைக் கூறுகின்றனர் என மிருகேந்திரம் கூறுகிறது. இதனை,

"இதம் சக்திஹீ குர்வதீ தேகக்ருத்யம்
தேகாபாவாது ச்யதே தேதேக சப்தைஹி
தஸ்யா ஹேதாயேபி வாமாதஸ்ஸ்யு சேதிப்ரோக்தா:
க்ருத்ய ஹேதே நத் விஹி"

என்று மிருகேந்திரம் கூறுதல் காண்க. இனி, பௌட்கரம் (1:56, 57) இவ்வைந்து மந்திர முகங்கள் சதாசிவர்பால் உள்ளன என்றும், இவற்றுள், ஈசானம் தலையிலும், தற்புருடம் முகத்திலும், அகோரம் இதயத்திலும், வாமம் இடையிலும், சத்தியோசாதம் அடியிலும் உண்டென்றும், ஞானி, சனனி, ரோதயித்திரி என்ற மூன்று சத்திகளால் கற்பிக்கப்படும் இந்திரியங்களும் சதாசிவருக்குண்டென்றும் கூறுகிறது.

சைவசித்தாந்த சமாஜம் 41-வது ஆண்டு விழா
திருச்செங்கோடு இளைஞர் மகாநாட்டுத்

# தலைமையுரை

[கி. சிவராமன். எம். ஏ.]

(முன் தொடர்ச்சி)

இவ் வண்டப் பெருவெளியில் உள்ள உலகங்களின் அணிமை சேய்மைகளை அளந்தறிய வானநூல் பயன் படுத்தும் அடிக்கோலின் நீளம் ஆறு இலட்சம் கோடி மைல்களாகும். பன்னிரண்டங்குலம் நீளமான அடிக்கோலைக் கொண்டு பொருள்களின் நீட்சியை அளந்தறியும் நமக்கு, இவ்வுண்மை அண்டத்தின் அகற்சியை ஒருவாறு அறியத் துணை செய்யும். இந்தப் பெரும் பேரண்டத்தில் நிலவுருண்டையின்மீது மனிதன் தோன்றிச் சில நூறாயிரமாண்டுகள் தான் ஆகின்றன. அவன் வாழ்நாள் என்னும் ஒரு இலட்சத்து நூறாயிரம் ஆண்டுகள் நீடிக்கலாம் என்று விஞ்ஞானம் சோதிடம் கூறுகிறது. மனித வருக்கம் தோன்றி மறையும் பெருங்கால அளவை எழுபது ஆண்டுகள் என்று வைத்துக் கொள்வோமானால் இன்றைய மனிதன், இன்னும் தவழும் பருவத்தைக் கூட எட்டாத—தன் தாயைத்தவிர இன்னும் மனிதர்கள் இருக்கின்றார்கள் என்று உணரத் தொடங்கும்— ஒரு குழந்தையாகவே இருக்கிறான்.

இப் பேரண்டத்தில் ஓர் ஊசி முனை போன்ற இந் நிலவுலகிலும் உத்தேசமாக சுக்கிரனிலும்தான் 'உயிர்வாழ்தல்' என்பது இருத்தல் கூடுமானால் இவ்வண்டத்தின் நோக்கம் எங்கோ ஒருகோடியில் கேட்கப்படும் 'உயிர் வாழ்க்கை'யாக இருக்கமுடியாது. "From the cosmic perspective life is a bye-product, a minor detail in a large scheme, with no definite or direct relations to our hopes and fears. Life which is such a merely local and superficial peculiarity cannot be the end of the universe." இன்றைய உலகாயதம் உலகத்திற்குக் கடவுளோ [illegible]யமோ தேவையில்லை என்ற முடி



வைத் தருக்க வாயிலாக நிலைநிறுத்த முற்படாமல், மேற் சொன்னது போன்ற விஞ்ஞான முடிவுகளை உண்மைகளாகக் கடைப்பிடித்துச் சமயமென்பதே ஒரு சிறு குழந்தை காணும் கனவு என்று கூறுகிறது. நேற்றுத் தோன்றிய மனிதன் உலகத்தையும் அதைப் படைத்தவனையும் அளந்து விட்டதாகச் சொல்வது குழந்தையின் மழலையாகத்தான் முடிகிறது.

இவ் வாதம் எவ்வளவு போலியானது என்று காட்ட விரிவான மறுப்புத் தேவையில்லை. விஞ்ஞானத்தின் உண்மை நிலையை எடுத்துப் பேசும் E. W. Hobson, Eddington போன்றவர்களே இத்தகைய உலகாயத முடிவுகள் தவறானவை என்பதை அழகுற எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். விஞ்ஞானம் கூறும் உண்மைகளிலிருந்து அன்னார் 'தெய்வக் கொள்கை'க்குச் சாதகமான கருத்துக்களை அனுமானிக்கின்றார்கள்.

சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் உண்மையில் முரண்பாடு இருத்தற்கு நியாயமில்லை. நம் நாட்டுச் சமயங்கள் விஞ்ஞான உண்மைகளை ஒப்பாமையால் கொள்ளத்தக்கன வல்ல என்று வாதாடுதல் இவ் விரண்டு துறைகளின் நெறியையும் வரம்பையும் நன்குணராதார் செயலாகும்.

சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக மேல் நாட்டில் நிகழும் தத்துவ விசாரத்தில் திரும்பத் திரும்ப எழும் வினாக்களை (1) கடவுளைப் பற்றியன (2) 'தன்'னைப்பற்றியன (3) உலகைப் பற்றியன என மூன்றாகப் பகுக்கலாம். இம் மூன்றையும் பற்றிய விவாதங்கள் ஒரு பெற்றியனவாக இல்லாமல் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொன்று தலை தூக்கியிருந்தது. உதாரணமாக மேனாட்டு இடைக்கால (Middle Age) தத்துவ விசாரத்தில் உலகத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கு மிகத் தாழ்ந்த இடமும் கடவுளைப் பற்றிய ஆராய்ச்சி ஒன்றற்கே முழுச்சிறப்பும் கொடுக்கப்பட்டது. தற்கால தத்துவ ஆராய்ச்சிக்கு (Modern philosophy) அடிகோலிய டெகார்டெ (Descartes) என்ற பேரறிஞர் செய்ததாகச் சொல்லப்படும் அறிவுப் புரட்சி 'தத்துவ விசாரம்' என்பது காணப்படும் உலகைப் பற்றியும் நிகழ்தல் வேண்டும் என்று எடுத்துக்

காட்டியதாகும். உலகத்தைப் பற்றிய விவாதம் என்பது அவ்வக் காலத்து விஞ்ஞான ஆராய்ச்சியை அடியொற்றியே நிகழ்ந்து வந்தது. முதலில் ஒரு நூறாண்டுகள் தத்துவ விசாரம் கணித நெறியையே (Mathematical method) முற்றிலும் பின்பற்றியதாக இருந்தது. கணித நூல் வல்லுநரே தத்துவ விசாரம் செய்பவர்களாயிருந்தனர். பின்னர்ச் சென்ற நூற்றாண்டில் உயிர் நூல் (Biology) நெறியை மேல் வரிச் சட்டமாகக் கொண்டு தத்துவ விசாரம் என்பது நடை பெற்றது. அறிவியல் உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளுள் ஒப்பற்றதாகக் கருதப்படும் "கூர்தல்" அல்லது "உள்ளது சிறத்தல்" (Evolution) என்னும் கோட்பாட்டிற்கு மேனாட்டுத் தத்துவ விசாரம் அடிமையாயிற்று. இன்றும் 'கூர்தல்' கொள்கையே சிற்சில மாறுதல்களோடு தத்துவ உலகத்தில் அரசு செலுத்துகிறது. உளநூல் (Psychology) தருக்க நூல் (Epistemology) ஆராய்ச்சிகளிற்கூடக் கூர்தல் கொள்கை புகுந்துவிட்டது. இவ்வாறு, ஒருகாலத்தில் விஞ்ஞானங்களுக்கெல்லாம் அரசி என்று கருதப்பட்ட தத்துவக்கலை விஞ்ஞானம் அவ்வக்கால முடிபுகளைப் பின்பற்றிச் செல்லும் துணைக் கலையாக மாறிற்று. இது மேனாட்டில் தத்துவ ஆராய்ச்சி வளர்ந்த கதை.

நம் நாட்டிலும் பல்லாயிர ஆண்டுகளாக நடைபெற்று வரும் தத்துவ ஆராய்ச்சி மேற்சொன்ன மூன்று பொருள்களைப் பற்றியே நிகழ்ந்தது. சைவசித்தாந்தம் நேர்முகமாக முப்பொருளுண்மை துணிவதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் பொருளியல்பு துணிதல் என்பது வெறும் விஞ்ஞான ரீதி (scientific) யாக இல்லாமல் தத்துவ ஆராய்ச்சி (metaphysical) யாக இருந்தது.

'உலக முதற்காரணம் பரமாணுக்கள்' 'உலகம் (சட) சக்தி சமூகமான ஒரு மூலப் பகுதியின் பரிணாமம்' என்பன போன்ற முடிபுகள், பௌதிக நூல் (Physics) இன்று ஆராய்ந்து காண்பதுபோல் 'பார்வை' 'சோதனை' (observation & experiment) முறைகளால் காணப் பெற்றவை அல்ல. இத் தத்துவ முடிபுகளெல்லாம் பௌதிகத்திற் அப்பாற்பட்டவை (metaphysical).



கருவி கரணங்களின் துணை கொண்டு ஆராயும் ஆராய்ச்சிக்கு மேற்பட்ட உணர்வுநிலை ஒன்று உண்டு. சமய நூல்கள் அதனை 'அனுபவம்' என்று பேசும்; சைவ சித்தாந்தம் அதனை 'அழுந்தியறிதல்' என்று விதக்கும்; மேனாட்டினர் Intuition என்று கூறுப. மனிதன் பொருள்களின் உண்மையியல்பை யறிதற்கு வேண்டிய நுண்ணிய அறிவினைப் பெற்றிருக்கிறான். அந் நுண்ணறிவினை அகக்கண் என்று கூறலாம். இந்த உண்மையினைச் சைவ சித்தாந்தம் மிக அழகாக எடுத்துக் கூறுகிறது. பிற சமயங்கள் அனைத்தும் 'பிரமைக்குக் காரணமாக உள்ள எல்லாம் பிரமாணம்' என்று கூற சைவ சித்தாந்தம் எப்பொழுதும் எழுவாயாய் இருந்து அறியும் 'ஆன்ம சிற்சக்தியே பிரமாணம்' என்று கூறுவதன் உட்கருத்து வேறென்ன?

இன்னும் இந்த அகக் கண்ணை இறைவன் காட்டக் காணும் இயல்பினது என்றும் அவன் அதைத் திறக்காதவரை மூடியேயிருக்குமென்றும் நம் சமயம் கூறுகிறது. இது நிற்க.

நம் நாட்டில் 'சமயம்' என்பது, முற்றுப் பெற்ற அத்திபாயமாயில்லாமல் நாள்தோறும் வளர்ந்து கொண்டே வந்த தத்துவ ஆராய்ச்சி என்னும் வலிவான அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்ட கட்டிடமாகவே இருந்து வந்திருக்கிறது. தத்துவ ஆராய்ச்சியில் முகிழ்க்கும் உண்மைகளுக்கும் சிலருடைய அன்றாட வாழ்க்கையில் எதிரும் மேற்சொன்ன "அனுபவங்"களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பே சமயமாகப் பரிணமிக்கிறது என்று கூறலாம். முன்னவை சாத்திரமாகவும் பின்னவை தோத்திரமாகவும் சமயத்தை அரண் செய்கின்றன.

விஞ்ஞான உண்மைகளைக் காண்பது கூட ஒரு வித "அனுபவ"த்தின் வழியினால் என்று கூறலாம். விஞ்ஞானத்தில் புரட்சிகரமான உண்மைகளைக் கண்டு பிடித்த வரலாறுகளை நோக்குவோமானால் மேற்சொன்ன உண்மை தெளிவாகும். சமய உண்மைகளையே யன்றி உலகியல் உண்மைகளைக் கண்டறிதலும் ஒருவித அனுபவக் காட்சியே (intuitional experience) என்று பெர்க்ஸன் (Bergson) முதலிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

(தொடரும்)

# செய்திக் குறிப்புகள்

18, 19, 20 - ஏப்ரல் மாதம்—இலங்கை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் மண்டபத்தில் அகில இலங்கைச் சைவர் மாநாடு கூடிற்று. 18, 20, தேதிகளில் சிவக்கவி மணியும் 19ம் தேதி கோவை கிழாரும் தலைமை வகித்தனர். பல அரிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அதனையொட்டி யாழ்ப்பாண மாகாணத்தில் பல இடங்களிலும் அன்னார்கள் சைவப்பேச்சுகளை நிகழ்த்தினார்கள்.

* * * *

16—27 - மேமீ— சைவசித்தாந்தக் கோடை வகுப்பு ஸ்ரீ வில்லிபுத்தூரில் நடந்தது. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்களும், நா. கந்தசாமி முதலியாரும் வகுப்புக்களை நடத்தினார்கள்.

* * * *

25-5-47—சேக்கிழார் திருநாள் விழாக்கள் :—குன்றத்தூர், கோவை, தேவக்கோட்டை, தூத்துக்குடி முதலிய இடங்களில் நடந்தன.

* * * *

நீலகிரி குன்னூரில் திரு மா. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், 'ஆராதனையும் பிராத்தனையும்' என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

* * * *

5, 6-6-47—அருள் மிகு விபுலானந்த அடிகளார் 14 ஆண்டுகளாக ஆராய்ந்த இசைக்கருவி முடிபுகளை எடுத்துரைக்கும் முறையில் திருக்கொள்ளம்பூதூரில் யாழ் நூல் அரங்கேற்று விழாவைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடத்துவார். அனைவரும் சென்று மகிழ்க.

* * * *

25-7-47—வெள்ளியன்று சேரநாடு திருவஞ்சைக்களத்தில் சுந்தரமூர்த்திகள் சேரமான் பெருமாள் திருநாட்கள் கோவை சேக்கிழார் திருக் கூட்டத்தாரால் கொச்சி சமஸ்தான ஆதரவில் நடைபெறும். சித்தாந்த சபையினர் அனைவரும் வருக !

---

பாவனை', 'ஞானசம்பந்தம்' என்னும் பொருள் குறித்தும் பேசினார்கள். மே மாதம் 24வ சேக்கிழார் நாள் மிக விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. யானை, சங்கீதக் கச்சேரி, தேவாரக் கோஷ்டி முன் செல்லப் பன்னிரு திருமுறைகளும் சப்பரத்தில் மடவார் வளாகம் கோயிலைச் சுற்றி வலமாக எழுந்தருளப் பெற்றன. திரு. ஔவை துரைசாமிப் பிள்ளை தலைமையில் திரு. G. கல்யாணம் பிள்ளை, திரு. வித்வான் அ. இராஜ கோட்டியப்ப பிள்ளை 'பெரியார் பிறப்பிடங்கள்', 'கம்பரா சேக்கிழாரா' என்பனபற்றிப் பேசினார்கள். மே 25வ புதுப்பட்டியில் திரு. G. கல்யாணம் பிள்ளை தலைமையில் திரு. கா. இராமநாதன் செட்டியார்; சிவகாமி அம்மையார், ஔவை துரைசாமி பிள்ளை அவர்கள் 'ஒரு வாசகம்', 'இளையான் குடி மாறனார்', 'சமய அறிவு வேண்டுமா ?' என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். மே 26வ நீராழி மண்டபத்தில் திரு. சு. முருகப்ப பிள்ளை தலைமையில் திரு. P. N. P. சங்கர லிங்கம், திரு. புஷ்பம் நடராஜன், திரு. தில்லை அம்மையார், திரு. T. R. சிதம்பரஞ் செட்டியார், திரு. T. S. கந்தசாமி முதலியார் முறையே 'அருகுநனி', 'ஆண்டாள்', 'ஆண்டாள் பாசுரம்', 'முப்பொருளுண்மை', 'சேக்கிழாரும் வாழ்க்கையின் நோக்கமும்' என்ற பொருள் பற்றிப் பேசினார்கள். ஒவ்வொரு நாள் கூட்டமும் வந்தனோபசாரத்துடன் சிறப்பாக முடிந்தது.

---

சமாஜ ஜூன்மாதக் கூட்டம் பெங்களூர் கணபதி விலாச சபையின் ஆதரவில் அன்னவசந்திசங்கத்தில் 1-6-47ல் இராவ் பகதூர் க. அரங்கசாமி முதலியார் தலைமையில் நடந்தது. திரு. பு. ரா. சுவாமிநாதனார், ஆ. ரா. ஏகாம்பரனார், சேது அம்மையார் ஆகியோர் முறையே, 'சம்பந்தர் திருவாக்கு', 'அன்பு', 'சிரிப்பன கலிப்பன தேனிப்பன', 'முருகன் பெருமை' என்பன பற்றிப் பேசினார்கள்.

* * * *

புதிய உறுப்பினராகச் சேர்பவர்கட்கு ஜனவரி முதல் ஜூன் வரை உள்ள சித்தாந்த இதழ்கள் கைவச மின்மையால் அனுப்பப்படமாட்டா.

Regd. M. 2330. "SIDDHANTHAM" Vol. 20. No. 6

## தற்சமயம் கிடைக்கக்கூடிய
# சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 0 | 14 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு .... | 1 | 0 |
| திருமந்திரம் ... | 1 | 8 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை அரும்பத உரையுடன் ... | 0 | 10 |
| சீவக சிந்தாமணி .... | 1 | 12 |
| சங்கநூற்புலவரகராதி .... | 0 | 1 |
| முருகன் மூந்நூல் (திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரநுபூதி) .... | 0 | 3 |
| திருமுருகாற்றுப்படை (உரையுடன்) ... | 0 | 2 |
| திருவாசகம் மூலம் .... | 0 | 4 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

## குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர்கள் (மலர் ஒன்றுக்கு 12 இதழ்கள்) மலர் ஒன்றுக்கு 1 ரூபா வீதம் விற்கப்படும். வேண்டியவர்கள் தபாற் செலவுடன் சமாசச் செயலாளருக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

மலர் **3 (1930), 4 (1931), 5 (1932), 6 (1933) 11 (1938), 13 (1940), 14 (1941), 15 (1942), 16 (1943), 18 (1945).**

செயலாளர்,
9, வைத்தியராமையர் தெரு,
தியாகராயநகர், சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Rovapettah by V. Rajammal, (P. I. Card No. M. S. 115) Edited and Published by Rao Bahadur C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta MahaSamajam, at 9, Vaidyaramayyar St, Thyagarayanagar, Madras, P. I. Card No. M. S. 81.

225

M 2330. "SIDDHANTHAM" Vol. 20—No. 7

225

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடனடியேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே'

20 | சர்வசித்து ஆடி 1947 ஜூலை | இதழ் 7

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| ஒலிபரப்பு ... | 209 |
| தலப்பகுதி—பறங்கியர் அழித்த பூமணி கோயில் ... | 219 |
| சாத்திரப்பகுதி— | |
| 1. காதும் நூலும் ... | 225 |
| 2. ஒன்றும் மூன்றும் ... | 227 |
| சமயப்பகுதி— | |
| 1. சாதனங்கள் ... | 230 |
| 2. மேல்நாட்டுத் தத்துவ ஞானிகள் ... | 231 |
| கலைப்பகுதி— | |
| 1. நால்வர் பெருமக்களுடைய அருமைத் திருவுருவங்கள் ... | 235 |
| 2. அகவினி தேவர் ... | 239 |
| 6. கவிப்பகுதி—'எப்போதும் இனியான்' ... | 241 |
| 7. ஆராய்ச்சிப்பகுதி—இரு பல்லவ அடியார்கள் ... | 246 |
| 8. விரிவுரைப்பகுதி—சைவ இளைஞர் ம. த. உரை ... | 250 |

ஆசிரியர்:
ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ., பி. எல்.,
உதவிப் பத்திராசிரியர்: கி. சிவராமன், எம். ஏ.,

சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2.

# திருமண வாழ்த்து

நமது சமாஜத் தொண்டர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகனார் மூத்த புதல்வர் திரு. அருணாசலத்திற்கும் திருவண்ணாமலையில் பஞ்சக்கரஞ் செட்டியார் புதல்வி சுசீலா செல்விக்கும் 6-7-47ல் திருமணம் நடைபெற்றபோது சமாஜம் அளித்த வாழ்த்து.

மலர்மிசை அயனுமாலுங் காணுதற் கரியவள்ளல்
பலர்புகழ் அருணைமேவிப் பரிதியா யிரமோவென்ன
அலர்புவி மேலுங்கீழும் அனலுரு வாகிமும்மை
மலர்குறை நீக்கியாளும் மலைத்தலம் வாழுமேலோன். 1

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகப்
பஞ்சக் கரமே நெறியிற் பயிலும்
பஞ்சக் கரநற் பெயரோன் பயந்த
கஞ்சத் தவிசின் கவினார் சுசீலா. 2

அம்பொன்னீடிய அம்பலத்தினி லாடுவா ரடிசூடுவார்
சம்புவாய்மையி னீடுசாத்திர நற்கலைமெய்த் திறத்தினார்
நம்புவார்பல மாணவர்க்கருள் கூர்ந் துகல்வியும் நல்கியே
இம்பர்ஞாலம் விளக்கினார்முது சுந்தரப்பெயர் இனியனார். 3

முன்புசெய் தவத்தினீட்டம் முளைத்தெதிர் வந்ததென்ன
இன்புசெய் தனயன் சேட்டன் முத்துமா ணிக்கனீங்கு
துன்புசெய் குற்றமில்லாத் துணைவிபாற் பெற்றதங்கன்
அன்புசெய் அறமேற்கொள்ளும் அருணையாம் அசலன்தம்பி. 4

நங்கையைக் காணுந்தோறும் ஆயிரம் நயனம்பெற்றான்
மங்கையைச் செங்கைபற்றி மாநெரி வலமேவந்தான்
கங்கையைச் சடையில்வைத்த கண்ணுத லருளும்பெற்றான்
அங்கையை நிரப்பியான்றோர் ஆசியாம் அரிசிபெய்தார். 5

நிறைநாள் உளராய் நிதிபொன் மிகவாய்க்
குறைகோ ளிலராய்க் குணஞ்சீர் பலவாய்ப்
பிறைபோற் புதல்வர் பலராய்ப் பெருகத்
திருவாய் மலர்வாய் இணைமான் குகனே. 6

மயிலை கிழார் இளமுருகனார் யாத்தது

Reg. M. 2330

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 20 | சர்வசித்து ஆடி 1947 ஜூலை | இதழ் 7

159922

## ஒலிபரப்பு

ஆசிரியர்

### 1. வாழ்க்கை முறைகளில் வேறுபாடுகள்

வடமொழி நூல்களிலே வாழ்க்கை முறைகள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன. ஒருவனே மாணாக்கன், இல்லறத்தான், காட்டுவாசி, துறவி என்று நான்கு நிலைகளிலும் படிப்படியாக வாழவேண்டும். இந்நான்கு நிலைகளுக்கும் ஆச்சிரமங்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மாணாக்கன் என்ற நிலையில் ஒருவன் கல்விபெற ஒரு ஆசிரியனிடமிருந்து வாழ வேண்டும். அவன் மணம் செய்து கொள்ளக்கூடாது. இருப்பிடமும் ஆசிரியன் பன்னசாலைதான். பிறகு இல்லறத்தான் என்ற நிலையில் அவன் வாசித்து முடிந்த பிறகு ஒரு மனைவியை மணஞ் செய்துகொண்டு உலகவாழ்வில் யாதாவது ஒரு தொழிலை செய்துகொண்டு வாழவேண்டும். அவ்வாழ்வில் வாழ்ந்து முதுமை அடைந்த பிறகு அவனே காட்டிற்சேகி காட்டுவாசி (வானப்பிரத்தன்) என்ற நிலையில் அக்காட்டில் மனைவியுடன் இலையால் குடிசை கட்டிக்கொண்டு வசிக்க வேண்டும். அப்போதி இருவரும் சமை தவநிலையில் வாழ

வேண்டும். இறுதியில் துறவியாகி (சன்யாசி) எல்லாவற்றை
யும் துறந்து ஓர் இடத்தில் நில்லாமல் வீட்டுப் பேற்றைக்
கருதி நிற்றல் வேண்டும். இந்நான்கு நிலைகளும் ஆசிரமம்
என்ற சொல்லில் அடங்கி இருந்தன. ஆனால் வழக்கத்தில்
ஆசிரமவாசம் என்ற மூன்றாவதான வானப்பிரத்தத்திற்கே
பொதுவாக அச்சொல் கூறப்பட்டது. புராண இதிகாசங்களில்
காணும் இருடிகள் முனிவர்கள் முதலியோர் எல்லாம்
மூன்றாம் நிலைமையைச் சேர்ந்தவர்களே. அந்தணர், அரசர்,
வணிகர் இம்மூன்று வகுப்பார்கள் மட்டும் இந்த ஆசிரம நிலை
யில் இருந்திருக்கிறார்கள் என வடமொழி நூல்களில் ஆதாரம்
உண்டு. இக்காலத்திலோ ஆச்சிரமம் என்ற சொல்லை பலவித
மான நிலையங்களுக்கும் உபயோகித்து வருகின்றனர்.
இல்லறத்தானுடைய அழகிய வீடு, மாணவர் கல்வி நிலையம்,
ஊருக்கு வெளிப்புறத்தில் கட்டி வாழும் உல்லாசப் பூந்தோட்
டம், துறவிகள் தொகுதியாய் வாழும் வாழ்வுநிலையம் இவை
கள் எல்லாம் ஆசிரமப் பெயரில் நுழைந்துவிட்டன.

தமிழ் நூல்களிலோ இவ்வித வாழ்க்கை முறை கூறப்
படுவதே இல்லை. மாணவனே ஆசான் வீட்டுத் திண்ணையில்
படித்து வந்தான். காட்டிற்கேகாமல் ஊரிலிருந்தே படிப்பான்.
ஆசானும் இல்லறத்திலே இருந்து கற்பித்தலைத் தொழிலாகக்
கொண்டுக் 'கணக்காயன்' என்ற பெயரோடு வாழ்க்கையை
நடத்தி வந்தான், படிப்பு என்பது அந்தணர் அரசர் வணிகர்
என்ற மூன்று வகுப்பார்களுக்கு மட்டும் அல்ல. கைத்தொழி
லாளர், உழவாளர் முதலியவர்களிடமும் இருந்தது. (வருணம்,
சாதி என்ற சொற்கள் வடமொழிச் சொற்கள். தமிழில்
அவைகளுக்கு ஏற்ற தனித் தமிழ்ச் சொற்களும் இல்லை
என்பதறிய வேண்டும்.) இல்லறத்தானே தூய உயரிய
வாழ்க்கை உடையவன். அவன் வாழ்க்கையே பெரும் புலவர்
களால் போற்றப்பட்டது. காட்டுவாசி என்ற வானப்பிரத்த



வாழ்க்கையே தமிழரில் இருந்திருக்க முடியாது என்னலாம்.
வடநாட்டு அந்தணர் அரசர் முதலியோர்களைப்போலத் தமிழ்
ஆசிரியர்களும் மன்னர்களும் காடுகளுக்குச் சென்று மனைவி
களோடு தவம் செய்யச் சென்றதாக எடுத்துக்காட்டுகளில்லை.
ஆகவே ஆசிரமம் என்ற தனி நிலையம் தமிழில் இல்லை.
இல்லறத்திற்கு மாறாக துறவறம் என்ற நிலை ஒன்றே
இருந்தது. அது உலக இன்பத்தைத் துறந்தவர்களுடைய
வாழ்க்கை. அவர்கள் காட்டிலே வாழ்ந்தார்கள் என்றும்
சொல்ல முடியாது. ஊரிலேயே வாழ்ந்திருக்க முடியும்.
பிற்காலத்தில் இவர்கள் ஊர்ப் புறங்களில் மடங்களில் வாழ்ந்
தார்கள் என அறிகிறோம். சமீப காலங்களில்தான் வடநாட்டு
நூல்களைப் படித்துவிட்டுச் சிலர் ஆசிரமம் என்ற அடை
மொழியைச் சில நிலையங்களுக்குப் பெயர் வைக்க விரும்பு
கிறார்கள். இது எம்மட்டும் தகுதியோ என்று ஆராய்க.

* * *

## 2. சமய வாழ்க்கையும் போதனையும்

வடமொழி நூல்களின்படி ஒருவன் பிறந்தது முதல்
இறக்கும் வரையில் சமயச் சார்பான வாழ்க்கையையே வாழ
வேண்டும். அவனுக்கு ஏற்பட்டிருக்கும் விதிகளை ஆராய்ந்
தால் அவனுக்கு உலகச் செய்திகளை நினைக்கவும் பொழுது
இருக்காது. அந்தணனுக்கு வேறு தொழிலில்லை. அரசனுக்
கும் போர்வீரனுக்கும் சமயச் சார்புகளோடு உலகச் செயல்
களும் உண்டு. வணிகனுக்கும் அப்படியே. நான்காம் குலத்
தான் அவனுடைய தொழிலை கடமையாகச் செய்வதே அவன்
சமயம். அவனைப்பற்றிய விவரங்கள் மிகக் குறைவாகவும்,
உண்மையில்ஒன்றுமே இல்லாதவாறும், இருக்கின்றன. ஆகவே,
அவனுக்குச் சமயவாழ்க்கை வற்புறுத்தப்படவில்லை எனலாம்.
அரசனுக்கோ ஆசிரியர்களே குருமார்கள் என்ற வகையில்

அவனுடைய அவைக்குச் சென்று சமயத்தைப் போதிப்பார்
கள். அந்தணச் சிறுவனே ஆசிரமத்திற்குச் சென்று அங்கு
வாழும் இருடிகளிடம் சமயபோதனை பெறுவான். அப்
போதனைப்படி அவன் வாழவேண்டும். இவ்வாழ்க்கை விதிப்
படி ஏற்பட்டது. ஆனால் அனுபவத்தில் எவ்வாறு இருந்தது
என்று உறுதியாகச் சொல்ல முடியாது. தாய்க்கொலை,
வெறுங்கொலை, போர்த் தொழில், வாணிபம் முதலியவை
களைச் செய்த அந்தணர் கதைகளும் பஞ்சமாபாதகங்களுடன்
பலவித ஹத்திகள் செய்து நரகவேதனை பெற்ற கதைகளும்,
புராணங்களில் நிரம்பி உள்ளதால் சமயவாழ்க்கை போதனைப்
படி இருக்கவில்லை என அறியக்கூடும்.

தமிழ் நூல்களின்படி, சமய வாழ்க்கையில் ஈடுபட்ட
பெரியார்கள் உலகத்திலேயே வாழ்ந்து ஊர்களிலே சமயத்
தைப் பரப்பினார்கள் எனலாம். சம்பந்தர், அப்பர் முதலி
யோர் ஊர் ஊராய்ச் சென்று ஆலயங்களில் தமிழ் மறைகளைப்
பாடி சைவ சித்தாந்தத்தைப் பரப்பினார்கள். நாயன்மார்களில்
பெரும்பாலார் இல்லறத்திலேயே இருந்து மக்களுடன் உடன்
வாழ்ந்து அவர்களுடைய தூய வாழ்க்கைச்கும் தியாக
வாழ்க்கைக்கும் எடுத்துக் காட்டுகளாகத் திகழ்ந்தார்கள்.
காடுகளுக்குச் சென்று எவரும் சமயபோதனை பெற்றதாக
வரலாறு இல்லை. எல்லா வகுப்பார்களுக்கும் சமயபோதனை
வழங்கப்பட்டது. பாணரும் சமயப் பிரசாரத்தில் சேர்த்துக்
கொள்ளப்பெற்றார்கள். சமயத்தின் நிமித்தம் தொழில்களை
எவரும் புறக்கணித்ததாக இல்லை. வாழ்வுக்கு ஏற்றம் தந்தது
சமயபோதனை மட்டுமன்றி நீதிபோதனையுமே என்று திருக்
குறள் காட்டுகிறது. இது மக்களுக்குப் பொதுநூல் என்பது
அறிக. அத்தன்மைய பொதுநூல் வடக்கே எங்கேயாவது
உண்டோ ?



## 3. அறிவுப் படிப்பு

வடநாட்டில் சமயப் படிப்பை ஒட்டியே பொதுப் படிப்பும் இருந்தது. இரண்டையும் பிரிக்கமுடியாத வகையில் அவை இருந்தன. அந்த நிலைமை வடமொழி நூல்களில் எல்லாம் காணலாம். புராண இதிகாச ஆகமங்களில் மிகுதியும் காணலாம். இப்படிப்பைப் பெறவோ அந்தணர்களேயன்றி அரச குமாரர்களும் காட்டிற்குச் சென்று ஆசிரமங்களில் படிக்கவேண்டும். இராம லட்சுமணர்கள் வசிட்டாசிரமத்திலும் பாண்டவர்கள் துரோணர் கிருபர் ஆசிரமங்களிலும் படிக்கவில்லையா? கண்ணன் படித்த ஆசிரியரிடம் சுதாமனாகிய அந்தணனும் படித்ததறிந்தோம். வில்வித்தை வாள்வித்தைகளும் ஆசிரமங்களிலேயே கற்பிக்கப்பட்டன. எனவே அறிவுப் படிப்பும் ஆசிரமங்களை ஒட்டியே இருந்தது. அரசர்கள் ஊர்களில் கல்விச்சாலை வைத்து நடத்தவில்லை. பௌத்த சமண சமயங்கள் வந்த பிறகுதான் அவர்களுடைய குரவர்கள் தட்சசிலை, நளந்தை முதலிய இடங்களில் ஆசிரம கலாசாலைகளை வைத்து நடத்தியிருக்கிறார்கள்.

தென்னாட்டிலோ தமிழ் மன்னர்களே தமிழை வளர்த்தார்கள். பாண்டியர்கள் மூன்று சங்கங்களை ஏற்படுத்தி ஆதரித்தார்கள். அங்கே தமிழ் ஆராய்ந்த புலவர்கள் கைத்தொழில், பொன்வேலை, கூலவாணிகன், கணக்காயன் முதலிய தொழில்களிலே ஈடுபட்டவர்கள். ஆகவே அறிவுப் படிப்பும் மிகுதியாக இருந்தது. சமயத்தை ஒட்டாத அறிவுப்படிப்பும் இருந்தது. அதனாலேதான் சங்க நூல்கள் அகம் புறம் என்ற இருவகைகளிலும் மிளிரக் காண்கிறோம். ஆசிரம அறை கூவல் இங்கு இருக்கவில்லை.

* * *

## 4. பிற்கால மாறுதல்

இதுவரை வடநாட்டுக் கல்வி முறைக்கும் தென்நாட்டு
முறைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறினோம். சென்ற 200
ஆண்டுகளாக ஆங்கிலர் இங்கே வந்த பிறகு கல்விக்கூடங்களை
அமர்த்தினார்கள். வடநாட்டு மக்கள் பண்பாட்டிற்கும் தென்
நாட்டு மக்கள் பண்பாட்டிற்கும் வேற்றுமை அறியாத மேற்கு
நாட்டார் அவ்விரண்டும் ஒன்று எனக் கருதி மக்கள் சட்டத்
தையும் கல்வித் திட்டத்தையும் ஒன்றாக்கிவிட்டார்கள். அதன்
கலப்பாலே தமிழருக்கு விஞ்ஞானேசுவரமும் மிதாட்சரமும்
சட்டமாகிவிட்டது. படிப்பிலும் வடமொழி மிகுதியாக
புகுத்தப்பட்டது.

ஆனால் தனித்தமிழ் மிகுதியாக வழங்கும் ஈழ நாட்டிலோ,
சட்டத்தில் தமிழர் கொண்டிருந்த வழக்கத்தைச் சார்ந்த
திட்டமே வகுத்தார்கள். நாட்டு வளமை என்ற தமிழர்
முறையே அங்கு ஆளப்படுகிறது. அதுபோல் தமிழர் கல்வி
யும் பெருக்கப்பட்டது. அதனாலேதான் ஈழ நாட்டில்
நூற்றுக்கு 75 பேர் வாசித்தவர்கள் ஆனார்கள். தென்நாட்
டிலோ இன்னும் நூற்றுக்கு 12 பேருக்குமேல் வாசிக்கவில்லை
என்று அறிய வேண்டும். சமயப் படிப்போ நிறுத்தப்பட்டது.
பொது அறிவுப் படிப்போ வீசத்திலும் குறைந்துவிட்டது.
இது பிறரை நோக்கிப் புகுத்தின முறையற்ற திட்டத்தி
னுடைய செயல் என்க. இனி வேறொன்றை ஆராய்வோம்.

* * *

## 5. "அந்தப் படம் பார், இந்தப் படம் பார்"

'வால் அறிவன் நற்றாள் தொழுவதற்காக'வே கல்வி
கற்கவேண்டும் என்று கல்வியின் பயன் கூறமிடத்து நாயனார்
அதனை வற்புறுத்தியிருக்கிறார். ஆகவே எந்தவகையாலேனும்



குடிகளுக்குக் கல்வி புகட்டுவது ஆளுவோரின் கடமை
கல்வியறிவு கிடைக்காத ஏழை மக்களின் பரிதாப
நிலைமையை அறிந்து அவர்களுக்கென்று இலவசமாகவும்
கட்டாயமாகவும் கல்வி புகட்டுவது அரசியல் கடமை. இதனை
நன்கு அறிந்த இலங்கை அரசியலார்கள் இரண்டு விதங்களில்
கல்வியைப் பரப்பி வருகிறார்கள். ஒன்று, கல்லூரிப் பட்டம்
பெறுகிறவரையில் மாணவர்களுக்குச் சம்பளம் இல்லை என்பது.
இரண்டு, தனிப்பட்ட பாடசாலைகளிலும் ஆசிரியர்களுக்கு
முழுச்சம்பளம் அரசியலாரே தருவது. இந்தத் திட்டம்
சமீபத்தில் செயல்முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.
இதனைக் கேட்டபோது முதலில் நான் நம்பவில்லை. பின்னிட்டு
அது உண்மை எனத் தெரிந்து கொண்டேன்.

சென்னை மாகாணத்துப் பாடசாலைகள் கல்லூரிகள்
முதலியவைகளை இதற்கு ஒத்திட்டுக் காண்க. தொடக்கப்
பாடசாலைகளுக்கு மட்டும் இலவசப் படிப்பும் கட்டாயப் படிப்
பும் ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. அதைத்
தொடங்கி 27 ஆண்டுகள் ஆகியும் நிறைவேறினதாகத் தெரிய
வில்லை. தனிப்பட்ட பாடசாலைகளிலும் மிஷனரி பாடசாலை
களிலும் முதல் வகுப்பிற்கும் சம்பளம் உண்டு. மேல் வகுப்பு
களுக்குச் சொல்லவேண்டியதேயில்லை. நாள்தோறும் பிள்ளை
கள் கொடுக்கவேண்டிய சம்பளம் உயர்ந்துகொண்டே செல்லு
கிறது. சென்றவாரத்தில் அரசியல் கல்லூரிகளில் மாணவர்
சம்பளம் 25 சதவீதம் பெருக்கிவிட்டார்கள். இதுவா
'நற்றாள் தொழுவதற்கான' நோக்கம் கொண்ட படிப்பு?
ஆசிரியர் நிலைமை என்ன? தனிப்பட்ட பாடசாலைகளுக்கு
என்ன உதவி கிடைக்கிறது? குடிகளிடம் இறை வாங்குவது
எதற்காக? அதன் பயனை மக்கள் பெறவேண்டாமா?

* * *

## 6. வெளிநாடும் உள்நாடும்

தென்னாட்டாரை இனிமைமொழி பேசும் தமிழன் என்றும், வடநாட்டாரை கண்ணியப் பெயர்கொண்ட ஆரியன் என்றும் நம்முன்னோர் பெருமை கூறிப் பாராட்டினார்கள். வெளி நாட்டாரை அநாகரீகன் என்ற பொருள்கொண்ட மிலேச்சன் என்று கூறினார்கள். பண்டைக் காலத்தில் வெளி நாட்டாருக்குத் தத்துவ ஞானம், சமய ஞானம், கலை ஞானம் முதலிய கல்விகளை நாமே தந்தோம். இப்போதும் அதைப் பற்றியே பெருமையாக மேடைகளில் பேசுகிறோம். இந்த நாளிலும் நம் நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி பிறநாட்டார் ஆராய்ச்சிக்கு இளைக்கவில்லை. நேற்றும்கூட டாக்டர். ச. வே. இராமனை உருஷியர்கள் மெச்சிப் பிருது தந்து தங்கள் நாட்டிற்கு அழைத்திருக்கிறார்கள்.

இப்படியிருக்க, நூற்றுக்கணக்கான மாணவர்களை மேல் நாட்டிற்கு அரசியலார் ஏன் அனுப்புகிறார்கள்? அவர்களுக்கு அரசாங்கப் பணத்திலிருந்து செலவுக்குக் கொடுத்து அங்கு கற்பிக்கும் கலைப் படிப்பை ஏன் படிக்கச் செய்கிறார்கள். ஒரு மாணவனுக்கு அவ்வாறு தரும் பணத்தைக்கொண்டு இந்த நாட்டில் 20 மாணவர்களுக்குக் கலைப் படிப்பைக் கற்பிக்கக் கூடாதா? வெளி நாட்டிற்குப்போய் அதிகக் கல்வி பெறுகிறார் கள் என்பது சுத்தப் பிரமையே. இந்த நாட்டிலேயே படித்த வர்கள் வெளிநாட்டாரைவிடப் பதின் மடங்கு சிறப்போடு தங்கள் அலுவல்களை நடத்துகிறார்கள் என்று நேரில் அறிய முடியும். சமயத்திலும் தத்துவ ஞானத்திலும் சிறந்துள்ள இந்த நாட்டு மக்கள் அதற்காகவும் வெளிநாடு செல்லுகிறார் கள் என்றால் அது வெட்கக்கேடுதான். அன்னார்களுக்கு நன்மதிப்பும் நல்ல வேலையும் மிகுதியான சம்பளமும் கொடுப்



பது வீண் என்று அறியவேண்டும். சைவத்தை அறிய ஆங் கில நூலை வாசிப்பதுபோல அல்லவோ இது இருக்கிறது?

* * *

## 7. தமிழ்ப் படிப்பில் ஆர்வம் இருக்கிறதா?

நமது இளைஞருக்குள் தமிழ்ப் படிப்பில் ஆர்வம் குறை கிறதா, அல்லது ஏற்றம் அடைகிறதா? நாடெங்கும் இப் போது தமிழ்ச் சங்கங்கள் பெருகுவதும், கூட்டங்கள் விழாக் கள் நடைபெறுவதும், மேடைகளில் தமிழ் உரையாடுவதும், பார்த்தால் தமிழில் ஆர்வம் ஏற்றம் அடைகிறது என்றே எண்ணுவோம். அவைகளில் இளைஞர்கள் ஈடுபடுவதை நேரில் காண்கிறோம். ஆகவே தமிழில் ஆர்வம் இளைஞர்களில் மிகுதியாய் இருப்பதாகத் தோன்றும்.

ஆனால் இந்த ஆண்டில் வெளிவந்த பள்ளிப் பொதுத் தேர்வுகளில் (S. S. L. C. 1947) கணக்குப் புள்ளிகளைப் பார்த்தால் சிறிது ஐயம் தோன்றும்.

1947 தமிழ்ப் பாடம் சராசரி—37 அம்சம் சதவீதம்.
1946 „ „ —43 „

ஆகவே, தமிழில் மாணவர்கள் ஆர்வமும் தேர்ச்சியும் குறைந்துவிட்டதா? சென்ற ஆண்டைவிட 6 சதம் குறைவு ஆகி இருக்கிறது. ஆனால் ஆங்கிலத்தை ஒத்திட்டுப் பாருங்கள்.

1947 ஆங்கிலம் சராசரி—39 சதவீதம்
1946 „ „ —37 „

இப்புள்ளிகளைப் பாருங்கள். பிறநாட்டு மொழியாகிய ஆங்கிலத்தைவிடத் தமிழர்களுக்குத் தமிழில் தேர்ச்சிக் குறைவா? இது என்ன விபரீதம்!

தமிழில் குறைவதற்குப் பிள்ளைகள் நன்றாக வாசிக்க வில்லையா? தமிழாசிரியர்கள் நன்றாகக் கற்பிக்கவில்லையா?

அல்லது விடை திருத்துகிறவர்கள் கடினமாக சோதித்தார்
களா ? என்ற இந்த மூன்று கேள்விகள் தோன்றுகின்றன. சில
பிள்ளைகளைக் கேட்டதில் 'நன்றாக எழுதினோம். ஆங்கிலத்தை
விட நாம் தமிழை அறிந்ததில்லையா ? விடைத்தாள் திருத்து
கிறவர்களுடைய எண்ணம் அறியுங்கள்' என்று கூறினார்கள்.
எது உண்மை ?

* * *

## 8. சைவப் படிப்பில் ஆர்வம்

தமிழ்ப் படிப்பில் எவ்விதமாகவோ இருக்கட்டும். சைவப்
படிப்பில்கூட ஆர்வம் இருக்கிறதா என்று கேட்போம். சென்ற
மூன்று ஆண்டுகளாகச் சைவப் புலமைத் தேர்தல்களை நமது
சமாஜம் நடத்திற்று. புள்ளிகளை ஆராய்ந்தால், சென்னை
மாகாணத்தில் ஒருவரும் தேருதலுக்கும் வரவில்லை.
இலங்கையிலிருந்துதான் வந்தார்கள். பரிசுகளும் அவர்களே
பெற்றார்கள். ஆகவே சென்னைப் பிள்ளைகளுக்குச் சமயத்தில்
ஆர்வம் உண்டா என்பது கேள்வி.

சென்னைப் பல்கலை கழகத்தில் சைவசமய ஆராய்ச்சிக்கு
ஒரு திட்டமுண்டு. இதற்கு இதுவரை எவரும் சேர்ந்து
வாசிக்க முயலவில்லை. ஆகவே ஆர்வம் எங்கே இருக்கிறது ?
மேலும், சமய நிலையங்களிலாவது உள்ள பாடசாலைகளில்
எத்தனை பிள்ளைகள் சேர்ந்து வாசிக்கிறார்கள் ? இவர்களில்
சித்தாந்தத்தில் எத்தனை பேர் தேர்ச்சி பெறுகிறார்கள். இனி,
தேவாரப் பாடசாலைகளிலாவது தகுந்த ஓதுவார்கள் இருக்கி
றார்களா ? ஓதுவார்கள் இருந்தால் பிள்ளைகள் இல்லையே ?
இந்த ஆர்வக் குறைவு எப்போது நிவர்த்தி ஆகுமோ ?

---

2. தலப்பகுதி

# பறங்கியர் அழித்த பரமன் கோயில்

(திருகோணமலை)

## 1. அழகு மிளிர்ந்த கடற்கரை

ஈழமண்டலத்துக் கீழ்க்கரை அழகுக்குப் பெயர் பெற்றது. நீலநிறமான நீர்ப்பரப்பில் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக நீர்த்திவலைகளை மோதிக்கொண்டு கரையின்மேல் அடிக்கும். தெள்ளிய மணல்கொண்ட அகலமான கரையில் வெள்ளை நுரைகளை அலைகள் அடித்துத் தள்ளும். பலவிதமான கிளிஞ்சல்கள் சிப்பிகள் முதலியவைகளை வாரிக்கொண்டு அலைகள் மணலின்மேல் தள்ளும். மேலும் அம்மணற் கரையின்பின் பெரிய பாறைகள் சுவர்கள்போல் நிற்கும். பாறைகள் கன்னங்கரேல் என்று கரடுமுரடாக உயர்ந்து கிடக்கும். முழுமதி இளமதி நாள்களில் அலைகள் உயர்ந்து அப்பாறைகளின் மேலே மோதிக்கொண்டு ஒலிக்கும். அப்பாறைகளுக்குப் பின்னால் நிலப்பரப்பில் தென்னந்தோப்புகள் பச்சைப்பசேல் என்று வான் அளாவிக்கொண்டு நிற்கும். ஆனாலும் மேற்குக் கரையைப்போலக் கிழக்குக்கரைத் தென்னை அத்தனை செழிப்பைக் காட்டுகிறது இல்லை.

## 2. அரணோடு அமைந்த துறைமுகம்

இப்படிப்பட்ட பாறைகளைக் கரையாகக்கொண்ட கிழக்குக் கரையோ நேர்க்கோடு இட்டாற்போல் அமைப்புப் பெற்று இருக்க இல்லை. கணக்கு இல்லாத சிறு வளைவுகளை அந்தக் கரை பெற்று இருக்கிறது. அவைகளில் ஒரு வளைவு மிகப்

பெரியது. அதனை வளைகுடா என்றே கூறவேண்டும். ஒரு மகத்தான பானைபோல அது வாய் திறந்துகொண்டு இருக்கிறது. இருபுறங்களிலும் அதனுடைய கைகள் கடலை அணைத்துக்கொண்டு இருக்கின்றன. இக்கைகளோ பெரும் பாறைகளால் ஆகிய நிலத்து முனைகளே. இந்த இரு கைகளுக்கும் இடையிலே உலகிலேயே மிகப் பெரிய துறைமுகங்களில் ஒன்று இருக்கிறது. உலகத்தில் உள்ள எல்லா போர்க்கப்பல்களும் இதில் புகுந்து அடைக்கலம் பெறக்கூடும். இக்குடாவின் பாறைக் கைகள் இத்துறைமுகத்திற்குப் போதிய அரணைத் தருகின்றன. எப்படிப்பட்ட புயல் காற்று வந்தபோதிலும் அது இத்துறைமுகத்தை எந்தக் கெடுதியும் செய்யாது. சென்ற உலகப்போரில் இத்துறைமுகத்திலே ஆங்கிலக் கப்பற் படைகள் தங்கி இருந்தன. அவைகளைப் பகைவர்கள் அணுகுவதற்கு முடியாத பலமான அரண்களை அது இயற்கையாகவே படைத்திருந்தது.

## 3. புனிதத்தன்மை பொருந்திய தீர்த்தம்

இப்படிப்பட்ட வலிமை வாய்ந்த துறைமுகமோ மிகப் புனிதமான நீர்ப்பகுதியைக் கொண்டு இருக்கிறது. இத்துறைமுகத்துக்குள்ளேயே ஈழநாட்டிலே மிகப் புனிதநதியாகிய மாவலிங்கை சங்கமம் ஆகிறது. அப்புண்ணிய தீர்த்தம் சிவன் ஒளிபாதம் அடங்கிய மலைசிகரங்களின் சார்புகளிலே தோன்றிப் பல மலைபடு பொருள்களையும் இழுத்துகொண்டு திருத்தலங்கள் பலவற்றின் வழியாகப் பாய்ந்து இந்தத் துறைமுகத்தில் கலக்கிறது. ஆகவே இந்தத் துறைமுகத்தின் புனிதத்திற்குச் சமம் வேறு எங்கு உள்ளது ?

## 4. குன்றின்மீது கோயில்

இந்தத் துறைமுகத்தின் இருகரங்களில் வடபுறம் உள்ள கரத்தில் கரும்பாறைகள் அமர்ந்த செங்குத்தான



குன்று ஒன்று இருக்கிறது. இதனுடைய பாறைகள் கோணல் ஆக அமைந்திருக்கின்றன. அதனாலே மக்கள் இதனைக் கோணமலை என்று அழைத்தார்கள் போலும். அதன்மீது பரமசிவனார் எழுந்தருளி இருந்த பண்டைக்கோயில் ஒன்று இருந்தது. அந்த புனிதத்தை எண்ணி அம்மலையைத் திருக்கோணமலை என்று சொல்லிப் பாராட்டினார்கள். இக்கோயில் மிக்க அழகாகவும் பல சிற்பச் சிறப்புகளையும் கொண்டு இருந்தது. ஆகவே இதனை சைவ மக்கள் வெகு சிறப்போடு வழிபட்டுப் போற்றி வந்தார்கள். திருக்கோயில் இருந்த மலைப்பகுதி ஆயிரத்தி இருநூறு மார்பு நீளமும் எண்பது முதல் முப்பது அடி வரை அகலமும் கொண்டு இருந்தது. இக்கோயில் செங்குத்தான பாறையின்மீது அமர்ந்திருந்த படியால் அது மிக்க வலிமைகொண்டு இருந்த கோட்டை அரண்போல் இருந்தது.

## 5. பண்டைப் புராணக் கூற்றுகள் :

இக்கோயில் பண்டைப் பெருமை வாய்த்திருந்தபடியால் புராணங்களிலும் இதிகாசத்தை ஒட்டிய கதைகளிலும் சிறந்து விளங்கியது. ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் தம் தம் ஆற்றலைக் குறித்து வாது வரவே, மாமேருச் சிகரங்களை ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளாலும் கவர்ந்துகொண்டு நிற்க வாயுபகவான் அச்சிகரங்களைத் தன் வேகத்தால் அடித்த போது அச்சிகரங்களில் மூன்று சிகரங்கள் தெற்கேசென்று விழவே, அவைகளில் ஒன்று திருக்கோணமலை ஆயிற்று என்பது தக்ஷிண கயிலாய மான்மிய வரலாறு. அது முதல் அம்மலை தென்கயிலை என்று பெயர் பெற்றது. பிறகு இராவணன் இக்கயிலையை எடுக்க முயலுகையில் தன் வாளால் இதன் பாறையைப் பிளக்க அது இரண்டாகப் பிளந்ததாம். இப்படிப் பிளந்ததெனக் கூறும் பாறையை இன்றும்

காணலாம். இராவணன் மலைக்குள்ளே சிக்கிக்கிடக்க அவன் தாயார் துயரத்தால் உயிர்விட்டனளாம். இராவணன் திரும்பி வந்து ஆலயத்திற்குள் செல்ல எண்ணுகையில் தீட்டு வந்ததனால் அவன் உள்ளே செல்ல முடியவில்லையாம். பிறகு தாயாருக்கு அந்தியக்கிரியைகள் செய்யக் கன்னியா தீர்த்தத்தில் ஏழு கிணறுகள் குத்தி எழுப்பி அங்கு கிரியைகள் முடித்துப் பின் ஆலயம் சென்றனனும் என்பது புராணத்தில் மற்றொரு வரலாறு.

## 6. சரித்திரப் பகுதி :

மனுநீதிச்சோழன் திருக்கோணமலையின் பெருமையை அறிந்து அங்கு வந்து ஆலயங்களைக் கட்டத் தொடங்கினன். அவைகளை முடிக்காமல் காலகதி அடைய அவன் மகன் குளக்கோட்டன் என்பவன் இங்கு வந்து தன் தகப்பன் வைத்திருந்த பொன்னைக் கொண்டு திருப்பணிகளை முடித்தான். அதைக் கேட்ட ஆடகசௌந்தரி என்ற இலங்கை அரசி தன் அனுமதியின்றிக் கட்டின கோயிலை இடிக்கும்படி பௌத்தர்களை அனுப்பித் தானும் அங்கு சென்றாள். அங்கே அமைந்திருந்த ஆலயத்தின் அழகில் ஈடுபட்டு நின்றாள். அமைச்சன் மதிசொல்ல அக்குளக்கோட்டனையே கணவனாக வரித்துக் கொண்டாள். பிறகு அவளுடைய படையின் உதவியைக் கொண்டு கந்தளாய்க் குளத்தை அவன் கட்டுவித்தான். அதனால் அவன் பெயரும் குளக்கோட்டன் என்று ஆயிற்றாம். குளக்கோட்டன் கட்டின செய்தி இவ்வூர்க்கோட்டையில் ஒரு கல்வெட்டில் இருக்கிறது.

பின்னர் கயவாகு (113—125) இக்கோயிலின் திருப்பணி செய்து அதற்குத் தானங்கள் தந்தான். பின்னர் ஆறாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தப் பெருமான் இங்கு எழுந்தருளி இருக்கும் சிவபெருமானை அழகிய தேவாரத்தில்



வைத்துப் பாடி இருக்கிறார். ஆகவே இது ஒரு பாடல்பெற்ற தலம் ஆயிற்று.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் மதுரையில் ஆண்ட வீர பாண்டியன் இங்கே வந்து திருப்பணி செய்து இருக்கிறான். அது புதுகோட்டை குடுமியாமலைக் கல்வெட்டால் தெரிகிறது. பிறகு பதினான்கு பதினைந்து நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்து ஆரிய சக்கரவர்த்திகளான செகராசசேகரன், பரராசசேகரன் என்ற மன்னர்கள் கோயிலைப் புதிப்பித்துத் தானங்கள்செய்து வன்னியர்களைப் பிரதானிகள் ஆக்கினார்கள்.

## 7. பறங்கியர்கள் இழைத்த கெடுதி

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர்த்துகீசியர் என்ற பறங்கியர் இலங்கைக்கு வாணிபம் செய்வதாகச் சாக்குச் சொல்லி நாட்டை அபகரித்தார்கள். திருக்கோணமலையும் அவர்கள் கைக்குள் சென்றது. அவர்களில் கான்ஸ்டன்டைன்-டி-சா-என்றவன் (1624 - 1627) கோணேசர் கோயிலை இடித்து அங்கே ஒரு கோட்டையைக் கட்டினான். அதனை கூறும் கல்வெட்டு ஒன்று கோட்டை வாயிலில் இருக்கிறது.

“ முன்னே குளக்கோடன் மூட்டும் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்க—மன்னவன்பின்
பொண்ணாத தனைஇயற்ற அழித்தே வைத்து
எண்ணாரே பின்னரசர் கள் ” என்பதே.

இக்கோட்டை டச்சுக்காரர்கள் கைக்குச் சேர்ந்து பிறகு 1798-ல் ஆங்கிலர் வசத்திற்கு வந்தது. கோட்டையின் பெயர் பிரடெரிக்கு என்பது. (Frederick)

## 8. பிந்திய சரிதை :

பறங்கியர் அழிக்க வந்ததைக் கண்ட கோயில் குருக்கள் கோயிலில் இருந்த மூர்த்திகளை எடுத்துக்கொண்டு போய்

மூன்று காதம் தூரத்தில் இருக்கும் கழனி மலையில் சேமித்து வைத்திருந்தார்கள். பிறகு வரராஜசிங்கன் என்ற மன்னவன் அம்மூர்த்திகளைத் தம்பை நகருக்குக் கொண்டுபோய் அங்கே ஆலயம் கட்டிப் பிரதிட்டை செய்தான். இன்றைக்கும் அங்கே பூசை முதலிய ஆராதனைகள் நடக்கின்றன.

### 9. தற்கால நிலை :

கோயில் அழிந்துபோன போதிலும் கோயில் இருந்த திருமலை இன்றைக்கும் வணங்கப்பட்டு வருகிறது. அதற்கு இப்போது சுவாமிப்பாறை என்று பெயர். அது பிரெடெரிக்குக் கோட்டைக்குள் இருக்கிறது.

வாரத்திற்கு இருமுறை திங்கள் வெள்ளிக்கிழமைகளில் குருக்கள் அப்பாறைக்குச் சென்று பூசை செய்துவிட்டு, திரும்புகிறார். அப்போது அடியார்கள் அங்கே சென்று தொழலாம். முந்தி இருந்த மூர்த்திகள் தம்பை நகரில் இருக்கின்றன. அங்கே ஆராதனை முதலியன நடக்கின்றன.

### 10. இலக்கியம் :

திருக்கோணமலையைப்பற்றிப் பல நூல்கள் இருக்கின்றன. சம்பந்தர் தேவாரம், கோணேசர் கல்வெட்டு நூல், தக்ஷிண கைலாச மான்மியம், தக்ஷிண கைலாச புராணம், திருக்கோணாசல புராணம், விசுகர்ம நாடகம், விசுவ புராணம், கதிரைமலைப் பள்ளு ஆராய்ச்சி, யாழ்ப்பாண சரித ஆராய்ச்சி முதலிய நூல்கள் இத்தலத்தைப் பற்றிக் கூறுவன.

---

## 3. சாத்திரப் பகுதி

# 1. காதும் நூலும்

(க. பஞ்சநதம் பிள்ளை)

இறைபணி செய்வதற்கே இறைவன் உடலை அளித்துள்ளான். 'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பில் உத்தமனைக் காண்' என்று ஔவையாரும் கூறியுள்ளார். உடலை நடத்தும் கருவிகள் மெய் வாய் கண் மூக்கு செவி என்பன. இவை ஐம்பொறிகள் எனப்படும். இவைகளைத் தீநெறியிற் செல்லவிடாமல் நன்னெறியிற் செலுத்த முயல வேண்டும்.

எல்லாவற்றையும் கடந்த மெய்ப்பொருளாம் இறைவனை உணர்தற்குக் கல்வியும் கேள்வியும் இன்றியமையாதவை. 'கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்த' என்று ஞானசம்பந்தர் கூறுகின்றார்.

'செல்வத்துட்செல்வம்செவிச்செல்வம்' என்றும், 'கற்றிலனாயினும் கேட்க' என்றும், 'கற்றலிற் கேட்டலே நன்று' என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். கேள்வியாவது கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல். வெறும் ஓசைகளை மட்டும் கேட்பது கேள்வியாகாது. உயிர்க்கு உறுதியளிப்பனவாகிய நூற்பொருள்களைக்கேட்டலே கேள்வியாகும். முற்காலத்தில் கேள்வி மூலமாகவே யாவற்றையும் கேட்டு வந்தனர். கேட்கப்படுவதாலேயே வேதம், சுருதி எனப்பட்டது. குழந்தைப் பருவத்திலேயே கேள்வி பெற வேண்டும் என்பதற்கு அறிகுறியாகவே காதுகுத்துச் சடங்கு நிகழ்கிறதுபோலும். ஞானத்திற்கு அடிப்படையாயுள்ளதும் கேள்வியே. மேலும் அனுபவ ஞானமாகிய பரஞானத்திற்கு, கல்வி கேள்வியாகிய அபரஞானமும் முதலாய் அமைக்

துள்ளது. ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் அன்பு காட்டுவது தலையன்பாகச் சிறந்த அன்பாகக் கருதப்படுகிறது. 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்கிறார் அப்பர் சுவாமிகள். ஆகவே, செவியின் பயன், நூற்பொருள்களைக் கேட்டலாம். பெருமானுடைய செவியைப் போற்றும் வகையில் திருஞானசம்பந்தர் 'தோடுடைய செவியன்' என்கிறார். அப்பர் சுவாமிகள் 'செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்மிறை செம்பவள எரிபோல் மேனிப்பிரான் திறம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ' என்கிறார். காதுக்கும் நூலுக்கும் தொடர்பு உண்டு.

பொதுவாகப் பஞ்சின் நூலானது பொருள்களின் புறக் கோணலைப் போக்கும். சாஸ்திர நூல்கள் மாந்தரின் மனக் கோணலைப் போக்கும். நாவரசர் ஓர் இடத்தில், 'நூலால் நன்றாய் நினைமின்கள்' என்கின்றார். வேத சாஸ்திரப் பயிற்சிக்கு அங்கமாகவே பூணூலும் அணியப்படுகிறது.

இக்காலத்தில் கேள்விச் செல்வம் அவ்வளவு போதியனவாக இல்லை. பல வசதிகள் ஏற்பட்டிருப்பினும் சமூகத்தின் பெரும் பகுதியார் அவைகளைப் பயன்படுத்திக்கொண்டதாக இல்லை. அப்பர் சுவாமிகள், மனித சமூகத்தை நோக்கி, 'துளையிலாச் செவித் தொண்டர்காள்' என அழைக்கின்றார். இங்கு துளையிலாச் செவி என்பது நல்ல நூற் கேள்வியில்லாத காதுகள். காதுகள் கேள்வியால் துளைக்கப்படல்வேண்டும். 'காதில் உள்ள பழய துளை துளையல்ல' என்கிறார் பரிமேலழகர். துளையிலாச் செவியை திருவள்ளுவர் 'கேள்வியால் தோட்கப் படாத (துளைக்கப்படாத) செவி' எனக் கூறுகின்றார்.

பட்டினத்தாருடைய ஞானப்புதல்வர் மருதவாணர் ஓர் பெட்டியில் காதற்ற ஊசியையும், நூலையும் வைத்துத் தம்தந்தையாரிடம் கொடுக்கச் சொல்லி வெளியேறினார். பட்டினத்தடிகள் பெட்டியைத் திறந்து பார்த்தார். மனப்பக்குவம் பெற்ற



வராதலால் மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்றார். உள்ளிருந்த பொருள்களைக்கொண்டு அறியவேண்டியவற்றைக் குறிப்பால் அறிந்தார். அறிவுத்திறத்தில் குறிப்பறிதல் என்பது ஒன்று. கூறாமலே விஷயங்களை அறிந்துகொள்ளுதல். காதுள்ள ஊசியில் நூல் நுழையும்; காதற்ற ஊசியில் நுழையாது. அது போல் மக்கள் தம் காதுகளால் நூற்பொருள்களைக் கேட்க வேண்டும். அனுபவஞானம் (பரஞானம்) கிட்டும் வரையில் நூற்கேள்வி (அபரஞானம்) அவசியம். இவைகளைக் குறிப்பால் உணர்ந்து துறவை மேற்கொண்டார். இதைப் பற்றிப் பட்டினத்தாருடைய புராணம் கூறுவதாவது :

"காதி னூல்போதல் நம்காதில் கல்விநூல்
போதலைக் குறிப்பினாற் புகன்ற பொற்புமாம்"

ஆகவே சித்தாந்த நூல்களாகிய பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சாஸ்திரங்களையும் கற்றும், கற்றறிந்தார் வாயிலாய்க்கேட்டும் பிறந்த பிறப்பைப் பயன்படுத்துக.

குறிப்பு :—ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளுடைய பேச்சைத் தழுவி இது எழுதப்பெற்றது.

---

## 2. ஒன்றும் மூன்றும்

(சித். ந. இளம்பூரணர்)

விவேகானந்தர் கனகசபைப் பிள்ளைக்குக் கடிதம் எழுதியிருந்தார். "உள்ளது ஒன்றுதானே! அதைவிட்டு அதிகப்படியாக எண்ணவல்லவர்கள் நூறு ஆயிரம் என்று கொள்ளலாகாதா? மூன்றோடு நிறுத்துவானேன்?" என்பது அவர் கடிதத்திலுள்ள கேள்வி.

கனகசபைப் பிள்ளை பதில் எழுதினார்: "அறிவித்தால் அறியும் உயிர் ஒன்று; அறிவித்தல் இன்றியே முற்றுணர்வு உடைய இறை ஒன்று; உணர்த்தினாலும் உணர்ந்துகொள்ள முடியாத சடப்பொருள் ஒன்று; ஆகமூன்று. இவை தவிர தாங்கள் வேறு பல கூறினால் அவைகளும் கொள்ளத்தக்கதே" என்பது அவர் எழுதிய பதில்.

"யான் இவ்வகையில் எண்ணவில்லை. பொருத்தமாக இருக்கிறது" என ஒத்துக்கொண்டு விவேகானந்தர் மறுபடியும் எழுதினார். *

இவ்வகையில் எண்ணி அதன் பயனை உலகிற்கு உதவ விவேகானந்தருக்குக் காலமில்லாது போயிற்று. அது நமது போதாக்காலம்.

தற்போதுள்ள சுத்தானந்த பாரதியார் 'திருமந்திர விளக்கத்தில்' பின்வருமாறு கூறுகிறார்.

"சித்தாந்தம் எல்லையற்ற விரிவுடையது. அது ஆகமத்தை அடிப்படையாகக் கொண்ட திருவருட் கோயில் போன்றது.

வேதாந்தத்திற்குத் தற்போது ஏராளமான பிரசாரம் உள்ளது. விவேகானந்தரும் இராமதீர்த்தரும் அதைக் கடல் கடந்து கர்ச்சித்தனர்.

சித்தாந்தம் ஆழ்ந்தகன்று உயர்ந்து எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கிச் சமயாதீதப் பொருளை எட்டி நிற்கிறது. அதன் அறிவை மீண்டும் உலகில் தூண்டவேண்டும்.

ஜீவன் அல்லது ஆன்மா களிம்பேறிய செம்பு போன்றது. அதை மாசறுத்து, அன்புலையில் வைத்துருக்கி அருளால் பரிசித்து வேதி செய்து அறிவுத் தங்கம் ஆக்கி இறைவனுக்கு அணிவதே சித்தாந்தத்தின் தனிப்பெருமையாகும்.

* இவ்வரலாறு உயர்திரு ஈசான சிவாச்சாரியார் கோவையில் சென்ற ஆண்டு பேட்டை ஈசுவரன் கோயிலில் நிகழ்த்திய சொற்பொழிவில் கூறியது.



வேதம் 'நீ ஆன்மா; அதுவே பிரமம்' என்று சொல்லி அடங்கி விடுகிறது.

மத்தலை தயிர்போல மாயாசக்திகள் நம்மை வாட்டி யலைக்கும்போது 'அஹம்பிரமம்' நினைப்புக்கு வருவதில்லை. தனுகரண புவன போகாதிகள் நம்மை எளிதில் விடுவதில்லை. காமவெளி மயக்கங்கள் நம்மை வலிந்திழுத்துத் துயர்க் கடலில் தள்ளித் தத்தளிக்கச் செய்கின்றன.

அச்சமயம் வேதாந்தம் பேசினால் நமக்குச் சினம் பொங்குகிறது.

அதே சமயம் ஆகமம் என்ன செய்கிறது? நோய்க் குழந்தைக்கு மருத்துவம் புரியும் தாய்போலப் பொறுமையாக ஆன்மாவைத் தன் கையில் ஏற்கிறது.

தனுகரண புவனபோகாதிகளை ஊட்டுகிறது. அனுபவம் காட்டுகிறது.

மாயா சக்திகளின் மாற்றத்தை உணர்த்துகிறது. சரியை கிரியைகளால் சித்த சுத்தியளிக்கிறது. யோகத்தால் புறஞ் செல்லும் மனத்தை உள்ளே திருப்புகிறது.

மனவொருமைப் பாடுடன் ஆன்மா அன்பு முதிர முதிர அருளைப் பொழிகிறது. அருள்பழுக்கப் பழுக்கப் அறிவொளி துலங்குகிறது. அறிவு மலர்ந்ததும் ஆன்மா விழிப்புறுகிறது. அந்நிலையில் சிற்றின்பம் வெற்றின்பம் சித்தின்பம் பேரின்பம் என்று ஆன்மா உணரும்.

'நீ ராஜா' என்று சொல்லி வாய் மூடுகிறது வேதம். ஆகமம் பகைவரை வென்று அரசனுக்குரிய அறிவறம் ஆற்றல் களைப்பு கட்டி ஆன்மாவை அருளாட்சிக்குப் பயிற்றுவிக்கிறது."

முப்பொருளுணர்த்தும் சித்தாந்த அறிவை உலகில் உள்ள எல்லா அறிஞர்களுக்கும் எட்டும்படி செய்யவேண்டும். அப்பணியைச் செய்ய வல்லது 'சித்தாந்தம்' ஆகும். அதை நினைத்தால் நமக்கு ஒன்றல்ல மூன்று பங்காக மகிழ்ச்சி பொங்குகிறது.

I. சமயப் பகுதி

# 1. சாதனங்கள்

கா. இராமநாதன் செட்டியார்.

இலட்சிய வாழ்க்கை நடத்த வேண்டுமானல் சாதனங் கள் அவசியம். அவை பல. முக்கியமான சிலவற்றைக் கவனிக்க வேண்டும்.

## தியானம்

இறைவனிடமிருந்து ஆற்றல், அறிவு, அன்பு யாவும் பெற அவனை நினைக்கவேண்டும். யாரை நினைக்கிறோமோ அவர் போலாதல் உலக இயற்கை. தியானத்தால் நம் அழியா மையை உணர்கிறோம். அமைதி பெறுகிறோம். இறைவ னுக்கு நமது நன்றியைச் செலுத்துகிறோம்.

## ஆண்டவனை நினைப்பதே தியானம்

நினைப்புக் கூட பலவழிகள் உண்டு. தியானத்திற்கு முன் னர் குளித்தல் நலம். நல்ல இடம் அவசியம். உட்காரத் தடுக்கோ, கம்பளியோ, பலகையோ வைத்துக் கொள்ளலாம். பத்மாசனத்தில் அமரலாம். ஒரே உருவத்தில் சிந்தையைச் செலுத்து. தியானத்திற்குக் காலை மாலை நல்லது. எவ்வளவு நேரம் உட்காரவேண்டு மென்பது பழக்கத்தைப் பற்றியது.

## நாமம்

இறைவன் நாமம் நம் நாவிலிருக்க வேண்டும். இறைந்து சொல்லலாம். மெல்லச் சொல்லலாம். மனதில் சொல்லலாம் இதைப் பல வகையாகப் பிரிக்கலாம். வாய்விட்டுச் சொல்வது நம்மை ஏமாற்றுது. மனதிற்குள்ளே அதிக பயன் தரும். நாமம் எக்காலத்திலும், எந்த இடத்திலும், யாரும் சொல்ல



லாம். உபதேசம் வேண்டாம். இன்றே ஆரம்பிக்கலாம். பீஜ எழுத்து பிரணவ எழுத்துக்கள் உள்ள மந்தரம் குருமூலம் கொள்ளவேண்டும். இது ஜபம். இதற்குப் பலன் அதிகம்.

நாமம் இறைவனை நினைப்பூட்டும்; அவனை மறவா மைக்கு உதவி.

## தொண்டு

தொண்டு மிக அவசியம். தொண்டு செய்யாத அடியா ரில்லை.

அது இறைவனது வழிபாடாகச் செய்யப்படவேண்டும். காவணம் கொடுப்பதும் இறைபணிதான்; பசுவிற்குப் புல் கொடுப்பதும் இறை பணிதான்; இறைவனுக்கு அர்ப்பண மாகச் செய்யப்படவேண்டும். சிவஞான பாஷ்யத்தைக் கூர்ந்து கவனிக்க.

இறைவனுக்குச் செய்வதைக் காட்டிலும் அவன் மக்க ளுக்குச் செய்வது உயர்ந்த தென்பர் திருமூலர்.

எப்பணியைக் கொள்ளலாமென்பது பரம்பரை, சூழ்நிலை, தன்வளர்ச்சி, நாட்டின் நிலை முதலியவற்றைக் கொண்டு தீர் மானிக்கப்படவேண்டும். பெரிய புராணத்தைக் காண்க.

---

# 2. மேல் நாட்டுத் தத்துவ ஞானிகள்

கா. இராமநாதன் செட்டியார்

வகுப்பில் மேல் நாட்டுத் தத்துவ ஞானிகளின் வாழ்க் கையும் அவர்கள் சொல்லிப்போந்த தத்துவங்களும் கவனிக் கப்பட்டன. இங்கு மிகச் சுருக்கமாக அவர்கள் போதனை உ மட்டும் ஆராய்வோம்.

### சோக்ரத்தர்

'சிந்தித்துப் பார்' என்று சொல்லியதற்காக உயிரைக் கொடுத்தவர். உயர்ந்தோர் மொழிகளையும் ஆராயலாமென துணிந்து கூறினர். இறைவனுக்கும் நமக்கும் இடையே தரகர் வேண்டுவதில்லை யென்றார். முடிவு கட்டுவதிலும் ஆராய்ச்சியே பெரிதென்றார். அறியாமையை அறிவதே அறிவெனக் கண்டவர்.

### பிளாட்டோ

'எண்ணம்' (Idea) என்பது பற்றித் தெரிந்து கொண் டால் பிளாட்டோவின் தத்துவ ஞானம் விளங்கி விட்டது. நன்மை என்பது எண்ணம். அழகு என்பது எண்ணம். பலவித செயலில் இதனைக் காணலாம். எண்ணம் அழியாதது. அசல், பருப் பொருள் அதன் நகல். இவரே 'ரிப்பப்ளிக்' என்ற நூலை எழுதியவர். சீர்திருந்திய உலகத்தைச் சித்தரிக் கிறார். கல்வியைப் பற்றியும் ஒழுக்கத்தைப்பற்றியும் உயர்ந்த கருத்துக்களைக் கூறியிருக்கிறார். முப்பொருள் கூறுகின்றார்.

### அரிஸ்டாட்டல்

ஆசிரியர் எழுதிய நூல் பற்பல; பலவகை. அவரெழுதிய ரல்களை ஒரு நூல் நிலயமாகும். அவர் ஆராய்ச்சி பெரும் ரன்மை விஞ்ஞானத் துறையில்.

சூட்சுமமான சடம் உயர் நிலை அடைய உருவங் கொள் நம். வரவர உருவம் நன்கு தோன்றும். வளரும் சக்தி புதற்குள்ளேயே தானிருக்கிறது. கடவுள், ஆன்மா, உலகம் புவரால் ஒப்புக் கொள்ளப்படும் பொருள்கள். உலகத்தை ஆட்டிவைப்பது கடவுளல்ல. கடவுள் படைப்பதில்லை. ஆனால் உயிர்களை இயக்குகிறார் : இயக்குவது காதலைப் போல். ஆசிரியர் சத்காரிய வாதத்தை ஒருவாறு விரிக்கிறார்.



### தே கார்ட்டே

தே கார்ட்டே முதலில் ஆன்மாவின் உண்மையை நிலை நாட்டுகிறார். எப்பொருளும் உண்டென்று காட்ட முடிய வில்லை ; எப்பொருளும் இல்லையென்று காட்ட முடியவில்லை. எதிலும் சந்தேகம் தோன்றுகிறது. ஆனால் சந்தேகம் உண்மை. சந்தேகிப்பவன் உண்மை. "நான் நினைக்கிறேன் : ஆகையால் நான் உண்டு." நான் குறை வுள்ளவன். ஆகை யால் குறைவற்றவன் ஒருவன் உண்டு. உலகம் உண்டு. இறை வன் உயர்ந்த பொருள். ஆன்மா அடுத்தபடி. உலகம் அவை களை நோக்கின் பொருளே யில்லை யெனலாம். அவர் கருத் துடன் சிவஞானபோதம் மூன்றும் சூத்திரத்தையும் ஆறும் சூத்திரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தல் அசிவயம்.

### சிபினோசா

உலகப் பொருள் ஒன்றென்பர் ஆசிரியர். அதில் பிரிவு இரண்டு. ஒன்று மூலப் பொருள். அழியாதது. மாறாதது. மற்றொன்று மாதிரி. அதில் கல்லும் மண்ணும், கடலும் வானமும், உடலும், உலகமும் அடங்கும். அது அழிவன ; மாறுவன. மாதிரி மூலத்திலிருந்து பிறக்கும். பின்னர் அங்கு ஒடுங்கும். மூலப் பொருள் மாதிரியில் மறைந்து கிடக்கிறது. ஆகையால் அது கண்ணுக்குப் புலனாவதில்லை. சிபினோசாவின் கருத்து சங்கரர் கொள்கையை ஒட்டியது.

### கான்ட்

கான்ட் அறிவுக் கருவியை ஆராய்கிறார். அக் கருவி காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்பட் டிருப்பதால், உள் ளதை உள்ளபடி பார்க்க முடியாது. ஆகையால் நாம் காணும் உலகம் நம் படைப்பு. புறம்பே உலகம் இருக்கலாம்.

கடவுள் உண்டென்றோ இல்லையென்றோ அறிவால் நிலைநாட்ட முடியாது. அறிவு குறைபாடுடையது.

நம் ஒழுக்க எண்ணத்தால் கடவுள் உண்டென்று நிலைநாட்டலாம். அறிவிலும் சிறந்தது இச்சை.

கான்ட் காட்டிய தத்துவத்தைப் பின்பற்றியவர் பல ஆசிரியர்கள்.

## சோபன்ஹார்

உலகம் இச்சை மயம் என்பது ஆசிரியர் கருத்து. ஆனால் இச்சை என்றும் துன்பத்தையே தரும். இச்சை நிறைவேறினால் இன்பம் இல்லை. நிறைவேறாவிட்டால் துன்பம். துன்பந் துடைக்க இச்சையைத் துடைக்க. இத்துடன் ஏசுநாதர், புத்தர், சைவக் கொள்கைகளை ஒப்பிட்டுக் காண்க.

## நிட்சே

நிட்சே சோபன்ஹார் சொல்லியதுபோல் இவ்வுலகம் இச்சை மயம் என்கிறார். ஆனால் துன்பத்தை வெல்ல அவர் சொல்லும் வழி வேறு. இச்சையைப் பெருக்கச் சொல்லுகிறார்; புனிதமாக்கச் சொல்லுகிறார். வீரம், ஆணை, திறமை என்று கத்துகிறார். உயர்ந்த மனிதன் Superman பிறக்க வேண்டும் என்பது அவரது பேரவா.

———

5. கலைப் பகுதி

# நால்வர் பெருமக்களுடைய அருமைத் திருவுருவங்கள்

ஈழ நாட்டில் புத்த சமயத்தரசர்கள் 843 கி. பி. முதல் 1288 கி. பி. வரையில் பொலன்னறுவை என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்கள். அதற்கு முந்தி தலைநகரமாக இருந்த அநுராதபுரத்தைத் தமிழ்நாட்டு அரசர்கள் அடிக்கடி முற்றுகை இட்டதால் பௌத்த மன்னர்கள் அதை விட்டு விட்டு வெகு தொலைவிலே காடடர்ந்த நாட்டில் இருந்த பொலன்னறுவைக்குச் சென்று விட்டார்கள். இந் நகரத்தைப் பல விதங்களிலும் பெருக்கிக் கோட்டை கொத்தளங்களைக் கட்டிப் பலப்படுத்தினார்கள். அவ்வாறு கட்டியும் பலன் என்ன. சோழ நாட்டில் மிகப் பிரசித்தி பெற்ற அரசன் இராச இராசன் I இலங்கையின்மீது படையெடுத்து பௌத்த அரசர்களைப் பொலன்னறுவையிலிருந்தும் துறத்தி விட்டான். அவனும் அவனுக்குப்பின் வந்த சோழ அரசர்களும் ஈழத்தில் சைவத்தை நிலைநாட்டத் தொடங்கினார்கள். அப்போது அங்கே ஒரு சிவாலயம் கட்டி அதில் மூர்த்திகளைத் தாபித்து அளவு கடந்த தான தருமங்களை ஏற்படுத்தினார்கள். பொலன்னறுவையில் கட்டின சிவாலயம் இப்போது இடிந்து பாழடைந்து கிடக்கிறது. அதில் பதினொரு கல்வெட்டுகள் இருக்கின்றன. அவைகளினால் இந்தக் கோயிலினுடைய சரித்திரமும் அரச மாறுதல்களுடைய வரலாறும் ஒருவாறு தெரிகிறது.

இச் சிவாலயத்துக் கல் வெட்டுகளில் 'திருமன்னி வளர இருநில மடந்தையும்' என்ற தொடக்கத்து இராசேந்திரன் I (1013-1045) கல் வெட்டும் " திங்களேர் மலர்ந்து வெண்

குடை மண்டலம் " என்ற தொடக்கத்து பரகேசரிவர்மன் அதிராசேந்திரதேவன் 3-ம் ஆண்டுக் (1072 கி. பி.) கல்வெட்டும் முக்கியமானவை. இக் கல்வெட்டுகளினால் இவ்வூர்ச் சிவாலயம் சோழர்கள் இலங்கையை வென்ற பிறகு கட்டப்பட்டதென்றும் அதற்கு இராசேந்திரனும் அவன் பேரன் அதிராசேந்திரனும் தானங்கள் செய்தனர் என்றும் அறியலாம். இந்த இராசேந்திரச் சோழன் என்ற கங்கை கொண்ட சோழன்,

" பொருகடல் ஈழத்து அரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
தெண்டிரை ஈழமண்டல முழுவதும்
..............................
..............................
மாப்பெருந் தண்டால் கொண்ட
கொப்பர கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராசேந்திர சோழதேவர் "

என்று தன் மெய்க் கீர்த்தியில் கூறியிருக்கிறான். இதனால் இவன் ஈழத்தை வென்று முன் காலத்தில் பாண்டியன் அங்கு விட்டு வந்த முடியையும் மீட்டு வந்தான் என அறிகிறோம். அவன் பேரன் அதிராசேந்திரன் தன் மெய்க்கீர்த்தியில் ஈழம் என்ற பெயரைக் குறிக்கவில்லை. இருந்தாலும் இந்தப் பொலன்னறுவைச் சிவாலயத்திற்குத் தானங்கள் செய்திருப்பதாக அவன் கல்வெட்டு கூறுகிறது. ஆகவே அவன் காலத்திலும் இவ்வூர் சோழர்கள் ஆதிக்கத்திலேயே இருந்தது எனலாம். பிறகு சோழ மண்டலத்தில் அரசாங்க மாறுதல் ஏற்பட்டது. வேங்கி நாட்டு இராசேந்திரன் என்ற குலோத்துங்கன் I (1073 - 1118) பட்டத்திற்கு வந்தான். அங்க



மாறுதலை அனுகூலமாகக் கொண்டு ஈழமண்டலம் தனி அரசு பெற்றது. ஏனெனில், விஜயவாகு என்ற ஈழத்தரசன் (1065-1120) காலத்துக் கல்வெட்டு ஒன்று இந்நகரில் இருப்பதும் சோழர்கள் கல்வெட்டு அப்போது இல்லாதிருப்பதும் சான்று ஆகும். ஆகவே கி. பி. 1075ல் சோழர் ஆதிக்கம் இங்கே மறைந்துவிட்டது எனலாம். அதனால் 975 - 1075 வரை அதாவது ஒரு நூற்றாண்டு இலங்கை சோழர்கள் மாகாணமாக இருந்தது என்று கூறலாம்.

இனி, இந்த ஆலயத்தின் பெயர் " வானவன் மாதேவீச்சரம் " என்றும், அதில் உள்ள கற்றூண்களை இன்னின்னார் உபயம் செய்தார்கள் என்றும் இக் கல்வெட்டுகளால் அறிகிறோம். அவைகளை விவரமாக இங்கு கூற வேண்டியதில்லை. இங்கே மற்றொரு சிவாலயமும் உண்டு. இவைகளைப் பின்னாளில் வெகு கீர்த்தியோடு ஆண்ட பராக்கிரமவாகு I (1153-1186) அழித்தான் என்று ஊகிக்கப்படுகிறது. அப்பாராக்கிரமபாகு சிற்பகலாவிநோதனாகையால் இவ்வாறு அழித்திருப்பானோ என்பது கேள்வி.

இந்த அழிவுச்செய்தி எதுவாக இருந்தபோதிலும் இக் கோயில்களை 1075-க்குப் பிந்தி யாரோ ஒரு புரட்சியால் அழிந்திருக்கவேண்டும் என்பது உறுதி. இவை அழிவுற்ற நாளில் இவைகளில் இருந்த அழகிய மூர்த்திகளை எவரும் தொடாதபடி கோயில் அதிகாரிகள் நிலத்தில் புதைத்து விட்டார்கள். அப்புதையல்கள் சமீப காலத்தில் ஆங்கில ஆட்சிப் புராதனக் கலைப்பகுதியினரால் எடுக்கப் பட்டன. அப்புதையல்களில் கண்ட அருமையான செப்புத் திருமேனிகள்கொழும்புக் காட்சிச் சாலையில் சேமித்து வைத்திருக்கிறார்கள். இவைகளில் சிறந்தவை 1. திருஞானசம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர் 5. சண்டேசர் என்பவை.

இச் செப்புத் திருமேனிகள் 975 முதல் 1075 வரை உள்ள நூற்றாண்டில் சோழர்கள் செய்தவை. அக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து பெயர் பெற்ற சிற்பிகளை இலங்கைக்கு அனுப்பிச் செய்திருக்கவேண்டும். அவைகளைப்போல் அழகிலும் வடிவத்திலும் சிற்ப நுணுக்கத்திலும் சிறந்த படிமங்கள் எங்கும் கிடைத்ததில்லை. தென்னிந்தியக் கோயில்களில் உள்ள மூர்த்திகளின் கால அளவை நிச்சயமாகக் கூறுவது கடினம். ஆனால் பொலன்னறுவையில் உள்ள படிமங்களின் காலம் நிச்சயித்தல் எளிது. ஆலயங்கள் கட்டினகாலம் தெரிந்துவிட்டபடியால் படிமங்கள் செய்தகாலம் தெரிந்துவிட்டது. ஆகவே இந்த அழகான திருவுருவங்கள் சரித்திரத்திலும் சிற்பச் சிறப்புகளிலும் மிகப் புகழ் பெற்றவை என்று அறியவேண்டும்.

இவ்வுருவங்களைப் பற்றிச் சிற்ப கலாவிநோதர் டாக்டர் ஆனந்தகுமாரசாமி அவர்கள் அடியிற் கண்டபடி எழுதியிருக்கிறார்: "பொலன்னறுவை சிவாலயத்தின் அருகில் கண்டெடுக்கப்பட்ட செப்புத்திருவடிவங்கள் பலவும் கொழும்பில் உள்ள பொருட் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் மிக அழகு வாய்ந்தனவாயும் தனித் திராவிடச் சிற்ப முறையில் அமைக்கப்பட்டனவாயும் காணப்படுகின்றன. இவ்வுருவங்களின் காலம் 13-ம் நூற்றாண்டுக்கு முந்தி என்று சிற்ப ஆராய்ச்சி உடையார் கருத்து. இங்கு காணப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடையதும் மாணிக்கவாசக சுவாமிகளுடையதும் ஆகிய உருவங்களைவிட அழகிலும் சிற்ப வனப்பிலும் சிறந்த அடியார் உருவங்கள் தமிழ் நாட்டில் இல்லை." நான் பார்த்தபோது சுந்தரர் மணிவாசகர் இருவருடைய வடிவங்கள் மாத்திரம் அன்று, ஞானசம்பந்தர் அப்பர் சண்டிகேசர் முதலிய திருவுருவங்களும் வெகு அழகானவை என்று எண்ணினேன். சம்பந்தரின் இளமை உருவம் அழகு



சொட்டச் சொட்ட வாய்ப்பு அமைந்திருக்கிறது. மேலும் சம்பந்தர் தாளத்தை ஏந்திக் கொண்டு நடனம் ஆடும் உருவம் மிக அழகாக இருக்கிறது. அதைப் போல அழகுடையது இந்தியாவில் கண்டதில்லை.

---

## 2. அசுவினி தேவர்

(சித்த இளம்பூரணர்)

அசுவினி தேவர் என்போர் தேவ மருத்துவர். இரட்டையர். வேதம் என்ற அறிவு நூலில் கடவுளாகத் தீட்டப் பெற்றவர். சொர்க்க வீட்டில் வைத்தியம் செய்வோர். குதிரை பூட்டிய வண்டியில் செல்லுங் காரணத்தால் அசுவினி தேவர் எனப்பட்டனர். அவ்வண்டிக்கு மூன்று சக்கரங்கள்; தகப்பனார் பெயர் விவாசன்; தாய் சரண்யு.

வேதமாகிய ஞான நூலை ஆய்வோர் அதில் கூறப்பட்ட கடவுளர், பொருட்கள் எல்லாம் ஞான உருவங்கள் என எளிதில் அறிவர்.

அசுவினி தேவர்களைப் பற்றிப் பல அறிஞர்கள் தங்கள் நோக்கங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

அசுவினி தேவர்களது முக்கிய வேலை நோய் நீக்கம். அதில் கைதேர்ந்தவர். இவ்வடிப்படைக் கொள்கையைக் கொண்டு பார்க்கும் போது உண்மை விளங்காமற் போகாது.

இருக்கு வேதம் VII 70, 3-4 ; VIII 9, 5.
X 97, 2, 6, 8, 10, 11.

அதர்வ வேதம் VIII 7.

இவ்விடங்களில் மூலிகைகளின் நோய் போக்குந் தன்மைகளைப் பற்றி விளக்கப்பட்டிருக்கிறது.

அசுவினி தேவர்களில் ஒருவர் மூலிகை. அசுவினி தேவர்கள் சூரியனுடன் நெருங்கிய சம்பந்தம் உடையவர். மூலிகை முதலிய மருந்து வகை அசுவினி தேவர்களில் ஒரு வர் என நிச்சயம் செய்யலாம்.

இவ்விரட்டைத் தேவமருத்துவர்களில் மற்றவர் மனம். நம்பிக்கை, நோய் தீரும் என்ற உறுதி, அம் மனத்தின் பண் பின்றி நோய் தீருதல் அரிது. நோய் நீக்கத்திற்கு மனம் உடலைத் தகுதியாகும்படி தொழிற்படுத்தலும், மருந்து உடலில் தொழிற்படுதலும் முக்கியம். இவ்விரண்டு பண்புக ளும் ஒன்றை ஒன்று நெருங்கித் தழுவியதாயுள்ளது.

அசுவினி தேவர்களைப் பற்றிய வேறு பாட்டுக்கள்:

இருக்கு V 75, 6; VI 62, 3, 1, 46, 2; VII 69, 2.

அதர்வம் I 119, 9.

ஆழ்ந்த மன உறுதியில்லாத அறிவற்ற மக்கள் அசுவினி தேவர்களை வணங்க அறியார் (இருக்கு I 120, 1, 2) என் பது அதன் கருத்து.

இருக்கு VIII 86, 29-ல் மனமில்லாத மக்கள் அசு வினிகளை எப்படிப் போற்றுவார்கள்? என்று கேட்டிருக்கிறது.

மேற்காட்டிய வேதப்பாட்டுக்கள் அசுவினி தேவர் களில் ஒருவர் மருந்துப் பொருள்களையும் (மூலிகை முதலி யன) மற்றவர் மனத் தன்மையையும் (நம்பிக்கை) குறிக்கின் றனர் எனக் காட்டுகின்றது.

பிரிக்க முடியாத அ஡ இரண்டு உண்மைகளைத் தவிற நவக்கிரகங்களின் தன்மை எவ்விதம் சாதகம், பாதகம் செய் கின்றதென்பதையும் தெரிந்து கொள்ளுவதால் அசுவினி தேவர்களைப் பற்றி முழுதும் தெரிந்து கொள்ளலாம்.

“ மகத்திற் புக்கதோர் சனி எனக்காளுய் ” (தேவா 1111-9) என்பது தேவாரம். சனியின் தன்மையைக் காட்டு வது.



நவகிரகங்களின் தன்மையையே அசுவினி தேவர்களது இரதமாக உருவகம் செய்திருக்கிறது. இரதத்தின் மூன்று சக்கரங்கள் சந்திரன், வியாழன் (Jupitor), வெள்ளி (Venus) எனக் கொள்ளலாம். ஏனெனில் அவைகளே ஒளி மிக்கன.

அல்லது திருவள்ளுவனுர் கருத்தின்படி நோய் தீர்க்கும் பரிகாரிக்கு 1. நோயுற்றவன், 2. மருந்து, 3. உழைச் செல்வா னுகிய நடுவிருந்து உதவி செய்வோன் என்ற மூன்றையும் சக்கரங்களாகக் கொள்ளலாம்.

[இக்கட்டுரை ஆசிரியர் V. A. Gadgil, M.A. அவர்கள் நாக புரி சர்வ கலாசாலையில் 13th All India Oriental Conference - ல் சமர்ப்பித்த கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.]

---

6. கவிப் பகுதி

# ‘ எப்போதும் இனியான் ’

‘ எப்போதும் இனியான் ’ என்ற சொற்களுக்கு எந்தக் காலத்திலும் இனியவன் ஆக இருப்பவன் என்பது சுலபத்தில் தோன்றும் பொருள். அப்படி ஒருவன் இருப்பானு என்ற கேள்வி பிறக்கும். ஏதாவது ஒரு காலத்தில் ஆவது அவன் இனியன் ஆக இருக்காமல் இருக்கமுடியாதா ? மறுபடியும் ஆச் சொற்களை ஆராய்வோம். ‘ இனியான் ’ என்ற சொல் இனிக்கமாட்டான் என்ற எதிர் மறைப் பொருளும் அதற்கு உண்டு என அறியலாம். ஆகவே அவன் எக்காலத்திலும் இனிக்க மாட்டான் என்று பொருள் படும். அப்படியும் சிறி தேனும் கருணை இல்லாதவன் ஒருவன் இருக்கமுடியுமா என்று கேட்கலாம். இனி, இச் சொற்களை ‘ எப்போதும் இனி யான் ? ’ என்று வினவாகவும் கேட்கலாம். அக்கேள்வி கேட் டால் அதற்கு ஒருபோது இனிப்பான் என்ற விடையும் தோன்றும். ஆகவே இம்மூன்று விரிவுகளையும் ஆராய்ந்தால், எப்போதும் இனியவனுக இருப்பவன், எப்போதும் இனிய வனுக இருக்காதவன், ஒருபோது மட்டும் இனியவனுக இருப்

பவன் என்ற மூன்று பொருள்களில் இச் சொற்கள்
தோன்றும்.

மேலும், இச் சொல் தொடர் இரண்டு சொற்களைக்
கொண்ட போதிலும், ஒவ்வொரு சொல்லும் சில கூறுகளைக்
கொண்டிருப்பதை அறியலாம். விபரமாகக் கூறில், 'எப்போ
தும்' என்பது எ+போது+உம் என்ற பகுதிகளைக் கொண்
டிருக்கிறது. இவைகளில் 'எ' என்பது வினாவைக் காட்டும்
சொல்; 'போது' என்பது பொழுது அல்லது காலம் என்ற
பொருள் உள்ள பெயர்ச்சொல்; 'உம்' என்பது பல பொருள்
களைக் காட்டும் அசைச் சொல்; 'இனியான்' என்ற சொல்லோ
இனிமை+ய்+ஆன் என்று பிரிக்கப்படும். இனிமையில் 'மை'
கெட்டு 'ய்' என்ற உடம்படு மெய் சேர்ந்து 'ஆன்' விகுதி
யோடுசேர்ந்து ஒரு சொல் ஆகிறது. இது உடன்பாடாயும் எதிர்
மறையாயும் பொருள் தருகிறது. இந்தப் பிரிவுகள் பலவற்றை
யும் கொண்டு இந்தச் சொற்களுக்கு விரிவுரை நிகழ்த்த முடியும்
ஆனால் அத்தனை விரிந்த உரை இங்கே வேண்டியதில்லை.

இனி, உடன் பாட்டுப் பொருளில் இப்போது இங்கே
முதலில் உரை செய்யலாம். 'எந்தக்காலத்திலும் இனியவன்'
என்பது அந்தவகையில் இதன் பொருள் ஆகும். காலம் என்ற
பொருள் கொண்ட 'போது' அல்லது பொழுது இரண்டு
வகைப்படும். ஒன்று, சிறுபொழுது; இரண்டு, பெரு பொழுது;
சிறுபொழுதாவது - மாலை, யாமம், வைகறை, விடியல், நண்
பகல், எற்பாடு என்ற ஆறு பகுதிகள் உடையது. இவைகள்
கதிரவன் மேற்கே சாயும் காலம் முதல் நன்னான்கு மணி
நேரம் பொழுது கொண்டவை. விபரமாகச் சொல்லுமிடத்து,
மாலை - 6 - 10 மணி; யாமம் - 10 - 2; வைகறை - 2 - 6;
விடியல் - 6 - 10; நண்பகல் - 10 - 2 -; எற்பாடு - 2 - 6
என்று பெரியோர் கணித்துள்ளார். ஆகவே இந்த பொழுது
களில் எல்லாம் ஒருவன் இனியவனை இருப்பான் என்று அச்
சொற்றொடருக்குப் பொருள்படும். ஒருவன் மிகவும் துயரப்
படும் போது இனிய முகத்துடன் வந்து நன்மை செய்து
அந்தத் துயரத்தைத் தீர்ப்பதே இனிமை தருவதாகும் - அவ்
விதம் இந்த ஆறுபொழுதுகளிலும் துயரப்பட்டவருக்கு ஒரு



வன் இனிது செய்திருக்கிறான் என்பதே. ஒன்று இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கூறுவோம்.

நமி நந்தி அடிகள் மாலையில் இருட்டினபோது கோயி லில் திருவிளக்கிட நெய்கேட்டபோது சமணர் கேலி செய்ய அதை நிரூபிக்க நீரால் விளக்கேற்றித் திருவருளாகிய இனிமை பெற்றபோது அவ்வினிமையைத் தந்தவர் யார்?

இளையான் குடிமாறர் யாமத்தின்போது வீட்டில் உணவு இல்லாத காலத்தில் அடியார் வர மழையிலே முளைநெல் வறுத்து உணவு இடமுயலுகையில் அவரது துயரைத் தீர்க்கக் காட்சி தந்தவர் எவர்? முருக நாயனார் வைகறையிலே எழுந்து திருக்குளத்தில் நன்னீர் ஆடி நந்தவனத்தில் மலர் எடுத்து மாலைபுனைந்து எம்பெருமானுக்கு இட்டு கைங்கரியம் செய்த போது இனிமை தந்தவர் யார்? எறிபத்த நாயனார், விடியலில் மலர் எடுத்துக் கருவூர் ஆனிலையாருக்கு மாலைசாத்தக் கொண்டு போன சிவகாமியாண்டாருடைய மலர்களைச் சிந்தின யானை யைத் தடிந்தும் புகழ் பெற்றபோது இனிமை தந்தது யார்?

சிறுத் தொண்ட நாயனார் நண்பகலில் பிள்ளைக்கறி சமைத்து உணவு அருந்த வயிரவரை அழைத்த போது தோன்றி இனிமையை அளித்தவர் யார்?

புனிதவதியார் பிற்பகலில் கணவன் உணவுக்கு வர அவன் மாம்பழம் கேட்க, தன்னைக் காக்கும்படி வணங்கின போது அதனை அளித்து இனிமை அருளினவர் யார்? ஆகவே, இந்த ஆறுபொழுதுகளிலும் துயர் உற்ற அடியார்களுக்கு இனிமை தந்தவர் யார்? அந்த இனியான் பரம்பொருளே என் றறிய வேண்டாமோ?

இனி, பெரும் பொழுதுகள் ஆறு. அவை முறையே கார் - ஆவணி, புரட்டாதி; கூதிர் - ஐப்பசி, கார்த்திகை; முன்பனி - மார்கழி, தை; பின்பனி-மாசி, பங்குனி; இள வேனில் - சித்திரை, வைகாசி; முதுவேனில் - ஆனி, ஆடி- என்பன. இப்பொழுதுகளாகிய பருவங்களிலும் ஒருவன் துய ருற்றவர்களுக்கு இனிமை புரிந்திருக்கிறான். கார்காலத்தில் இளையான் குடிமாறரும், ஆனாய நாயனாரும் இனிமை பெற்

றார்கள். கூதிர்காலத்திலும் மடுவிலே நின்று திரு எழுத்தும் உருத்திரமும் ஓதி வழிபட்ட காலையில் உருத்திர பசுபதியார் வீடாகிய இனிமை பெற்றிருக்கிறார். இளவேனிலில் இயற்பகை நாயனார் முது வேனிலில் பொய்யாமொழிப்புலவர் முதலியவர்கள் இனிமையாகிய திருவருள் பெற்றார்கள். மற்று எடுத்துக் காட்டுக்களை நூல்களைக் கொண்டறிக.

இனி, பொழுதுகளை அல்லாமல் மக்களுடைய பொருள் நிலைகளை எடுத்துக்கூறியும் விளக்கலாம். ஒருவன் செல்வம் படைத்தபோதும் செல்வம் இல்லாத போதும் அவன் வந்து உதவுகிறான். இளையான்குடி மாறர், கலையர் முதலியோர் மிகவும் வறுமை உற்றபோது அவன் இனிமை தரவில்லையா? இளமையிலும் முதுமையிலும் இனிமை தந்திருக்கிறான். விசாரசருமருக்கு இளைஞனாக இருந்தபோது அருளவில்லையா? திருநீலகண்டருக்கு முதுமையில் இளமை தரவில்லையா? இனி, அரசனுக்கும் ஏழைக்கும், அந்தணருக்கும் நீசனுக்கும், தேவர்க்கும் மக்களுக்கும், ஆணுக்கும் பெண்ணுக்கும், பல குலத்தார்களுக்கும் பல ஆசிரமத்தார்களுக்கும் திருத்தொண்டத் தொகை யடியார்களுக்கு முந்தியும் பிந்தியும், தமிழ் நாட்டிலும் வெளிநாட்டிலும் எந்தச் சமயத்திலும் இனிமை தந்து திருவருள் புரிந்தவன் அவனே ஆகும். இதனைக்கண்டே சேக்கிழார் பெருமான் முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணத்தில் 'எப்போதும் இனியபிரான்' என்று விளக்கமாகக் கூறி இருக்கிறார்.

இனி, எதிர் மறையாகப் பேசும்போதும் எக்காலத்திலும் இனிமை தரமாட்டான் என்று பொருள்படும். சூரபத்மன் போன்ற அவுணர்கள் எப்போதும் கொடியவர்கள். அவர்களுக்கு இனிமை காட்டிப் பயன் என்ன? விசுவரூபம் காட்டியும் அவன் அடங்கவில்லையே? ஆகவே அவனை மேல்கொண்டு தண்டிக்க வேண்டி வந்தது. அது போலவே, சலந்தரன், கயாசுரன், தக்கன் முதலிய அகந்தை உற்றோர்கள் இனிமை பெறவில்லை.

ஆனால், அதனை விளைவாகக் கேட்குமளவில் எப்படிப் பட்ட கொடியவனாக இருந்தபோதிலும் ஒரு காலத்திலாவ



அவன் அருள்புரிவான் என்பதே அதில் தொனிக்கும் பொருள். 'தீராத நோய்தீர்ப்பான்' என்று கூறுவது போல் கொடிய குணத்தை நோயாகப்பாவித்து அதையும் அவன் ஏதோ ஒரு சமயத்தில் தீர்ப்பான் என்று அறிய வேண்டும். சூரபத்மன் எதற்கும் அடங்காமல் போனபோதிலும் இறுதியில் வெற்றிவேலாகிய ஞானவேலினால் தடிந்தபோது இருகூறாகிச் சேவலாகவும் மயிலாகவும் ஆட்கொள்ளப்பட்டான் அல்லவா? ஆகவே இந்த மூன்று வகைப் பொருள்களும் இத்தொடருக்கு உண்டு என்க.

இவ்வாறு பல பொருள்களையும் தோற்றுவிக்கும் சொற்றொடர் யாருடைய வாக்கு என்று கேட்கலாம்? முற்றத் துறந்த முனிவராக இருந்து எப்படிப்பட்ட துன்பச்சோதனைகளிலும் இனிமையே காணும் அருட் செல்வர் அல்லவோ அவ்வாறு கூறக்கூடும். நீற்றறையில் இட்டபோதும் அதனை வீணையின் நல்லிசையும், தென்றலின் குளிர்வீச்சும், மதியத்தின் தண்மையும் இருக்கக்கூடிய இனிமைகாணக் கூடியவரே அக்கருத்து உரைத்தார் என்க. ஆகவே, வானோர்கள் மலர்களைத் தூவித் தங்கள் முடிகளால் வணங்கித் தொழுகின்ற அந்த முதல்வனை யானும் மலர்களைத் தூவி அப்போது என் புலன்களை அடக்கி என் மனத்தே வைக்கையில் எப்போதும் இனிமையாக எனக்கு இருப்பான்' என்று அருளியிருக்கிறார். அது எங்கே என்றால், திருவேகம்பத்திலே என்க. அத்திருப் பாடல் முழுவதும் நாம் அறியவேண்டாமா?

"கைப்போது மலர் தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடி சாய்த்துத் தொழுநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே"

என்பது முழுச்செய்யுள். பொருளில் மட்டுமல்ல. பாடுவதற்கும் எத்தனை இனிமையாக இருக்கிறது பாருங்கள்.

சென்ற ஆறு ஆண்டுகளுக்கு முன் காஞ்சியில் பெருந் திருவிழாவின் போது ஞானியார் அடிகளார் தலைமையில் ஆலயத்துப் பூந் தோட்டத்தில் இவ்வுரை நிகழ்த்தின பெருமை கிடைத்தது. அப்போது உடன் பாட்டு எதிர்மறைகளை மட்டும்

சொல்லி என் உரையை ஒருவாறு முடித்தேன். அடிகளாரோ
விளுவும் அதில் தொனிக்கிறது என்று அருளிச் செய்து
தலைமை உரையைப் பெருக்கி அருளினர். அப்போது நான்
பெற்ற இனிய செவி உணவிற்கு இணை கூறமுடியுமா ?

---

7. ஆராய்ச்சிப் பகுதி

# இரு பல்லவ அடியார்கள்

துடிசைகிழார் அ. சிதம்பரனர்

அறுபான் மும்மை நாயன்மார்களில் பல்லவ வகுப்பைச்
சேர்ந்தவர்கள் இருவர். அவர்களாவார். (1) ஐயடிகள்
காடவர் கோனும், (2) காடவர்கோன் கழற்சிங்கரும் ஆவார்.
பல்லவர்

இவர்கள் இருவரைப் பற்றியும் பேசப் புகுமுன், பல்லவ
வம்சத்தைப்பற்றி நாம் கொஞ்சம் தெரிந்துகொள்ளவேண்டி
இருக்கிறது.

(i) சரித்திர ஆசிரியர் P. T. S. அய்யங்கார், 'பல்லவர்
என்பார் இந்தியாவுக்கு வடமேற்கில் உள்ள சக தீபம் என்ற
இடத்திலிருந்து இந்தியாவுக்கு வந்த சகவமிசத்தைச் சேர்ந்த
வர்கள். அவர்களுக்குச் சகபல்லவர்கள் என்று பெயர். வட
நாட்டில் அவர்களுக்குத் தக்கசிலை - வட மதுரை - உச்சயினி
தலைநகரங்களாய் இருந்தன.

கி. பி. 225-ல் பப்பசாமி என்பவன் வடக்கே இருந்
காஞ்சிக்கு வந்து பல்லவ வமிசத்தைக் கஞ்சியில் நாட்டினன்.
இவன் தெலுங்க நாட்டையும் ஜெயித்து தானிய கடகம்
(அமராவதி) என்னுமிடத்தில் அரசாண்டு பின் காஞ்சிக்கு
வந்ததாகத் தெரிகிறது' என்று கூறுகிறார்.

(ii) R. D. Rannerji என்னும் சரித்திர ஆசிரியர்,
பகலவர் (Pahalvi) என்று முதலாம் உருத்திரதாமன் சாசனங்
களில் கூறப்படுகிறவர்களே பல்லவர் என்றும், அவர்கள்
சாதவாகனர்களுடன் உறவாடி, பெண்கொடுக்கக் கொள்ள
இருந்து தானியகடகம் (அமராவதி) என்னும் இடத்தில்



அரசுபுரிந்தார்கள் என்றும் பின் காஞ்சியை அடைந்து ஆண்டு
வந்தார்கள் என்றும் கூறுகிறார்.

(iii) K. V. சுப்பிரமணிய அய்யர் என்பவர் Ancient
Dekhan கி. பி. 15ல் பல்லவர் செந்தமிழ் நாட்டுப் பழங்குடி
யினர் என்றும் அப்படியே புராணங்களும் கூறுகின்றன என்
றும், புராணங்களில் சகர்—யவனர்—பல்லவர் முதலியோர்
களைத் தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளது என்றும், தமிழ்
இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் பல்லவர்களைச் சகர்
என்று கூறப்படாததோடு அவர்களைக் காடவர்—தொண்டை
யர் காடுவெட்டி என்று கூறப்பட்டுள்ளது என்றும், தொண்
டையர்—பல்லவர் காடவர் என்பன ஒரே பொருளைக் குறிப்
பன என்றும் கூறுகின்றார். பல்லவம்—துளிர் - கொடி - 56
தேயங்களில் ஒன்று; Spirit creaper தொண்டை—கொடி;
காடவர் என்ற பெயர் பல்லவர்களுக்கு அவர்கள் காடுகளைத்
திருத்தி நாடாக்கி 24 கோட்டைகளை அமைத்து ஆண்டுவந்த
தால் ஏற்பட்டது என்றும் கூறுகின்றார்.

(iv) Modern review march 1946. 207-8 சகத்
தீபம் என்பது ஆரல்கடலுக்கும் (Sea of Aral) அரபிக் கட
லுக்கும் இடையில் உள்ள நாடு. அது காரகோரம் (கந்தமாத
னம்)-இந்து (வராகமலை)வரை எட்டியிருந்தது. சகத்தீபம் ஆரி
யரில் ஒரு பிரிவான மாகர் (Magar)களால் குடிகொள்ளப்பட்
டது. மாகர் சூரியமூர்த்தியை வணங்குபவர். சவுரர் அவர் பரம்
பரையினர். மாகர்கள் குறிநூல் சோதிடத்திலும் வானநூலி
லும் வல்லவர். சக ஆண்டு அவர்களால் கி. மு. 319ல்
ஏற்படுத்தப்பட்டது. அவர் சவுரமானத்தையே கொண்டவர்
கள். இப்போது சோவியட் ரஷியாவில் உள்ள சைனீஸ் டர்க்
கிஸ்டான்—(Chinese Turkistan) சக நாடு நரகன்-பலி-
சம்பரன்-கும்பன்-நிகும்பன்-பகதத்தன் முதலிய அரசர்கள்
சகவம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

ஆதலின், பல்லவர் சகர்களுமல்ல பகல்விகளுமல்ல.
அவர்கள் வேற்று நாட்டிலிருந்து வந்தவர்களுமல்ல. அவர்கள்
தமிழ் நாட்டினரே. தமிழ்நாட்டுப் பழைய 18 குடிகளுள்
ஒருவர். அவர்களாவார் :—

(1) சோகுல வேளாளர் (2) சோழிய வேளாளர் (3) பாண்டிய வேளாளர் (4) கொங்கு வேளாளர் (5) துளுவ வேளாளர் (6) ஈழ நாட்டு வேளாளர் or நாகர் or முடிநாகர் (7) தொண்டை நாட்டு வேளாளர் (8) கார்காத்த வேளாளர் or நடுநாட்டு வேளாளர் (9) பல்லவர் or காடவர் or குறும்பர் (10) ஒளிநாட்டு வேளாளர் or ஒளியர் (11) குன்றக் குறவர் (12) முல்லை ஆயர் (13) பாலை வேடர் - வேட்டுவர் (14) நெய்தல் பரதவர் (செம்படவர்) (15) மருதத்து மள்ளர் (பள்ளர்) (16) கள்ளர் (17) மறவர் (18) அகம்படியர்.

இவர்களுக்கு 18 குடிமக்களும் உண்டு. குடிமக்கள் என்றால் தொழிலாளர் என்று பெயர். அவர்களாவார் :

| | | |
|---|---|---|
| 1. நாவிதன். | 2. குயவன். | 3. வண்ணான் |
| 4. ஓச்சன் | 5. தச்சன் | 6. தட்டான் |
| 7. கொல்லன் | 8. கன்னான் | 9. நம்பியன் |
| 10. அறுவைவாணிகள் | 11. இலைவாணிகள் | 12. தயிலவாணிகன் |
| 13. மாலைகட்டி | 14. பாணன் | 15. படையாட்சி |
| 16. வலையன் | 17. இடையன் | 18. வீரருடையான் |

மிராண்ஸிட் என்னும் புத்தகம் :

தொண்டை மண்டல ஙரிசை மூவாறு குடிமக்கள்
சுருதிநாள் முதலாகவே
துங்கமிகு நாவிதன், குயவன், வண்ணான், ஓலை
சொன்னபடி எழுதும் ஓச்சன்,
கண்ட கம்மாளர் வகை ஐவர், வாணியர், மூவர்,
கந்தமலர் மாலை காரர்,
கலைமீது சரமோட்டும் பாணர், தலைகந்நடம்
காவல்புரி பள்ளி, வலையன்,
பண்டுமுதல் ஊரான் மதிக்கு மிடையன், விருது
பலகூறும் வீர முடையான்,
பதினெண் குடிமக்கள் அனைவரும் காராளர்
பணிசெய்து பல முறைமையும்
கொண்டு பரிவட்டமும் கட்டியே வருவர் இக்
குவலய மதிக்கவே தான்
கூறரிய கச்சிவாழ் கெம்பாலயர்
குமுதத்தில் இட்ட லிபியே.



உமாபதி சிவம் இவ்விரு அரச அடியார்களையும் குறுநில மன்னர் என்று கூறுகின்றார்.

"குறுநிலமன்னர் ஐவர் நரசிங்க முனையர், கூற்றுவனார்,
கழற்சிங்கர், மெய்ப்பொருள், ஐயடிகள்"

(சேக்கிழார் புராணம்)

சதுர அகராதியை நோக்கின் பல்லவம் என்பது 56 தேயங்களில் ஒன்று என்றும், குறும்பர் என்றால் குறுநில மன்னர் என்றும், குறும்பு என்பது அரண் இருக்கை என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது.

ஆதலின், பல்லவர் என்பது நாட்டால் ஏற்பட்ட பெயர் என்றும், குறும்பர் என்பது அவர்கள் கட்டி ஆண்டுவந்த 24 கோட்டங்களால் ஏற்பட்ட பெயர் என்றும், காடவர் என்பது காடுகளை வெட்டிச் சீர்திருத்தி நாடுகளை உண்டாக்கி ஆண்டு வந்ததால் ஏற்பட்ட பெயர் என்றும் அறிகிறோம்.

56 தேயங்களைக் குறிக்கும் பழைய பூகோளப் படத்தைப் பார்ப்பீர்களானாலும் பல்லவநாடு திராவிட தேயம் என்று குறிக்கப்பட்டு இருக்கும். அது சோழதேயத்துக்கு வடக்கும், ஆந்திரநாட்டுக்குத் தெற்கும், வங்காளக் குடாக்கடலுக்கு மேற்கும், குளிந்த தேசத்துக்குக் கிழக்கும் உள்ளதை அறிவீர்கள்.

இந்தியா 56 நாடுகளாகப் பிரிக்கப் பட்டு இருந்த புராண காலத்தில், தொண்டை நாட்டுக்குத்தான் பல்லவநாடு என்று பெயர் கொடுக்கப்பட்டு இருந்தது. தொண்டை நாடானது ஒரு காலத்தில் துண்டீரனால் ஆளப்பட்டதால் துண்டீர நாடு என்று பெயர் கொண்டு இருந்தது. பிறகு, நாடுகள் அழிந்து காடுகள் அடர்ந்து விட்டபடியால் மரங்கள் தளிர்த்துத் துளிர்ந்து இலையடர்ந்தும் கொடிகள் படர்ந்தும் உள்ள நாடாயிருந்தபடியால் பல்லவநாடு என்றும் தொண்டைக் கொடிகள்

மிகுதியாய் இருப்பதால் தொண்டை நாடு என்றும் பெயர் ஏற்பட்டது.

இப்படி இருக்கும்போது, அந்நாட்டுப் பழங்குடியரான பல்லவர் என்பார் அத்தொண்டை நாட்டை 24 கோட்டங்களாய்ப் பிரித்து 24 கோட்டைகளைக் கட்டி ஆண்டுவந்தார்கள். 24 கோட்டங்களுள் தலை சிறந்தது புழல் கோட்டம்.

கி. மு. முதல் நூற்றாண்டில் கரிகாலன் I என்பான் இமயம் சென்றபோது இக் குறுநில மன்னருடன் சண்டையிட்டு வென்று சோழநாட்டோடு சேர்த்துக்கொண்டான் என்பது சரிதம். புழலில் உள்ள கோட்டையை இடித்து அங்கிருந்த எருக்கந்தூண் இரண்டினையும் கொண்டு வடதிருமுல்லைவாயில் கோயிலைக் கட்டினான்.

குறும்பர் என்றால் சிலர் நினைப்பதுபோல ஆடு மாடுமேய்க்கும் இடையர் அல்ல அது. தவறான எண்ணம். குறும்பர் என்றால் குறுநில மன்னர் என்பதே பொருள். சேர, சோழ, பாண்டி மூவரே முடிமன்னர். ஏனைய அரசர்களெல்லாம் குறுநில மன்னர்களே. ஆதலின், பல்லவர் தொண்டைநாட்டுப் பழங்குடிகள் ஆவார்கள்.

---

சைவசித்தாந்த சமாஜம் 41-வது ஆண்டு விழா

திருச்செங்கோடு இளைஞர் மகாநாட்டுத்

# தலைமையுரை

[கி. சிவராமன். எம். ஏ.]

(முன் தொடர்ச்சி)

உண்மையில் விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும் முரண்பாடு இருக்கக் காரணமில்லை. இரண்டும் 'அனுபவ' நிலை



களே. முன்னதினும் பின்னது அகன்ற அனுபவம். விஞ்
ஞானம் பொருள்களைப் பகுத்துக் காண்கிறது(Analytical).
சமயம் அவற்றைத் தொகுத்து நோக்குகிறது(Synthetical).
ஒன்று காட்டினை மறந்து மரத்தையே காண்கிறது ; மற்றது
மரங்கள் நிறைந்த காட்டினைக் காண்கிறது. விஞ்ஞான உண்
மைகள் சமயத்திற்கு மறுதலையானவை யல்ல. விஞ்ஞான
உண்மைகளை ஒப்பியும் மேற் செல்வதே சமயம்.

விஞ்ஞானக்கண் கொண்டு மட்டும் நோக்கும்போது
இவ்வண்டம் நம்மைத் திடுக்கிடச் செய்கிறது ; நம் சிறு
மையைக் காட்டி அச்சுறுத்துகிறது. சமயக்கண் கொண்டு
பார்க்கும்போதோ இவ்வண்டத்தின் 'அளப்பருந் தன்மை' ஒரு
'வளப்பெருங் காட்சி'யாக மாறிவிடுகிறது. மணிவாசகப்
பெருந்தகை பாடிய திருவண்டப் பகுதியின் தொடக்க அடிகள்
என் நினைவிற்கு வருகின்றன. தில்லையம்பலவன் பெருமையை
நினைக்கும் பொழுது, "நூற்றொரு கோடியின் மேற்பட
விரிந்த" அண்டப் பகுதிகள் அனைத்தும் வீட்டினுள் சிறு
துவாரத்தின் வழியாய்ப்புகும் ஒளிக் கதிரில் தோன்றும் நெருங்
கிய அணுக்களை ஒப்ப சிறியவாகின்றன. இது சமய நோக்கு.
இதன் பக்கத்தில் விஞ்ஞானக் கண்ணாடி கொண்டு உலகை
நோக்கும் ஒருவருடைய சித்தாந்தத்தைக் கேளுங்கள். "One
tiny corner of this universe of atoms has chan-
ced to become conscious for a time but was in
the end designed, still under the action of blind
mechanical forces, to be frozen out and again
leave a lifeless world" (Sir James Jeans).
இந்தியச் சமயங்கள் எல்லாம் "ஊழ்" என ஒன்றைக் கடைப்
பிடிப்பதால் 'தாளாண்மை,' முயற்சி இவற்றிற்கு இந்திய
வாழ்வில் இடமில்லை என்று மேனாட்டினர் நம்மைக் குறை கூறு
கிறார்கள். இன்று அவர் நாட்டு விஞ்ஞானிகள் மனிதனின்

அற்பத் தன்மையையும் செயலறவையும் பற்றி மேற் சொன்ன
வாறு நம்பிக்கை வறண்ட குரலில் பேசுகின்றனர்.

இயற்கையைப் பல்வேறு விதங்களில் பயன்படுத்திக்
கொள்ள விஞ்ஞானம் உதவுவது உண்மையே. எனினும்
உண்மை எது? அதன் தன்மை என்ன? அதற்கும் நமக்கு
முள்ள தொடர்பு என்ன? என்பனவற்றைத் துணிய விஞ்
ஞானம் ஒருபோதும் துணை செய்யாது. விஞ்ஞானம் எத்
துணை வளர்ச்சி யடைந்தாலும் சமயத்தின் இடத்தை
வகிக்க முடியாது. விஞ்ஞானந்தான் மன்பதையின் எதிர்
காலச் சமயம் என்று கூறுவது பொருத்தமற்றது. புரோட்
டானும் எலெக்ட்ரானும் வாழ்வெனும் புதிருக்கோ, எது
உள்பொருள் என்னும் கேள்விக்கோ விடையாக மாட்டா.

'சமயானுபவம்' என ஒரு நிலையைப் பற்றிப் பேசினேன்.
இந் நூற்றாண்டில் பிற அறிவியற்கலைகளை ஒப்ப வளர்ச்சி
பெற்றுள்ள மன நூலாராய்ச்சி அத்தகைய அநுபவ நிலையை
ஒரு கற்பிதம் என்று காட்டுகிறது எனச் சிலர் கூறு
வர். நம் குழந்தைப் பருவத்தில் நமக்கேற்பட்ட அநுபவங்
கள் நினைவுகள் இவையெல்லாம் அடிமனத்தில் தேக்கங்
கொள்கின்றன என்றும், மனிதன் அடிமனத்தின் அடிமை
யென்றும் மன நூலாராய்ச்சியினருள் ஒரு கோட்பாட்டினர்
கூறுகின்றனர். 'பகுத்தறிவு' என்று நாம் பேசுமொன்று, நம்
முள் ஆழ்ந்துள்ள இயல்புகள் விருப்பங்கள் இவை தொழிற்
படுவதற்குத் துணைபுரியும் சாதனம். நாம் சிறு குழந்தை
களாக இருக்கும் பொழுது நம்முடைய தேவைகளை யறியவும்
நம் குறைகளை நிரப்பவும் நம் பெற்றோரை எதிர்பார்த்தோம்.
இன்னும் அவ்வாறே ஒரு தந்தையின் பாதுகாப்பையும் பரி
வையும் தெய்வம் என்னும் ஒரு கற்பனையில் சாதித்துக்
கொள்கிறோம்.

'சமயானுபவம்' என்பது அகத்தே எழுகின்ற ஒரு நிலை.
அது வெறும் மனமயக்க மென்றாலும் அம்மயக்கம் தவிர்க்க



முடியாத நீர்மைத்து. உள்ளிருந்து எழும் கனவுகளை மேலி
ருந்து வரும் தோற்ற மென்றும் உள்மனம் பேசுவதை
ஆகாயத்தில் எழும் அசரீரி என்றும் பாமர மக்கள் பொருள்
பண்ணுகிறார்கள்.

சமயத்தை மனநூற்பகுதிகளுள் ஒன்றாக வைத்து
ஆராயும் ஆராய்ச்சி இன்று மேனாடெங்கணும் கேட்கப்
படுகிறது. William James, Starbuck, Leuba,
Pratt முதலிய அறிஞர்களெல்லாம் சமய உண்மைகளை
மனநூற் கோணத்திலிருந்து ஆராய்பவர்கள். நம்பிக்கை
யென்னும் அடிப்படையின்மேல் எவ்வளவு பெரிய கட்டிடத்
தையும் எழுப்பலாமென்பதே இவர்கள் கூறும் முடிவு.

சமயானுபவங்கள் எவ்வெந் நிலைகளில் ஏற்படுகின்றன.
அவற்றின் துணைக் காரணங்கள் எவை என்று ஆராய்வது அவற்
றின் உண்மையை அளந்து துணிந்ததாகாது. அநுபவம் என்ற
அளவில் இன்று நான் உங்கள் முன்னின்று பேசுவதற்கும் நம்
நாயன்மார்கள் பெற்ற தெய்வானுபவங்களுக்கும் வேறுபாடு
கிடையாது. ஒன்றை உண்மை நிகழ்ச்சி யென்றும் மற்
றொன்று கற்பிதம் அல்லது மயக்கம் என்றும் கூற மன
நூலுக்கு உரிமையில்லை.

சமயத்தைச் சமூகக் கண்கொண்டு காணும் அறிஞர்கள்
கூறும் கருத்துக்கள் சிந்திக்கற்பாலன. உண்மை அறம் கற்பு
முதலிய பண்பியல்கள் (Values) மக்கள் ஒழுகலாற்றிற்குத்
துணைபுரியும் வெறும் நியமனங்கள். நம்மிடை காணப்படும்
ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்யவேண்டு மென்
னும் உணர்வு விலங்குகளுக்கும் நமக்கும் பொதுவாகவுள்ள
'மந்தையியல்பை'யே (herd instinct) அடிப்படையாகக்
கொண்டது. நமக்குள்ளே யிருந்துகொண்டு நாம் வழிதவறும்
பொழுதெல்லாம் சாட்டையடி கொடுக்கும் 'மனச்சாட்சி'
எனப்படுவது ஒரு தெய்வீக சக்தியின் கூறுபாடன்று. அது

வும் சமூகம் நம்மேல் கொண்டிருக்கும் ஆதிக்கத்தைக் காட்
டும் ஒரு சின்னம். மனச் சாட்சி சமூகம் நமக்குள் நிறுத்தி
வைத்திருக்கும் காவற்காரன். ஒழுக்க நெறியென்பது, சமூக
கக் கூறுமிடத்து, ஒரு உபயோகமுள்ள ஏற்பாடு.

சமூக நிர்வாகத்தைச் சரிவர நடத்தப் பயன்பட்டு
வருவதே சமயம். சிறைச்சாலைகள் நீதிமன்றங்கள் இவற்றால்
விடச் சமயக் கட்டுப்பாட்டினால் மக்கள் சட்டத்திற்குட்பட்
டவர்களாயும் ஒருவரோடு ஒருவர் அன்புடையவர்களாயும்
வாழமுடியும். சமூகம் செய்யும் தொழில்களுக்கு ஒரு உணர்ச்சி
கரமான தூண்டுதலையளிக்கச் சமயம் பயன்படுகிறது. 'சமயம்'
'மொழி' என்பன சமூகக் கற்பனைகள். தனித்த ஒவ்வொ
ருவரும் 'மொழி' ஒன்றைக் கற்பிதம் செய்து கொள்ளா
விட்டாலும் மனிதர்கள் செய்து கொண்டதுதான் மொழி
யென்பதில் ஐயமுண்டோ? 'தெய்வம்' ஒரு தனி மனி
தனின் கற்பனையன்று; சமூகமே சேர்ந்து கற்பித்துக்
கொண்டுள்ள ஓர் உண்மை.

சமயம் சமூக ஒற்றுமைக்குத் துணை செய்வதில் தடை
யொன்றுமில்லை. ஆனால் அதனை, இராணுவத்தை ஒப்பப் பயன்
தருமோர் ஏற்பாடு என்றும் கற்பிதம் என்றும் கூறுவதால்
சமயத்தின் பெருமையை அறியாதவர்களாகின்றோம். தவிர
எவ்வளவு கூர்த்த மதியோடும் நம் சமூகவாழ்வைத் திருத்தியும்
பெருக்கியும் வளம்படுத்தினும் நம் முயற்சிகள் வாழ்வில் உள்ள
துன்பத்தையும் துயரத்தையும் அகற்ற வல்லுன வல்ல.
பொதுவுடைமை மனிதனின் தன்னலப் போக்கை அழித்துவிட
வில்லை. பொதுவுடைமையையே சமயமாகவும் ஸ்டாலின்
லெனின் ஆகியோரைத் தெய்வங்களாகவும் கொண்டுள்ள
ரஷ்யநாடும் போரற்ற அமைதிவாழ்வைப் பெறவில்லை.

சமயநெறி என ஒன்றைக் கடைப்பிடிக்கவும் மாட்டாமல்
தெய்வத்தையும் விட்டுவிட முடியாமல் நம் நாட்டிலும் பல



புதிய சோதனைகள் பலவற்றில் இறங்கி யிருக்கிறார்கள். அத்
தகைய புது முயற்சிகளின் விளைவுதான் 'திவ்வியஞான
சபை', 'பிரம்ம சமாஜம்', 'ஆரிய சமாஜம்' முதலிய வெல்
லாம். இத்தகைய மாற்றுக்களில் மனம் செல்லாத பலர் 'அர
விந்தர்', 'ரமணர்' இவர்களைச் சுற்றியெழுந்துள்ள இயக்
கங்களில் ஈடுபடுவர்.

நம்மில் பெரும்பாலோர் சமய உண்மைகளை உண்
மையோ, பொய்யோ என்னும் பலதலையாய உணர்வோடு
நோக்குமவ்வளவில் அமைகின்றோம். ஐயம் முற்றிய நிலையில்
தெய்வம் என்னும் உண்மை இருப்பதாக வைத்துக் கொண்
டாலும் நாம் அதை அறியவே முடியாது என்று துணிந்து
வாதிடுபவருமுண்டு. புத்தர் பெருமான் கூட கடவுளைப்
பற்றியோ மறுபிறப்பைப் பற்றியோ மனிதன் அறிந்து
கொள்ள முடியாது; அறிய முயல்வதில் காலம்தான் வீணாய்க்
கழிகிறது என்று கூறவில்லையா?

ஐயங்கொள்வதில் பலதிறங்களுண்டு. சிலர் எதைப்பற்
றியும் ஐயத்தோடு பேசுவது ஒரு நாகரிகம் என்று கருதுகிறார்
கள். நம்முடைய பண்பாடு எதைப்பற்றியும் துணிவாகக் கூற
முடியாத அளவிற்கு முன்னேற்றமடைந்து விட்டது என்பது
அன்னார் நம்பிக்கை. அறிவுலகத்தில் நிகழும் ஆராய்ச்சிகள்
பலவும் ஐயக்குறிப்புக்களோடு முடிவதில் ஒரு தனிப் பெருமை
கொள்கின்றன.

ஐயங்கொள்வதில் இன்னொருவகை இதுபோல்வதன்று;
அந்நிலை தத்துவவாராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்
படும் முதற்படியாக அமைந்திருப்பது. நம் சமய சாத்திரங்
களிற் சில ஆசிரியன் மாணவனுக்கு அறிவுறுத்துவது போன்று
யாக்கப் பெற்றுள்ளமையை நீங்கள் அறிவீர்கள். மாணவன்
வாய்மொழியாகச் சில ஐயங்களை நூலாசிரியன் எழுப்பி
அதற்கு விடைதருவன். அத்தகைய ஐயங்களை நாம் இப்போது

கண்டனூர் சிவநேசர் திருக்கூட்டத்தார் திருமுறைப் போட்டிகள் ஆடித் திங்கள் 24, 25, 26, 27, 28, நாள்களில் ஆண் பெண் பாலர் முதலியவர்களுக்கு வழங்குவார்கள். 20-8-47 காரைக்குடியில் பரிசுகள் வழங்கப்பெறும்.

* * * * *

சைவசித்தாந்த சமாஜத்தின் மே திங்கள் கூட்டம் 18-5-47 ல் திருநாவலூரில் ஆசிரியர் திரு. பூ. ஆலாலசுந்தரஞ்செட்டியார் அவர்கள் தலைமையில் வெகு நன்றாக நடைபெற்றது. அப்போது கா. முத்துகிருஷ்ணப்பிள்ளை, வித்துவான் நயினார்முகம்மது, வித்துவான் சிவப்பிரகாசர் முறையே 'அன்பு,' 'தெய்வம் மணக்கும் செய்யுள்', 'சுந்தரர் காதற் திருமணம்' என்ற பொருள்பற்றிப் பேசினார்கள்.

* * * *

நமது சமாஜத் தொண்டர் திரு. ஜி. கல்யாணம் பிள்ளை (தாசில்தார், ஸ்ரீ வில்லிபுத்தூர்) அவர்களுடைய புதல்வி செல்வி - ஞானம்பாள் திருமணம் 28-6-47-ல் சிறப்பாக நடந்தது.

* * * *

5, 6 ஜூலையில் பிரதம அமைச்சர் வேண்டுகோளின்படி சென்னை அரசாங்க மாளிகையில் தமிழ்நாட்டு மடாலயங்கள் திருக்கோயில்கள் சீர்திருத்த மாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. விவரங்கள் அடுத்த இதழில் வரும்.

* * * *

சேரமான்பெருமாள், சுந்தரமூர்த்திகள் திருநாட்கள் திருவஞ்சைக்களத்தில் வருகிற 25 - 7 - 47ல் நடைபெறும் போது அவ்வூர் உயர்தரப் பள்ளியில் கூட்டம் நடைபெறும். கொச்சி அரசியலார் அதனை ஆதரிப்பார்கள். அவ்வரசியலார், அடியார்களின் சரிதங்களை வெளியிடுவதன்றிப் பாடங்களிலும் சேர்த்துவிடுவது நல்லது.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. [illegible]) Edited and Published by Rao Bahadur C.M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta MahaSamajam, at 9, Vaidyaramayyar St, Thyagarayanagar, Madras. P. I. Card No. M. S. 81.

497

M 2330

"SIDDHANTHAM"
Vol. 20—No. 8

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 20 | சர்வசித்து ஆவணி 1947 ஆகஸ்ட் | இதழ் 8

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| 1. ஒலிபரப்பு | ... 257 |
| 2. தலப்பகுதி—இருவர் பாடிய இலங்கைக் கோயில் | ... 265 |
| 3. சாத்திரப்பகுதி— | |
| 1. சாத்திரத் துணுக்குகள் | ... 270 |
| 2. சிவஞானபோதச் சூத்திரக் கருத்து | ... 272 |
| சமயப்பகுதி— | |
| 1. சமய மாற்றங்கள் | ... 277 |
| 2. வணக்கம் செய்யத்தக்க மொழி எது | ... 280 |
| கலைப்பகுதி— | |
| சைவச்சிற்பமோ சமணச்சிற்பமோ | ... 282 |
| கவிப்பகுதி— | |
| 1. பாழறை பள்ளியறையான விந்தை | ... 287 |
| 2. [illegible]ழில் | ... 292 |
| ஆராய்ச்சிப்பகுதி—இரு பல்லவ அடியார்கள் | ... 295 |
| விரிவுரைப்பகுதி—நாய்த்தன்மை | ... 298 |

ராசிரியர் :
ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ., பி. எல்.,
உதவிப் பத்திராசிரியர் : கி. சிவராமன், எம். ஏ.,

சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2.

497

## செய்தித் திரட்டு

(க) சமாசத் தொண்டர்கள் :—(1) திரு. சிவகுருநாத
பிள்ளையவர்கள் - தூத்துக்குடிச் சித்தாந்தப் பேராசிரியர் -
75வது ஆண்டு விழா வெகு நன்றாகக் கொண்டாடப்பட்டது.
அன்னார் பல்லாண்டுகள் சைவத்திற்கு உழைக்குமாறு
இறைவன் நீண்ட ஆயுளும் உடல் வலிமையும் அருளுவானாக.

(2) திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை. (61 ஆண்டு)
மணிவிழா 28 - 7 - 47ல் சென்னையிலும் மற்ற இடங்களிலும்
கொண்டாடப்பட்டது. செயலாளர் ஆசிரியர் முதலிய பல
துறைகளிலும் தொண்டாற்றிய பேரறிஞர். நீண்ட ஆயுளும்
உடல் வலிமையும் இறைவன் அருளுவானாக.

(3) திரு. கி. இராமலிங்கம், எம். ஏ., தனித் தமிழ்
இயக்கத்திற்கு உயிர் தந்த பெரியார். 17 - 5 - 47 ல் இரட்டி
யப்பட்டி அடிகள் மாணவர் விடுதிக்கழகத்தில் “ செந்தமிழ்
விளக்க வள்ளலார் ” என்ற பட்டம் அளிக்கப்பெற்றார்.
அவரது இயக்கம் வாழ்க.

(4) திரு. கி. சிவராமன், எம்.ஏ. சென்ற சைவ. இளைஞர்
மா நாட்டில் தலைமை வகித்தவரும் சித்தாந்தத்திற்கு உதவி
ஆசிரியரும் ஆக இருந்தவர். தற்போது காசிப் பல்கலைக் கழ
கத்தில் சைவ சித்தாந்த ஆசிரியராகச் செல்லுகிறார். காசி
யிலே சித்தாந்த ஞானத்தைப் பரப்புவதற்கு நீண்ட ஆயுளும
உடல் வலிமையும் இறைவன் அருளுவானாக.

(உ) பிரிவு :— அருண்மிகு விபுலானந்த அடிகள்
கொழும்பில் திடீரென்று சிவபெருமான் திருவடி நீழல்
அடைந்ததைக் கேட்டுத் துயர் உறுகிறோம். தமிழ்நாடு தமி
ழிலும் இசையிலும் சிறந்த ஆராய்ச்சியாளரை இழந்தது. நற்
பயனாக அவருடைய பேருரை நூல் அரங்கேற்றின பிறகே பெரு
மான் அழைத்துக்கொண்டார் என ஆறுதல் ஒன்றே உண்டு.

(ங) சுந்தரர் - சேரமான் திருநாள் :— 25 - 7 - 47 ல்
திருவஞ்சைக்களம், திருவெண்ணெய் நல்லூர், திருப்பேரூர்,
இடிகரை முதலிய இடங்களில் நடைபெற்றது. பல சைவப்
பெரியார்கள் ஈடுபட்டனர். திருவஞ்சைக்களத்தில் கோவை
சேக்கிழார் திருக்கூட்டத்தார் திருநாளை நடத்தினார்கள்.

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 20 | சர்வசித்து ஆவணி 1947 ஆகஸ்ட் | இதழ் 8

## ஒலிபரப்பு

பத்திராசிரியர்

### அறநிலையச் சீர்திருத்தம்

இந்து சமய அறநிலையங்களுக்கு நல்லகாலம் பிறக்கப் போகிறது என்று சொல்லலாமோ! அவ்விதம் கூறுவதற்குச் சில நற்குறிகள் தோன்றியிருக்கின்றன. ஆகவே சமயத்து நன்மக்களில் ஒருவித மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதுவரை அறநிலையச் சீர்திருத்தங்களுக்கு எவரும் ஆதரவு கொடுக்கவில்லையா என்று கேட்கலாம். கொடுத்துத்தான் வந்தார்கள். ஆனால் அவைகள் பேச்சளவில் நின்றுவிட்டன. அறநிலையங்களின் பாதுகாப்புகளில் மிகுதியாகக் குறைகள் உண்டு என்று அடிக்கடி பொதுமக்கள் கூறியுள்ளார்கள். அவைகளை அதிகாரிகளும் அறிவார்கள். அவைகளை நீக்கும் பொருட்டு அடிக்கடி முயற்சிகளும் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அவைகள் எல்லாம் ஒரு பக்கமே ஏற்பட்டன. பொதுமக்களைக் கலந்துகொள்ளாமல் தங்களுக்கே எல்லாம் தெரியும் என்ற இறுமாப்பில் அத்திருத்தங்கள் வெளியிடப்பட்டன. ஆகவே அவைகளுக்கு எதிர்ப்பு வருவது இயல்பே. அவ்வாறாக அறநிலையங்களுக்கு எந்த நன்மையும் ஏற்படுவதற்கு வழி

இல்லாமல் போய்விட்டது. இந்தப் பரிதாபமான நிலையில் நமது அறநிலையங்கள் இருந்தன.

இப்பொழுதோ முதல் அமைச்சர் அவர்கள் அறநிலையங்களின் பாதுகாப்பை ஏற்றுக்கொண்டார். அவரோ உலகத்தை அறிந்தவர். ஏழைக்குடிகளிடம் வாழ்ந்தவர். அவர்களுடைய மனப்பான்மை நன்கு அறிந்தவர். சமய அன்பில் ஈடுபட்டவர். மக்களுடைய மனப்போக்கை அறிந்து சீர்திருத்தம் செய்ய முயன்றுள்ளார். அவர்கள் அறநிலையங்களின் பகுதியைத் தன் வசத்தில் எடுத்துக்கொண்டவுடனே நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினார்கள். அவைகளைக் கோவைப்படுத்தி அவைகளுக்குப் பரிகாரம் தேடுவது ஓர் அரிய செயல் ஆகும். பொதுமக்கள் கருத்தை அறிவதே சிறந்த வழி. ஆகவே, அதற்கு என ஒரு குழுவை நியமித்து அக்குழுவைக் கொண்டு அறிஞர்களின் மகாநாடு ஒன்றைக் கூட்டிவைத்தார். தாமே நாட்டு அறிஞர்களுக்கு அழைப்பு அனுப்பினார். தக்க தலைவர்களை ஏற்படுத்தினார். எல்லா விதமான கொள்கைகளையும் கேட்கவேண்டும் என்று எண்ணி அவ்வக்கொள்கையினர் பிரதிநிதிகளை அழைப்பித்தார். சென்னையில் அரசியல் மண்டபத்தில் ஜூலை மாதம் 5, 6 தேதிகளில் இப்பெரும் ஆலோசனைக் கூட்டம் கூடிற்று. முதல் அமைச்சரே தொடக்க உரை படித்தார்கள். அது ஒரு சிறந்த உரை. அறநிலையங்களில் நம்பிக்கை உள்ளவர் என்று அது காட்டிற்று. நம்பிக்கை இல்லாதிருந்தும் வெறும் சம்பளத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் பாடுபடும் அதிகாரிகள் உரையைப்போல் இவ்வுரை இருக்கவில்லை. அவருக்குப்பின் பல பெரியார்கள் பேசினார்கள். இரண்டு நாள்களும் அருமையான தீர்மானங்கள் இருபத்தொன்று செய்யப்பட்டன. அவைகளைச் செயல்முறையில் கொண்டு வந்தாலே போதும், எடுத்த காரியம் சித்திக்கும் என்று உறுதி கூறலாம். 1940-ம்



ஆண்டில் மயிலத்தில் சைவ சமயத் தலைவர் கூறிய தலைமை உரை இப்போது நோக்கற்பாலது. அதில் கூறியிருக்கும் கருத்துக்களையெல்லாம் இப்போது பொதுமக்கள் கூறியிருக்கின்றனர். அமைச்சர் இவைகளைப் போற்றி நடைமுறையில் வைத்தருள்வாராக !

## சமயப் பயிற்சி

தற்போது அதிகாரிகள் அறநிலையங்களின் கணக்கு முதலியவைகளைப் பரிசோதிக்கிறார்களே யன்றி சமயப்பயிற்சி எவருக்கும் தருவதில்லை. அப்பயிற்சி தரவேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள். அதனை அனுசரித்து கீழ்க்கண்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

1. தேவாலய மடாலயங்களில் வேத, ஆகம, தேவார, பிரபந்த பாடசாலைகளை வைத்து நடத்தி மாணவர்களுக்குப் பயிற்சி தந்து அப்படிப் பயின்றவர்களையே கோயிற் பூசைகளுக்கு நியமித்தல்.
2. அப்பாடசாலைகளில் வேண்டிய பாடதிட்டங்களை வகுக்கவும் கற்பிக்கவும் தேர்தல் நடத்தவும் ஒரு உத்தியோகத்தரை அறநிலையச் சங்கம் நியமிக்கவேண்டும்.
3. தேவாலய மடாலய நிர்வாக உத்தியோகத்தர்கள் பொதுக் கல்வியுடன் சமயக்கல்வியும் பெறவேண்டும். பாடதிட்டம் தேர்தல் முதலியவைகளை மேல் சொன்னவரே நடத்தவேண்டியது.
4. தேவாலய மடாலய சிப்பந்திகள் அவைகளின் கொள்கைகளில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
5. உயர்தரச் சமயக்கல்வியை அளிக்கத் தற்போதுள்ள கல்லூரிகளில் மாணவர்களுக்கு உதவிபுரிய வேண்டும்.
6. உயர்தரச் சமயக்கல்வி பெற ஒரு தனிக் கல்லூரியும் நிறுவ வேண்டும் என்பன.

ஏனைய சமயத்தார்கள் இந்த முயற்சிகளைச் செய்வதை நாம் அறிவோம். முன்னாளில் நமது அற நிலையங்களில்

இருக்கும் பட்சத்தில் இப்படிப்பட்ட எண்ணங்களுக்கு இடம் இருக்காது. மடங்களினால் பொதுமக்களுக்கு மிகுந்த பயன் ஏற்படக்கூடும்.

## சட்டம் மாற்றுதல்

அறநிலையங்களில் ஆக்கவேலை செய்வதற்கு வேண்டிய அதிகாரம் இல்லை என்று சில ஆணையாளர்கள் நினைக்கிறார்கள். இப்போது இருக்கும் சட்டப்படியே பல ஆக்க வேலைகளைச் செய்யமுடியும். சில ஆணையாளர்கள் செய்தும் வந்தார்கள். சிலர் ஐயமுற்று யாதொரு செயலும் செய்யாமல் வாளா இருக்கின்றனர். அவ்விதமான ஐயப்பாடுகளை நீக்கி ஆக்க வேலைகளைச் செய்வதற்குத் தெளிவான விதிகளைச் சட்டத்தில் ஏற்படுத்துவது அவசியம். அதனைக் கருதி அடியிற் கண்டபடி முடிவு செய்யப்பட்டது.

அறநிலையக் கழகச் சட்டத்தில் சமய சம்பந்தமான ஆக்கவேலைகளைச் செய்வதற்கு வேண்டிய திருத்தங்களைச் செய்துகொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

## ஆலயச் செலவு திட்டம்

ஆலயங்களின் வருவாய்களை சமயச் சார்பில்லாக் கல்வி முதலிய நாட்டுச் செலவுகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற கிளர்ச்சி நாட்டில் கிளம்பியிருக்கிறது. சிலர் அதனைக் கண்டிக்கிறார்கள். ஆலயங்களுக்கு ஏற்பட்டுள்ள சொத்துக்கள் ஆலய பரிபாலனத்திற்காக விடப்பட்டவைகள். ஆலய பரிபாலனத்தில் சமயப்பிரசாரமும் சேருமானதினால் அதற்கும் செலவழிக்கலாம். நியாயமாக ஆலயப் பணிகளுக்குச் செலவு செய்தால் மீதி இருப்பது சந்தேகம். மீதி இல்லாமல் போனால் எவ்வாறு இதர செலவுகளுக்குச் செய்யக் கூடும். அவசியமாகச் செலவு செய்யவேண்டிய செலவுகளைச் செய்யா



மல் மிச்சப்படுத்தினால் மட்டும் இதரச் செலவுகளைக் கவனிக்க முடியும். அப்படி இல்லாமல் நியாயப்படி செலவு செய்தால் மீதி ஏற்படாது. உபரி வருமானம் என்ற கேள்வியே எழும்புவதில்லை. இவைகளை நன்றாக ஆராய்ந்து அடியிற்கண்ட தீர்மானம் செய்யப்பட்டது.

i. (1) கோயில்களிலும் மடாலயங்களிலும் நித்திய நைமித்திகங்களைத் திட்டப்படி நடத்துவது.

(2) கோயில் மடாலயம் திருக்குளம் முதலியவைகளில் பழுதானவைகளைத் திருப்பணி செய்வது. (3) சமயப்பிரசாரம் செய்வது. (4) யாத்திரிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வது. (5) அருகிலுள்ள வருவாய் குறைந்த கோயில்களுக்குப் பாதுகாப்பும் திருப்பணியும் செய்வது. இம்முறைகளில் தான் வருமானத்தைச் செலவு செய்வது அவசியம்.

ii. மேலே சொன்ன செலவுத் திட்டத்தைக் காலத்திற்குத் தக்கபடி நிர்ணயிக்க ஒரு பிரத்தியேகக் கமிட்டி நியமிக்க வேண்டியது.

iii. திருப்பதி தேவஸ்தான வரும்படியிலிருந்து ஒரு சர்வகலாசாலை வைப்பது என்று அரசியலார் கொண்டிருக்கும் எண்ணம் சரியானதல்ல ; அது அநாவசியம் ; அது முடியாத காரியம். ஆகையால் அரசியலார் அவ்வெண்ணத்தை நீக்கிவிட வேண்டியது.

திருப்பதியின் உண்மையான நிலையை அறிந்தவர்கள் அங்கே பல்கலைக் கழகம் வைத்தல் முடியாத செயல் என்று அறிவார்கள். சமயக்கல்வி அல்லாமல் வெறும் கல்வி தரும் கலாசாலை அங்கு அவசியமில்லை என்பது பொதுமக்களுடைய எண்ணம் ஆகும்.

## ஆலய வருமான அதிகரிப்பு

எல்லாப் பகுதிகள் இயக்கங்கள் முதலியவற்றிலும் வருவாய்களை அதிகரிக்க முயலுகிறார்கள். ஆலயங்களில் அவ்வாறு செய்யவில்லை. வருவாய் அதிகரித்தால் திட்டமும் தற்காலத்திற்கு ஏற்றதாகச் செய்துகொள்ளலாம். ஒரு வேலைக்காரன் வெளியில் மாதம் ஒன்றுக்கு 30 ரூ. சம்பாதித்

தால் தேவஸ்தானத்தில் ஒன்றறை ரூபாய் பெறுகிறான். என்ன விபரீதம்! இந்தத் திட்டத்தை மாற்றவேண்டும். அதற்காக வருவாய்களை அதிகரிக்க வேண்டும். அதற்குப் பல வழிகளும் இருக்கின்றன. அவைகளைப் பற்றி அடியிற் கண்டபடி தீர்மானிக்கப்பட்டது.

1. கோயில் மடங்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்குச் சரியான அட்டவணை எடுக்க வேண்டும். இழந்த சொத்துக்களை மீட்க கடவடிக்கை எடுக்கவேண்டும். சர்வே செய்யாத நிலங்களைச் சர்வே செய்யவேண்டும். அவற்றின் வருமானம் சரியாக வருகிறதா என்று கண்டுபிடிக்க ஒரு கமிஷன் நியமிக்க வேண்டும்.

2. கோயில் மடங்களுக்குச் சொந்தமான இனும் நிலங்களை ஜமீன்தாரி மசோதாவிலிருந்து விலக்கிவிட வேண்டும்.

3. சர்க்கார் கொடுக்க வேண்டிய மோகினிப் பணத்தை தற்காலத்திற்குத் தக்கபடி உயர்த்திக் கொடுக்கவேண்டும்.

### மடாலயங்களின் சீர்திருத்தம்

மடாலயங்களைப் பற்றி மக்களுக்குப் பலவித ஐயப்பாடுகள் இருக்கின்றன. நிர்வாகக் கேடுகளால் பல மடாலயங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. மற்றவைகளில் பண்டைய ஒழுக்கங்களின்படி காரியங்கள் செய்யப்படவில்லை. ஆகவே அடியிற்கண்டபடி தீர்மானிக்கப்பட்டது.

போதிய கல்வி, சாத்திர ஞானம், ஒழுக்கம், சம்பிரதாயம், இவைகளால் தகுதியுடையவர்களைத் தம்பிரான்களாகச் செய்து முன்பிருந்த முறைப்படியே அவர்களைத் தகுந்த ஊதியத்துடனும் மரியாதையுடனும் சௌகரியங்களுடனும் அவரவர்கள் தகுதிக்கேற்ப கட்டளை, கார்பார், சின்னப்பட்டம் என்னும் பதவிகளில் நியமித்து நிர்வாகத் துறையிலும் சமயத்துறையிலும் ஆதீனத் தலைவர்களுக்கு ஆலோசகர்களாக இருந்து சமயமும் மன்னுயிர்த்தொண்டும் பேணி வருமாறு செய்தற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும்.



மேலே சொன்ன தீர்மானங்களை அரசியலார்க்கு அனுப்ப வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானங்கள் எல்லாம் மிக முக்கியமானவை. இவைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்தால் நமது அறநிலையங்கள் வெகு விரைவில் நல்ல நிலைமைக்கு வந்து மக்களுக்குப் பயன் அளிக்கும் என்று திண்ணமாகக் கூறலாம்.

---

## 2. தலப்பகுதி

# இருவர் பாடிய இலங்கைக் கோயில்

(திருக்கேதீச்சரம்)

### 1. முன்னுரை

இலங்கை என்ற ஈழமண்டலத்தில் பாடல்பெற்ற தலங்கள் இரண்டே உண்டு. அவைகளில் திருக்கேதீச்சரம் ஒன்று. சம்பந்தரும் சுந்தரரும் இத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ளார்கள். அப்பாடல்களில் காணும் குறிப்புகளிலிருந்து அப்பெரியார்கள் இத்தலங்களுக்கு நேரிற் சென்றே வழிபட்டிருக்க வேண்டும் என்று எண்ணுவோம். ஆனால் இச்செய்திகளைக் கூறும் சேக்கிழார் பெருமான் சம்பந்த சுவாமிகள் இராமேசுவரக் கரையிலிருந்தே ஈழமண்டலத்திருத்தலங்களைப் பாடினார் என்று கூறுவதைக் காணுகிறோம். (சம்பந்தர் புராணம். செ 890). சுந்தரரும் அவ்வாறே செல்லாமல் செய்திகளைக் கேட்டே பாடியிருத்தல் கூடும் என்று அறியக் கிடக்கிறது. (கழறிற்றறிவார் செ. 108). ஆனால் கேட்டறிந்த செய்திகளோ சரியானவை என்று நிரூபிக்கும் சான்றுகள் உண்டு.

## 2. இடம்

இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையில் இணைப்பு
ஒன்று உண்டு. அவ்விணைப்பே சேது அல்லது இராமர்
கட்டிய அணை என்பர். இவ்விணைப்பில் தமிழ்நாட்டோரம்
இராமேச்சரத்தீவு இருக்கிறது. இலங்கை ஓரம் மன்னார் தீவு
இருக்கிறது. இவ்விரு தீவுகளுக்கும் இடையில் மணல் திடல்கள்
விட்டுவிட்டு இருக்கின்றன. இருதீவுகளிலும் புகைவண்டிப்
பாதை ஓடுகிறது. ஆனால் மணல் திடல்களில் பாதை இல்லை.
நீராவிப்படகில் ஏறிச் செல்லவேண்டும். தனுக்கோடியில்
படகு ஏறினால் இரண்டுமணி நேரத்தில் மன்னார் தீவில்
உள்ள தலைமன்னாரில் இறங்கலாம். அத்தீவின் எதிர் நுனியில்
மன்னார் கோட்டை இருக்கிறது. இங்கே இறங்கி எருது
வண்டியில் ஆறு கல் சென்றால் திருக்கேதீச்சரம் அடையலாம்.
திருக்கேதீச்சரம் இலங்கைத்தீவில் உள்ள தலம். மன்னார்
தீவிற்கும் இலங்கைத்தீவிற்கும் இடையில் ஒரு சிறு நீர்ச்சந்தி
இருக்கிறது. இந்நீர்ச்சந்தியை மரப்பாசல்மீது கடக்க
வேண்டும். வண்டியும் நாமும் பாசலில் ஏறி அக்கரை சேர
வேண்டும். வேறொரு வழியும் உண்டு. மன்னார்கோட்டைக்கு
அடுத்த வண்டி நிலயம் திருக்கேதீச்சரம் என்ற நிலையமே
ஆகும். ஆனால் இந்த நிலயத்தில் வண்டிகள் அகப்படுவதில்லை.
கால் நடையாக மூன்று கல் நடந்தால் இந்தத் தலத்தை
அடையலாம்.

## 3. பெயர்

இந்தத் தலத்தின் பெயர் திருக்கேதீச்சரம் என்பது.
இதன் விவரம் கேது பூசித்த ஈச்சரம் என்பர். புராணப்படி
தேவாசுரர்கள் அமுதம் எடுக்கக் கடல்கடைந்தபோது
அமுதம் உண்டாகவே அதனை எடுத்துத் திருமால் தேவர்



களுக்கு மட்டும் வழங்கி வருகையில் ஓர் அவுணன் சூரியன்
சந்திரன் இருவர்களுக்கும் இடையில் மறைந்து இருக்க
அதனை அறியாது அமுதம் அளிக்க அவன் உண்டபிறகு
சூரிய சந்திரர்கள் அச்செய்தியைத் திருமாலுக்கு உரைக்கத்
திருமால் சினந்து கைக்கரண்டியால் அவ்வவுணன் தலையைத்
துண்டிக்க அவுணன் உடல் இருகூறாகி இராகு கேது என்ற
பாம்புருவங்களாக, அவர்கள் இந்த கேதீச்சரம் அடைந்து
பெருமானைப் பூசித்து அச்சூரிய சந்திரர்களை விழுங்கித்
துன்புறுத்தும் வரத்தைப் பெற்றார்கள் என்று படிக்கிறோம்.
இயற்கைச் செயல்களைப் புராணங்களில் இவ்வாறு கதைகளாக்
கூறுவது நம்நாட்டு வழக்கு. கேது பூசித்தலால் இந்தத் தலம்
கேதீச்சரம் என்ற பெயர் பெற்றது. கேது கிரகம் ஆயிற்று
என்பதும், விழுங்குவதால் சந்திர சூரியர்கள் அடையும்
மறைப்பு கிரகணம் ஆயிற்று என்பதும் புராணக்கூற்று.

## 4. தலம்

கடலுக்கு அருகில் மணல் தரையான நெய்தல் நிலத்தில்
உள்ளது. கழிகள் முதலிய நீர் நிலைகள் பல உண்டு. ஆகவே
இங்கு எச்சரிக்கையாக இல்லாவிடில் மலைச்சுரம் வரும். கோயில்
சிறியது. தென்னிந்தியக் கோயில்களைப்போலவே கட்டப்
பட்டது. கருப்பக்கிரகமும் விமானமும் செங்கல்லினால்
கட்டப்பட்டு வெள்ளை பூசப்பட்டுள்ளது. இலிங்கம் முதலிய
வைகள் காட்டு மத்தியில் கண்டு பிடிக்கப்பட்டுப் பிறகு சமீப
காலத்தில் ஆலயம் நிறுவப்பட்டது. கோயிலுக்கு எதிரே
திருக்குளம் இருக்கிறது. இதில் முதலைகள் இருப்பதால்
வெகு எச்சரிக்கையுடன் குளிக்க வேண்டும். நீரை மொண்டு
வந்து வெளியே குளித்தால்தான் நல்லது. கோயிலுக்கு வலது
புறத்தில் விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றில்
ஒன்றில் ஆதிசைவக் குருக்கள் இருக்கின்றார். அவர் வீட்டில்

முன்னை சொன்னால் பிரசாதம் கிடைக்கும். தரிசனம் ஆன பிறகு மன்னாருக்கு வந்துதான் புகைவண்டி ஏறவேண்டும்.

## 5. பாடல்கள்

திருக்கேதீச்சரத்தைப் பற்றிக் கூறும் பாடல்கள் சம்பந்தர் பதிகமும் சுந்தரர் பதிகமும் ஆகும். மற்றும் கதிரைமலைப் பள்ளு என்ற ஒரு அருமையான நூலில் சில அடிகள் திருக்கேதீச்சரத்தைக் குறிக்கின்றன. இவைகளிலே கேது பூசித்த புராணக் கதையும் கூறப்பட்டுள்ளது.

“செய்ய கேது தலையற்ற அந்நாள்
திருந்தும் பூசைகள் செய்து முடிப்போன்”

என்று கதிரை மலைப்பள்ளு கூறுகிறது. இதனை சுந்தரரும் தமது தேவாரத்தில்

“அங்கம்ஒழி அந்நாள் அரவுஅமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கம்செய்த பிறைசூடி பாலாவியின் கரைமேல்
செங்கண் அரவசைத்தான் திருக்கேதீச் சரந்தானே”

என்ற திருப்பாடலில் முதலடியில் கேது தலைபோன நாள் அரவு ஆகித் தொழுதலால் இத்தலம் மாதோட்டத்தில் பாலாவிக்கரையில் கடலோரத்தில் ஏற்பட்டது என்ற செய்தி கிடைக்கிறது. (அச்சுப்பதிப்பில் உள்ள ‘அன்னான்’ என்ற சொல் ‘அந்நாள்’ என்று இருக்கவேண்டும் என்று பள்ளுப் பதிப்பாசிரியர் கூறுகிறார்.)

## 6. பண்டைச் சரிதம்

ஆராய்ச்சியாளர் கூற்றின்படி இது மிகப் பண்டைத்தலம். சம்பந்தர், சுந்தரர் காலத்திற்கு (7, 8—நூ) வெகு ஆண்டுகளுக்கு முந்தியே இது இருந்தது. இலங்கைக் கடற்கரையில்



பாலாவியின் கரைமேல் மாதோட்ட நகரில் இது இருந்தது என அவர்கள் பாடலில் காண்கிறோம். கிறிஸ்து முதல் நூற்றாண்டில் இருந்த பிளினி, தாலமி என்ற ரோமானிய ஆசிரியர்கள் பாலாவி மண்டபத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறியுள்ள ‘பாலாசி மண்டி’ என்ற சொல் ‘பாலாவி மண்டலம்’ என்ற சொல்லின் சிதைவு என்பர் ஆராய்ச்சியாளர்கள். ஆகவே இத்தலம் மிகப் பண்டையதே.

மேலும், மாதோட்டம் என்ற சொல்லின் குறுகிய பெயர் மாந்தை என்பதாம். அங்கே விசுவகர்மன் காந்தக் கோட்டை ஒன்று கட்டினானாம். இக்கோட்டையில் அசுரர்கள் ஆண்டார்களாம். அக்கோட்டை கடலில் வரும் மரக்கலங்களை இழுக்குமாம். அப்போது அசுரப் பெண்கள் மரக்கலங்களில் இருந்த ஆண்மக்களை கவர்ந்து செல்ல அசுரர்கள் மரக்கலங்களுக்குச் சென்று அதிலிருந்த பொருள்களைக் கவர்ந்து செல்வார்களாம். இந்த வரலாறு உரோமானியர் சீனர்களாலும் அரபிக்கதைகளாலும் தெரிகின்றது. இதனையே மாமூலனார் என்ற சங்கப்புலவர்.

“நன்னகர் மாந்தை முற்றத் தொன்னார்
பணிஇறை கொணர்ந்த பாடுசெய் நன்கலம்”

என்று அகநானூற்றில் கூறுகிறார்.

இனி, திரிபுரங்களின் கதைகளிலும், தூங்கெயில் மூன்றெறித்த சோழன் கதையிலும் திருவாசகத்தில் காணும் மண்டோதரிச் செய்திகளிலும் இத்தலத்துப் பண்டைய நிலைமை ஊகிக்கலாம். 4 நூற்றாண்டுகளுக்கு முந்தியே இங்கு பண்டைய காணயங்களும் ஒரு அற்புத இரும்புச் சங்கிலியும் புதையலில் கிடைத்தனவாம். ஆகவே இதன் பண்டைத் தன்மையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?

3. சாத்திரப் பகுதி

# 1. சாத்திரத் துணுக்குகள்

1941-ம் ஆண்டில் திரிச்சியில் 36-வது சைவ மகாநாடு அருள்மிகு ஞானியார் அடிகளார் தலைமையில் கூடிற்று. இரண்டாவது நாள் கூட்டத்தில் திரு. உலகநாதமுதலியார் அவர்கள் 'தாயுமானவர்' என்ற பொருள் பற்றிப் பேசினார்கள். அப்போது பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. அதன்மேல் அடிகளார் முடிவுரை கூறுகையில் மூன்று அரிய கருத்துக்களை வெளியிட்டார்கள். அவை யாவன:

1. ஈசன் எல்லாருக்கும் தந்தை. அவன் தாயும் ஆக இருப்பான். ஆகவே அவன் தந்தையாகவும் தாயும் ஆக இருப்பவன் என்று 'தாயுமானவர்' என்ற சொல்லே பொருள் தருகிறது. உம்மை இறந்தது தழுவியது. ஆகையால் அவன் இப்போது தாய் ஆனால் முந்தி தந்தையாக இருந்தான் என்பதைப் புலப்படுத்துகிறது.

நமக்கு உடலும் உண்டு, உயிரும் உண்டு. நமது உடலுக்கு எத்தனையோ தாய்மாரும் தந்தைமாரும் இருந்தனர், இருக்கின்றனர், இருப்பார்கள். நாம் எடுக்கும் ஒவ்வொரு பிறப்பிலும் வெவ்வேறு உடல் உண்டு. அவ்வுடல்களுக்கு வெவ்வேறு தாய்மார்கள் தந்தைமார்கள் உண்டு. ஆகவே உடலுக்குப் பொதுவாய்ப் பல தாய்களும் தந்தைகளும் உண்டு.

நமது உயிருக்கோ அப்படியல்ல. ஒரே தாயும் ஒரே தந்தையும் தான் உண்டு. அவனே ஈசன். அவனே இந்தத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமான். அவனே தாயுமானவன்.

2. "அறுகயிறு ஊசல் ஆனேன்" என்றார் அப்பர். இதற்கு என்ன பொருள்? நான் கயிறு அறுந்த ஊஞ்சல்



போல் ஆனேன் என்பதே. கயிறு அறுந்தால் ஊஞ்சல் என்ன ஆகும்! ஊஞ்சல் பலகை நிலத்தில் விழும்.

உடல் ஆகிய ஊஞ்சல் பலகையைப் பிணைத்து நிற்பது, பாசம் ஆகிய கயிறு. அக்கயிறு ஐந்து வகைப்படும். ஆணவம், கன்மம், மாயை, மயேயம், திரோதாயி என்பன. வெறும் ஊஞ்சலுக்கு நான்கு கயிறுகள். உடலாகிய ஊஞ்சலுக்கு 5 கயிறுகள். 3 என்றும் சொல்வதுண்டு. இக்கயிறுகள் அறுந்தால் பலகையும், அதுபோல் உடலும் நிலத்தில் விழும்.

உடல் விழுவது நிலமாகையால் நிலமே உடலுக்குத் தாரகம். ஆனால் உயிருக்கோ தாரகம் ஈசன். பாசம் அறுந்த உயிர் ஈசனை அடைகிறது.

3. 'உன்னை நீ அறிவாயோ' என்று கேட்டால் யோசியாத ஒருவன் 'என்னை அறியமாட்டேனா? இதோ என் உருவம்' என்று காட்டுவான்.

'உனக்கு உயிரும் உடலும் உண்டு. உடலையாவது அறிவாயோ' என்றால், 'நிச்சயமாக அறிவேன்' என்பான். 'கைகால்களை அறிவாய். உன் முதுகை அறிவாயோ' என்றால், 'நேரில் அறியமாட்டேன். கண்ணாடி கொண்டறிவேன்' என்பான்.

'உன் முகத்தையாவது அறிவாயோ' என்றால் 'அடடா, இப்போதுதான் தெரிந்தது. அதையும் நேரில் அறிய முடியாது. இரண்டு கண்ணாடிகள் கொண்டுதான் அறியமுடியும்' என்பான். 'உன் உடலின் சில பகுதிகளையே நீ நேரில் அறியாது கண்ணாடி என்ற ஒரு தாகுப் பொருளைக்கொண்டு அறியும்போது, உன் உயிரை நீ அறிய முடியுமா? அதற்கும் ஒரு அறிவுள்ள தாரகன், வேண்டும். ஆகையால் உயிரை அறிய வழி தேடு' என்றார்.

———

# 2. சிவஞானபோதச் சூத்திரக் கருத்து*

(கா. ரா.)

1. அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்தமாதி யென்மனார் புலவர்.

ஒருவன் என்றும், ஒருத்தி என்றும், ஒன்று என்
றும் உலகப் பொருள் பல. அவை சடம். அது வென்றும்,
அவளென்றும், அவனென்றும் சுட்டுப்படுவதும் படுக்கப்படுவ
தும் இவ்வுலகம். அவை முத்தொழில்படும் தன்மையது.
அதைத் தொழில் படுத்த ஒரு கர்த்தா வேண்டும். இவ்வுலகம்
உள்ள பொருள். இது மாறி மாறித் தொழில்படும். இவை
ஒடுங்குவது மாயையில். மாயைக்கு ஆதாரம் இறைவன் சக்தி.
இவை ஒடுங்கும் இடத்திலிருந்து மீளவும் தோன்றும். அவ்
வாறு தோன்றுவது ஆணவ மலத்தைப் போக்குவதற்காக.
இவ்வுலகத்திற்கு முதற் கடவுள் அரனே. இதனை அளவை
யால் அறியலாம்.

2. அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

ஆன்மாக்கள் மாறி மாறி இறப்பதும் பிறப்பதும்
அவர்கள் வினையால். வினைஜடம், அவ்வான்மாக்களுக்கு இறை
வன் தன் ஆணையால் வினைப் பலன்களைக் கொடுப்பர். சிவபெரு

* இது சீவில்லிபுத்தூர் சித்தாந்தக் கோடைவகுப்பில் கா. இராம
நாதன் செட்டியார் கூறியதன் சுருக்கம்.



மான் ஆன்மாக்களிடத்து ஒன்றாயும் வேறாயும், உடனாயும் நிற்
பர். சிவமும் சக்தியுமாய்ப் பிரிவின்றி நின்று ஆன்மாக்களுக்கு
உபகரிப்பர்.

3. உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவி னுளான்மா.

ஆன்மா சூன்யம் அன்று. சூன்யம் என்று சொல்லும்
அறிவே ஆன்மா. ஆன்மா உடலில் உள்ளது. அங்கிருந்து
உடலை இயக்குகிறது. ஆன்மா பூத உடலன்று. ஐம்பொறி
யன்று. கனவுடல் அன்று. பிராணவாயு அன்று. பிரமம்
அன்று. அவைகளின் கூட்டமும் அன்று. ஆணவத்தால்
ஆன்மா உடலுள் கட்டுண்டு கிடக்கிறது.

4. அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.

அந்தக்கரணங்களும் ஆன்மா வன்று. அதற்கு
வேறாயது ஆன்மா. ஆணவம் ஆன்மாவை மறைக்கிறது.
ஆணவத்தை நீக்கி அறிய ஆன்மா அந்தக்கரணங்களின்
உதவி பெறும். ஆன்மா ஐந்து நிலையில் நின்று அறியும்.

5. விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பாசத் தவையே.

பொறிகள் தன்னில் தாழ்ந்த விஷயங்களை அறியும்.
ஓர் அளவுக்கு அறியும். ஆன்மாவின் துணை கொண்டு அறி
யும். ஆனால் தன்னையும் தன்னைச் செலுத்தும் ஆன்மாவையும்

அறியாது. அவ்வாறே ஆன்மா அறியும். ஓரளவு அறியும். முதல்வன் அருள் கொண்டு அறியும். ஆனால் ஆன்மா தன்னையோ, தன் முதல்வன் அருளையோ அறியாது. காந்தம் கண்ட இரும்பு தொழிற்படுவதுபோல, முதல்வன் முன்னர் ஆன்மா செயலுறும். காந்தம் அசைவதில்லை. தொழிற் படுவதில்லை. விகாரப் படுவதில்லை. அவ்வாறே இறைவனும் உதவுவான்.

6. உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

அளவை அறிவால் அறியப்படும் பொருள் யாவும் அசத்து. ஒருவாற்றானும் அறியப்படாத பொருள் இல்லாத பொருளாகும். முதல்வன் அளவை அறிவினால் அறியப் படுபவனல்லன்.' அவன் எவ்வாற்றானும் அறியப் படாதவனுமல்லன். பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் அறியப் படாத பதிஞானத்தால் மட்டும் அறியப்படும் முதல்வன் சிவசத்து.

7. யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

சத்தின் முன் அசத்துக்கள் விளங்கித் தோன்றா. ஆகையால் சிவமாகிய சத்து பாசங்களை அறிந்து அநுபவியாது. பாசம் அறிவில்லாத சடம். ஆகையால் அது எதனையும் அறியாது. ஆதலின் சத்து அசத்து என்னும் இரண்டின் வேறாகிய உயிரே அவ்விரண்டினையும் அறியும். உயிர் சிவத்தையும் பாசத்தையும் அவைகள் உதவியால், அவைகள்பால் நின்று அறியும்.



8. ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டந்நிய மின்மையி னரன்கழல் செலுமே.

உயிர் தன் இயல்பு அறியாது. அதற்கு அதன் உயர்வை, சிவபெருமான் குருவாய் வந்து உணர்த்துவான். இப்பேறு தவம் செய்த உயிர்களுக்கே வாய்க்கும். தன் உயர்வு அறியவே உயிர் கீழ் இடத்தை விட்டு விடும். உயர் நிலையை அடையும்.

9. ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

இறைவன் பாசஞானத்தால் அரியப்படாதவன்; பசு ஞானத்தால் அறியப்படாதவன். ஆகையால் பதி ஞானத்தால் அடைய வேண்டும். பதி ஞானத்தை உயிர் அறிவில் நாட வேண்டும். உயிர் தன்னைச் சிவமாகப் பாவித்தல் வேண்டும். பாசத்தைவிட வேண்டும். பாசத்தைப் பாசம் என்று உணர்ந்தால் அதனைவிட இயலும். பாவித்தலாலும், பாசத்தை விடுதலாலும் சிவனை நெருங்குகிறோம். அந்த நெருக்கம் நிலைபெற அவனது ஐந்தெழுத்தை முறைப்படி சொல்ல வேண்டும்.

10. அவனே தானே யாகிய வந்நெறி
யேக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

கட்டுண்ட நிலையில் சிவபெருமான் உயிருடன் கலந்து நிற்பதுபோல, முத்திநிலையில் உயிர் சிவபெருமானுடன் ஒன்றாய் நிற்கும். அவன் அருள்வழி நின்று உயிர்ப்பணி செய்யும். சிவபெருமானுக்கு வழிபாடாகச் செய்யும். அதனால் ஆணவம், கன்மம், மாயை தாக்காது.

11. காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே.

உயிர் கண்ணுக்குக் காட்டியும் அதனோடு நின்று கண்டும் உதவுதல்போல சிவபெருமான் உயிருக்குக் காட்டியும் கண்டும் உபகாரம் செய்கிறான். இந்த உதவியை மறத்தலாகாது. இடைவிடாது நினைக்க வேண்டும். நினைத்து அவனிடம் அன்பு காட்ட வேண்டும். காட்டினால் சிவப்பேறு கிடைக்கும்.

12. செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

சிவப்பேறு பெற்ற ஞானிகள் உடம்போடு கூடியுமிருக்கலாம். அவ்வாறு கூடியிருக்கும்போது சில செயல்களைச் செய்வர். அறிவு இச்சை செயல் புறத்தே செல்லும்போது அவ்வாறு செய்ய வேண்டும். மும்மலங்களைக் களைவர். அன்பரோடு கூடுவர். அன்பர் வேடத்தைக் கண்டும், ஆலயத்தைக் கண்டும் அரன் என்று கருதித் தொழுவர்.

## முடிபுரை

1. சைவனாய்ப் பிறந்த நாம் பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் படித்தல் நலம்.

2. ஆண்டவனைக் கருத்தில் வைக்க. அவன் நாமத்தை நாவில் வைக்க. வாழ்க்கைப் பணியை அவன் வழிபாடாகச் செய்க.

3. ஒரு மூர்த்தியைப் பற்றுக. ஒரு பணியைக்கொள்ளுக.

4. திருக்குறளை நன்கு படிக்கவேண்டும்.



5. பிற நாட்டு நூல்களையும் பிற மதநூல்களையும் நம் நூல்களுடன் ஒப்பிட்டு, அன்புடன் படிக்க. கிணத்துத் தவளை நாட்டு வளப்பம் அறியாது.

6. நம் சக்தியையும் நிலையையும் நாம் உணர வேண்டுவது அவசியம்.

7. காலத்தை வீணாக்காதே. அது உன்னை வீணாக்கும்.

8. சமாஜத்திற்கு கூடிய தொண்டைச்செய்க. (a) ஆண்டு விழாவிற்கு வருதல். மாதக்கூட்டம் கோடை வகுப்புக்களில் கலந்துகொள்ளல். (b) கட்டுரை வழங்கல். (c) சந்தாதாரர் சேர்த்தல். (d) இதர பணியில் கலந்துகொள்ளல்.

9. (1) தூயோமாய் வந்து தூமலர் தூவித் தொழுது வாயினாற் பாடி மனத்தினால் சிந்திக்க போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும். (2) வாழாட் பட்டீர் உள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொள்மின், கூழாட் உள்ளீரேல் எங்கள் குழுவினில் புகுதல் ஒட்டோம்.

---

4. சமயப்பகுதி

# 1. சமய மாற்றங்கள்

'சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்' என்பது தமிழில் ஒரு பழமொழி. எந்தப் பொருளை எடுத்துப் பார்த்தாலும் அதிலே யாதாவது ஒரு பயன் நாம் காணமுடியும் என்பது அதன் கருத்து. சில சமயங்களில் எதிர்பாராத இடங்களிலும் நமக்கு வேண்டிய பலன்கள் கிடைக்கக்கூடும். சென்னை அரசியலார் வெளியிடும் வாரத்தாள் ஒன்று உண்டு. அது சென்னைக் கோட்டையில் பிரசுரம் ஆவதால் அதற்கு செய்ண்ட் ஜார்ஜ் கோட்டை வெளியீடு என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. அதில் வாரந்தோறும் அதிகாரிகள் நியமனம்

மாறுதல்கள், சட்ட விதிகள் முதலியவைகளே வெளியிடப்படும். இதற்கும் சமயத்திற்கும் சம்பந்தமே கிடையாது. அப்படியிருக்க இவ்வெளியீட்டைப் பற்றிச் சித்தாந்தத்தில் ஏன் எழுதவேண்டும் என்று கேட்கலாம்.

சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்த அரசியல் பத்திரிகையைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில் ஓர் அதிசயமான விளம்பரம் இதில் நெடுக தொடர்ந்து வந்து கொண்டு இருப்பதைக் கவனித்தேன். அது என்னவென்றால் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தன் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றால் இந்தப் பத்திரிகையில் வெளியிட வேண்டும், அதன் பிறகு தான் அப்பெயர் அரசியல் பகுதிகளில் செல்லக் கூடியது என்பதே. அந்த விதியின்படி பல மக்கள் அடிக்கடி கட்டணம் கட்டித் தாம் வகித்துக்கொள்ளும் புதுப்பெயர்களை இப்பத்திரிகையில் வெளியிடுகிறார்கள். சில மக்கள் தாழ்ந்த வகுப்புப் பெயர் என்று எண்ணிக்கொண்டு உயர்ந்த வகுப்புப் பெயர் வைத்துக்கொள்ளுவார்கள். கோவை வட்டத்து ஆண்டிகள் சென்ற ஒரு ஆண்டு ஆக “ஆண்டி” என்ற அடைமொழியை மாற்றி, “கவுண்டன்” என்ற பெயரை வைத்துக்கொள்ளுகிறார்கள். இவ்வித விளம்பரங்கள், நூற்றுக் கணக்காக வந்திருக்கின்றன. சிலர் தம் இளமைப் பெயர் கம்பீரமாக இல்லை என்று கருதி வாய் நிரம்பிய பெயரை வைத்துக்கொள்கிறார்கள். ‘கருப்பன்’ என்ற பெயரை மாற்றி ‘கருப்புசாமிக் கவுண்டன்’ என்று பெயர் இட்டுக் கொள்ளுகிறார்கள். திருமணம் ஆனவுடன் பெண்கள் ஆங்கில வழக்கத்தை அனுசரித்து கணவன் பெயரை வைத்து மாற்றிக் கொள்ளுகிறார்கள். இவ்வுதாரணங்களைப் பார்ப்பது இயல்பே.

ஆனால் சென்ற சில ஆண்டுகளாக மற்றொரு புதிய மாதிரி விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதுதான் எதிர்



பாராதது. இந்துவாக இருப்பவன் ஒருவன் கிறிஸ்தவ சமயம் புகுந்தவுடனே கிறிஸ்தவப் பெயர் வகித்துக்கொள்வது நமது நாட்டு வழக்கம். சீனா, ஜப்பான் முதலிய நாடுகளில் இந்த வழக்கம் இல்லை. ஆனால் இந்நாட்டிலோ உடை மாற்றுவதுபோல பெயரையும் மாற்றிக்கொள்ளுகிறார்கள். அதனை அரசியல் பத்திரிகையிலும் வெளியிடத் தொடங்கிவிட்டார்கள். இவ்வித விளம்பரங்கள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. நாகரீகம் முதிர்ந்த இந்தக் காலத்தில் பொதுவாக உயர் வகுப்புகளில் மதமாற்றம் இல்லை என்பது நமது எண்ணம். ஒதுக்கப்பட்ட வகுப்பார்களிலும் அரசியல் சமத்துவம், கோயில் நுழைவு, இவைகள் ஏற்பட்ட பிறகு மத மாற்றம் இல்லை என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் உண்மையில் அவ்வெண்ணம் சரியல்ல. அரசியல் வெளியீட்டை ஆராய்ந்து பார்த்தால் நாம் மயங்கிக் கொண்டுதான் இருக்கிறோம் என்று அறியவேண்டும்.

உதாரணமாக, ‘வெங்கையா’ என்றவன் ‘ஜேசுதாஸ்’ என்று மாற்றிக்கொண்டான். இனி சிலர் இசுலாம் சமயத்திற்கும் மாறுகிறார்கள். உதாரணமாக மதுராம்பாள் என்ற ஒரு மங்கை கதீஜாபீபீ என்று மாற்றிக்கொண்டாள். இவ்வுதாரணங்கள் அரசியல் பத்திரிகையில் இருந்தன.

மேலும், சென்ற வாரப்பத்திரிகையில் S. S. L. C. பரீட்சை தேறின மாணவ மாணவிகளின் பெயர்கள் வந்திருக்கின்றன. அதில் இந்து, கிறிஸ்தவம், முசுலிம் என்ற பாகுபாடு கூறப்பட்டுள்ளது. பெண்களில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். இந்துப் பெண்ணின் பெயரொன்று எண்ணினதும் கிறிஸ்தவளின் பெயராக இருந்தது. இதனால் சமய மாற்றம் இன்னும் குறைந்த பாடு இல்லை. எனலாம். இதற்கு நமது சைவ சிகாமணிகள் என்ன விடை கூறுகிறார்கள்.

---

# 2. வணக்கம் செய்யத்தக்க மொழி எது

பண்டைக்காலத்தில் ஆரியர்கள் வடமொழியிலும், கிறிஸ்தவர்கள் லத்தீன் மொழியிலும், முசுலிம்கள் அரபியிலும் தங்கள் தெய்வ வணக்கம் சொல்லி வந்தார்கள். மேற்கு நாடுகளில் நாகரீகமும் படிப்பும் உயர உயர இந்தக் கொள்கை மாறிவிட்டது. ஆங்கில நாட்டில் லத்தீன் மொழியில் கடவுள் வணக்கம் சொல்வதைவிட்டு ஆங்கிலத்திலே சொல்லத் தொடங்கினார்கள். அவர்கள் வேதமும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வந்துவிட்டது. ஆனால் வடஇந்தியாவிலோ எல்லாத்தெய்வ வணக்கங்களும் வடமொழியிலேயே சொல்லப்பட்டன. பௌத்த சமயம் ஏற்பட்டபோது பேசும் மொழியான பாகதத்தில் சொல்லப்பட்டது. ஆனால் பௌத்தம் மெலிவு அடைந்தபோது வடமொழியே, திரும்பவும் வழங்கப்பட்டது. நாட்டு மொழிகள் பெருகின காலத்திலும் வடமொழியே வழக்கத்தில் இருந்தது. தென்னாட்டிலோ தமிழ்தான் வணக்கத்திற்கு ஏற்ற மொழியாக இருந்தது. சங்கத்தார் காலத்தில் இருந்த வழக்கப்படி தமிழே வணக்கத்திற்கு உரிய மொழியாக இருந்தது. திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரத்தில் உள்ள தெய்வ வணக்கங்கள், சங்க நூல்களில் உள்ள வாழ்த்துப்பாக்கள், 'இவை எல்லாம் தமிழ்மொழியே. நால்வர்கள், ஆழ்வார்கள், எல்லாருமே தமிழ்ப் பாக்களாலே வணக்கம் சொன்னார்கள். சோழர்களில் விசயாலய வம்சம் தோன்றின பிறகுதான் வடமொழி மயக்கம் இங்கு வரத் தொடங்கியது. கோயில்களில் வடமொழி அருச்சனைகளுக்கு முதல் படியும் தேவாராதிகளுக்கு இரண்டாம் படியும் கிடைத்தன. அப்போதுதான் வடமொழித் துதிகள்



தென்னாடு புகுந்தன. இந்த விபரீத மாறுதல் இன்றும்கூட நடந்து வருகின்றது. சில கோயில்களிலே தமிழ்த்துதி அடியோடு போய்விட்டது.

இது இவ்வாறு இருக்க, பல சைவ மகாநாடுகளில் இதைக் குறித்து மக்கள் வாதாடத் தொடங்கினார்கள். வடமொழி அர்ச்சனைகளைத் தமிழிலே செய்யவேண்டும் என்று பேசினார்கள். சிலர் வடமொழி 108 பெயர்களைத் தமிழில் மொழிபெயர்க்கலாம் என்றார்கள். அப்படிச் செய்தால் விபரீத ஒலிதான் ஏற்படுமே ஒழிய, யாதொரு நன்மையும் உண்டாகாது. அதற்கு மாறாக நமது முன்னோர்கள் கொண்ட வழியையே நாம் கைப்பிடிக்க வேண்டும். "நாலுபேர் சென்ற வழியே செல்" என்பது தமிழ்ப் பழமொழி. நான்கு பேர் நால்வர் பெருமக்களே. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் என்ற பெருமக்கள் கடவுளைத் தமிழிலேயே வணங்கினார்கள். நாமும் அவர்கள் காட்டிய வழியிலேயே செல்லுவோமாக! நமக்குப் புதிதாகத் தனி வணக்கச் செய்யுள் வேண்டாம். அவர்கள் அருளி வைத்துள்ள சொற்களே சரியானவை அல்லவா? ஆலயங்களில் சொல்லும் தேவாரங்களும் அவர்கள் மொழிகளே.

நமது ஆலய பரிபாலகர்கள் இந்த முறையில் சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை. அவ்விதம் சிரத்தை எடுத்துக்கொள்வதற்கு ஆற்றலும் தீரமும் இல்லை. ஆனால் ஒருவர்தான் இந்தப் பெரிய தமிழ்நாட்டில் அவ்விதத் தீரமும் வீரமும் ஊக்கமும் எடுத்துக்கொண்டவர். தூத்துக்குடிச் சங்கர ராமேசுவரப் பெருமான் கோயில் ஆணையாளராக இத்தனைநாள் இருந்து அக்கோயிலைப் பரிபாலித்த திரு. முத்துக்குமாரசாமிப் பிள்ளை அவர்கள் ஒருவரே தன் கோயிலிலே தமிழ்மொழியிலேயே அருச்சனை செய்வித்தார். ஆதிசைவக் குருக்கள்மாரும் இக்கட்டளைக்கு இணங்கியே

தம் தொழிலைச் செய்தார்கள். "நமசிவாய வாழ்க" என்ற சிவ புராண அகவலும், "நான்முகன் முதலா" என்ற போற்றித் திருவகவலும் 108-க்குப் பதிலாக ஓதப்பட்டன. இவ்வித மாறுதல் மிகவும் புனிதமானதும் போற்றத் தக்கதும் ஆகும். இதனைச் செய்ய எந்தப் படித்த ஆணையாளனும் தைரியம் கொள்ளவில்லை. சமீபத்தில் திரு. முத்துக்குமாரசாமி பிள்ளைவர்களை வேறு இடத்திற்கு ஆணையாளராக மாற்றினபோது தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையார் ஒரு நல்வாழ்த்து இதழ் படித்துத் தந்ததில் இந்த வீரச் செயலைப் புகழ்ந்து பேசிப் பாராட்டியிருக்கிறார்கள். இதனை வேறு ஆணையாளர்கள் ஆராய்வார்களாக!

---

5. கலைப்பகுதி

# சைவச்சிற்பமோ சமணச்சிற்பமோ

(கோவைகிழார்)

செங்கல்பட்டு வட்டத்தில் திருக்கழுக்குன்றத்திற்கு கிழக்கே கடற்கரையோரமாக மகாபலிபுரம் என்று இப்போது வழங்கும் மாமல்லபுரத்தில் அற்புதமான பல்லவ சிற்பங்கள் நிரம்ப உண்டு. அச்சிற்பங்களிலே ஒன்று அருச்சுனன் தபசு என்று பொதுவாக வழங்கும் ஒரு சிற்பம். அது தலசயனப் பெருமாள் ஆலயத்திற்குப் பின்னால் இருக்கும் இரண்டு பெரிய பாறைகளில் செதுக்கப்பட்டிருக்கும் அற்புதமான சிற்பம் ஆகும். இப்பாறைகள் ஒட்டினாற்போல நீளமாகப் படுத்துக்கொண்டிருக்கின்றன. இரண்டும் சேர்ந்திருக்கும் இடம் ஒரு பிளவுபோல சிறிது ஆழ்ந்து இருக்கிறது. இவ்விரு பாறைகளும் 96 அடி நீளமும் 43 அடி உயரமும் கொண்டிருக்கின்றன. இவைகள் சுவர் கட்டினாற்போல கிழக்கு நோக்கி இருக்கின்றன. இச்சுவரின் பரப்பு முழுதும் நூற்றுக் கணக்கான உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்க்கும் எவருக்கும் அச்சிற்பங்கள் முழுதும் ஒரு கதை அல்லது சரிதத்தைக் குறிக்கிறது என்று எளிதாகத் தோன்றும். இச்சித்திரத்தின் நடுவில் ஒரு புருடன் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்கிறாற்போலவும் அருகிலே நான்கு திருக்கைகளோடு மற்றொரு மூர்த்தி நிற்பதைப்போலவும் சித்திரிக்கப்பட்டுள்ளதால் இது அருச்சுனன் தவசு செய்யும் போது சிவபிரான் மூகாசுரனைக் கொன்று அருச்சுனனுக்கு பாசுபதாஸ்திரம் கொடுத்த சரிதத்தை விளக்குகிறது என்று இதுவரை எண்ணப்பட்டது. பல வெளியீடுகளிலும் இச்சரிதமே கூறப்பட்டுள்ளது. இது சைவ சார்பான கதை. வேறு சிலர் இது பகிரதன் தவசு என்றும் கங்கையை நிலவுலகத்திற்குக் கொண்டு வருவதற்காகச், சிவபிரானை நோக்கி அவன் தவம் புரிந்ததென்றும் சொல்லுவர். மூகாசுரன் இல்லாததினால் இச்சரிதம் கூறப்படுகிறது. வேறு சிலர் தவம் செய்யும் உருவத்திற்குக்கீழே சிறு கோயிலும், அதில் திருமால் உருவமும் இருப்பதைக் கொண்டு இச்சிற்பம் திருமாலுக்கும் சிவபிரானுக்கும் உள்ள ஏற்றத் தாழ்ச்சி நிரூபிக்கும் சரிதம் என்பர். வேறு சிலர் இது நாகர் வழிபாட்டை நிரூபிக்கிறதென்பர். ஏனெனில் இதில் நாகர் உருவங்கள் பல உள்ளன. அவைகள் பிளவுபட்ட இடத்தில் இருக்கின்றன. இன்னும் சிலர் இது தேவலோகத்தின் காட்சி என்பர். இவைகள் எவற்றிற்கும் தகுந்த காரணங்கள் முற்றிலும் இருப்பதாகத் தெரியவில்லை. சில காரணங்கள் அனுகூலமாகவும் சில பிரதிகூலமாகவும் இருக்கின்றன.

இனி, சமீப காலத்தில் புதிதாக ஒரு கருத்தை திரு. M. S. வேங்கடசாமி அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

அது சமண சம்பந்தமான ஒரு சரிதத்தை ஒட்டி சித்தரிக்கப்
பட்ட சிற்பம் என்பதாகும். இச்சரிதம் இரண்டாவது
" தீர்த்தங்கரர் " காலத்தில் இருந்த சகர சக்கரவர்த்தி
யினுடைய கதை என்று அப்பெரியார் கூறுகின்றனர். அதற்கு
அடியிற்கண்ட காரணங்கள் கூறப்படுகின்றன. அன்பர்கள்
இக்கருத்து எத்தனைப் பொருத்தமானது என்று ஆராயலாம்.

இரண்டாவது தீர்த்தங்கரரின் பெயர் அஜிதநாதர். அவர்
காலத்தில் இருந்த சக்கரவர்த்தி சகரன். அவன் சரிதம்
ஸ்ரீபுராணம், ஜீவசம்போதனம், திரிசஷ்டி சதக புருஷசரிதம்
என்ற நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

அக்கதை அடியிற்கண்டபடி உள்ளது. சகரன் வனத்
திற்குச் சென்று தவம் புரிந்தான். ஓர் அமரன் தோன்றி
அவனுக்குக் கேட்ட வரம் அளித்தான். அவ்வரமானது
ஒன்பது நிதிகளைப் பெறுவதே. இந்நிதிகளை 9
9 யக்ஷர்களும் காத்து வந்தனர். சகரனுடைய 'மக்கள் திக்கு
விஜயம் செய்துகொண்டு கயிலை அடைந்தனர். அங்கே
ரிஷப தேவருடைய ஆலயத்தைக் கண்டனர். அவ்வாலயத்தைக்
காப்பதற்காக அதனைச்சுற்றி ஓர் அகழி வெட்டினார்கள்.
தண்டரத்னம் என்ற ஆயுதத்தால் அவர்கள் தோண்டினார்கள்.
அந்த ஆயுதம் மிகச் சக்தி வாய்ந்தது. அது பாதாளம் வரை
சென்று நாகர்களை இம்சித்தது. மேலும் அவர்கள் கங்கையைக்
கொண்டு அந்த அகழியை நிரப்பினர். கங்கை அந்த
அகழியை நிரப்பினதன்றி பாதாள உலகத்தையே பிர
வாகிக்கத் தொடங்கியது. அதனால் நாகருடைய அரசன்
கோபித்துக்கொண்டு அவ்விடத்திற்கு வந்து சகரன் மக்களை
கோபாக்கினியில் எரித்துவிட்டான்.

இந்தக் கதைதான் மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்ட
தாம். தவம் செய்யும் உருவம் அருச்சுனன் அல்ல, சகரன்
ஆகும். சிவபிரான் என்று கூறும் உருவம் அவனுக்கு வரம்



அளித்த அமரன். 8 ஜதை ஆண் பெண் உருவங்கள் எட்டு
நிதிகளைக் காக்கும் யக்ஷயக்ஷிணிகள். மற்ற எட்டும் பூதங்கள்.
ஒன்பாவது நிதி வலதுபுறத்தில் செதுக்கப்பட்டுள்ளது. மான்,
சிங்கம் முதலிய உருவங்கள் அவ்விடம் வனம் என்று காட்டு
கின்றன. இடதுபக்கத்தில் 9-ம் நிதி சர்வரத்னம், ஜீவரத்னம்
அஜிவரத்னம் என்ற பொருள்களை யக்ஷர்கள் காக்கிறார்கள்.
கீழே செதுக்கப்பட்ட கோயில் கயிலாயத்தில் உள்ள ரிஷப
தேவர் கோயில். அதைப் பரதன் கட்டினான். கோயிலுக்கு
முன்னால் தொழுதுகொண்டிருக்கும் முனிவர் பரதன். கோயி
லுக்குச் சுற்றியுள்ள பள்ளம் சகரர் வெட்டிய அகழி.
அருகிலே வெளிக் கிளம்பும் நாகர்கள் நாகலோகத்து அரசன்
ஜவலனப்ரமனும் அவனுடைய தேவியும் ஆவர். மூன்று
தலையில்லா முண்டங்கள் இறந்துபோன சகரமக்கள். அருகில்
உள்ள குடம், அவர்கள் சாம்பலைப் போட்ட குடம். அருகில்
தண்டரத்னம் என்ற ஆயுதம் இருக்கின்றது. சமண நூலில்
நாக அரசனுடைய கோபத்தை வெறிபிடித்த யானைக்கு
உவமிக்கப்பட்டுள்ளது. அதை விளக்க யானைகள் செதுக்கப்
பட்டன போலும். இந்த விதமாக இச்சரிதத்தில் கண்ட
விவரங்கள் முழுதும் இந்தக் கற்சிற்பப் படத்தில் காணலாம்.

இனி தமிழ் இலக்கியத்தில் பல்லவ அரசன் மகேந்திர
வர்மன் முதலில் சமணனாக இருந்தான், என்றும் அவன் 7-ம்
நூற்றாண்டில் அப்பரால் சைவத்திற்குத் திருப்பப்பட்டான்
என்றும் அறிகிறோம். இந்த சிற்பத்தை மகேந்திரவர்மன்
சமண சமயத்தில் திகழ்ந்திருந்தபோது சித்தரித்திருக்க
வேண்டும் என்று சொல்ல முடியும் அல்லவா? ஆகவே
இச்சிற்பம் சமண கதையை அறிவிக்கிறது என்று அவ்
வறிஞர் கூறுகிறார்.

இச்சிற்பம் சமணக்கதையை விவரித்த போதிலும் சைவ
சமயத்தின் சரித்திர வரலாற்றையும் நிரூபிக்கிறது என்று

அறியவேண்டும். மகேந்திரப் பல்லவன் காலத்தில்தான்
தென்னாட்டில் உள்ள பல குடை மண்டபங்களும் ஆக்கப்
பட்டன. அவைகளில் சிறந்தவை பல்லாவரம், வல்லம்,
மாமண்டூர், மகேந்திரவாடி, தளவானூர், சீயமங்கலம்,
மண்டகப்பட்டு, திரிச்சிக்குகைகள், நாமக்கல், ஆகும்.
இவ்வரசனை முந்தி சமணனாக இருந்தான். பிறகு அப்பர்
சுவாமிகளால் சைவன் ஆக்கப்பெற்றான். சமணனாக இருந்த
போதும் அப்பரே அவனுக்குச் சமணசமய ஆசாரியராகத்
தருமசேனர் என்ற பெயருடன் விளங்கினார். ஆகவே
சமண இலக்கியத்திலும் வல்லவராக இருந்த அப்பர் சுவாமி
களின் விருப்பப்படியே அப்பல்லவ மன்னன் இந்தச் சகர
சரிதையை கல்லில் உருவப்படுத்தியிருக்கலாம். அச்சிற்பம்
வெகு உருக்கமாகச் சரிதத்தை காட்டுகிறது. இதனை
இயற்றிய சிற்பி மிகச் சிறந்த சிற்பியாக இருக்கவேண்டும்.
நாகராஜனும் நாகினியும் வெளிக்கிளம்புவதற்கு ஏற்றபடி
பாறைகளின் நடுவே உள்ள பிளவு போன்ற பகுதியைப் பயன்
படுத்திக்கொண்டதே அவனுடைய நிபுணத்தனத்தைக் காட்டு
கிறது. ஒரு பூனை தவம் செய்கிறாற்போல சித்திரித்திருப்பதும்
நோக்கத் தக்கது. அக்காலத்திலும் ஆஷாட பூதிகள் இருந்
தார்போலும். 7-ம் நூற்றாண்டில் சமணத்தைச் சைவம்
வெற்றிகொண்ட சரிதப்பகுதியை இச்சித்திரமும் இதனருகில்
உள்ள சைவ மண்டபங்களும் நிரூபிக்கின்றன அல்லவா!

---

'உண்டி சுருங்கில் உபாயம் பலவுள'

—திருமந்திரம் - 735.

**இது தற்காலத்திற்கு ஏற்றதே!**

6\. கவிப்பகுதி

## பாழறை பள்ளியறையான விந்தை

அவர் ஒரு பெரிய பணக்காரர்; பணக்காரர்களை இலட்சாதிபதிகள் என்பது முன்னாள் வழக்கம். ஆனால் கறுப்பு வாணிகம் வந்தபின் இப்போது கோடீசுவரன் என்றால்தான் ஒருவகையில் பேர் ஆசை அமைதிப்படும். சனீசுவரன் இராவணேசுவரன் என்பதுபோல இவர்களுக்கும் கெடுதியிலே மேம்பாடு பற்றி வழங்குவது என்று எண்ணி விடாதீர்கள். நான் இப்போது பேசுகிறவர் ஒரு கோடீசுவரர்தான்; ஒன்றல்ல; ஒன்பது கோடீசுவரர்.

பெரும் பணக்காரர் வீடுகள்; அல்ல, மாளிகைகள்: இவைகளை எண்ணும்போதே மக்களுடைய மனதில், வெளியே பல நிறமுடைய வகை வகையான ஆயின் ஒன்றுக்கும் உதவாத-செடிகள், கொடிகள், மரங்கள், பூண்டுகள்: உள்ளே புலி, கரடி, காட்டெருமை, கடமான் முதலியவைகள் இவற்றின் கொம்பு, எலும்பு, நகம், தோல், கால், மயிர் இவைகளையெல்லாம் அழகுபடுத்தி வைத்த அறைகள் என்றெல்லாம் நினைவு வரும். ஆனால் ஏழைகளின் வீடுகளில் அதிகமானவை அறைகள் இருப்பதற்கில்லை. உள்ளது ஒன்று அல்லது இரண்டு அறைகள். அவை மேலே சொன்ன பொருள்களன்றிக் குப்பைகள் நிறைந்த இடம் என்று நினைப்பது நமது வழக்கம். இவர்களின் வீடுகளின் முற்றம் நாயும் கோழியும் சுரைக்கொடியும் என்றிப்படி தாறுமாறாய் அசுத்தம் நிறைந்தன என்றும் காண்பது நமது மனக்கண்.

"கூருகிர் மெல்லடியளகின் குறும்பார்ப்புக் குழுச்சுழலும்
வார்பயின் முன்றிலினின்ற வள்ளுகிர் நாய்த்துள்ளுபறழ்

அதுவரை தெரியாத இன்னுமொரு செய்தியும் கண்டார். வெளியறைபோலவே தனக்குள்ளே அவர் இருக்கிற கள்ள அறை ஒன்று உண்டு என்பதையும் கண்டார். அந்த நடுவுக்கு நடுவாகிய உள்ளறையையே பள்ளியறையாக்கி அந்தப் பரமோபகாரியையும் அவரது மனைவியாரையும் அதில் இருக்க வைக்க எண்ணினார்; ஆனால் வெளியறைபோலவே-ஏன்? அதைவிட அதிகமாக நுண்ணிய கள்ளத்தனமான குப்பை கூளங்களும் துஷ்ட செந்துக்களும் அதில் தாம் அடைத்து வைத்து அதுவரை நல்லதென்று மகிழ்ந்து பார்த்துக்கொண் டிருந்ததையும் அன்று கண்டார். அந்த அறை அந்தப் பெரிய வர் இருக்கத் தகாதென்றும்; அதிலும் பார்க்க அவர் மனைவி யாருடன் ஒரு சிறிதும் மகிழ்ந்து தங்கத் தகாதென்றும் உணர்ந்தார்; (பெண்களை மரியாதை செய்து உபசரிக்கும் வழக்கம் நம்மிடமிருந்து தானே வெளிநாட்டார்கள் கற்றுக் கொண்டு நம்மை இகழ முன் வருகிறார்கள்;) தாம் பிறந்த நாளாக அந்த அறை சுத்தப்படுத்தாமலிருந்தது என்பதையும் கண்டார்; கண்டவுடனே அந்தப் பெரியவர் கருணையோடு மனைவியாருடனே அங்கு எழுந்தருளியிருக்கும்படி அதைச் சுத்தப்படுத்தத் தொடங்கினார். அதில் கட்டியிருந்த பொல்லாத ஐந்து கொடிய கடாக்களையும் அவிழ்த்துத் துரத்தினார்; குப்பைக்குவியல்களைக் கூட்டி எடுத்து அன்பினாலே மெழு கினார்; புகைபிடித்த இருண்ட விளக்கை நீக்கி அரு ளுடன் கூடிய விளக்கு ஏற்றினார்; மெய்யாகிய விதானம் விரித்தார்; அதினடுவே பூமணங்கமழும் கமலாசனம் வைத்தார். இவ்வாறு அந்தப் பாழறையை அழகிய பள்ளி யறையாக்கி, அந்தப் பெரியவரை நோக்கி "ஐயா! நீர் உமது தேவியாரையும் உடன்கொண்டு இந்தப் பள்ளியறையில் மகிழ்ந்து இருங்கள்!" என்று வேண்டிக்கொண்டார்; குப்பை கள் நிறைந்திருந்த அந்தக் காலத்திலேகூடத் தமது பெருந்





தன்மையினாலே மறைந்து நின்று உதவிய அப்பெரியவர் இப்போது மகிழ்ந்து அங்கே தேவியாருடன் எழுந்தருளி யிருந்தார் என்று சொல்லவும் வேண்டுமோ?

அந்தப் பணக்காரர் யார்? பெரியவர் யார்? பாழறை எது? அது பள்ளியறையான விதம் எப்படி? என்று யோசியுங் கள். பணக்காரராவார் பட்டினத்தடிகள்; பெரியவர் திருக் கழுமலவாணர்; பாழறையே சிந்தை; அது பள்ளியறையான விந்தை காண இந்தப் பாட்டைப் படியுங்கள்.

கருமுதற் றொடங்கிப் பெருநா ளெல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதி னிகழ்ந்து போக்கிப், பொருதிறல்
மையிருள் நிறத்து மதனுடை யடுசினத்(து)
ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த்(து) அகற்றி
அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப விருளைத் துரந்து முன்புற
மெய்யெனும் விதானம் விரித்து, நொய்ய
கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தவென் சிந்தைப்
பாழறை யுனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி(சு)
எந்தைநீ யிருக்க விட்டனன்; இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதி வெள்ளத்து
நுரையெனச் சிதறி யிருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கு மாருதங் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
கால மிதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவ ருய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக!
அருணனி காக்கும் பிரளய விடங்க! நின்

செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையு முடனே கொண்டிங்(கு)
எழுந்தரு ளத்தகுமெம்பெரு மானே !

திருக்கழுமல மும்மணிக்கோவை (4)

குறிப்பு : காமம், கோபம், பொய் என்ற தீக்குணங்களும், மனத்துள் நிறைந்தன ; ஐம்புலன்களும் அத்தீக்குணங்களுடன் கூடி உலக வியாபாரங்களில் உயிர்ப் புகுத்தி இருண்ட மயக்கத் தில் தீவினைகளையே பெருக்கிச் சிந்தையைப் பாழ்படுத்தின ; அவ்வாறு சிந்தை பாழாய்க்கிடந்தது ; அவற்றால் தேடப் பட்ட பொய்யாய செல்வங்களே உயிரைத் தம்முட் சிக்க வைத்தன. அதனடுவுள்ளே இறைவர் விளங்க இடமில்லை ; இவற்றைத் தூய்மையாக்கிய பின்னரே சிவன் அங்கு விளங்கி யிருப்பன் என்பது கருத்து. இவ்வுண்மை கண்டவுடன் நவ கோடி செல்வங்களையும் ஒருகணத்தில் உதறி எறிந்த தவராச சிங்கம் நமது பட்டினத்து அடிகளாவார். இந்நாளில் கறுப்பு வாணிபமே எங்கும் பரவி எவ்வாறேனும் பொருளீட் டலே உறுபயனாகக் கருதி உழலும் உலகம் இவ்வுண்மைகளை நினைக்குமாயின் பயன்பெறும். உலகமும் உய்யும்.

" சிவக்கவிமணி "

---

## 2. " ஏ ழி ல் "

(வித்துவான் முத்து சு. மாணிக்க வாசகனார்)

திருவாசகத்துள் திருவெம்பாவையுளொன்றான " கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும் ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கெங்கும் " என்னுந் தொடக்கத்துத் திருப்பாட்டில்



உள்ள " ஏழில் " என்னும் பெயர்ப் பொருளாராய்ச்சியே இக்கட்டுரையின் உட்கோளாகும்.

உண்மைப் பொருளறிய வழியின்றி இதன் பொருள் யாதோ என ஐயுறும் நிலையில் வழக்காறற்ற பழந்தமிழ்ச் சொற்களுள் ஏழிலும்ஒன்று. திருவாசகவுரைகளுட்சில'ஏழில்' என்பதன் மெய்ப்பொருளைக் குறிக்கவில்லை. ' ஏழ் ' என்பதை ஏழிசைக்கு ஆகுபெயராகவும் ' இல் ' என்பதை உவமப் பொருள் குறிக்கும் உருபாகவும் கொண்டு ' ஏழிசைபோல ' எனப் பொருளெழுதினார்ஒருவர். 'சிலம்புங் குருகு' என்றிருப் பதைச் ' சிலம்பும் ஏழில் ' என அநுவபித்தார் ஒருவர். எவரும் அத்திருப்பாட்டின் பொருளமைதியையும் தொட ரமைதியையும் அறிந்து குறித்திலர்.

அத்திருவாசகத் தொடர் " காளியாட ஆடுங்கடவுள் ", " இந்திரதனுவும் வணங்க வணங்கும் இணைப்புருவக்கொடி ", " கதிர்மதி ஒளிர ஒளிரும் ஒளியவன் " என்னுந் தொடர்களை யொத்த அமைப்புடையவையாகும். ஆயினும் இத்தொடர்கள் பொருட் போக்கில் அதை ஒவ்வாதனவே. கோழியும் குருகும் சிலம்புவன. ஏழிலும் சங்கும் இயம்புவன. சிலம்புதலாகிய வினைக்குக் கோழியும் குருகும் முதலாதல் போன்று இயம்பு தலாகிய வினைக்கு ஏழிலும் சங்கும் முதலாம். ஆகவே வினை முதலாயுள்ள இரண்டனுள் ஒன்றை உவமமாக்குதல் வழுவெனல் நன்கு புலப்படும். படவே ' ஏழிசைபோல ' எனப்பொருள் கொள்ளுதல் பொருந்தாது என்க.

' ஏழில் ' என்பது ' ஏழ் ' என்னும் நிறுத்த சொல்லும் ' இல் ' என்னும் குறித்து வருகிளவியும் புணர்ந்த எண்ணலள வைப் பண்புத்தொகை நிலைத்தொடர், எழுமை என்னும் பண்பும் இல் என்னும் பண்பியும் இயைய ஒரு சொற்றன்மை யடைந்த அத்தொடர் ' இயம்ப ' என்னும் பயனிலைக்கு எழு

வாயாகி நின்றது. மார்கழியில், வைகறைப் பொழுதில், கோழியும் குருகும் சிலம்புதலைக் குறித்தருளிய அடிகள் வழிலும் சங்கும் இயம்புதலை உடனுணர்த்தியவாற்றை எளிதின் அறியலாம். 'வழில் இயம்ப' என்றதாலும் அதையொட்டி வெண்சங்கு இயம்பும் என்றதாலும் 'வழில்' என்பது இயங்களுள் ஒன்றெனத் தெளிவுறும். கோழியும் குருகும் உயிர்ப்பொருள்கள். வழிலும் சங்கும் உயிரில் பொருள்கள். (சங்கும் இயமாதற்குமுன் உயிர்ப்பொருள்) தாமே சிலம்புவனவற்றை முதற்கண் கூறி, பிறரால் இயம்பப் படும் வழிலையும் சங்கினையும் அடுத்துவைத்த ஆசிரியர் கருத்தை ஆராய்தல் நன்று. சங்கொடு சேர்த்துக் குறிக்கப் பட்ட 'வழில்' ஓரியம் எனல் இனிது விளங்கும். விளங்கவே 'வழில்' என்னும் இயம் யாது என்று ஆராயப்படும். அத்தகைய ஆராய்ச்சியே ஈண்டு மேற்கொள்ளத் தக்கது.

'வழில்' என்பது பண்டு வழக்கத்திலிருந்தது. அதுவழக்கு வீழ்ந்தபின் பொருள் விளக்கமின்றிப் போயிற்று. போகவே அவரவர் கருதியவாறே பொருளெழுதிவிட்டனர். பரிபாடலில் எட்டாவது செய்யுளுள் 22-வதடிக்கண் வரும் " வழ்புழை ஐம்புழையாழிசை " என்பதையும் அதனுரையையும் இங்கு நோக்குதல் வேண்டும். குழல் வகையுள் எழுதுளை ஐந்துளை என்றிரண்டு கூறப்படுகின்றன. அதனைச் சிலப்பதிகார வுரையில் அறியலாம். 'நாகசுரம்' என்றதோரியம் தமிழ கத்தில் மிக்க சிறப்புடையதாகப் போற்றப் பெற்றுவருகின்றது. அதிற் பன்னிரு துளையுள. அவற்றுள் அடியில் இருபாலும் இவ்விரு துளையும் வழாவது துளைக்குச் சிறிது கீழில் ஒரு துளையும் ஆக ஐந்து துளைகள் விரலால் தொடப்படலின்றி வாளா நிற்கின்றன. அவற்றைப் 'பிரமசுரம்' என்று வழங்குவர். அவை இன்றேல், இன்னிசை பிறவாது என்றும் அறிஞர் சொல்வர். அவ்வியம் தமிழகத்தில் தொன்மையது.



அதற்குத் தமிழில் ஏதேனும் ஒரு பெயர் இருந்தேயாதல் வேண்டும். 'நாகசுரம்' என்னும் வடமொழிப் பெயர் ஏற்படுவதன்முன் அத்தமிழ்ப் பெயர் வழக்கத்தில் இருந்து பின் வீழ்ந்ததாதல் வேண்டும். அஃதே 'வழில்' என்பது. அறிஞர் இன்னும் இதுபற்றி ஆராய்தல் நன்றே.

---

7. ஆராய்ச்சிப்பகுதி

# இரு பல்லவ அடியார்கள்

[துடிசைகிழார் - அ. சிதம்பரனார்]

## பல்லவர் குடும்பம்—கிளை I

(தொடர்ச்சி)

1. பப்பசாமி (225—250 A. D.)
2. காஞ்சி சிவகந்த வர்மன் I (250—275 A. D.)
3. புத்த வர்மன் - சாருதேவி (275—300 A. D.)
4. புத்தியங்காரன் (300—325 A. D.)
5. விஷ்ணுகோபன் I (325—350 A. D.)
6. கந்த வர்மன் II (350—375 A. D.)
7. காலபாரதி குமாரவிஷ்ணு I (375—400 A. D.)

8. புத்த வர்மன் II (400—425 A. D.)
9. கந்த வர்மன் III @ சேது பல்லவன்

10. குமார விஷ்ணு II
(425—450 A. D.)

11. வீரவர்மன் @ வீர கூர்ச்சன்

12. விஜயகந்தவர்மன் IV
@ கந்த சிஷ்யன்
(450—475 A.D.)

13. சிம்மவர்மன் I (475—500 A.D.)

14. யுவமகாராய விஷ்ணுகோபன் II

15. கந்த வர்மன் V
@ சந்ததண்டு (500—525 A.D.)

16. சிம்ம வர்மன் II

17. நந்தி வர்மன் I (525—550 A.D.)

18. விஷ்ணுகோபன் III

சிம்ம வர்மன் III (550—575 A. D.)

[இவனைச் சில சரித்திரக்காரர்கள் முதலாம் நந்தி வர்மனுடைய மகன் என்றும் மூன்றும் விஷ்ணுகோபனுடைய மகன் என்றும் கூறுகிறார்கள்.]

குமார விஷ்ணு III

புத்த வர்மன்

குமார விஷ்ணு IV

சிம்ம வர்மன் III (550 - 575 A. D.) (கிளை II)

சிம்மவிஷ்ணு @
அவனிசிம்ம போத்தரையன்
(575—600 A. D.)

மகேந்திர வர்மன் (600—625 A. D.)

பீம வர்மன்

பூத வர்மன்



நரசிம்ம வர்மன் I (625—650 A, D.)

மகேந்திர வர்மன் II
@
ஐயடிகள் காடவர்கோன் (650—655 A. D.)

பாரமேச்வர வர்மன் I (655—685 A. D.)

காடவர்கோன் கழற்சிங்கன்
@
இராச சிம்மன்
@
நரசிம்ம வர்மன் II (685—710 A.D.)
= சங்கா (பட்டமகிஷி)
= இரங்க பதாகை

பாமேச்சுர வர்மன் II (710—717

சித்திரமாயன் (வைப்பு மகன்)

மகேந்திர வர்மன் III
(இளவயதில் மாணம்)

ஆதித்த வர்மன்

கோவிந்த வர்மன்

இரணிய வர்மன்

நந்தி வர்மன் II @ பல்லவ மல்லன்
= ரேவ @ மாரன்பாவை
(717—775 A.D.)

தந்தி வர்மன் @ வைரமேகன்
(775—825 A. D.)
= அக்களகியம்மடி

தெள்ளாறு எறிந்த நந்தி வர்மன் III
= மாரன் பாவை
(825—854 A. D.)

நிருபதுங்க வர்மன் (854—875)

விஜயகம்ப வர்மன் I

அபராஜிதன் (875—893)

கம்ப வர்மன் II (893—910) (உக்கல் கட்வெட்டு)

வைரமேகன்

[தொடரும்]

---

## 8. விரிவுரைப் பகுதி

# நாய்த் தன்மை

(புஷ்பம்மாள் நடராசன்)

மாணிக்கவாசகர் உயிர்களை நாயாகக் கூறுவானேன் என்
பதைச் சிறிது சிந்திப்போம்.

நாய் நன்றியுள்ள மிருகம் என்றும் அறிவுள்ள மிருகம்
என்றும் அறிவோம். ஆயினும் எல்லாநாய்களும் ஒரே தன்மை
யுடையனவல்ல. நாய்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
ஒன்று சிறந்த நாய் அல்லது அறிவுள்ள நாய். மற்றொன்று
கடை நாய் அல்லது அறிவில்லாத நாய்.

அறிவுள்ள நாய் தனது எசமானன் எச்சில் சோற்றை
யிட்டாலும் உண்டு நன்றியுடன் அவன் காலடியில் கிடக்கும்.
அவன் சொல்லியபடியெல்லாம் செய்யும். அவன் அடித்து
விரட்டினாலும் அவனைவிட்டுப்பிரிய ஒருப்படாது. தனக்கு
உணவுகொடுத்துக் காப்பாற்றுபவனை உயிருள்ளளவும் மற
வாது. அவன் வீட்டைப் பத்திரமாகக் காவல்புரியும்.

ஆனால் கடைநாயோ ஆகாரம் கிடைக்கும்போது வாலை
ஆட்டித் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இல்லா
விடில் வேறு ஆகாரம் கிடைக்கும் வழியைத் தேடித்திரிகிறது.



மக்களிலும் ஒருசிலர் இறைவன் உயிர்கள் மாட்டுக்
கருணைகொண்டு நல்கியுள்ள நன்மைகளை நினைந்து இன்பம்
வந்தகாலத்தும், துன்பம் வந்தகாலத்தும் அவனை மறவாது
வழிபடுவர். அவன் ஆணை வழி நிற்பர்.

ஆனால் பெரும்பாலோர் காரியம் ஆகவேண்டிய காலத்தில்
கடவுளை நினைப்பதைத்தவிர, மற்றச் சமயங்களில் அவன்
செய்யும் அளவிறந்த நன்மைகளை மறந்து விடுகின்றனர்.

கடவுளுடைய திருவருளைக் கண நேரமும் மறக்கப்
பொறுத மணிவாசகர், அவன் கருணையின் திறத்திற்குத் தனது
நன்றி ஈடாகாது என்று கருதி தன்னைத்தானே கடைநாய், அறி
விலாநாய், ஊர்நாய், ஆதமிலிநாய், கல்லாநாய், சிறுநாய், நாயிற்
கடையாய நாய் என்று பலவாறு கூறிக்கொள்கிறார்.

ஒருகனவான் ஒருசிறு நாய் சேற்றிலும், குப்பையிலும்
புரள்வதைக் கவனிக்கிறான். அதைப் பிடித்துக்கொண்டு வரச்
செய்து குளிப்பாட்டி உணவு கொடுத்து அன்பாக வைத்துக்
கொள்கிறான். ஆனால்,

“ குக்கலைப்பிடித்து நாய்க் கூட்டிலடைத்து
மிக்கதோர் மஞ்சள்பூசி மிகுமணஞ் செய்திட்டாலும்
குக்கலே குக்கலன்றி குணந்தனிற் பிறிதாமோ ?”

எத்தனைதரம் குளிப்பாட்டி வைத்த போதிலும் சேற்றிலே
விழுகிறது. என்றாலும் எசமானன் அதனை அப்படியே விட்டு
விடுவதில்லை. திரும்பவும் பிடித்துச் சுத்தம்செய்து ஆகாரம்
கொடுக்கிறான். அவன் மனைவி அதற்கு விளையாடவும், படுத்
துக்கொள்ளவும் இடம் அமைத்துக் கொடுக்கின்றாள். உயர்ந்த
ஆதனத்தில் தன்னுடைய பக்கத்தில் வைத்து அன்பாகக்
கொஞ்சுகிறாள். தாங்கள் வெளியே செல்லும்போது வண்டி
யிலோ, ‘காரி’லோ, தங்களுடன் செல்லமாக அழைத்துச்
செல்கிறார்கள். ஆயினும் நாய் அவர்கள் கண்ணெதிரே

மீண்டும் சேற்றில் விழுமாயின் சவுக்கினால் அடிக்கிறார்கள். சங்கிலி அல்லது கயிற்றினாலே பிணைத்துத் தூணிலே கட்டி விடுகிறார்கள்.

அங்ஙனமே இறைவனும்,

" வினையிலே கிடந்தேனைப்புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடனென்பாய் போல
இனையனானென்றுன்னை அறிவித்து "

என்றபடி உயிர்களை ஆட்கொள்கிறான். ஆனால் உயிர் அவனைத் தெரிந்துகொண்டு போற்றி அன்பு செய்யாது மீண்டும் மீண்டும் ஐம்புலனாகிய சேற்றிலே அழுந்துகிறது. எல்லையில்லாத கருணையுடையவன் பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும் மெய்யாக் கருதிக்கிடக்கும் உயிரினைத் தானே வந்து தலையளித்து ஆட்கொள்கிறான். வெறுப்பனவே செய்யும் மக்களின் சிறுமையைத் தனது பெருமையினால் பொறுத்துக் கொள்கிறான். நாம் எத்தனை தரம் பிழைத்தபோதிலும் அவனது பேரருள் நமது பிழைகளைப் பொறுத்து,

" பொற்றவிசு நாய்க்கிடுமாறும் "

" நன்றாக வைத்தென்னை நாய்ச்சிவிகை ஏற்றுவித்தவாறும் "

நம்மை மேலான இன்ப நிலைக்கு உயர்த்த முந்துகிறது.

பின்னும் " நெடுந்தகை நீ என்னை ஆட்கொள்ள யான் ஐம்புலன் கொண்டு விடுந்தகையேன் " என்றவாறு உயிர் அவனது பெருந்தகையை மறந்து பொய்யிலே புரளுமாயின் தாயன்புகொண்ட இறைவன் அடித்தடித்தும், அக்காரம் தீட்டியும், பற்பல விதமாக ஒறுத்தும், தண்டித்தும் திருத்துகிறான். பத்திமையும் பரிசுமில்லாத பசுபாசத்தை அறுத்து விட்டுச் சித்தமென்னும் திண்கயிற்றால் நம்மை அவன் திருப் பாதத்தில் கட்டிவிடுகிறான். திண்மையான கயிற்றினால்



பிணைத்துவிட்டால் உயிராகிய நாய் நினைத்தபடி திரிய முடியாதல்லவா ? எவ்வளவு கருணை !

" நாய்க்கு வேலையுமில்லை. உட்கார நேரமுமில்லை " என்பதற்கிணங்க நாய் எந்த நேரமும் இங்குமங்கும் அலைந்து கொண்டேயிருக்கும். அதிலும் ஊர்நாய் குப்பைத்தொட்டியைச் சுற்றிச் சுற்றித் திரியும். உண்பது நாழியேயாக உடுப்பது நான்கு முழமேயாக, மக்களின் எண்ணமோ ஊர் நாய்க்கும் கேவலமாக எங்கெங்கெல்லாமோ சுற்றி அலைகிறது. வீண்புகழுக்கும் அற்பசுகத்திற்கும் மக்கள் ஓடி உழல்வதைக் கவனிக்கும்போது 'நாம் படும்பாடு நாய்கூடப் படாது' என்ற வாசகம் முற்றிலும் உண்மை என்பது விளங்கும்.

தனது எசமானன் பாலும் கறியும் சோறுமாக நல்ல உணவு இட்டபோதிலும் நாய் ஒரு எலும்புத்துண்டு கிடைத்தால் விடுவதில்லை. தசையற்ற வெற்றெலும்பாக இருந்தபோதிலும் அதனைக் கடித்து அதனால் வாயில் இரத்தம் பெருக இரத்தத்தைச் சுவைத்து ஆனந்தம் கொள்ளுமே தவிர எளிதில் எலும்பை விடாது. அவ்வாறு உயிரும் உலக வாழ்க்கையையே மெய்யென்று நம்பிப் பொன்னையும் பொருளையுமே தேடி அலைந்து அதனால் எவ்வளவோ துன்பம் ஏற்படினும் அதனைச் சுகமாகக் கருதி உழல்கிறது.

'காவேரியே பெருகிக் கஞ்சியாக ஓடினும் நாய் நக்கியே குடிக்கும்' என்றபடி நல்ல உணவாயினும் சரி, பாலேயாயினும் சரி, நாய் நக்கியே உண்ணும், பருகும். அங்ஙனமே 'கடலின் நாய் நக்கியாங்குன் கருணைக்கடலின் உள்ளம் விடலரியாத' உயிர்களும் ஈசனுடைய திருவருளானது பருகற்கினிய பாற்கடல்போல் பரந்து கிடந்த போதிலும் உள்ளங்குளிர முகந்து குடிக்கமாட்டாது தவிக்கிறது.

காகமானது உறவு கலந்து உண்ணும். நாயோ சுயநலம் பொருந்தியதாகையால் தானே சாப்பிட நினைக்கும். மற்றொரு

நாய் வந்துவிட்டால் குரைத்து விரட்டுமேயொழிய பகிர்ந்து உண்ணாது. சாரமற்ற எலும்புக்கு இரண்டு நாய்கள் சண்டையிடுவதை நாம் பார்க்கிறோம்.

பொதுவாக மனிதர்களும் சுயநலம் கொண்டவர்களே. ஒருவன் செல்வமோ கல்வியோ அதிகமாகப் பெற்றிருந்தால் அதை எல்லாருக்கும் உதவிப் பகிர்ந்து இன்புறவேண்டுமென்று கருதாது தானே அதனால் இன்பமும் புகழும் அடையவேண்டுமென்று விரும்புகிறான். ஆனால் அறிஞர்களோ இதற்கு விலக்கு. அவர்கள் இறைவனுடைய பேரருளைக் கூட தனியாகப் பெறுவதை விரும்புவதில்லை. கலந்து அனுபவிப்பதில் இன்பம் அதிகம் அல்லவா? ஆகவே,

"அடியார்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான்
வந்து முந்துமினே"

என்று யாவரையும் அழைக்கிறார் மாணிக்கவாசகர்.

மற்றவைகளுக்குக் கொடாது தானே தின்னும் நாயை ஒருவாறு கொள்ளலாம். ஆனால் வைக்கோல் போரிலிருக்கும் நாயை என் சொல்வது? நாய் வைக்கோல் தின்னாது. ஆனால் அதன்மீது நன்றாகப் படுத்துக்கொள்ளும். ஒரு பசுவோ, ஆடோ வைக்கோல் தின்னவந்தால் குரைத்துத் துரத்திவிடும்.

மக்களிலும் ஒரு சாரார் இரவு பகலாக பாடுபட்டுப் பொருளை ஈட்டுகிறார்கள். அதனால் தாங்கள் ஏதாவது நன்மை அனுபவிப்பதுமில்லை. பிறருக்குக் கொடுத்து இன்புறுவதுமில்லை. பாடுபட்டுத்தேடி பணத்தை புதைத்து வைக்கும் கேடுகெட்ட மானிடராகக் கழிகிறார்கள். இன்னும் சிலர் இடைவிடாது புத்தகப் புழுப்போல் பல நூல்களைப் படிக்கிறார்கள். அதனால் அவர்கள் ஏதாவது பயனடைவதுண்டா? அவர்கள் வாழ்க்கை மேம்பாடடைகிறதா எனின்



இல்லை. மற்றவர்களுக்காவது அதனால் ஏதாவது நன்மை ஏற்படுமோ எனின் அதுவுமில்லை. இவ்வாறு 'பெற்றது கொண்டு பிழையே பெருக்கும்' உயிர்களை வைக்கோல் போர் நாய்க்கு ஒப்பிடுவது தவறில்லையல்லவா?

வெற்றெலும்பிற்கு நாய்கள் சண்டையிட்டு, ஒன்றை ஒன்று கடித்துக் காயப்படுத்துவது போன்று அற்ப விஷயங்களுக்கெல்லாம் மக்கள் சண்டையிட்டு வாழ்நாளை வீணாக்குகிறார்கள். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து சமாதானமாக வாழமாட்டாமல், வாத எதிர்வாதங்கள் செய்து நீதிமன்றங்களுக்கு ஓடி உள்ளதையும் இழந்து திண்டாடுகிறார்கள். தற்போது நடப்பன சமயப்போர், சாதிப்போர், நிறப்போர், வியாபாரப்போர், புகழுக்கும் பொருளுக்கும் பூமிக்கும் போர். அவைகளால் கோடிக்கணக்கான மக்கள் மடிவதும், இரத்தவெள்ளம் பெருகுவதும், குபேரபட்டணமாக விளங்கிய நகரங்கள் சுடுகாடுபோல் தோற்றமளிப்பதும், மக்களின் விலங்குத் தன்மையை நாய்க்குணத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இதுகாறும் கூறியவற்றால் உயிர்கள் மண்ணிடை வாழ்விலே புரண்டு, சிற்றின்பங்களில் படிந்து இறையருளை மறந்துவிடுவதாலும், வாழ்க்கையின் குறிக்கோளை மறந்து வீணாக அலைந்து திரிவதாலும், தமக்குள்ள பொருட் செல்வத்தையும், கல்விச் செல்வத்தையும் தாமும் அனுபவியாமல், மற்றவருடனும் பகிர்ந்து இன்புறாமல், வீணாகச் சண்டையிடுவதாலும், கடவுளுடைய பேரருளை உளங்குளிரப் பருகமாட்டாமையாலும் கடைநாய்க்கு ஒப்பிடப்பட்டன என்று தெரிந்துகொண்டோம். இறைவன் அவனது திருவருட் பெருக்கால் உயிர்களின் குற்றங்களைப் பொறுத்து, மென்மேலும் நல்லறிவு கொளுத்தி ஆட்கொள்கின்றானாகையால் அவன்,

"நாயிலாகிய குலத்திலுங் கடைப்படுமென்னை நன்னெறி காட்டித்
தாயிலாகிய இன்னருள் புரிந்த என்தலைவனை"

என்றபடி தாயாகவும், தலைவனாகவும் போற்றப் பெறுகிறான்.
"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமு மாற்றலரிது." நாய் தன் எசமானன் செய்யும் உதவிக்கு யாது கைம்மாறு செய்ய வல்லது? அவனிடத்தில் எப்போதும் நன்றியுடையவனாக இருப்பதும், அவன் வீட்டில் திருடர்கள், அந்நியர்கள் புகுந்து கொள்ளை அடித்துக்கொண்டு போகாமல் பாதுகாப்பதும் தானே.

"யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை-யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை"

இறைவனுக்கு நாம் யாது கைம்மாறு செய்யக்கூடும்? "உன்னால் பிரயோசனம் வேணதெல்லாம் உண்டு, உன்றனக்கிங்கு என்னால் பிரயோசன மேதுண்டு?" என்றவாறு அவனுக்கு நாம் செய்யக்கூடிய நன்மை ஒன்றுமில்லை. ஆயினும் நாம் செய்யவேண்டியது அவன் திருவருளை மறவாது வழுத்துவது ஒன்று. அவனுடைய வீடாகிய இந்த உலகிலும், அவனது திருக்கோவிலாகிய நமது உடலிலும் அநீதி, தீமை, பொறாமை, பேராசை, பொய் முதலிய திருடர்கள் புகுந்து நீதி, நன்மை, பொறுமை, மெய்ம்மை, கருணை, அன்பு முதலிய செல்வங்களைக் கவர்ந்துகொண்டு போகாமல் பாதுகாத்துக்கொள்வது மற்றொன்று. 'உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' என்பது மறைமொழியன்றோ.

---

## சமாஜ ஜூலைமாதக் கூட்டம்

இது வெண்ணெய் நல்லூரில் 24 - 7 - 47 முதல் நான்கு நாட்கள் நடந்தது. முதல் இரண்டு நாட்களில் காலையிலும் மாலையிலும் ஸ்ரீ முடிகொண்டான் சுவாமிநாத சாஸ்திரியாரவர்கள் சுந்தரர் வரலாற்றைப் பெரியபுராணம், உபமன்யு பக்தவிலாசம், அகஸ்திய பக்தவிலாசம் ஆகியவற்றின் துணைகொண்டு மிக விரிவாக விளக்கினார்கள். மூன்றாம்நாள் திருவாளர்கள் - வித்வான் வெள்ளை வாரணனார், சதாசிவ பண்டாரத்தார், வடிவேல் முதலியார், பாப்பாத்தியம்மையார் ஆகிய அன்பர்கள் முறையே தேவாரச்சிறப்பு, சோழர் சைவப்பணிகள், குள்ளன் குறும்பு, சுந்தரர் யோகநெறி என்பனபற்றியும், நான்காம்நாள் திருவாளர்கள் சுவாமிநாதனார், நாராயணசாமி நாயுடு, ஹெர்பர்ட் சுந்தரனார், ஔவை துரைசாமிப்பிள்ளை ஆகிய அன்பர்கள் முறையே சுந்தரர் செந்தமிழ், நான் பேசவில்லை, சுந்தரர் சமர்த்தர், மெய்கண்டார் என்பன பற்றியும் மிகத் திறமையாகப் பேசினார்கள். திருவாவடுதுறை யாதீனத்தின் பார்வையில் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள மெய்கண்டார் சந்நிதி மிகவும் சீர்கேடான நிலைமையில் இருப்பதை உடனே இந்து சமய நிலையப் பாதுகாப்புக் கழகத்தினரும் அரசாங்கமும் கவனிக்க வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று. திரு. ம. பா. சொற்பொழிவாளர்கட்கும், எல்லா ஏற்பாடுகளையும் செம்மையாகச்செய்து, அனைவரையும் நான்கு நாட்களும் மிக்க அன்போடு உபசரித்த திரு. எம். சின்னசாமிரெட்டியாரவர்கட்கும் சாமாஜத்தின் சார்பாக நன்றி கூறினர்.

## சமாஜ ஆகஸ்ட்மாதக் கூட்டம்

இது சென்னை சேற்றுப்பட்டு வைத்தியநாத முதலியார் வீதியில் அமைக்கப்பெற்ற நால்வர் பந்தரில் 3 - 8 - 47 ல் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தது. சென்னை சட்டசபைத் தலைவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளையவர்கள் சமாஜத்தினரை அன்போடு வரவேற்றார்கள். வரவேற்பு ஊர்வலமும், பகல் விருந்தும் சிறப்பாக நடந்தேறியபின், மாலையில் பொதுக்கூட்டத்தில் திருவாளர்கள் - வித்வான் வை. குஞ்சிதபாதம்பிள்ளை, பாலூர் கண்ணப்ப முதலியார், எஸ். ஆறுமுக முதலியார் எம். ஏ., பி. ஓ. எல். ஆகிய அன்பர்கள் முறையே திருவாசகம், பெரிய

Regd. M. 2330. "SIDDHANTHAM" Vol. 20. No. 8

புராணம், அன்பும் அருளும் என்பன பற்றிப் பேசினார்கள்.
திரு. வே. மாணிக்கவாசகனார் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் சஷ்டியாப்த விழா

இது மிகச் சிறப்பாக 28 - 7 - 47ல் திரு. பிள்ளையவர்க
ளுடைய லாயிட்ரோட் இல்லத்தில் நடந்தது. காலையில் திரு.
பிள்ளையவர்கள் தமது வாழ்க்கைத் துணைவியார் திரு. அமிர்த
வல்லியம்மையாரோடு மணப்பந்தரில் அமர்ந்து, தமக்கு 35
ஆண்டுகட்குமுன் திருமணம் செய்துவைத்த ஒரு வயோதிக
ஆரிய அந்தணப் புரோஹிதர் துணைகொண்டு, வைதிக முறைப்
படி ஆயுள் ஓமம், மாங்கல்ய தாரணம் முதலியவற்றை நடத்தி
னார்கள். சமாஜ வாழ்த்துப்பாக்களைச் சமாஜத்தின் சார்பில்
திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரவர்கள் வாசித்தளித்தனர்.
அனைவருக்கும் அறுசுவை நல்விருந்தளிக்கப்பட்டது. மாலை
யில் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியிற் திரு. டி. எஸ்.
நடராஜப்பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் இராயப்
பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை, நமது சமா
ஜம் ஆகிய இரு நிலையங்களின் கூட்டுச்சார்பில் ஒரு பாராட்டுக்
கூட்டம் நடந்தது. திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
பிள்ளையவர்களின் திருவுருப்படத்தைத் திறந்து வைத்தனர்.
திரு. கே. த. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் இருநிலையங்
களின் பாராட்டுரை வாசித்து வழங்கினர். வாலாஜாபாத்
இந்து மத பாடசாலையின் சார்பில் திரு. வா. தி. மாசிலாமணி
முதலியாரவர்கள் ஒரு வாழ்த்துரையளித்தார்கள். திரு. ரா.
பி. சேதுப்பிள்ளையவர்கள் முருகவேள் புத்தக சாலையின் சார்
பில் "தமிழ் மறைத் திரட்டு" என்ற ஓர் அரிய திரட்டு
நூலை வெளியிட்டு மணிவிழாத் தலைவர் தலைவியர்கட்கு அளித்
தனர். திரு. வி. க. முதலிய பல பெரியார்கள் திரு. ச. ச.
பிள்ளையவர்களுடைய குணநலங்கள், சொற்பொழிவுத் திறன்,
சைவத் தொண்டு முதலியவற்றைப் பாராட்டிப் பேசினார்கள்.
வாழ்த்துப் பாடல்கள், வாழ்த்துரைகள் முதலியன அடுத்த
இதழில் வெளிவரும்.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Published by Rao Bahadur C.M. Ramachandran Chettiar, B.A., B.L., Edited and for the Saiva Siddhanta MahaSamajam, at 9, Vaidyaramayyar St, Thyagarayanagar, Madras. P. I. Card No. M. S. 81.

758

gistered No. M 2330. "SIDDHANTHAM" Vol. 20—No. 9

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே'

மலர் 20 | சர்வசித்து புரட்டாசி 1947 செப்டம்பர் | இதழ் 9

உள்ளுறை — பக்கம்


1. ஒலிபரப்பு ... 305
2. தலப்பகுதி—இலங்கைக் கந்தகோட்டங்கள் ... 313
3. சாத்திரப்பகுதி—ஆற்றல் ... 318
4. சமயப்பகுதி—கோயில் நுழைவு விதிகள் ... 319
5. கலைப்பகுதி—
   1. அரமகளிர் ... 323
   2. எழில் ... 332
6. கவிப்பகுதி—அற்புதக் காதல் ... 333
7. ஆராய்ச்சிப்பகுதி—காடவரும் சைவமும் ... 337
8. விரிவுரைப்பகுதி—பெரியபுராணத்தின் உட்கிடை ... 345


பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ., பி. எல்.,
சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2.

## திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள்

## மணிவிழா வாழ்த்துப் பா

### 1

பூமலர்ந்த புதுமணத்தில் பொன்திகழும் புகழ்சென்னை
காமலர்ந்த நற்குடியிற் நறுந்தமிழின் நலத்தினிலே
சேமலர்ந்த சிவபெருமான் செழுஞ்சமயச் செம்மையிலே
ஓமலர்ந்த உயர்எழுத்தின் உறுதியிலே உற்றோய்கேள்,
சீர்மலிந்த சபாபதிவேள் சேய்சச் சிதானந்தப்
பேர்மலிந்த பெருமையுடைப் பெரியோய்,யாம் பேண்உரைசே

இறைவனை உணர்ந்துஉளன் எனஅவன் பணிநிற்றல்
முறையெனத் தெளிந்திடல் முடிவுஎனும் சொல்அன்றே
குறைவினை எம்மிடைக் குணமெனத் தெரிந்திட்டு
நிறைவினை உட்கொளும் நெறியது சத்தன்றே.

கரையில கல்வியின் கணக்கெனக் கருதியே
உரையிலா உணர்ச்சிகள் உளமதில் உளல்அன்றே,
தரையினில் தசைஉயிர் தனதெனும் தகுதியில்
சிரையினில் சிருறச் செறித்தது சித்தன்றே,

தான்பெறும் இன்பெலாம் தாரணி பெறுக,எங்
கோன்பெறும் சமயமே குவலயத் திடல்அன்றே,
வான்பெறும் வகையினில் வாரவழி பாட்டினைத்
தேன்பெறும் முறையினில் தேர்தல்ஆனந்தமே.

கேளினி,

சத்தெனச் சித்தெனச் சாரும்ஆனந்தமாம்
அத்தனின் பண்புகள் அகத்திலும் புறத்திலும்
வைத்திடும் அருமையின் வயமுறல் அன்றியே
உய்த்திடும் பெயரிலும் உரிமையாய்க் கொண்டனை.

g. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

லர் 20 | சர்வசித்து புரட்டாசி 1947 செப்டம்பர் | இதழ் 9

R[illegible]TRAR ... MADRAS

## ஒலிப[illegible]ப்பு

பத்திரா[illegible]ரியர்

### ஆட்சி உரிமை

நிகழும் ஆவணி முதற்கொண்[illegible] தன்னாட்சி உரிமை வந்திருக்கிறது. அதனை வெகு சிறப்பாக நாடெங்கும் பேரூர்களிலும் சிற்றூர்களிலும் கொண்டாடினார்கள். அரசியலில் ஈடுபட்ட நாட்டு ஊழியர்களேயன்றி நாட்டுப் புறத்து மக்களும் அந்த மாறுதலை ஒரு திருவிழாவாகப் பாராட்டினார்கள். திருவிழா கொண்டாடுவதினால் மக்களுக்குள் அமைதியும் இன்ப வாழ்வும் ஏற்படப் போவதில்லை. பெற்ற உரிமைகளைப் பாதுகாத்து அவைகள் திரும்பிப் போகவொட்டாமல் கடைப்பிடித்துக்கொண்டு அவ்வுரிமைகளால் வீண் செருக்குக் கொள்ளாமல் அவைகள் மக்களுக்கு நன்மை பயக்கும்படி செய்தலே நாட்டு ஊழியர்களின் கடமை. அவ்விதமே நமது நாட்டு ஊழியர்கள் செய்வார்களாயின் அமைதியும் இன்பமும் பயக்கும்.

### உரிமைச் சின்னம்

தன்னாட்சி உரிமை வந்ததற்குப் பல சின்னங்கள் சான்றுகளாக உள்ளன. அவைகளிலே ஒன்று உரிமைக்கொடி.

எந்த நாடு தன்னாட்சி பெற்றாலும் நாட்டிற்கேற்ற கொடி ஒன்றை நிறுவி அதனை உயர்த்துவதுண்டு. அக்கொடியே அந் நாட்டு உரிமையை எடுத்துக் காட்டுவது. அடிமை நாட்டுக்குத் தனிக் கொடி இல்லை. கொடி இழந்தால் உரிமை போயினதாகும். கொடி நிமிர்ந்தால் உரிமை வெற்றியுடன் நின்றது ஆகும். ஆகவே இக் காலத்தில் மட்டும் அன்றி எக் காலத்திலும் கொடிக்கு உள்ள சிறப்புப் பெருமை வேறு எந்த சின்னத்திற்கும் இல்லை. நாட்டு மக்கள் எல்லாரும் அக் கொடியை வணங்கி அக்கொடிக் கீழ் வாழ்வார்கள். இவ்விதக் கொடியேற்றமும் கொடி வணக்கமும் தன்னாட்சி உரிமை நாளில் நமது நாடெங்கும் நிகழ்த்தப்பட்டன.

## நமது நாட்டுக் கொடி

நாம் இப்போது கொண்டிருக்கும் கொடி முந்நிறக் கொடி. அந்நிறங்கள் செகப்பு, வெள்ளை, பச்சை என்பன. வெள்ளைப் பட்டையில் அறவாழி தீட்டப் பெற்றிருக்கிறது. செகப்பு வைதீக சமயத்தையும், பச்சை முகமதிய சமயத்தையும் வெள்ளை ஏனைய சமயங்களையும் குறிக்கின்றன என்பர். செகப்பு துறவறத்தின் சின்னம் என்றும், வெள்ளை தூய்மைப் பண்பின் சின்னமென்றும், பச்சை இளமையின் சின்னமென்றும் கூறலாம். செகப்பு செல்வமாகிய திருமகளையும், வெள்ளை கல்வியாகிய கலைமகளையும், பச்சை ஆற்றல் ஆகிய மலைமகளையும் தோற்றுவிக்கும். இவ்விதம் பல உட்கருத்துக்களையும் இம்மூவண்ணங்கள் அடக்கிக் கொண்டிருக்கின்றன.

இனி நடுவில் தீட்டப் பெற்றிருக்கு ஆழி அறத்தைக் குறிப்பதாகும். அதுவே சிவபெருமான் திருமாலுக்குக் காக்கும் தொழில் இயற்றுவதற்காக அளித்த திருவாழி எனக் கூறலாம். ஆனாலும் அதுவே போதி நிழல் அமர்ந்த அறவாழி அந்தணனான புத்தபகவான் நில உலகிற்கு ஈந்த புத்தம்,



தருமம், சங்கம் என்ற முப்பொருளில் இடையில் உள்ள தருமம் என்ற அறமாகும் என்பர் பெரியோர். உலகம் எங்கும் பௌத்த சமயத்தை நிலைநாட்டின மன்னர் மன்னன் அசோகன் சற்சமய விருது ஆக இந்த அறவாழியை கற்கம்பத்தின் உச்சியில் செதுக்கி வைத்தான். அவ்வாழியின் உருவத்திற்கு மேல் நான்கு சிங்கங்களையும் செதுக்கி அமைத்தான். இதனை வடநாட்டில் கண்டுபிடித்த சின்னங்களில் இருக்கக் கண்டு அந்த உருவமே நமது நாட்டிற்கு ஏற்றதாகும் என்று தீர ஆராய்ந்து புதுக்கொடியில் தீட்டியுள்ளார்கள். இதற்கு முந்தியிருந்த தாமரைச் சின்னம், இராட்டைச் சின்னம் இவைகளைக் காட்டிலும் அறவாழிச் சின்னமே மிகவும் மேன்மை உடைத்து என்று கூறவும் வேண்டுமோ? அறவாழி அமைந்த கொடியே நம் நாட்டுக் கொடியாயிற்று.

## கொடியின் பொருள்

தமிழ்ச் சொல் ‘கொடி’ என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. துவசம், பதாகை, விருது என்பன முன்னர் கூறிய பொருள்கள். இவை வடமொழி இணைச் சொற்கள். ஏனைய பொருள்களோ, செடி கொடி மரம் என்ற தொகுதியில் காணும் படர்க்கொடியும், ஆடை உலர்த்தும் கயிறும், ஏற்றத்தில் அமைந்த கயிறும் கம்பும், மாதர் அணியும் கழுத்து அணியும், ஆடவர் அணியும் அரை ஞாணும், நீர் இறைக்கும் கால்வாயும் வழிநடக்கும் நெடும் பாதையும், உயிர்களில் காக்கையும் கண்களில் காணும் கண்வரியும், திக்குகளில் கிழக்கும் இச்சொல்லில் குறிப்பனவாகும். இனி கொடி கட்டுதல் என்றால் ஒரு உயர்ந்த கம்பில் கொடிச் சீலையைக் கட்டி உயர்த்துவது. அதுமட்டும் அன்று. அச்சொல்லுக்கு ஒரு சிறப்புப் பொருளும் உண்டு. ஒருவன் ஒரு செயலைச் செய்வதாக உறுதி செய்துகொண்டு அதனைத் தொடங்கு

வதற்குக் கங்கணம் கட்டிக்கொள்வதைப்போல் உலகினருக்கு
அறிவுறுத்தற் பொருட்டு கொடியேற்றி விளம்பரப்படுத்துவது
மாகும். இந்தச் செயலை அன்னக்கொடி கட்டுதல், வெற்றிக்
கொடி கட்டுதல் முதலிய செயல்களில் காணலாம். திருவருளை
யில் வள்ளாள மன்னன் அன்னக்கொடி கட்டின வரலாறு
அத்தல நூலில் காண்கிறோம். பண்டைத் தமிழர் வெற்றிக்
கொடி கட்டினதை புறப் பொருள் நூல்களில் காணுகிறோம்.
இனிக் கொடிநிலை என்பது மும்மூர்த்திகளின் கொடிகளைத்
தன் அரசன் கொடிக்கு உவமித்துக் கூறும் பாவகையாகும்.
மேலும் பண்டைத் தமிழரில் இச்சொல் கதிரவனைக் குறிக்கும்.
கொடிநிலை கந்தழி வள்ளி என்ற முச்சுடர்கள் தொல்காப்பியத்
தில் வருதல் காண்க. (கொடி - கிழக்கு) தமிழ் நூல்களின்
படி கொடி இரண்டு வகைப்படும். சிறு கொடி கத்திகை
என்றும், தெருக் கொடி விடங்கம் என்றும் கூறப்படும். (விதி
விடங்கன் என்ற சொல்லை ஆராய்க.)

## அரசியல் சின்னம்

தமிழ் நாட்டு மன்னர்கள் தம் அரசுக்குப் பத்து சின்னங்
களை வைத்திருந்தார்கள். அவைகள் - பெயர், நாடு, ஊர்,
ஆறு, மலை, ஊர்தி, படை, பறை, தார், (மாலை) கொடி
என்பன. அவைகளை ஒரு நாட்டு அரசின் அங்கங்களாகக்
கொண்டு அதன் பெயர் தசாங்கம் எனக் கூறுவார்கள்.
மணிவாசகப் பெருமாள் சிவபெருமானுக்குத் தசாங்கம் கூறி
யிருக்கிறார். தலைவி தலைவன்பால் கிளியைத் தூது அனுப்பும்
முறையில் தலைவனை சிவபெருமானின் பத்து அங்கங்
களும் புகழ்ந்து கூறப்பட்டன. அவற்றில் இறுதியில்
உள்ள சிறந்த அங்கமே கொடியாகும். அச்செய்யுள்,

**“ சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக் கோன்**
**கோலம் பொலியும் கொடிகூறாய்—சாலவும்**



**ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்**
**கோதிலா ஏறும்கொடி ”**

என்பது. சமீபத்தில் பாரதியார் தமிழ் அன்னைக்குத் தசாங்கம்
கூறியதிலும் கொடியை,

**“ ‘கொடிப்பவள வாய்க்கிள்ளாய், குத்திரமும் தீங்கும்**
**மடிப்பவளின் வெல்கொடிதான் மற்றென்—அடிப்பணி**
**நன்றூரத்தீயார் நலிவுறவே வீசுமொளி • [வார்**
**குன்று வயிரக் கொடி”**

என்று சிறப்பிக்கிறார்.

இப்பாடல்களினால் கொடி எதிரிகள் நெஞ்சில் அச்சம்
விளைவிப்பது என்றும் அதனைக் கொண்டோர் நெஞ்சில்
எழுச்சியைத் தருவது என்றும் அறியலாம். ஆதலால்தான்
கொடிக்குப் போரில் மதிப்பு மிகுதி என்க.

## வடநாட்டுக் கொடிகள்

வடநாட்டில் மக்கட்கே அன்றி தேவர்களுக்கும் கொடி
களைக் கற்பித்திருந்தார்கள். மும்மூர்த்திகளுக்கு வேதம்,
கருடன், இடபம் என்ற கொடிகளும் இந்திரன் முதலிய திக்கு
பாலகர்களுக்கு வச்சிரம் (இடி) முதலிய கொடிகளும் தரப்
பட்டன. வடமொழிப் பண்டைய நூல்களில் கொடி மகிமை
வெகுவாக இல்லை. ஆதி நூலாகிய இராமாயணத்திலும் இல்லை.
ஆனால் துவாபர யுகத்து மாபாரதத்தில் கொடிப் பெருமை
வெகுவாய் உண்டு. பாரதப் போரில் கலந்துகொண்ட
ஒவ்வொரு வீரனுக்கும் ஒவ்வொரு கொடியுண்டு. பற்பல
வருணத்தார்களுக்கும் தனிக் கொடியுண்டு. ஆகையால் வட
நாட்டில் கொடி பிற்காலத்துப் பழக்கம் என்று ஊகிக்க
லாகாதா ?

## தென்னாட்டுக் கொடிகள்

தென்னாட்டிலே மிகப் பண்டைக் காலம் முதற்கொண்டு கொடி நாட்டற் பழக்கம் உண்டு. தமிழ் மூவேந்தர்களில் புலி, மான், பனையில் என்பனவைகளை சோழ பாண்டிய சேரர்கள் முறையே கொண்டிருந்தார்கள். மன்னர்களைப் புகழும்போது கொடியைப்பற்றிப் பாடுவதுண்டு. முத்தொள்ளாயிரத்தில் ஓர் அழகிய வெண்பாவில் உலாப்போந்த தலைவனைக் கண்ட ஒரு தலைவி தன் நெஞ்சில் எழுந்த கருத்துக்களில் முதலில் கொடியைக் குறித்த மரபு இங்கே குறிக்கத் தக்கது.

"கொடி பாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடி பாடி முத்தாரம் பாடித்—தொடியுலக்கை
கைம்மனையில் ஓச்சப்பெறுவனோ யானுமோர்
அம்மனைக் காவல் உளேன்."

ஆகவே கொடியைப் பற்றித் தமிழர் கொண்ட பெருமை கூறவும் வேண்டுமோ? தமிழ் இலக்கியத்திலே கொடியைப் பற்றிப் பல மேற்கோள்கள் காணலாம். சங்க நூல்களிலும் உண்டு. திருமுருகாற்றுப்படையில்,

"கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி
சூரரமகளிர் ஆடும் சோலை"

என்று அரமகளிர் கோழிக் கொடியை முருக வழிபாட்டின் வாழ்த்திய செய்தியும்,

"செருபுகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிபுனைப் பந்தொடு பாவை தூங்க
பொருநர்த் தேய்த்த போர் அருவாயில்
.....................கூடல்"



என்று பிறர் வெல்ல முடியாக் கொடியைக் கூடற் பெருநகர் கொண்டிருந்த செய்தியும் கூறப்பட்டுள்ளன.

பிற்காலத்துக் கவிஞர்கள் கொடியைப் புகழ்ந்திருப்பதில் கம்பர் போன்ற பெருங் கவிஞர் பாக்களில் காணலாம். மேலும் தமிழரில் பல குலங்கள் உண்டு. அவைகள் தொழிலைப் பற்றி வந்தன. ஒவ்வொரு தொழில் இனத்திற்கு ஒவ்வொரு கொடி இருந்தது. இதன் விவரங்களை அகராதி முதலிய நூல்களில் கண்டுகொள்க. அவரவர்கள் தெய்வத் திருவிழாக்களில் இக் கொடிகளை எடுத்தாண்டு வந்தார்கள். இப்போது அவை பெரிதும் புறக்கணிக்கப் பட்டன. இது தமிழர் பழக்க முறைமை.

## சைவத்தில் கொடி

மேலே திருமுருகாற்றுப்படை திருவாசகம் முதலிய திருமுறைப் பகுதிகளில் கொடியைப் பற்றி வந்த மேற்கோள்களை எடுத்தாண்டோம். இனித் தேவாராதிகளில் அங்கங்கே அளவற்ற மேற்கோள்கள் காணப்படுகின்றன. இவைகளேயன்றி சமய நிலையங்களாகிய திருக் கோயில்களில் கொடிக்கு ஒரு ஒப்பற்ற இடம் வாய்த்திருக்கிறது என்று கூறவேண்டும். ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு கொடிக் கம்பம் உண்டு. ஆலயத்தில் நடக்கும் எந்தத் திருவிழாவிற்கும் கொடியேற்றம் இன்றியமையாதது. கொடியேற்றித்தான் ஆலய அதிகாரிகள் திருவிழா தொடங்குவார்கள். அப்போதுதான் அவ்விழாவைச் சரியாக நடத்துவோம் என்று உறுதி செய்துகொள்கிறார்கள். திருவிழா முடிந்ததும் கொடியிறக்கம் நடைபெறும். இவ்விரண்டு சடங்குகளுக்கும் இடையில்தான் திருவிழா நடைபெறும். ஒரு ஊரில் கொடியேற்றம் ஆகி இருக்கும் மட்டும் அவ்வூர் மக்கள் நோன்பு இருப்பார்கள். வெளியூருக்குப் போதல் முதலிய செய்கைகளைக் கொள்ளமாட்டார்கள். இது தமிழர் மரபு

## கோடிக் கவி

சைவத்தில் சந்தானசாரியர்களில் ஒருவரான உமாபதி
சிவாச்சாரியார் அவர்கள் தில்லை வாழந்தணர்களில் ஒருவர்.
அவர் தன் ஆசாரியரான மறைஞான சம்பந்தரின் எச்சிலை
உண்டார். அதனை அறிந்த அந்தணர்கள் அவரை விலக்கி
வைத்திருந்தார்கள். சிவாச்சாரியார் கொற்றவன் குடியில்
மடம் அமர்த்தி அங்கே எழுந்தருளியிருந்தார். அப்படி
இருக்கையில் தில்லையில் பெருந் திருவிழா வந்தது. ஏனைய
அந்தணர்கள் கொடியேற்றினார்கள். அது ஏறவில்லை. அவர்கள்
மிகவும் தயங்கிக்கொண்டிருக்கையில் 'உமாபதியாரைத்
தருவிப்பீர்' என வானொலி எழும்பிற்று. உடனே அந்தணர்
கள் கொற்றவன் குடி சென்று உமாபதியாரைத் தோள் மீது
ஏற்றிக்கொண்டு கொடி கம்பத்திற்குக் கொணர்ந்தார்கள்.
உமாபதி சிவாசாரியாரும் நான்கு அரும் கவிகள் பாடி கொடி
யேற்றினார். கொடியும் ஏறி திருவிழாவும் நடைபெற்றது.
இக் கவிகளே 'கொடிக்கவி' என்ற நூலாயிற்று. இது மெய்
கண்ட சாத்திரங்களில் ஒன்றாக விளங்குகிறது. இக்கொடிக்
கவியில் சைவ சித்தாந்தக் கருத்து அடங்கி இருக்கிறது.

## கோடி கட்டுதலின் உட்பொருள்

1. "ஞானவொளி மலத்திருள் இரண்டிற்கும் உயிரே இடம்.
இவற்றில் ஒன்று மிகுந்தால் மற்றொன்று மறையும். இருள் மலம்
தாக்காதவாறு உயிர்க்குயிராய் இறைவன் நின்று உண்மையறிவு
விளக்குவான். அப்போது மும்மலத்தே முழுகி இருக்கும் உயிர்
திருவருளைக் கூடும்படி கொடி கட்டுகிறேன்"

2. "அரும் பெருந்தகையே, நீ யார், உன் அருட்சத்தியாது,
உயிர் யாது, மலம் யாது, சகல நிலை தனி நிலைகள் எவைகள், நீ
காணாத உலகம் எங்குளது, எல்லாமாயிருக்கும் உன்னைக் காண உன்
கோபுர வாயிலில் கொடி கட்டுகிறேன்."



3. "சொல்லாலும் நினைவாலும் எப்போதும் எட்டப்படாதானும்
உயிரறிவால் அறியாதானும் ஆன பெருமானை அறிந்து உயிரறிவிற்
பிரியாவகை அனுபூதியில் கலந்து அக்கலப்பிலே நிலைபெறும் அருளினை
நல்கும்படி கொடி கட்டுகிறேன்."

4. "ஐந்தெழுத்து, எட்டெழுத்து, ஆறெழுத்து நாலெழுத்து
களோடு பிஞ்செழுத்தும் (வ) பெருவெழுத்தும் (சி) நெஞ்சிலே பதியும்
போது பேசும் எழுத்தாகிய அருட்சத்தி பேசா எழுத்தாகிய சிவம்
இவைகளைத் தெளிவாகக் காட்டுவதே கொடியின் குறியாகும். அதனை
ஏற்றுகிறேன்" என்பன அக்கவிகளின் பொருள்.

இக்கருத்துக்களைக் கவியால் சொல்லி கொடி ஏற்றின
உமாபதி சிவாச்சாரியார் பெருந் திருவிழா நடக்கையில் உடன்
இருந்து அவ்விழாவில் நடக்கும் பத்து செயல்களான
தசகாரியம் என்ற பெயரால் வழங்கிவரும் கருத்துக்களை
"உண்மை நெறிவிளக்கம்" என்ற நூலில் கூறியருளினார்.
இவ்விரு சிறந்த சிறு நூல்களே திருவிழாவின் உட்பொருளை
விளக்குவன ஆகும். இதனை உணராத பொதுமக்கள்
கோயில் திருவிழாக்களை உலகச் சடங்குகளாகப் பாவித்து
வெறும் ஆடம்பரங்களில் புகுந்து உலகாயிதம் ஆக்குகிறார்கள்.
மக்கள் உண்மை நெறியை அறிந்து போற்றுவார்களாக !

---

2. தலப்பகுதி

# இலங்கைக் கந்தகோட்டங்கள்

(ம. ரா.)

இலங்கையிலே கந்தகோட்டங்கள் ஆறு என்று கூறுவர்.
அவைகள் முறையே கதிர்காமக் கந்தர், நல்லூர்க் கந்தர்,
மாவிட்டபுரக் கந்தர், வில்லூன்றிக் கந்தர், கொழும்புக் கந்தர்,
மேலைப்புலோலிக் கந்தர் என்று பெயர் பெற்றவைகள். கந்த
கோட்டங்கள் ஆறு என்று வரையறுத்ததற்கு ஆதாரம் தமிழ்

நாட்டில் முருகக் கடவுள் படை வீடுகள் ஆறு என்று இருத்தலைப் பின்பற்றி ஏற்பட்டதோ என்று ஐயப்படக் கூடும். ஏனெனில் இலங்கையிலேயே பெயர் பெற்ற கந்தகோட்டங்கள் வேறு பலவும் உண்டு. உதாரணமாக, காங்கேயன் துறைக்கு அருகில் உள்ள கந்தவனக் கடவுக் கந்தர் கோயில், செல்வக் கந்தர் கோயில், காரைத் தீவுக் கந்தர் கோயில் முதலியன. ஆகவே கந்தகோட்டங்கள் ஆறு என்று அகராதிகளில் எல்லை இருத்தற்கு அவற்றின் பழமை, புகழ், புனிதம் முதலிய காரணங்கள் இருக்கக்கூடும். இவ்வாறனுள் கதிர்காமத்தைக் குறித்து முன்னரே கூறியுள்ளோம். ஏனையவற்றில் சிலவற்றைக் குறித்து தெரிந்தமட்டில் எழுதுவோம். செய்திகள் பின்னர் தெரிந்தால் அவைகள் சேர்த்து வெளியிடுவோம்.

கந்தகோட்டங்கள் ஆறனுள் அடுத்த படியில் உள்ளது நல்லூர்க் கந்தகோட்டம்.

நல்லூர் யாழ்ப்பாணத்திற்கருகே வடகிழக்குத் திக்கில் மூன்று கல்லில் உள்ளதொரு ஊர். நல்ல பாதை. நெடுகக் குடியிருப்புகளே உண்டு. பாதையின் பேரிலேயே இடதுபுறம் கந்தகோட்டமும், வலதுபுறம் நந்தவனமும் இருக்கின்றன. கோயிலுள் கருப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் இவைகள் தென்னிந்திய ஆலயங்கள் போலக் கருங்கல்லால் ஆக்கப் பெற்றுள்ளன. முன் மண்டபமோ பெருங் கொட்டகை போல் சீமை ஓடு போடப்பட்டுளது. தூண்கள் பெரிதாய் உயர்ந்து நிற்கின்றன. மூலத்தானம் கிழக்கு நோக்கியது ஆறுமுக மூர்த்தி தெற்கு நோக்கியிருக்கிறார். கோயில் மிகத் தூய்மையில் வைக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமைகளில் வழிபடுவோர் மிகுதி. ஏனைய நாள்களில் சாதாரணமாக வருவர். திருவிழாக்களில் பெருமாரியான கூட்டம்வரும். பூசை புரிவோர் தென்னாட்டு ஆதிசைவர்கள்.



ஆலயம் பழையது. இது 15-ம் நூற்றாண்டில் செண்பகப் பெருமாளால் கட்டப்பட்டதென்பர். கொழும்புக் கடுத்த கோட்டையில் அரசு புரிந்துவந்த ஆறாம் புவனேகவாகு தன் தத்து மகனான சண்பகப் பெருமாளை யாழ்ப்பாணத்தின்மீது படையெடுக்கும்படி அனுப்பினான். சண்பகப் பெருமாள் அங்கு ஆண்டுகொண்டிருந்த கனக சூரியனை வென்று துரத்தி விட்டுத் தானே அரசு கட்டில் ஏறினான். பழைய தலைநகர் பாழாய்ப் போனதைக் கண்டு நல்லூரைத் தலைநகராக்கி ஆண்டான். அவனே சிறீசங்கபுவனேகவாகு என்ற சிங்கள நாமத்தோடு 1440-ல் அரசாளத் தொடங்கி 17 ஆண்டுகள் வரை ஆண்டான். நல்லூரை அழகு படுத்தியதன்றி நல்லூர்க் கந்தகோட்டத்தைக் கட்டி அதற்கு வேண்டிய மானியங்களைத் தந்தான். அதினாலேதான் இன்றைக்கும் இக் கோயில் கட்டியத்தில் "சிறீசங்கபோதி புவனேகவாகு" என்று இவன் பெயர் புகழப்படுகிறது. இவன் தமிழனுக்குப் பிறந்தவன் தமிழ்ப் பாடலும் பாடக் கூடியவன். மாவிட்டபுரக் கோயில் ஆதீன அந்தணர் ஒருவர் இவ்வரசனுக்கு விருந்தளிக்க அதனை வியந்து இவ்வரசன் அடியிற்கண்ட வெண்பா பாடினானும்.

*"சின்ன மனத்தான் செயும் விருந்துச் சாற்றுரிசி*
*அன்னதனை விண்ணோர் அறிந்திருந்தால்—முன்னரே*
*வெற்பதனைக் காவியுய்த்து வேலைகடைந் தேஉலைதல்*
*அற்பமெனத் தள்ளுவரே யாம்."*

கி. பி. 1467-ல் செண்பகப் பெருமாள் கோட்டைக்கு அரசாளச் சென்று விட்டான். நல்லூரிலே விஜயவாகு என்ற சிங்களவன் நியமிக்கப்பட்டான். அதன்பின் ஓடிப்போன கனக சூரியன் மீண்டும் வந்து நல்லூரைப் பிடித்து அரசு புரியத் தொடங்கினான். 1478-ல் அவன் மகன் சிங்களப் பரராச சேகரன் அரசு கட்டிலேறிநகரத்தைப்பெரிதாக்கினான்.

அப்போது எல்லைப்புற ஆலயங்களை எழுப்பிக் கந்தகோட்டத்திற்கு அருகாமையில் யமுனாரி என்ற வரியைக் கட்டுவித்தான். யமுனையிலிருந்து நீர்கொண்டு வந்துவிட்டதினால் இப்பெயர் ஏற்பட்டதாம். இவனே தமிழ்ச்சங்கம் நிறுவி அரசகேசரியால் இரகு வமிசம் இயற்றச் செய்தவன்.

கி. பி. 1560-ல் பறங்கியர் யாழ்ப்பாணத்தின் பேரில் படையெடுத்து தமிழர்மீது போர் தொடங்கினார்கள். அப்போது நல்லூரில் ஒரு பயங்கரமான போர் நடந்தது. இறுதியில் பறங்கியர்கள் கோட்டையைப் பிடித்து நகரை சூறையடித்தனர். ஆலயமும் சேதமடைந்தது. பறங்கிகள் பெரும் சொத்துக்களைக் கொள்ளை கொண்டு போனார்கள். பிறகு உடம்படிக்கை நடந்து சமாதானம் ஏற்பட்டது. மீண்டும் 1591 ல் பறங்கியர் படையெடுத்து வந்தார்கள். அப்போதும் நல்லூரில் இரணகளம் ஏற்பட்டது. போரில் தமிழர்கள் கணக்கின்றி மாண்டனர். கந்தகோட்டத்திற்கு அருகே எங்கும் இரத்த வெள்ளம் புரண்டோடியது. அதில் ஒரு யோகியாரும் கந்தசுவாமி கோயில் அர்ச்சகரும் உயிர் துறந்தார்கள். எஞ்சியவர்கள் வெட்டப்பட்டார்கள். ஊரும் ஆலயமும் கொள்ளையிடப்பட்டன.

தமிழர்களுக்கு உதவியாக தஞ்சை மன்னர் பல தடவை படைகளை அனுப்பியும் பறங்கிகளை அகற்ற முடியவில்லை. அதனால் கோபித்துப் பறங்கியர்கள் குடிகளை கொடுமையாக நடத்தினார்கள். 1621 ல் பறங்கியர் தலைவன் நல்லூரைத் தலைநகர் ஆக்கிக்கொண்டான். உடனே கந்தசுவாமி கோயிலைத் தரை மட்டம் ஆக்கிவிட்டான். அத்திவாரம் தெரியாமலும் கிளறிவிட்டானாம். மேலும் யாழ்ப்பாணத்திலிருந்த ஏனைய சைவ வைணவ ஆலயங்களையும் அழித்து அக்கற்களைக் கொண்டு கோட்டையையும் வீடுகளையும் கட்டினானாம். ஆனால் கோயில் அதிகாரிகளும் அர்ச்சகர்களும் விக்கிரகங்களை கிணறுகளிலும்



குளங்களிலும் இட்டு மறைத்துவிட்டனர். கோயில்களை அழித்ததின் காரணம் மக்களைக் கிறிஸ்தவர்கள் ஆக்கவேயாம். அவ்வாறு கிறிஸ்தவர்கள் ஆக்கப்பட்டவர்கள் பல்லாயிரக் கணக்கான பேர்கள்.

சுமார் நூறு ஆண்டுகள் கொடுங்கோல் நடத்திய பறங்கிகளை உலாந்தர்கள் வென்று நாட்டைப் பிடித்தனர். உலாந்தர்கள், சமய விஷயங்களில் தாராளமாக இருந்தார்கள். 1793 ல் கந்தசுவாமி கோயிலைப் புதுப்பிக்க அனுமதி தந்தார்கள். யமுனாரிக்கு அருகில் இருந்த இடத்தில் கிறிஸ்தவ ஆலயம் இருந்ததினால் பிராமண வளவு என்ற இடத்தில் ஒரு சிறு கோயில் கட்டப்பட்டது. பிறகு இக்கோயில் நாளாவட்டத்தில் பெரிதாகக் கட்டப்பட்டு இப்போது இருக்கும் நிலை அடைந்திருக்கிறது.

ஏனைய கந்த கோட்டங்களில் மாவிட்டபுரக்கந்த சுவாமி கோயில் மிகப் பெரியது. அது கீரிமலைக்கு அருகில் வட கடற்கரைக்கு ஒன்றிரண்டு கற்களுக்குத் தெற்கே உள்ளது. தென்னிந்திய ஆலயங்களைப்போலவே இதன் கோபுரம் உயர்ந்திருக்கிறது. கருப்பக்கிருகம் நிலமட்டத்திற்குமேல் உயர்ந்த பீடத்தில் உள்ளது. ஒட்டு மண்டபங்கள் மிகப் பெரிதாகவும் உயர்ந்த தூண்களையும் கொண்டுள்ளன. இக்கோயில் பூசகர்களிலே தமிழ் அறிஞர்கள் இருந்திருக்கிறார்கள்.

---

## 3. சாத்திரப் பகுதி

# ஆற்றல்

ஆற்றல் உள்ளது உயிர். ஆற்றல் இல்லாதது பிணம். ஆற்றலின் சட உருவம் அசைவு. அசைவின் குணங்களை அறிந்து கூறுவது அசைவு நூல். அது பௌதிக நூலில் ஒரு பிரிவு. எப்பொருளும் அசைவு கொண்டிருப்பின் அது முன்னேறும். அசைவு குறையின் ஒரு நிலையில் கிடக்கும். பின் நோக்கம் உற்று அசைவு இன்றி மறையும். அந்நிலைகளை உயிர்ப்பு இறப்பு எனப் பெயர்களைப் பெறும். ஓர் உயிருக்கு அசைவும் அதனால் ஏற்றமும் தருவது அதன் ஆற்றல். அந்த ஆற்றல் பிரிந்து போயின் அவ்வுயிர் மறையும்.

ஆற்றல் என்பதன் வடமொழிச் சொல் சக்தி என்பது. பெருமானும் தொழிற்படும்போது சக்தியுடன் சேரவேண்டும். சக்தியுடன் சேராதபோது சிவம் யாதும் செய்யாது என்று சங்கராசாரியர் கூறியிருக்கிறார்.

ஆற்றல் என்ற சக்தி எல்லா உயிர்களுக்கும் உண்டு. அது மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. நமது புராணங் களின்படி தேவர்களுக்கும் சக்திகள் உண்டு. அவர்களுக்கு மும்மூன்று பெயர்கள் தரப்பட்டு உள்ளன. உதாரணமாக, முருகக் கடவுளுக்கு ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி என மூன்று உண்டு. விநாயகனுக்கு சித்தி, புத்தி, வல்லபை என்ற மூன்று சக்திகள் உண்டு. சிவபெருமானுக்கு, உமை, கங்கை, சோபை என மூன்றும், திருமாலுக்கு பூ, திரு, நீலா என மூன்றும் நான்முகனுக்கு காவித்ரி, சாயத்திரீ, சரசுவதி என மூன்றும் சக்திகளாகக் கூறப்பட்டுள்ளன. இச்சக்தி

---

(27-12-41 ல் திருச்சியில் சைவ மகாநாட்டில் ஞானியார் அடிகள் உரையில் கண்ட ஒரு பகுதி).



களைப்பற்றிப் பல புராணக்கதைகள் கூறப்பட்டுள்ளன. திருமண நிகழ்ச்சிக் கதைகளும் உண்டு. உண்மையில் அத்தேவதைகள் தொழிற்படும்போது அத்தேவதைகளின் தொழிற்பண்புகளை அங்கு உருவகப்படுத்தப்பட்டுள்ளன எனை அறியவேண்டும்.

முருகனுக்கு சக்திகள் இருவர் என்று புராணத்தில் படிக் கிறோம். அவர்கள் வள்ளி தெய்வயானை என்பவர்கள். அவர்களை கிரியாசக்தி இச்சாசக்தியின் சொரூபங்கள். இவர்கள் முருகப் பெருமானுக்கு வலதுபுறமும் இடதுபுறமும் இருப்பவர்கள். பெருமானைவிட்டுத் தனியே நிற்பவர்கள். ஆனால் மூன்றாவது சக்தியாகிய ஞானசக்தியோ, அவனை ஒட்டி அவன் மெய்மேல் தொட்டுக்கொண்டே நிற்பது. அதுதான் வெற்றிவேல் ஆகும். ஆகவே அவனுக்கும் மூன்று சக்திகள் உண்டு.

மனிதனுக்கும் சக்தி அல்லது ஆற்றல் உண்டு. அதனை நேரில் அறிவோம். ஆற்றல் நீங்கின் அசைவு நீங்கும். அசைவு நீங்கின் உயிர் இல்லை. ஆனால் அவன் ஆற்றலுக்கும் இறைவன் ஆற்றலுக்கும் வேறுபாடு உண்டு. அவன் ஆற்றலோ கண்டம். இறைவன் ஆற்றல் அகண்டம். கண்டமாக இருக்கும் ஆற்றலை அகண்டமாக்க முயல்வதே ஆற்றலை முன்னேறச் செய்வ தாகும்.

---

## 4. சமயப் பகுதி

# கோயில் நுழைவு விதிகள்

(கோ. கி.)

கோயில்கள் சமய நிலையங்கள் ஆகும். அவைகள் சமயத்தைத் தழுவினவர்களின் நன்மைக்காக ஏற்பட்டவை. ஆனால் சமயத்தில் இருந்த மக்கள் எல்லாருக்கும் அவைகள் பயன்படவில்லை. அவற்றுள் சிலர் நுழையலாம், சிலர் நுழையக் கூடாது என்று இருந்தது. இவ்வித வேறுபாடு அவரவர்கள்

பிறந்த குலத்தை ஒட்டி இருந்தது. ஒரே சமயத்தைத் தழுவி இருந்தாலும் சில குலங்கள் உயர்ந்தவை, சில தாழ்ந்தவை, சில தீண்டத் தகாதவை என நடப்பு முறையில் வைத்துக்கொண்டிருந்தார்கள். இவ்வித பேதம் சில சமய நூல்களில் ஏற்கப்பட்டிருந்தபோதிலும் சிறப்பாக வழக்கத்தை அனுசரித்தே அது நடவடிக்கையில் இருந்தது. ஆங்கிலர் நமக்காக எடுத்து ஏற்படுத்திய சட்டத்தில், நூல்களைக் காட்டிலும் பழக்க வழக்கங்களே உறுதியானவை ஆயிற்று. சமய சம்பந்தங்களில், ஆகமங்களில் இருந்த விதிகளைக் காட்டிலும் பழக்கத்தினால் ஏற்பட்ட விதிகளே மேம்பாடடைந்தன. இந்த விபரீதங்கள் படித்த மக்களை இழிவுபடுத்தின. ஆகவே அவைகளை மாற்றுவதற்காக நாட்டில் முயற்சிகள் தோன்றின.

ஆகமங்களின்படி அர்த்த மண்டபத்துள் தீட்சை பெறாத பிராமணன் நுழையக்கூடாது. ஆனால் இப்பொழுதோ தீட்சை இன்னதென்று அறியாத பிராமணன் மாத்திரம் அன்றி அவன் வீட்டு விதவைகளும் முக்கியமாக நுழைந்து ஏனைய அடியார்களை கடவுள் சந்நிதானத்திலிருந்து மறைக்கிறார்கள். இக்கொடுமையை விலக்கவே ஆலய நுழைவுச் சட்டம் ஏற்பட்டது.

அச்சட்டத்தின்படி அனுசரணை விதிகள் ஏற்படுத்துவதற்காகச் சில பேர்களை ஒரு குழுவாக அரசியலார் நியமித்தார்கள். அக்குழு சமீபத்தில் சந்தித்துச் சில விதிகளை ஏற்படுத்தி அரசியலார்க்கு அனுப்பியிருக்கிறது. அவற்றில் சில சிறந்த பகுதிகளை, இங்கே எழுதி பொதுமக்களின் ஆலோசனைக்கு விடுவோம்.

1. நிர்வாகி என்றால் தருமகர்த்தா அல்லது கோயில் நிர்வாகம் செய்பவர் என்று கொள்ளவேண்டும்.

2. கோயிலுக்குள் நுழைந்து வழிபாடு செய்வதில், கோயில் நிர்வாகிகள் சட்டப்படிக்கும் விதிகளின்படிக்கும்



செய்யும் கட்டளைகளுக்கு வழிபடுவோர் அடங்கி நடக்க வேண்டும்.

3. அடியிற்கண்ட மக்கள் கோயில்களில் நுழையவோ, வழிபாடு செய்யவோ, தீர்த்த நீரை உபயோகிக்கவோ, மலை, மலைப்பாதைகள் இவைகளில் செல்லவோ கூடாது.

(a) இந்துக்கள் அல்லாதார்.

(b) பிறப்பு இறப்புத் தீட்டு அடைந்தவர்கள்.

(c) தூரமான பெண்கள்.

(d) குடி துர் நடத்தை உள்ளவர்கள்.

(e) தொத்துநோய் கண்டவர்கள்.

(f) பைத்தியம் பிடித்தவர்கள் (நிர்வாகிகள் அனுமதியின்பேரில் தகுந்த துணையுடன் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.)

(g) பரம்பரைப் பிச்சைக்காரர்கள்.

4. கோயில் நுழைவு, கருப்பக்கிரகத்திற்கும் மடப்பள்ளிக்கும் இடம் தராது.

5. நிர்வாக அதிகாரிகள் வழிபாட்டு விஷயமாக அவ்வப்போது உத்தரவுகள் இடலாம். ஆனால் அவைகளில் வகுப்பு பேதம் காட்டக்கூடாது. இதுவரைக்கும் பொதுமக்கள் சென்றுகொண்டிருந்த பாகங்களுக்கு இனிமேலும் போகலாம்.

6. கோயிலுக்குள் நுழைவதன் முன் குளித்துத் தூய்மையான உடை உடுத்துக்கொண்டு செல்லவேண்டும். இதில் கோயில் வழக்கத்தை அனுசரிக்கவேண்டும். பாதரட்சை அணிந்துகொண்டு செல்லக்கூடாது.

7. கோயிலுக்குள் எச்சில் உமிழ்தல், தாம்பூலம் போடுதல், சுருட்டுப் பிடித்தல், அதற்குள்ள வஸ்துக்களை கொண்டு செல்லுதல் முதலியவை கூடாது. கோயில் வழக்கத்திற்கு எதிரிடையாக, மீன், முட்டை, இறைச்சி, மது முதலியவைகளை அதற்குள் கொண்டு போகக்கூடாது.

கோயிலின் தூய்மை குறைக்கவும் கோயிலை இழிவுபடுத்தவும் உள்ள செயல்களை எவரும் செய்யக்கூடாது.

8. கோயில் அமைதியைக் கெடுக்கும்படியாக எவனும் உரக்கப் பேசியோ வேறு விதமாக நடந்தோ கோயில் வழிபாட்டைத் தடை செய்யக்கூடாது.

9. நீர் நிலைகளை உபயோகிக்கும் எவனும் சுகாதார முறைகளை அனுசரித்து நிர்வாகிகள் இடும் கட்டளைகளை மீறக்கூடாது.

10. எந்தச் சடங்குகளுக்கு நீர்நிலைகள் உபயோகிக்கப் பட்டனவோ அவைகளுக்கே அவைகள் உபயோகிக்கப்பட வேண்டும்.

11. கோயில் இடங்கள் வழக்கப்படி உபயோகிக்கப் பட்ட செயல்களுக்கு அன்றி வேறு செயல்களுக்கு உப யோகிக்கக் கூடாது.

12. எந்த நிர்வாகியும் புது முறைகளை வழிபாட்டு நேரம், இடம் முறை இவைகளில் புகுத்திப் பொதுமக்கள் உரிமைகளை பாதிக்கக்கூடாது.

13. மேல் அதிகாரிகள் மாற்றினாலன்றி நிர்வாகிகளின் உத்தரவுகள் ஊர்ச்சிதமாகி இருக்கும்.

14. யாராவது ஒருவர் நிர்வாகியின் உத்தரவிற்குப் கீழ்ப்படியாமல் எதிர்த்தால் அவனை கோயிலைவிட்டு அகற்றலாம். அவன் போகாவிட்டால் ஹெட்கான்ஸ்டேபில் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு போலீசு அதிகாரி அவனைப் பிடித்துச் சட்டபடி நடத்தலாம்.

15. இவ்விதிகளுக்கு விரோதமாக எவன் செய்கிறானோ அவன் சுத்திச் சடங்குகளுக்கு ஆகும் பணம் கொடுக்க வேண்டும். அந்த உத்தரவிற்கு மேல் சர்க்காருக்கு அப்பீல் உண்டு. அத்தொகை கந்தாயம்போல வசூலிக்கப்படும். இதைத்தவிர கிரிமினல் தாப்பில் 100 ரூ. குறையாத தண்டம்



இடப்படும். இரண்டாம் குற்றத்திற்கு 500 ரூ. தண்டனை விதிக்கப்படலாம்.

16. இந்த நடவடிக்கைகளுக்கு அறநிலையச் சங்கத்தின் அனுமதிவேண்டும்.

17. இந்த விதிகளை அனுசரித்துக் கெட்ட எண்ணம் இல்லாமல் அதிகாரி செய்தால் அவர்மீது குற்றம் சாட்ட முடியாது.

18. இவ்விதிகளின் நடவடிக்கை விஷயமாக சந்தேகம் நேரிட்டால் சர்க்கார் தீர்ப்புக்கு விடவேண்டும்.

இந்த விதிகள் பொதுநலத்தை உத்தேசித்துச் செய்யப் பட்டிருக்கின்றன. பொதுமக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு முடிவான தீர்மானங்களை அரசியலார் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## 5. கலைப்பகுதி

# 1. அரமகளிர்

(கோவை கிழார்)

தமிழ்ப்பண்டைய இலக்கியங்களில் அரமகளிர் என்ற சொல் பல இடங்களில் காண்கிறோம். அச்சொல்லுக்குத் தெய்வப்பெண்டிர் என்ற பொருள் உரைக்கப்படுகிறது. அப் பொருளிலிருந்து அவர்கள் மானுடப் பெண்களுக்கு மேலாக உள்ள ஒரு நிலையில் இருக்கும் பெண்கள் என அறியலாம். அத்தன்மை கொண்ட உயிர்கள் உண்டோ என இக்காலத்து மக்கள் ஐயுறுவார்கள். மேல் நாகரீகத்தில் திகழும் சிலரும் இக்காலத்தில் அத்தன்மையுள்ள உயிர்கள் உண்டு என நம்பத் தொடங்கிவிட்டார்கள். அந்நம்பிக்கை உள்ளவர்கள் சங்கங்களை அமைத்து அவைகளின் மூலமாக ஆராய்ச்சிகள் செய்தும் நூல்களை இயற்றியும் முயற்சிகள் எடுத்துக்கொண்டு

வருகின்றனர். இவ்விதம் இயற்கை எல்லைக்கு மீறின நிலையில் உள்ள உயிர்களைப் பற்றிப் பல கதைகளும் உலகத்தில் வழங்கி வருகின்றன. நமது நாட்டிலே படித்தவர்கள் யக்ஷர் யக்ஷிணி கள் என்ற வகையிலும் படியாதவர்கள் பேய் பிசாசு என்ற வகையிலும் நம்பியிருக்கின்றனர். மேல்நாடுகளிலே பிரேத பைசாசங்கள் (Ghosts) என்ற முறையில் பல கதைகள் சொல்லியும் எழுதியும் இருக்கிறார்கள். மேல்நாட்டு இலக்கியங் களில் குறட்பூதம் (Imp) வான் நற்பூதம் (Fairy) நீர் மகளிர் (Water Nymph) முதலிய வகைகள் கூறப்பட் டுள்ளன. ஆகவே தமிழ் இலக்கியங்களில் இவ்வித தெய்வ மகளிரைப் பற்றி கூறியிருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

தமிழ் நூல்களில் அரமகளிர் மூன்று வகையினராகக் கூறப்பட்டுள்ளார்கள். வானரமகளிர், சூரரமகளிர், நீரரமகளிர் என்று மூன்று வகையினர் பெயர்களைக் காண்கிறோம். இவர்கள் வானிலும், காற்றிலும், நீரிலும் வசிப்பவர்கள் என ஊகிக்கலாம். இம்மூவகை மகளிருக்குள்ளே சூரரமகளிரைப்பற்றித் திருமுரு காற்றுப்படை என்ற சங்கநூல் கூறுகிறது. இந்நூலே சைவத் திருமுறைகளில் பதினோரும் திருமுறையில் உள்ள ஒரு பிர பந்தம். இதனை அருளிச் செய்தவர் நக்கீரதேவர். முருகப் பிரானிடம் அருள்பெற்று வரும் ஒரு அன்பன், அவ்வருள்பெற வேண்டி நின்ற மற்றொரு அன்பனுக்கு அப்பெருமான் எழுந் தருளியிருக்கும் திருத்தலங்களை அறிமுகப்படுத்தும் வகையில் எழுந்தது இந்த ஆற்றுப்படை. இத்திருத்தலங்கள் ஆறுபடை வீடுகளும் வேறு பிறவும் ஆம். அவைகளில் முதல் படை வீடாகிய திருப்பரங்குன்றத்தை எடுத்துக் கூறுகையில் அதன் மலைச் சாரலில் சோலைகள் உண்டு என்றும் அச்சோலைகளில் சூரரமகளிர் முருகனை வாழ்த்தி அவனது,

"கோழி ஓங்கியவென்று அடுவிறற்கொடி
வாழிய பெரிது"



என்று வத்திப் பலருடன் சிலம்பகம் சிலம்பப்பாடுவோர்கள் என்றும் அருளுகிறார். அச்சூரரமகளிருடைய நடை உடை பாவனைகளை வெகு விரிவாக அதில் கூறுகிறார்.

மால்வரை நிவந்த சேண் உயர் வெற்பில் 13
கிண்கிணி கவைஇ ஒண்செஞ் சீறடி
வெள்ளிக் குறுமுறி கிள்ளுபு தெரியா 37
சூரரமகளிர் (ஆடுஞ்சோலை) 41

என்பன அவ்விவரங்கள். அப்பெண்களின் காலடிகள் சிறியவை, சிவந்தவை, கிண்கிணி சூழ்ந்தவை; கால்கள் திரண்டவை; இடை வளைந்து ஒடுங்கியது; தோள்கள் மூங்கிலை ஒத்தவை; பூந்துகில் சிவந்தது; அரை மேகலை அணிந்திருக்கும், அணிகள உயர்ந்த பொன்னால் ஆகியவை; மேனி குற்றமற்ற இயற்கை அழகு பொருந்தியது; அதன் சாந்தி வெகுதூரம் செல்லும். இவர்களுடைய தோழிப் பெண்கள் இவர்களுக்குக் கோலம் செய்வார்கள். இவர்கள் கூந்தலைக் கோதி வகிர்ந்து, வெட்சிப்பூ குவளைப்பூ முதலிய மலர்களை இட்டு முடிப்பர். ஸ்ரீதேவி என்னும் அணியை தலையில் பிணைப்பர். நெற்றியில் திலதம்இட்டு சுறாமீன் போன்ற சுட்டியை இடுவர். கொண்டை வில் சண்பகப்பூவினைச் சூட்டுவர். அதன்மேல் மருதமலரைச் செருகுவர், அதன்மேல் அரும்பு மாலையை பிணைப்பர், அசோகந்தளிரைக் காதிலே சொருகுவர். மார்பில் அணி களுடன் தளிர்மாலை அசைய வைப்பர். மார்பில் சந்தனத்தை அப்புவர். இவ்விதம் கோலம் செய்துகொண்டு விளாத்தளிர் களை ஒருவர்மேல் ஒருவர் எறிந்துகொண்டு விளையாடி மலையிட மெல்லாம் எதிரொலி ஒலிக்கும்படியாகப் பாடுவர் என்பது இவ்வருணனை.

சூரரமகளிரைப்பற்றி அகநானூற்றில் 162-ல்

" நேர்கொள் நெடுவரைக்கவாஅற்
சூரரமகளிரிற் பெறற்கரி யோளே "

என்றும், செ. 32-ல்

" குளிர்கொள் தட்டை மதனில புடையா
சூரரமகளிரின் நின்ற நீ மற்று "

என்றும் குறுந்தொகை 53-ல்

" நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோ டுற்ற சூளே "

என்றும் வந்துள்ளன.

குமரகுருபரரும் முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழில் சிற்றிற் பருவத்தில் (7)

" பிள்ளைமதி......
கள்ளவிழ் சூரரமகளிர்
காமன் கொடியேற் றெனவியப்ப "

எனக் கூறுகிறார். பிங்கலந்தையில் "சூரரமகளிர்" எடுத்தாளப் பட்டது.

இனி, வானர மகளிரைப் பற்றித் தமிழ் நூல்களில் பல குறிப்புகள் கிடைக்கின்றன. மேலே சொன்ன திருமுருகாற்றுப்படையிலேயே திருச்சீரலைவாய்ப் பகுதியில் முருகப் பிரானுடைய திருக்கைகளை விவரிக்கும்போது,

" ஒருகை, வானர மகளிர்க்கு வதுவை சூட்ட " எனக் கூறப்பட்டுள்ளது. அதற்குப் பொருள் கூறுகையில் " ஒருகை தெய்வப் பெண்களுக்கு மணமாலை சூட்டுவது " என விவரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சிலர் 'சூர்' என்பதற்கும் 'தெய்வம்' எனப்பொருள் கொண்டு இரண்டையும் ஒரே மகளிர்க்கு உரிமையாக்குவர். ஆனால் 'சூர்' என்றால் 'அச்சம் தரத்தக்க' எனப் பண்டைப் பொருள் இருத்தலால் இருவகை மகளிரும் வேறு வேறு ஆவர் எனக் கொள்ளவேண்டும்.



வேறு சில சங்க நூல்களில் சில மேற்கோள்களைக் காட்டுவோம். ஐங்குறு நூறு முல்லை. 418. செ.

" வானர மகளோ நீயே
மாண்முலை யுடைய முயங்கியோயே "

என வந்துளது. இது கிழவன் பருவம் பாராட்டுப் பத்தில் உள்ளது. தலைமகன் இல்லம் புகுந்தபோது தலைமகட்கு சொல்லியவாறு கூறுவது,

" வானரமகள் கொல்லோ "

என்று இறையனார் அகப்பொருள் உரையில் வந்துளது.

நீரரமகளிர் நீர் நிலைகளில் வாழும் தெய்வப் பெண்டிர். யவன நாட்டு இலக்கியங்களிலே இம்மகளிரைப் பற்றி மிகுதியாகக் கூறப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் மத்திய காலத்து இலக்கியங்களில் இம்மகளிரைப் பற்றிப் பல ஐதீகங்கள் உண்டு. ஆங்கில நாட்டுக் குழவிக் கதைகளிலே இம்மகளிர் செயல்கள் பாராட்டப்பட்டிருக்கின்றன. (Nymphs in fairy tales) ஆங்கிலப் பண்டைக் கதைகளாகிய ஆர்தர் மன்னன் கதைகளிலும் நீரரமகளிர் வருகிறார்கள். ஒரு அழகான பூம்பொழில் தடாகத்திலே ஒரு அழகிய நீரரமகள் தோன்றி ஒரு அற்புத வாளை ஆர்தர் மன்னனுக்கு உதவினாள் என்பது அக்கதை. ஆர்தர் இறுதிக் காலத்திலும் அந்த வாளை அத்தடாகத்தில் வீசி எறிய அழகிய கங்கணம் அணிந்த ஒரு பெண்மணியின் கை நீர் மட்டத்திற்கு மேலே எழும்பி அந்த வாளைப்பிடித்துக்கொண்டு மீண்டும் நீருக்குள் மறைந்தது என அக்கதை கூறும். 'சர்வால்டர் ஸ்காட்' என்ற ஸ்காட்லாண்ட் கவிஞர் எழுதிய நீர்நிலையணங்கு (Lady of the lake) என்ற காவியத்தில் நீரில் வாழும் தெய்வப் பெண்டிர் சரிதம் கூறப்பட்டுள்ளது. மேல்நாட்டார் கருத்தின்படி இப்பெண்டிர் இடுப்பிற்குமேல் அழகிய பெண்ணின் உருவமும் இடைக்குக்

கீழே மீனின் உருவமும் கொண்டவர்கள். நமது நாட்டில் காணும் மச்சாவதார ஓவியத்தை ஒத்திருக்கும் வடிவு கொண்டவர்கள். தலை நீண்ட கருங்கூந்தலும் மதிமுகமும், பொன்மேனியும் திரண்ட தனங்களும் வளைந்த இரட்டை வாலும் கொண்டவர்கள். அழகாக இன்னிசை பாடி எப்போதும் மகிழ்ச்சியிலேயே இருப்பவர்கள் நீருக்குள் வாழ்ந் தாலும் வேண்டியபோது நீர்மட்டத்திற்குமேல் எழும்பி நிற்பார்கள். அப்போது அவர்களுடைய உருவம் எவரையும் வசிகரிக்கக்கூடிய தன்மையில் பொலிந்து நிற்கும். இவ்வித மான உருவத்தின் எண்ணமே நீரர மகளிரைப் பற்றி எல்லா நாடுகளிலும் இருந்தது.

தமிழ்நாடுகளிலே ஈழநாட்டில் இம்மகளிரைப் பற்றி ஓர் அரிய எண்ணம் உண்டு. அதனை விபுலாநந்த அடிகள் தமது யாழ்நூலில் அருமையாக எழுதியிருக்கின்றார். இலங்கையில் கீழ்க்கரையில் மட்டக்களப்பு என்ற ஒரு கடற் கரைப் பட்டினம் ஒன்று இருக்கிறது. இது தமிழ்மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே குடியேறி வாழும் ஒரு அழகிய ஊர். கரை ஓரம் எல்லாம் தென்னம் பொழில்கள். அப்பொழில்களுக்கு இடையிலே பல அருமையான நீர்நிலைகள் உண்டு. அங்கே இயற்கை அழகின் நடுவிலே அமைதியே உருவமாகக் குடியிருக்கும் காட்சி காணலாம். அவ்வித அழகிய வாவி ஒன்று புளியந்தீவுக்கோட்டைக்கும் கல்லடிக்கும் இடையில் உண்டு. அதிலே இளவேனிற் காலத்திலே நிறைமதி நாள்களிலே வானம் களங்கம் அற்றிருக்கும் வேளையில் நடு யாமத்திலே சிறு தோணியின்மீது அமர்ந்து அரவமின்றிச் சென்றால் ஒரு அற்புதச் சம்பவம் நிகழும். அவ்வமைதியின் இடையில் உற்றுக்கேட்டால் அந்நீரிலிருந்து இன்னிசை எழும்பி நம் செவிவாய் புகுந்து உள்ளத்தை உருக்கிவிடும். இவ்வித அற்புத ஒலி எவ்வாறு வருகிறது என்று பல



ஆராய்ச்சியாளர் முயன்றும் அறியவில்லை. இதைப்போல இன்னிசை அமெரிக்கா நாட்டுக் காலிபோர்னியாவில்தான் ஏற் படுகிறதாம். உலகிலே வேறு எங்கும் இல்லை என்பர். இன்னிசையைச் செவிமாந்தி இன்புறுவதற்குப் பல மேனாட் டார்களும் வருவதுண்டு. நீரினின்றும் எழும்பும் ஒலி ஒரு நீர்வாழ் செந்துவினால் உண்டாவது என்று அன்னார் கூறுவர். இந்த உயிர் வகையைப் பாடுகின்ற மீன் (Singing fish) என்று பெயரிட்டுள்ளார்கள். மீன் நீரிலுள் குதித்து ஆடுமே யன்றி பாடுதல் கேட்டறியோம். இதனை ஒரு கவிஞர் வெகு அழகாக வருணித்துள்ளார். அக்கவி முழுதும் தமிழ்ப் பொழிலும் யாழ்நூல் பாயிரத்திலும் வெளிவந்துளது. இங்கு ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கூறுவோம் :

விளங்குமட்டு நீர்நிலையுள் எழுந்ததொரு நாதம்
நீலவானிலே நிலவுவீசவே
மாலை வேளையே மலைவு தீருவோம்
சால நாடியே சலதி நீருளே
பாலை பாடியே பலரொடாடுவோம்
நிலவு வீசவே மலைவு தீருவோம்
சலதி நீருளே பலரோடாடுவோம்
நிசரி காகமா மபத நீநிசா
சரிக மாமபா பதநி சாசரீ
ரிகம பாபதா தநிச ரீரிகா
கமப தாதநீ நிசரி காகமா
என்ன எழுந்தது அன்னிசைத்தீம் பாடல்
... ... ... ... ... ...
... ... ... ... ... ...
... ... ... எழுவர் மடநல்லார்

நீருள் இருந்தெழுந்து நின்றார் அரமகளிர்
ஆதலினால் மூப்பறியார் அந்தீங் குழலொலியும்
ஓதிய யாழின் ஒலியும் எனமொழிவார்.

பைம்புனலின் மேல்படர்ந்த பாசிநிகர் கூந்தலார்
அம்பொனின்மேனி அரையின்கீழ் மீன் வடிவம்
செங்கமலம் பொற்கரங்கள் திங்கள் மதிமுகத்தில்
பொங்கிய புன்முறுவல் பூத்தார் புலமையார்
... ... ... ...
... ... ... ... ... ...
பொன்னின் கபாட புரத்துறைவோம் மாவலிநீர்
தன்னிற் படிந்து சமனொளியைக் கும்பிடுவோம்
ஆடுவோம் பாடுவோம் ஆராத காதலினால்
வாடுவோம் பின்னர் மகிழ்வோம் நகைபுரிவோம்
அச்சமுறுவோம் அடையாதார் தங்களையாம்
இச்சையறவே இழித்துரைக்கும் நீர்மையேம்
உருத்தெழுந்து கோபிப்போம் உண்மை உரைப்போம்
அருத்தியொடு வீரம் அறிவோம் வியப்புறுவோம்.
திங்கள் நிறைநாளில் சேர்வோம்இந் நீர்நிலையை
சங்குல் கழியுமுன்னே கார்படிந்து மைக்கடலை
சென்றுயாம் சேர்வோம் எம்செய்கை யிதுவென்றார்.

என்றபடி இது கவி கற்பனை எனினும், இலக்கியங்களின் படி பல நாதங்களுள் சங்கநாதம் ஒன்று கடற்சங்கும் கழிச்சங்கும் ஒன்றுகூடி உராய்ந்து ஒலி செய்யும், அவ்வாறு மட்டக்களப்பில் ஏற்பட்டாலும் படலாம் என்று அடிகள் கூறுவர்.

இவ்வரலாறு ஓதிய பிறகு நீரரமகளிர் இன்னிசை கேட்க மட்டக்களப்பிற்கு வருவோமா என நெஞ்சில் எழிற்சி உண்டாகிறது அல்லவா ?

இனி, இந்நீரரமகளிரைப் பற்றிப் பண்டைத்தமிழ் நூல்கள் யாது கூறுகின்றன என்று ஆராய்வோம்.

பெருங்கதை என்ற கொங்குவேண்மாக்கதையில் வத்த காண்டம் 17-40-ல் நீரரமகளிர் என்று வந்துள்ளது.

குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த பண்டார மும்மணிக்கோவையில் (5)



" மணிவடஞ் சுமந்த...
புலவியிற் றீர்ந்து கலவியிற் றிளைக்கும்
நீரரமகளிர் பேரெழில் காட்ட "

என வந்துளது. நீரரமகளிரின் இன்ப இயல்பு இங்கே கூறப்பட்டது.

அகநானூறு குறிஞ்சி 342-ல் மதுரைக் கணக்காயனார் பாட்டில் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறியதில்,

" நீரிழி மருங்கில் கல்லளைக்கரந்த அவ்
வரை யரமகளிரின் அரியள் "

எனத் தலைமகளை ஒப்பிட்டுக் கூறுகிறான். இங்கே நீர்வாழும் அரமகளிரைப்பற்றிக் கூறியிருக்கலாம்.

இனி, பொதுவாக அரமகளிர், அரமங்கை அரமாதர் என்ற சொற்கள் பல இடங்களிலும் வந்துள்ளன. இச்சொற்களுக்குத் தெய்வப்பெண்கள் எனப் பொருள் கொண்டிருக்கின்றனர்.

திருக்கோவையாரில் 371-ல் அரமங்கை ஆளப்பட்டது. சூடாமணி நிகண்டில் அரமகளிர் வந்துள்ளது. இரகுவமிசத்தில் (திக்கு. 105) அரமாதர் உரைக்கப்பட்டது. (அம்மென் மூரல் அரமாதர்).

அரம் என்பதற்குப் பாதாளம் என்ற பொருளும் உண்டு. (இரகுவம்சம் யாக 81) ஆகவே, நாகமங்கையராக இருக்கலாம். நாகரும் தேவரும் ஓர் இனத்தில் கொள்ளப்படுவரோ ?

பிற்காலத்துப் புலவர்களில் குமரகுருபரர் அரமகளிரைப் பற்றி மிகுதியாக ஆண்டுள்ளார்.

மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் ஊசல் 9,

" கொன்செய்த செழுமணித்திருவூசல் அரமகளிர்
கொண்டாட ஆடுந்தோறும் "

என்றும் முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழில் (தால்—1)

“ பல்கும் பசுந்தேன் அசும்பிருந்த
பின்ஞழலகைத் தாமகளிர்
பேதைக் குறும்பு விளையாடும்
போரயத்து ”

என்றும், மேலும் தாலம்—2-ல்

“ தொடுக்கும் ...
அடுக்கும் களிறென் றாமகளிர் ஐயுற்றிட ”

என்றும் ஆண்டிருக்கிறார்.

இவ்வாறு அரமகளிர் சைவ நூல்களிலும் வந்திருத்தலை ஆராய்க.

— —

## 2. ஏழில்

சென்ற திங்கட் சித்தாந்த வெளியீட்டில் ‘ ஏழில் ’ என்னும் தலைப்பில் எழுதிய பெரியார் அது ஒரு இன்னியம் என்றும் தற்கால நாகசுரத்தின் மூதாதையாக இருக்கக்கூடும் என்றும் ஊகித்து எழுதியிருக்கிறார். அது ஒரு இன்னியம் என்பது ஒப்ப முடிந்தது. நாகசுரம் போன்ற துளைக்கருவியோ என்பது ஓர் ஐயம். நக்கீரதேவ நாயனார் அருளிய திருவெழு கூற்றிருக்கையில்.

“ ஏழில் இன்னரம்பு இசைத்தனை ”
“ ஏழின் ஓசை இராவணன் பாட ”

என்று வருதல் ஆராயத் தகுந்தது. நரம்போடு உடன்பட்ட ஓர் இன்னியம் என்று இக்கூற்றுகள் வற்புறுத்துவன. ஆகவே நக்கீரர் காலத்தில் ஏழில் ஒரு நரப்புக் கருவியாக இருந்திருக்கக்கூடும் அல்லவா ?

6. கவிப்பகுதி

## அற்புதக் காதல்

(அழகு மதியன்)

பூங்கோயிலிலே பங்குனித் திங்களிலே பெருந் திருவிழா நடக்கிறது. பல்லாயிரக் கணக்கான மக்கள் எம்பெருமானைக் கண்டு தொழுது அவன் அருளைப் பெறச் செல்லுகிறார்கள். ஊர் எங்கும் மங்கலகரமாக அழகிய தோரணங்களாலும் கொடிகளாலும் விதானங்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருக்கிறது. தெருக்கள் தோறும் நல்லிசை இயங்கள் முழங்குகின்றன. இன்னிசையாளர்கள் அழகாகப் பாடிக்கொண்டு செல்லுகிறார்கள். அறவோர்களும் துறவிகளும் துதிகளை இயம்பிக்கொண்டு செல்லுகிறார்கள். மக்கள் முகங்கள் எல்லாம் ஒரு சிறிதேனும் கவலையோ துயரமோ இன்றி மகிழ்ச்சியே நிரம்பி விளங்குகின்றது. குழந்தை முதற்கொண்டு கிழவி வரைக்கும் எல்லா மக்களும் தூய நெஞ்சினிலே இறைவனைத் துதித்துக்கொண்டு அவனுடைய ஆனந்த தரிசனத்தை எதிர் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். அந்தப் புனித ஊர் முழுதும் திருக்கயிலையோ என்று கூறும் வண்ணம் பொலிந்து நிற்கிறது.

நாட்டுப்புறத்திலே தொலைவிலே ஒரு சிற்றூர். அவ்வூரிலே ஒரு ஏழைக் குடும்பம். பண்டையநாள் முதற்கொண்டு வாழையடி வாழையாக வந்த பரம்பரைச் சைவசமயத்தை அனுசரித்து வந்தது அக்குடும்பம். ஒரு சிறிய நிலத்தில் தாங்களே கைப்பட உழுது வாழ்க்கை நடத்தி நிம்மதியாக இருந்தது அக்குடும்பம். அக்குடும்பத்தில் இப்போது தந்தையும் தாயும் இரண்டு மூன்று குழந்தைகளும் இருக்கிறார்கள். மூத்த பெண்ணே அறிவு தெளிந்து வயது வரும் தருணத்தில் இருக்கிறாள். பங்குனிமாதம் திருவிழாவிற்கு ஊரில் பல

குடும்பங்கள் யாத்திரை செல்வதை அறிந்தார்கள். இச் குடும்பத்திலும் எம்பெருமானை கண்டு தொழவேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது. குழந்தைகளும் மனைவியும் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தார்கள். தலைவனும் ஒத்துக்கொண்டான். அந்த ஆண்டு மழை பெய்து விளைவு நன்றாக ஆகி இருந்தது. வேளாண்மை முழுதும் வீட்டிற்கு வந்தது. பங்குனித் திங்களில் வேறு வேலை கிடையாது. பூங்கோயிலைத் தரிசித்து எம்பெருமானுடைய திருவிழா கண்டு களிக்க வேண்டும் என்பதே அவர்களுடைய மட்டுக்கடங்காத ஆர்வம். ஆகவே அக் குடும்பத்தார் எல்லாரும் புறப்பட்டார்கள். யாத்திரைக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக்கொண்டு வழி நடந்தார்கள். வழி முழுதும் கடவுளைச் சிந்தித்துக் கொண்டே அழகிய திருப்பாசுரங்களைப் பாடிக் கொண்டு செல்கிறார்கள். திருவிழாவிற்குப் போய்ச் சேருகிறார்கள். அன்றே எம்பெருமானுடைய திருவுலா நடைபெறப் போகிறது.

தெருவிலே ஆரவாரம் மிகுதியாயிற்று. யானைகளும் தோரணங்களும் கொடிகளும் சென்றன. எருதின் மேலில் அமர்ந்து ஒருவன் இரட்டை முழவை அடித்துக்கொண்டு சென்றான். இனிய வாத்தியங்கள் முழங்கின. வீடுகளில் இருந்தவர்கள் எல்லாரும் தெருத் திண்ணைகளுக்கு வந்தார்கள். ஊரிலிருந்துவந்த அந்த சைவக் குடும்பத்தாரும் தாங்கள் தங்கியிருந்த விடுதியைவிட்டு வெளியே வந்தார்கள். நெடுந்தூரத்தில் இறைவன் இறைவியுடன் இடபாரூடனாகித் திருவுலா வந்து கொண்டிருந்தான். அருகில் வரவர அவனுடைய திருமேனியின் ஒளியும் இனிய முகத்தின் புன்சிரிப்பும் விலையுயர்ந்த ஆடையணிகளால் ஆக்கப்பட்ட அழகும் காண்போர் கண்களைக் கவர்ந்தன. மக்கள் எல்லாரும் பேரின்பத்தில் முழுகி அரஅர என்று பேரொலி செய்தார்



கள். தாங்கள் கொண்டுவந்த தேங்காய் பழம் சூடம் முதலியவை தந்து பூசை செய்யக் கொடுத்துப் பிரசாதம் பெற்றுத் திருநீறு அணிந்து சென்றார்கள்.

நமது குடும்பத்தாரும் இறைவன் அருகில் சென்று வழிபட்டார்கள். அறிவு தெளிந்த பெரிய மகளோ இளவயது முதல் சமய ஈடுபாட்டில் திகழ்ந்தவள். இன்று இறைவனுடைய பொலிவினைக் கண்டவுடன் அதிலேயே மெய்மறந்து நின்றாள். பேச்சு நின்றது. உணர்வு இழந்து சாய்ந்தாள். பெற்றோர் கவலை உற்றார்கள். தீர்த்தம் தெளித்து திருநீறு இட்டு மெதுவாக விடுதிக்குள் அழைத்துச் சென்றார்கள். பாயில் படுத்தவள் எழுந்திருக்கவும் ஆற்றல் குன்றி இருந்தாள். திருவிழா முடிந்ததும் வெகு கவலையோடு பெற்றோர்கள் அவளை எடுத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினார்கள்.

ஊர் சேர்ந்தும் பிரமை பிடித்தவள் போலவே இருந்தாள். அடிக்கடி அவனுடைய பெயரென்ன என்பாள். யாருடைய பெயர் என்றால் அந்த அழகன், என்னைக் கவர்ந்தவன், என் இறைவன் என்பாள். அவன் பெயர்தான் ஆரூரன், எம்பெருமான், தேவர்பிரான், தியாகராயன் என்று சொன்னால் அத்திரு நாமங்களையே சொல்லிக்கொண்டு மூர்ச்சை போவாள். பிறகு திடீரென்று எழுந்திருப்பாள். அவன் வண்ணம் என்ன என்று கேட்பாள். “பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் அவன் திருமேனி” என்றால் அதையே உச்சரித்துக்கொண்டு நிலத்தில் சாய்வாள். பின்னையும் எழுந்திருந்து அவனுடைய ஊர் எது என்று கேட்பாள். உனக்குத் தெரியுமே அதுதான் ஆரூர் என்றால், ஆர் ஊரா, அதற்கு ஒருவரும் உரிமையோர் இல்லையா ? அவனேதானா ஆரூரன் என்ற உரிமையாளன் என்று பித்தம் பிடித்தவள் போல் சிரிப்பாள். இதனைப் பார்த்த பெற்றோர் இவளுக்கு

சித்தப்பிரமை பிடித்ததுபோலும் என்று மணிமந்திரங்களால் சிகிச்சை செய்யத் தொடங்கினார்கள். ஆனால் பயனில்லை.

“ முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள் ”

என்பதே அவளுடைய நிலைமை ஆயிற்று. இந்நிலையையே கபிலர் வாக்கில்

“ என்தோழி மேனி
விறல் இழை நெகிழ்த்த வீவுஅருங் கடுநோய்
அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்
பரவியும் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல உருவின் கடவுள் பேணி
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதி ”

என்று தலைவியின் தீரா நோயின் நிலையைக் குறித்து செவிலித்தாய் நற்றாய்க்கு கூறினதைக் காண்க.

மேலே கூறியபடி மணிமந்திரங்களாலும் கடவுள் பூசையாலும் தெளியாத தலைவி அன்னை அத்தன் முதலியோர் வந்தாலும் அவர்களை அறியாது கிடந்தாள். வற்புறுத்தினால் அவனே எனக்கு அன்னையும் அத்தனும் என்பாள் ‘ மானிடர்க்கு வாழ்ப்பட்டேன் அல்லேன் ’ என்ற ஆண்டாள் மொழியே கொள்ளத் தொடங்கினாள். பண்டைக்காலம் முதல் தொன்று தொட்டு தன் குலத்தார் பொன்னே போலப் போற்றிவந்த ஆசாரங்களை விட்டாள். மானம் துறந்தவள்போல் தெருவில் செல்லத் தொடங்கினாள். வரவரத் தன் பெயரையும் மறந்தாள். எப்போதும் தலைவனுடைய தாளையே நினைந்து நினைந்து உருகி உருகி அழுது அழுது புரளுவாள்; இவ்வுத்தமி



எப்போது தலைவனை அடைவாள். அடைந்து விட்டாள் என்றே உலகம் கூறுமல்லவா. அந்த நிலையைக்கண்ட முற்றத் துறந்த முனிவராகிய அப்பர் சுவாமிகள்,

“ அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத் தாசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.”

என்று வெகு உருக்கமாக வருணிக்கிறார்.

தலைவி - உயிர் ; தலைவன் இறைவன் ; திரு உலாவில் தரிசித்தது அவன் சன்னிதானத்தை ; அப்போது பக்குவம் அடைந்திருந்தது உயிர். அவன் கடைக்கண் நோக்கம் பட்டது. உலக வாசனை போயிற்று. அவன் அடியை அடைந்தது உயிர். அதற்குத் தன் இச்சை ஒழிந்தது, அவன் இச்சையே ஆயிற்று. இதுவே அப்பர் கவியின் உட்கருத்து.

---

7. ஆராய்ச்சிப் பகுதி

# காடவரும் சைவமும்

கே. எஸ். வைத்தியநாதன், B. A.

தமிழகத்தின் எல்லையில் தோன்றிய சரித்திரப் புகழ் பெற்ற அரசர்கள் பல்லவர் என்பர். இவர்கள் காடவர், காடுவெட்டி, பல்லவரையர், காடவரையர் எனப் பலவிதமாக அழைக்கப்பட்டு வந்தனர். சைவ மதத்தின் வளர்ச்சிக்கும் சிவன்மீது பக்தி பெருகவும் காரணபூதராக காடவர் குலத்தில் தோன்றிய மன்னர் பலர் பெருந்தொண்டு புரிந்துள்ளனர். இவர்களுள் முக்கியமாக குணபரன் என்ற மகேந்திர வர்மன் என்பவன், முதலில் ஜைன மதத்தைத் தீவிரமாகப் பின்பற்றி, திருநாவுக்கரசைப் பல சோதனைக் குள்ளாக்கி, பின்னர்

தெளிந்து, அப்பர் முயற்சியால் சைவ மதத்தை மேற்கொண்ட மன்னன். சைவத்துக் கடிமையான இக்காடவன் சிவனுக்குப் பலவிடத்தும் கோயில்கள் எடுப்பித்தான். பரஞ்சோதி என்ற சிறுத்தொண்ட நாயனார், காடவர் மன்னனான குணபரன் புதல்வன் முதலாம் நரசிம்மனுடைய சேனாதிபதியாக விளங்கி வாதாபி மன்னனை வெற்றி கொண்டதை யாவரும் அறிவர். திருச்செங்காட்டங்குடிக்கு வந்து தம் வாழ்நாட்களை சிவனைப் பணிவதில் கழிக்கத் துணிந்ததை கேள்வியுற்ற மன்னன் விடையளித்து அந்நாயனார்க்கு வேண்டுவன தந்து சிவபக்தி குறைபாது நாடெங்கும் விளங்கச் செய்தான். இரண்டாம் நரசிம்மன் காலத்தும் சிவமதத்திற்கு பணிகள் நடந்தன. முக்கியமாக காஞ்சியில் ராஜசிம்ம பல்லவேச்சுரம் கட்டுவித்தான். இவன் பட்டமகிஷி ரங்கபதாகை ஒப்பற்ற மகேந்திரேசுவரர் கோயிலில் சிவனுக்கு ஓர் அழகிய கிருகம் ஏற்படுத்தினாள்.

பின்னர் இக்காடவ குலத்தில் தோன்றிய சிவமதத்தின் பற்றுக்கோடாக விளங்கிப் பிற்காலத்து 63 சிவனடியார்களுள் இருவராகக் கருதப்படும் தவப்பயன் பெற்ற மன்னர்கள், ஐயடிகள் காடவர்கோனும், கழற்சிங்க நாயனாரும் ஆவர்கள் என்று சேக்கிழார் அருளிச் செய்த பெரிய புராணத்தால் தெரியவரும். கழற்பெருஞ் சிங்கனார் போரில் பெருவன்மையுடைய வீரர் என்றும், வீரக்கழல் அணிந்த அக் காடவர்கோன் வடநாட்டை தனதாட்சிக்குட் படுத்தினார் என்றும், பின்னர் சைவ மதத்தில் தனது நிகரற்ற பக்தியால் சிவனடியார்களைப் பெரிதும் பாராட்டினார் என்றும், ஒருமுறை திருவாரூர் சிவபிரானை தம் பத்தினியுடன் தரிசிக்க வந்தபொழுது, அவ்வம்மையாற் திருப்பூமண்டபத்தின் தரையில் கிடந்த பூ ஒன்றை அறியாது முகந்த குற்றத்திற்காக மற்றொரு சிவனடியாரால் மூக்கு அறுபட்டதையும், இரத்தம் பெருக்குற்றதையும் கண்ட கழற்சிங்கர் சாந்தியடையாது, குற்றம் செய்தது தன் பத்தினியின் கையன்றோ வென்று தன் உடைவாளால் அதையும் வெட்டி வீழ்த்தினார் என்றும், அதைக் கண்ட சிவனடியார்கள் வியக்க அமரர் பூமாரி



பெய்து போற்றினர் என்றும் பெரிய புராணம் கூறும். மேற்கூறிய இரு காடவ நாயனார்களை, சரித்திர ஆதாரம் பெற்ற பல்லவ பரம்பரையிலினுள்ள மன்னர்களுடன் துணிபுடன் ஒப்புறுதற்கு போதிய சான்றுகள் இன்னும் கிடைத்தில; விசனிக்கத்தக்கதே. எனினும் இவர்கள் தஞ்சைச் சோழ வம்சத்து இரண்டாம் பரம்பரையின் முதலரசரான விஜயாலயனுக்கு காலத்தால் மிகவும் முற்பட்டவரே என்பதில் ஐயமில்லை.

மற்றொருவர் சிம்மவர்மன் என்ற காடவரசர். இவர் தனக்குற்ற வெண்குஷ்ட நோயைப் போக்கிக்கொள்ளும் பொருட்டு, சிவன்மீதுள்ள எல்லையற்ற பக்தியால், தில்லையை அடைந்து, கோயிலுக்கு எதிரே உள்ள சிவகங்கையில் மூழ்கினர். அதன் பயனாக அவர் உடம்பு சிவப்புற்று, நோய் நீங்கி சந்தோஷமடைந்தார் என்றும், சிவமதத்திற்கும் சிவனடியார்களுக்கும் பலவிதத்தாலும் தொண்டு புரிந்தனர் என்றும், தலபுராண வரலாறுகளால் போதரும். சிவப்புற்றது தோன்ற ஹிரண்யவர்மன் எனப் பெயர் பெற்றார்.

பிற்காலத்தில் ராஜமார்த்தாண்டன் என்ற அபராஜிதன் காலத்தில் திருத்தணியில் உள்ள திருவீரட்டானேசுவரர் கோயில், நம்பி அப்பியைக் கொண்டு, கட்டுவிக்கப் பெற்றது என்றதும், திருஒற்றியூர் தலத்துக் கோயிலுக்கு இம்மன்னவன் காலத்துத் தானங்கள் பல உள என்றும் கல்வெட்டுகளால் தெரியலாகும்.

இவர்களுக்குப் பின்னர் இக்காடவ குலத்தில் மிகுந்த சைவ மதப்பற்றுடன் விளங்கினவர் கோப்பெருஞ்சிங்கன் என்ற பிற்கால மன்னர்.

காடவ குலத்து அபராஜிதன் காலத்திற்கு முன்னமேயே பல்லவ ஏகாதிபத்தியத்திற்குக் கீழ்ப்பட்ட நிலையிலிருந்த சோழர் கிளையினர் குலத்துத் தோன்றின விஜயாலயன் என்னும் வீரன் சோழ பரம்பரையை தஞ்சையில், முத்தரையரை வென்று தாபித்தான். அவன் மகனான ஆதித்ய சோழன் அபராஜிதனைக் கொன்று பல்லவ நாட்டையும் கைப்பற்றினான். அது முதல் பல்லவர் ஏகாதிபத்திய நிலையை யிழந்து சோழாதி

யில் குறுநில மன்னர்களாகவும், நாடுகளுக்கும் சோழர் படை
களுக்கும் தலைவர்களாகவும், திகழ்ந்தார்கள். இப்படி வந்தவர்
களுள், சுங்கந் தவிர்த்த குலோத்துங்கன் காலத்தில் முதன்மை
பெற்று விளங்கிய வீரன் கருணாகரத் தொண்டைமான்
என்பவன். குலோத்துங்கனது கலிங்கப் போர்களை வெற்றி
யுடன் நடத்தி, பன்னனுக்கு கலிங்கப் பரணியை கிடைக்கும்
படி செய்த மாபெரும் வீரன் அவனே.

பின்னர் இக்காடவர், காடவராயர் என்ற பொதுப்
பெயருடன், சோழரது ஆட்சியில் சிறு நாடுகளுக்கு அதிபதி
களாக இருந்து, சோழ மன்னர்களுக்குதவி புரிந்து, போர்
களில் விளங்கி மன்னர்களுடைய பாராட்டிற்குள்ளானார்கள்.
முன்காலத்தில் குணபரன் குணபர வீச்சுரம் எடுப்பித்த
திருவதிகை க்ஷேத்திரத்திற் கருகாமையிலுள்ள கூடலூர்
என்னும் இடத்தில் தோன்றினர். நாளுக்கு நாள் சிறப்புற்று
நாட்டில் செல்வாக்கு அதிகரிக்க, போர்த்திறமையிலும்,
வெற்றிகளிலும் விளங்கினர். சேக்கிழார் அருளிய பெரிய
புராணத்துக்குக் காரணனான அனபாயன் என்ற இரண்டாம்
குலோத்துங்க சோழன் காலத்தில் அதிக உன்னத நிலையை
அடைந்தனர். சோழர் மன்னர்கள் போற்றும் படியும், இவர்
கள் துணையை நாடும்படியும் அவ்வளவு முன்னேற்ற
மடைந்தனர். ஆனால் அனபாயனுக்குப்பின் வந்த ராஜாதி
ராஜன், மூன்றாம் குலோத்துங்கன் முதலியவர்கள் காலத்தும்,
இக் காடவராயர்கள் தங்கள் முன்னோன் அபராஜிதன்
இழந்த ஏகாதிபத்திய நிலையை நினைவுற்றவராகவும், சோழரடி
யில் வாழச் சாமந்த நிலைமையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்
என்ற எண்ணத்தை கடைப் பிடித்தவர்களாயும் விளங்கலா
யினர். அவர்கள் காலத்துப் பாண வம்சத்தினருடன் உறவு
கள் ஏற்படுத்திக்கொண்டும் தங்கள் பலத்தை அதிகரித்துக்
கொண்டும் வந்தனர். முடிமன்னர்களான சோழவரசர்கள்
நாளுக்குநாள் பலங் குறைவடைவதையும் கண்ட இக்காடவர்
சுய ஆட்சியைத் தாபிக்க தக்க சமயம் ஏற்படும் என்று பார்த்து
வந்தனர். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் காடவராயர்
குலத்தவரான வீரசேகரக் காடவராயன், மணவாளப்



பெருமாள் என்ற ராஜராஜக் காடவராயன் என்ற இருவரும்,
தங்களைப்போல் சாமந்த நிலைமை உடைய மலையமான்
களுடனும், அதிகைமான்களுடனும், சம்புவராசர்களுடனும்
போர் புரிய ஆரம்பித்து நாட்டுள் போர் நிலவச் செய்தனர்.
பல வெற்றிகளையும் அடைந்தனர். இது கண்ட முடிமன்னனான
குலோத்துங்கன் பலமுறை தானே தலையிட்டுப் பல உடன்
படிக்கைகளை ஏற்படுத்தி, காடவராயர்களை பல நிபந்தனைக்குட்
படுத்தினான். ஆயினும் இவர்கள் ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளும்
அடங்குவதாகத் தோன்றவில்லை. குலோத்துங்கன் ஆட்சியின்
கடையில், காடவராயர் தலைவனான மணவாளப் பெருமாள்,
முக்கிய சாமந்தனாக நின்று அம்மன்னனுக்காக வடநாட்டு
அரசரை வெற்றி கொண்டான். குலோத்துங்கனுக்குப்
பின்னர் ஆண்ட மூன்றாம் ராஜராஜன் மிகவும் பலவீனன்.
அவனடியில் நின்ற யாதவராயர், அதிகைமான், சேதிபராயர்
முதலிய சாமந்தர்கள் அவனுக்கு துணைபுரிந்தும், காடவர்
குலத்துத் தோன்றிய மணவாளப் பெருமாளின் பெரு
முயற்சிக்கும், பராக்கிரமத்திற்கும் எதிராகவில்லை. இரண்டு
மூன்றிடங்களில் சோழனும், துணை அரசர்களும் தோல்வி
யடைந்தனர். அத்துடன் நில்லாமல் மணவாளப் பெருமாளின்
முதற் புதல்வனான பெருஞ்சிங்கன் என்பான் போரின் பயனாக
இருமுறை சோழனையும் அவன் தேவியையும், மந்திரிகளையும்
சிறைப்படுத்தினான். சோழநாட்டின் ஒரு பகுதியையும்
தங்களாட்சிக்குள்ளாக்கினான். ஒருமுறை சோழனை விடுவிக்க
சோழன் உறவினனான ஹொப்ஸள அரசரின் வீரர்கள் படை
திரட்டி வரவேண்டியிருந்தது. பின்னர் சோழன் விடுதலை
பெற்று காடவராயருடன் சமாதானத்துடன் அவரது சுய
நிலையையும் ராஜ்யத்தின் எல்லைகளையும் ஒப்புக்கொள்ள
நேர்ந்தது. சுய ஆட்சியை தாபித்து சேந்தமங்கலத்தைத்
தலைநகராகக் கொண்டு மணவாளப் பெருமாள் அரசு
புரிந்தான்.

இப்படித் தனி ஆதிக்கம் ஏற்படுத்தின மணவாளப்
பெருமாளின் படையின் தலைமை வகித்து, முன்னணியில் பல
வீரதீரச் செயல்களைப் புரிந்து வெற்றிபெற்ற பதல்வனான

கோப்பெருஞ்சிங்கன், சேந்தமங்கலத்தில் தன் தந்தைக்குப்பின்
A. D. 1342-3ல் சிங்காதனம் ஏறி 36 வருடங்கள்
ஆண்டான். இக் காடவ மன்னன், வாள் போரில் மிக
வல்லமையுடையவன் என்பதற் குறியாக 'கட்கமல்லன்'
'வாள்வல்ல பெருமாள்' என்ற பட்டங்களை வகித்தான்.
போரில் மட்டுமல்ல, மற்ற துறைகளிலும் மேன்மையுற்று
விளங்கினான். இலக்கண இலக்கியங்களையும், சாஸ்திர
ஆகமங்களையும் ஆதரித்தான். முக்கியமாகத் தமிழை அதிக
ஆர்வத்துடன் வளரச் செய்தான். அதில் வன்மையையும்
எய்தினான். இஃது இவன் பட்டங்கள் தமிழ்நாடு காத்த
பெருமாள், செந்தமிழ் வாழப் பிறந்த காடவன் என்பவை
களால் விளங்கும். மற்றும் சிவபக்தர்களது தமிழ் மறை
யென்று திகழும் தேவாரத்தையும் பாடவல்லவன் என்பதைக்
குறித்து 'தேவார மழகியான்' என்ற பெயரும் இவன்
கவி பாடுவதிலும் வன்மையடைந்து அதற்கேற்ப புலவரால்
கவிச்சக்கரவர்த்தி என்றும் பொருள்படும் 'கவிசார்வ
பௌமன்' என்றுமழைக்கப்பட்டான். இது போதாது இம்
மன்னன் நாட்டியக் கலையிலும் வல்லமை யடைந்திருந்தான்.
அதற்காக இவன் 'பாதநாட்டிய சாஸ்திர பாரீணன்',
'பரதம்வல்ல பெருமாள்' என்ற பட்டங்களை நடனகலை
வல்லுனரிடம் பெற்றான் என்றும் சாஸனங்களால் அறிய
லாகும். இவன் சிதம்பரத்திலுள்ள நடராஜப் பெருமானின்
பரமபக்தன் என்றும் கல்வெட்டுகள் பலவாற்றாலும் போதரும்.
இன்றம், தான் தேர்ச்சிபெற்று நிபுணத்துவ மடைந்த பரத
நாட்டியக் கலை அழியாது, மானிடரனைவரும் அக்கலையை
நன்கு கற்கவும், கற்று முறையுடன் பாண்டித்திய மடையவும்,
நோக்கமாகக் கொண்டு, சிற்பிகளையும், தச்சர்களையும் பெரு
முயற்சியால் நடனக்கலையிலே நிகரில்லாத நடனராஜனது
கோயிலாகிய சிதம்பரத்திலே பரதநாட்டியத்தின் பல்வேறு
அமைப்புகளையும், பாவங்களையும், நடனத்திற்கேற்ற இசைக்
கருவிகளுடன் தோன்றும் சிற்பங்களை அழியாது யாவருக்கும்
பயன்படும் பொருட்டு, பொறித்திருக்கின்றான். இது அடியார்
போற்றும் சிவ நடனத்தின் மகிமையை வெளிப்படுத்த லும்



ஒப்பற்ற முறையும், மனித சமூகத்திற்கே 64 கலைகளில்
ஒன்றாகிய நாட்டியக் கலையை உணர ஊக்கம் அளிக்க நிகரற்ற
ஏதுவுமாகும். இப்பணி ஒன்றினால் மட்டுமே பெருஞ்சிங்கனது
தமிழகத்தின் சமூக சேவை எத்தன்மைத்து என்று தெளிய
லாகும். நடனக்கலை வல்லுனரெல்லாம் அம்மன்னனுக்குக்
கடமைப் பட்டுள்ளவர்.

இவன் காலத்தில் சிதம்பரமும், திருவண்ணாமலையும்,
திருமுனைப்பாடியும், மற்றும்பல பாகங்களும் மிகவும் செழித்து
அழியாச் செல்வத்துடன் விளங்கின. இவனது பலதிறப்
பட்ட செயல்களால், சைவமதமும, சைவ வழிபாடும்,
நாட்டின் வளமும், வனப்பும் குடிகளின் செல்வமும், கலைப்
பெருக்கும், மதப்பற்றும் பன்மடங்கு விருத்தியடைந்திருந்தன,
சிதம்பரத்தில் நடராஜர் கோயிலின் கீழைக் கோபுரமும்,
தெற்குக் கோபுரமும் இம்மன்னனால் கட்டப்பெற்றவை.
மேற்கூறிய நடன சிற்பங்கள் இந்த கோபுரங்களிலேதான்
உள்ளன. இம்மன்னன் கல்வெட்டுகளால், கோயிலுக்கும்
திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் கோயிலுக்கும்,
திருநந்தவனமும், திருஓடையும், அவைகளுக்குப் புறங்களும்,
ஆடி அருள கரும்பிடுவிளாகமும், பசு மஞ்சள் காப்புக்
கொல்லையும், செங்கழுநீர்த் திருப்பள்ளித்தாமம் ஆக்கித்
திருப்பூமண்டபத்துக்கு முதலாக திரு ஓடை நிலங்களும்,
பால அமுது செய்தருளவும, பாற்போனகப்பாலுக்குக்
கோசாலைகளும், அவைகளுக்கு வேண்டிய சுரபிகளும், ரிஷபங்
களும், இடையர்களும் அவைகளின் பாதுகாப்பிற்கும்
பரிபாலனத்திற்கும் வேண்டியவையும் கொடுத்தும், பூமாலை
கள் சிறப்பாகச் சாத்தியருள செங்கணிவாயன் திருநந்தன
வனமும், சொக்கச்சீயன் கழுகு திருநந்தனவனமும், ஏற்படுத்
தினான் எனவும், கோயில் ஆராதனைகளுக்கும், மற்றும் பல
பணிகளை செய்வோர்க்கும் மற்றவர்க்கும பல தானங்களையும்
கொடுத்து பல ஜீவிதங்களை ஏற்படுத்தியும், கடவுளுக்கு விலை
யுயர்ந்த ஆபரணங்களையும் பிறவற்றையும் தானம் பண்ணினான்
என்றும் சிதம்பரத்துள்ள அநேக கல்வெட்டுகளால் தெரிய
வருகின்றன.

சிங்காதனம் ஏறுவதற்கு முன்னமே, பல ஆண்டுகள் தன் தந்தை மணவாளப் பெருமாள் சுய ஆட்சி தாபித்தது முதற்கொண்டே, தனது ஆட்சி முடிவுநாள் வரையும் கோப் பெருஞ்சிங்கன் சிதம்பரக் கோயிலுக்குக் குறையாத பக்தி சிரத்தையுடன் பணிகள் பலபுரிந்து தில்லை நடராஜனைப் போற்றி வந்தான் என்பது சாஸனங்களில் கண்ட உண்மை.

இதேபோல் முக்கியமாக இவனது கைங்கரியங்களையும் தானங்களையும் திருவண்ணாமலை, திராக்ஷாராமம், காஞ்சிபுரம், விருத்தாசலம், சுவேதஜம்பு, வீரட்டானம், மதுரை, காளஹஸ்தி முதலிய பல க்ஷேத்திரங்களும் பெற்றன. இவன் போரில் வல்லோனாலும், போர்க்களத்தில் சேனாதி பதிகளின் உயிர்களின் நாசத்திற்கு, தான் காரணம் என்னும் உணர்ச்சியாலும், அப்போர்களின் படைத்தலைவர் பெண்டு பண்டாரங்களை வலுவில் கைப்பற்ற வேண்டினமையாலும், அழிக்க நேர்ந்தமையாலும், இவைகளால் தனக்கு பாவம் சம்பவிக்கும் என்ற நினைவுமேலிட்டு, அவைகளின் துன் பத்தை ஒருவாறு தவிர்த்துக்கொள்ள, சிவன் கோயில்களுக் கெல்லாம் பலபல தானங்களையும் கைங்கரியங்களையும் அவ்வப் போதே செய்து வந்தான். உதாரணமாக விருத்தாசலம் என்ற க்ஷேத்திரத்துத் திருமுதுகுன்றமுடைய நாயனார்க்கு, தான் பெரம்பலூர் என்னுமிடத்தில் நிகழ்த்திய பெரும்போரில் ஹொய்சள படை முதலிகளான கேசவ தண்டநாயகன், ஹரிஹர தண்டநாயகன் என்றவர்களைக் கொன்றதற்காகவும், அவர்கள் பெண்டு பண்டாரங்களை வலிந்து கவர்ந்ததற்காகவும், பாபப்பிராயச் சித்தமாக முத்துக்களும் உயர்ந்த கற்களாலும் இழைக்கப்பட்ட ஒப்பற்ற விலையுயர்ந்த நெற்றிப் பட்டைத்தை தானம் செய்ததாக அவன் கல்வெட்டொன்றில் கண்டுள்ளது. திருவண்ணாமலையில் கடவுளுக்கும், உண்ணாமுலையான உமை யவட்கும், அங்க சுத்தமும், பாகுவலயமும், திருவுடையாடை யும், மாணிக்கவாளி, திருவாசிகை, சிங்காதனம், முத்துப் பந்தல் மற்றும் இதுபோன்ற விலையுயர்ந்த ஆபரணங்களையும் வழங்கி வழிபட்டான் என்று அத்தலத்துச் சிலாசாஸனங்கள் கூறுகின்றன.



இத்தகைய பெருமைவாய்ந்த காடவ குலதிலகனை கோப்பெருஞ்சிங்கனுக்கு பக்தியில் சிவன் கோயில் பணிகளை யும், தானங்களையும் செய்வதில் ஈடொருவருமில்லை என்பது சரித்திர ஆதாரங்களால் நன்கு வலியுறும். இவன் கீர்த்தி ஊழிகாலம்வரை நிற்கும் என்றும், இவன் செய்கைகளால் “பாவைபாகன் சேவடித் தாமரையணிந்த சென்னியர் பார்க்குங் கண்ணினர் அணிந்த நீற்றினர் ஆகம நன்னெறி படிந்த நெஞ்சினர் பரசமயங்கடனை கடிந்தவானையர் கண்ணு தற்பெருமான் ஆதிநாதனைய் வேதங்கொண்டு பாய்புனற் கங்கையாயிர முகங்கொண்டார்த்தெழ மன்னுள் ஏற்றுக் கொண்ட திருந்திய பிறைமுடி யருந்தவச் சடாதாராதியில் அஞ்செழுத்தோதிய தொண்டரெண்ணிய நாற்பத்தெண்ணு யிரவரும் திருவருள் இவன்மேல் வைத்தனர் இருநிலந்தன்னில் இனிது வாழ்கெனவே” என்று அக்காலத்துக் கவிப் புலவர் வாழ்த்துககு உரிமை பெற்றான்.

---

## 8. விரிவுரைப் பகுதி

# பெரிய புராணத்தின் உட்கிடை

சைவ சமய உண்மைகளைத் தெளிவாக உணர்த்தும் நூல்கள் சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் ஆகும். இவற்றுள் பன்னிரண்டாந் திருமுறையாகும் பெரியபுராணம், மற்றைய திருமுறைகளில் தோத்திர வடிவங்களில் அமைந்த சமய உண்மைகளையும் சித் தாந்த சாத்திரங்களுள் பெறப்படும் கடவுள், உயிர், கட்டு ஆகிய முப்பொருள்களின் உண்மைகளையும், அவற்றின் இலக் கணங்களையும், உயிர் கட்டினின்று நீங்கிக் கடவுளை அடைந்து பேரின்பத்தை அடைவான் சாதிக்க வேண்டிய சாதனங்களை யும், அச்சாதனங்களாற் பெறப்படும் பயனையும், பயன் பெற்றுச் சீவன் முத்த தசையில் உள்ள உயிர் கைவிடாது மேற்கொள்ள வேண்டிய கடப்பாடுகளையும் உண்மை நாயன் மார்கள் சரித்திரத்திலே வைத்துக் காட்டி, அவ்வரிய ஞான

வைப்பின் உண்மையை முறையாக உணர்ந்து, தங்கள் வாழ்க் கையிலே ஒல்லும் வகையான் பயன்படுத்தி, வஞ்சகமற்று, சிவசிந்தனை அடியார் சிந்தனை உடையார்களின் மருளை நீக்கி அருளைத் தந்து வெம் பிறவி வேலையினின்று எடுத்து ஈசன் எந்தை இணையடி நீழலில் சேர்ப்பிப்பது ஒருதலையாகும்.

இது ஒரு தனிப் பெருங்காப்பியமும் ஞான நிலையமு மாகும். ஒப்பற்ற முழுமுதற் கண்ணுதற் கடவுளைத் தலைவனு கக்கொண்டு அத்தலைவனை அடையும் ஞானநெறியைக் கூறுவ தனால், இன்னும் இது பெருங்காப்பிய இலக்கணங்களைத் தன்னகத்தே குறைவுபடாமற் கொண்டு மிளிர்வதால், அதற்கு முன்னுள்ள சிறந்த காவியங்களென்று எண்ணம் பட்டவை களிலும் மேம்பாடுடைய தொன்றாகிய இலக்கிய இலக்கண வரம்பு கண்ட தொல்லாசிரியர்களாலும் வீட்டுநெறியே முடிந்த பயன் என உண்மை உணர்ந்து அந்நெறி நின்ற சைவ சித்தாந்த செந்நெறிச் செல்வர்களாலும் போற்றப்பட்டு வரும் உண்மை மறுக்கற் பாற்றன்று.

இத்தகையை உண்மை நூலின் உட்கிடை இன்னதென அறிய வாராததினாலோ, அறிந்து வைத்தும் தீவினை பயத் தாலோ "கொடிறும் பேதையும் கொண்டது விடாது" என்பதற் கிணங்கத் தங்கள் கருத்தின்படி அந்நூல் அமைய வில்லை என்பாரும் தங்கள் கருத்தேதான் அந்நூலில் அமைந் துளது எனத் தொல்வரம் பறித்துப் பொருள் காண்பாரு மாகத் தற்காலத்தும் பல பெரியோர்களைக் காண்குமன்றே!

ஒரு நூற்குள் நுழைவதற்கு முன் பாயிரங்கற்று, அந்நூல் கூறவந்த பொருள் யாது? அது கேட்டற்குறியார் யார்? எனும் இவற்றைத் தெளிவுற அறிந்த பின்னரே, அந்நூலை அடிப்பட்டுவந்த அனுபவம் வாய்க்கப் பெற்ற நல்லா சிரியர்பால் கேட்க வேண்டுமென்பது தொல்லாசிரியர் கண்ட முறையாகும். இதுபற்றியன்றே, இலக்கணநூலுள்

"என்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க"

என்றும்,



"நூல் கேட்கின்றான் புறவுரை கேட்கின், கொழுச் சென்ற வழித் துன்னூசி இனிது செல்லுமாறு போல, அந்நூல் இனிது விளங்குதலின், புறவுரை கேட்டல் வேண்டும்; என்னை?' பருப் பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்"

என்றும், 'அது கேளாக்கால் மாணாக்கன் இடர்ப்படுமே' என்றும் கூறப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்தே, நன்னூல் விருத்தியுரை, சிறப்புப் பாயிரத்தின் கீழ்

"இந்நூற்கு இன்னார் என்னும் சிறப்புவகை காட்டாக்கால், சிற்றறிவோர் பெருநூலும், பேரறிவோர் சிறுநூலும் மூத்த மிழுள் ஒரு நூற்குரியார் எனை யிரண்டுநூலும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கனுள் ஒன்றற்குரியார் எனை மூன்று நூலுங் கேட்பான் புக்கு இடர்ப்பட்டு மயங்குபவராகலின்"

என்று விதந்து கூறப்பட்டிருப்பது சிந்திக்கற் பாற்றொன்றாம்.

ஆகவே, பெரிய புராணம் என்னும் நூலைக் கற்கப் புகுவாரோ, ஆராய்ச்சி செய்யப் புகுவாரோ அப்பெருநூலின் பாயிரத்துள் திருவருள் வழி நின்ற ஆசிரியர் தெய்வச் சேக்கி ழார், அந்நூல்

"மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதிசெயும் நாயன்மார்களாகிய தெரிவரும் பெருமைத்
திருத்தொண்டர்தம் பொருவருஞ் சீராகிய அருளின் நீர்மைத்
திருத்தொண்டையே புகல்வதற்காக"

எழுந்தது என்பதையும், அந்நூல் கேட்டார்

"பெரிய புராணத்தைக் கேட்டு மகிழ் மீக்கூர்ந்து, குன்றை முனிவரை யானையின் மீதிருக்கச் செய்து இணைக் கவரி துலைக்கரத்தால் வீசி, இறைவர் திருவருளை நினைந்து 'இதுவன்றோ நான் செய்த தவப்பயன்' என்று தான்பெற்ற இன்பத்தை நந்தம் தமிழ்நாடு பெற்றுய்யச் செய்த அடவரசர் கோமானாகிய சீர் அநபாய சோழராது புனிதர் பேரவை"

என்பதையும் விளக்கியிருப்பதனால் இதைக் கற்கவோ கேட் கவோ தக்கவர் வெறும் இலக்கிய இலக்கண அறிவோடமை யாது, சிவஞான நூலை முறையே ஐயந்திரிபு அறியாமை

நீங்க ஓதி, இறைவனிடத்தும் அவனது அடியார்களை அவனு
களை பாவித்து அன்னாரிடத்தும் பேரன்பு கொண்டு வீடு
காதலிப் பவரேயாம் என்பது போதரும்.

இவ்வாறே,

> " மார்க்கர், கண்ட நூலோதி வீடு காதலிப்பவர்கட்கு ஈசன்
> புண்டரிகத்தான் சேரும் பரிசினைப் புகல லுற்றும் "

என்று சிவஞானநூல் ஓதற்குரியார் யார் என்பது சிவஞான
சித்தியார் பாயிரத்துள் அருணந்தி சிவம் ஓதியருளியதூ உம்,
மாதவச் சிவஞான சுவாமிகள் " ஆற்றலும் அறிவும் காதலும்
இல்லாத பிராகிருதரை யொழித்து " என விதப்புக்கூறி
யிருப்பதூ உம் கருதத்தக்கன.

இவ்வுண்மைகளைக் கைவிட்டுப் பெரிய புராணத்தைப்
பற்றி, அடியார்களைப்பற்றி, ஆசிரியரைப்பற்றிச் சிலர் கொண்
டுள்ள கருத்துக்கள் ஒரு சில காட்டி அமைதி கூறுவதே
இக்கட்டுரையின் நோக்கம்.

எடுத்துக்காட்டாக, சிறுத்தொண்ட நாயனார் சரித்திரத்
தைப்பற்றிப் பிறர் கூறும் பக்கமாவது :—

சிறுத்தொண்டர் பரஞ்சோதியார் என்னும் இயற்பெயர்
பெற்று, படைக்கலத் தொழிலிலும், யானையேற்றம் குதிரை
யேற்றம் முதலியவற்றுள்ளும் வல்லுநராய் விளங்கி,
அரசனிடத்தே படைத் தலைவராய் அமர்ந்து, பலபோர் முனை
களில் வாகை சூடி, தேசங்கள் பல கொண்டு சிறப்புற்றார்.
அத்தகையோர் ஒரு காலத்து வடபுலத்துத் தொன்மையான
வாதாவி நகரத்தைத் துகளாகச் செய்து, பலவகைப் பொருள்
கவர்ந்து தம் அரசர்க்குப் பெருவெற்றி கொணர்ந்தார்.

இவரது ஆண்மையினைக் கண்ட அரசன் வியந்து
பாராட்ட, இவரது உண்மை நிலைமையினை புணர்ந்த மதி
அமைச்சர் " திருத்தொண்டின் வலிமையினால் இவர்க்கு
எதிராவார் ஒருவரும் இல்லை " யெனக்கூற அதுகேட்ட
அரசன் அரனது அடியாரை உண்மை நிலைபுணராது போர்
முனையில் விட்டிருந்தது பிழையாம் என்று வருந்தி,



அவர்க்குப் பல வரிசைகள் நல்கி, அவர் விரும்பிய மெய்ம்மைத் தொண்டினைச் செய்யும்படி விடை கொடுத்தனுப்பினான்.

இத்தகைய பெருவீரரது ஆண்மையினை மிக விரித்துக் கூறாது, ஒரு சில செய்யுட்களிலேயே அடக்கிவிட்டு, நாயனாரைத் " திருத்தொண்டு " என்னும் பெயராலே கொலையாளியாகச் செய்துவிட்டார் சேக்கிழார். அவருடைய வீரத்தை இன்னும் விரித்துரைத்திருப்பின் அச்சரித்திரத்தைப் படிக்கின்ற மாணவர்கள் வீரர்களாகத் திகழ்ந்து நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடும். அதற்கு மாறாக, தொண்டு என்பதன் மூலம் அவர்கள் மனக்கோழைகளாகி விட்டார்கள் என்பதாகும்.

வீரம் என்பது இருவகைத்து - புறப்பகையை வெல்லத் தக்கது ஒன்று, அகப்பகையை வெல்லத்தக்கது மற்றொன்று. புறப்பகையை வெல்லத்தக்க வீரத்தினும் அகப்பகையை வெல்லத்தக்க வீரமே சிறந்தது என்பது " பிறனில் விழையாமை " என்னும் அதிகாரத்தின் எட்டாந் திருக்குறளில் உள்ள " பேராண்மை " என்பதற்குப் பரிமேலழகர் விசேடவுரை நோக்கத்தக்கது.

உயிர்ப்பகையாகிய காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட ஆறையும் வென்று, உயிரைத் தூய்மைப்படுத்தி, புறப்பகையை வென்றும் அகப்பகையை வெல்லாதாரால் அடையமுடியாத இறைவன் திருவடியின்பத்தை அடைவதே பிறவியின் பயனாகையால், அதுவே பயன் என்பது.

> ' காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
> நாமம் கெடக்கெடும் நோய் "

என்றும்

> " ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
> பேரா இயற்கை தரும் "

என்றும் தமிழ் மறையாரும்,

> " அறம்பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே "

என்று இலக்கண நூலுடையாரும் கூறுகின்றாராகையால், இப்பேரின்பத்தைப் பற்றியும் அதை யடையும் உண்மை நெறி களைப் பற்றியும் ஈர அன்பினராய், யாதுங் குறைவிலராய், பெருமையால் தம்மைத் தாமே ஒப்பாராய், ஒருமையால் உலகை வெல்வாராய், அன்பினால் இன்பம் ஆர்வாராய், செயற்கருஞ் செய்கை செய்த தீரர்களாயுள்ள தனி வீரர் களாகிய உண்மை நாயன்மார்களுடைய சரித்திர வாயிலாகக் கூறி, நம்மனோரைத் தெருட்டி, நன்னெறியாகிய ஞான நெறி யிலே செலுத்தி உய்விப்பதையே நம்பெரு வாழ்வாகிய சேக் கிழார் பெருமான் மேற்கொண்டதேயன்றி, மேலும் மேலும் அல்லற் பிறவித்தொடக்கிலே அகப்படுத்தி, அதனால் பன்னாள் இடுக்கண் எய்தி வாடுபு கிடத்தற்கல்ல என்பது உள்ளத்தில் ஒருதலையா ஓர்த்து உணரவேண்டிய தொன்றாம். ஆகவேதான், சிறுத்தொண்ட நாயனாரது சரித்திரங்கூற வந்த ஆசிரியப் பெருந்தகையார் நாயனார் மேற்கொண்ட அரச காரியத்தில் சோர்வு சிறிதுமின்றி எவ்வாறு தம் கடமையைச் செலுத்தினார் என்பதை அறிவிக்க வேண்டியவளவு அவரது வீரத்தைக்கூறி பின் ஞானநெறியைத் தலைக்கூட விரும்புவார் தெளியுமாற்றான், அவர் தாம் மேற்கொண்ட திருத்தொண்டைச் செய்வதிலே தயங்கா வீரத்தையுடையவர் என்பதை விளக்கமுற விரித் தோதினார் என்பது தெளியத்தக்கது. (தொடரும்)

---

## திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் மணிவிழா வாழ்த்துரை

அறுபதாண்டு நிறையப்பெற்ற அண்ணலே !

தங்கள் மணிவிழாவில் கலந்து இன்புறும் பேற்றை எங்கட்கு வழங்கிய எல்லாம்வல்ல இறைவனுக்கு எங்கள் வணக்கத்தைச் செலுத்து கிறேம். சைவஞ் செழிக்கவும், தமிழ் தழைக்கவும், சீர்திருத்தஞ் சிறக்க வும் தவங்கிடந்து தங்களை ஈன்றார் நினைவு ஈண்டு எழுகிறது. அவர்க்கும் எங்கள் வணக்கம் உரியதாக. தாங்களும், தங்கள் குடும்பமும் வாழ்க ; வாழ்க ; வாழ்க பல்லாண்டு.



நற்றவழி நிற்குங் கலைஞரே !

தங்கள் தந்தையார் சொ. சபாபதிப் பிள்ளை ஓர் அறப்பள்ளி. அப் பள்ளியில் தாங்கள் முதல் முதல் பயின்றீர். அப்பயிற்சியே தங்கள் நல்வாழ்க்கைக்கு வித்திட்டது. பின்னே தாங்கள் வெஸ்லி கல்லூரியில் பயின்றீர் ; ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையராக விளங்கினீர். 'பச்சையப்ப'னில் தாங்கள் பயின்றபோதும் மணியென இலங்கினீர். தங்கள் கல்வி அறிவு ஒழுக்கம் முதலியன சைவ உலகுக்கும் தமிழ் உல குக்கும் பயன்பட்டு வருதல் வெள்ளிடைமலை.

உத்தியோகத்திலுஞ் சீலங்காத்த உத்தமரே !

வெஸ்லி கல்லூரியில் தாங்கள் தருக்கபோதகாசிரியராக முதல் முதல் அமர்ந்தீர் ; நறுந் தொண்டாற்றினீர் ; பின்னே அரசாங்கப் பணியில் ஈடுபட்டீர் ; கல்வி இலாகாவில் ஓர் இந்தியர் எவ்வளவு பெரும் பதவி வகிக்க அக்காலம் இடந் தந்ததோ, அவ்வளவில் பெரும்பதவி வகித்தீர். உத்தியோகத்தில் சீலங்காத்த உத்தமர் என்று தங்களை அர சாங்கம் வியந்ததை நாடறியும்.

சைவம் வளர்க்குஞ் சாந்த சீலரே !

தாங்கள் சைவ உலகுக்குப் புரிந்த சேவையைச் சொல்லலும் வேண்டுமோ ! திருநீறும் திலகமும் பொலியும் நெற்றியும், அக்கமணி அசையும் அகலமும், இன்சொல் ஒழுகும் நாவும் எங்கள் உள்ளத்தைக் கவராத நாளும் உண்டோ ? தங்கள் அகமுஞ் சைவம் ; புறமுஞ் சைவம்.

தங்கள் சைவத்தொண்டு கால்கொண்ட இடம் சென்னை இராயப் பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையேயாகும். அச்சபையில் தாங்கள் செயலாளராகவும் தலைவராகவும் அமர்ந்து ஆற்றிய பணிகள், பணித் திறங்கள் என்றும் மறக்கற்பாலன அல்ல. பாலசுப்பிரமணிய பக்தஜன சபை சைவ உலகுக்கே வழிகாட்டியாய்த் திகழ்தல்வேண்டு மென்பது தங்கள் வேணவா. அவ்வவா நிறைவேறுங் காலம் சேய்மையி லில்லை என்று தங்கட்குத் தெரிவித்துக்கொள்கிறேம்.

முப்பதாண்டுக்கு முன்னரே தங்கள் வாழ்க்கைக்கும் சைவ சித் தாந்த மகா சமாஜத்துக்கும் தொடர்பு ஏற்பட்டது. சமாஜம் தங்களை ஒருமுறை செயலாளராகவும், இருமுறை தலைவராகவும், ஈராண்டு 'சித்தாந்தம்' ஆசிரியராகவும் பெற்றது. தங்கள் சமாஜப் பணிகள் சீர் திருத்த உலகை ஓம்பிவருதல் கண்கூடு. 1929-ம் ஆண்டில் சைவப் பெரியார் தனிப் பெருங்கூட்டத்தில் தாங்கள் தலைமைதாங்கிக் காட்டிய ல்வழி புத்தம் புதியது. அது புத்துணர்ச்சியை நல்கியே வருகிறது

வார வழிபாடு தங்கள் முயற்சியால் ஆங்காங்கே பெருகுவது சமய உல குக்கே ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது.

**செந்தமிழ் மணியே !**

தங்கள் வாழ்வில் தமிழ்த் தொண்டும் விரவியுள்ளது. சென்னை பல்கலைக் குழுவிலும், அரசாங்கத் தமிழ்ப் பாடக் குழுவிலும், வே அமைப்புக்களிலும் தாங்கள் தமிழ் வளர்க்க முயன்றீர்கள். அம்முயர் வருங்காலத்துக்கும் நலம் பயப்பதாகும். தங்கள் தமிழ்ப்பேச்சில் வீரு உணர்வும் செறிதல் இயல்பு. அப்பேச்சுக்கள் நூல் வடிவெடுக்க உ கொள்ளுமாறு தங்களை வேண்டுகிறோம்.

**சேய்ச் செல்வம் பெற்ற செல்வமே !**

தங்கள் தொண்டுக்கும், வாழ்வு நலத்துக்கும், பிற முயற்சிகட்கும் பெருந்துணைவராக நிற்பவர் தங்கள் அருமை மனைவியார் திருமதி. அமிர்த வல்லி ஆம்மையார். அவர், தங்கட்கு வாழ்க்கைத் துணையாக வாய்த்தது தங்கள் தவப்பேறென்று கூறுது வேறென்ன கூறவல்லேம் ! தங்கள் வாழ்வு பலதிறச் செல்வங்களைக் கண்டது. அவற்றுள் விழுமியது சேய்ச் செல்வம். வளர்க வளர்க தங்கள் வழிவழி.

**சீலக் கனியே !**

தங்கள் பெருவாழ்வில் அடக்கம், பொறை, நேர்மை, தூய்மை முதலிய நன்னீர்மைகள் அரும்பி மலர்ந்து காய்த்துக் கனிந்து நிற்கின் றன. தங்களைச் சீலக் கனி என்று கூறல் மிகையாகாது.

இப்பண்புடைய தாங்களும், தங்கள் வாழ்க்கைத் துணையும், வழி; தோன்றல்களும் வாழ்க வாழ்க நீடு வாழ்க என்று அறுமுகச் சிவத்தை, இறைஞ்சுகிறேம்.

இங்ஙனம் :

சென்னை, 28—7—47 } **சைவ சித்தாந்த மகா சமாஜத்தினே**
**ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையினே**

நின்னிடம் செயல்முறை தேர்ந்துள தென்பதை
உன்னியே மகிழுவம், உவப்புறு மணிவிழாப்
பொன்னிகர் உணர்ச்சியே பூத்திடும் எம்மிடை,
அன்னிய வெறும்உரை ஆற்ற இலம்யாம்.

சைவமா சமாசம் சரிவரப் பணிசெய
மெய்வகை உதவிகள் மேவினை நீயே,
செய்வகை ஆண்டுபல நினக்கே
உய்வதை வழுத்துவம் ஒருமுதல் தன்னையே.

வாழ்க சச்சிதானந்தம் !

கோவைகிழார் யாத்தது. 28-7-47.

## 2

திருவளர் சென்னை மூதூர் திருந்திய தமிழர் தங்கள்
பெருமா யோங்க வந்து பிறந்தருள் பெரியோன் சைவ
அருமறை யந்த ஞானன் சபாபதி யென்னும் அன்பன்
தருமக வாகிவந்த சச்சிதா னந்த அண்ணல்.

ஆங்கில மொழியுந் தெய்வ அருந்தமிழ் மொழியுஞ் சைவப்
பாங்குறப் பயின்று மேலாம் பத்திமை கனிந்த வுள்ளத்
தோங்கிய கலைவ ளர்க்கும் உரன்மிகு செயல்மேற் கொண்டாய்
நீங்கிய லகலச் சைவத் திருநெறி வளர்க்குஞ் செம்மால்.

சைவமுந் தமிழு மோங்கத் தமிழகத் தொண்டு பேணும்
சைவசித் தாந்தப் பேர்கொள் சமாசத்தின் சார்பாய் நின்று
மெய்வகை யறங்கள் போற்றி மேதகு தமிழ்நா டெங்கும்
தெய்வநற் சிவம் பெருக்குந் திருத்தொண்டு பூண்ட செல்வ.

செல்வமுங் குலமுஞ் சீருந் திருந்திய பண்பு மெல்லாங்
கல்வியால் வருவ வென்னக் கற்றறிந் தோர்கள் போற்றப்
பல்வகைக் கலைத்தொண் டாற்றிப் பாங்குறும் அரசு போற்றக்
கல்விமேற் பார்வை யாளர் தலைமையாம் கவினும் பெற்றாய்.

தமிழக மெங்குஞ் சென்று தண்டமிழ் பரப்பிச் சைவ
அமிழ்தினை உலகர் மாந்த அவைகளிற் றலைமை தாங்கித்

தமிழ்மணங் கெழுமி யோங்கத் தக்கபே ருரைகள் பெய்யும்
இமிழ்திரை ஞால மெங்கும் இயற்றமி ழெழிலி யானாய்.

உண்மையும் அறிவும் இன்பும் ஒருங்கிய வுருவாய் நின்று
தண்ணளி சுரக்குந் தெய்வச் சார்பினை யுலகர் மேவப்
பண்ணமை வழிபா டாற்றும் பணியினைக் கிழமை தோறும்
கண்ணிய கழகம் யாண்டுங் கருத்தொடு கண்டாய் வாழி.

ஆண்டவ னருளைப் பேணும் அறநிலை யங்க ளெல்லாம்
ஈண்டுள பணியி னில்லா தியல்வழு வுற்ற போது
மீண்டுமவ் வறங்க ளோங்க மேதகு துணையாய் நின்று
வேண்டிய பணிகள் யாவும் விருப்புட னாற்றும் மேலோய்.

மனையறம் பெருக நல்ல மக்களைப் பெற்று வாழ்வோர்
அனைவருஞ் செய்தற் கேற்ற அருள்வளர் பணிக ளெல்லாம்
நினைவுறத் தொடங்கும் யாண்டாய் நிகழ்வுறு மறுப தாண்டு
தனையடைந் துவக்குஞ் செல்வத் தண்டமிழ்ப் பெரியோய் வாழி.

உமையொரு பாகன் றன்சீ ருலகெலாம் விரிக்கு மெங்கள்
சமாசத்தின் தலைவ ராகத் தகைபெறும் அமைச்ச ராக
அமைதிசேர் சித்தாந் தத்தின் அறிவுரை யாள ராக
இமைப்பிலா துழைக்கும் நும்சீர் எங்களா லியம்பற் பாற்றே.

எழிசை யுருவாய் நிற்கும் எம்பெரு மானை வாழ்த்தித்
தாளிணை பணியும் அன்பிற் சச்சிதா னந்த அண்ணால்
வாழிய பெரும நீநின் மனையொடு மக்கள் போற்ற
வாழிய தமிழர் தங்கள் மனநலம் வளர்க நன்றே.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தினேம்.

வித்வான் வெள்ளைவாரணனார் யாத்தது.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 9, Vaidyaramayyar Street, Thyagarayanagar, Madras, P. I. Card No. M. S. 81.

324

gistered No. M 2330. "SIDDHANTHAM Vol. 20—No. 10

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

20 | சர்வசித்து ஐப்பசி 1947 அக்டோபர் | இதழ்

உள்ளுறை

பக்கம்

1. ஒலிபாப்பு ... 353
2. தலப்பகுதி—திருப்பேரூர் ... 362
3. சாத்திரப்பகுதி—முச்சங்கம் ... 368
4. சமயப்பகுதி—குடி நிறுத்தத்தில் தொண்டு ... 371
5. கலைப்பகுதி—கல்வெட்டு கூறும் சில அரிய செய்திகள் ... 373
6. கவிப்பகுதி—
   1. நெடும் புத்தகத்து எழுதுதல் ... 375
   2. ஞானிகளும் சிரிப்பார்களா ? ... 377
7. ஆராய்ச்சிப்பகுதி—இரு பல்லவ அடியார்கள் ... 382
8. விரிவுரைப்பகுதி—பெரியபுராணத்தின் உட்கிடை ... 389

த்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ., பி. எ

சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2.

## மதிப்புரை

1. இலங்கையின் புராதன சைவாலயங்கள் — கதிர்காமம்: ஆக்கியோன் - குல. சபாநாதன் - விலை - 2-0-0. பாயிரமும் இரண்டு பகுதிகளையும் கொண்டது. முதற் பகுதியில் கதிர்காமத்தின் வரலாறு, பெருமை, பல பகுதிகளின் விவரங்கள், விழாவின் விவரங்கள், நிர்வாக சூழல்கள் முதலியன அடங்கியுள்ளன. இரண்டாம் பகுதியில் திருப்புகழ் முதலிய துதிப்பகுதிகளும் மற்றச் செய்யுட்களும் அடங்கியுள்ளன. பல அழகிய படங்கள் விவரங்களைத் தெளிவுபடுத்துகின்றன. இந்நூல் யாத்திரிகளுக்கு மிகவும் பயன் அளிப்பது. மேற்கோள்கள் பொருத்தமானவை. ஆராய்ச்சி நுட்பமானது. தமிழர்கள் பாராட்டத்தக்க நூல். சிறந்த ஆராய்ச்சியுடன் எளியநடையில் எழுதப்பட்டுள்ளது. நமது நாட்டு மக்கள் இந்நூலை மிகவும் ஆதரிக்கவேண்டும்.

2. கீதத்தமிழ் ஆக்கியோன்-கே. எம். பாலசுப்பிரமணியம். விலை ரூ. 3-0-0. போர்க்காலத்தில் அரசியற்றுறையில் இசை ஆட்சியாளராக விளங்கியவர். நாட்டில் பல இடங்களிலும் சுற்றுப்பயணம் செய்து ஆங்காங்கு இருந்த பெருமைகளைக்கண்டு மனவெழுச்சியால் உதித்த கருத்துக்களை பாடல்களாய் ஆக்கினவர். எளியவாக்கு, தெளிவான கருத்து, ஆழ்ந்த நினைவு, நீரோட்டகதி, தூயதமிழ், அருமையான மேற்கோள்கள் இவைகள் இந்நூலுக்கு அழகுகளாக வாய்ந்திருக்கின்றன. தமிழ்மக்கள் இதனை ஆதரிப்பார்களாக. பாடசாலைச் சிறுவர் சிறுமிகளுக்கு மிக்க பயன்படத்தக்கது.

3. கட்டுரை விருந்து : ஆக்கியோன் - பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், M. A; கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் விலை ரூ. 1-14-0. பத்து கட்டுரைகளின் தொகுதியாகும். வெவ்வேறு காலங்களில் எழுதியவை. வானொலியில் பேசியவை ஆறு. ஏனையவை பிற இடங்களில் வெளியிட்டவை. குண்டலகேசி, சூளாமணி முதலிய பண்டைய காவியங்களின் பெருமைகள் வெகு நன்றாக விவரிக்கப் பட்டுள்ளன. பெண்பாலரில் புலமை இருந்த நிலை வெகு சுவையோடு குறிக்கப்பட்டுள்ளது. பொதுவாகப் பள்ளிப்பிள்ளைகளுக்கு அறிவு புகட்டத்தக்க பல பொருள்கள் இந்நூலில் காணலாம். இதனால் மாணவர்கள் பெரும்பயன் அடையக்கூடும்.

4. பூவாளூர்க் கோயில் வரலாறு : பண்டிதர் திரு. R. பஞ்சநதம்பிள்ளை - அணா 2. தேவத்தான வெளியீடு. அறநிலையச் சங்கத்தார் அறிக்கையில்கண்ட விவரங்களின்படி ஆராய்ந்து ஆக்கப் பட்டது. இவரே இன்னும் பல வரலாற்று நூல்களையும் வெளியிட் டுள்ளார். பூவாளூர்ப் புராணத்தில் கண்ட சைவ முப்பொருள்களின் சுருக்க விவரம் இதில் அடங்கி இருக்கிறது. கோயிலைப்பற்றிய செய்யுட்டிரட்டு பயன்படக்கூடியது.

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 20 | சர்வசித்து ஐப்பசி 1947 அக்டோபர் | இதழ் 10

## ஒலிபரப்பு

ஆசிரியர்

### அறநிலையங்கள்

தமிழ்நாடு பண்டைக்காலம் முதற்கொண்டு அறநிலையங்களுக்குப் பெயர்போனது. அவ்வறநிலையங்கள் பழைய காலத்தில் மிகச் சிறப்போடு இருந்தன. அவைகளால் நாட்டு மக்களுக்கு மிகுந்த பயன் இருந்தது. ஆனால் இக்காலத்தில் அவைகள் அத்தனைச் சிறப்போடு இல்லை என்றும் ஆகவே பயனும் குறைந்துவிட்டது என்றும் பொதுமக்கள் எண்ணுகிறார்கள். முந்தி இருந்த நிலைக்குக் கொண்டுபோய் வைத்து, அவைகளால் தக்க பலனையும் பெறவேண்டும் என்று மக்கள் இச்சிக்கிறார்கள். இந்தவகையில் ஈடுபட அரசியலார் பல தடவை முயன்றும் நன்மை கைகூடவில்லை. மக்களுள் கிளர்ச்சி மிகுதியாக வளர்ந்தது. பல மேடைகளில் பேசியும் பல தாள்களில் எழுதியும் வந்திருக்கிறார்கள். சமீபத்தில் சென்னையில் ஒரு பெரிய அறிஞர் கூட்டம் கூடி தங்கள் ஆழ்ந்த கருத்துக்களை வெளியிட்டார்கள். அவர்களின் தீர்மானங்களை நமது தாளிலும் வெளியிட்டோம். பிறகு முதல் அமைச்சர் பல திருத்தங்களையும் ஆராய்ந்து ஒரு மசோதாவை வெளியிட்

டிருக்கிறார்கள். அம்மசோதா சட்டம் ஆவதற்கு முந்தி நம் நாட்டுப் பொது மக்கள் சிறப்பாக சமய ஈடுபாடு கொண்டவர் கள் இந்தத் திருத்தங்களை நன்றாக ஆராய்ந்து தங்கள் எண்ணங்களை வெளியிடுவதே பொருத்தமானது.

## வகைகள்

அறநிலையங்கள் பலவகைப்பட்டன. பொதுவாக இரு பெரும் பிரிவுகள் உண்டு. சமய அறநிலையங்கள், சமயச் சார்பில்லாத அறநிலையங்கள். இவ்விரண்டிற்கும் வெவ்வேறு சட்டத்திட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சமய நிலையங்களைப் பற்றிய சட்டதிட்டங்கள் பலமுறைகளில் திருத்தங்கள் அடைந்திருக்கின்றன. சமயச் சார்பில்லாதவைகட்குத் திருத் தப்பாடுகள் இல்லாமல் இருக்கின்றன. இனி, சமய நிலையங் களிலே கோயில், மடம், சங்கம் என முப்பிரிவுகள் உண்டு. இவைகளில் கோயில்களின் ஆட்சியைக் குறித்து வலுவான சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மடங்களைப்பற்றி அத்தனை வலிவு இல்லை. சங்கங்களைப்பற்றித் திட்டங்களே இல்லை. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இச்சைப்பட்டால் தாங்களே விதி களை ஏற்படுத்திக்கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். மேலும் சமயச் சார்பில்லாதவைகளில் சத்திரங்கள், கல்வி நிலையங்கள், வைத்தியசாலைகள், அனாதை விடுதிகள், மாணவர் விடுதிகள், உதவி சங்கங்கள் முதலியன சேரும். இவைகளைப் பற்றி ஆட்சி சம்பந்தமாகப் பதிவுச்சட்டமே முக்கியமானது. ஆட்சியில் வழக்குகள் ஏற்பட்டால் நீதிமன்றங்களில் வழக்கு தீர்க்கப்பெறும். ஆகவே அவைகளைப்பற்றி அரசியலாருக்கு நேரடியான ஆட்சி இல்லை. இந்த இரண்டு வகைப்பட்டநிலையங் களையும் நேரடியான ஆட்சிக்குள் கொண்டுவர முயற்சிகள் சிறிது காலமாக ஆராய்ந்து வரப்படுகின்றன.



## முன்னாளில் ஆட்சி

அறநிலையங்கள் முன் நாளில் ஊர்ச் சபைகளால் ஆளப் பட்டன. ஒவ்வொரு ஊரிலும் அவ்வூரைப் பொருத்தின ஆட்சி அவ்வூர்ச் சபையார் கையில்தான் இருந்தது. வரி வசூல் நீர்ப்பாய்ச்சல், கோயில் பார்வை முதலியவைகளை ஊர்ச்சபை யார் கவனித்துவந்தார்கள். பெரிய நகரங்களில் அரசனுடைய ஆட்கள் கவனித்து வந்திருக்கலாம். ஏனெனில் குலோத்துங் கன் III காலத்தில் கோயிலில் நடந்த குற்றங்களை தண்டிப்பதற் காக அரசன் ஒரு அமைச்சனை நியமித்ததாக அறிகிறோம். ஆகவே பண்டைய நாளில் அறநிலையங்களை அரசியலே கண் காணித்து வந்தது. அரசியலின் பகுதியான ஊர்ச்சபைகளே குடியரசென்ற நிலையில் ஊர்க்கோயில்களை ஆண்டுவந்தன. அக்காலங்களில் அறநிலையங்களுக்கு அரசர்களும் அமைச்சர் களும் தனவந்தர்களும் நிலங்களையும் பணங்களையும் கொடுத் துதவினார்கள். இவைகளை ஆட்சிபுரிவதற்குக் கண்காணிகள் உண்டு. அவர்களுடைய வேலையை ஊர்ச்சபையார் கவனித்து வந்தார்கள் என்றும் காண்கிறோம். முகம்மதியர் ஆட்சி காலங் களிலும் இம்முறை மாறினதாகத் தெரியவில்லை. சிலநாடுகளில் மாத்திரம் முகம்மதிய அரசர்கள் ஆலயத்திற்கு வரவேண்டிய வரவுகளில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டதாகத் தெரி கிறது. (பேரூர் ஆட்சி). ஆங்கிலர் வந்த பிறகு முதலில் முன்னாளைய முறையே கொண்டிருந்தார்கள். பொது ஆலயங் களைத் தாங்களே கீழ் உத்தியோகத்தர்கள் மூலமாகக் கவனித்து வந்தார்கள். தனித் தனி வகுப்பார்களுடைய நிலை யங்கள் அவ்வகுப்பார்களின் ஆட்சியிலேயே இருந்துவந்தன.

## ஆட்சி மாறுதல்

இந்தியாவிற்குச் சமயப் பிரசாரத்திற்காக வந்த கிறிஸ் தவப் பாதிரிகள் இந்துக் கோயில்களை கிறிஸ்தவ அரசியலார்

காப்பது சரியல்ல என்று வாதாடினார்கள். அவர்கள் கூக்குரலை முன்னிட்டு அரசியலார் கோயில்களைப் பரிபாலிப்பதை ஒழித்து தருமகர்த்தர்கள் என்று சிலரை நியமித்து 1840-ல் அன்னார் கையில் ஆட்சியைத் தந்தார்கள். கோயில் நிலங்களும் அன்னார் கையிலே சென்றன. இவ்வாறு பல ஆண்டுகள் நடைபெற, ஆவ்வாட்சிகள் மேல் பார்வையை இல்லாது கெட்டுவிட்டன. அவைகளைச் சீர்திருத்தும் முறையில் 1863 ஆண்டில் சமய நிலைய ஆட்சிச் சட்டம் ஒன்று ஏற்பட்டது. ஆலய மேற் பார்வைக்காக ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒவ்வொரு சபை ஏற்படுத்தப்பட்டது. இச்சபையார் பொது மக்களால் தெரிந் தெடுக்கப்பட்டார்கள். இவர்களே தருமகர்த்தர்களையும் நிய மித்தார்கள். இச்சபைகளும் வெறும் விவகாரங்களை ஏற்படுத் தினவேயன்றி செவ்வையாகப் பரிபாலனம் செய்யவில்லை. அவைகளைச் சீர்திருத்த வேண்டி பனகல் அரசர் முதல் அமைச்சராக இருந்தபோது 1926-ம் ஆண்டில் சென்னை அற நிலையச் சட்டம் பிறப்பித்தார். அதன்படி அறநிலையங்களை ஆட்சிபுரிய அறநிலையப் பாதுகாப்புக் கழகம் ஏற்படுத்தப் பட்டது. இக்கழகமே இதுவரை ஆட்சி புரிந்து வருகின்றது. இதன் அதிகாரங்கள் பலதடவை திருத்தப்பட்டன. தவறுகள் என்று தோன்றிய போதெல்லாம் புதுப்புது திருத்தப்பாடு கள் செய்யப்பட்டன. இப்போது சுமார் 26000 நிலையங்களை இக்கழகம் கண்காணித்து வருகின்றது. இதன்கீழ் நூற்றுக் கணக்கான உத்தியோகத்தர்கள் வேலை செய்கிறார்கள். ஆனாலும் பல காரணங்களினால் இக்கழகம் சரியாக வேலை செய்யவில்லை என்பது பலருடைய எண்ணம்.

## குறைகளில் சில

தற்போது இருக்கும் ஆட்சிக் கழகத்தின் குறைகளில் சிலவற்றை எடுத்துக் கூறுவோம். கழகக் காப்பாளர், தலைவர்,



உத்தியோகத்தர்கள் இவர்களுடைய பதவி அரசியல் ஆட்களைப் போல் நிரந்தரமானது அன்று. ஆகவே இவர்களுக்குச் செல் வாக்கு இல்லை; ஊதியமும் மிகக் குறைவு. ஆகவே கவலை யில்லாத வாழ்வு இல்லை. ஆலயத் தருமகர்த்தர்கள்மீது இவர் களுக்கு உள்ள அதிகாரம் போதியது அல்ல. மடங்களின் மீது தகுந்த அதிகாரம் கிடையாது. கணக்குப் பரிசோதனை ஒன்றுமட்டும் உண்டு. அதனையும் வற்புறுத்தித் தண்டிக்க வழி யில்லை. தவறுசெய்கிறவர்களை நீக்குவதற்குஇவர்களுக்குத் தனி அதிகாரம் இல்லை. நீதிமன்றங்களின் ஒத்துழைப்பு வேண்டி யிருக்கிறது. அதனாலே மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. சமய நிலையங்களில் தொழில் செய்பவர்களாக இருந்தும் சமய ஞானம் இல்லாதவர்களே இக்கழகத்தில் புகுந்துள்ளார்கள். ஆகவே சமய நிலையங்களுக்கு ஆக்க வேலைகளும் பிரசார வேலைகளும் செய்ய ஆற்றல் இல்லாதவர்களாகவும் இச்சை இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த நிலையில் இக்கழக வேலை உத்தியோக வேட்டைக்கு இடம் தரும் ஒரு பணி என்று பலர் இகழவும் இடம் தருகிறது. இன்னமும் பல குறைகள் உண்டு. இவைகளை எல்லாம் எண்ணித்தான் சென்னையில் நடந்த அறிஞர் கூட்டத்தில் பல தீர்மானங்கள் ஆராயப்பட்டன. இக்குறைகளைப் போக்குவதாகச் சொல்லி தற்கால மசோதா வெளிவந்துள்ளது.

## ஆட்சி உரிமை

புது மசோதாவில் முதன்மையான சீர்திருத்தம் அற நிலைய ஆட்சி உரிமையைப் பற்றியதுதான். இப்போதுள்ள சட்டத்தின்படி ஆட்சி உரிமை அரசியலாருடையதல்ல. அரசியலார்கள் வெறும் கண்காணிப்பாளர்களேயன்றி உரிமை யாளர்கள் அல்ல. ஆகவே ஆலயங்களுடைய பொருள்களை அரசியலார் தொடமுடியாது. அவைகளிலிருந்து வரும் வரி

களையும் அவர்கள் தொடக்கூடாது. மிகுதியாகும் பணம் கழகத்தினுடையதே. கழகம் போனால் அறநிலையங்களே உரிமையாளர்கள். அரசு அல்ல. ஆனால் புது மசோதாப்படி வரிகள் அரசியலுக்குச் சேர்ந்துவிடும். அதனை வேலையாட்களுக்கு ஊதியமாகத் தருவதே நோக்கமாம். வேலையாட்களை அரசியல் ஆட்களாகச் செய்வது சரிதான். அப்போதுதான் அவர்களுக்கு மதிப்பு ஏற்படும்; ஊதியமும் சரியாகக் கிடைக்கும் என ஒத்துக்கொள்ளலாம். ஆனால் அதுகாரணமாக ஆலய வரிகளை அரசியலுக்குச் சேர்த்துவிடுவது சரியல்ல. இவ்வாறு சேர்த்துக்கொள்வதற்கு ஒரு ஆதாரம் கூறப்பட்டுள்ளது. 'இந்து அரசர்கள் காலத்திலும் கும்பினியார் காலத்திலும் அரசாங்கமே ஆலய பரிபாலனம் கைக்கொண்டிருந்தது; அடுத்திருக்கும் கொச்சி, திருவிதாங்கூர், மைசூர் முதலிய சமஸ்தானங்களில் ஆலயங்கள் அரசியலார் பகுதிகளாக இருக்கின்றன; இப்போது நமக்குத் தனி ஆட்சி கிடைத்திருக்கிறது; ஆகவே இனி ஆலயங்களை எடுத்துக் கொள்ள உரிமை உண்டு என்பதாம். இவ்விதம் காரணம் காட்டுவதில் ஒரு பெரும் பிசகு இருக்கின்றது; கொச்சி முதலிய சமஸ்தானங்கள் இந்து வம்ச அரசாங்கங்கள். அவர்கள் இந்துக்களாக இருக்கும்மட்டும் உரிமை உண்டு. மேலும் பெரும்பாலும் அரச வம்சத்தார்களே ஆலய தானங்களும் செய்துள்ளார்கள். ஆனால் அதே காரணம் நமது அரசியலாருக்குக் கூற முடியுமா? தற்கால அரசியல் சமயச்சார்பில்லாத அரசியல். இது இந்து, முகம்மதியர், கிறிஸ்தவர், சமணர் முதலிய எல்லாச் சமயத்தார்களுக்கும் பொது. அரசியல் ஸ்தாபனங்களில் அவர்கள் எல்லாருக்கும் உரிமை உண்டு. அவ்வாறு இந்து சமயநிலையங்கள் இருக்க முடியுமா? கிறிஸ்தவ முகம்மதிய நிலையங்களை இவ்வாறு அரசியலுக்குக் கொடுத்து விடுவார்களா? ஆகவே ஆட்சி உரிமை அரசியலுக்கு விடுவது



சரியன்று. அதைப் பொருத்தமட்டில் மசோதாத் திருத்தம் ஆட்சேபிக்கத்தக்கது. ஆனால் உத்தியோகஸ்தர்களை அரசியல் பணியாளர் ஆக்குவதில் தடையில்லை. ஆக்கியேதான் தீர வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் திருத்தங்களும் அவசியமே. இக்கருத்து முரணாக இருப்பதாகத் தோன்றலாம். உண்மையில் முரணே கிடையாது. இனி அறநிலைய நிதி என்று தனியாக ஒரு நிதி ஏற்படுத்துதலே ஒழுங்காகும். கல்விச் சட்டத்தில் இவ்வித நிதி ஒன்று இருந்தது. தலத்தாபனத்திலும் ஒன்று உண்டு. இந்த நிதியிலிருந்து அரசியலார் தமக்கு ஆகக்கூடிய செலவை எடுத்துக்கொள்ளலாம். இந்நிதிக்கும் அரசாங்க நிதிக்கும் வேற்றுமை இருக்கவேண்டும். இந்நிதி அறநிலையங்களுக்கே சேர்ந்தது. பிற்காலத்திலும் அறநிலையங்களுக்கே சேரத்தக்கது. இந்தத் திருத்தப்பாடு முதன்மையானது என்று தற்போதிய அரசாங்கம் அறிந்து மசோதாவைத் தக்கபடி திருத்தவேண்டும்.

## மசோதாவின் நோக்கம்

மற்றொரு குறைபாடு மசோதாவின் முன்னணியில் தோன்றுகிறது. இப்போதுள்ள அறநிலைய நிர்வாகம் சரியில்லையென்று கருதி அதனைச் சீர்படுத்துவதே இம்மசோதாவின் நோக்கம் என்று முகவுரையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் பின்னர் வெளியிட்டிருக்கும் 'நோக்கங்களும் காரணங்களும்' என்ற பகுதியில் ஆட்சி உரிமையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் கருத்து ஒன்றே கூறப்பட்டுள்ளது. முகவுரையில் கண்ட நோக்கம் மிகவும் விரிவானது. அதை அனுசரித்தே பல திருத்தப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் நோக்கங்கள் என்ற பகுப்பில் ஒரே ஒரு காரணம் காட்டினது விளங்கவில்லை. இதனை நுணுகி ஆராய்ந்து பார்த்தால் இப்போதுள்ள பணியாட்கள் தங்கள் தன்னலத்தைக் கருதி இம்மசோதாவை

வெளியிட்டார்கள் என்று கூறும் வண்ணமாக இருக்கிறது. இவ்விதக் கருத்துத் தோன்றாதவாறு இப்பகுதியைத் திருத்த வேண்டும். மற்றக் காரணங்களையும் இப்பகுதியில் சேர்த்துக் கொள்வதே சரி. அப்போது இவ்வையம் தோன்றாது.

மேலும் அரசியலார் ஆட்சி உரிமை ஏற்றுக்கொள்வது சரியல்ல என்று மேலே கூறினோம். அதற்குச் சொல்லிய ஒரு காரணமும் ஏற்காது என்று கூறினோம். அது கொச்சி முதலிய சமஸ்தானங்களின் நிகழ்ந்துள்ள ஆட்சியுரிமையைப் பற்றியது. மற்றும் இரண்டு காரணங்கள் கூறப்பட்டுள்ளன. ஒன்று கும்பினியார் 1840 வரையில் கொண்டிருந்த ஆட்சி. அதை நன்றாக ஆய்ந்து பார்த்தால், ஆலய வரிகளை வசூலித்து ஆலயப் பரம்பரைக் காணியாளனுக்குத் தந்ததே அவர்கள் செய்தது ஆகும். ஆலய நிர்வாகத்துள்ளே அவர்கள் தலையிடவே இல்லை என்றறிய வேண்டும். மற்றொன்று உத்தியோகத்தர்கள் திறமான ஊழியம் பெறுதலாலே ஏனைய மக்களை அவர்களை மதிக்குமாறு செய்வது. இதுவும் உரிமை ஆட்சி இல்லாமலே காரியம் கைகூடும் என அறியலாம்.

## சமயச் சார்பற்ற அறநிலையங்கள்

மசோதாவில் கண்ட மற்றொரு சிறந்த மாறுதல் சமயச் சார்பற்ற அறநிலையங்களை ஆட்சி புரிதல். இப்போது இப் பெரிய வகையில் உள்ள நிலையங்களுக்கு எவ்விதமான பொறுப் புள்ள கண்காணிப்பும் இல்லை. இந்நிலையங்கள் மிகவும் சீர் கெட்டுள்ளன. இவைகளைப் பொறுப்பாட்சிக்குக் கொண்டு வருவது ஒரு சிறந்த முறையாகும். இந்நிலையங்கள் பல விதங்களாக இருக்கின்றன. பண்டைய மன்னர்கள் யாத்திரி களுக்காக வழிதோறும் சத்திரங்களை அமைத்து அவைகளில் உணவு அளிக்கப் பெருஞ்சொத்துக்களை விட்டிருந்தார்கள். பல தனவந்தர்களும் இவ்விதமான அறச்சாலைகளை ஏற்படுத்தியிருந்



தார்கள். தஞ்சையில் இராமேசுவரம் போகும் வழியெல்லாம் பெரிய சத்திரங்கள் உண்டு. அவைகளை ஜில்லா போர்ட்டு அதிகாரத்தில் விட்டிருக்கிறார்கள். இப்போது அச்சத்திரங் களில் யாத்திரிகள் தங்க இடமில்லை, உணவும் இல்லை. அதிகாரி களின் பகுதிச் கட்டடங்கள் ஆகிவிட்டன. கோவை ஜில்லா வில் இருந்த பல சத்திரங்களும் சர்க்கார் பழையப் பதிவுப் புத்தகங்களில் பெயர் மாத்திரத்தில் விளங்குகின்றனவே அன்றி கட்டடங்களாக இல்லை. அவைகள் போன இடமும் தெரியாது. உணவுஇடுதல்மறைந்துபோயின. மதுரையிலிருந்து சிவில்லிபுத்தூர் போகும் வரையில் ஐந்தைந்து கற்களுக்கு ஒரு கல்மண்டபம் இருந்துவந்திருக்கிறது. இவைகளில் யாத்திரிகள் தங்கி வந்தார்கள். இப்போது தகுந்த ஆட்சி யின்றி இவைகள் இடிந்து போகும் நிலையில் இருக்கின்றன. புல்பூண்டு முளைத்துப் பிச்சைக்காரர்களும் கள்வர்களும் தங்கும் களவிடங்கள் ஆகிவிட்டன. எவ்விதமே ஏனைய ஜில்லாக்களிலும் உண்டெனக. இவைகளேயன்றி கல்வி, வைத்தியம் முதலிய அறங்களுக்கும் பல நிலையங்கள் இருக் கின்றன. இவைகளுக்கு என்று ஒரு பொறுப்பாட்சி ஏற்படு வது நல்லதே.

ஆனால் இவ்வாட்சி சிறிய அளவில் உள்ளது அல்ல. மிகவும் பெரியதொரு சங்கடமான ஆட்சியாக இருக்கும். ஆகவே இப்போது சமய நிலையங்களின் ஆட்சியை ஒட்டி இந்த ஆட்சியையும் சேர்த்துவிட்டால் ஒரு பகுதியாகிய இலாகா இவ்விரண்டு பெரும் பகுதிகளையும் ஆளமுடியுமோ என்பது கவலைக்கிடமான ஒரு கேள்வி. இதனை நன்கு ஆராய்ந்து சமயச் சார்பில்லாத நிலையங்களுக்குத் தனிப்பகுதி ஏற்படுத்துவதே நல்லது என்று கருதவேண்டும். அதனை விரிவாக ஆராய்வார்களாக.

இதுவரைக் குறித்த கருத்துக்கள் வெளிப்படையான பெரிய மாறுதல்கள். இனி குறிப்பான சிலவற்றை அடுத்த இதழில் வெளியிடுவோம்.

## 2. தலப்பகுதி

# திருப்பேரூர்

ம. ரா.

நாழ்வும் உயர்வும் தனக்கிலை யென்று
வாழ்வில் நடித்த வள்ளல் திருத்தலம்.

### 1. பசு காட்டிய பதி

மேற்குத் தொடர்ச்சிமலை ஒரு பெரிய வில்லைப்போன்று படுத்திருக்கின்றது. அவ்வில்லின் ஒவ்வொரு கணுவைப் போல ஒவ்வொரு சிகரம் வானை அளாவுகின்றது. அவற்றில் ஐந்து கணுக்களில் மூத்த பிள்ளையார், இளைய பிள்ளையார், அம்மையார், அப்பனார், திருமால் இவர்கள் எழுந்தருளியிருக் கின்றனர். இப்பெரிய வில்லின் நடுவில் அம்பு தொடுத்தாற் போல் ஒரு அழகிய ஆறு ஓடுகிறது. அம்பிற்கு இறகு கட்டி றாற்போல ஒரு அழகிய பூம்பொழில் உண்டு. அப்பூம் பொழிலினுமா இறைவன் எழுந்தருளியிருக்க வேண்டும் ?

முன்காலத்தில் அவ்வாற்றின் அருகில் இருக்கும் பூம் பொழில் வில்போல் அடுத்து வளைந்துள்ள மலைச் சரிவுகள் மட்டும் எட்டியிருந்தது. அதில் பெரும்பாலும் அரசமரங் களே நிறைந்திருந்தன. ஆகவே அப்பொழில் அரசவனம் அல்லது வடமொழியில் பிப்பிலாரண்யம் ஆயிற்று. ஓர் அரச மரத்தடியில் இறைவன் எழுந்தருளியிருந்தார். அவ்விடம் அரசம்பலம் என்றும் அவர் அரசம்பலவாணர் என்றும் பெயர் பெற்றனர்.



அடுத்த ஊரிலிருந்து ஒரு இடையன் தன் பசுக்களை அக்காட்டில் மேய்த்துக்கொண்டிருந்தான். ஓர் அழகிய பசு வீட்டில் பால் சுரப்பதை நிறுத்திக்கொண்டது. அதைக்கண்ட இடையன் ஒருநாள் அதனைப் பின்பற்றிச் சென்றான். அரச மரத்தடியில் ஒரு புதரில் அது தானாகவே பால் சொரிந்து கொண்டிருந்தது. இடையன் கோபித்து அதை ஒரு கோலால் அடித்தான். அது மிரளிக் குதித்தது. அதன் குழம்பு அடியில் மறைந்து இருந்த பரம்பொருளின்மேல் பட்டது. குருதி வெளிவந்தது. இடையன், அது கண்டு மயங்கி விழுந் தான். இச்செய்தி ஊரில் பறந்தது. நாட்டாண்மைக்காரர்கள் வந்து கண்டு வியந்தனர். எம்பெருமானைக்கண்டு தொழுது திருக்கோயில் எழுப்பினர். இதுதான் பசு வெளிப்படுத்திய பதி என்பர்.

### 2. மாண்டவர் பாண்டவர் ஆன விந்தை

ஆறைநாடு மிகவும் பண்டையநாடு. கொங்கு இருபத்து நான்கு நாடுகளில் ஒன்று. இதில் காடுவெட்டி நாடு ஆக்கிக் குடியேறிய ஆதி குடிகள் பண்டைத் தமிழர்கள். அக்குடி களின் பழக்க வழக்கங்கள் இப்போது வியப்பாகத் தோன்றும். முதியவர்கள் மாண்டுபோனால் அவர்களின் உடல்களை தாழி களில் இட்டு நிலத்தில் அறைகள் போலக்கட்டி அவற்றில் அடக்கம் செய்தார்கள். அவ்வழக்கத்தை முதுமக்கட்டாழியில் வைத்தல் என்று பண்டைய தமிழ் இலக்கியம் பேசும். மணி மேகலை இதனை 'தாழியில் கவித்தல்' என்று கூறுகிறது. ஆறைநாட்டில் ஒரு பகுதியான பேரூர் நாட்டில் நொய்யல் ஆற்றங்கரையில் இவ்வித முதுமக்கட்டாழிகள் பல கண்டு பிடிக்கப்பட்டன. பின்காலத்தில் வந்த மக்கள் இதனை மறந் தார்கள். முதுமக்கட்டாழிகளான மாண்டவர் குழிகளைப் பின் காலத்தவர்கள் பாண்டவர்களோடு சம்பந்தப்படுத்தி

அவைகளைப் பாண்டவர் குழிகள் ஆக்கிவிட்டனர். இந்தப் பண்டைக் காலத்திற்குப் பிந்தி, நாகரிகம் ஏற்பட்டு நாட்டில் வாணிபம் பெருகிற்று. உரோமானியர் இங்குவந்து மிளகு, மயில் முதலியவைகளில் வாணிபம் செய்தார்கள். அப்போதைய தமிழர்கள் தாங்கள் பெற்ற நாணயங்களை புதைத்துவைத்தார்கள். அப்புதையல்கள் சமீபகாலத்திலும் காணப்பட்டன. அவை 2000 ஆண்டுகளின்முன் வழங்கின உரோமானிய நாணயங்கள் என்பர்.

## 3. சோழன் கண்ட துறை

கொங்கு நாட்டில் மலைத்தொடர்களுக்கு அருகே செழிப்பான நாடு இருக்கிறது என்று கரிகாற் சோழன் கேள்விப்பட்டான். அதில் மக்களை குடியேற்றிவைக்க வேண்டும் என்று எண்ணினான். அடர்ந்த காடுகள் வெட்டப்பட்டன. காட்டில் வாழ்ந்த இருளர்கள் மலைப்புறம் சென்றார்கள். ஊர்கள் கட்டப்பட்டன. கோட்டைகளும் பேட்டைகளும் தோன்றின. ஆலயங்கள் எழுப்பப்பட்டன. அவைகளில் ஒன்று கோவைமாநகர். கோவன் என்கிற இருளன் பெயரால் அது ஆக்கப்பட்டது. அடுத்த மூன்று கல் அளவில் இருந்த அரசம்பலவாணர் திருக்கோயிலைக் கண்டு தொழுதான். ஆற்றங்கரையில் அழகிய பூம்பொழிலின் அருகே படித்துறை ஒன்று கட்டினான். அதுவே சோழன் துறை ஆயிற்று. இன்னும் அங்கேதான் மக்கள் நீராடுவது வழக்கம்.

## 4. தாழ்வும் உயர்வும் தனக்கில்லை என்றது

பன்னிரண்டு நூற்றாண்டுகளின்போது சுந்தரமூர்த்தி சுவாமிகள் கொங்கு நாட்டிற்கு மூன்று முறை எழுந்தருளியிருந்தார். ஒருமுறை திருப்பேரூரில் அரசம்பலவாணர் திருக்கூத்தை மகிழ்ந்தார். பின்னால் தில்லை சென்றபோது



இவ்வற்புதத் திருக்கூத்தை வியந்து "மீகொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர் பெம்மானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாம் அன்றே" என்று அருளியிருக்கிறார்.

சுந்தரமூர்த்திகள் ஆலயத்திற்கு எழுந்தருளியபோது இறைவனும் இறைவியும் பள்ளனும் பள்ளியுமாகத் திருவேடம் கொண்டு அடுத்த கழனிக்குள் வேலை செய்துகொண்டிருந்தார்களாம். அச்செய்தியைப் பிள்ளையார் திருமுகத்துக் குறிப்பால் அறிந்த சுந்தரர், காட்டிய குறிப்பின் வழியே சென்று அம்மையப்பர்களைப் பள்ளர் உருவிற்கண்டு பணிந்தாராம். பிறகு அம்மையப்பர் மூர்த்திகளுக்குக் காட்சி அளித்தார்களாம். இது பேரூர்ப் புராணத்தில் கண்ட ஒரு வரலாறு. இது பள்ளுத் திருவிளையாடல் என்ற பெயரில் இதுகாறும் பேரூரில் நடைபெறுகின்றது. இத்திருவிழாவே "நாற்றுநடவு உற்சவம்" என்பதாகும். அது ஆடிமாதத்தில் நடைபெறும். பள்ளர் என்ற வகுப்பார் நடத்துகிறார்கள். உலகில் உயர்ந்ததுவும் தாழ்ந்ததுவும்தானே என்று மறைகள் கூறுவதை உலகினர்க்குக் காட்டுவதற்காக இத்திருவிளையாடல் செய்தார் என்று நூலாசிரியர் கச்சியப்பர் கூறுகிறார். பள்ளர் பெருமக்கள் வருடத்திற்கு ஒருமுறை சென்று தொழ அருள்புரிந்து கொண்டிருந்த எம்பெருமானார் இப்போது நித்தமும் காட்சி தந்துகொண்டிருக்கிறார்.

## 5. பேரூர் சிற்றூரும் சிற்றூர் பேரூரும் ஆனது

பண்டைத் தமிழ்மக்கள் சரித்திர ஞானம் படைத்தவர்கள். தங்கள் செய்திகளைப் பின் சந்ததியார்கள் அறிய வேண்டும் என்று கருத்தும் கொண்டிருந்தார்கள். ஆகவே அவைகளை நூல்களிலேயன்றி கோயில் கல் சுவர்களிலும் எழுதிவைத்தார்கள். இப்படிப்பட்ட கல் வெட்டுகள் பல பேரூர் பட்டீசுரர் ஆலயத்தில் உண்டு. அவற்றின்படி, அரசம்

பலத்தில் குடிகொண்ட இறைவன் பெயர் திரு ஆன்பட்டி புடையார் என்பது, சுந்தரருக்கு கூத்து ஆடிக்காட்டின திருவுருவம் கூத்தாடு தேவர் என்பது, எனத் தெரியலாம். மேலும் 13-ம் நூற்றாண்டில் பேரூர் நாட்டிற்குப் பேரூர் தலை நகராகவும் அதற்குச் சேர்ந்த சிற்றூராக கோவை இருந்த தென்றும் அறிவிக்கிறது. இப்போதோ அது மாறி கோவை பேரூராகவும் பேரூர் சிற்றூராகவும் விளங்குகிறது. இது காலத்தின் கோலம்.

## 6. கலையில் தந்தைக்கு மீறின மகன்

சுந்தரமூர்த்திகளுக்குத் தில்லைத்திருக்கூத்தைப்போலவே அற்புதக் கூத்தை ஆடிக்காட்டின இடமான அரசம்பலத்தைப் பொன்னம்பலம் ஆக்குவதே சரி என்று கருதினான் அளகாத் திரி நாயக்கன். மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தி மதுரை நாய்க்கனின் பிரதிநிதியாக அளகாத்திரி கொங்கு நாட்டை ஆண்டான். வடவழியைத் தலைநகராக்கிக்கொண்டு மருத மலையிலிருந்து கற்களை எழுப்பிப் பேரூரில் திருப்பணி செய் தான். கனகசபை வெகு அழகாகக் கட்டப்பட்டது. அங்குள்ள விசித்திரமான சிற்பங்களைப்பற்றிக் கூறவும் வேண்டுமா! கல்லால் சங்கிலிகள், உருளும் தாமரை, அழகிய மூர்த்திகள் முதலியன உலகப் பிரசித்திபெற்றவைகள். இவைகளைச் செய்த சிற்பியின் கலாவல்லபமே வல்லபம். ஒருநாள் ஓர் இளைஞன் பேரூருக்கு வந்தான். அவனுடைய தோற்றம் கம்பீரமாக இருந்தது. ஆலயத்துள் புகுந்து நூதன சிற்பங் களைக் கண்டுவிட்டு அதிசயித்தான். ஆனால் ஒரு குதிரை உருவத்தைக்கண்டு சிறிதுநேரம் கூர்மையாகச் சோதித்தான். உடனே சிரித்தான். 'அறிவுகெட்ட சிற்பி' என்று நிந்தித் தான். இச்சொல் சிற்பியின் காதுக்கு எட்டியது. வெகு சினத்தோடு அவன் வந்து இவ்விளைஞனை மிரட்டினான்.



இளைஞனோ "தேரை இருக்கும் கல்லைச் சிற்பத்தில் பயன் படுத்தலாமோ" என்றான். "எங்கே நிரூபிப்பாயா" என்று கோபித்தெழுந்தான் அச்சிற்பி. கல்தூணில் இருந்த குதிரை யைக் காட்டினான் இளைஞன். அது உடைக்கப்பட்டது. தேரை அதில் இருந்தது. சிற்பி தன் கையைத் துணித்துக் கொண்டான். உண்மை விசாரிக்கையில் கலை கற்கச் சென்ற அச்சிற்பியின் மகனே அவ்விளைஞன் என அறிந்தார்கள். உடைந்த கற்றூண் இன்றும் இருக்கிறது.

## 7. மூர்த்தி சிரசிலும் தேளா ?

சிறந்த சிற்பியின் மூளையை அளக்க முடியுமா ? அதிலும் பேரூர்க் கனகசபை கட்டின சிற்பியின் மூளை எவராலும் அளக்க முடியாது. இருந்தாலும் அவருக்கு இருந்த அடக்க மும் தன்னலம் இன்மையும் உலகில் வேறு எவர்க்கு இருக்க முடியும்? தன் பெயரையாவது எழுதி வைத்தாரா? இக் காலத்தில் விகடன் பத்திரிகையில் தீட்டின ஒரு கோணல் சித்திரக்காரனும் அதில் தன் பெயரைத் தீட்டிவைக்கிறான். ஆங்கில ஓவியக்காரர்களும் இத்தாலிய சிற்பிகளும் தங்கள் பெயர்களைப் பதித்து வைத்திருக்கிறார்கள். நமது பேரூர் சிற்பி தன் கலையை மாத்திரம் மக்களுக்கு ஊட்டியிருக்கிறான். பெயரைக் குறிக்கவில்லை அல்லவா? என்ன தன்னலமின்மை?

அழகிய சங்கிலிகள் விதானத்தில் தொங்குகின்றன. முகட்டில் பெரிய தாமரை இதழ், அருமையான கோல் ஆட்டங் கள், போர்ப் படங்கள், துப்பாக்கிப் பிரயோகம், கிராதார்ச் சுனக் கதை, அதில் வேடன் வருவது அர்ச்சுனனுக்குத் தெரி யாது; ஆனால் அர்ச்சுனன் தவம் செய்வது வேடனுக்குத் தெரி யும்; என்ன மனோபாவத்திலே இது இயற்றப்பட்டது? இச்சிற் பங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது முருகனுடைய மயில் ஊர்தி, கஜசங்காரமூர்த்தி, வீரபத்திரமூர்த்தி. இவைகளைக் காணுங்

களா. வீரபத்திரர் தலையில் விரிந்த சடைத் தொகுதியில் ஏன்
ஒரு பெருந் தேள் செதுக்கப்பட்டிருக்கிறது ? எந்தப்
புலவனும் இதன் பொருளை விளக்கவில்லை. சடாடவியில்
பாம்பும் தேளும் இருக்காதா என்றார் ஒரு பெரியவர். ஆனால்
சரியான காரணம் அச்சிற்பியேதான் கூற முடியும்.

## 8. தல அற்புதங்கள்

பிறவாப்புளி - இதன் விதை முளைக்கிறதில்லை. இறவாப்
பனை - இதன் ஆயுள் அறிந்தோர் இல்லை. கொடிக்கம்பம் -
ஒரே கல்லில் சித்திரங்களோடு ஆக்கப் பெற்றது. நச்சுப்
பொய்கை. செம்பு நாணயத்தை தங்கமயம் ஆக்குவது.
திருநீற்றுமேடு - இயற்கைத் திருநீறு விளைவது. நந்தி
விமானம் - சின்னக் கோயிலின்மேல உள்ள பெரிய நந்தி.
மகுடமாக உள்ளது. மாதைய்யன் தெப்பக்குளம்-16 பட்டை
கொண்ட அழகிய தெப்பக்குளம் ; முதலியன காணலாம்.
மற்ற அற்புதங்களை நேரில் சென்று காண்க. இத்தலம்
கொங்கு நாட்டில் கோவை நகருக்கு மேற்கே 3 கல்லில்
உண்டு. விசை வண்டி வசதி உண்டு. அது மூன்றேதான்.

---

## 3. சாத்திரப்பகுதி

# முச்சங்கம்

**ஆர். பஞ்சநதம் பிள்ளை**

முச்சங்கம் என்ற தலைப்பைக் கண்டதும் சிலர் திகைப்பர்.
செந்தமிழ் வளர்ந்த தலை, இடை, கடை என்ற மூன்று
தமிழ்ச் சங்கங்களைப்பற்றி இருக்கலாமோ என எண்ணுவர்.
அப்பொருளும் உண்டு. அதைப்பற்றிய வரலாற்றை இக்காலத்
தில் தமிழுணர்ச்சி பல வகையில் பெருகிவரும் தற்காலத்தில்



யாவரும் அறிவர். அதனைவிட்டு வாழ்க்கைத் துறையில்
முச்சங்கம் அறிவிக்கும் செய்திகளைப் பார்ப்போம்.

சங்கம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு.
அவற்றுள் சங்கம் என்பது வெண்மையான சங்கையும் குறிக்
கும். மனித வாழ்க்கையில் மூன்று காலங்களில் சங்கின்
தொடர்பு ஏற்பட்டுள்ளதை ஆன்றோர்கள் அறிவித்துள்ளனர்.
ஒருநாளில் காலை - பகல் - மாலை என அமைந்திருப்பதுபோல
வாழ்க்கையிலும் குழந்தைப் பருவம், காளைப் பருவம், முது
மைப் பருவம் ஆகிய மூன்றும் முக்கியமாகும். இம்மூன்று
பருவங்களிலும் சங்கின் சம்பந்தம் அமைந்துள்ளது. இவை
களைச் சுருக்கமாகப் பாலூட்டுஞ் சங்கு, மணங்கூட்டுஞ் சங்கு,
வழிகாட்டுஞ் சங்கு எனக் கூறலாம்.

முதலாவதாக, குழந்தைப் பருவத்தில் பாலுணவே
சிறந்தது. முற்காலத்தில் குழந்தைகளுக்குத் தாய்ப்பால்,
பசுவின்பால், ஆட்டின்பால் ஆகிய மூன்று பால்களையும்
கொடுப்பர். தமிழ் மொழியாகிய குழந்தை முப்பாலும் புகட்ட
மிக வளர்ந்தாய் என்று தமிழ் விடுதூதின் ஆசிரியர் கூறுகிறார்.
இதில் முப்பால் என்பதைச் சிலேடையாகத் தமிழ் - அறம்,
பொருள், இன்பம் என்றும் முப்பாலையும்—மூன்று பகுதியை
யும் உடையது என்றும் கருத்தில் அமைத்துள்ளார். சீர்காழிப்
பிள்ளையார் ஞானப்பாலுண்டு ஞானசம்பந்தர் ஆனார்.

ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் பாலின் இயல்பை நகைச்சுவை
யாகப் பகர்வர். "பால் பாலாயிருந்தது ஒரு காலம். பாலுடன்
நீர் கலந்தது ஒரு காலம். ஆனால் தற்போது நீருடன் பால்
கலக்கின்றது" என்று ஒரு சமயம் கூறினார்கள்.

பாலைச் சங்கிலிட்டுக் கொடுப்பதே பழையமுறை. சங்குக்
கும் நமது உடலுக்கும் ஒரு மருத்துவ சக்தி உண்டென்பர்.
முற்காலத்தில் சங்கினாலேயே அணிகள் செய்து பூண்டு
வந்தனர். சிவபெருமானுக்கும் சங்கக்குழை சொல்லப்படுகிறது.
"சங்க வெண்குழையோர் காதின்கோமான்" என்று அப்பர்
காட்டுகிறார். ஆலயங்களில் பெருமானுக்கு 108 அல்லது
1008 சங்குகளில் தூயநீரை வார்த்து அபிடேகம் செய்வர்.

இது சங்காபிஷேகம் எனப்படும். அந்நீரைப் பிரசாதமாகவும் வழங்குவர். திருமாலின் கரத்திலும் சங்கு அமைந்திருப்பதைக் காணலாம். பிற்காலத்தில் செல்வச் சேர்க்கையாலும் புதிய நாகரிகத்தாலும் தங்கம், வெள்ளி முதலிய உலோகச் சங்குகள் ஏற்பட்டு அவைகளைக் கொண்டு உணவு புகட்டப்படுகின்றது. இதனால் பிணிகளும் மிகுதலாயின. ஆகலின் சங்கின்மூலம் உணவளித்தலே சாலச் சிறந்தது. இது வாழ்வில் முதற் சங்கமாகும்.

இரண்டாவதாக, வாழ்க்கையில் திருமணத்தின்போது சங்கநாதம் செய்வது ஒரு வழக்கம். இதை மணங்கூட்டும் சங்கு என்பர். சுந்தரமூர்த்திகளின் முதல் திருமண காலத்தில் மேகமுழக்கம்போலச் சங்குகள் ஆர்த்தனவாம். "வெண் சங்கம் எங்கும் பெருமழைக் குலத்தின் ஆர்ப்ப" என்று சேக்கிழார் கூறுகின்றார். இக்காலத்திலும் சில ஊர்களில் திருமணத்தின்போது சங்கு ஊதப்படுவதைப் பார்க்கலாம். சங்கொலியில் ஓங்காரநாதம் அமைந்திருப்பதை உணரலாம். இது வாழ்க்கையில் இடைச் சங்கமாகும்.

மூன்றாவதாக, இறுதிக் காலத்தில்-மரணகாலத்தில்-சங்கு ஊதப்படுவதை யாவரும் அறிவர். இறந்த நாளிலும் பிறசடங்குகளிலும் சங்கு ஊதப்படும். வாழ்க்கையில் இதுவே கடைச் சங்கமாகும். இந்த முச்சங்க நிகழ்ச்சிகளையும் பட்டினத்தடிகள் ஒரு பாட்டில் அழகாக அமைத்துக் காட்டுகின்றார்.

"முதற்சங் கமுதூட்டும் மொய்குழலார் தம்மை
நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும்—கடைச்சங்கம்
ஆம்போ தனவூதும் அம்மட்டோ இம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம்"

இனி வேறுசில சமயங்களிலும் சங்கு ஊதப்படுவதுண்டு. மார்கழி மாதத்தில் விடியற்காலத்தில் கோயில்களில் சங்கநாதம் செய்வதுண்டு. 'இயம்பின சங்கம்' என்று மணிவாசகர் கூறுகின்றார். 'வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ' என்று ஆண்டாள் கூறுகின்றார். இம்மாதத்தில் தாசரிகள் வீடுதோறும் சென்று பாடியும் வாழ்த்தியும் சங்கு



ஊதுவதுண்டு. போர்க்காலங்களிலும் வெற்றி வேளைகளிலும் சங்கு ஒலிப்பர். 'சங்கு கொண்டே வெற்றி ஊதுவமே' என்று பாடுகின்றனர். தொழிற்சாலைகளில் யந்திரச் சங்கு ஊதிக் காலத்தை அறிவிக்கின்றனர். சில ஆண்டுகளுக்குமுன் அங்கங்கே அபாய அறிவிப்புச் சங்குகளும் ஊதப்பட்டன. இராமலிங்க சுவாமிகள் ஆனந்த மேலீட்டால்,

'கைவிடமாட்டா னென்றூது சங்கே
கனகசபை யானென்றூது சங்கே'

என்று பாடுகின்றார். குபேரனது செல்வங்களில் சங்கநிதி என்ற ஒரு செல்வமும் உண்டு. 'சங்கநிதி பதுமநிதி' என்று அப்பர் கூறுகின்றார். சங்குகளில் வலப்பக்கம் சுழியுள்ளவை வலம்புரி என்றும், இடப்பக்கம் சுழியுள்ளவை இடம்புரி என்றும் சொல்லப்படும். இவைகளில் வலம்புரிச் சங்கே சிறந்தது. மேன்மக்களின் நிலைத்த பண்புக்கும் செயலுக்கும் சங்கைச் சான்றாகக் காட்டுவர் சான்றோர்.

குறிப்பு:—ஸ்ரீஞானியார் சுவாமிகளுடைய பேச்சைத் தழுவி இக்கட்டுரை எழுதப்பெற்றது.

---

4. சமயப்பகுதி

# குடி நிறுத்தத்தில் தொண்டு

கோ. கி.

இந்த மாதம் கோவையிலே, கோவை வட்டட உணவுக் கழகம் கூடிற்று. அதனை ஒட்டிக் குடி நிறுத்தக் குழுவும் கூடிற்று. அப்போது பல சங்கதிகள் பேசப்பட்டன. அவைகளில் ஒன்று இக்குழுவை மாற்றி அமைக்கும் திட்டம் ஆகும். அரசியலார் ஒருதிட்டத்தை ஏற்படுத்தி அனுப்பியிருக்கிறார்கள் என்று தலைவர் கூறி அத்திட்டத்தின் விவரங்களைக் கூறினார். இந்த வட்டத்தில் இதுவரை உணவுக் கழகத்தார்களே அக் குழுவிலும் அங்கத்தினர்களாக இருந்தனர். அரசியலார்களோ,

அதனை மாற்றிச் சட்டசபை அங்கத்தினர்களும், காங்கிரசு
தலைவரும் செயலாளரும், முஸ்லிம்லீக்குத் தலைவரும் செய
லாளரும் ரோமன் காதலிக் குருக்களும் ஏனைய கிறிஸ்தவக்
குரு ஒருவரும் அங்கத்தினர்கள் ஆக இருக்கவேண்டும்
என்று திட்டம் வகுத்திருந்தார்களாம். இந்தத் திட்டத்தின்
படி ஏற்படுத்துவோம் என்று தலைவர் கூறினார். இதனைக் கேட்
டுக் கொண்டிருந்த ஒருவர் தலைவரைப் பார்த்து கிறிஸ்தவ
சமயத்திற்கு இரண்டு பிரதிநிதிகளும் முகம்மதிய சமயத்திற்கு
இரண்டு பிரதிநிதிகளும் ஏற்பட்டிருக்க இந்து சமயத்திற்கு
யார் இருக்கிறார்கள் என்று அவர் கேட்டார். அந்தக்
கேள்வியைக் கேட்டவுடன் அங்கிருந்த இந்து அங்கத்தினர்
கள் சிரிக்கத் தொடங்கினர். "நாங்கள் இருக்கிறோம்" என்று
கூச்சல் இட்டார்கள். "நீங்கள் இந்து சமயத்தினுடைய
பிரதிநிதிகளா?" என்று அவர் கேட்டார். தற்கால அரசியல்
வாதத்தில் முழுகிக் கிடக்கும் அன்னார்கள் "ஏன் இல்லை"
என்று கத்தினார்கள். சமயப் பிரதிநிதித் தனத்திற்கும்
அரசியல் வாதப் பிரதிநிதித் தனத்திற்கும் வித்தியாசம் தெரி
யாத இவர்களிடம் வாதித்துப் பயன் இல்லாமற் போயிற்று.
பெயருக்கு மாத்திரம் மதத்தினர் என்று சொல்லிக்கொண்டு
சமயத்தில் சிறிதேனும் அக்கரை இல்லாத மக்களிடம் பேசிப்
பயனில்லை. கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும் சமயப்
பிரதிநிதித்துவம் கேட்டு அதனைப் பெறுகிறார்கள். இந்துக்
கள் அதை அறிவதே இல்லை. இது தற்காலக்கோலம்.

சமயப்பணியிலேயே ஈடுபட்டுவரும் பல சமயச் சங்கத்
தார்களும் மதுவிலக்குக் குழுவில் சேர்ந்து வேலை செய்வது
நல்லது அல்லவா? அதில் இந்து சமயத் தொண்டர்களுக்கு
இடம் கொடாதது சரியல்ல. இராம கிருஷ்ண சமாசம்,
பிரம்மஞான சமாசம், சைவ சமாசம், வைணவ சமாசம்
முதலிய சமாசத்தினர்கள் இக்குழுவில் அங்கத்தினராகி
செய்யக்கூடிய திருத்தொண்டு சிறப்பாக இருக்கும் அல்லவா?
அந்தத் திருத்தொண்டில் இந்து சமயத்தார்களைச் சேர்க்க
விடாதது அரசியலார் செய்யும் தவறு அல்லவா? இத்தவறினை



எடுத்துக் காட்டாது அதனை ஒத்துப்பாடுகிறவர்கள் நமது இந்து மக்களே என்று அறிக.

சமய ஊழியர்கள் செய்யக்கூடிய திருத்தொண்டுகளில் சிறைச்சாலைகளில் சமயபோதனை புகட்டுவது ஒன்று; வைத்திய சாலைகளில் நோயாளிகளுக்கு ஆறுதல் சொல்வது மற்றொன்று. இப்பணிகளில் ஒவ்வொரு வட்டத்திலும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் ஈடுபட்டு வருகிறார்கள். எத்தனை இந்து சமய சங்கத்தினர்கள் இந்தத் திருப்பணியை தென்னாட்டில் செய்கின்றனர்? இலங்கையிலே கொழும்பு விவேகானந்த சபையிலே இத்தொண்டு ஆற்றப்பட்டு வருகிறது. ஆனால் தென் இந்தியாவில் தமிழர் நாட்டில் பெரும்பாலும் இல்லை. இதனை ஏன் நிவர்த்திக்கக்கூடாது? இந்தத் திருப்பணியில் ஈடுபட்டிருந்தால் இப்போது அரசியலார் இந்து சமயத்தினரை மதுவிலக்கக் குழுவில் சேர்க்காமல் விட்டிருப்பார்களா? நமது வட்டத்து இந்து அரசியல் அங்கத்தினர்கள் பல் இளிப்பார்களா? தப்பு நம்மீது உளது. அதனைத் திருத்திக்கொள்வோமாக.

---

## 5. கலைப்பகுதி

# கல்வெட்டு கூறும் சில அரிய செய்திகள்

### அழகுமதியன்

நூல்களில் காணாத சில செய்திகள் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. பெரிய புராணத்தில் சொல்லப்படாத சில பெயர்களும் கல்வெட்டுகள் மூலமாக அறிய முடியும். ஆச்சாபுரத்துக் கல்வெட்டு ஒன்றில் சம்பந்தர் திருமனைவியர் பெயர் சொக்கியார் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இப்பெயர் எந்த நூலிலும் சொல்லப்படவில்லை.

திருப்பனந்தாள் கோயில் கல்வெட்டு ஒன்றில் குங்கிலியக் கலய நாயனார் திருமனைவியின் பெயர் நீலாயி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனைக் குறிக்கும் கல்வெட்டின் பகுதியை

உயர்திரு. சுந்தரேச வாண்டையார் படி எடுத்து அனுப்பியுள்ளார். அது வருமாறு:—

“ஸ்வஸ்தி ஸ்ரீ யாண்டு ம்௪ நாள் முன்னூற்றிர—
திரிபுவனசக் கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க
சோழ தேவர் திருப்பரந்தா னுடையாரைக்
கும்பிட்டுத் திருச்சுற்று மாளிகையிலே
எழுந்தருள நீலாயி குங்கிலியக் கலையர்க்கு”

இக்கல்வெட்டு முதற் குலோத்துங்கன் (1073—1118) காலத்தது.

திருக்கோளிலி (திருக்குவளை)க் கல்வெட்டிலே அதிபத்த நாயனாரைப்பற்றிய குறிப்பு ஒன்று இருக்கிறது. அது அடியிற் கண்டவாறு உள்ளது.

“ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு சவது மார்கழி மாதத்தொருநாள் உடையார் கோவிலில் முன்னாளில் சிவன் படவரில் ஆலன் எழுந்தருளிவித்த அதிபத்த நாயனார்க்கு திருப்படி மாற்றுக்கு இவன் தன் சாதியார் பக்கல் இரந்து பெற்ற காசாய் கலேயில் காலசேரி ஐய்யன்னையபட்டன் மகன் தாமோதரபட்டன் பக்கல் நெல் பொலிசைக்கு குடுத்த காசாய் இவன் ஒடுக்கின காசு உதெள இக்காசு இரண்டாயிரத் தொரு நூறும் கைக் கொண்டு இருப்படி மாற்றுக்கு நாள் ஒன்றுக்கு இருநாழி அரிசி அமுது படிக்கு அளிப்போமாகவும் நாங்கள் இப்படி செய்வோமாகவும் சம்மதித்தோம்”

இந்தக் கல்வெட்டினால் திருக்கோளிலிக் கோயிலிலே, அதிபத்த நாயனார் திருவுருவத்தை இரண்டாம் இராஜராஜன் (1146—1178) காலத்தில் செம்படவர் குலத்தில் தோன்றிய ஆலன் என்பவர் எழுந்தருளுவித்து அதன் நிபந்தத்திற்காக அவர் சாதியாரில் இரந்துபெற்ற காசு 2100-ம் தந்து அதன் பொலிசை (வட்டி)யிலிருந்து திருப்படி மாற்று நடத்தும்படி ஏற்படுத்தினார் என்று தெரிகிறது. செம்படவர் என்ற சொல் சோழர்கள் காலத்தில் “சிவன்படவர்” என்ற உருவத்தில் இருந்தது என அறியப்படுகிறது.

மேலே குறித்த கல்வெட்டுப் பகுதியும் குறிப்புக்களும் உயர்திரு சுந்தரேச வாண்டையார் எடுத்து அனுப்பியவை.

6. கவிப்பகுதி

# 1. நெடும் புத்தகத்து எழுதுதல்

கோவைகிழார்

இளவயதில் பள்ளியில் படித்த காலத்தில் ஆங்கிலப் பாடம் கற்கையில், “லீ-ஹண்ட்” என்ற கவிஞருடைய ஒரு கவிதையைப் படித்து மகிழ்ந்ததுண்டு. இன்றைக்கும் அதையே பிள்ளைகள் வாசித்து வருகிறார்கள். தேர்தல்களிலும் பொருள் உரைப்பதற்காக அக்கவிதையை பரீட்சகர்கள் தருவதுண்டு. அதன் தலைப்பு. “ஆதெம் மகன் ஆபூ” என்பது. இக்கவிதையில் கண்டபொருள் வருமாறு. ஆபூ என்பவர் நல் ஒழுக்கத்தில் சிறந்தவர். கடவுளிடத்திலும் அடியாரிடத்திலும் அன்பு நிறைந்தவர். ஓர் இரவு உறக்கத்தில் ஆழ்ந்ததும் சாந்தமுமான கனவு கண்டார். விழித்துப் பார்த்தார். அறையில் நிலவு அடித்துக்கொண்டிருந்தது. அந்த ஒளியில் ஓர் அற்புதக் காட்சி தோன்றிற்று. ஒரு தேவதூதர் ஒரு பொன் மயமான புத்தகத்தில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். சாந்தத்தினால் மிக்க தைரியமடைந்த ஆபூ அவரைப்பார்த்து “தாங்கள் எழுதுவது என்னமோ?” என்று வினயமாகக் கேட்டார். தூதரோ தலை நிமிர்ந்து, “கடவுள் அன்பர்களின் பெயர்களை எழுதுகிறேன்” என்றார். “என்னுடைய பெயர் அதில் ஒன்றா?” என்று ஆபூ கேட்டார். “இல்லை, அப்படி இல்லை” என்று தூதர் சொன்னார். ஆபூ மிகவும் வினயமாக “அப்படியானால் அவன் அடியார்களின் அன்பர்களிலாவது என் பெயரை எழுதுங்கள்” என்று கூறினார். தூதரோ ஏதோ எழுதினார்; பின் மறைந்தார். மறுநாள் இரவு அவ்வுருவம் மீண்டும் தோன்றியது. கடவுள் அன்பர்களுடைய பெயர்களைக் காட்டிற்று. ஆபூவின் பெயர் முதற்பெயராக விளங்கிற்று. இதுதான் அக்கவிதையில் கண்ட பொருள்.

கடவுளிடத்தில் அன்புமிகுந்த அடியார்கள் தாம் அன்பர் என்று பாராட்டப்பட வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள் என்றும் அதற்காக அவர்கள் தம் எண்ணத்தை வெளியிடவும்

எத்தனிப்பார்கள் என்றும் அறியக்கிடக்கிறது. மேலும் கடவுளிடத்தில் வைக்கும் அன்பைக் காட்டிலும் அவன் அடியாரிடத்தில் வைக்கும் அன்பு சிறப்புடையது என்றும் அடியாரிடத்து அன்பு கடவுளால் தன் அன்பாகப் பாராட்டப் படும் என்றும் இந்தக் கவிதை வாலாற்றால் அறியக் கிடக் கிறது. இதில் கண்ட இரண்டாம் பகுதியை தாயுமான சுவாமி கள் "தொண்டரொடு கூட்டு கண்டாய்" என்ற சொற் றொடரில் வற்புறுத்தியிருக்கிறார். மெய்க்கண்ட தேவரும் சிவஞான போதத்தில் 12-வது சூத்திரத்தில் "அன்பரொடு மரீஇ" என்று அழுத்தமாகச் சொல்லி அருளியிருக்கிறார். ஆகவே இக்கருத்து தமிழ், அறிஞர்களிடத்தில் மிகுதியாக இருந்தது என அறியலாம்.

இனி முதற்பகுதி வெகு உருக்கமாக பட்டினத்து அடி களால் கோயில் நான் மணிமாலையில் வற்புறுத்தப்பட்டிருப் பதை அறியலாம். மலையாசன் மகளும் திருமால் தங்கையும் ஆன அம்மையைப் பெருமான் திருமணம் புரிந்த காலை அத்திருமணப் பந்தரிலே அமரர்கள் புகுந்து பெருமா னுடைய திருத்தசாங்கங்களையும் புகழ்ந்து பாடி, அறுகு சாத்தித் தொழுங் காலையில் எழுதப்படும் புத்தகத்தில் அவனுடைய தமர்களின் (அடியார்கள்) பெயர்களில் என்னுடைய பெயரையும் சேர்க்கப்படல் வேண்டும் என்று வணங்குகிறார்.

எம்பெருமானுடைய திருமணத்தின்போது அமரர்கள் முதலாக அவன், அடியார்கள் அத்திருமணக் கோலம் காண வருவார்கள். அப்போது அங்கு வந்த அடியார்கள் பெயர்கள் எழுதப்படும். அதில் தன்பெயரும் இருந்தால்தான் அவன் அருளுக்கு இலக்கு ஆவன் என்ற செய்தி உறுதியாகும் என்பது இதன் நோக்கம். மேலும் அவ்வாறு எம்பெருமா னுடைய அருள் வந்தால் கண்ணில் காணா அணுவும் வானுற நிமிர்ந்து நிற்கும், வால் நுளம்பும் கருடன் ஆகும். அதுபோல அவன் அருள்வரின் எளியவனை யானும் அடியானாவேன். தொண்டருடன் கூடுபவன் ஆவேன் என்பது கருத்து. இதே செய்யுளில் இறையவன் அடியார் நெஞ்சிலும் தில்லை மன்றுளி



லும் ஆடுபவன் என்று கூறுகிறார். மற்றும் புகழ்ந்து பாடும் தசாங்கங்களில், கொன்றைத் தார், விடைக் கொடி, தமருகப் பறை, கங்கையாறு, கலி ஆணை, செங்கண் வேழம், வைதிகப் புரவி, வானநாடு, மேரு மால்வரை, தில்லைப்பதி, பதினுயிர நாமம் கூறப்பட்டன. மணிவாசகனார் திருத்தசாங்கத்தை ஒட்டிப்பார்க்க.

மேலேகண்ட ஆங்கிலக் கவிதையைச் சிறு மாணவர்களும் அறிவார்கள். அது நூறு ஆண்டுகளின்போது எழுதப் பட்டது. ஆனால் அதே கருத்தை வெகு அழகாகவும் உருக்க மாகவும் பட்டினத்தடிகள் ஆயிரம் ஆண்டுகளின் முன் வெளி யிட்டிருக்கிறார். அதை எந்த மாணவன் அறிவான். சைவப் பெருமக்களில் பெரும் பான்மையோர் அறியார்கள். ஆனால் சைவர்களுக்கு ஏற்பட்ட விதியோ அப்பாடல் பதினோராம் திருமுறை பகுதியில் உள்ளதால் ஆண்டுக்கு ஒரு முறை யாவது படித்தே தீர வேண்டும். விதி இருந்தும் எத்தனை பேர் படிக்கிறார்கள், படித்துப் பொருள் அறிந்திருக்கிறார்கள்?

---

# 2. ஞானிகளும் சிரிப்பார்களா?

"சிவக்கவிமணி"

ஞானிகள் பல திறப்படுவர்; இவர்களை உலகில் அறிகின்ற விதமும் பல; மயிர் வளர்க்கின்றவர்கள்; நகம் வளர்க்கின்றவர்கள். உடல் கழுவாதவர்கள்; பேசாதவர்கள்; பேசுகின்றவர்கள்; உடையில்லாதவர்கள்; கோவணம் உடைய வர்கள்; என்றிவ்வாறு பலபல விதமாக உலகவர் ஞானிகளைப் பற்றி நினைத்துக் காண்கின்றனர். ஆனால் நாம் இங்குப் பேசும் ஞானிகள் இந்த வகைகளுள்ளும் அடங்கினவர்க ளல்லர்; அடங்காதவர்களுமல்லர்; இவர்களை அறிந்து கொள்ளுதல் மிகக் கடினம்; செத்தாரைப் போலே திரி; செத்திட்டிருப்பர் சிவயோகியர்களே; எத்தொழிலில் நின்று லும் சித்தம் சிவனிடத்தே நிலைத்துள்ளவர்கள்; ஞான மீசன் பாலன்பே; பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்;

விழித்தகண் குருடாத்திரி வீரர்; பின்னர் சடையார் தமக்காளாம் விதியால் வாழ்வார்; கந்தை மிகையாங் கருத்துடையார்; "நாமார்க்கும் குடியல்லோம்......சங்கரற்கே மீளா ஆளாவோம்" "வானந்துளங்கில் என்?" "மன்னரோடுறவு மஞ்சேன்" "கற்றாரையான் வேண்டேன் கற்பனவுமினியமையும்" என்று பலவாறு கூறப்படும் தன்மைகளை ஒருவாறு அறியலாம்.

சிரிப்பு என்பது உள்ள மகிழ்ச்சியின் வெளித் தோற்றம். சிலபோது கோபம் இகழ்ச்சி முதலியவற்றிலும் சிரிப்பு நிகழும். அவை வேறு. சிரிப்பு மனிதருக்கே உரியது. பிற உயிர்கள் எவையும் சிரிப்பதில்லை. அவற்றின் உள் மகிழ்ச்சியை வேறு வகையால் அறிதல் வேண்டும். "பசுக்களெலாம், நாத்தழும்ப நக்கி மோந்தணைந்து கனைப்பொடு நயந்து, வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத் துள்ளியபின்" (திருமூலர்-புரா 14) "ஆனினங்களணைந்த மகிழ்ச்சியளவின்றி....அருகுசாரத் துருகித்தாயாந்தன் மைநிலையினவாய்க் கனைத்துச் சுரந்துமுலைக் கண்கள் கறவாமேபால் பொழிந்தனவால்" (சண்டேசர் - புரா 30) முதலியவை பார்க்க. மனிதர்களைச் "சிரிக்கின்ற பிராணி" என்று வரையறுப்பாருமுண்டு, "மனிதன் சமைத்து உண்கின்ற பிராணி" "ஆயுதங்கள் செய்து உபயோகிக்கின்ற பிராணி" "நிமிர்ந்து நிற்கின்ற பிராணி" என்று பலப்பல விதமாய் வரையறை கூறுவார்கள்; அவற்றுள் "சிரிக்கின்ற பிராணி" என்பது ஒன்று. ஆனால் இவையெல்லாம் சிரிப்புக்கேயிடமாய் மனிதத் தன்மையைக் குறைத்துக் கூறுதலேயாம். உண்மையான வரையறையாவது "மனிதன் நினைக்கின்ற பிராணி" என்பதேயாம். "நினைக்க வேண்டுவது இது; நினைக்கக் கூடாதது இது என்றறிந்து நினைப்பவன் மனிதன்; இவ்வாறு நினைக்கும் "மனிதரிற்றலையான மனிதர்"கள்தான் ஞானிகள் எனப்படுவோர்.

ஞானிகளும் சிரிப்பார்களா? என்று தலைப்பில் கேட்டோம்; அந்தக் கேள்விக்கு விடை சொல்லுதல் எளிதான காரியமன்று; "ஞானிகள் சிரிக்கமாட்டார்கள். சிரிப்பு என்பது கேலிக்கூத்து. கொக்கரிப்பு, வேடிக்கை, விகடம்



முதலிய தாழ்ந்த மன நிலைகளுக்கே இடமாகும்." "உயர்ந்த ஆழ்ந்த சூழ்ந்த மனநிலை (serious and serene and deep concentration) உடையாரிடம் சிரிப்புக்கு இடமில்லை" என்று பலபேர் நினைக்கிறார்கள். பரமண்டலத்தில வேடிக்கை விளையாட்டு, குதூகலம், சிரிப்பு முதலியவற்றுக்கு இடமில்லை என்று வேதகுருக்கள்மார்கள் கூறுவார்களாம். பூனைகளும் வால் குழைத்து விளையாடாமலிருக்கும்படி அவற்றின் வால்களை வெட்டி விடுவார்கள் என்றொரு அமெரிக்க ஆசிரியர் வேடிக்கையாய் எழுதினார். ஞானிகள் எப்பொழுதும் அழுது கொண்டேயிருப்பார்கள். அழுமூஞ்சிகள் என்று சிலர் கருதுகின்றார்கள். ஆனால் "மார்பாரப் பொழி கண்ணீர் மழை வாரும் திருவடிவும்" என்று நமது பெரியோரைப்பற்றிச் சொல்லியிருக்கிறதே என்றால் அது வேறு. இவர்கள் கண்ணீருக்கும் மற்ற உலகருள் மகன் செத்தான், பெண்டாட்டி இறந்தாள். தந்தையார் போயினார் தாயரும் போயினார் என்றபோதெல்லாம் மக்கள் விடுக்கும் கண்ணீர் வேறு. முன்னையது சிவனைப்பற்றிய ஆனந்தமாகிய சுத்தமுடைய கண்ணீர்; "அன்பர் வார்ந்த கண்ணருவி மஞ்சனசாலை" (திருவிசைப்பா) என்றபடி அது இறைவர் விரும்பி ஆடும் தீர்த்தமாகும். ஆனால் பின்னையது (நமது உலகத்துத் துன்பக் கண்ணீர்) மலசலம்போல அசுத்தக் கண்ணீர். இவையிரண்டையும் கண்ணீர் என்ற ஒரு தன்மைபற்றியே ஒன்று எனக் கருதுவது அறியாமையேயாகும். கோயில்கள் மடங்கள் இவைகளிலும் பணம் இருக்கிறது; உலகத்தார் துராசையாய் மக்கள் கொள்ளைகொண்டு சேர்க்கும் இடத்திலும் பணம் இருக்கிறது; இந்த ரூபாய்க்கும் 16 அணாதான் விலை. அந்த ரூபாய்க்கும் 16 அணாதான் விலை என்று இரண்டும் ஒன்று என்று எடுத்து கோயில் மடங்களின் பணத்தை எடுத்து உலகச் செயல்களுக்குச் செலவிடலாம் என்று கூறுவோர்களது மடமை எப்படியோ அப்படியேதானிதுவும்.

சிரிப்பிலும் பேதமுண்டோ? எனின் உண்டு. ஞானிகளின் சிரிப்பு வேறு. அது இறைவனையேபற்றி நிற்கும்; உலகத்தைப் பற்றியிராது. அது உயிரைச் சுத்தமாக்கிப்

பிறவியை அறுக்கும். மக்களின் உலகச் சிரிப்பு வேறு. அது சடசம்பந்தமானது. அசுத்தமானது மேலும் பிறவிக்கு வித்தாகும்.

ஞானிகளும் சிரிப்பார்கள் : "சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்" என்பது திருவாசகம். அவர்கள் இறைவனோடு தான் கூடிவிளையாடிச் சிரிப்பார்கள். அந்தநிலை நம்மனோர்க்கு விளங்குதல் கடினம். சிறிது மாறு கண்ணுடைய சிறுபிள்ளைகளுள் ஒருவன் மற்றவனைப் பார்த்து "அடே! அவன் ஒன்றரைக் கண்ணன் டீரியோ? என்று விளையாடுவது உண்டு. அதுபோல அப்பர் சுவாமிகள் இறைவரை நோக்கி இறைவரே முழுக்கண்ணுடைமையும் கண்ணில்லாமை என்பதல்லவா? அரைக்கண்ணுடையாரை நான் எங்குங் கண்டதில்லை; நீர் உமது உடம்பில் அரைவரிசை உமையம்மைக்குப் பாகம் பிரித்துக் கொடுத்துவிட்டீர்; ஆதலின் உமக்குள்ள மூன்று கண்களுள் உமக்குப் பாதிதான் பாத்தியம்; நீர் ஒன்றரைக் கண்ணரே" என்று சுவாமியுடன் வேடிக்கை பேசிச் சிரிக்கின்றார்.

"இன்றரைக் கண்ணுடையா ரெங்குமில்லை யிமயமென்னும்
குன்றறைக் கண்ணன் குலமகட்பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமையாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீரொற்றி யூருறையுத்தமனே"

மாணிக்கவாசக சுவாமிகள் இறைவருடன் விளையாடிச் சிரிக்கின்றார். இறைவரே உம்மை ஒரு குணமுமில்லாதவர்; மானிடனேயன்றக் கடவுட்டன்மையற்றவர்; மதியை உடையவர்; என்று பழிகூறுவேன்; தேய்ந்த "பிச்சன்" இந்தப் பிச்சன் என்று உமது பைத்தியக்காரத் தன்மைபற்றி ஏசுவேன் என்கிறார்.

"...வேலைநஞ்சுண், மழைதருகண்டன்,குணமிலிமானிடன் றேய்மதியன், பழைதருமாபரனென்றறைவன் பழிப்பினையே" (நீத் - 46) "....வெங்கரியின், உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ் சூண்பிச்சனூர்ச் சுடுகாட், டெரிப் பிச்சனென்னையு மாளுடைப் பிச்சனென்றேசுவனே" (நீத் - 49)



இனிச் சுந்தரமூர்த்தி நாயனார் இறைவருக்குத் தோழர் என்ற முறையில் அவருடன் வேடிக்கையாகப் பலவிடத்தும் கேளிக்கை செய்து சிரிக்கிறார். வேதாரணியம்-கோடிக்கரை; அங்கு கோடிக்குழகர் கோயில்; தனியாய்க் கடற்கரையில் இருக்கிறது; கடற்காற்றுக் கடிதாய் மணலை அள்ளி வீசி அடிக்கிறது. பக்கத்தில் குடி ஒருவருமில்லை. இதை ஆளுடைய நம்பிகள் பார்க்கிறார் ஏ! சுவாமீ நீர் ஏன் உமது சொந்த ஊர்களைவிட்டு இந்தக் கடற்கரையில் வந்து தனியாய் இருக்கிறீர்; உமக்கு உம் ஊரைப்பற்றி மானக்கேடான வார்த்தை ஏதோ வந்துவிட்டது போலும்; உமக்குப் பிரியமான ஊர்கள் இரண்டு. ஒன்று ஒற்றியூர்; மற்றொன்று ஆரூர். இரண்டிலும் நீர் அரசராகி அரசாங்கம் செலுத்துகிறீர். அப்படியிருந்து அங்கு வருபவர்கள் ஒற்றியூரேல் உம்மதன்று நீர் கடன்பட்டு ஒற்றிவைத்த ஊர் என்கிறார்கள்; மற்றதனை உம்முடைய சொந்தமான தொன்மையான இராசதானியாகிய தலைநகரம் என்று கண்டும், இது ஆருடைய ஊர் என்று ஆரூர் ஆரூர் என்று உம்மெதிரிலேயே கேட்கிறார்கள். இந்த அவமானம் பொறுக்கலாற்றாது இங்கு வந்து கடற்கரையில் மனிதர் கண்ணிற்படாது கடலை நோக்கி வீற்றிருக்கிறீரோ? உமக்கு மதி (புத்தி) முற்றவில்லை என்று வேடிக்கை பேசிச் சிரிக்கிறார்.

இஃது அவர்பாட்டு :

ஒற்றியூரென்ற வூனத்தினாலது தானோ?
அற்றப்பட வாரூரதென்ற கன்றாயோ
முற்றா மதிசூடிய கோடிக்குழகா
எற்றாற் றனியேயிருந் தாயெம்பிரானே,

ஆகவே ஞானிகளும் சிரிக்கின்றார்கள் அல்லவா?

---

7. ஆராய்ச்சிப்பகுதி

# இரு பல்லவ அடியார்கள்

**துடிசைகிழார்**

(ஆகஸ்டு தொடர்ச்சி)

## ஐயடிகள் காடவர்கோன் என்கிற இரண்டாம் மகேந்திரவர்மன்

**ஆட்சிக்காலம் —(650—655 A. D.)**

**பிறந்தது—610 A. D. முத்தி எய்தியது 685 A. D.**

பெரிய புராணத்தில் கூறப்பட்ட 63 நாயன்மார்களில் இவர் ஒருவர். இவர் பல்லவர் குடிவழியில் வந்தவர் என்பது. "வையநிகழ் பல்லவர் தம் குலமரபின் வழித்தோன்றி" என்று சேக்கிழார் கூறுவதால் அறியலாம். இவருடைய புராணத்தில் இவர் இன்னார் மகன் என்று சேக்கிழார் கூற வில்லை.

ஆனால், பல்லவர் சரித்திரத்தை ஆராயும்போது, இவர் முதலாம் மகேந்திரவர்மனின் (600—625 A. D.) பேரனும், முதலாம் நரசிம்மவர்மனின் (615—650 A.D.) மகனும் ஆவர் என்பது தெரிகிறது.

அரசியல் உலகில் இவரை இரண்டாம் மகேந்திரவர்மன் என்றும், சாதாரணமாகவும் இலக்கிய உலகிலும் ஐயடிகள் என்றும் வழங்குவது உண்டு. பல்லவநாட்டை இவர் ஐந்து ஆண்டுகள் ஆண்டதால் இவருக்குக் காடவர் (பல்லவர்) கோன் என்ற பட்டமும் உண்டு. காடவர் கோன் என்பது பல்லவ அரசர்களுக்கே ஏற்பட்ட ஒரு பொதுப் பெயர்.

மேலைச் சளுக்கிய அரசனும், கீர்த்திவாய்ந்த அர்ஷவர்த்தனன் என்னும் ஆரிய அரசனைப் புறங்கண்டவனுமான இரண்டாம் புலிகேசியை கி. பி. 642 ல் நடந்த வாதாபிச் சண்டையில் தோற்கடித்துக் கொன்று, வாகை புனைந்த முதலாம் நரசிம்மவர்மனுக்கு அப்புறம் ஐயடிகள் ஆட்சி புரியலானார்.



பாண்டி நாட்டில் கி. பி. 520 முதல் கி. பி. 575 வரை அரசாண்ட மூர்த்தி நாயனாருடைய ஆட்சியைப் போன்று, இவருடைய ஆட்சி, சைவமணம் கமழ்ந்ததென்று, "செய்ய சடையார் சைவத்திரு நெறியால் அரசளிப்பார்" என்று கூறுகின்றார் சேக்கிழார். சேனாதிபதி பரஞ்சோதியார் (சிறுத்தொண்ட நாயனார்) உடைய சைவ நெறியில் அமைந்த வீர வாழ்க்கையை நேரே கண்டவராயும், சிவத்தினிடத்து அன்பும், சிவனடியார் மாட்டு வாஞ்சையும், வீர வாழ்க்கையும கொண்ட முதலாம் நரசிம்மவர்மனின் மகனாராயும், சைவ சீலமே உருவெடுத்தாலொப்ப, ஆண்டவனால் ஆட்கொள்ளப் பட்டுத் தமது பாட்டனால் நீற்றறையிற் படுத்தும், யானைக் காலில் இடறியும், நஞ்சை உண்ணச்செய்தும், கல்லில் பிணித்துக் கடலில் இட்டும் யாதொரு குறையும் இன்றிப் பிழைத்து எழுந்த திருநாவுக்கரசரை நேரே பார்த்தும் உள்ளவருடைய அரசியல் வேறு விதமாய் இருக்க நியாயம் இல்லை.

இவர் நீண்ட நாட்கள் அரசு புரியாவிட்டாலும், இவர் ஆட்சி செலுத்திய குறுகிய காலமாகிய ஐந்து ஆண்டுகளிலும்,

> "திருமலியும் புகழ்விளங்கச் சேணிலத்தில் எவ்வுயிரும்
> பெருமையுடன் இனிதமரப் பிறபுலங்கள் அடிப்படுத்தும்
> தருமநெறி தழைத்தோங்கத் தாரணிமேற் சைவமுடன்
> அருமறையின் துறை விளங்க அரசளிக்குமந்நாளில்"

என்ற சேக்கிழார் வாக்கின்படி, தன்னாட்டில் எல்லோரும் வறுமையின்றித் திருமலிந்து வாழும் படிக்கும், சிறுமை இன்றிப் பெருமையுடன் வாழவும் செய்ததோடு அமையாமல், அறங்குன்றிய பிறநாடுகளை அடிப்படுத்து அறநெறியை நிலை நாட்டியும், தாரணியில் சைவ சமயம், தமிழ்மொழி, ஆகம நூற் பயிற்சி முதலியன வளரும்படி செய்தும் ஆட்சிபுரிந்து வந்தார் என்று அறிகிறோம்.

இன்னும், இவர் பிறநாட்டு மன்னர்கள் ஏவல்செய்யவும், வடமொழி தென்மொழி ஆகிய இருமொழிகளையும் வளர்த்து, இருமொழிப் புலவர்களும் பணிசெய்யவும், தனக்கு ஈடும் எடுப்பும் எவரும் இன்றி ஆட்சி புரிந்தார் என்று,

" மன்னவரும் பணிசெய்ய, வடநூல் தென்தமிழ் முதலாம்
பன்னுகலை பணிசெய்ய, பாரளிப்பார் அரசாட்சி "

என்று சேக்கிழார் கூறுவதால் அறியலாம். இப்படி யாதொரு குறைவும் இன்றி ஆட்சிசெய்து வருங்காலத்தில், முன்னை வினைப்பயனால் அரச வாழ்க்கையில் உவர்ப்புத் தோன்றிற்று. அப்போது அவர் தன் நெஞ்சைக் குறித்து,

" நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விழையாதே—கூற்றுதைத்தான்
ஆடரவங் கச்சா அரைக்கசைத்த அம்மான்றன்
பாடரவங்கேட்ட பகல் "

என்று பாடிச், சிவத்தினிடத்து உள்ளத்தைப் பதியச்செய்தார். இப்படிச் சில நாள்கள் கழிந்ததும், மறுபடியும் ஒருநாள் கி. பி. 655 ல், தன் நெஞ்சைப் பார்த்து,

" படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலா மாண்ட
முடியரசர் செல்வத்து மும்மை—கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்டு
ஓடேந்தி உண்ப துறும் "

என்று பாடி, மனதை ஒரு வழிப்படுத்தி, அரசாட்சியை இன்னல் என இகழ்ந்து, தன்னுடைய மகன் முதலாம் பரமேச்சுரவர்மனைக் கூப்பிட்டு, அவனுக்குப் பட்டத்தைச் சூட்டிவிட்டு, வேறு ஒன்றிலும் பற்று இல்லாதவராய், அப்பர் சுவாமிகளைப் பின்பற்றி, சிவாலயத்தொண்டு, சிவாலயத் திருப்பணி முதலியன செய்துகொண்டு, சிவத்தை ஒருநாளும் மறவாதவராய் ஆலயங்கடோறும் வெண்பாவும் பாடி வழிபாடு செய்து வந்தார்.

ஐயடிகள் ஆட்சியினின்றும் விலகினதும், முதன் முதல் காஞ்சி நகரத்தின்கண் உள்ள ஏகாம்பர ஈச்சுரத்தை வழிபட்டு வரும்நாளில் ஒருநாள்,

" என்னெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னெஞ்செய் வாயாகிற் காலத்தால்—வன்னஞ்சேய்
மாகம்பத் தானை யுரித்தானை வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு "

என்று பாடி, தன் அரண்மனை வாழ்க்கை ஒழித்து, ஓடேந்தி



உண்பதே உத்தமமானது என்று கண்டு, அன்றுமுதல் பசித்தால் பகல் உச்சி நேரத்தில் 'இரந்துண்டு, கோவில் மண்டபம் இருக்கையாகக் கொண்டு வாழ்வாரானார்.

அப்படி இருக்கும்போது, தான் அரசு வீற்றிருந்த நகரத்திலேயே அவ்வாறு இருப்பது சரி இல்லாமை கண்டு, அங்கிருந்து புறப்பட்டுக் கால் நடையாகத் திருமயிலை சென்றார். அங்கு தன் நெஞ்சை முன்னிலைப்படுத்தி,

" குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப்புகா முன்னம் நெஞ்சே—மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை யங்காந் திளைத்து. "

என்று பாடி, கபாலீச்சுரத்தில் திருப்பணி செய்துகொண்டு சின்னாள் இருந்து, அங்கிருந்து புறப்பட்டு, திருவொற்றியூர் என்னும் தலத்தை அடைந்து, ஆங்கு சிவாலயத்தொண்டு இயற்றிக்கொண்டு இருக்கும்போழ்து, நண்பர்களும், மந்திரி பிரதானிகளும், முதலாம் பரமேச்சுரவர்மன் ஆகிய தன் மகனும் ஆண்டுப் போந்து, மறுபடியும் காஞ்சிக்கு வந்து அரண்மனையில் இருந்துகொண்டு அரசுரிமையை ஏற்றுக் கொள்ளும்படி வேண்ட,

" தஞ்சாக மூவுலகுமாண்டு தலையளித்திட்டு
எஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன்—நஞ்சங்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண்டி ருக்கப்பெறின் "

என்று ஒரு வெண்பாவைப் பாடித் தம் உட்கருத்தை வெளியிட்டு, வந்தவர்களைத் தெருட்டி அனுப்புவார் ஆயினார்.

பின், சில நாட்கள் கழித்து, காஞ்சிக்குச் சமீபம் தம் நாட்டிலேயே இருந்தால் நண்பர்கள் அடிக்கடி தொந்தரவு கொடுக்கிறார்கள் என்று கருதி, வடதிசை நோக்கிப் புறப்பட்டு, தொண்டை நாட்டைக் கடந்து, தற்காலம் உச்சயினி என்று கூறப்படும் உஞ்சேனை மாகாளம் சென்று, மாகாளேச்சுரரை வணங்கி, தன் நெஞ்சைப் பார்த்து,

" காளையர்கள் ஈளையர்களாகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவழிந்து—சூளையர்கள்
ஓகாளம் செய்யாமுன் நெஞ்சமே உஞ்சேனை
மாகாளம் கைதொழுது வாழ்த்து "

என்று பாடி, வாழ்த்தி, ஆங்கு சிலநாள் வைகினார்.

காஞ்சிக்கும் உஞ்சேனை மாகாளத்துக்கும் இடையே உள்ள மயிலை - திருவொற்றியூர் இவைகளைத் தவிர வேறு தலங்களையும் இவர் வாழ்த்தி வணங்கி இருக்கலாம். ஆனால் அவைகளுக்கு இவர் பாடிய வெண்பாக்கள் கிடைக்கவில்லை. நம்பி யாண்டார் நம்பிகள் காலத்திலேயே கிடைத்தவை 24 வெண்பாக்களே. அவைகளை அவர் பதினொராந் திருமுறையிற் சேர்த்து நமக்கு அளித்துள்ளார்.

அங்கு, இருந்து கொண்டு இருக்கும்போது, ஐயடிகள் தில்லையுட் கூத்தனை வணங்க ஆர்வங்கொண்டார். சுந்தர மூர்த்திகள் திருவொற்றியூரில் இருக்கும்போது 'அன்னம் வைகும் வயற் பழனத்து ஆரூரானை மறக்கலும் ஆமோ' என்று பாடியதுபோல என்க.

ஆகலின், மாகாளத்தினின்றும் புறப்பட்டு, தில்லையை அடைந்து, வீதியை வலமாக வந்து, பேரம்பலத்தைத் தரிசித்துக்கொண்டு, சிற்றம்பலம் அடைந்து,

" பெருத்தெழு காதலில் வணங்கிப் பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம்பலத்தாடல் புரிந்தருளும் செய்யசடை
நிருத்தனார் திருக்கூத்து நேர்ந்திறைஞ்சி நெடுந்தகையார்
விருப்பினுடன் செந்தமிழின் வெண்பாமென் மலர்புனைந்தார் "

என்றபடி, ஆராக்காதலுடன் தில்லையுட் கூத்தனை இறைஞ்சி,

" ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச் சிற்றம்பலமே சேர் "

என்று பாடி, ஆங்கு, தங்கித் திருத்தொண்டு செய்துகொண்டு இருந்தார். அப்போதுதான் அவருக்கு மூப்பு வந்து எய்தியது என்பது அவர் வாக்கால் நாம் அறிகிறோம்.



பிறகு, இன்னும் பல தலங்களை வணங்க எண்ணங் கொண்டு, அக்காலத்தில் சிறப்புற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் சென்று, காவிரிசங்கமத்தில் மூழ்கி ஆண்டு இருக்கும்போது, திருச்சாய்க்காடு என்னும் தலம் சென்று, வணங்க நினைந்து, தன் நெஞ்சைப் பார்த்து,

" அஞ்சனஞ்சேர் கண்ணாரு வருக்குமப் பதமாய்க்
குஞ்சிவெளுத் துடலங் கோடாமுன்—னெஞ்சமே
போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து "

என்று பாடி, திருச்சாய்க்காடு சென்று வணங்கி, ஆங்குச் சில நாட்கள் இருந்து, பின் காவிரியின் வடகரை வழியாகவே மேற்றிசை நோக்கிப் புறப்பட்டுச் செல்லும்போது, வழியில் ஓர் ஊர் அருகே ஒருவன் இறந்துபோக, அவனுடைய கால் கட்டைவிரல்கள் இரண்டையும் அவன் கட்டியிருந்த வேட்டி பின் கரையைக் கிழித்துக்கட்டி, கையும் கட்டி, மாலை அணிந்து கண்ணுக்கு மை எழுதி, பருத்த புது வேட்டியால் மூடிப்பலர் அழுதுகொண்டிருப்பதைப் பார்த்து,

" காலைக் கரையிழையான் கட்டித்தன் கையார்த்து
மாலை தலைக்கணிந்து மையெழுதி—மேலோர்
பருக்கோடி மூடிப் பலர்அழா முன்னம்
திருக்கோடி காவடைநீ சென்று "

என்று பாடி, அங்கிருந்து திருக்கோடிகா சென்று வணங்கி, ஆங்கு சிலநாட்கள் வதிந்தார். பின் அங்கிருந்தும் புறப்பட்டு, இராவணனுடைய பாட்டியும், மாரீசனுடைய தாயாரும் ஆகிய தாடகைப் பிராட்டிப் பூசித்துப் பேறுபெற்ற தலமாகியும், குங்கிலிக்கலய நாயனாரால் நேர்நின்ற சிவலிங்கத்தை உடைய தலமாயும் உள்ள திருப்பனந்தாளை அடைந்தார். அங்கு, பலர் மூப்பினால் கையூன்றி நகர்ந்தும், கண் குழிந்தும், கால் தடுமாறக் கோல் ஊன்றி நடந்தும் போவதைப் பார்த்து,

" காலூன்றிக் கண்ணிடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரலூன்றி வாய்குதட்டா முன்னம்—புரமூன்றும்
தீச்சாத்தாற் செற்றான் திருப்பனந்தாட் டாடகைய

என்று பாடி, ஆண்டுள்ள பல கிழவர்களை கோவில் வழிபாட்டில்
ஈடுபடுத்தி, சில நாட்கள் தங்கி இருந்து, அங்கிருந்தும் புறப்
பட்டு, திருவாய்ப்பாடி என்னும் தலத்தை அடைந்து,

“ உள்ளிடத்தான் வல்லையேல் நெஞ்சமே ஊழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து கலவாமுன்—கொள்ளிடத்தின்
தென்திருவாய்ப் பாடியான் தெய்வமறை நான்கினையும்
தன்திருவாய்ப் பாடியான் றாள் ”

என்று பாடி, துதித்து, சின்னாள் அங்கு தொண்டு செய்து
கொண்டிருந்து, பின், அங்கிருந்தும் புறப்பட்டு, திருஐயாறு
சென்று, ஐயாறப்பனை வணங்கி,

“ குந்திநடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை ”

என்று பாடி, சிலகாலம் தொண்டு செய்துகொண்டு இருந்து,
பின் அங்கிருந்து கொள்ளிடத்தைக் கடந்து, அதன் வடகரை
யில் உள்ள திருமழபாடி சென்று, ஆண்டவன் சந்நிதியில்
நின்று,

“ இழவாடிச் சுற்றத்தார் எல்லாருங் கூடி
விழவாடி ஆவிவிடா முன்னம்—மழபாடி
ஆண்டானை ஆரமுதை அன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை ”

என்று பாடித் துதித்து, தொண்டுகள் பல புரிந்து, சிலநாட்கள்
இருந்து, அங்கிருந்தும் புறப்பட்டு கொள்ளிடத்தின் வடகரை
வழியே மேற்கே சென்று, மழவர் குலதிலகமான கொல்லி
மழவன் என்னும் சிற்றரசன் வாழ்ந்த ஊராகவும், திருஞான
சம்பந்த சுவாமிகளால் பாடல்பெற்ற தலமாகவும் உள்ள
திருப்பாச்சிலாச்சிராமம் என்ற தலத்தை அடைந்தார்.
கொல்லி மழவனுடைய பெண்ணுக்கு ஏற்பட்டிருந்த முயலக
நோயைத் திருஞான சம்பந்தர் நீக்கியருளிய சிறப்பான
தலமும் ஆகும் அது. அடைந்ததும்,

“ இட்டகுடிநீர் இருநாழி ஓர்உழக்காய்
சட்டவொரு முட்டைநெய் தான்கலந்து—அட்ட



வருவாச் சாரென்றங் கழாமுன்னம் பாச்சில்
திருவாச் சிராமமே சேர் ”

என்று பாடித் துதித்தார்.

அவ்வூரில் முயலக நோய் நீங்கின காரணத்தை முன்னிட்டு
இன்றும் அவ்வூர்க் கோவிலில் உள்ள கூத்தப்பெருமானுடைய
படிமத்தின்கீழ் முயலகன் இல்லை என்பது யாவரும் கண்டு
மகிழத்தக்கது.

(தொடரும்)

---

8. விரிவுரைப் பகுதி

# பெரிய புராணத்தின் உட்கிடை

திரு. பூ. சமரபுரி முதலியார்

(செப்டம்பர் தொடர்ச்சி)

ஒரு நூல் எழுதப்புகும் ஆசிரியர் தான் கூற எடுத்துக்
கொண்ட பொருளுக்கேற்ப வாய்ப்புக்கூறி, இடையிலே அவசி
யமாகக் கூற வேண்டியவற்றை வேண்டிய அளவு கூறுதலே
எல்லா நாட்டு நூலாசிரியர்க்கும் ஒப்ப முடிந்த கருத்தாக
லினன்றே, சேக்கிழார் பெருமானும் அவ்வாறு செய்தனர்
என்று கொள்ளுவதே அமைவுடைத்தாம்.

சேக்கிழார் பெருமான் அருளிய புராணத்தில் சிறுத்
தொண்ட நாயனாரது வீரம் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கி
லும் இன்னும் விரிவுபடுத்திக் கூறியிருப்பின் உலகியல் மாந்தர்
வீரத்தில் மேலும் திகழ்ந்து நாட்டிற்கு மிகப் பெரிதும் பயன்
படுவார்கள் என்று கருதும் ஆசிரியர்கள் அதற்குரிய கருவி
களும் சான்றுகளும் உளவேல் அவற்றின் துணை கொண்டு
“ பரஞ்சோதியார் வீரம் ” முதலிய பெயர்களோடு விரிந்த
நூலொன்று செய்து உலக உபகாரமாக உதவுவார்களாயின்
அவர்களைத் தடுப்பார் ஒருவருமில்லையே! அத்தகைய நூல்
தக்க சான்றுகளோடு வெளிவருமாயின் உலகம் போற்றுமே !!
ஆக, அது செய்வது விட்டு, சேக்கிழார்மீது பாய்ந்து குறை
கூறுவதில் யாது பயன்? நிற்க.

மற்றுஞ் சிலர் தாம் கொண்ட கருத்தைச் சைவ சமயா
சிரியர் மேலும் அவர்கள் சரித்திரத்தைக் கூறவந்த சேக்
கிழார் மேலும் ஏற்றித் தங்கள் கொள்கையை அவர்கள்
கொள்கை எனச் சாதிப்பாராயினர்.

அவர்களது எழுத்துக்களை உற்றுற்று நோக்கின் உலக
போகத்திலே மூழ்கி, தங்கச் சிலைபோல் நிற்கின்ற மனைவி
யுடன் இன்ப வாழ்வு வாழ்வதே தான் இவ்வுடம்பு எடுத்ததன்
பயன் ; இதற்கெனவே இறைவன் மானுடப் பிறவியை வகுத்
ததும் உலகத்தையும் மற்றுமுள்ள போகப் பொருள்களைப்
படைத்ததும ஆகும். வாழ்வின் இத்தகைய அரிய குறிக்
கோளைக் கைவிட்டுக் கொடுக்கிறார்களே மக்கள் என்று வருந்
துவதாகத் தெரிகின்றது. இவ்வரிய உண்மையைத் திரு
ஞானசம்பந்த சுவாமிகள், அப்பர் சுவாமிகள், சுந்தரமூர்த்தி
சுவாமிகள் முதலான பரமஞானசாரியர்கள் முதலில் நெடுங்
காலம் உணராமல் துறவினால் தான் இன்பம் பெற இயலும்
என எண்ணி இருப்பர் போலும். பிறகு உண்மை உணர்ந்த
நிலையில் இல்வாழ்வில் தான் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும்
உண்டு என்று உணர்ந்தார் என்று வாய் கூசாது பேசவும்
கைகூசாது எழுதவும் தலைப்பட்டனர். முன் உணரவில்லை
பின் உணர்ந்தார் என்று சுட்டியுணரப்படாத இறைப்பொரு
ளைச் சுட்டிகாட்டவல்ல, சாக்கிரத்திலே அதீதத்தைப் புரிய
வல்ல ஞானசாரியர்கள்பால், நேற்று நிகழ்ந்ததை இன்று மறக்
கின்ற, நாளை வருவது இன்னதென்றறிய வியலாத, கானல்நீர்
போன்ற அழிதன்மாலைத்தாகிய உலக இன்பத்தையே இன்
பெனக் கருதி அதற்கு மேலான இன்பம் வேறில்லை என்றும்
ஊனமுடைய நாம் ஏற்றிக்கூறல் என்ன கொடுமை ?

இன்பம் இரண்டு வகைத்து—சிற்றின்பம் பேரின்பம்
என்பன. உலக இன்பமானது சிறிது காலவரையறைக்குட்
பட்டு, பின் அழிந்து போம் தன்மையதாதலின் சிற்றின்ப
மெனப் பெயர்த்தாயிற்று என்ப. பேரின்பம் என்பது ஆநந்த
மூர்த்தியாகிய இறைவனுடன் கலந்து அநுபவிக்கப்படும் எப்
போதும் ஒரு தன்மைத்தாய் தூய கலப்பற்ற அழிதற்



றன்மையில்லாததாகிய இன்பமாகும். இதையே அம்மையார்
“ இறவாத இன்பம் ” என்கிறார்.

இல்லற வாழ்க்கையிலிருந்து அரிவையர் தோள் சேர்ந்து
இன்புறுதலே சிறந்தமுத்தி என்று கொள்வாரைத் தடுப்பா
ரில்லை. ஆனால், களவு கற்பு ஒழுக்கங்கள் கூறவந்த தொல்
லாசிரியர்கள் இதுவேதான் இன்பம், இதற்கு மேற்பட்ட
தோடு இன்பம் இல்லை யென்றுவது துறவு இல்லை யென்றுவது
கூறவில்லை என்பதை நினைப்பூட்டுகின்றன.

தமிழுக்கே உரிய அகப்பொருள் நூலிலே, தமிழருக்கே
உரியதென்று விதந்தோதப்படும் களவு கற்பொழுக்கங்களைக்
கூறுவர் காமத்துப் பாலே. வகுத்துக் கூறியதன் காரணமும்
அவ்வில்லொழுக்கத்தினின்று சிற்றின்பம் ஆரத் துய்த்தபின்
அடையத்தகும் முடிந்த பயனும் இவையென ஆசிரியர் தொல்
காப்பியனார் கூறிய,

“ காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே ”

என்னும் சூத்திரத்தாலும், அதன் உரைகளாலும், இறைவ
னால் அகப்பொருள் முதற் சூத்திர உரையில் நக்கீரர் கூறுவ
தனாலும் இல்லொழுக்கத்தினின்று வாழ்வாங்கு வாழ்ந்து
புரையில் கேள்வியுடையாராய், நிலையாமை யுணர்ந்து உள்ளத்
துறவு பூண்டு ஞான நெறியொழுகி,

“ ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணிற் சிந்தை நாடி ;
பாசம் ஒருவி ; ”

“ ஏகனாகி இறைபணியிலே நின்று ”.

ஆணவம், மாயை கன்மங்களாகிய பாச நீக்கம் பெற்று,

“ அயரா அன்பின் அரன்கழல் ”

கூடுதலாகிய சிவப்பேறே முடிந்த பயனும் என்பது தெற்
றெனப் புலனும்.

மேற் சூத்திரத்திற்கு உரையாசிரியர் முதலியோர்
கொண்ட கருத்து புத்த சமணங்கள் நம்நாட்டில் குடிபுகுந்து
அவர்கள் கொண்ட அறவொழுக்கம் நிலவியபின் அதைப் பின்
பற்றியது எனக் கூறத் துணிவாராயின், அஃதவ்வாறே யாயி
னும், தொல்காப்பியனுர் சூத்திரஞ் செய்தது அச்சமயங்கள்
தமிழ் நாட்டில் கால் கொள்வதற்கு முன்னரே யன்றோ? ஆம்.
ஆனுல் அதற்குப் பொருள் வேறே யெனின், அதற்குரிய
வேறு பொருள்தான் என்னே ? அது ஆன்றமைந்த சான்றோ
ரால் ஒப்புக் கொள்ளப்படுகின்ற வரையில், இப்போதுள்ள
உரையை மேற்கொள்ளவே வேண்டும் அன்றோ ?

துறவு என்பதுதான் என்னே? என்பது தெய்வப்புலமைத்
திருவள்ளுவ நாயனுர் கூறியுள்ளது நடுவு நிலைமையினின்று
விலகாது உற்று நோக்குவார்க்கும் புலனுகும். “சடைமுடி
யிட்டுக் காட்டுக்குச் செல்” என்றுரிலலை. “மழித்தலும்
நீட்டலும் வேண்டா” என்னும் குறளடியே போதிய சான்றும்.
அவ்வாருயின் சடைமுடி கட்டுவானேன், காட்டிற்குச் செல்
வானேன் எனின், ஒரு நற்பயனே அடைய வேண்டி இன்னது
சாதிக்க வேண்டுமென்று விதித்துக்கொண்டு, அதற்குரிய
சாதனையை அவரவர் தத்தம் அறிவாற்றல், உடலாற்றல்,
உளவாற்றல்களுக்குத் தக செய்து முடிக்கிருர்கள். தங்கள்
அனுபவத்தை, தாங்கள் சென்ற நெறியைக் கூறினுல் அது
சாக் குருவி வேதாந்தமாகுமா ? ஒரே நோய்க்கு ஒரே மருத்
துவன் பல நோயாளிகளின் உடல் நிலைக்குத் தக்கவாறு ஒரே
மருந்தை பலவித அனுபானங்களோடு கொடுப்பதைக் காண்கு
மன்றே ! ஒரே நோய்க்கு பல மருத்துவங்கள் பலவித முறை
களைக் கையாளுவதைக் காண்கு மன்றே. இப்படிப்பட்டவை
களை அந்தந்த மருத்துவர் கண்ட அநுபவம் என்று உலகம்
ஏற்றுக்கொள்ள வில்லையா ? அதுபோன்ற தன்றோ நம்பெரு
மக்கள் கண்ட முறைகளும் நெறிகளும். இவ்வாறு நேரிய
முறையிலே ஆராய்வது கை விட்டு, பரமஞானிகளாகிய பட்டி
னத்தடிகள், தாயுமானுர் முதலிய பெரியோர்கள் கூறியருளிய
வைகளைச் சாக்குருவி வேதாந்தமென்று தாக்கிக் கூறுவது
கற்றுணர்ந்ததற் கழகாமோ ? அவர்கள் கூறும் நெறிகளினும்



சிறந்தனவாகத் தாங்கள் கூறும் நெறிகளைக் கைக்கொண்டு
வீட்டின்பத்தைப் பெறச் சாதிக்க வல்லராயின் சாதிக்க.

“ நாடுகளிற் புக்குழன்றும் நாடுகளிற் சரித்தும்
நாகமுறை புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தரா யிருந்தும்
நின்பல ஞானத்தை யில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பின்
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படைக்கே கிடந்தும் இறை ஞானங்
கூடுமவர் கூடறிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியும்கும்பிட்டே இருப்பர்.

என அருணந்தி சிவாசாரியார் அருளிய நூல்கள் காண்க.
“ கிடந்தும் ” என்பதில் எதிர்மறை இழிவு சிறப்பு உம்மை
கொடுத்துக் கூறியுள்ள நயம் போற்றிக் கவனிக்கத் தக்கது.
இல்லை ; இறைஞானமும் வேண்டா, வீடும் வேண்டா,
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டிருக்கவும் வேண்டா, தங்கச்
சிலைப் போல் உள்ள,

“ வாசமார் குழலி ஞர்கள் மணி அல்குல் தடத்தே மூழ்கி
நேசமார் குமுதச் செவ்வாய் அமுதினை நிறைய வுண்டு
தேசுலா மணிமென் தோள்மேற் சேர்ந்துவீற் றிருந்திடவே ”

சாலும். அதுவே “ கண்கண்ட சுகம், கைகண்ட பலன் ”
அதுவே முத்தி யெனின்,

“ வாழவே வல்லை வாமி வலக்கைதா வென்னு யிர்க்குத்
தோழனீ யுன்னை யொப்பார் சொல்லிடி னில்லை கண்டாய் ”

என்பதற் கிலக்கியமாகி வாழ்வை நடத்துவதில் யாருக்கும்
நட்டமில்லையே ! அகப்பொருள் நாடக இலக்கணத்திற் காண்
கின்றபடி பரத்தையர் சேரி புகுந்து பாடல் ஆடல்களிற் பயின்
றும் காமக் கிழத்தியருடன் கூடிக் களியாட்டயர்ந்தும் வாழ்
வைச் செவ்வனே நடத்துவதில் தடையிலேயே !

ஆனுல், இக்கருத்தை ஆசாரியர்கள் மேலேற்றிக் கூறும்
வியப்புத்தான் என்னே ! இவர்கள் கூறியருளிய கருத்தையே
திருஞானசம்பந்த சுவாமிகள் உடையார் என்பதைச் சாதிக்கத்

திருவுளங்கொண்டு, அச்சிவன் கன்று ஃதிருவாய்மலர்ந்தருளிய திருக்கடைக் காப்பில் சிலவற்றை எடுத்துக் காட்டி

" தாம் உபதேசஞ் செய்தவழிச் சிறக்கவும் முற்படுகின்றார், மனஞ்
செய்து கொள்ளவும் இசைகின்றார், மணமும் நடைபெறுகின்றது."

என்றெழுதி முடிக்குந் திறம் சாலச்சிறந்ததே !

ஐயன்மீர் ! பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர்—திருமணத்துக் கிசைதல் " என்னும் பகுதியில்

" ............மாதவத்தின் கொழுந்தனையார்
சுற்றமுறு பெரும்பாசத் தொடர்ச்சிவிடு நிலைமையராய்
பெற்றமுயர்த் தவரருள்முன் பெற்றதினால் இசையாது
முற்றியதா யினுங்கூடாது என்றவர் முன் மொழிந்தருள."

(செய்யுள் 1157)

என்பதையும் 1159-ந் செய்யுளில் ' உடன்படலும் ' என்பதில் உள்ள உம்மையையும் கவனித்தவர் போலும். மேலும்,

" இந்த இல் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே இவள் தன் னோடும்
அந்தமில் சிவன்தாள் சேர்வன் "

" பவம்அற என்னை முன்னாள் ஆண்ட அப் பண்புகூட
நவமலர்ப்பாதங் கூட்டும் என்னும் நல் லுணர்வு நல்க" (1244)

" நாதனே ! நல்லூர் மேவும் பெருமண நம்பனே ! உன்
பாதமெய்ந் நீழல் சேரும் பருவம் ஈதென்று,
'நல்லூர்ப் பெருமணம்' எடுத்துக் கண்டோர்
தீதுறு பிறவிப் பாசந் தீர்த்தல்
செம் பொருளாக் கொண்டு பாட"

என்பனவாகிய அருள்வாக்குக்களை நோக்குவார்க்குத் திரு (1245)
ஞான சம்பந்த சுவாமிகளது திருவுளக் கிடக்கை புலப்படா
மற் போகா. நிற்க.

தம் கருத்துக் கொண்டு அப்பர் வாழ்வைப் பார்க்கின்
றார். அவர் எழுத்துப் பின் வருமாறாகும் :—

" அப்பர் தனது முதுமைப் பருவத்தில் கழிந்ததை எல்
லாம் எண்ணுகின்றார். இளமையில் இல்லறத்திலிருந்



தோன் நல்லாரோடு கூடிக் குலவி கலந்து இன்பிலே உவகை
உய்விக்கும் நெறியினை விட்டதை எண்ணுகின்றார்.

" தளையவிழ் கோதை நல்லார் தங்களோ டின்பம் எய்த
இளையனும் அல்லேன் எந்தாய் என்செய்வான் தோன்றினேனே "

என்பது அவர் வாக்கு."

நல்ல காலம் அப்பருக்குமோ அல்லது சித்தாந்தப் பத்
திரிகை வாசகர்க்கோ சித்தாந்தம் மலர் 20, இதழ் 2 பக்கம்
39. மேற்படிக் கருத்தை உதவிய பேராசிரியருக்கு

" பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவோடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோ ளிலாது கெட்டேன் "

என்னும் அப்பர் திருவாக்குக் கண்ணிற்படவில்லை போலும்.
கண்ணிற் பட்டிருப்பின், முன்னொரு பேராசிரியர் " பனி
மலர்க் கோதைமார்தம் மேலனாய்க் கழிந்த நாளும் " என்ப
தற்கோர் விரிவுரை நிகழ்த்தியது பெருமான் திருமணஞ்
செய்து கொண்டாரென்றும், " தந்தையார் தாயார் " என்
னும் முதலையுடைய திருத்தாண்டகத்தில் " புத்திரரார் "
என்பது கொண்டு புத்திரப் பேறுண்டென்றும் கூறி, பின்
(சிறு) இன்ப வாழ்வு நடாத்தற்குப் போதிய உடல்வலி,
பொருள்வலி, மனவலி இலராய், மனக்கோழையாய்த்
துறந்துவிட்டார் என்று எழுதியிருப்பர் போலும். கலியின்
கொடுமை தான் என்னே ! மேற் கண்ட வாக்கியங்களெல்
லாம் பொது உபதேசங்களாய்ச் சாதாரண மக்களது சகச
எண்ணங்களைக் காட்டி உலகத்தைத் தெருட்ட அருளிச்
செய்யப்பட்டன என்பது ஓர்ந்துணரற் பாற்று. அப்பரது
உண்மைத் திருவுளப் பான்மை

" இம்மாயப் பவத்தொடக்காம் இருவினைகள் தமை நோக்கி
' உம்மாலிங் கென்னகுறை உடையேன்யான் திருவாரூர்
அம்மானுக் காளானேன் அலையேன்மின் நீர் ' என்று
' பொய்ம்மாயப் பெருங்கடலுள் "

(பெரிய புராணம் திருநாவுக்கரசர் செய் -423.)

எனும் திருத்தாண்டகம் புகன்றார் " என்பதனாலும் அவர்தம் மற்ற திருவாக்காலும் நோக்க வெளிப்படா நிற்கும்.

இனி, " சுந்தரர் இவர் இருவரினும் ஒருபடி மிஞ்சிச் செல்கின்றனர் " என்று எழுதி, அவரது திருவாக்கை மேற்கோள் காட்டுகின்றனர். அறிஞர் பெருமக்களே! அவ்வாக்குகள் உண்மைத் துறவிகள் போல் சடை முடிவைத்தும் கல்லாடை தரித்தும் கூடாவொழுக்கம் பூண்டு உலகத்தை வஞ்சிக்கும் மதியிலிகளாகிய மக்கள் போல் நடிக்கும் மாக்களைக் கண்டிக்க எழுந்தனவே யன்றி சிற்றின்பத்தையே பொருளெனக் கருதி, அது தவிர்த்து வேறு இல்லை என்றாவது அதுவேதான் பேரின்ப வாழ்வை அடைதற்குச் சாதனம் என்றாவது காட்ட வந்தனவல்ல என் னும் உண்மை கடைப்பிடிக்கற்பால தொன்றாம். என்னை? சுந்தரர் பரவையார் சங்கிலியார் ஆகிய இருவரை மணந்து அவருடன் அனுபவித்த இன்பத்தின் உண்மை நலனை,

" பன்னாளும் பயில் **யோக பரம்பரையின்** "

(தடுத்தாட்கொண்ட புராணம் செய். 181)

" இந்நிலையிற் பேரின்பம் இனிதமர்வார் "

(ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் செய் - 269)

என்னும் சேக்கிழார் பெருமான் திருவாக்கும், அதற்கு விளக் கந் தருவன போன்றதாகவுள்ள

" பெற்றசிற் றின்பமே பேரின்பமாம் அங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற "

(திருவுந்தியார் செய். 33)

" உடம்புடைய யோகிகள்தாம் உற்றசிற் றின்பம்
அடங்கத் தம்பேரின்பத் தாக்கில்—தொடங்கி
முளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
இளைப்பது மொன் றில்லை இவர். "

(திருக்களிற்றுப்படியார். செய். 76)

---

*அடாக் கொள்கையின் பொருத்தமற்ற தன்மை காய்தல் உவத்தல் உண்மை அறிய விழைவார்க்கு விளக்க முறும்.



" நாமல்ல இந்திரியம் ; நம் வழியின் அல்ல ; வழி
நாமல்ல ; நாமும் அரன் உடைமை ;—ஆம் என்னில்
எத்தனுவின் நின்றும் இறைபணியார்க்கு இல்லைவினை ;
முற்செய்வினை யுந்தருவான் முன் "

(சிவஞானபோதம் - 10-ஞ் சூத் - 2-ம் அதி. உதாரண வெண்பா)

என்னும் சித்தாந்த வசனங்களும் தெளிவியா நிற்கும். அஃ தன்றியும்,

" அலைப்புறும் மனைவாழ்க்கை சரியவே
'தலைக்குத் தலை மாலை' என்றெடுத்தனர் தமிழ்மாலை "
' இவ்வுலகினிற் பாசம்
எடுத்த அத்திருப் பதிகத்தின் உட்குறிப்ப
அடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டும் ' என்று அன்பர்
[அன்பினிற் பாட "

(வெள்ளானைச் சருக்கம் - செய். 29-30)

என்னும் தெய்வச் சேக்கிழார் உண்மைத் திருவாக்கினால், சுந்தரர் பெருமான் உண்மை நோக்கம் மனை வாழ்க்கை சரிய வேண்டு மென்பதே போதரும்.

இவை முதலாகிய பலவற்றினால் பரமாசாரியர்கள் பெண் களோடு கூடி நடத்தும் இல்லற வாழ்க்கையே பெரிதும் நம்பி னார்கள். அவ்வழி நிற்க முயன்றார்கள் என்றும்.

மற்றோர் விசேடம் " இல்வாழ்வான், எல்லாம் உடைய வன், அவன் வீரன், எதுவரினும் வருக என்று ஏற்று வாழ் கின்றான். துறவி கோழை வரும் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் தோற்று ஓடுகின்றான். இவற்றையெல்லாம் விடை வரும் இன்ப துன்பத்திற்கு எதிர் நின்று வெற்றி காண்கின்றான். சேக்கிழார்,

" ஈரஅன்பினன் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ "

என்ற இரண்டடிகளிலே விளக்கிச் சென்றுவிட்டார் " என்று " ஈர அன்பினர் வீரம் " என்பவற்றிற்கு விளக்கம் கற்பிக் கின்றார்.

பல்சான்றீரே! இப்பொருள் விளக்கம் எத்துணைப் பொருத்தமுடையது என்பது நோக்குங்கள். மரபுபற்றி

உரைகூறுது இவ்வாறு தத்தம் கொள்கைகளைச் சைவசமய சம்பிரதாய சாரங்களிற் புகுத்துவது ஆசிரியர் கருத்துக்கும் நூன்மரபுக்கும் உரைமரபுக்கும் அடிப்பட்ட சான்றோர் கொள்கைக்கும் பொருந்தாமையோடு, தொன்னூல் வரம் பழித்து, நூல் கற்கப்புகுவாரைப் பிழைபட்ட நெறியிற் செலுத்தி அவர்களது அழிவுக்குக் காரணமாதலையும் ஓர்க.

உரைகாணத் தொடங்குமுன் ஆசிரியரது உளப்பான்மையையும் அவர்தம் கொள்கையை முன்னும் பின்னும் எப்படிக் கொண்டு செலுத்துகின்றார். என்பதையும் சீர்தூக்கிய பின்னரே உரைகாணுதல் மரபாயிருக்க, என்னை? பண்டை நல்லாசிரியர்கள், திருவருள்வழிநின்ற ஆசிரியர்கள், உண்மைப் பொருளைக் காட்டி மக்களது மம்மரை அறுக்க வந்த ஆசிரியர்கள் தாங்கள் கூறவந்த பொருளை முன்னும் பின்னும் முரண்பாடாக் கூறார்களாகையால்—அது விட்டுத் தத்தம் மனம் போனவாறு உரைசெய்வார் உயிரையின்றி உடலுக்கு உரையிட்டவராவரன்றோ! "மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்பது உலகநீதி!

"ஈர அன்பினர், வீரம்" என்னுஞ் செம்பொருள் நிறைந்த சொற்களையுடைய,

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ"

என்னும் செய்யுளை

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்னுந் திருப்பாட்டோடும், தடுத்தாட்கொண்ட புராணம் 201-வது செய்யுளில் உள்ள "அழியா வீரத்தார்" என்னுஞ் சொற்றொடரோடும், 196-வதில் உள்ள "இருமையுங் கடந்து நின்றார்" என்னுஞ் செஞ்சொற்றொடரோடும்,



ஒட்டிச் சாரவைத்துப் பொருள் நோக்குவார்க்கன்றி ஏனையோர்க்கு உண்மைப்பொருள் காண்டல் அருமை! அருமை!

மேற்போந்தவற்றால், சைவசமயாசாரியர் திருவுளக்கிடக்கையும் சேக்கிழார் சுவாமிகள் திருவுளப்பான்மையும் ஒன்றேயென்பதூஉம், அவ்வொன்றும் சிலர் தங்கொள்கையினைச் சாதிக்குமாறு கருதும் வண்ணமன்றி, உலகம் அசத்தே யாம் என்பதும் ஆயினும் அதுவும் உயிர்கள் தாம் ஈட்டிய வினைகளைச் சுகரூபமாயும், துக்கரூபமாயும் மோகரூபமாயும் புசித்துத் தொலைக்குமாறு இறைவனால் படைக்கப்பட்டுச் சிற்றின்பத்தை அனுபவித்த பின்னர்ப் பேரின்பத்தை அடைதற்குச் சாதனமே யாம் என்பதும், பெண்கள் போகத்தைப் பார்க்கினும் - அழிதன் மாலைத்தாகிய, தூயதன்மையற்ற குறைவுடைய இன்பத்தைப் பார்க்கினும் - நிலைத்த தூயதாகிய முழுத்த இன்பம் - பேரின்பம் - பரலோகம் ஒன்று உண்டென்பதும், அதைப் பெறுவதே நம்பெருமக்கள் குறிக்கோள் என்பதும் தெற்றென விளங்கா நிற்கும்.

"கள்ளரோ டில்லம் உடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென்று உந்தீபற
வீடும் எளிதாமென்று உந்தீபற"

"காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென்று உந்தீபற
வாட்டுப் பசுக்களென்று உந்தீபற"

என்பனவாதி சித்தாந்த வசனங்களைக் கடைப்பிடித்து, இத்தகைய யாதோர் குறைவிலா "வாழ்க்கை வாழ்வதற்கே" முயற்சிப்போமாக! இந்நன் முயற்சியைச் சிவனருளை கண்ணாகக்காட்ட அத்துணைகொண்டு செய்வோமாக! இதுவே வாழ்க்கையின் குறிக்கோளாம்! சித்தாந்தச் செல்வர்களின் குறிக்கோளாம்! இதனைக் கைவிட்டு வேறோரின்பத்தை நாடி அது பெற முயல்வார்.

"பாமுயல் விட்டுக் காக்கை பின்போம் கலவர் போலவும்
விளக்கங் கிருப்ப மின்மினி கவரும்
அளப்பருஞ் சிறப்பில் ஆதர் போலவும்"

என்னும் திருவாக்கிற்கிலக்கிய மாவதன்றி வேறன்றாம்.

ஆகவே, இத்தகைய நூல்களின் சிறப்பினையும் அவற்றைச் சிக்கற ஓதுவதாற்பெறும் பெரும்பயனையும் ஓர்ந்து உண்மை உணர்ந்து நன்மை நடைப்பிடிப்போமாக ?

---

## செய்திப்பகுதி

22-8-47 ல் வட ஆர்க்காடு ஜில்லா ஆம்பூரைச் சார்ந்த ஸ்ரீராமபுரத்தில் வார வழிபாடு தொடங்கப்பெற்றது.

24-8-47 ல் வேலூர் வார வழிபாட்டு சங்கத்தின் 3-ம் ஆண்டு நிறைவுவிழா நடைபெற்றது. அத்தேதியோடு முடிந்த 52 வாரங்களிலும் வாரவழிபாடு ஸ்ரீ அமிர்தலிங்கசுவாமி கோயிலில் தவருமல் நடைபெற்றுவந்த விவரம் ஆண்டறிக்கைப் பத்திரத்தில் தரப்பட்டுள்ளது. அன்று திரு. வித்துவான் அ. மு. பரமசிவானந்தம், B. O. L., M. Litt. அவர்கள் தேவாரம் தந்த செல்வம் என்பதுபற்றிப் பேசினார்கள்.

5-9-47 திருநெல்வேலி ஜில்லா, விக்கிரம சிங்கபுரத்துச் சிவநேயர் கழகத்தின் ஆதரவில், அவ்வூர்ச் சிவாலயத்தில் சைவபோதகர் வித்துவான் - மறை - திருநாவுக்கரசு அவர்களால் வாரவழிபாடு தொடங்கி வைக்கப்பட்டது. சுமார் 1000 பேர் அவ்வழிபாட்டிற் கலந்துகொண்டனர். சிவபுராண அடிகளைச் சிறுசிறு பகுதிகளாகப் போதகர் முன்னோத மக்களனைவரும் ஒரே குரலில் பின்போதிப் பேருணர்ச்சி பெற்றனர்.

5-9-47 வடஆர்க்காடு ஜில்லா, வடமகாதேவி மங்கல வார வழிபாட்டுச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு அவ்வூர்ச் சிவாலயத்தில் நடைபெற்றது. காலையில் ஆலயத்தில் சிறப்புப்பூசனை நடந்தது. பிற்பகல், உயர்திரு - வித்துவான் - வே. ஐயா நாயகரவர்கள் தலைமையில் அன்பர் பலர் தமிழ்மறை ஓதிக்கொண்டு திருவீதிவலம் வந்தனர். பின்பு, உயர்திரு - வித்துவான் - கோவிந்தசாமி முதலியாரவர்களும் உயர்திரு - அருணசல முதலியாரவர்களும் களம்பூர் உடையாரவர்களும் பேசினர். நாடு முழுதும் வகுப்பொற்றுமை பெருகவேண்டுமென்றும், மகாத்துமா காந்தியின் உபவாசம் விரைவில் பூர்த்தியாக வேண்டுமென்றும், பிரார்த்திக்கப்பட்டது. பின்பு மகா தேவர்க்குச் சிறப்பாக ஆராதனை செய்யப்பட்டது.

---

5. எட்டிகுடி முருகன் பிள்ளைத்தமிழ் : கோவை கவியரசு கு. நடேச கவுண்டர் பழயமுறையில் எழுதப்பட்ட பிள்ளைத்தமிழ். பருவத்திற்கு ஒவ்வொரு பாடல்தான் அச்சாகி இருக்கிறது. இப்பெரியார் தற்காலத்திற்கேற்றபடி மனவெழுச்சி தரத்தக்க பாடல்களை எழுதினால் நன்மையாக இருக்கும். எளிதாகத் தன் கருத்துக்களை செய்யுளில் அமைக்கும் ஆற்றல் வாய்ந்தவர். ஆகவே நாடு பயன்படு முறையில் தம் ஆற்றலைப் பயன்படுத்துவாராக.

6. வண்ணத்தாமரை - தாமரைக்கண்ணியம்மையார் எழுதியது. தமிழ்நாடு வெளியீடு. ரூ. 2 - 0 - 0.

இந்நூலில் ஐந்து சிறுகதைகள் இருக்கின்றன. இதன் முதலாசிரியர் ஆஸ்கார் ஒயில்டு என்ற ஆங்கிலக் கவிஞர். அன்னருடைய சிறுகதைகள் பலவற்றில் ஐந்தைப் பொறுக்கி அவைகளைத் தமிழ் மொழிக்கு ஏற்றவாறு அமைத்து இனிய எளிய தமிழில் அம்மையார் ஆக்கி இருக்கின்றனர். வருணனைகள், சில இடங்களில் வெகு அருமையாக அமைந்து இருக்கின்றன. உரை நடைக் கவிதை என்றே கூறவேண்டும். சில இடங்களில் ஏற்பட்டுள்ள மேல்நாட்டு வருணனைகள் தமிழ்நாட்டிற்கு ஒவ்வும்படியாகச் செய்தும் இயற்கையான தோற்றம் தருவதில்லை. பல இடங்களில் நகைச்சுவை மிகுந்த இன்பம் ஊட்டுகின்றது. " உயிர்த்தோழன் " என்ற பகுதியை வாசித்தால், இதுமுதல் நூலே ; வழிநூலல்ல என்று தோன்றும்படியாக இருக்கின்றது. பொதுவாக இந்நூல் வெகு சிறப்புகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது எனல் வேண்டும். இதனை தமிழ் மக்கள் பெரிதும் போற்றுவார்களாக.

## சமாஜ அங்கத்தவரின் பொதுக்கூட்டம்

சைவசித்தாந்த மகா சமாஜ 42-ம் ஆண்டு நிறைவின் சைவ மகாநாட்டுத் தலைவர், இளைஞர் மாநாட்டுத் தலைவர், மங்கையர் மாநாட்டுத் தலைவர் இவர்களைத் தெரிந்தெடுத்தற்கும், சமாஜ அங்கத்தினரின் ஆண்டுசந்தா, ஆயுள்சந்தா இவற்றை உயர்த்துவதுபற்றியும், நிறைவு விழா சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தீர்மானித்தற்கும் 1947 அக்டோபர் 25-ம் நாள் சனிக்கிழமை காலை 9 - மணிக்குச் சென்னை தியாகராயநகர், வைத்தியராமய்யர் தெரு 9-வது எண்ணுள்ள சமாஜ அலுவலகத்தில் அங்கத்தவர் பொதுக்கூட்டம் நடைபெறும். அன்று போதிய நிறைவெண் (Quorum) இல்லாவிடின் அடுத்தநாள் (26 - 10 1947) ஞாயிறு காலை 9-மணிக்கு அதேயிடத்தில் கூடும். அன்று வருபவர்களைக்கொண்டே விஷயங்கள் முடிவு செய்யப்பெறும். அன்று கூட்டத்துக்கு வர இயலாதவர்கள் தங்கள் கருத்துக்களைக் கடிதவாயிலாகத் தெரிவிக்கலாம்.

ஆகவே, இத்தகைய நூல்களின் சிறப்பினையும் அவற்றைச் சிக்கற ஓதுவதாற்பெறும் பெரும்பயனையும் ஓர்ந்து உண்மை உணர்ந்து நன்மை கடைப்பிடிப்போமாக ?

---

## செய்திப்பகுதி

22-8-47 ல் வட ஆர்க்காடு ஜில்லா ஆம்பூரைச் சார்ந்த ஸ்ரீராமபுரத்தில் வார வழிபாடு தொடங்கப்பெற்றது.

24-8-47 ல் வேலூர் வார வழிபாட்டு சங்கத்தின் 3-ம் ஆண்டு நிறைவுவிழா நடைபெற்றது. அத்தேதியோடு முடிந்த 52 வாரங்களிலும் வாரவழிபாடு ஸ்ரீ அமிர்தலிங்கசுவாமி கோயிலில் தவறாமல் நடைபெற்றுவந்த விவரம் ஆண்டறிக்கைப் பத்திரத்தில் தரப்பட்டுள்ளது. அன்று திரு. வித்துவான் அ. மு. பரமசிவானந்தம், B. O. L., M. Litt. அவர்கள் தேவாரம் தந்த செல்வம் என்பதுபற்றிப் பேசினார்கள்.

5-9-47 திருநெல்வேலி ஜில்லா, விக்கிரம சிங்கபுரத்துச் சிவநேயர் கழகத்தின் ஆதரவில், அவ்வூர்ச் சிவாலயத்தில் சைவபோதகர் வித்துவான் - மறை - திருநாவுக்கரசு அவர்களால் வாரவழிபாடு தொடங்கி வைக்கப்பட்டது. சுமார் 1000 பேர் அவ்வழிபாட்டிற் கலந்து கொண்டனர். சிவபுராண அடிகளைச் சிறுசிறு பகுதிகளாகப் போதகர் முன்னோத மக்களனைவரும் ஒரே குரலில் பின்போதிப் பேருணர்ச்சி பெற்றனர்.

5-9-47 வடஆர்க்காடு ஜில்லா, வடமகாதேவி மங்கல வார வழிபாட்டுச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு அவ்வூர்ச் சிவாலயத்தில் நடைபெற்றது. காலையில் ஆலயத்தில் சிறப்புப்பூசனை நடந்தது. பிற்பகல், உயர்திரு - வித்துவான் - வே. ஐயா நாயகரவர்கள் தலைமையில் அன்பர் பலர் தமிழ்மறை ஓதிக்கொண்டு திருவீதிவலம் வந்தனர். பின்பு, உயர்திரு - வித்துவான் - கோவிந்தசாமி முதலியாரவர்களும் களம்பூர் உயர்திரு - அருணசல முதலியாரவர்களும் உயர்திரு - பெரியப்பா உடையாரவர்களும் பேசினர். நாடு முழுதும் வகுப்பொற்றுமை பெருக வேண்டுமென்றும், மகாத்துமா காந்தியின் உபவாசம் விரைவில் பூர்த்தியாக வேண்டுமென்றும், பிரார்த்திக்கப்பட்டது. பின்பு மகா தேவர்க்குச் சிறப்பாக ஆராதனை செய்யப்பட்டது.

5. எட்டிகுடி முருகன் பிள்ளைத்தமிழ் : கோவை கவியரசு கு. நடேச கவுண்டர் பழயமுறையில் எழுதப்பட்ட பிள்ளைத்தமிழ். பருவத்திற்கு ஒவ்வொரு பாடல்தான் அச்சாகி இருக்கிறது. இப்பெரியார் தற்காலத்திற்கேற்றபடி மனவெழுச்சி தரத்தக்க பாடல்களை எழுதினால் நன்மையாக இருக்கும். எளிதாகத் தன் கருத்துக்களை செய்யுளில் அமைக்கும் ஆற்றல் வாய்ந்தவர். ஆகவே நாடு பயன்படு முறையில் தம் ஆற்றலைப் பயன்படுத்துவாராக.

6. வண்ணத்தாமரை - தாமரைக்கண்ணியம்மையார் எழுதியது. தமிழ்நாடு வெளியீடு. ரூ. 2 - 0 - 0.

இந்நூலில் ஐந்து சிறுகதைகள் இருக்கின்றன. இதன் முதலாசிரியர் ஆஸ்கார் ஒயில்டு என்ற ஆங்கிலக் கவிஞர். அன்னாருடைய சிறுகதைகள் பலவற்றில் ஐந்தைப் பொறுக்கி அவைகளைத் தமிழ் மொழிக்கு ஏற்றவாறு அமைத்து இனிய எளிய தமிழில் அம்மையார் ஆக்கி இருக்கின்றனர். வருணனைகள், சில இடங்களில் வெகு அருமையாக அமைந்து இருக்கின்றன. உரை நடைக் கவிதை என்றே கூறவேண்டும். சில இடங்களில் ஏற்பட்டுள்ள மேல்நாட்டு வருணனைகள் தமிழ்நாட்டிற்கு ஒவ்வும்படியாகச் செய்தும் இயற்கையான தோற்றம் தருவதில்லை. பல இடங்களில் நகைச்சுவை மிகுந்த இன்பம் ஊட்டுகின்றது. "உயிர்த்தோழன்" என்ற பகுதியை வாசித்தால், இதுமுதல் நூலே ; வழிநூலல்ல என்று தோன்றும்படியாக இருக்கின்றது. பொதுவாக இந்நூல் வெகு சிறப்புகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது எனல் வேண்டும். இதனை தமிழ் மக்கள் பெரிதும் போற்றுவார்களாக.

## சமாஜ அங்கத்தவரின் பொதுக்கூட்டம்

சைவசித்தாந்த மகா சமாஜ 42-ம் ஆண்டு நிறைவின் சைவ மகா நாட்டுத் தலைவர், இளைஞர் மாநாட்டுத் தலைவர், மங்கையர் மாநாட்டுத் தலைவர் இவர்களைத் தெரிந்தெடுத்தற்கும், சமாஜ அங்கத்தினரின் ஆண்டுசந்தா, ஆயுள்சந்தா இவற்றை உயர்த்துவதுபற்றியும், நிறைவு விழா சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தீர்மானித்தற்கும் 1947 அக்டோபர் 25-ம் நாள் சனிக்கிழமை காலை 9 - மணிக்குச் சென்னை தியாகராயநகர், வைத்தியராமய்யர் தெரு 9-வது எண்ணுள்ள சமாஜ அலுவலகத்தில் அங்கத்தவர் பொதுக்கூட்டம் நடைபெறும். அன்று போதிய நிறைவெண் (Quorum) இல்லாவிடின் அடுத்தநாள் (26 - 10 1947) ஞாயிறு காலை 9-மணிக்கு அதேயிடத்தில் கூடும். அன்று வருபவர்களைக்கொண்டே விஷயங்கள் முடிவு செய்யப்பெறும். கூட்டத்துக்கு வர இயலாதவர்கள் தங்கள் கருத்துக்களைக் கடிதவாயிலாகத் தெரிவிக்கலாம்.

Regd. M. 2330. "SIDDHANTHAM" Vol. 20. No. 10

### தற்சமயம் கிடைக்கக்கூடிய
## சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 0 | 14 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு .... | 1 | 0 |
| திருவாசகம் மூலம் .... | 0 | 4 |
| திருமந்திரம் ... | 1 | 8 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை அரும்பத உரையுடன் | 0 | 10 |
| சீவக சிந்தாமணி .... | 1 | 12 |
| சங்கநூற்புலவரகராதி .... | 0 | 1 |
| முருகன் மூந்நூல் (திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரநுபூதி) .... | 0 | 3 |
| திருமுருகாற்றுப்படை (உரையுடன்) ... | 0 | 2 |
| கந்தரநுபூதி (உரையுடன்) .... | 0 | 2 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம், துகளறுபோதம் (மூலம்)] .... | 0 | 12 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

### குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர்கள் (மலர் ஒன்றுக்கு 12 இதழ்கள்) மலர் ஒன்றுக்கு 1 ரூபாவீதம் விற்கப்படும். வேண்டியவர்கள் தபாற் செலவுடன் சமாசச் செயலாளருக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**மலர் 3 (1930), 4 (1931), 5 (1932), 6 (1933), 13 (1940), 14 (1941), 15 (1942), 16 (1943), 18 (1945).**

செயலாளர்,
9, வைத்தியராமையர் தெரு, தியாகராயநகர், சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P. I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 9, Vaidyaramayyar Street, Thyagarayanagar, Madras, P. I. Card No. M. S. 81.

19
Regd. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 20—No. 11

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடனடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே'

சர்வசித்து கார்த்திகை 1947 நவம்பர் | இதழ் 11

உள்ளுறை

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| ஒலிபரப்பு ... | 401 |
| தலப்பகுதி—முதலைவாய்ப் பிள்ளைத்தலம் அவிநாசி ... | 411 |
| சாத்திரப்பகுதி—நூல் வழிபாடு ... | 417 |
| சமயப்பகுதி—1. தற்காலச் சமயநிலை ... | 420 |
| 2. புகை நுகரல் ... | 425 |
| கலைப்பகுதி—1. கல்வெட்டுக்களைப்பற்றிய செய்திகள் ... | 428 |
| 2. எழில் ... | 430 |
| கவிப்பகுதி—எண்ணமும் தொழிலும் ... | 433 |
| ஆராய்ச்சிப்பகுதி—இரு பல்லவ அடியார்கள் ... | 437 |
| விரிவுரைப்பகுதி—ஐயவினா ... | 447 |

ஆசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ., பி. எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2.

1948 முதல் - ஆண்டு சந்தா ரூபா மூன்றாக உயர்த்தப்பட்டுள்ளது. சமாஜ அங்கத்தினர் 1948-ஆம் ஆண்டுக்கு செலுத்தவேண்டிய சந்தா ரூபாய் மூன்றை 31—12—47க்குள் - நேரிலோ, மணியார்டர் மூலமோ சமாஜச் செயலாளருக்கு (9, வைத்தியராமையர் தெரு, சென்னை - 17) அனுப்பல் வேண்டும். அப்படி அனுப்பாவிட்டால் 1948 ஜனவரி மாதச் "சித்தாந்தம்" வி. பி. தபாலில் அனுப்பப்படும். 1948 – ஆம் ஆண்டில் சமாஜ அங்கத்தினராக இருக்கப் பிரியமில்லாதவர்கள் தயைகூர்ந்து முன்னாகவே தெரிவிக்கவும். தங்கள் சந்தா நெம்பர்க் குறித்து எழுதவும்.

---

சமாஜ நவம்பர் மாதக் கூட்டம்: கோலாலம்பூரில் ...ம்பாங் ரோட், செட்டியார் வர்த்தக சங்கத்தில் 30-11-47ல் ...டைபெறும்.

## செய்தித் திரட்டு

கோவைச் சைவ மாநாடு:—டிசம்பர் 25, 26, 27 தேதிகளில் சைவ மாநாடு திரு. சாத்தூர் கந்தசாமி முதலியார் தலைமையிலும், மங்கையர் மாநாடு திரு. அ. கு. காமாட்சியம்மாள் தலைமையிலும் நடைபெறும். இளைஞர் மாநாடும் நடைபெறும். திரு. V. C. வெள்ளியங்கிரி கவுண்டர், M.L.A., வரவேற்புத் தலைவர். இந்த ஆண்டு புதிதாகக் கலையியல் கண்காட்சி நடைபெறும். பரிசுகள் வழங்கப்பெறும். கொங்கு நாட்டுக் கலை ஆராய்ச்சிக்கு இது நல்ல சமயம். சி. கே. சுப்பிரமணிய முதலியார் கண்காட்சி மன்றத் தலைவர்.

மன்னிப்பு வேட்டல்:—சென்ற இதழில் மன்னிக்கமுடியாத சில எழுத்துப் பிழைகள் ஏற்பட்டுவிட்டன. அன்பர்கள் அன்புகூர்ந்து மன்னிப்பார்களாக.

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 20 | சர்வசித்து கார்த்திகை 1947 நவம்பர் | இதழ் 11

## ஒலிபரப்பு

ஆசிரியர்

### 1. அற நிலையங்களின் வளர்ச்சி

அறநிலையங்களிலே தென்னாட்டுச் ச[illegible] நிலையங்கள் பெரும் பகுதியானவை. அவைகளிலே கோயில்கள், மடங்கள், சங்கங்கள் என்ற மூன்று பகுப்புகள் நெடுநாளிலிருந்து வளர்ந்து வந்திருக்கின்றன. அம்மூன்றிலும் கோயில்களும் மடங்களும் மிகச் சிறந்தவை. இவைகள் தற்போது பொது மக்களின் ஆராய்ச்சிக்கு உட்பட்டு வருகின்றன. இவைகளின் ஆட்சியைக் குறித்துத் தற்போதைய அரசியலார் கொண்டுவந்திருக்கும் மாறுதல்கள் மக்களை விழிக்கச் செய்திருக்கின்றன. இவைகளில் மிகுதியான கவலையும் ஏக்கமும் தருவது கோயில் ஆட்சியே. இதற்குச் சம்பந்தப்பட்ட சில கருத்துக்களை இந்த இதழில் வெளியிடுவாம்.

கோயில்கள் அரசமரத்தின் கீழ் எழுந்தருளி யிருக்கும் பிள்ளையார் மேடை முதற்கொண்டு ஏழு மதில்கள் கொண்ட கோட்டைக்கோயில் வரை பரந்திருக்கின்றன. மக்களுடைய நாகரிக வளர்ச்சியை அனுசரித்துக் கோயில்களுடைய வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி

மக்கள் குழவிப்பருவ நாகரீகத்தில் இருந்தபோது தாங்கள் வழிபடும் சமய நிலைக்கு ஒரு அரசமர மேடையும் அதன்மீது ஒரு வழவழப்பான உருவமே போதுமானதாக அமைத்திருந்தார்கள். பிறகு மனிதனுடைய எண்ணப்போக்கும் அறிவும் வளர்ச்சியடைய தங்கள் தங்கள் வீடுகளை ஒத்தே கடவுள்களுடைய நிலையங்களையும் சமைத்தார்கள். முதலில் இருந்த மேடையின் மீது ஒரு மட்டைச்சாலையும் பிறகு மண்சுவர்களைக் கொண்ட அறையும் கட்டினார்கள். வெகு நூற்றாண்டுகளுக்குப் பின் மண்சுவர் செங்கல் சுவர் ஆயிற்று. மட்டைக் கூரை ஓட்டு வில்லைக் கூடம் ஆயிற்று. நாள் ஆக ஆக செங்கல்லும் கருங்கல் ஆயிற்று. ஓட்டுக் கூரை கூட கோபுரம் ஆயிற்று. [illegible] கட்டின கல் செதுக்கின கல்லாயிற்று. வரவர அவைகள் சிற்ப விசித்திரங்களைக் கொள்ளத் தொடங்கின. மனிதன் குடியிருக்க முன்னாளில் ஒரு அறை போதுமானது ஆக இருந்தது. பிற்காலத்தில் பல அறைகள் கொண்ட வீடு வேண்டியது ஆயிற்று செல்வமும் இன்ப வாழ்வும் ஏற ஏற பளிங்கு மாளிகையும் அரண்மனையும் வந்துவிட்டன. அது போலவே, கோயில்களிலும் கருப்பக் கிரகத்தோடு மண்டபங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வளர்ந்து தற்காலத்தில் பெருங்கோயில்கள் சிறு நகரங்கள் அளவு ஆகிவிட்டன. கருப்பக்கிரகமும் அதன் மேல் அமர்ந்திருக்கும் சிகரமும் விமானம் என்ற பெயரால் விளங்கியது. அச்சொல்லின் பொருள் நன்றாக அளக்கப்பட்டது அல்லது சமைக்கப்பட்டது என்பது ஆகும். ஆகவே கடவுள் இருப்பிடமாக நன்றாக சமைக்கப்பட்ட நிலையமே கோயிலின் அடிப்படையான தத்துவமாகும். இவ்விதக் கோயில்கள் பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்திருந்தாலும் மக்களில் பலவிதமான நாகரீகங்கள் இப்போதும் இருப்பது போலவே கோயில்களிலும் சின்னஞ்சிறிய அளவிலிருந்து மிகப்பெரிய அளவு வரைக்கும் இன்றைக்கும் உள்ளன. ஒரு தகப்பனுக்குப் பல பிள்ளைகள் இருந்தால் ஒருமாதக் குழவி முதல்கொண்டு 30 வயது முதிர்ந்த மகன் வரை இருக்கக் கூடும் அல்லவா? அதுபோல் ஆலயங்களிலும் அரசமர மேடையிலிருந்து நகரப் பெருங் கோயில் வரை உண்டு.



## 2. வழிபாடுகளும் சடங்குகளும்

கோயில்களோ மக்கள் வழிபாட்டிற்காக ஏற்பட்ட நிலையங்கள். அவைகளிலே தென்னாட்டில் உருவ வழிபாடே அடிப்படையான கொள்கையாக வந்திருக்கிறது. சிறு கோயில்களிலே ஒரு கால வழிபாடாகத் தொடங்கியது பெருங் கோயில்களிலே ஆறுகால வழிபாடாயிற்று. சிறு கோயில்களிலே ஒரு தேங்காய் இரண்டு பழத்தோடு தொடங்கியது பெருங்கோயில்களில் அறுவித சுவையோடு கூடிய சோடசோபசாரங்களாக முடிகிறது. சிறு கோயில்களிலே நோன்புகளில் அலங்கார தரிசனமாக ஏற்பட்டது. பெருங்கோயில்களிலே பதினைந்து நாள் கொண்ட பெருந்திருவிழாவாக வளர்ந்து விட்டது. இவ்விதமாக வழிபாடும் சடங்குகளும் இடத்தை அனுசரித்து நாளுக்கு நாள் வளர்ந்துவிட்டன.

இக்காலத்தில் இவைகளில் பலவிதமான பாகுபாடுகளும் விதிகளும் ஏற்பட்டுவிட்டன. பண்டைய மனிதனுக்குச் சட்டதிட்டம் வேண்டியதில்லை. நாகரீகம் படைத்த ஒரு நாட்டினர்க்கே பலவிதமான சட்டதிட்டங்கள் வேண்டியிருக்கின்றன. கோயில் சடங்குகளிலும் அப்படியே. ஆகம விதிகள் ஏற்பட்டு அவைகளை விவரித்துச் சொல்லப் பண்டிதர்களும் ஏற்பட்டனர். இவ்வித விழாக்கள் நாளா வட்டத்தில் மூன்று வகையினதாகி வளர்ந்துவிட்டன. அவை நித்தியம், நைமித்திகம், விசேடம் என்பவைகள். நித்தியம் என்பது கோயில்களில் தினந்தோறும் காலை முதல் இரவு வரை ஏற்பட்ட சடங்குகள்; விடியலில் திருப்பள்ளி யெழுச்சி முதல் இரவில் அர்த்த ஜாமம் பள்ளியறை விழா வரை ஏற்றப்பட்டவை. நைமித்திகம் என்பது ஒரு நிமித்தத்தின் பேரில் ஏற்படக் கூடியவை. புதுமதி (அமாவாசை) முழுமதி (பௌர்ணமி) நான்காம் நாள் (சதுர்த்தி) ஆறும்நாள் (சஷ்டி) 8-ம் நாள் (அஷ்டமி, பதினோறும் நாள் (ஏகாதசி) பதின்மூன்றும் நாள் (பிரதோஷம்) பதினான்காம் நாள் (மாச சிவராத்திரி) பெருஞ்சாந்தி (பிரமோற்சவம்) திருமஞ்சனங்கள் (அபிஷேகம்) முதலியவை. விசேஷம் என்பது ஒரு அரசனோ அல்லது கனவானோ

தனக்கு ஒரு குறை ஏற்பட்டால் அதனைப் போக்கிக் கொள்வதற்காகச் செய்யும் வழிபாடு. இதனை முன்னாளில் சந்தி என்ற பெயராலும் இப்போது கட்டளை, பிரார்த்தனை, வேண்டுகோள் என்ற பெயர்களாலும் நடைபெறுகின்றன. ஆகவே கோயில்களில் இந்த மூன்று விதமான சடங்குகள் ஏற்பட்டு நடைபெறுகின்றன.

## 3. சோத்துக்கள் சேர்க்கை

ஒவ்வொரு குடியிருப்பு அல்லது ஊரிலும் ஒவ்வொரு கோயில் இருந்தது. பெரிய ஊர்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்கள் இருந்தன. ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் தங்கள் சமயத்திற்கு உகந்த கோயிலைக் கட்டியிருந்தார்கள். இவ்விதமாகக் கோயில்கள் மிக ஆயின. அவ்விதக் கோயில்கள் அவ்வச் சமயத்தார்களாலும் பொதுக் கோயில்கள் அவ்வவ் ஊராராலும் கட்டப்பட்டன. அவைகளின் செலவுகளுக்கும் அன்னோர்களே பொருள் ஈந்து வந்தனர். நிலங்களும் வாங்கிவிட்டனர். ஆனால் அடியார்களின் திருவடி தோய்ந்த புனிதத் தலங்களில் இருந்த கோயில்களுக்குச் சிறப்பான ஏற்பாடுகள் நடைபெற்றன. எடுத்துக்காட்டாகப் பாடல் பெற்ற தலங்கள், வைப்புத் தலங்கள், திவ்விய தேசங்கள், புராணத் தலங்கள் முதலியவைகள், அரசர்களாலும் குறுநில மன்னர்களாலும் தனிகர்களாலும் போற்றப்பட்டன. புது மண்டபங்கள், திருக்குளங்கள், நந்தவனாதிகள் கோபுராதிகள் முதலிய மகத்தான வேலைகள் மன்னர்களாலும் பிற அன்பர்களாலும் எடுத்து நிர்மாணிக்கப்பட்டன. அவ்வாறு திருப்பணிகள் செய்து முடிந்தவுடனே அக்கோயில்களின் வழிபாடுகள் நடைபெறும் பொருட்டுப் பல விதமான தானங்கள் செய்துவைத்தார்கள். நித்தியம், நைமித்திகம், விசேடம் முதலிய சடங்குகள் எல்லாவற்றிக்கும் பொதுவாக தானங்களைச் செய்து அவைகள் அழிந்து போகாதபடி நிரந்தரமாக இருக்கும்பொருட்டுக் கோயிற் சுவர்களில் எழுத்துக்களால் பொறித்து கோயிற் பண்டாரங்களில் சேமித்து வைத்தனர். இப்பேர்ப்பட்ட தானாதிகளால் கோயில்களுக்குப்



பெருத்த சொத்துக்கள் சேர்ந்தன. அச்சொத்துக்களும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேவந்தன. இந்த வகையில் கோயில் சொத்துக்கள் ஒரு சிறந்த தொகுதியாக இருந்தன.

## 4. தானங்களின் வகைகளும் நோக்கமும்

தானம் செய்யப்பட்ட பொருள்கள் - பொற் காசு, ஆடு, பசுமாடு, நிலம், நிலவரி, தொழில் வரி, சந்தைவரி, குடிவரி முதலியன. இவைகளில் பொற்காசுகள், ஆடுமாடுகள், நிலம் முதலியன வியாபாரிகள், குடிகள், மன்னர்கள், பெருமாட்டிகள் முதலியோர் தருவர். நிலவரி, தொழில்வரி, சந்தைவரி, குடிவரி, மீன்வரி முதலிய வரிகளை ஊர்ச்சபையார், அமைச்சர், அரசன் முதலிய நாட்டு அதிகாரிகள் தருவார்கள். இப்படிப்பட்ட தானங்களை முழு விபரங்களோடு, கல்லிலும் செப்பிலும் வெட்டி வைத்துப் பட்டயம் வழங்குவார்கள். இவ்விதமான பட்டயங்கள் கோயில்களின் பண்டாரங்களில் சேமித்து வைக்கப்படும்.

தானங்களின் நோக்கங்கள் ஆலய வழிபாடுகளையும் சடங்குகளையும் பரிபாலிப்பதே ஆகும். இந்தவகையில் சிறப்பாகச் செய்யப்பட்டவைகளாவன : முச்சந்தி வழிபாடுகள், அவைகளுக்கு வேண்டிய திரவியங்கள், நெய், பால் முதலியன, அமுதுபடி, குங்குலியம், இலை, காய் முதலியன. நுந்தா விளக்கு, நெய் எண்ணெய் விளக்குகள் நாள் கோள் சந்திகள், கிரகண சாந்திகள், புனிதநாள் வழிபாடுகள், ஊர் கோலம், உலா, பவனி முதலியன. வாகனம், கொடி முதலியன. திருவிழா ஒலிகள் முதலியன. இவ்விதமான பல சிறப்புகளையும் செய்வதே இந்த தானங்களின் நோக்கங்கள். தற்கால ஆலயங்களிலே இவைகளுக்குக் கட்டளைகள் என்று பெயர். மிக விலை பொருந்திய நிலங்கள் இவைகளுக்கு விடப்பட்டுள்ளன.

தானம் செய்கிற தானகர்த்தா, ஆலயத்தின் மேம்பாட்டைக்கருதி சிறிதும் தன்னலமின்றிச் செய்யலாம். அல்லது தன்னுடைய தன்னலத்தைக் கோரியும் செய்யலாம்.

தன்னலமாவது நோய் நீங்கல் - (திருமேனி பொன் மேனி
யாக்கல்), கோள்நாள் தீமைவிலக்கல்(கிரகண முதலிய தோடம்)
பிறந்த திருநாள் கொண்டாடுதல், மன்னன் திருநாள் கொண்
டாடுதல், உற்றூர் நாள்கொண்டாடுதல் முதலியன. தன்னலம்
அற்றது, உருவ வழிபாடு, அடியார் வழிபாடு, கலை, சிற்பம்,
நடனம் முதலிய ஏற்பாடுகள் முதலியனவாம். இந் நோக்கங்
கள் மிகவாக இருந்தன.

## 5. தானங்கள் செய்த முறைகள்

தானம் செய்பவன் ஆலயத்து அதிகாரியாகிய கணக்கன்
பால் நீர் அட்டித் தான் செய்யும் பொருளைக் கொடுத்துப்
பண்டாரத்தில் சேர்ப்பிப்பான். அத் தானம் நிரந்தரமாக அழி
யாமல் இருக்கும்பொருட்டு ஆலயத்துச் சுவரில் வெட்டி
வைப்பான். செப்பேடும் எழுதி வைப்பதுண்டு. அதில்
எழுதும் உரை மிகவும் ஆராய்ந்தறிந்த அடுக்குச் சொற்களாக
இருக்கும். இக்காலத்தில் சாசனம் பதிவு செய்யும்போது
"புத்திர பௌத்திரபாரம்பியமாய் தானாதி வினியோகங்
களுக்கு அருகராய்" என்பதுபோல அக்காலத்திலும் உரை
நடை இருந்தது. சிறப்பாகத் தானப் பொருள்களை விவரிக்கும்
போது எல்லைகளும் அதில் அடங்கிய பொருள்களும் மிக
நுட்பமாக விவரிக்கப்பட்டன. "மேல்நோக்கிய மரமும்
கீழ்நோக்கிய கிணறும் ஆமை தவழ உடும்பு ஓடும் கற்று
புற்றரையும்.. ...." என்ற உரை நடை ஆராயத்தக்கது.

மேலும் தானங்கள் சீரழியாமல் இருக்கும் பொருட்டு
'பாகேசுர ரக்ஷை,' 'ஸ்ரீவைணவ ரக்ஷை' முதலிய சொற்
களும், தீங்கு செய்தவன் "கங்கைக் கரையில் காராம் பசு
வைக் கொன்ற பாவத்திற்கு உள்ளாவான்" போன்ற ஆணை
களும் இடப்பட்டன. அத் தானங்கள் "ஆசந்திரார்க்கங்கள்
இருக்கும்வரை இருக்கத்தக்கது" என்று ஆசியும் கூறப்
பட்டது. இச் சொற்களால் தான கர்த்தாக்களின் எண்ணம்
செவ்வையாக உரைக்கப்பட்டது.

தானங்கள் கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்
தின் பெயர் சொல்லி அத்தெய்வத்திற்கு எழுதப் பெறும்.



அச் சொத்துக்களைக் கணக்குப்பிள்ளையிடம் கொடுத்துப்
பண்டாரத்தில் சேர்த்தினபோதிலும் அவைகள் சண்டேசுவரர்
பெயரில்தால் கொடுக்கப்படும். சண்டேசுவரர்தான் கோயில்
கண்காணிப்பாளர் ஆவர்.

## 6. தான சொத்துக்களின் ஆட்சி

ஆலயங்கள் சிறியவைகளாக இருந்த காலத்தில் சொத்துக்
களுடைய ஆட்சி சுலபமாக இருக்கும். ஆனால் சொத்துக்கள்
மிகுதியாகிச் செய்யவேண்டிய கடமைகள் பெருகிவிட்டால்
ஆட்சியும் கடினமாகும். கண்காணிப்பும் மிதமீறிவிடும்.
ஆலய ஊழியர்கள் பலபேர் இருக்கவேண்டும். அவர்கள்
வேலையைப் பார்வையிட ஓர் அதிகாரி இருக்கவேண்டும்.
ஓர் ஆலோசனைக் குழுவும் அமையவேண்டும். சோழர்
சாம்ராச்சியத்தில் இவ்விதமாக ஆலய பரிபாலனம் மிகுந்து
விட்டது. ஊர்களில் ஊர்ச்சபையார் மேல்பார்வைத் தொழி
லைச்செய்து வந்தார்கள். பெரிய ஆலயங்களில் கண்காணிப்
பாளர்கள் கணக்கர்கள் முதலியோர் அற நிலையச் சொத்துக்
களைப் போற்றி வந்தார்கள். அரசனும் சில சமயங்களில்
அதிகாரத்தைக் கவனிக்க வேண்டி வந்தது. சோழர் காலத்து
ஆலய ஆட்சி மிகச் சீர்திருத்தம் பெற்றது. குலோத்துங்கன்
III காலத்தில் ஆலயங்களில் சீர்கேடுகள் உண்டாக அவை
களைச் சீர்திருத்திக் குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதற்காக
ஒரு பெரிய அதிகாரி அரசனால் நியமிக்கப்பட்டான் என்று
அறிகிறோம். இப்படிப்பட்ட எச்சரிக்கைகள் முன்னாளில்
நடந்தன. எந்த நோக்கத்தில் ஒரு பொருளோ நிலமோ
கொடுக்கப்பட்டதோ அதே நோக்கத்திற்கு அதனைப் பயன்
படுத்துவதில் மிக்க சிரத்தை கொண்டிருந்தார்கள் என அறி
கிறோம்.

இப்படியிருந்தும் சில ஆலயங்களில் சொத்துக்கள் கை
மாறிவிட்டன. பின்னால் வந்த அரசர்கள் இக் குற்றத்தை
விசாரித்துச் சீர்திருத்தி அச் சொத்துக்களை மீண்டும் அதே
ஆலயத்திற்குச் சேர்த்திருக்கிறார்கள். இருந்தாலும் அர
சாங்க மாறுதல்களில் பல ஆலயங்கள் மிகுந்த நஷ்டங்கள்

அடைந்தன. இந்தமுறையில் அனேக பழங்கோயில்களிலே முன் இருந்த சொத்துக்கள் பாராதீனமாய்ப் போயின. தஞ்சைக் கோயிலிலே இருந்த சொத்துக்கள், இப்போது இருந்தால் கோடிக்கணக்கான பொன் மதிப்புள்ளவைகளாக இருக்கவேண்டும். அவைகள் சென்ற இடம் தெரியவில்லை. இனி மற்ற கோயில்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? ஆகவே ஆலய சொத்துப் பரிபாலனம் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும் அல்லவா? முகம்மதியர் காலத்தில் ஆலயங்களைப்பற்றி அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. ஆங்கிலர் வந்த பிறகு எந்த நிலையில் இருக்கின்றது என்று நாம் அறிவோம்.

## 7. சமயக் கலைகளின் ஆட்சி

பண்டைய மன்னர்களும் தமிழ் மக்களும் ஆலயத்தைச் சமயமும் கல்வியும் சேர்ந்த ஒரு கலைக்கூடம் ஆக்கினார்கள். ஆலயத்தையே நாகரிகக் கலைகளுக்கு நடுநாயகமாக வைத்துக் காப்பாற்றினார்கள். சைவ வைணவச் சமயப் பிரசாரம், தேவாரப் பிரபந்தத் திருப்பாடல் ஓதுதல், நடனம் முதலிய ஆடல் இசைக்கலை விருத்தி, சிற்பக்கலை ஓவியக்கலை, வைத்தியக்கலை, சோதிடக்கலை முதலிய அறுபத்து நான்கு கலைகளும் நடத்துதல் முதலிய செயல்களுக்கு ஆலயமே நடுநிலையமாக இருந்தது. அவ்வக்காலத்து மன்னர்கள் இக்கலைகளை ஆராய ஆசிரியர்களை ஏற்படுத்தினார்கள். அவர்களுக்கு ஊதியம் தருவதற்கு வேண்டிய நிலம் முதலியவைகளைத் தந்துதவினார்கள். தஞ்சைப் பெரியாவுடையார் ஆலயத்தில் 49 பிடாரகர்களுக்குத் தேவாராதிகளை யாதொரு விசாரமுமின்றி ஓதுவதற்காக வேண்டிய நிலங்களை உதவினார்கள் என்றால் சோழர்களுடைய கலைஞானத்திற்கு அளவிடல் முடியுமா? ஆனால் அத்தகைய தானங்கள் எல்லாம் இப்போது எங்கே போயின. பின் வந்த அரசர் காவாது அதனால் காப்பு குறைந்ததினால் அவைகள் மறைந்து போயின.

ஆலயங்களிலேயே சிற்பங்கள் ஓவியங்கள் இன்னும் மறையாமல் விளங்குகின்றன. அவைகளே பண்டைய மேன்



மையை நமக்குக் காட்டுகின்றன. அவைகளை ஆக்குவதற்காக எத்தனைப் பொன்களை முன்னோர்கள் தந்திருக்கவேண்டும். கலைக் கூடங்கள் குறைவில்லாமல் நடைபெறவேண்டி அபரிமிதமான தானங்கள் அக்காலத்தில் செய்யப்பட்டன. இவைகளின் அட்டவணை ஒன்று எழுதவேண்டும் என்றால் அதே பெரிய நூல் ஆகிவிடும்.

## 8. தானச் சொத்துக்களை மாற்றமுடியுமா?

ஆலயங்களுக்கு முன்னாளில் ஏற்பட்ட சொத்துக்கள் பெரும்பாலும் இனாம்களே. இனாம் என்ற அன்னிய நாட்டுச் சொல் தேவதாயம், பிரமதாயம், சர்வதானம் முதலிய பல விதமான தானங்களின் நிலையைக் குறிப்பது. ஆலயத்திற்கு வரக்கூடிய வருமானம் இனாம் நிலங்களிலிருந்து வரும் வரி அல்லது கடமை ஒன்றே ஆகும். நிலங்களில் எடுக்கும் விளைவு சாகுபடி செய்யும் குடியானவனுக்குச் சேர்ந்தது. ஆகவே இனாம் நிலத்தின் வரியிலிருந்தே ஆலயம் நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கட்டுப்பாட்டை நீக்கிவிட அரசியலாருக்கு அதிகாரம் உண்டா?

நாகரீகம் பெற்ற நாடுகளில் உள்ள சட்ட நிபுணர்கள் இவ்வித மாறுபாடு செய்யவே கூடாது என்பர். அவ்விதமாகத் தான் கர்த்தாவின் நோக்கத்திற்கு எதிரிடையாக யாதொரு காரியமும் செய்தால் அது நம்பிக்கைத் துரோகம் ஆகும் என்பர் சட்ட நிபுணர்கள். இப்போதைய அரசியலார்கள் மட்டும் எத்தனைத் தேசீய உணர்ச்சி படைத்தவர்களாயினும் அதனைச் செய்ய முடியுமா?

## 9. மாறுதல்களினால் ஆகும் கேடுகள்

இப்போது அரசியலார்கள் ஜமீன் நிலங்களை ரயித்வாரி நிலங்களாக மாற்ற முயலுகிறார்கள். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. சிறிது காலத்திற்கு முந்தி இருந்த அமைச்சர்கள் அது ஒன்றையே செய்ய நினைத்தார்கள். ஆனால் இப்போதுள்ள அமைச்சர் குழுவோ அதனோடு இனாம்

களை விடுதலை செய்ய நினைத்து ஒரு மசோதா வெளியிட்
டிருக்கிறார்கள். இதைப்பற்றிச் சென்னையில் நடந்த சமய
மாநாட்டார் ஆலோசித்து இனாம்களை இச்சட்டத்திலிருந்து
விலக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள். பொது மக்களும்
இந்த நோக்கமே வெளியிட்டு வருகிறார்கள். ஆனால் தேசியப்
பிரதிநிதிகளோ இனாம்களை இதில் சேர்க்க வேண்டுமென்கிறார்
கள். இது நம்பிக்கைத் துரோகம் ஆகும் அல்லவா?

இனாம் நிலங்களில் கிடைக்கும் வரிமீது ஒரு தொகை
போட்டுப் பரிகாரமாக ஆலயத்திற்குத் தருவார்களாம். அத்
தொகை மிகவும் குறைவாக இருக்கும். சொத்து குடியான
வர்களுடையது ஆகிவிடும். தொகை வந்தவுடனே சிறிது
காலத்தில் அது ஜீர்ணமாகிவிடும். அசையாப் பொருள்
அசையும் பொருளாகிவிட்டால் அது ஓடிப்போவதற்கு யாரா
வது வழிகாட்டவேண்டுமா? இந்த நிலையில் ஆலயங்கள்
எவ்வாறு தத்தம் வேலை செய்யக்கூடும். இதை அரசியலார்
ஆலோசிக்கவேண்டும்.

## 10. அரசியலார் கடமை

யார் நம்பிக்கைத் துரோகம் செய்தாலும் அரசியலார்
செய்யக்கூடாது. 'குரு நின்று பெய்ந்தால் சீடன் ஓடிப்
போவான்' என்ற கதை ஆகிவிடும். முன் நாளில் ஆலயங்கள்
எத்தனை மேன்மையான நிலையில் இருந்தனவோ அத்தனைக்
கத்தனை தாழ்ந்த நிலை அடைந்துவிடும். ஆகவே அரசியலார்
தீர ஆலோசித்து ஜமீன் ரத்து மசோதாவிலிருந்து ஆலய
இனாம்களை விலக்கிவிடுவார்களாக!

---

2. தலப்பகுதி

# முதலைவாய்ப் பிள்ளைத்தலம்

## அவிநாசி

(ம. ரா.)

இடவமைதி:— அவிநாசி என்ற தலம் கோவை வட்டத்
தில் ஒரு தாலுக்காவின் தலைமை ஊர். ஈரோடு கோவை
இருப்புப்பாதையில் வஞ்சிப்பாளையத்திற்கு வடக்கில் 5 கல்
லிலும் திருப்பூருக்கு வடமேற்கில் 8 கல்லிலும் கோவைக்குக்
கிழக்கில் கற்பாதையில் 22 கல்லிலும் உள்ளது. விசை
வண்டி வசதி உண்டு. கொங்கு நாட்டின் ஏழு பாடல்பெற்ற
தலங்களில் ஒன்று. சுந்தரரால் பாடப்பெற்று முதலைவாய்ப்
பிள்ளையை உமிழப் பெற்ற ஐதீகம் கொண்ட ஊர்.

நொய்யலாற்றின் (காஞ்சிநதி) உபநதியாகிய நள்ளாற்றின்
தென்கரையில் உள்ளது திருக்கோயில். அதற்குத் தென்
மேற்கில் புக்கொளியூர்க் குளமும் மேற்கில் பெரிய பனங்
காடும் உள்ளன. தென்கிழக்கே பல நந்தவனங்கள் இருக்
கின்றன. நள்ளாறு மிகச் சிறிய ஆறானாலும் இவ்விடத்தில்
எப்பொழுதும் சிறிது நீராவது ஓடும். கோயிலைச் சுற்றிலும்
மிகச் செழிப்பாக இருக்கும்.

நள்ளாற்றுக்கு வடக்கில் ஊர் அமைந்திருக்கிறது.
ஆற்றிற்கு ஒரு பண்டைப் பாலம் உண்டு. ஊரில் தேர்
வீதிகள் நான்கு சதுரமாக அமைந்திருக்கின்றன. தேரும்
தெற்குப் பெரும்பாதையில் நிற்கின்றது. இப்போது ஊர்
கீழ்ப்புறமாக பெருகிக் கொண்டு போகிறது. ஊரில் பல
சத்திரங்கள் கடைத்தெரு கச்சேரிகள் முதலியன இருக்
கின்றன.

திருக்கோயில் ஒரு பண்டைக் கட்டடம். அதன் சில
பகுதிகள் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்டன. பிரகாரத்தில்

புதிதாகக் கருங்கல் தளவாடம் போடப்பட்டுள்ளது. சுவாமி சன்னிதி கோபுர வாயிலுக்கு எதிரே இருக்கிறது. அதற்கு வடகிழக்கில் காசிதீர்த்தம் என்ற பெயருடன் என்றும் வற்றாத ஒரு புனித தீர்த்தம் உண்டு. இதனைக் கங்கைக்குச் சமானமாகச் சொல்லி "காசியிற் பாதி அவிநாசி" என்ற முதுமொழி கூறுகிறார்கள். முன் மண்டபத்துத் தூண்களில் ஆக்கியோர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சுவாமியின் வலதுபுறத்தில் அம்மன் சன்னிதி இருக்கிறது. இவ்விரண்டிற்கும் நடுவில் கல்யாண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. முன் கொடிக்கம்பத்தில் முதலைவாய்ப்பிள்ளை உமிழ்ந்த ஐதீகம் செதுக்கப்பட்டுள்ளது. கோயிலின் வெளியே தென்கிழக்கில் ஒரு பெரிய தெப்பக்குளம் உண்டு. அதன் இறங்கு துறை சிறு மண்டபமாகக் கட்டப்பட்டு அதன்மேலே ஒரு நந்தி வைக்கப்பட்டுள்ளது. அதற்கு மேற்கே காளிகோயில் இருக்கிறது. கோயிலுக்குத் தென்மேற்கில் உள்ள பெரிய ஏரிதான் சுந்தரமூர்த்திகள் முதலையைப் பிள்ளை உமிழப் பாடிய குளம் என்பர். இதன் கரையில் சுந்தரமூர்த்திகள் ஆலயம் இருக்கிறது. சுவாமி திருநாமம் - அவிநாசியப்பர்; அம்மன் திருநாமம்- பெருங்கருணை நாயகி; தலமரம் - பாதிரி; தீர்த்தம் - காசி தீர்த்தம்; திருப்பாடல் - ஒன்று.

ஐதீகங்களும் நூல்களும் :—இந்தத் தலத்தின் பெருமை வடமொழியில் ஸ்காந்தம் பிரமாண்டம் பவிஷ்யம் என்ற புராணங்களில் இருக்கிறதென்பர். தமிழிலே இளையான் கவிராயர் என்ற புலவர் ஒரு சிறந்த புராணம் செய்துள்ளார். அதன் பாயிரத்தில் "குன்றை வைத்தியநாதன் இளையான்" என்று இவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இவர் குன்றிடம் (குண்டடம் தாராபுரம் தாலுக்கா) என்ற ஊரில் பிறந்தவர்; இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் இருந்தவர். ஆளுடைய பிள்ளையார் ஆதீனத்துத் திருஞானசம்பந்த தேசிகரது மாணாக்கர். இவரது விரிந்த வரலாற்றைக் கொங்கு மலரில் காண்க. செய்யுள் நடை இனிமையானது. அதில் அவிநாசி என்ற



பெயர் விநாசம் இல்லாதது என்ற பொருள் பெற்றதென்றும் பிரளய காலத்தில் விநாசம் இல்லாது இருந்து அக்கினிக்கு அஞ்சிய தேவர்களுக்குப் புக்கு ஒளிந்து கொள்ள இடம் தந்ததினால் புக்கொளியூர் என்ற பெயர் பெற்றதென்றும் கூறப்பட்டுள்ளது. இனி பிரமன், தாடகை முதலியவர்களும் பூசித்து அருள் பெற்றும் சுந்தரர் இங்கு விஜயம் செய்து தேவாரம் அருளிச் செய்து முதலையைப் பிள்ளை உமிழச்செய்த வரலாறுகளும் இருக்கின்றன. இதன் விவரங்கள் சுந்தரமூர்த்திகளும் கொங்குநாடும் என்ற நூலில் காண்க. இனி இங்கே பல கர்ணபரம்பரை கதைகளும் நம்பிக்கைகளும் உண்டு. காசி தீர்த்தத்திற்கும் வடநாட்டுக் கங்கைக்கும் சுரங்கம் உண்டென்பர். குருநாத பண்டாரம் தன் ஆன்மலிங்கம் குளத்தில் எறியப்பட்ட அதை ஒரு மீன் கவ்விக் கொண்டு கொடுத்ததாம். இக்காட்சி தீபத்தம்பத்துக் குறட்டில் செதுக்கப்பட்டுள்ளது லிங்கத்தைப் பூசித்த உருவம் கோபுரவாயிலில் வடதிசையில் இருக்கிறது.

சரித்திரம்:—இத்தலம் கொங்கு மண்டலத்து 24 நாடுகளில் ஒன்றாகிய வடபரிசார நாட்டில் உள்ளது. வடபரிசார நாடு நள்ளாற்றின் இருகரைகளிலும் உள்ள நாடு. இதனைப் பற்றி அவிநாசிப் புராணம் கொங்குமண்டல சதகம், ஊர்த்தொகை முதலிய நூல்களில் காணலாம். கல்வெட்டுகளிலும் உண்டு. சுந்தரர் விஜயம் 9-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது. அவரது தேவாரத்தில்,

"பொருவாரும் சோலைப்புக் கொளியூரில் குளத்திடை"

"புக்கொளியூர் அவிநாசி யேமுதலையைப்
பிள்ளை தரச்சொல்லு காலனையே"

"நள்ளாறு தெள்ளார் புக்கொளியூர்க் குளத்திடை"

என்ற மேற்கோள்களால் நதிப்பெயர், குளப்பெயர், ஊர்ப் பெயர் ஐதீகம் முதலியவைகள் அக்காலத்திலேயே வழக்கத்.

இல் இருந்தன எனலாம். மற்றும் மணிவாசகர் 'அவிநாசி
யப்பா' என்று கூறியது இத்தலத்தை என்பர். இவைகளாலே
ஊர்ப்பெயர் புக்கொளியூர், இறைவன் பெயர் அவிநாசி, என
வற்படும். அருகில் புக்கொளி என்ற குக்கிராமமும் உண்டு.

கல்வெட்டுகள்:— இவ்வாலயத்தில் 35 கல்வெட்டுகள்
கிடைத்திருக்கின்றன. இதைப்பற்றி வெள்ளலூர் முதலிய
வேறு ஆலயங்களிலும் கல்வெட்டுக்கள் உண்டு. சுந்தரரும்
சேரமான் பெருமாளும் இந்த ஊரில் விஜயம் செய்துவிட்டுச்
சென்ற பிறகு இது சோழர் ஆட்சிக்குள் புகுந்தது. கி. பி.
894 ல் ஆதித்திய சோழன் 1 கொங்கு நாட்டைப் பிடித்தான்.
சுமார் இரண்டு நூற்றாண்டுகள் சோழர் ஆதிக்கமே இருந்தது.
அப்போது இந்நாட்டிற்கு அதிராசராச மண்டலம் சோழ
கேரளமண்டலம் என்ற பெயர்கள் வந்தன.

கொங்கு சோழர் :—சோழர்களுடைய பிரதிநிதிகளாக
இருந்து பின்னாலே அரசுரிமை பெற்று ஆண்ட ஒரு வம்சத்
தினர் கொங்கு சோழர் என்னப்பட்டார்கள். அவ்வரசர்
களுடைய கல்வெட்டுக்கள் அவிநாசி ஆலயத்தில் இருக்
கின்றன. அவர்களில் முதல் கல்வெட்டு குலோத்துங்கன்
(1149 - 1183) காலத்தது. அதன்படி மருதன் மலையன்
என்ற குலோத்துங்கச் சோழ விக்கிரமாதித்தியன் என்ற
வள்ளல் அவிநாசியப்பருக்கு ஒரு நுந்தா விளக்கு எரிக்கப்
பணம் தானம் செய்தான் (1153). பிறகு 1161 ல் வெள்ள
லூர் கிராமத்தார் குடிக்காணம் என்ற வரியை பெருங்
கருணைச் செல்வியார் ஆலயத்திற்குத் தானம் செய்தார்கள்.
அதின்படி ஆண்டு ஒன்றுக்கு 12 படி தானியம் ஆகும். வீர
சோழன் (1183 - 1206) காலத்தில் இரண்டு தானங்களும்
வீர ராஜேந்திரன் (120 - 1225) காலத்தில் 5 தானங்களும்
செய்யப்பட்டன. அரசன் மகன் நச்சினார்க்கினியன் என்ற
கண்டிய தேவன் சுவாமி அம்மன் திருமுழுக்குக்கு எண்ணெய்
தானம் செய்தான். இக் கல்வெட்டுக்களால் அக்காலத்து



வியாபாரிகள், தனிகர், அரசர் முதலானவர்களின் பெயர்கள்
கிடைக்கின்றன. அரசர்கள் பெயரால் ஊர்ப்பெயர்கள்
வழங்கினதும் (பார்ப்பாரப் பூண்டி என்ற வீர ராஜேந்திர
நல்லூர் முதலியன) அரசன் பெயரால் உற்சவங்கள் வைத்த
தும் (அவனிவேண்டராமன் சந்தி முதலியன) இவைகளால்
அறியலாம்.

கொங்கு பாண்டியர்.— சோழர்களுக்குப் பிந்தி சில
ஆண்டுகள் கொங்கு பாண்டியர்கள் ஆண்டனர். வீரபாண்டி
யன் (1265-1285) காலத்தில் நான்கு கல்வெட்டுக்கள் கிடைத்
திருக்கின்றன. அவிநாசிக்கடுத்த சேவூர் அக்காலத்தில்
செம்பியன் கிழானடிநல்லூர் என்ற பெயருடன் ஒரு தேவ
தான கிராமம் ஆக இருந்தது. அதற்கு அருகில்தான்
மாணிக்கவாசகர் அருளிச் செய்த மொக்கணீசுவரம் இருக்
கின்றது. அக்காலத்தில் கோயிலுக்குத் தந்த வரிகளின்
விவரங்கள் அறியலாம். விக்கிரமசோழன் திருவீதி என்று
வீதியும் தென்பள்ளியில் சுந்தர நாயினர் கோயிலும் இருந்
தன, சுந்தரபாண்டியன் புக்கொளியூர்க் குளத்துக்கரையில்
சுந்தர நாயனர் கோயில் கட்டினான். அவனது 31 ஆண்டில்
அரணையூர் வியாபாரி ஒருவன் அக் கோயிலுக்கு நெல் தானம்
செய்தான். இக் கோயிலைப்பற்றி முன்னமே குறித்திருக்
கிறோம். அவிநாசிக் கோயிலின் முன் மண்டபத்தை
வானதராய வடமலையப்பர் கட்டினார்.

கன்னட அரசர்கள்:—பாண்டியர் போன பிறகு கன்னட
நாட்டு ஹொய்சளர் ஆண்டனர். வீர வல்லாள தேவன்
(1292 - 1351) காலத்தில் இக் கோயிலில் ராகுத்த ராயன்
சந்தி என்ற ஒரு விழா வற்பட்டது; டணாய்க்கன் கோட்டை
மாதப்பதண்ட நாயக்கன் தென்பள்ளி கிராமத்தைக் கோயிலுக்
குத் தந்தான். பிறகு உம்மத்தூர் தெர்க்கநாம்பி அரசர்கள்

பின்னர் விஜயநகரத்து மன்னர்களும் ஆண்டனர். பிறகு மைசூர் ஆதிக்கத்தில் குரிக்காரமல்லையனும் சங்கரையனும் பிரதிநிதிகளாக ஆண்டனர். சங்கரையன் அவிநாசி கோயிலைப் புதுப்பித்தான். இவன் மகன்தான் பேரூரில் தெப்பக்குளம் கட்டினவன். இறுதியில் கட்டின அரசன் முன் கோபுரம் கட்டாமலே போய்விட்டான். திருப்பணிக்கு வந்த பெரிய கற்கள் இன்னமும் கோயில் முன்னிலையில் கிடக்கின்றன.

கோயில் திருப்பணிகள் செய்த பெரியார்களின் உருவங்கள் பல தூண்களில் உள்ளன. நள்ளாற்றுப் பாலம் பழைய இந்து மன்னர்கள் கட்டிய முறையில் உள்ளது. அதற்கு வடபுற மண்டபம் தேர்வீதி வரைக்கும் செல்கிறது. இதில் சில சிற்பங்கள் இருக்கின்றன. பேரூர் சிற்பங்களுக்கு சமமாக இல்லாவிடினும் வெகு சாமர்த்தியமாக செய்யப்பட்டுள்ளன. தேர் மிகப் பெரிது. சில ஆண்டுகளுக்கு முன் பழுதுபட்டு விழுந்தது. தற்போது புதுப்பிக்கப்பட்டது. அடுத்து சேவூர் முக்கணீச்சரம் என்ற வைப்புத்தலங்கள் உள்ளன.

3 சாத்திரப்பகுதி

# நால்வழிபாடு

(R. பஞ்சநதம் பிள்ளை)

மனிதப்பிறவி அருமையாய்க் கிடைத்துள்ளது. 'வாய்த்தது, நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்' என்று அப்பர் கூறுகின்றார். இறைபணி செய்வதற்கே உடலைத் தந்துள்ளான் இறைவன். 'வாழ்த்தவாயும் நினைக்கமட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை' என்று நாவரசர் கூறுகின்றார். 'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பில் உத்தமனைக் காண்' என்று ஔவையார் கூறுகின்றார். மனிதனிடத்தில் மறைந்து கிடக்கும் தெய்வீக சக்தியை வழிபாடுகளால் விளங்கச் செய்வதே மனித வாழ்க்கையின் சிறந்த பயனாகின்றது.

இறைவனை மனம் மொழி மெய்களால் வழிபடுவர். மனவழிபாடும் மெய்வழிபாடும் தமக்கு மட்டும் பயன்படும். மொழிவழிபாடும் - வாய்ப்பணி தமக்கும் பிறருக்கும் பயன்படும். வீட்டின் வாயிலில் வைத்த விளக்கு வீட்டின் உள்ளும் புறமும் வெளிச்சம் தருவதுபோல, உடம்பெனும் மனையின் வாயில்போன்ற வாயினால் செய்யும் வழிபாடு தனக்கும் பிறருக்கும் நன்மை தருவதாகும். வாய்த்தொண்டு என்பது இறைவனை வாயால் புகழ்வதும், அவன் திருநாமங்களை நாவால் நவில்வதுமாகும். ஆலயங்களில் கோபுரவாயிலின் வழியே பெருமாள் வெளிப்படுவதுபோல உடம்பெனும் கோயிலுக்கு வாய் கோபுரவாயிலாக அமைந்துள்ளது. 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம், வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்' என்று திருமூலர் கூறுகிறார். கார்த்திகை மாதத்தில் வீட்டு வாயில்களில் விளக்குகளை நிறைய ஏற்றி வைத்து விளக்கப் படுத்துகிறார்கள்.

இயற்கைப் பொருள்களில் அஃறிணைப் பொருள்களும் வாய் திறந்து இயற்கை வடிவான இறைவனை வழிபடுகின்றன. வண்டு

கள் வாய்திறந்து பாடுகின்றன. 'பண்மாலை வரிவண்டு பண்
மிழற்றும் பழனத்தான்' என்கின்றார் அப்பர் சுவாமிகள்.
மலர்களும் அவ்வப்போது இதழ்களைத் திறந்து மணந்தருகின்
றன. காலைக் கதிரவனைக் கண்டு கமலமலரும் மாலை மதியத்
தைக் கண்டு குவளையும் வாய் திறக்கின்றன. மார்கழி மாதத்
தில் விடியற்காலத்தில் ஆலயங்களிலும் இல்லங்களிலும் வாயில்
கள் திறக்கப்படுகின்றன. 'வான்வார் கழல்பாடி வந்தோர்க்
குன் வாய்திறவாய்' என்று திருவெம்பாவை கூறுகின்றது.

அஃறிணைப் பொருள்களில் சிலந்தியும் வாயினால் நூற்
நூற்கின்றது. ஆனைக்காவல் என்னும் ஆலயத்தில் சிலந்தி
நூற்பந்தல் அமைத்துப் பெருமானுக்கு நிழலிட்டு வழிபட்டது.
பெருமான் அதன் தொண்டுக்கு மகிழ்ந்து மறுபிறப்பில் மன்ன
னாகப் பிறக்கச்செய்தான். 'சிலந்தியும் ஆனைக்காவில் திரு
நிழற்பந்தல் செய்து உலந்தவன் இறந்தபோதே கோட்செங்
கணானுமாக—பிறப்பித்திட்டார்' என்று அப்பர் கூறுகின்றார்.
ஒருவகையில் மனிதனும் சிலந்திக்கு ஒப்பாவான். சிலந்தி
வாயால் நூற்று வலையாக்கி அதில் வசிக்கிறது. மனிதனும்
தான் விரும்பும் பாசங்களின் தொடர்பில் சிக்கி அதன்வலையில்
அகப்பட்டுக் கொள்கிறான். 'நுண்நூல் நூற்றுத் தன்னகப்
படுக்கும் அறிவில் கீடத்து நந்துழிப் போல ஆசைச்சங்கிலிப்
பாசத்தொடர்ப்பட்டு' என்று பட்டினத்தடிகள் கூறுகின்றார்.
ஆசையற்றபோது ஞானம் பிறக்கின்றது. 'ஆசாநிகளம் துகளா
யினபின் பேசா அநுபூதி பிறந்ததுவே' என்று அநுபூதி
கூறுகிறது. சிலந்தி வாயால் நூற்று சிவத்தொண்டு செய்தது
போல, ஆறறிவு படைத்த மனிதனும் நூல்தொண்டு செய்ய
வேண்டும். 'நூலால் நன்றாய் நினைமின்கள்' என்று அப்பர்
கூறுகின்றார். நூல்தொண்டு என்பது பெருமானைப் புகழும்
வகையில் ஏதேனும் ஓர் நூலை - பிரபந்தத்தைச் செய்வது,
அல்லது ஆன்றோர்கள் இயற்றிய ஞான நூல்களைக் கற்பதும்
கேட்பதும் ஆகும். தற்போது இராட்டை வாயிலாக நூல் நூற்
பதையும் காண்கிறோம். பஞ்சின் நூலானது பருப்பொருள்
களின் புறக்கோணலைப் போக்குவதுபோல, ஞான நூல்கள்
மனிதரின் மனக் கோணலை மனமாசுகளைப் - போக்கும்.



பொதுவாக நூல்கள் பதிநூல், பசுநூல், பாசநூல் என
மூன்றுவகைப்படும். பசுநூல் என்பன சரித்திர வரலாறுகள்.
பாசநூல் என்பன உலகப் பொருள்களைப் பற்றிக் கூறுபவை.
இவை இம்மைப் பயன்களைத் தரலாம். பதிநூல் என்பன—
இறைவனைப் பற்றிய வேதாகமம் முதலியவை. 'வேதமோடா
கமம் மெய்யாம் இறைவன் நூல்' என்று திருமந்திரம் கூறுகின்
றது. இவை இம்மை மறுமைப் பயன்களைத்தரும். ஆகவே
பதிநூல்களைக் கொண்டு வாயினால் வாழ்த்த வேண்டும். நுண்
மைப் பொருள்கள் கண்ணாடியால் பருமையாகக் காணப்படுவது
போலப் பெருமானும் பதிநூல்களால் விளங்கித் தோன்றுவான்.

அப்பர் சுவாமிகள் 'கற்றுக் கொள்வன வாயுள நாவுள'
என்கிறார். அவை தோத்திரமும் மந்திரமும் ஆகும். வாயினால்
துதிக்கத் தக்கவை தோத்திர நூல்கள். அவை தேவார
முதலிய திருமுறைகள் ஆகும். நாவினால் நவிலத்தக்கவை.
மந்திரங்கள். தோத்திரங்களை வாய்விட்டுச் சொல்ல வேண்
டும். மந்திரங்களை மோன நிலையில் உச்சரிக்க வேண்டும்.
தோத்திரங்களால் சொல்பவருக்கும் கேட்பவருக்கும் பயன்
உண்டாகும். மந்திரங்கள் உச்சரிப்பவருக்கு மட்டும் பயன்
தரும். மந்திரங்களை உச்சரிக்கும் போது தவறு உண்டாகலாம்.
அதனால் தீங்கும் நேரலாம். தோத்திரங்களால் நன்மையே
உண்டாகும். 'வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்
தகத்தான்' என்றும், 'நாவார நம்பனையே பாடப் பெற்றோம்'
என்றும் நாவரசர் வாயின் இயல்பையும், நாவின் தன்மையை
யும் நன்றாகக் காட்டியுள்ளார். 'இருள்சேர் இருவினையும்
சேரா, இறைவன் பொருள்சேர்புகழ் புரிந்தார் மாட்டு' எனப்
பொதுமறை கூறுகின்றது.

ஆதலின் பதிநூல்களாகிய தேவாரம் முதலிய தோத்திர
நூல்களையும், சிவஞானபோதம் முதலிய சாத்திர நூல்களையும்
பக்தியுடன் பயின்று பயன் பெறுவோமாக.

---

ஸ்ரீ ஞானியார் சுவாமிகளுடைய பேச்சைத் தழுவி இக்கட்டுரை
எழுதப் பெற்றது.

4. சமயப்பகுதி

# 1. தற்காலச் சமயநிலை

(கோவைகிழார்)

"உலகம் நம்மிடை அளவிற்கு மீறி இருக்கிறது" என்றார் வர்ட்ஸ்வர்த் என்ற ஆங்கிலக் கவிஞர். அதாவது 'நாம் நம் வாழ்நாளில் உலகப் பொருள்களைப் பற்றியே சிந்தித்த வண்ணமாக இருக்கிறோம். வயிறார உண்பதும் நன்றாக உறங்குவதும் அவைகளுக்கு வேண்டிய பொருள்களைப் பெறுவதும் நமது கவலையாகி விட்டது. நமது ஆன்மீக உணர்ச்சிகளைப் பெருக்க முயலுவதே கிடையாது' என்பதே இதன் குறிப்பு. இவ்விதமாக மேற்கு நாட்டார் எங்கும் பரவிவரும் உலோகாயதக்கொள்கைகளை விடுத்துப்பரமான்மிக உணர்ச்சிகளைக் கைக்கொள்ளவேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

நமது நாட்டிலோ இதற்கு எதிரிடையான கொள்கை இருந்து வருகின்றது. நமது நாட்டார் உலகப்பொருள்களுக்குச் செலுத்த வேண்டிய சிரத்தை செலுத்தாது பரமான்மிகத்திற்கு மிகுதியான நேரம் செலவழிக்கிறார்கள் என்பதே அதுவாம். நமது வாழ்க்கை இன்பகரமாக்குவதற்கு நாம் சிறிதும் பாடுபடுவதில்லை. அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்வதில்லை. உணவு, உடை, உறையுள் நமக்குப் போதுமானது ஆக இல்லை. இவைகளில் வேண்டிய அளவு கருத்துச் செலுத்தாமல் ஆன்மீகச் செயல்களில் கருத்து மிகுதியாகச் செலுத்திச் சமயத்தையே பெரிதும் பாராட்டுகிறோம் என்பதே. பிறநாடுகளைக் காட்டிலும் நமது நாட்டில் வைதிக உணர்ச்சி என்ற சமய உணர்ச்சி மக்களைப் பிடித்து நிற்கிறது என்பதே எல்லாரும் எண்ணுவதாகும். இந்த எண்ணம் எத்தனை உண்மை என இனி ஆராய்வோம்.

இவ்வாறு செய்யும் ஆராய்ச்சியிலே முன்னாளில் நமது நாடு எந்த நிலையில் இருந்தது என நினைக்க வேண்டியதில்லை. தற்காலத்தில் நமது நாடு என்ன நிலையில் இருக்கிறது, பொது மக்கள் பெரும்பான்மையாக எந்தக் கருத்துக்களை ஆண்டு



வருகிறார்கள். தங்கள் வாழ்க்கையில் எந்த முறைகளில் பழக்க வழக்கங்கள் நடவடிக்கைகள் முதலியவைகளைக்கொண்டிருக்கிறார்கள். கற்றோர்களின் மனநிலை எவ்வாறு இருக்கின்றது. செல்வந்தர்களின் எண்ணப் போக்கு எவ்வாறு இருக்கிறது. ஏழைகளின் நடவடிக்கை எந்த நிலையில் இருக்கிறது. நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் பேதம் உண்டா. பொதுவாக நாட்டின் எண்ணப் போக்கு எந்த நிலையில் சென்று கொண்டிருக்கிறது. சமயச் சார்பிலா இலௌகிக முறையிலா? என்பதை இங்கே எடுத்துக் கூறுவோம்.

சென்னை நகரில் நடைபெறும் நடவடிக்கைகளை ஆராய்ந்தால் சமயம் இன்றும் மக்களிடை உலாவுகிறது என்றே சொல்லவேண்டும். சனிக்கிழமைகளில் திருவல்லிக்கேணி கோயிலும், வெள்ளி திங்கள்களில் மயிலை, சென்னைக் கந்தசாமி கோயிலும் திருவொற்றியூர் தியாகராயர் கோயிலும், கிருத்திகைகளில் வடபழனியாண்டவர் கோயிலும் பார்த்தால் போதுமானது. அங்கே தரிசனம் செய்யவரும் மக்கள் தொகை சமய ஈடுபாட்டைக் குறிக்கும். ஆனால் வெள்ளிக்கிழமைகளில் மசூதிகளின் வாயிலில் கைக்குழந்தைகளை ஏந்திக்கொண்டு முஸ்லிம் பெரியார்கள் எச்சில் தோய்ந்த சுவாசத்தைக் குழந்தைகளின்மேல் வீசும்படி நிற்கும் ஏழைத் தாய்மார்களைக் கண்டால் இவர்கள் சமயக் கொள்கை தூய்மையானதா, ஒரு கோரிக்கையை வேண்டி நிற்பதா என்று ஐயப்படவேண்டும். வாரந்தோறும் சனி ஞாயிறுத்தாள்களில் சமய உபன்னியாசங்களின் பிரசுரங்கள் ஏறிவருவதைக் கண்டால் சமயஞானம் அதிகரிக்கிறதென்றே கூறவேண்டும். மார்கழி மாதத்தில் திருப்பாவை திருவெம்பாவைப் பிரசங்கங்களும் ஏனைய நாட்களில் பகவத் விஜயம் சிவஞான போதம் உபன்னியாசங்களும் செய்யப்படுவதைக் கண்டால் யார்தான் சமய வாசனை குறைந்து வருகிறது என்று கூறமுடியும். ஆனால் இச்சபைகளுக்குச் சிறிது சென்று பாருங்கள். சொன்னதையே சொல்லும் பேச்சுக்களும் பேசினவரே பேசும் பேச்சுக்களும் கேட்டவரே கேட்கும் சபையாருமாகச் சமயத்தைப் பெருக்கி வருமா எனச் சந்தேகம் பிறக்கும். சமயவாசனை இல்லாத சேரிகளிலேயும் குப்பங்களிலேயும் சமயப் பிரசங்கம் நடை

பெறுகின்றது. ஏனைய சமயத்தார்களின் பேச்சுக்களை
அங்கு நிகழ்வதை அறியலாம். ஆகவே வெளித்தோற்றத்
திற்கு மிகுதியாகச் சமயம் விளம்பரப்பட்டு வருகின்றதே
ஒழிய உண்மைப்பீடம் இந்து சமயத்திற்கு இல்லை எனலாம்.
இத்தனை விளம்பரங்களும் சிலருடைய ஊதியத்திற்கே அநு
கூலமாக இருக்கின்றன.

மாகாணத்திலே புனிதத்தலங்களும் அவற்றிலே பெரிய
பண்டை ஆலயங்களும இருக்கின்றன. அவைகளிலே
திருவிழாக்கள் வெகு ஆடம்பரத்தில் நடைபெறுகின்றன.
முன்னோர்கள் வைத்துவிட்டுப்போய் இருக்கும் கட்டளைகளும்
அவற்றை ஆதரிக்கும் சொத்துக்களும் அபரிமிதமாக இருக்
கின்றன. இவைகளால் நூதன முறைகளில் ஆடல், பாடல்,
திருவுலா தெப்பம் முதலியவைகள் நடைபெறுகின்றன.
பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று மகிழ்வதன்றி காணிக்
கைகளும் தருகிறார்கள். சில புகழ்பெற்ற தலங்களில் அபி
ஷேகம் செய்தல், காவடி எடுத்தல், தலைமுடி வாங்குதல்
முதலிய காரியங்களைச் செய்யப் பல்லாயிரக்கணக்கான மக்கள்
போவதுண்டு. இவர்கள் செய்வது தங்கள் கோரிக்கைகளின்
பொருட்டா, சமயஞானம் அடைவதற்கா, என்பதை
ஆராயுங்கள்.

நாட்டில் மிகப்பெரிய மடங்கள் சிலவும் சிறிய மடங்கள்
பலவும் நிறைந்திருக்கின்றன. சமய போதனைக்காக ஏற்பட்ட
தலைவர்களும் பிரசாரம் செய்யத் தம்பிரான்களாகிய சீடர்களும்
இருக்கிறார்கள். இம்மடங்கள் எக்காலமும் யாதொரு கவலையும்
இன்றி உண்ண உணவும் உறங்க அமளியும் உறைய பளிங்கு
மண்டபங்களும் கொண்டிருக்கின்றன. இம்மடங்களில் சில
வற்றை நீக்கிப் பெரும்பான்மையானவை சமயப்பிரசாரம் செய்
கின்றனவா? ஆன்மாவிற்கன்றி ஏழை உடல்களுக்கும்
சிகிச்சை தருகின்றனவா? வழக்கு விவகாரங்களுக்கு இவை
கள் உறைவிடங்கள் ஆகி இருக்கின்றன அன்றோ? ஆகவே
இவைகளில் சமயஞானம எங்கே இருக்கின்றது?

இனி நாட்டுப்புறத்துச் சிற்றூர்களுக்குப் போகலாம்.
அங்கே பகல் முழுதும் தோட்டங்களில் வேலைசெய்து இரவில்
வீட்டில் ஆயாசத்தோடு படுத்துறங்கும் குடியானவனிடம்



படிப்போ சமயமோ இருகின்றனவா? சனிக்கிழமைகளில்
நாமம் போடுவதும் திங்களில் திருநீறு இடுவதையும் தவிர
அவனுக்கு வேறு சமயஞானம் தெரியாது. வீட்டில் அம்மை
போட்டுவிட்டாலும் கச்சுச்சுரம் கண்டாலும் மாரியம்மனுக்கு
பூஜைபோட்டுக் கிடா வெட்டி உண்பதைத் தவிர வேறு சமயம்
அவனுக்குத் தெரியாது. கிறிஸ்து நண்பர்களைப்போல துன்பம்
நேரிட்ட காலத்தில் அவர்கள் வீடுகளுக்குச் சென்று பிரார்த்
தனைசெய்து ஆறுதல் சொல்லும் உபதேசியார்கள் நமது சமயங்
களில் இருக்கின்றனரா? கோயில்களிலே பணத்தை வாங்கிக்
கொண்டு மக்களுக்குப் புரியாத சில சொற்களை உச்சரித்து
விட்டு மணி ஆட்டுகிற அறிவிலிகளாகிய அர்ச்சகர்கள் தான்
பெரும்பான்மையாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமயப்
பணியாளர்கள் சமய நிலையங்களுக்கு வீண் பளுவுகளேயன்றி
ஊழியர்கள் அல்ல. ஆகவே நகரங்கள் முதல்கொண்டு நாட்டுப்
புறங்கள் வரை சமய ஈடுபாடுமக்களில் மிகக்குறைவு என்றே
கூறவேண்டும்.

இதுவரை மேல் நோக்காக ஆராய்ந்தோம். இனி அடிப்
படையான ஆராய்ச்சி ஒன்றில் இறங்குவோம். ஒரு நாட்
டினுடைய உண்மையான கொள்கையை வெளியிடுவதும்
புதிதான கொள்கையை உட்புகுத்துவதும் அந்நாட்டு எழுத்
தாளர்களுடைய முயற்சியேயாம். உலகில் உள்ள பெரும்
புரட்சிகளும் அந்நந்நாட்டின் எழுத்தாளர்களாலே உண்டாக்
கப்பட்டன. நாட்டின் பெருமைகளுக்கும் அவர்களே காரணம்
என்க. இந்த உலக விதிக்கு நமது நாடு ஒரு விலக்கு அல்ல.
நமது நாட்டினுடைய எண்ண நோக்கையும் உண்மையாக
அறியவேண்டும் என்றால் இங்கே இருக்கும் எழுத்தாளர்
களுடைய போக்கை அறிந்தால் தெரியவரும். அந்த முறை
யில் நாம் ஆராய்வோமாக.

எழுததாளர்கள் இருவகைப்படுவர். நூல் எழுதுபவர்கள்
பத்திரிகைகளை வெளியிடுபவர் எனப் பிரிக்கப்படுபவர். தென்
இந்தியாவில் இந்த ஆண்டில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதங்
களில் வெளியிட்ட நூல்களை ஆராய்வோமாக. அம்மூன்று
மாதங்களில் செய்தித் தாள்கள் எத்தனை நூல்கள் எத்தனை
எனக் கணக்கிட்டு அவைகளில் சமய நூல்கள் எத்தனை அச்

சமய நூல்களிலும் சைவ நூல்கள் எத்தனை எனக் கணக்
கிட்டால் நாம் உண்மையில் சமயத்தில் போதிய அளவு ஈடு
பட்டிருக்கிறோமா என்று தெளிவாக அறியலாம்.

இந்த மாகாணத்தில் செய்தித்தாள்கள் 169 ல் மாணவர்
களுக்கு என்று ஏற்பட்ட 15 போக, மற்ற தாள்கள் 154 ல்
ஆங்கிலம் 46, தமிழ் 53 தெலுங்கு 29, கலப்பு மொழிகள் 19
ஏனையவை ஒன்றிரண்டே. இவைகளிலே சமயச் சார்பான
பத்திரிகைகள் 59 ல் ஆங்கிலத்தில் 29, தமிழில் 16, தெலுங்
கில் 7. கலப்பு மொழிகளில் 13, இந்த 59 பத்திரிகைகளில்
கிறிஸ்தவம் 36, முகம்மதியம் 1, ஹிந்து 19, சைவம் 3. இக்
கணக்குப்படி சைவம் 20 ல் ஒரு பங்குதான் உண்டு. இனி
பத்திரிகைப் பிரதிகளைக் கணக்கிட்டாலும் இதே முடிவு
தான் வரும். இவ்வகையிலும் சைவம் 20 ல் ஒரு பங்குதான்
ஆகிறது. நமது மாகாணத்தின் ஜனத்தொகை ஏறக்குறைய
500 லட்சம். இவர்களில் இந்துக்கள் 430 லட்சம், கிறிஸ்தவர்
20 லட்சம். முஸ்லிம்கள் 40 லட்சம். இவர்களுக்கு முறையே
19, 36, 1 வீதம் தாள்கள் ஏற்படுகின்றன. ஆகவே இந்துக்
களுக்கு எத்தனைக் குறைவான சமயப்பத்திரிகைகள் உண்டு.
என அறிக. சைவர்களோ 2/3. இந்துக்கள் என்று கணக்
கிட்டால் 290 லட்சம் ஆவர். அவர்களுக்கோ 3 தாள் தான்
உண்டு. ஆகவே சைவ மேம்பாடு எங்கே?

மேலும், சமயச் சார்பில்லாத் தமிழ்ப் பத்திரிகைகள்
செல்வாக்கு அடியிற்கண்ட புள்ளிகளால் அறியப்படுவன :

| | |
|---|---|
| ஆனந்த விகடன் | 50000 |
| கல்கி | :5000 |
| காவேரி | ᘓ000 |
| பேசும்படம் | 10000 |
| சுதேசமித்திரன் | 14000 |

சைவ சித்தாந்தமோ 1000 தான். சமயத்திற்கும் சமயச் சார்பிற்கும் உள்ள தாரதம்மியம் காண்க. விவரிக்கவேண்டாம்

இனி இந்த மூன்று மாதங்களில் வெளிவந்த நூல்களைப்
பற்றி நோக்கலாம். வெளிவந்த மொத்தம் நூல்கள் 581 ல்
மாணவர்களுக்கென்று ஏற்பட்ட 143 போக மற்றய நூல்கள்
438. இவைகளில் ஆங்கிலம் 69, தமிழ் 186, தெலுங்கு 75,



மலையாளம் 37, கன்னடம் 12, கலப்பு மொழிகள் 42. இதில்
தமிழ் மிகத் தாழ்ந்திருப்பதைக் காணவேண்டும். மொத்த நூல்
கள் 581 ல் சமயநூல்கள் 118. அதாவது 5 ல் ஒரு பங்கு.
இவ்வகளில் கிறிஸ்தவர் 41, முஸ்லிம் 11, இந்து 48, சைவம்
6. ஆகவே சைவம் 20 ல்ஒரு பங்குகூட இல்லை. ஜனத்தொகை
ஒத்திட்டுப் பாருங்கள். கிறிஸ்தவர் ஆர்வத்தில் ஒரு சிறு
பின்ன பாகமும் சைவத்திற்கு இல்லை. பிரதிகளை ஆய்ந்தால்
110000 பிரதிகளில் கிறிஸ்து 41000, முஸ்லிம் 74000 ஹிந்து
45000 சைவம் 6000. இந்தப் புள்ளிகளின் விபரீதமும்
காண்க. ஆகவே உண்மையில் சைவ நூல்கள் எத்தனைக்
குறைவாக வெளியிடப்படுகின்றன. கூறவும் வேண்டுமா?
நாட்டுப்புறம் நகரப்புறம் இவைகளில் உள்ள பாடசாலைகளில்
சமயப்படிப்பு உண்டா? தமிழ் ஆசிரியர்கள் எத்தனைச் சமய
நம்பிக்கை அற்றவர்கள் ஆகி உலோகாதயத்தைப் போதிக்
கிறார்கள். இவ்விதமாக நாடு சென்றால் சமயம் நாட்டில்
மிகுதியாக ஊன்றியிருக்கிறது என்று சொல்லமுடியுமா?
உண்மையில் சமயப்பிரசாரம் அதிகரிக்கவேண்டும். அப்போது
தான் நாடு நல்ல நிலைமைக்குவரும் என்க.

---

## 2. புகை நுகரல்

### குறட்பா

மு. நா.

புரையார் புகையிழுப்பின் போதருங் கேடென்?
நுரையீரல் நொந்து கெடும்.

உமிழ்நீரும் வற்று முணவுஞ் செரியா
உமிழ்ந்திழுக்கும் பேதையார் கண்.

நண்ணரிய செவ்விதழ்கள் நஞ்சாய்க் கறுகிடும்
பண்பின்றி யூதுவார் பால்.

பெரியோரைக் கண்ணுற்றுப் பின்னுறிஞ்சும் பேதைமை
எஞ்ஞான்றுந் தீமை தரும்.

புகையொடு வாயிலை புன்பொடிக்குங் கீழார்
நகைக்கப் படுவார் நிலத்து. ரு

புகைநுகரும் புல்லற்பாற் செல்லவும் அச்சம்
புகைநாறும் புன்மையி னான். சா

“உம்பரான் தோற்றும்” எனப்புகல்வார் பொய்ச்சொல்
எம்மனோர் ஏற்ப தில. எ

“புகையூதல் தீதெ”ன்றே யூதுவார்ப்போற்றார்
பகைவென்ற காட்சி யவர். அ

குதலையரை மங்கையரைக் கட்டியன்பின் முத்தமிடற்
கொவ்வாவே யூதுவார் வாய். கூ

பொறிவாயி லைந்தவித்தான் புல்லியே கேளான்
உறிஞ்சுவார் வாயில் உரை. க0

“மெய்கண்டான்”

ஊதல் - முதலியன புகைபிடித்தலைக் குறிப்பன. உறிஞ்சல்-புகைநுகர்தல், பொடியுறிஞ்சல் இரண்டையுங் குறிக்கும்.

(ரு) வாயிலை - வாயினால் மெல்லும் புகையிலையாம். கீழார் அப்புகையிலை முதலியவற்றிற்கு அடிமைப்பட்டுள்ளார்.

(எ) “கஞ்சா” முதலியன குடித்தால் இறைவன் உருவம் தோற்றுமென்பார் பொய்யுரையை மறுத்தது. (க0) உரை-புகழ்; எப்படியொழுகினுமென்ன என்று எதையும் எளிதில் வனைஞ் செய்வாரை நோக்கிக் கூறப்பட்டனவல்ல இக்குறட்பாக்கள். பயனற்ற செயல்களைத் தவிர்ந்து பயனுள்ள செயல்களைச் செய்ய வேண்டும் என்று ஆர்வம் உடையாரை நோக்கிக் கூறப்பட்டன.

## குறட்பாக்களின் கருத்து

க. முதல் மூன்று குறள்களான், தன்னலங் கருதியாவது புகைபிழுப்பார் அதனை விடற்பாலரென்பது கூறப்பட்டது.

முதற்குறளான் அவர் ஆயுள் குறையுமென்பது உணர்த்தப்பட்டது.

இரண்டாங்குறளால் செரியாமை யுண்டாகும் என்பது. மூன்றாவது உதடுகளின் இயற்கையெழில் கெடும் என்பது.



ச, ரு, சா குறள்களான் புகை உறிஞ்சல், புகையிலை தின்னல், பொடிபோடல் முதலியனவெல்லாம் பெரியோரான் இகழப்படுமென்றும், அருவருக்கப்படுமென்பதும் தொகுத்துரைக்கப்பட்டன.

எ - ம் குறள் கஞ்சா, ஊக்கா முதலிய புகை பிடித்தால் கடவுளர் உருவங்கள் தோற்றும் என்னும் பொய்ம்மையை மறுத்தது.

அ-ம் குறள் தீதென்று கண்டும் புகையூதுவாரை இடித்துரைக்கின்றது.

கூ, க0 குறள்களால், வாய்நாறுதலான், அன்னார்தம் குழந்தைகளாலும், மனைவியாலும் அருவருக்கப்படுவராதலின் இம்மையின்பமும், அவர் இறைவனை நோக்கிக் கூறுகின்ற புகழ் தூய வாயினின்றும் வெளிப்படாமையால் இறைவன் அருளிக் கேட்காமையின் மறுமையின்பமும் இழப்பர் என்பதும் கூறப்பட்டன. எம்மோரால் ஒழுக்கத்திலும் ஆசாரத்திலும் இழிந்தோராய்க் கருதப்படும் வெள்ளையர் முதலானோரும் “தூயவாயினால் இறைவன் புகழ்பாடுவோம்” என்று கூறுதல் கருத்திற் பதிக்கற்பாலது.

[இங்கே வெளியிட்டிருக்கும் 10 குறட்பாக்களை ஆசிரியர் அனுப்பியபோது சித்தாந்தத்திற்கும் இந்தப்பாக்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று எண்ணி அவற்றை வெளியிட வேண்டாம் என்று நிறுத்தப்பட்டன. பிறகு ஒருநாள் ஒரு காரியத்திற்காகத்தெருவில் போகும்போது ஒரு ஆலய நந்தவனத்தில் காவியணிந்த ஒருவர் கிணற்றிலிருந்து பூஞ்செடிகளுக்கு நீர் இறைத்துக்கொண்டிருந்ததைக் கண்டேன். பெரியாழ்வார் திருத்தொண்டு செய்துகொண்டிருந்த அவ்வாலயத் திருப்பணியாளர் வாயில் சிறு சுருட்டை வைத்துக்கொண்டு குடித்துக்கொண்டே நீர் இறைத்துக்கொண்டிருந்தார். அந்தக் கலிகாலக் கோலத்தைக் கண்டபிறகு இந்த குறட்பாக்களை வெளியிடல் நன்று என்று துணிந்தேன்.—

தாள் ஆசிரியர்]

5. கலைப்பகுதி

# திருப்பனந்தாள் திரு அஜனீச்சரத்துக் கல்வெட்டுக்களைப்பற்றிய செய்திகள்

(வித்துவான்-வை. சுந்தரேச வாண்டையர், திருவையாறு.)

## மாடக்கோயிலைப்பற்றிய குறிப்பு :

மாடக்கோயில் என்பது யானை ஏறாத வண்ணம் பூமி
மட்டத்துக்குமேல், மிகவும் உயரமாகப் படிக்கட்டுகள்
அமைத்துக் கட்டப்பெற்றதாகும். மாடக்கோயில் எனினும்
பெருங்கோயில் எனினும் ஒக்கும். நன்னிலத்துப் பெருங்
கோயில், குடவாயில் பெருங்கோயில், வைகல் மாடக்கோயில்,
தண்டலைச்சேரி மாடக்கோயில் முதலியவைகளைக் காண்க.

இத்தகைய மாடக்கோயில்கள் கோச் செங்கணான்
என்னும் சோழ மன்னனால் கட்டப்பெற்றனவாகும். சிவ
நெறிக்குரவராகிய திருநாவுக்கரசுப் பெருந்தகையார் காலத்தில்
இப்பெருங்கோயில்கள் எழுபத்தெட்டு இருந்தன. இச்செய்தி
" பெருக்காறு சடைக்கணிந்த பெருமான்சேரும் பெருங்
கோயில் எழுபதினோடு எட்டும்" என்னும் அவரது தேவாரப்
பகுதியால் விளங்கும். ஆனால் இத்தகைய கோயில்கள் திரு
மங்கை ஆழ்வார்காலத்தில் எழுபதுதான் இருந்தன. இஃது
எண்டோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து உலக
மாண்ட திருக்குலத்து வளச்சோழன்" என்னும் அவரது
திரு நறையூர்ப் பதிகச் சொற்றொடரால் அறியக்கிடக்
கின்றது. எனவே திருமங்கை மன்னர் காலத்தில் எட்டு
மாடக்கோயில்கள் அழிந்து போயிருத்தல் வேண்டும்.

இம்மாடக் கோயிலின் விமானம் யானை தூங்கும்
நிலையில் கட்டப் பெற்றிருக்குமாயின் அதனைத் தூங்கானை
மாடக்கோயில் என்பர் உதாரணமாகப் பெண்ணாகடம்
திருக்கோயிலைக் காண்க.



படிக்கட்டு இல்லாமல் விமானம் மாத்திரம் யானையின்
பிற்பகுதி போன்று கட்டப்பெற்றிருக்கும் சில கோயில்கள்
உண்டு. அவைகளுக்குக் கஜப்பிரஷ்ட விமானக்கோயில்கள்
என்று பெயர். அத்தகைய கோயில்கள் பல்லவ வேந்தனாகிய
அபராஜிதவர்மனால் கட்டப் பெற்றனவாகும். (See Palla-
vas Architecture). மேற்கோளாக இன்னம்பர்த் திருக்
கோயிலைக் காண்க.

## அஜனீச்சரத்தின் மாடக்கோயில் அமைப்பு, அதன் தொன்மை, கல்வெட்டு முதலியன

மேற்கூறப்பெற்ற தூங்கானை மாடக்கோயில் அமைப்பில்
திருப்பனந்தாளில் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமாயுள்ள
ஒரு கோயில் இருக்கின்றது. அதை இக்காலம் ஊருடையப்பர்
கோயில் என்று மக்கள் வழங்கி வருகின்றனர். அது முற்றி
லும் செங்கல் திருப்பணியால் ஆகியது. மிகப்பழங்காலத்துக்
கோயில். ஆகையால் ஆதீனகர்த்தர் (25-ஆம் பட்டத்து
மகா சந்நிதானம் அவர்கள்) திருப்பணிசெய்து
விற்றிருக்கும் கருப்ப இல்லும் அதன் விமானமும்
புரந்து வருகின்றனர். வருகின்றன. அர்த்த மண்டபம்,
பண்டு போலவே இருந்து வருகின்றன. அர்த்த மண்டபம்,
திருக்காமக்கோட்டம், சுற்று மதில் இவைகள் எல்லாம் புதிய
திருப்பணிகளை உடையன. அர்த்த மண்டபத்து வாசலில்
இருந்த கல் அறுகால்கள் பண்டுபோலவே இன்றும் அதனகன்
இடத்தில் வைத்துக் கட்டப்பெற்றுள்ளன. அவ்வறுகால்களில்
கி - பி - ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்த
இராஜகேஸரிவர்மன் முதலான சோழமன்னர்கள் கல்வெட்டு
கள் மூன்று இருக்கின்றன. அவைகளுள் இக்கோயிலின்
பெயர் அஜனீச்சரம் என்றும், சிவபெருமானின் திருப்பெயர்
அஜனீடமுடைய மாகாதேவர் - என்றும் குறிக்கப்பெற்றுள்
ளன. அஜன் என்றால் பிரம்மா என்றும், ஈச்சரம் என்றால்
கோயில் என்றும் பெயர். எனவே பிரமனால் பூசிக்கப்பெற்ற
கோயில் என்பது இத்தொடரின் திரண்ட பொருளாகும்.

இவ்வஜனீச்சரக்கோயில் கல்வெட்டுகள் அஜனீடமுடைய
மகாதேவர்க்குத் திருமஞ்சனத்துக்குக் கிணறு தோண்டுவதன்

பொருட்டு நிலம் தானம் செய்யப்பட்டதையும் நுந்தா விளக்கு
களுக்கு நிபந்தங்கள் அளிக்கப்பெற்ற செய்திகளையும் அறிவிக்
கின்றன. இக்கோயிலைப்பற்றி, திருப்பனந்தாள் திருத்தாடகை
ஈச்சரத்தில் இரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன.
மடைப்பள்ளியில் இருக்கும் குலோத்துங்க சோழ தேவரது ஒன்று
13-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டாகும். மற்றொன்று இரண்டாம்
பிரகாரத்திலுள்ள (East Second Prakara) திரிபுவனச்
சக்கரவர்த்திகள் இராஜராஜ தேவரின் மூன்றும் ஆண்டுக் கல்
வெட்டாகும். இவைகள் முறையே அஜனிடமுடையே மகா
தேவர்க்கு நுந்தா விளக்கு, நாடோறும் வழிபாட்டிற்கு நிலம்
இவைகள் அளிக்கப்பெற்ற செய்தியை உணர்த்துகின்றன.

---

## 2. ஏழில்

[சு. முருகப்பிள்ளை]

இவ்வாண்டு 'சித்தாந்தம்' 8, 9, இதழ்களில் 'ஏழில்'
என்ற சொல் பற்றிப் பெரியார் இருவர் தத்தங் கருத்தினை
வெளியிட்டுள்ளனர். அச்சொல் மணிவாசகம் 162 (7-8) வது
பாட்டில் வந்துள்ளது. அது பண்டைக் காலத்தில் வழங்கி
வந்த இசைக் கருவிகளில் ஒன்றின் பெயராக இருந்து பின்
னர் வழக்காற்று மறைந்திருக்கலாமெனவும், அது இக்
காலத்து இந்நாட்டில் வழங்கி வருகின்ற 'நாக சுரம்' என்ற
இக்கருவியின் பழைய தமிழ்ப் பெயரெனவும், 8வது
இதழிலும், அது நக்கீரர் காலத்து உள்ள ஓர் நரம்புக் கருவி
யாக இருந்திருக்கக் கூடுமோ என ஐயுற்று 9வது இதழிலும்
அப்பெரியார் இருவரும் விளக்கிப் போந்தனர்.

'ஏழில்' என்ற சொல் இசையோடு தொடர்புடையது
என்பது மறுக்கப்படாததே. ஆயினும், அதனால் குறிக்கப்
படும் பொருள் யாதென்பதே ஆராய்ச்சிக்குரியது.

'ஏழில்' என்ற சொல் பற்றி திவாகரம், நிகண்டு, அக
ராதிகளில் என்ன பொருள் காணப்படுகின்றது எனில்:—

ஏழில்—இசை (இன்னிசை)—எதுகை அகராதி (By
P. R. அப்பாய் செட்டியார்—1938)



'ஏழில்' என்ற இலக்கியம், மணிவாசகம், திருவெழுக்
கூற்றிருக்கை (நக்கீரர்) முதலிய நூல்களில் காணப்படுவ
தாயினும், அது 'எழால்' என்ற சொல்லின் மரூஉவாகவோ
அல்லது அதற்கு மாற்று மொழியாகவோ வழங்கப்பட்டு வரு
கின்றதென்பது பின்வரும் காரணங்களால் பெறப்படும்.

1. திவாகரம் முதலியவற்றில் கூறும் பொருள்

(அ) நரம்பின் ஓசையின் பெயர்:—எழாலே, தந்திரி:
நரம்பின் ஓசை ஆக இரண்டு. (சேந்தன் திவாகரம்—10வது.
ஒலி பற்றிய பெயர்த் தொகுதி)

(ஆ) * * * யாழின், உறையுமின்னிசை 'எழாலே'
ஓதிய நூலின் பண்பாம். (மண்டலர் சூ. நீ-10-41)

(இ) எழால்—மிடற்றோசை, யாழெழும் ஓசை, யாழின்
னிசை, யாழ் (அகராதி - By வெ. நமசிவாய முதலியார்
1911)

எனவே 'எழால்' என்ற சொல் முதலாவதாக இசை
யோசை எனப்பட்டு, மிடற்றோசை, யாழோசைக்காய், பின்
னர் 'ஏழில்' என மருவி காரண இடுகுறிப்பெயராக வழங்கி
வருகின்றது என்பது பொருத்தமாகும்.

2. கனலுதல் உடையது 'கானல்' எனப்படுவது போல,
எழல் (எழுதல், கிளம்புதல்) உடையது 'எழால்' என்ற
தொழிற்பெயர் முதனிலை திரிந்து ஏழ் என்றாய் இல் விகுதி
பெற்று காரண இடுகுறிப்பெயராகி ஏழில் என நிற்கின்றது.

எழில், குழால், ஓரால் என்பன அதனோடொத்த மாற்
றுதாரணங்கள்.

எழு + ஆல் = எழால் (ஆல், தொழிற்பெயர் விகுதி)
ஏழ் + இல் = ஏழில் (இல், தொழிற்பெயர் விகுதி)
எழு + இல் = எழில் = அழகு (எழுச்சி) என்றாற் போல.
எழு, ஏழ் என்பன ஒரு பொருளன.

ஆகவே 'எழால்' என்பதும் 'ஏழில்' என்பதும் ஒரு
பொருளை உணர்த்தும் என்பது பெறப்பட்டது.

3. இனி, 'எழால்' என்ற சொல் மேற்படி மணிவாசகம்
162-ல் 'ஏழில்' என கூறப்பட்டது என்பதற்கு யாப்பிலக்
கணம் பற்றியும் இயைபு கூற இடமுண்டு. என்னனெனில்:—

1. அவ்விரண்டு சொற்களின் மாத்திரை ஒற்றுமை. 2. அப்
பாட்டின் அடிதோறும் முதல் மொழியின் முதலிரண்டு
எழுத்துக்களும் ஒத்து நடை பெறுதலால் எதுகைத்தொடை
யாதல். (தொல். சூ. 1350)

ஆகவே 'வழில்' என்ற சொல் மேற் காட்டியவாற்றால்
'எழால்' என்றதன் மரூஉ அல்லது மாற்றுமொழி யென்
பதும், அது யாழோசை, மக்கள் மிடற்றோசைகளை உணர்த்
திற்றென்பதுந் தெளிவு.

4. அன்றியும், வேறு மோர் சிறந்த காரணமுங்
கூறலாம். அதாவது, மணிவாசகம், திருப்பள்ளி யெழுச்சி
(20—3)ல் 'கூவின பூங்குயில் கூவின கோழி குருகுக ளியம்
பின வியம்பின சங்கம்' என அருளிச் செய்த ஆசிரியர்,
அதனை அடுத்து 4 வது பாட்டில் 'இன்னிசை வீணையர்
யாழினர் ஒரு பால் இருக்கொடு தோத்திரமியம் பினரொரு
பால்' என அருளிச் செய்தமையினாலும், மணிவாசகம் மேற்
படி 162 வது பாட்டில் வந்துள்ள 'வழில்' என்ற சொல்,
மேற்கூறிய அவ்விருவகை இசைகளையும் உளத்திற் கொண்டு
ஆசிரியரால் வைக்கப்பட்டதென்பது வற்புறுத்தப்படுகின்றது.

ஆகவே, மேற்கூறியாங்கு பொருள், இலக்கணம், யாப்பு,
ஆசிரியர் உள்ளக்கிடை என்பவற்றால் 'வழில்' என மணி
வாசகம் 162 ல் வந்துள்ள சொல் மக்கள் மிடற்றோசையை
யும், யாழெழும் இசையையும் உணர்த்திற்றென்பது நன்கு
புலனாகிறது.

---

## இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை

7—10—47 செவ்வாய் மாலை 7 மணிக்குத் திருவாளர். ச. சச்சி
தானந்தம் பிள்ளை அவர்களால் வார வழிபாடு ஆரம்பித்துவைக்கப்பட்
டது. வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை இரவு 7 முதல் 8 மணிவரை
வாரவழிபாடு நடைபெறுகிறது.

24—10—47 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருபுகழ்
மணி T. M. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களால் திருப்புகழ் வகுப்பு
தொடங்கப்பட்டது. வாரந்தோறும் திங்கள் வியாழக்கிழமைகளில் இரவு
7 மணிமுதல் 8 மணிவரை திருவாளர் - விசாகநம்பி அவர்களால்
திருப்புகழ் பாடம் நடத்தப்படுகிறது.

6. கவிப்பகுதி

# எண்ணமும் தொழிலும்

[அழகு மதியன்]

ஒரு நாட்டாரின் எண்ணப் போக்கை அந்நாட்டுப் புலவர்களே நன்றாக வெளியிடுவார்கள். அது மாத்திரம் அன்றி ஒரு நாட்டின் எண்ணப் போக்கைத் திருத்தி அமைப்பதும் அந்நாட்டு எழுத்தாளர்களே என்று அறிய வேண்டும். கிரேக்க நாட்டாரின் எண்ணங்களை நன்கு விளக்கினவர்கள் சாக்ரடிசு, ப்ளாடோ, டிமஸ்தனீசு முதலிய எழுத்தாளர்களே. எலிஜபெத்து காலத்து ஆங்கிலர்களுடைய எண்ணப்போக்கை விளக்கி அமைத்தவர்கள் ஷேக்ஸ்பியர், மில்டன் முதலியோர்களே. பிரான்சிய புரட்சிக் காலத்தின் நோக்கங்களை ஒழுங்குபடுத்தியவர்கள் ராபன்ஸ்பியர், ரூஸோ முதலிய எழுத்தாளர்களே. ருஷியாவை தற்போதிய நிலைக்குக் கொண்டுவந்த பெரியார் டால்ஸ்டாய் என்ற அறிஞரே. இவ்வாறே உலக சரித்திரத்தில் எங்கும் காணலாம்.

தென்னாட்டிலும் சரித்திரத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் இந்த இயற்கை விதியையே காணலாம். பண்டைக் காலத்துத் தமிழர் மேன்மைக்குச் சங்கப்புலவர்களே காரணம். அக்காலத்து மன்னர்களுடைய வள்ளல் தன்மை, வீரம், பெண் மக்களுடைய கற்புத் திறமை, அஞ்சா நெஞ்சம் இவைகளுக்கு எல்லாம் சங்கப் புலவர்களே அடிகோலியிருக்க வேண்டும். காலத்தினுடைய போக்கை எடுத்துக் காட்டியதோடு மக்களுடைய நெஞ்சைப்பண்படுத்தித் தகுந்த வழியில் செலுத்தியவர்கள் புலவர்களே.

திருவள்ளுவர் பெருமான் நாட்டிலே இருந்த நன்னெறியை எடுத்து விளக்கியதன்றி எல்லாரையும் நன்னெறிக்குப் புகுத்துவதற்காகவே மிகச் சிறந்த உலகநூலாகிய திருக்குறளை எழுதினார். "திருவள்ளுவர் காலத்தில் தமிழ் மக்கள் சீரழிந்திருந்தார்கள்; அவர்களை நல்வழிப்படுத்தித் திருப்புவதற்காகவே அவர் இச் சிறந்த நூலை எழுதினார்" என்று கூறுவது தமிழர்க்குச் செய்த ஒரு பெரிய அபவாதம் ஆகும். திருவள்ளுவர் தாம்

தமிழரில் கண்ட நிலை படம் பிடித்தாற் போல எழுதினர். பிறகு அது போதாது என்று கருதி இனி இருக்கத்தக்க நிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். இதுவே உலக ஆராய்ச்சி முறையில் காணும் படிப்பினை ஆகும்.

இனி புலவர் பெருமக்களுடைய நோக்கங்களை அறிய வேண்டும் என்றால் அவர்களுடைய நூல்களே ஆதாரங்களாக நமக்குக் கிடைக்கின்றன. அவர்களுடைய வாழ்க்கைப் பண்பு கள் எண்ணப் போக்குகள் முதலியவைகளை அறிய வேண்டு மாயின் அவர்களுடைய நல்லுரையை நன்கு ஆராய்ந்து உட் கிடையைத் தோண்டி எடுக்க வேண்டும். இதுதான் கல்வி செய்யும் செயல் ஆகும். நாட்டில் வழங்கும் பாட்டிக் கதை களை வைத்துக் கொண்டு புலவர்களுடைய உண்மைச் சரித் திரம் என்று வெளியிட்டால் அது கல்விக்கு அழகல்ல. உதாரணமாக ஒரு சிறு எடுத்துக் காட்டைக் கூறுவோம். திருவள்ளுவருடைய வாழ்க்கைத் தொழில் எது என்று ஒருவர் கேட்டரர். அதற்கு ஒரு மாணவன் அவர் நெசவைத் தன் தொழிலாகக் கொண்டார் என்று விடை பகர்ந்தான்.

"ஒரு தொழிலைத் தன் பிழைப்புத் தொழிலாகக் கொண்ட ஒருவர் தான் எழுதிய நூலில் அத்தொழிலைப்பற்றி அடிக்கடி எடுத்துக்காட்டுகளோ உவமைகளோ கூறி இருப்பாரா அல்லவா?" என்று மறுபடியும் கேட்டார்.

"ஆமாம். கூறுவதுதான் இயற்கை."

"திருவள்ளுவர் எத்தனைமுறை நெசவுத் தொழிலையோ அதன் கருவிகளையோ கூறியிருக்கின்றார்கள்?"

"ஓகோ, அவர் அத்தொழிலையோ அதன் கருவிகளையோ எங்கும் கூறினதாகத் தெரியவில்லையே."

"அப்படியானல் அவர் நெசவுத்தொழிலைக் கொண் டிருக்க முடியுமா?"

"ஐயமாகத்தான் தோன்றுகிறது. பின் ஏன் இந்த வரலாறு உலாவுகிறது?"

"அது இருக்கட்டும். அவர் வேறு ஒரு தொழிலைப்பற்றி மிகுதியாக உரைத்திருப்பதில்லையா?"



"ஆம், உழவுத்தொழிலைப்பற்றி. அதற்கு ஒரு தனி அதிகாரமும் வைத்திருக்கிறார்."

"ஆகவே, அவர் உழவுத்தொழிலை நன்கு ஆராய்ந்திருக்க வேண்டும் அல்லவா? அது என் அவருடைய வாழ்க்கைத் தொழிலாக இருக்கக் கூடாது?"

"ஊன்றி நோக்கினல் அதுதான் அவருடைய தொழி லாக இருக்கக் கூடும் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனல் பரம்பரைக் கதைகளை அடியோடு தள்ளிவிடலாமா?"

"அது இருக்கட்டும், பட்டினத்தார் தொழில் எதுவாக இருந்தது?"

"மரக்கல வாணிபம்."

"சரி. அது எதனல் அறியக்கிடக்கிறது?"

"அவருடைய வரலாற்று நூல்கள், புராணங்கள் முதலியவற்றல்."

"சிறிது ஆராய்ந்து பார். அவருடைய வாக்கிலேயே வருவதில்லையா?"

"ஆமாம் வருகிறது. கோயில் மும்மணிமாலை 16-ஆம் செய்யுளில் வருகின்றது 'அறிவில் ஒழுக்கமும்' என்பது அப்பாடல்."

"நன்கு உட்புகுந்து பார். ஒரு தொழில் செய்யாத புலவன் வருணிப்பது போல இருக்கிறதா, ஒரு தொழிலையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவன் எழுதின நுண்ணிய கருத்துக்களைக் கொண்டிருக்கிறதா?"

"ஆமாம், நன்றுகச் சொன்னீர்கள். மிகவும் நுண்ணிய கருத்துக்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே அவர் மரக்கல வாணிபத் தொழிலே பூண்டிருக்கவேண்டும் என்று தோன்று கிறது."

"மரக்கல வாணிபர் மரக்கலங்களின் பகுதிகளை அறிந் திருப்பார் அல்லவா? அவைகளில் எவற்றை பட்டினத்தார் கூறுகிறார். எடுத்து ஆராய்ந்து கூறு."

"கூம்பு, நெடும்பாய், முதலியன."

"மரக்கலத் தொழிலைப்பற்றிய குறிப்புக்கள் என்ன உண்டு ?"

"பலசரக்கைக் கலத்தில் ஏற்றுவது, மீகாமன் அதை பெருங்கடலில் ஓட்டுவது, அது நெடுநகர்த் துறைக்குச் செல்வது, (திசை அறிய) கோண்மீன் இவைகளைக் கண்டு பின்பற்றுவது, திசைகளைத் தாண்டுவது, இடையில் நெடுங்கல் தாக்குவது, அப்போது கூம்பு முறிந்து நெடும்பாய் கிழிப் போவது, கலம் கலங்கிக் கவிழுவது முதலியன.

"மரக்கலம் செல்லுகையில் இவ்வித ஆபத்து நேர்ந்தால் வாணிபர்கள் முதலியோர் என்ன செய்வார்களாம் ?"

"அப்போதுதான் இறைவனை நினைப்பார்கள். அம்பல வாணனை நினைத்துத் தொழுதால் அவன் அருள் என்ற கலத் தார் பூட்டி அக்கலத்தை இழுத்து அவன் திருவடியாகிய கரைக்குச் சேர்த்திவிடுவான்."

"ஆக இந்த மரக்கல வாணிபத்தை என் பட்டினத்தார் எடுத்தாண்டார் !

"இந்த உடல் வீணாக ஒரு காலத்தில் நசித்துப்போகும். அதனை நல்வழிப்படுத்தி அதன் செயலை நன்காக்குவதற்காக வாணிபத்தை உவமையாகக் கூறுகிறார்.

"இக்கூற்றில் எவை எவை ஒப்புக்களாகக் கொள்ளப் பட்டன."

"அறிவில் ஒழுக்கம், பிரிதுபடு பொய், கடும்பிணித் தொகை இடும்பை பீட்டல் இவைகள் பலசரக்குகள்; வினை — மீகாமன் கப்பல் ஓட்டுபவன்; கரு - என்பது நாடுநகர்த்துறை; புலன்கள் என்பவை கோண்மீன் தொடர்ந்து செல்லுவது வழிகாட்டும் பொருள்கள். பிறப்பு என்பது பெரிய கடல் — இது மனித வாழ்க்கை, அலைக்கும் துயர்—திரைகள்; குடும்பம் என்பது மோதும கல் அல்லது பாறை; நிறை—என்பது மரக்கலக் கூம்பு; குறையா உணர்வு என்பது நெடும் பாய் இவைகளை மரக்கலம் ஓட்ட உதவுபவைகள், இவைகள் கிழிந்து போகின்றன. மாயப்பெயர்ப்படு காயம் (உடல்) என்பது மரக்கலம். இது பாறையில் மோதி கடல் மூழ்கி இருக்கும்போது அம்பல வாணனை எண்ணித் துதித்தால் அவனு



டைய அருள் என்ற நலத்தாரால் பூட்டி கலத்தை இழுத்து தன் திருவடியாகிய நெடுங்கரையில் சேர்த்திவிடுவான்.

"ஆகவே இது மரக்கலத்தொழில் உண்டாகக் கூடிய ஒரு சம்பவம். இதனை நேரில் கண்டு அநுபவித்த பட்டினத்தார் அதனை ஒரு விரிவான எடுத்துக் காட்டிற்கு அமைத்துக் கொண்டார்கள் அல்லவா? அதினால் அவர் தொழில் மரக்கலத் தொழில் என்று தெரிவதில்லையா ?"

"ஆமாம் அவரது தொழில் மரக்கலத்தொழில் என்று நன்கு விளங்குகிறது. மேலும் வேறு பல இடங்களிலும் இத்தொழிலை எடுத்தாண்டு இருப்பதும் நினைவிற்கு வருகின்றது.

"தன் தொழிலை வாழ்வின் ஈடேற்றத்திற்குப் பயன் படுத்திய பான்மையை நன்கு உணர்வாயாக. அது தான் இதில் காணும் சிறப்பு ஆகும்."

"ஆமாம் அறிகிறேன். கடவுள் திருவருளை நாம் என்றும் மறவாதிருக்க வேண்டும் என்று அறிந்தேன்."

"இந்த எண்ணப் போக்கைக் கொண்டு திருவள்ளுவர் வாழ்க்கையைப் பற்றியும் சிறிது சிந்தித்துப்பார்" என்று சொல்லிவிட்டு ஆசிரியர் சென்றார்.

மேலே எடுத்துக்காட்டிய திருப்பாடல் "அறிவில் ஒழுக்கம்............" என்பது.

---

7. ஆராய்ச்சிப்பகுதி

# இரு பல்லவ அடியார்கள்

துடிசைகிழார்

(அக்டோபர் மாதத் தொடர்ச்சி)

ஐயடிகள் கொஞ்சகாலம் அங்கு வதிந்து, பின் புறப்பட்டு குழித்தண்டலை சென்று கடம்பன் துறைக் கோவில் சென்று வணங்கி,

"அழுகு திரிகுரம்பை ஆங்கதுவிட்டாவி
ஒழுகும் பொழுதறிய வொண்ணா—கழுகு
கழித்துண்டலையாமுன் காவிரியின் தென்பால்
குழித்தண்டலையானைக் கூறு"

என்று பாடி, சிறிதுகாலம் தங்கி, அங்கிருந்தும் புறப்பட்டு, திருவானைக்கா அடைந்து;

"குழீஇயிருந்த சுற்றம் குணங்கள் பாராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள் எல்லாம்—தழீஇயிருந்தும்
என்னானைக்காவா இதுதகா என்னாமுன்
தென்னானைக் காவடைநீ சென்று"

என்று பாடி, அங்கு சிலநாள் தொண்டு செய்துகொண்டிருந்து, பின் அங்கிருந்து புறப்பட்டு காவிரியைத் தாண்டி, அதன் தென்கரையில் உள்ள சிராப்பள்ளி சேர்ந்து, தொண்டு செய்து,

"கழிந்தது நன்னெற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்தது உடலிரா வண்ணம்—அழிந்தது
இராமலையா கொண்டுபோ என்னாமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்"

என்று பாடி, அங்கே சில நாட்கள் தங்கி இருந்து, பின் அங்கிருந்தும் புறப்பட்டு, தெற்கு நோக்கிச் சென்று திருநெடுங்களம் என்னும் தலத்தை அடைந்து,

"தொட்டெடுத்தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப்பிணமென்று பேரிட்டுக்—கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம்நினை"

என்று பாடி, அங்கிருந்தும் புறப்பட்டு வளைகுளம் என்னும் தலம் சென்று,

"இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே—நல்ல
கிளைகுளத்து நீரளவே கிற்றியே நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து"

என்று பாடி, துதித்துப் பாடி இருந்து, அங்கிருந்தும் புறப்பட்டுத் தென்னிடைவாய் சென்று,



"மாண்டுவாய் அங்காவா முன்னம் மடநெஞ்சே
வேண்டுவாயாகில் விரைந்தொல்லைப்—பாண்டவாய்
தென்னிடைவாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்துநினை"

என்று பாடி, சின்னாட்டங்கி இருந்து, அங்கிருந்தும் புறப்பட்டு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் சார்ந்து,

"கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நாவடங்கா முன்னம்—பொடியடுத்த
பாழ்க்கோட்டம் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டம் செப்பிக் கிட"

என்று பாடி, வணங்கி, அங்கிருந்தும் புறப்பட்டு, திருத்துருத்தி என்னும் தலம் சேர்ந்து,

"வஞ்சியன நுண்ணிடையார் வாட்டடங்கண்ணீர் சோரக்
குஞ்சி குறங்கின்மேற் கொண்டிருந்து—கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னாமுன் நெஞ்சே
திருத்துருத்தி யான்பாதம் சேர்"

என்று பாடி, வழிபட்டுச் சின்னாட் கழித்து, அங்கிருந்தும் புறப்பட்டு, திரு ஆரூரை அடைந்து, அரனை வணங்கி,

"காளை வடிவொழிந்து கையறவோ டையுறவாய்
நாளுமணுகி நலியாமுன்—பாளை
அவிழ்கமுகம் பூஞ்சோலை ஆரூரற்கானாய்
கவிழ்கமுகம் கூம்புகவென் கை"

என்று பாடி, திருத்தொண்டு செய்துகொண்டு சின்னாள் இருந்துபின் அங்கிருந்தும் புறப்பட்டு, திருமயானம் என்னும் தலம் சேர்ந்து,

"உய்யும் மருந்திதனை உண்மினென உற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்கால்—ஐய
எழுந்திருமி யான்வேண்டேன் என்னாமுன் நெஞ்சே
செழுந்திருமயானமே சேர்"

என்று பாடி, வணங்கி, தொண்டுபுரிந்து வதிந்து வந்தார். ஐயடிகள் தில்லையைவிட்டுப் புறப்பட்டபின் பல தலங்களுக்குச் சென்று வெண்பாப் பாடி, திருப்பணிகள் ஏற்றன செய்தார் என்பது.

" அவ்வகையால் அருள்பெற்றங்கமர்ந்து சிலநாள் வைகி
இவ்வுலகில் தம்பெருமான் கோயில்க ளெலாமெய்தி
செவ்விய அன்பொடு பணிந்து திருப்பணிஎற்றன செய்தே
எவ்வுலகும் புகழ்ந்தேத்தும் இன்றமிழ் வெண்பாமொழிந்தார் "

என்று சேக்கிழார் கூறவதால் அறியலாம். இன்னும்,

" இந்நெறியால் அரனடியார் இன்பமுற இசைந்தபணி
பன்னெடுநாள் ஆற்றியபின் பரமர் திருவடி நிழற்கீழ்
மன்னுசிவ போகத்து வழியன்பர் மழுங்கணைந்தார்
கன்னிமதில்சூழ் காஞ்சிக்காடவர் ஐயடிகளார் "

என்று சேக்கிழார் கூறுவதால் இவர் சிவாலயப்பணிகள் பல
நான் செய்தார் என்றும், அரனடியார் இன்பமுற மாகேசுர
பூசையும் செய்துவந்தார் என்று கொள்ளக்கிடக்கின்றது.

இவர் கடைசியாக எத்தலத்திலிருந்து சிவலோகம்
அடைந்தார் என்பது தெளிவாக விளங்கவில்லை. ஆனால்
அவர் காஞ்சிக்கு மறுபடி போகவில்லை. என்பது உறுதி
ஆதலின், அவர் கடைசியாக வணங்கிய திருமயானமாய்
இருக்கலாம் என்பது ஊகிக்கத்தக்கது. இவர் அத்தலத்திற்
பாடிய வெண்பாவும் அம்மாதிரி ஊகிக்க இடம் தருகின்றது.

இவர் பாடிய வெண்பாக்கள் எவ்வுலகத்தாரும் புகழ்ந்து
ஏத்தப்படும் பெருமை வாய்ந்தன என்று சேக்கிழாரே
கூறுகின்றார் ' வெண்பாவிற் புகழ்ந்து ' என்று பிற்காலத்
தார் கூறுவர். ஆனால் இவருடைய பாக்கள் அப்பழமொழியை
' வெண்பாவில் ஐயடிகள் ' என்று மாற்றியமைக்கும் வண்ணம்
உள்ளன. இவர் பாக்கள் சைவ சித்தாந்த நுண்பொருள்
பொதிந்ததாக உள்ளன. அதனாலன்றோ, கி. பி. 10-ம் நூற்
றாண்டில் இருந்த நம்பி யாண்டார் நம்பிகள் (956—1012
A. D.) இவர் வெண்பாக்களை பதினோராம் திருமுறையில்
சேர்த்துள்ளார். இவர் வெண்பாக்கள் உலகத்தாருக்கு உலகம்
நிலையாமை, அரசு நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை
நிலையாமை, உடல் நிலைமையாமை முதலியவைகளைத் தெளி
வாகப் போதிக்கின்றன.

பட்டினத்துப் பிள்ளையைப்போல் யாவரும் துறத்தல்
அரிது என்று கூறுவது வழக்கம். ஆனால் ஐயடிகளுடைய
துறவோ அதைவிடப் பன்மடங்கு அரிதானது.



எப்படி எனின், ஐயடிகள் வடமொழி தென்மொழி இரு
மொழிகளிலும் வல்லவர் ; புலவர் ; பல கலைவல்லவர் ; வீரர் ;
பிறமன்னவர்கள் பணிசெய்ய ஆட்சிபுரிந்தவர் ; அறநெறியைத்
தன் நாட்டிலும், பிறர் நாடுகளிலும் தழைத்தோங்கச் செய்த
வர் ; இல்லற வாழ்க்கையை இன்பம் பெருக நடத்தியவர் ;
எல்லா நலங்களும் வாய்க்கப்பெற்றவர் ; அப்படி இருந்தும்
அரசாட்சியை இன்னலென இகழ்ந்து, ஆண்டவன் அருட்
டிறமே இன்பம் என மகிழ்ந்தார். ஆதலின், ஐயடிகளைப்போல்
துறப்பது அரிதினும் அரிதே.

## காலம்

இவர் கி. பி. 650-ல் பட்டம் எய்திய காலத்து சுமார் 40
வயது இருக்கலாம். ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார்.
பின், ஆட்சியைத் தன் மகன் பரமேச்சுர வர்மனுக்குக்
கொடுத்துவிட்டுத் துறவு எய்தினர். அப்போது வயது 45.
அந்தச் சமயம் அவர் மகனுக்கு வயது 25. பின் இவர் பல
சிவதலங்கள் சென்று, திருத்தொண்டு புரிந்து, திருப்பணிகள்
பல செய்து, ' அரன் அடியார் இன்பமுற இசைந்தபணி பன்
னெடுநாள் ஆற்றியபின் பரமர் திருவடி நிழற்கீழ் அணைந்
தார் ' என்று அறிகிறோம். ஆதலின், இவர் சுமார் 75 வயது
வாழ்ந்ததாக வைத்தால் இவர் கி. பி. 610 ல் பிறந்து கி. பி.
685 வரை வாழ்ந்தவர் ஆகவேண்டும்.

இவர் காலத்தில் வாழ்ந்த அடியார்கள் :—

| | கி. பி. கி. பி. |
|---|---|
| | (634 — 650) |
| திருஞானசம்பந்தர் | (567 — 648) |
| திருநாவுக்கரசர் | |
| சிறுத்தொண்டர் என்கிற | (600 — 618) |
| பரஞ்சோதியார் | |
| | பிறப்பு முத்தி |
| | (640—670)600—670 |
| நின்ற சீர்நெடுமாறன் | |
| | ஆட்சிக்காலம் |
| | (610 — 665) |
| மங்கையர்க்கரசியார் | (605 — 675) |
| குலச்சிறையார் | |

## காடவர்கோன் கழற்சிங்க நாயனர்

### C. இராஜசிம்மன் C. நரசிங்கவர்மன் II

(ஆட்சிக்காலம் 685 A. D. 710 A. D.)

சமய ஆசாரியர் நால்வரில் கி. பி. 694 முதல் கி. பி. 712 வரை வாழ்ந்து வந்த சுந்தரமூர்த்திகள் இவரைப்பற்றித் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில்,

> " கடல்சூழ்ந்த உலகமெல்லாம் காக்கின்ற பெருமான்
> காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கு மடியேன் "

என்று பாடியுள்ளார்.

இவர் ஐயடிகள் காடவர்கோன் என்ற இரண்டாம் மகேந்திரவர்மனின் பேரனும், முதலாம் பரமேச்சுரவர்மனின் மகனும் ஆவர். இவர் காலத்தில் பல்லவர் ஆட்சி தமிழ்நாட்டிற்கப்பால் விந்தியமலை வரையிலும் எட்டியிருந்தது. கிழக்கு, தெற்கு, மேற்கு பக்கங்களில் பல்லவர் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளுக்கு கடலே எல்லையாக இருந்தபடியால், சுந்தரர் ' கடல்சூழ்ந்த உலகம் எல்லாம் காக்கின்ற பெருமான் ' என்று கூறியிருக்கின்றார்.

மேலும், சுந்தரர் ' காக்கின்ற ' என்று நிகழ்காலத்தில் கூறியிருக்கின்றபடியால் அவர் காலத்தில்தான் கழற்சிங்கர் இருந்தார் என்பது உறுதிப்படுகின்றது.

இவ்வரசனுக்கு விருதுப்பெயர்கள் பல. அவைகள் சில அத்தியந்தகாமன் - அதிரணசண்டன் - காலகாலன் - இரணசயன் - சிரீபரன் - ஏகவீரன் - சிவசூடாமணி - சித்திரக் கார்முகன் என்பனவாம்.

இவனுடைய ஆட்சி சண்டையில்லாமல் சமாதான வாழ்க்கையிலேயும், மொழிவளர்ச்சி, சிற்பவளர்ச்சி, ஓவியவளர்ச்சி, சமயவளர்ச்சி முதலிய காரியங்களிலேயே கழிந்தது.

முதலாம் மகேந்திரவர்மனைப் போலவே இவனும் பல மலைக்கோவில்களையும், குகைக்கோவில்களையும், சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பல சிவதளிகளையும் உண்டாக்கினன். இவனுடைய வேலைப்பாடு அமைந்த கற்றளிகள் மாமல்லபுரம்



திருப்போரூர் - பனமலை - காஞ்சிபுரம் முதலிய இடங்களில் உள்ளன.

### பூசலார்

காஞ்சியில் உள்ள இராசசிம்ம பல்லவேச்சுரம் என்கிற கைலாசநாதர் கோவில் இவனுல் கட்டப்பட்டது. இந்தக் கோவிலைக் கட்டிமுடித்ததும் குடமுழுக்கு (கும்ப அபிடேகம்) ஆட்ட இவனுல் ஏற்படுத்திய நாள் அன்றைக்கே, திருநின்றவூர் பூசலார் நாயனுரும் அவர் கட்டிய மனக்கோயிற் குடமுழுக்கை ஏற்பாடு செய்திருந்தார்.

பூசலார் நாயனுருடைய அன்பை உலகத்தாருக்கு வெளிப்படுத்தக் கருதிச் சிவபெருமான் கழற்சிங்க நாயனுருடைய கனவிற் சென்று, " நாம் நாளை திருநின்றவூர்ப் பூசல் கட்டிய கோயிற் குடமுழுக்குக்குப் போகின்றோம்; ஆதலின் உன்னுடைய குடமுழுக்கு நாளை மாற்றி வேறொரு நாளில் வைத்துக்கொள் " என்று கூற, பல்லவன் ஆச்சரியப்பட்டுத் தன்னிலும் அன்பர்கள் பலர் உலகில் உள்ளனர் எனத் தெளிந்து, அப்பூசலார் செய்யும் குடமுழுக்கைக் காணத் தன் பரிவாரங்களுடன் திருநின்றவூர் சென்றார்; சென்று பூசலார் நாயனுரையும் அவர் கட்டிய மனக்கோயிற் குடமுழுக்கையும் அருட்கண்ணுல் கண்டு, ' என்னே அன்பிருந்தவாறு ! உலகில் கல்லாலும், மண்ணுலும், சுதையாலும், கட்டும் கோவில்களும், பாறைகளைக் குடைந்து செய்யும் தளிகளும் அன்பால் அமைக்கும் அருங்கோவிலுக்கு ஈடாகா ' என்று தேறி, பூசலாரைக் காஞ்சிக்கு வரும்படி வேண்டி, கைலாசநாதர் கோவிற் குடமுழுக்கையும் வேறோர் நன்னுளில் பூசலார் முன்னிலையில் நடத்தி, கோவிலுக்கும் அடியார்களுக்கும் வேண்டும் சிறப்புக்கள் செய்தான்.

கழற்சிங்கருடைய இரண்டாம் மனைவி இரங்கபதாகை என்பவர் சிவபெருமானுக்கு ஒரு கோவில் கட்டினதாகக் கைலாசநாதர் கோவில் கல்வெட்டாமல் வெளியாகிறது.

இராஜசிம்மேச்சுரம் என்ற கைலாசநாதர் கோவிலுக்குப் பக்கத்திலேயே மகேந்திரேச்சுரம் என்ற கோவிலை இவருடைய இரண்டாவது மகன் மூன்றும் மகேந்திரவர்மன் என்பவன்

கட்டினதாக அக்கோவிலினுள்ள கல்வெட்டால் தெரிகிறது. (Vide S. I. I. Vol. I பக். 23 See also Velse 25 of the KasaKudi Plates in S. I. I. Vol II Part III)

கழற்சிங்கருடைய முதல் மகனை இரண்டாம் பரமேச்சுரவர்மன், கழற்சிங்கர் திருவாரூரில் கி. பி. 710 ல் தம் மனைவியாருடன் சிவனடி நீழல் எய்தியபின் பட்டத்துக்கு வந்தான்.

இரண்டாம் பரமேச்சுரவர்மன் வைஷ்ணவ மதத்தையும் ஆதரித்து வந்தான். என்பது காஞ்சியில் இவன் கட்டிய வைகுண்டப்பெருமாள் கோவிலால் வெளியாகிறது. இவனுடைய ஆட்சி கி. பி. 710 முதல் கி. பி. 717 வரை நடைபெற்றது. இவன் பிள்ளையின்றி இறக்கவே சிம்மவிஷ்ணுப் பல்லவனின் கிளை முடிவுற்றது.

இவனுடைய தம்பி மூன்றாம் மகேந்திரவர்மனும் இவன் காலத்திலேயே இறந்துவிட்டான். இரண்டாம் பரமேச்சுரவர்மனுடைய வைப்பாட்டி மகன் சித்திரமாயன் என்பவன் தான் பட்டத்தையடைய வேண்டிய முயற்சிகளைச் செய்து கலகத்தை உண்டுபண்ணினான். சித்திரமாயன் அசுத்த மாதாவினின்றும் பிறந்தவன் என்று வைகுண்டப்பெருமாள் கோவில் கல்வெட்டுக் கூறுகிறது.

சிம்மவிஷ்ணுவின் தம்பி பீமவர்மன் கிளையில் இரண்டாம் நந்திவர்மன் என்பவன் இருந்தான். சித்திரமாயன் சில அரசர்களுடைய உதவியைப்பெற்று, இரண்டாம் நந்திவர்மனோடு சண்டையிட, நந்திவர்மனின் சேனாபதி பூச்சான் குலத்து உதயச்சந்திரன் என்பவன் சித்திரமாயனைக் கொன்று நந்திவர்மன் பட்டம் பெற உதவிபுரிந்தான்.

கழற்சிங்கர் திருவாரூரில் சிவனடி நீழல் சேர்ந்தது. தொன்மைப் பல்லவர் குலத்தில் அரிஏறு என்ன உதித்த கோக் கழற்சிங்கர் என்பவர் சிறுவயது முதற்கொண்டே சிவனடி மறவாப் பான்மையும், அடியார்களிடத்தில் அன்புங்கொண்டவராய் இருந்தார்.

கி. பி. 685 ல் தம் தகப்பனார் முதலாம் பரமேச்சுரவர்மன் இருக்கவும், தாம் பட்டம் எய்தி, வடபுலத்துச் சளுக்கர்



மேல் படை எடுத்துச்சென்று, கி. பி. 686 ல் சளுக்கு அரசன் விநயாதித்தனைக்கொன்று, வெற்றிபெற்று, மீண்டும் காஞ்சிக்கு வந்து, நாடு அறநெறியில் வைகும்படி ஆட்சிபுரிந்தார்.

இப்படி இருக்கும் நாளில் உலகின் இயல்பும் அரசின் இயல்பும் உறுதியல்ல என்று கண்டு, உறுதிப்பொருள் பயக்கும் சிவத்தொண்டு செய்ய எண்ணி, சிவதளிகள் பலவற்றிற்கும் சென்று, அன்பு மீதூர, தமது நிலைக்குத் தக, மெய்த்தொண்டு புரிந்து வருவாராஆனார். அப்படி இருக்கும் நாளில் கி. பி. 710ல் வைகாசி மாதத்தில் பரணி நாளில் சிவபுரி என்னப் பொலிந்து விளங்கும் தென் திருவாரூர் சேர்ந்தார்.

கழற்சிங்கருக்கு இருமனைவிகள் உண்டு. சமண சமயத்தைச் சார்ந்த அமோகவர்ஷன் நிருபதுங்கன் என்னும் இரட்டை அரசனுடைய மகள் சங்கா என்னும் மாதரசி முதல் மனைவி. அவள் தான் பட்ட மகிஷி.

பாண்டியநாட்டு அரசன் நின்றசீர்நெடுமாறன் பாவை இரங்கபதாகை என்பவள் இரண்டாம் மனைவி.

கழற்சிங்கர் திருவாரூர் சென்றபோது தம் உரிமை மெல்லியலாரையும் உடன் அழைத்துச் சென்றார்.

தென்திருவாரூர் திருமூலட்டானம் சென்று புற்றிடங்கொண்டாரை வணங்கப் பூங்கோயிலுள் அவர் சென்றபோது, பட்டத்தரசி சங்காவும் அவள் தோழிகளும் தவிர ஏனையோர் அரசனுடன் உட்சென்றார்கள்.

சங்காவும் அவள் தோழிகளும் மாத்திரம் கோவிலை வலமாக வந்து, அங்குள்ள சிறப்புக்களை தனித்தனி பார்த்து மகிழ்ந்து, அரநெறி (அசலேச்சுரம்) என்னும் ஆலயத்தின் பாங்கர் தூயமென் பள்ளித்தாமம் தொடுக்கும் மண்டபத்தில் நுழைந்து, ஆண்டு விழுமிய புதுமை இலங்கும் பூ ஒன்று கீழே விழுந்து கிடந்ததை எடுத்து, ஊழ் வந்துறுத்த, சங்கா என்னும் மாதரசி மோந்து பார்த்தாள்.

அதுகண்டு, அம்மண்டபத்தின்கண் மலர்தொடுத்துக்கொண்டிருந்த செருத்துணை என்னும் புனிதமான தொண்டர், சிவபெருமான் திருமுடிக் கணியும் செம்மலரை மோந்த

குற்றத்துக்காகக் கதறிமனை ஓடி, கருவி கைக்கொண்டு, பட்டத்தரசியின் மூக்கினைப் பிடித்து அரிந்துவிட்டார்.

பட்டத்தரசி ஓவெனக் கதறி, குருதிசோர நிலத்தில் விழுந்து அரற்ற, அப்போது புற்றிடங்கொண்டாரை வழிபட்டு அரசரும் அங்கு வந்து சேர்ந்தார். வந்ததும், பட்டத்தரசி மூக்கறுபட்டுக் கதறுவதைப் பார்த்து, "இந்த வெவ்விய வினையை அஞ்சாமல் செய்தவர் யார்" என்று உசாவ அன்பர் செருத்துணையார் ஆண்டு அரசர்முன் சென்று நடந்தது கூறினார். அரசனும் தீர விசாரித்தபின், தன் உடைவாளை உருவி, "வாசங்கமழும் பூவினைத்தொட்டு முன் எடுத்த கையை அன்றே முதற்கண் துணிக்கவேண்டும், அதனைச் செய்யாது விட்டது தவறாகும்" என்று கூறிப் பட்டமும் அணிந்து, காதலுக்கும் உரியவளான ஒப்பற்ற தன் துணைவியின் கையைக் குறைத்தார். இது செயற்கரும் செய்கையென அவண் குழுமி இருந்த அடியார்கள் பெரியோர்கள் எல்லோரும் அரசனை வாழ்த்தினார்கள். தேவர்கள் மலர் மழை பெய்தார்கள். மாலயற்கு அரிய பெம்மான் தியாகேசன் தன் தேவியுடன் அவ்வரசனுக்கும் அவன் தேவிமார்க்கும் ஏனைய அடியார்களுக்கும் காட்சி அளித்து, அரசனுக்கும் அவன் தேவிமாருக்கும் முத்தி இன்பத்தை அளித்தார். அந்த நன்னாளாகிய வைகாசிப் பரணியை இன்றைக்கும் சைவ உலகம் குருபூசை தினமாகக் கொண்டாடுகிறது.

கண்டார் கூறும் ஏதுக்கள் மேனாட்டறிஞர்களால் ஏற்றுக் கொள்ளற்குரியன அல்லவென்றும் பிள்ளையவர்கள் கருதுகிறார்கள் என்பது மேற்காட்டிய அவர்தம் கூற்றாற் புலனாம். சிவஞானபோதப் பொருளை ஆங்கிலம் படித்த நம் தமிழ்மக்கள் தெளிய விளங்கிக்கொள்ளும் தெளிவுடையராயின் அம்மெய்ந் நூற்பொருளை மேலைநாட்டாரும் ஏற்றுப்போற்றும் நிலையில் உளங்கொள விரித்துரைக்கும் உறுதிபெற்றவராவர். அது நிற்க, மெய்கண்ட தேவர் உயிருண்மைக்கு எடுத்துக்காட்டும் விளக்கமே முற்ற முடிந்ததென்றும் அப்பொருள்பற்றி ஏனையோர் கூறும் விளக்கம் வேண்டியதில்லையென்றும் கூறுவார் எவருமிலர்.

ஆன்மாவின் உண்மையை மனத்திற்கொண்டே இச்சூத்திரம் தோன்றியுள்ளது எனப் பிள்ளையவர்கள் கூறுகின்றார்கள். தமக்கு முற்பட்ட தமிழ்ச்சான்றோர்கள் தம் அநுபவவுண்மையால் ஆராய்ந்து துணிந்த பதிபசுபாசப் பொருட்கூறுகளைச் சுருங்கவுணர்த்துதல் கருதியே மெய்கண்ட தேவர் சிவஞான போதத்தினை இயற்றியருளினார் என்பது அறிஞர் முடிபாம். ஆகவே பிள்ளையவர்கள் காட்டிய மூன்றாஞ் சூத்திரமன்றிப் பன்னிரு சூத்திரங்களுமே முன்னோர் தம் அழுந்திய அறிவினாற் கண்டுணர்ந்த பொருட்டுணிபுகளை விளக்கவெழுந்தனவாம் என உணர்தல்வேண்டும்.

காணப்பட்ட உலகியல் நிகழ்ச்சியையேதுவாகக்கொண்டு, அந்நிகழ்ச்சிக்கு நிமித்தமாகியதோராற்றல் உண்டு என ஆசிரியர் திருவள்ளுவர் காணப்படாத கடவுளுண்மையைப் புலப்படுத்தினமைபோலவே, ஆசிரியர் மெய்கண்ட தேவரும், காணப்பட்ட உடம்பின்கண் நிகழும் பல்வேறு நிகழ்ச்சிகளானே அவற்றிற்குக் காரணமாகிய உயிரென்பதொரு பொருள் உண்டு என்பதைக் கருதலளவையான் அறிவுறுத்துகின்றார். அப்பகுதியே,

உளதில தென்றலின் எனதுட லென்றலின்
ஐம்புல னொடுக்கம் அறிதலிற் கண்படில்
உண்டி வினையின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா

எனவருஞ் சிவஞானபோத

## சந்தா

1948 முதல் - ஆண்டு சந்தா ரூபா மூன்றாக
உயர்த்தப்பட்டுள்ளது. சமாஜ அங்கத்தினர்
1948-ஆம்ஆண்டுக்கு செலுத்தவேண்டிய சந்தா
ரூபாய் மூன்றை 31—12—47க்குள் - நேரிலோ,
மணியார்டர் மூலமோ சமாஜச் செயலாளருக்கு
(9, வைத்தியராமையர் தெரு, சென்னை - 17)
அனுப்பல் வேண்டும். அப்படி அனுப்பா
விட்டால் 1948 ஜனவரி மாதச் "சித்தாந்தம்"
வி. பி. தபாலில் அனுப்பப்படும். 1948 - ஆம்
ஆண்டில் சமாஜ அங்கத்தினராக இருக்கப்
பிரியமில்லாதவர்கள் தயைகூர்ந்து முன்ன
தாகவே தெரிவிக்கவும். தங்கள் சந்தா நெம்ப
ரைக் குறித்து எழுதவும்.

### சைவ சித்தாந்த மகாசமாஜ மாதக்கூட்டம்

மகா சமாஜத்தின் டிசம்பர் மாதக்கூட்டம், 1-12-47 - ல்
சோழலிங்கபுரம் குமரகோட்டம், திருஞானசம்பந்தர் நிலை
யத்தில், அவ்வூர்ச் சித்தாந்த சைவ சபையின் ஆதரவில் நடை
பெற்றது. அதுகாலை, திருவாளர் - ச. சச்சிதானந்தம் பிள்ளை
யவர்கள் தலைமையில், அவ்வூர் A. P. M. உயர்நிலைப் பள்ளித்
தமிழாசிரியர் திருவாளர் வித்துவான் - கண்ணையா அவர்கள்
" சைவ ஆடவர் கடமை " என்பதுபற்றியும், ஆர்க்காட்டு
வட்டச் சமயபோதகர் திருவாளர் - ஸ்ரீ சமரபுரி முதலியாரவர்
கள் " திருஞானசம்பந்தர் திருவுள்ளம் " என்பது பற்றியும்,
தூத்துக்குடி திலகவதியார் மாதர் கழகச் செயலாளர் திருமதி -
இராம சீதாபாய் அம்மையாரவர்கள், "அப்பரடிகள் அருள்
திறம் " என்பதுபற்றியும், அறிவும் உணர்ச்சியும் மிக்க அரிய
சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இம் மாதக் கூட்டத்தை
அன்புடன் நடத்திவைத்த சிவபுண்ணியச் செயலாளராவார்,
சோழலிங்கபுரம் திருவாளர்கள் சல்லா - சபாபதி முதலியா
ரவர்களும் அவர்கள் குடும்பத்தார்களுமாவர். இவர்கட்கு
மகாசமாஜத்தின் நன்றி உரியது.

சமாஜ செயற்குழுக் கூட்டம்: சமாஜ செயற்குழு 13-12-47
சனிக்கிழமை மாலை 5 மணிக்குத் தியாகராயநகர் செயலகத்
தில் கூடும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

42-வது ஆண்டு நிறைவு விழா, கோவை

# சைவர் மாநாடு

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான்திறம் - எப்போதும்
செவிகாள், கேண்மின்களோ — அப்பர்

பேரன்புடையீர்,

நிகழும் சருவசித்து ஆண்டு மார்கழித் திங்கள் 10, 11, 12 (வியாழன், வெள்ளி, சனி) நாட்களில் (1947 டிசம்பர் 25, 26, 27 தேதிகள்) சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 42வது ஆண்டு நிறைவு விழாவும், சைவர் மாநாடும் கோவையில் அரசாங்க இயற்கலைக் கல்லூரி மண்டபத்தில் (Govt. Arts College) பின்வரும் நிகழ்ச்சிமுறையில் கண்டபடி நடைபெறும். அப்போது வழக்கப்படி கொடியேற்றம், சிறப்புரைகள் முதலியன நடைபெறும். சிறந்த சமய நூல் வல்லுநரும், திருக்குறள் ஆராய்ச்சியாளரும், அருமைப் பேச்சாளருமாகிய வழக்கறிஞர் உயர்திரு T. S. கந்தசாமி முதலியார், B. A. அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

மேலும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் ஆசிரியர் அ. ச. திருஞானசம்பந்தம், M. A. அவர்கள், இளைஞர் மாநாட்டில் தலைமை வகிப்பார்கள். சேலம்

திருமதி - அ. கு. காமாட்சி அம்மையார், M. A. அவர்கள், மங்கையர் மாநாட்டில் தலைமை வகிப்பார்கள். இந்த ஆண்டு சிறப்பாகக் கலையியல் கண்காட்சி ஒன்று நடைபெறும். சைவப் புலவர் தேர்தலில் தேர்ச்சி பெற்றவர் களுக்குப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலே கண்ட நிகழ்ச்சிகளுக்கு முறையே திரு. V. C. வெள்ளியங்கிரி கவுண்டர், M. L. A., திரு. R. M. குமார சாமி கவுண்டர், திருமதி வசந்தாதேவியம்மையார், B.A., B. L., திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A. அவர் கள் வரவேற்புத் தலைவர்களாக இருப்பார்கள்.

தாங்கள் தங்கள் சபையினரோடும், வாழ்க்கைத் துணைவியர், மக்கள், உறவினர் முதலியரோடும் வந்திருந்து நடத்திவைக்குமாறு மகிழ்ச்சியுடன் வேண்டிக்கொள்ளு கிறோம்.

V. C. சுப்பைய கவுண்டர்,
வரவேற்புச் செயலாளர்

க. அரங்கசாமி முதலியார்,
சமாஜப் பொதுச் செயலாளர்

---

## நிகழ்ச்சி முறை

**1. சருவசித்து மார்கழி 9 (24-12-47) புதன்கிழமை**

மாலை 5 முதல் 7 மணிவரை சேரித்திருப்பணி (R. S. புரம் சேவா சிரமம், அடுத்துள்ள சேரி.)

**2. மார்கழி 10 (25-12-47) வியாழக்கிழமை**

காலை 7 — 8 திருக்கோயில் வழிபாடு, கோட்டை ஈசுவர ஆலயம் சமாஜ வெளியீடு.

8 — $11\frac{1}{2}$ தலைவர்கள் வரவேற்பு, (அரசியல் கல்லூரி மண்டபம்) திறப்புரைகள், ஆண்டறிக்கை, மாநாட்டுத் தலைமை உரை.

மாலை 2 — 4 இளைஞர் மாநாடு தலைமை உரை
மங்கையர் மாநாடு தலைமை உரை

4 — 5 கலையியல் காட்சி - வரவேற்புரை, திறப்புரை (கிழக்கு மண்டபம்)

5 — 8 சைவர் மாநாடு

திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார்—"திருநின்ற செம்மை"

திரு. தோரமங்கலம் ஆசிரியர் - வரதஞ்சைய பிள்ளை —"சமய நெறியும் உலகியல் முறையும்"

திரு. சிவக்கிழார் - வா. திருநாவுக்கரசனார் —"பொருள் நூல்"

**3. மார்கழி 11 (26-12-47) வெள்ளி**

காலை $7\frac{1}{2}$ — $8\frac{1}{2}$ சைவ இளைஞர் மாநாடு.

$8\frac{1}{2}$ — $11\frac{1}{2}$ சைவர் மாநாடு.

சென்னை திரு. அ. மு. பரமசிவானந்தம், B.O.L., M. Litt.—'நீதொழிய நன்மை செயல்'

திரு. புரிசை - முருகேச முதலியார் —'அழகன் காட்சி'

மாலை 2 — 4 மங்கையர் மாநாடு.

4 — 8 சைவர் மாநாடு.

சென்னை திரு. மா. இராசமாணிக்கம், M. O. L. —'சைவ சமய வளர்ச்சி'

திரு. வித்துவான் ஔவை - துரைசாமிப் பிள்ளை —'சைவ வாழ்வு'

திரு. திருவாசகம் - K. M. பாலசுப்பிரமணியம், B.A., B.L.—'வேண்டத்தக்க தறிவோய் நீ'

**4. மார்கழி 12 (27-12-47) சனி**

காலை 7 — 8 சமாஜச் செயல் கூட்டம்.

சமாஜ உத்தியோகஸ்தர் தேர்தல், தீர்மானங்கள் ஆலோசனை.

8 — 9 பட்டமளிப்பு.

9 —11 சைவர் மாநாடு.

திரு. பூ. சமரபுரி முதலியார்—'மணி வார்த்தை'
திரு. உத்தரமேரூர் - ஈசுவரமூர்த்தியா பிள்ளை —'மக்களுக்குச் சமய வாழ்க்கை வேண்டுமா?'

மாலை 2 — 3 இளைஞர், மங்கையர் மாநாட்டுத் தலைமைக் கருத்துரைகள்.

கொப்பனூபட்டி கலைமகள் கல்லூரி மாணவிகளும் மற்றோரும் பேசுவர்.

3 — 5 தீர்மானங்கள் (பேச விருப்பம் உள்ளவர்கள் முன்னமே தெரிவித்துக் கொள்ளலாம்).

5 — 8 சைவர் மாநாடு - தலைவர் கருத்துரை, நன்றி கூறல் முதலியன.

5. **மார்கழி 13, 14 (திருப்பேரூர் திருவாதிரைத் திருவிழா)**

அவிநாசி, திருமுருகன்பூண்டி, குரக்குத்தளி, மொக்கணீசுவரம் முதலிய தலங்களுக்கு யாத்திரை வேண்டியவர்கள் முன்னமே தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

### 6. குறிப்புக்கள்

1. பெண்களுக்குத் தனியிடம் உண்டு.
2. தகுந்த காரணங்களுக்காக நிகழ்ச்சி முறை மாற்றப்படும்.
3. சொற்பொழிவுகளில் முதலிடை கடைகளில் தமிழ் மறை ஓதப்பெறும். திரு. K. ஆறுமுக நயினார் செந்தமிழ்ப் பாக்களைப் பாடுவார்கள்.
4. சமாஜச் செயற் கூட்டத்திற்கு வாக்குரிமை அங்கத்தினர்கள் மட்டும் வரலாம்.
5. மாநாட்டில் சமாஜ வெளியீடுகள் விற்கப்படும்.
6. சபை நடக்குமிடம் இரயில்வே ஸ்டேஷனுக்கு இரண்டு ர்லாங்கு தூரம்.
7. அங்கத்தினர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் மட்டும் இலவச ணவு - ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
8. கலையியல் காட்சி - மூன்று நாளும் திறந்து வைக்கப்படும்.
9. மற்ற விவரங்களுக்கு, செயலாளருக்கு எழுதிக் கொள்ளலாம்.

—

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 20 | சர்வசித்து மார்கழி 1947 டிசம்பர் | இதழ் 12

## ஒலிபரப்பு

### 1. அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்

சென்னை மாகாணத்துச் சமய நிலையங்களைப்பற்றி இதுவரைக்கும் இருந்த ஆட்சித் திட்டத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று தற்போதுள்ள அமைச்சர் குழாம் ஒரு சீர்திருத்த மசோதாவை வெளியிட்டிருக்கிறார்கள் என்றும், அந்தத் திருத்தம் எந்த முறையில் மக்களுடைய உரிமைகளைப் பாதிக்கிறதென்றும், சென்ற அக்டோபர் மாதத்திய இதழில் குறிக்கப்பட்டுள்ளது. அப்போது இரண்டு முதன்மையான ஆட்சேபணைகள் எடுத்துக் கூறப்பட்டன. மற்றும் உள்ள ஆட்சேபணைகளை பின்னால் கூறுவதாகச் சொல்லப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு சென்னையில் இந்துதரும பரிபாலன சங்கத்தாரின் செயல் கூட்டத்தார் ஆராய்ந்த கருத்துக்களும் வெளிவந்துள்ளன. அவர்களுடைய கருத்துக்கள் மிகவும் சிறந்தவைகளாயிருப்பதால் அவைகளை அடிப்படையாகக் கொண்டு முக்கியமான சில கருத்துக்களை இங்கே வெளியிடுவோம். அவைகளை அமைச்சர் கூட்டம் ஆராய்ந்து வேண்டியவற்றை எடுத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்.

## 2. சமயம் என்பதின் உட்கிடக்கை

சமய பரிபாலனம் என்ற கருத்து வரும்போதெல்லாம்
இந்து சமயம் என்று மாத்திரம் விதிகளில் கூறப்பட்டுள்ளது.
இந்தச் சொல்லால் ஒரு குறுகிய நோக்கம்தான் அடங்கி
யுள்ளது. உதாரணமாக, சமயக்கல்வி புகட்டுதல் என்ற
கருத்தில் சமயச் சடங்குகள் முதலியவைகளே சிறப்பாக
ஆளப்படுகின்றன. சமய தத்துவங்கள் அதில் அடங்கியிருப்ப
தில்லை. ஆகவே இந்து சமயம் என்ற சொல் வரும் இடங்
களில் எல்லாம் "இந்து சமயமும் இந்து தத்துவமும்" என்று
சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அச்சங்கத்தார் எண்ணு
கிறார்கள். இது சரியான திருத்தம்தான். சில ஆலயங்களிலும்
மடாலயங்களிலும் இந்துசமய தத்துவம் என்று ஒன்று இருப்ப
தாகவே அவர்களுக்குப் புலப்படுவதில்லை. இந்தக் குறை
யினால்தான் தற்கால இளைஞர்களுக்குச் சமயப்பற்று குறைந்து
வருகிறது. சமய தத்துவங்களைத் தெளிவாகப் போதிப்பதினால்
இக்குறைகள் நீங்கிவிடும் அல்லவா.

## 3. மடம் என்ற பெயரின் வரையறை

தற்போதுள்ள சட்டத்தின்படி எவரொருவர் தன் சீடர்
களுக்குச் சமயத்தைப் போதிக்கிறார்களோ, அவர்களுடைய
பரம்பரை ஒரு ஒழுங்கின்படி செல்லுகின்றதோ, அன்னார்
தலைமை வகிக்கும் ஒரு ஸ்தாபனத்துக்கு மடம் என்ற பெயர்
கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வரையறையினால் உண்மை
யான பல மடங்கள் அதிலிருந்து விடுபடுகின்றன. அவ்வாறு
விடுபடாமல் சேர்த்துக்கொள்வதற்காக அடியில் கண்ட திருத்
தப்பாடு ஆலோசிக்கப்பட்டுள்ளது. 'வழக்கப்படி பாரம்பரைத்
தலைமை பெற்ற ஒருவரால் தலைமையை வகிக்கப்பெற்றதும்
அன்னார் சமய சேவையில் ஆதித்தலைவர் விதித்திருக்கும்



அல்லது விதித்ததாக எண்ணப்படும் நோக்கங்களின்படி சமய
சேவையில் செய்யப்படுவதும் ஆன ஒரு நிலையம் மடம் ஆகும்,
என்பது. இந்தத் திருத்தப்பாட்டில் விடுவிட்டுப்போன சமய
நிலையங்கள் சில இதில் வந்துவிடும். சில மடாலயங்களில் ஆதி
கர்த்தர் என்ன கொள்கைகொண்டார் என்று தெரிவதில்லை.
ஆனால் மடத்துச் சம்பிரதாயப்படி சில செயல்கள் நடந்து
கொண்டேயிருக்கும். அவைகளை அனுசரித்து ஆதிகர்த்தரின்
நோக்கம் இன்னது என்று அறியலாம். அதற்காகத்தான்
இந்தத் திருத்துப்பாடு கொண்டு வரப்பட்டது.

## 4. அரசியல் அதிகாரம்

சமய நிலையங்களை அரசியலார் பரிபாலனம் செய்வதில்
ஏற்பட்டுள்ள விபரீதங்களை முன்னமே கூறியுள்ளோம்.
நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சமயச் சார்பு உள்ளது
அல்ல. அது சமயப்பற்று அற்றது என்றே அரசியல் தலைவர்
கள் எல்லாரும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். மேலும் அரசிய
லில் உள்ள அமைச்சர்கள் எல்லாரும் இந்துசமயத்தவர்கள்
என்று சொல்லுவதற்கில்லை. ஏற்கனவே மற்ற சமயத்தவர்
களும் அதில் இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் சமய
நிலையங்களைப் பரிபாலிப்பது சரியா என்ற கேள்வி பிறக்கும்.
சமய நிலையங்களுக்குத் தீங்கு வாராமல் இருப்பதற்காக அந்
நிலையங்களில் உள்ள அமைச்சர் ஒருவரே அப்பரிபாலனத்தை
ஏற்றுக்கொள்வது நல்லது ஆகும். அதை உத்தேசித்து அடி
யில் கண்ட திருத்தப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது. "சமய
நிலைய பரிபாலனமானது இந்து சமயத்தை அனுசரிக்கும் ஒரு
மாகாண அமைச்சரால் பார்க்கப்பட வேண்டும். அன்னார்
இந்து சமயத்தைவிட்டு நீங்கினால் பரிபாலனமும் விலகவேண்
டும்" என்பதேயாம். இவ்வித நிபந்தனை கமிஷனர் பதவிக்குக்

குறிக்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனை
இருக்கவேண்டியது நல்லதல்லவா ? அமைச்சருக்கும்

## 5. ஆலோசனைச் சபையார்

அரசியல் பகுதிகளிலே கூட்டுறவு, கல்வி, போன்றவை
களில் ஆலோசனைச் சபைகள் ஏற்பட்டிருக்கின்றன.
சமய பரிபாலன சட்டத்தில் அச்சபைகளை விலக்கியிருப்பது
என்ன காரணமோ தெரியவில்லை. ஆனால்
அல்லாத அறிஞர்களை ஆலோசனைச் சபையாளர்களாக உத்தியோகப்பற்று
படுத்துவது மிகத் தகுதி. ஆகவே அடியில் கண்ட ஏற்
பாடு சொல்லப்படுகிறது. " மாகாண அமைச்சர், திருத்தப்
உதவிக் கமிஷனர், இவர்களுக்கு ஆலோசனைக் கூற அரசிய கமிஷனர்,
லார் ஆலோசனைச் சபைகளை ஏற்படுத்தவேண்டும்.
களின் உரிமை கடமைகளை நிச்சயிக்கும் விதிகளை அவர்
வேண்டும். அச்சபைகளுக்குத் தலைவர் சபைகளை இயற்ற
விதிகள் முதலியவைகளையும் ஏற்படுத்த வேண்டும்" நடத்தும்
யாம். இதைப்போல ஒரு சபை திருப்பதி, என்பதே
தானங்களுக்கு இருப்பதைக் காணலாம். திருமலை தேவஸ்

## 6. பராதீனங்கள்

சமய நிலையங்களின் சொத்துக்களை பராதீனம் செய்
வதற்கு நிருவாகிகளுக்கு அதிகாரம் இல்லை. ஆனால் அவசிய
மான காலங்களில் பரிவர்த்தனை, கிரயம், அடமானம் முதலிய
வைகளைச் செய்யவேண்டுமானால் உதவி கமிஷனர் உத்தரவின்
பேரில் செய்யலாம், என்ற விதியைக் கொண்டு வந்திருக்கிறார்
கள். உதவி கமிஷனர் என்பவர் ஒரு தாழ்ந்த உத்தியோகஸ்தர்.
அன்னாருக்கு இத்தனை பளுவான அதிகாரம் கொடுப்பது
தவறு. கமிஷனர் ஒருவருக்குத்தான் இந்தப் பெரிய அதிகா
ரம் இருக்கவேண்டுமென்று பொதுஜனங்கள் கருதுகிறார்கள்.



## 7. பரம்பரை ஊழியம்

முன் காலத்தில் கோயில்களில் அர்ச்சகம், பரிசாரகம்
போன்ற ஊழியங்கள் ஊழியக்காரர்களால் செய்யப்பட்டன.
பரம்பரையாய் இருந்த போதிலும் அவர்கள் தகுந்த ஆட்
களாக இருந்தார்கள். இப்போதோ பெரும்பான்மையான
ஊழியர்கள் ஆங்கிலப் படிப்பு பெற்று வேறு உத்தியோகங்
களுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் அப்பேர்ப்பட்டவர்கள்
தங்கள் ஊழியத்தைவிட்டுக் கொடுக்காமல் வேறொருப் பிரதி
நிதியை நியமித்துவிட்டுச் செல்லுகிறார்கள். அப்பிரதிநிதி
பெரும்பான்மையாக கோயில் அதிகாரிகளுக்கு அடங்குவ
தில்லை. இதனால் விவகாரங்கள் நிரம்ப ஏற்படுகின்றன.
இதற்கு ஒரு திருத்தப்பாடு கொண்டு வரப்பட்டிருக்கிறது.
" ஊழியதாரர்கள் ஊழியத்துக்கு தகுதியானவர்களாய் இல்லா
விட்டால் தகுந்த நபரை நியமிக்கலாம். அவ்வாறு 90 நாட்
களுக்குள் நியமிக்காவிட்டால் கமிஷனர் வேறு ஒருவரை
நியமிக்கலாம். அதற்கு மேல்கோர்ட்டுகளுக்கு அப்பீலுண்டு."
இந்தத் திருத்தப்பாட்டினால் கூடியவரை ஒழுங்கீனமானது
போய்விடும் என்று கருதப்படுகிறது.

## 8. மடாலயங்களுக்கு ஆலோசனைச் சபை

ஆலயங்களுக்கு இருப்பதைப்போலவே மடாலயங்
களுக்கு ஓர் ஆலோசனைச் சபை அவசியமே. அதற்காக
அடியில்கண்ட திருத்தப்பாட்டைச் செய்யவேண்டும் என்
கின்றனர். " 5000 த்துக்குக் குறையாத வருமானமுள்ள
மடங்களில் எல்லாம் அம்மடத்துக் காரியங்களில் ஆலோசனை
சொல்ல 5 பேர்களுக்குக் குறையாத ஒரு ஆலோசனைச்சபை
ஏற்படுத்த வேண்டும். அச்சபையார் அம்மடத்துக்குச்
சேர்ந்தத் துறவிச் சீடர்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.
அவ்வாறு துறவிகள் இல்லாவிட்டால் அம்மடத்து இல்லறச்

டர்களிலிருந்து 5 பேர்களை டிப்டி கமிஷனர் நியமிக்க
வேண்டும். மடாதிபதி இச்சபையை ஏற்படுத்தாவிட்டால்
கமிஷனரே ஏற்படுத்தவேண்டும்." தென்னிந்தியாவில் உள்ள
மடங்கள் பலவற்றிலும் அம்மடத்து மாணாக்கர்கள் இவ்விதச்
சபைகள் ஏற்படுத்த வேண்டுமென்று அடிக்கடி போராடிக்
கொண்டு வருகிறார்கள். இச்சபைகள் ஏற்பட்டால் இப்போ
துள்ள ஒழுங்கீனங்கள் பலவும் குறைவுபடலாம்.

## 9. சமயநிலைய நிதிச்செலவுகள்

ஏற்கனவே சொல்லியிருக்கும் செலவு திட்டங்கள் போது
மானவை அல்ல. அடியில்கண்ட திட்டங்களை சேர்த்துக்கொள்
வது நியாயம் என்று சங்கத்தார் அபிப்பிராயப்படுகிறார்கள்.
"1. சமய கலாசாலைகள் வைத்தல், 2. அர்ச்சகர்கள், சமயப்பிர
சாரர்கள், சமய போதகர்கள், இவர்கள் பயிற்சி பெறக்கூடும்
நிலையங்களை ஏற்படுத்துதல். 3. ஆகமங்களை வெளியிடுதல்.
4. சமய நிலையங்களை ஒட்டி சமயநூல் நிலையங்களை வைத்தல்.
5. ஆகமவேத பாடசாலைகளை வைத்தல். 6. தேவார திவ்வியப்
பிரபந்த பாடசாலைகளை நடத்துதல். 7. இந்து அனாதை விடுதி
களை ஏற்படுத்துதல. 8. சமய பிரசாரத்துக்காக இந்து
மங்கையர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக ஆசிரமங்களை
வைத்து நடத்துதல். 9. தகுந்த வருமானமில்லாத ஏழை
நிலையங்களுக்கு மீதிப் பணத்திலிருந்து பழுது பார்ப்பதற்காக
உதவிசெய்தல்; சிறப்பாக பாடல்பெற்ற தலங்களுக்கு இந்த
உதவி கொடுக்கப்படவேண்டும். 10. மேல் கண்ட செய்கை
களுக்கு விரோதமில்லாத இதர செயல்களுக்கு விநியோகம்
செய்தல்."

## 10. மீதி வருமானம்

எல்லாச் செலவுகளும் போக மீதியிருக்கும் வருமானங்கள்
வீண்போகாமலும் அரசியலுக்குச் சேர்த்துக்கொள்ளாமலும்



இருப்பதற்காக வேண்டி ஒரு ஒழுங்கு செய்ய வேண்டுமென்று
சபையார் அபிப்பிராயப்படுகிறார்கள். அதற்காக அடியில்
கண்ட திருத்தப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது. "சமய
நிலையங்களில் சட்டப்படி செய்யும் செலவுகள் போக மீதியிருக்
கும் தொகைகளைச் சேர்த்து ஒரு நிதியாக்கி அதற்கு "ஆலய
நன்மைநிதி" எனப்பெயர் கொடுத்து அதனைப் பரிபாலிக்க
கமிஷனருக்கு ஒரு ஆலோசனைச்சபை ஏற்படுத்தவேண்டும்"
என்பது. இந்த வகையில் சமய நிலையங்களின் பணங்கள்
இதர செலவுகளுக்குப் போகாமல் தடுக்கப்பட்டு சமய நிலையங்
களுக்கே செலவாகுமல்லவா.

## 11. சமயக் கல்வி நோக்கம்

மீதிப் பணங்களை சமயக் கல்விக்காக செலவழிக்கப்படும்
என்று சொல்வதில் சமயக்கல்வி இன்னதென்று இதுவரையில்
சொல்லப்படவில்லை. ஆகவே அதனை வரையறுக்க வேண்டு
மென்று சபையார் அபிப்பிராயப்பட்டு அடியில்கண்டவைகளே
சமயக்கல்வி யாவதென்று தீர்மானித்துள்ளார்கள். 1. சமய
போதனைசாலைகள். 2. அர்ச்சகர், பிரகாரகர், போதகர் என்ற
வர்களுக்குப் பயிற்சிச் சாதனங்கள். 3. ஆகமப்பதிப்புகள். 4.
சமய நிலையங்களுக்கு ஒட்டின சமயநூல் சாதகங்கள். 5. ஆகம
வேத பாடசாலைகள். 6. தேவார திவ்வியப்பிரபந்த பாடசாலை
கள். 7. இந்து அநாதை ஆசிரமங்கள். 8. இந்து மங்கையர்
கல்விப்பயிற்சிச்சாலை. 9. மேலே சொன்ன நோக்கங்களுக்கு
விரோதமில்லாத நோக்கங்கள்." மேலே சொன்ன நிலையங்
களை ஒரு கோயிலால் நடத்தமுடியாது. பல கோயில்களின்
வருமானங்களைச் சேர்த்துத்தான் ஒரு நிதியாக்கி நடத்தக்
கூடும். பணங்களும் வீண்போகாமல் தடுப்பதற்கு இதுதான்
சரியான வழியாகும்.

## 12. முடிப்புரை

மேலே சொன்ன திருத்தப்பாடுகளில் இந்து தரும பரிபாலன சங்கக் குழுவினர்களால் தீர ஆலோசித்து எழுதி வைக்கப்பட்டவைகள். இவைகளை நன்றாகக் கவனித்து அரசியலார் அவைகளுக்கு ஆதரவு கொடுப்பது மிகவும் நல்லது. அவ்விதம் கொடாமல் சட்டத்தை ஊர்ச்சிதப்படுத்தினால் நமது சமய நிலையங்களுக்கு அளவற்ற கேடு ஏற்படக் கூடும். ஆகவே அமைச்சர்களும் சட்டசபை அங்கத்தினர்களும் இத்திருத்தப்பாடுகளை நன்கு ஆராய்ந்து நிறைவேற்றுவார்களாக.

—

## 2. தலப்பகுதி

# வேடுபறி நடந்த திருத்தலம்
## (திருமுருகன் பூண்டி)

ம. ரா.

### ஊர் அமைதி

கொங்கு நாட்டில் பாடல் பெற்ற தலங்களில் திருமுருகன் பூண்டி ஒன்றாகும். இந்தத் தலம் ஒரு சிறிய ஊர். திருக்கோயிலும் அதற்கு முன்னால் இருக்கும் சந்நிதித் தெருவும் சேர்ந்ததே இவ்வூர் ஆகும். இப்போது இவ்வூர் மிகச்சிறியதாய் இருந்தபோதிலும் 1000 ஆண்டுகளுக்கு முந்தி இது ஒரு பெரிய ஊராய் இருந்திருக்கலாம் என்று கூற வேண்டும். அதற்கு ஆதாரம் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்கு ஆகும். அச்சமயாசாரியர் இதனைத் திருமுருகன் பூண்டி மாநகர் என்று தாம் அருளிச்செய்த தேவாரத்தில் கூறியிருக்கின்றார்.

### இடம்

இத்தலம் மற்றொரு பாடல் பெற்ற தலமாகிய அவிநாசியிலிருந்து தென்கிழக்கே 3 கல்லிலும் திருப்பூர் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே 5 கல்லிலும் அமைந்திருக்கிறது. இவ்வூரை அடைய விசைவண்டி வசதி உண்டு.



### திருக்கோயில்

திருக்கோயில் மேற்கு பார்த்த சந்நிதி. கோயிலுக்கு அருகே கீழ்ப்புறத்தில் ஒரு காட்டாறு ஓடுகிறது. ஆற்றிற்கும் கோயிலுக்கும் இடையே ஒரு அழகிய தென்னந்தோப்பு உண்டு. கோயிலுக்கு வடமேற்கில் குளிர்ந்த தெளிநீர் வாய்ந்த தீர்த்தம் ஒன்று இருக்கிறது. இத்தீர்த்த நீர் மகிமை பொருந்தியது என்பர். ஆண்டு முழுவதும் பைத்தியம் பிடித்தவர்களும் தீரா நோயாளிகளும் மண்டலங்கள் கணக்காக இத்தீர்த்த நீரில் குளிக்கவருவார்கள். பைத்தியம் தீர்ப்பது இதன் மகிமை என்பர்.

### திருப்பெயர்கள்

முருகக்கடவுள் பூஜித்த தலம் ஆகையால் சுவாமிக்கு முருகநாதர் என்ற பெயர் அமைந்திருக்கிறது. அம்மனுக்கோ முயங்கு பூண்முலை அம்மை என்பதாகும். இப்பெயரை தேவாரத்தில் காணலாம். இதன் தல மரம் முல்லை அல்லது மாதவி. முன் காலத்தில் இந்த இடம் முல்லை வனம் அல்லது மாதவி வனம் எனப்பெயர் பெற்றிருந்ததாம். அதனை சுந்தரமூர்த்திகளே தம் தேவாரத்தில் காட்டியிருக்கின்றார். இவ்வனத்தில் வேடுவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய தொழில் ஆறலைப்பது. இச்செயலை சுந்தரமூர்த்திகள் இடத்திலும் வேடுவர்கள் காட்டினார்கள்போலும்.

### பிற ஆலயங்கள்

இந்தத் தலத்து ஆறு நள்ளாறு என்பது. அவ்வாறே அவிநாசிக்கருகில் உள்ளது. அது அவிநாசியிலிருந்து திருமுருகன் பூண்டி வழியாய் ஓடி நொய்யல் என்ற காஞ்சிமா நதியில் பாய்கிறது. ஆலயத்திற்கு அருகில் வேறு ஆலயங்கள் இரண்டு உண்டு. ஒன்று மாதவனேசுவரர் ஆலயம், மாதவி வனத்தில் கட்டப்பட்டதால் இப்பெயர் வந்ததென வேண்டும். மற்றொன்று கூப்பிடு பிள்ளையார் கோயில். இக்கோயில் ஆலயத்திற்கு மேற்கே சிறிது தூரத்தில் ஒரு பெரும் பாறையின் பேரில் கட்டப்பட்டுள்ளது. இதன் ஐதீகம் தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. பின்னர் கூறுவோம்.

## ஐதீகம்

முருகநாதர் ஆலயம் மிகப் பழமையானது. இதில் கல்
வெட்டுகள் பல உண்டு. சுந்தரமூர்த்திகள் இத்தலத்துக்குச்
சென்று "கொடுகு வெஞ்சிலை" என்ற திருப்பதிகம் பாடி
யிருக்கின்றார். இவ்வனத்து வேடுவர்கள் சுந்தரமூர்த்திகள்
சென்றபோது சேரமான் பெருமானிடத்திலிருந்து
கொண்டுவந்த பொருளைக் கவர்ந்தார்கள் என்றும் அவர்
கண்டு சுந்தரமூர்த்திகள் இத்தேவாரத்தை அருளிச் செய்து
கொள்ளைபோன பொருளை மீண்டும் பெற்றாரென்றும் ஐதீகம்
கூறுகிறது. இவ்வைதீகம் பல நூல்களில் பலவாறாக மாறி
யிருக்கக் காண்கிறோம். பெரிய புராணத்தில் உள்ள சரிதப்
போக்கை ஒட்டி பேரூர்ப்புராணமும், திருமுருகன் பூண்
டிப் புராணமும் கூறுகின்றன. ஆனால் திருமுருகன் பூண்டிப்
புராணத்திலோ கர்ணபரம்பரைக் கதையை யொட்டிச் சில
மாறுபாடுகள் கூறப்பட்டுள்ளன. சிவபெருமான் கணங்களை
வலி வேடர் உரு எடுக்கச் செய்து சுந்தரமூர்த்திகளுடைய
பொருளைக் கவர்ந்தாகவும் அச்செய்கையை நோக்கிய பிள்ளை
யார் கூ கூ என்று கதறிக் களவை வெளிப்படுத்தியதாகவும்
அதற்காகப் பெருமான் பிள்ளையாரை அடித்து ஒரு பசிய
மரத்தடியில் இரக்கத்துடன் இருக்கக்கடவாய் என்று சபித்த
தாகவும் அன்று முதல் அப் பிள்ளையாருக்குக் கூப்பிடு பிள்ளை
யார் என்ற பெயர் வந்ததாகவும் அவ்வைதீகம் கூறுகிறது.

## புராண நூல்

திருமுருகன்பூண்டிற்கு 17 சருக்கங்களும் 618 திருவிருத்
தங்களும் அடங்கிய ஒரு புராணம் உண்டு. அதனைப் பாடிய
வர், செட்டிப்பாளையம் வித்துவான் வாசுதேவ முதலியாரவர்
கள். செய்யுள் நடை சிறந்தது. இதில் வேடுபறிச் சருக்கம்
என்ற பகுதியில் சுந்தரமூர்த்திகளுடைய சரித்திரத்தைக் கூறு
கிறார். கொள்ளைபோன பொருளைக் கணங்களாகிய வேடுவர்
களே திருப்பிக் கொடுத்துவிட்டதாக அவர் கூறுகிறார்.
அவிநாசிப் புராணத்திலோ அப்பொருள், கோயில் கணக்குப்



பிள்ளை வாயிலாக கொடுக்கப்பட்டது என்று கண்டிருக்கிறது.
இன்னும் பல வேறுபாடுகள் இவர் நூலில் காணலாம்.

## பாடல்

திருமுருகன் பூண்டித் தேவாரம் மிகச் சிறப்புடையது.
நிந்தாஸ்துதியில் துதிக்கப்பட்டது. "கள்வர்கள்
ஈசனை நீர் பார்ப்பது தகுதியோ? எத்துக்கிருந்தீர்
கொள்ளைகொள்ள, என்று வியந்து கூறுகிறார். தலத்து விவரங்கள்
எம்பிரானே" அடங்கி யிருக்கக்காணலாம்.
முழுமையும் திருப்பாடல்களில் மேற்சொல்லிய தலபுராண
இத்தேவாரப் பதிகத்தைத் தவிர தற்காலச் சிறுநூல் ஒன்றும்
மும் சுந்தரர் வேடுபறி என்ற
நமக்கு கிடைக்கின்றன.

## பெருமை

இவ்வூர் மிகச்சிறியதாயிருந்த போதிலும் மேலே கூறிய
படி பித்தரோகத்தை தீர்க்கும் மகிமை பெற்றதாகும். இன்
றைக்கும் இருப்புச் சங்கிலிகளால் கட்டப்பட்ட பைத்தியக்
காரர்களை இக்கோயில் மண்டபங்களில் காணலாம். இவ்வூர்க்
குடியிருப்பு சிறிய அளவில் இருந்தபோதிலும் இங்கே விக்கிர
கங்களை வெகு நன்றாகச் செய்யும் சிற்பத்தொழில் குடும்பங்
கள் சில உண்டு. இவ்விரண்டிற்கும் இவ்வூர் பேர் போனது
ஆகும்.

---

3. சாத்திரப் பகுதி

# சாத்திரத் துணுக்குகள்

கோ. சி.

வட மொழியில் நூல்கள் மூன்று வகைப்படும் :

1. பிரபு சங்கிதை - தலைவன் ஆணை
   1. சுகிர் சங்கிதை - நண்பன் சொல்
   2. காந்தா சங்கிதை - காதலி நூல் என்பன.
   3. 

பிரபு சங்கிதை இறைவனைப்பற்றிக் கூறும் நூல், சுகிர் சங்
கிதை நண்பனைப்பற்றிக் கூறும் நூல், காந்தா சங்கிதை காதலி
யைப் பற்றிக் கூறும் நூல் ஆகும். இப்பாகு பாட்டில் பெரிய

புராணமாகிய திருத்தொண்டர் புராணம் எதில் சேர்ந்தது
என்று ஆராய்வோம். இல்லறத்துப் பெண்மணிகளுடைய சரி
தங்கள் அதில் கூறப்பட்டபோதிலும் அது அவர்களுடைய
காதல் தன்மையை விளக்குவதல்ல. அவர்கள் இறைவன்
பால் வைத்த அன்பை எடுத்துக் கூறுவதாகும். பல நண்பர்
களின் வரலாறுகளை ஆங்காங்கு கூறின போதிலும் அது
மக்கள் நட்பை விளக்குவதற்காக வரவில்லை. அவ்வித
நட்பினால் இறைவன் அன்பைப் புகட்டுவதற்கே ஏற்பட்டது.
ஆகவே அது சுகிர் சங்கிதை அல்ல. இனி அது பிரபு சங்கிதை
ஆகுமோ என்று கவனிக்கலாம். திருத்தொண்டர் புராணம்
அப்பெயருக்கு இசைய தொண்டர் சரிதங்களைக் கூறுகின்றது.
அத்தொண்டர் வாழ்க்கை முழுதும் இறைவன் வழிபாடே
ஆகும். ஆகவே, அத்தொண்டர் சரிதம் மூலமாக இறைவ
னுடைய அருள் தன்மையை அந்நூல் விளக்குகிறது. ஆகவே
பெரிய புராணம் உண்மையில் பிரபு சங்கிதை ஆகும் என்க.

2. புராணம் என்பது ஒரு வட சொல். அதன்
பொருள் பழமை என்பது. பழைய வரலாற்றைக் கூறுவது
புராணம் ஆகும்.

ஜீவனம் + மூததம் என்ற இரு பகுதிகள் ஜீமூதம் என்று
ஆகும். ஜீமூதம் என்றால் மேகம் என்ற பொருள். நீரை
வந்தி அளிப்பது மேகம். ஜீவியத்தைத் தரும் நீரை அது
அளிப்பது அன்றோ.

புரா + ஆதனம் - புராணம் ஆயிற்று. புரா என்றால்
பழமை. ஆகவே ஆதனம் என்ற சொற்பகுதி பயனற்ற
பகுதி ஆகும். ஆனால் வழக்கில் வந்து விட்டது.

எப்படி என்றால், தமிழில் உப்பளம் என்ற சொல்லை
எடுத்துப் பார்ப்போம், அது, உப்பு + அளம் என்ற இரு
பகுதிகள் சேர்ந்து உப்பளம் என்ற ஒரு சொல் ஆயிற்று.
அளம் என்றாலே உப்பு விளையும் நிலம் என்று பொருள்.



(உ - ம்.) அளப்பூர் (தரங்கம்பாடிக்கு அருகில் உள்ள ஒரு
வைப்புத்தலம்) ஆகவே உப்பு என்ற பகுதி வீண் தானே.
இருந்தாலும் உலக வழக்கில் உப்பளம் என்றே வழங்கு
கிறது.

இது போலவே புராணம் என்ற சொல்லும் வந்திருக்கி
றது.

(இக் கருத்துக்கள் திரு. ஞானியார் சுவாமிகளால்
திருச்சிச் சைவ மாநாட்டில் பேசப்பட்டன.)

---

4. சமயப்பகுதி

## நமது 42-வது சைவ மாநாடு

இந்த ஆண்டுச் சைவ மாநாடும், சைவ சித்தாந்தம்
சமாஜத்தின் ஆண்டு நிறைவு விழாவும் கோவையிலே நடை
பெறும். எப்போதைப்போலவே இளைஞர் மாநாடும்,
மங்கையர் மாநாடும் நடைபெறும். விவரங்கள் தனியாக
வெளியிடப்படும். சைவத்தில் சிறந்த பெரியார்களும் மக்கட்
சேவையில் சிறந்த பணியாளர்களும் நாட்டாண்மைக்காரர்
களும் இதில் கலந்துகொள்ள முன்வந்திருப்பது ஒரு கவனிக்
கத்தக்க செய்தி. இதுவரைக்குமில்லாத ஒரு புதிய
திட்டமும் செய்யப்பட்டு வருகிறது. அது கலையியல் காட்சி
யாகும். தமிழ் நாட்டுத் தேவாலயங்கள் முதலிய நிலையங்களில்
நாம் காணும் எண்ணெண் கலைகளும் எவ்வாறு சிறப்புற்
றிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டவே இக்கண்காட்சி
அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் சிறப்பாக கொங்கு
நாட்டினுடைய பெருமைகள் எடுத்துக் காட்டப்படும்.
இதற்குப் பல பெரியார்கள் உதவி புரிவதாக வாக்களித்துள்
ளார்கள். ஆகவே சைவ அன்பர்கள் மிகுதியாக வந்து
இதனால் பயன் அடைவார்களாக.

தற்போதைய காலம் மிகவும் நெருக்கடியானது.
விதத்தில் மகிழ்ச்சியும் மற்றொரு விதத்தில் ஒரு
தோன்றியிருக்கும்படியான காலம். இதுவரைக்கும் துயரமும்
பட்டிருந்த நாட்டு மக்கள் இப்பொழுது உரிமை அடிமைப்
கிறார்கள். அது மகிழ்ச்சி தரத்தக்க செய்தி. பெற்றிருக்
வந்தவுடனே மகிழ்ச்சி மறைந்து துயரம் அவ்வுரிமை
நாட்டில் வடபுறத்தில் இரத்தக் களறி ஏற்பட்டு தோன்றுகிறது.
முடியாத் துன்பம் அடைகிறார்கள். நினைக்க
எங்கும் கட்டுப்பாடுகள் தோன்றி மக்களின் தென்புறத்திலோ
உரிமைகள் மறைந்து விடுகின்றன. பண்டை அடிப்படையான
இருந்த தேவைகளும் இப்பொழுது இல்லாமற் மனிதனுக்கு
உணவு, உடை, உறையுள் இம்மூன்றுமே மனிதன் போயின.
யது முதல் ஏற்பட்ட தேவைகளாகும். நாகரீகம் தோன்றி
முதிரத் தேவைகள் மிகுந்தன. ஆனால் முதிர
இம்மூன்று தேவைகளிலும் இன்றைக்கோ
டுள்ள ஆபத்துக்கு அளவில்லை. மனிதனுக்கு ஏற்பட்
யைக் கோரி போர்க்காலங்களில் நாட்டின் நன்மை
பாடுகள் ஏற்படுத்தினார்கள். இம் மூன்றிலும் கட்டுப்
இன்னமும் தொலைந்தபாடில்லை. இம்மூன்று கட்டுப்பாடுகளும்
அளவில்லை. இதற்கு சமயம் ஏதாவது மக்களுடைய துயரத்திற்கு
'ஆம்: காட்ட முடியும்' என்று வழி காட்ட முடியுமா?
டவர்கள் கூறுகிறார்கள். சமயத்தின் சமயத்தில் ஈடுபட்
அறியாதவர்கள் இதை நம்பமாட்டார்கள். உண்மைத் தத்துவத்தை
இதற்குத்தக்க விடையளிப்பார்கள். அறிந்தவர்களோ
மக்களுக்கு எல்லாவிதங்களிலும் சமயம் என்றால் பொது
இருக்கவேண்டும். தாழ்ந்த நிலையில் இன்பத்தை தரக்கூடியதாய்
நிலைகொடுக்கவேண்டும். இருப்பவர்களுக்கு உயர்ந்த
விருந்து விடுதலை தர ஏக்கங்கொண்டவர்களுக்கு ஏக்கத்தி
களுக்கு இன்பத்தைத் தரவேண்டும். வேண்டும். துன்பத்தில் ஆழ்ந்தவர்
இதனையே நாயன்மார்



கள் செய்தார்கள். அதனைச் செய்ததற்காகவே நமது சமாஜம் முற்பட்டு வருகிறது. தமிழ் மக்கள் எல்லோரும் இதற்கு ஆதரவு அளிப்பார்களாக.

இந்த ஆண்டு மற்றொரு நற்செய்தி நடைபெறப் போகிறது. தருமபுரத்து ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் அவர்கள் கண்காட்சிக்கு நூல்கள் முதலிய பொருள்கள் அனுப்பக் கருணை கூர்ந்திருக்கிறார்கள். ஏனைய சைவ மடாலயங்களும் இவ்வகையில் ஈடுபடும்படி வேண்டப்படு கிறார்கள். மேலும் சைவ சமயத்தைப்பற்றி ஐஸ்கூல்களில் மேல் வகுப்புக்களில் பயிலும் மாணவர்கள் படித்து புரிந்து கொள்ளக்கூடியதாக 100 பக்கங்களுக்குக் குறையாமல் உரை நடையில் அமைத்து சிறந்த கட்டுரை எழுதித்தருபவர்களுக்கு 250 ரூபாய்க்குக் குறையாமல் ஒரு பரிசு வழங்குவதாகவும் அதற்குத் தேர்தல் குழு அமைப்பதாகவும் அந்தப் பரிசை சமாஜக் கூட்டத்தில் வழங்குவதாகவும் மகாசன்னிதானம் திருவுளங் கொண்டுள்ளது. இது தமிழ் மக்கள் மிகவும் பாராட்டத்தக்க ஒரு செய்தியாகும். சைவ மக்களின் நன்றி மகாசன்னிதானத்துக்கு உரியது ஆகும். தமிழாசிரியர்கள் இம்முயற்சியில் ஈடுபடுவார்களாக. ஏனைய மடாதிபதிகளும் இவ்விதமான கைங்கரியங்களில் ஈடுபடுதல் அவரவர்கள் கடமையாகும்.

---

5. கலைப் பகுதி

# கலைத்தோற்றமும் பெருக்கமும்

அழகு மதியன்

உலகில் ஒவ்வொரு உயிரும் நன்கு வாழ விரும்புகிறது. அவ்வாழ்விலும் நீண்டநாள் வாழவிரும்புகிறது. அவ்வாழ்க்கை இன்பமாகவே இருக்கவேண்டும் என்று விரும்புகிறது. துன்பத்தைப் போக்கவும் முயலுகிறது. அந்த நோக்கத்

துடன் உடலை ஓம்புகிறது. அந்த வகையில் இன்றியமையாத பொருள்களைப் பெறவேண்டி முயலுகிறது. தாழ்ந்த நிலைமையில் இருக்கும் உயிர்களுக்குத் தேவைகள் மிகக்குறைவு. அறிவு பெருகப் பெருக தேவைகள் மிகுகின்றன. இன்றியமையாத தேவைகளை முதலில் பெற முயலுகின்றன, அவைகளைப் பெற்ற பிறகுதான் மேல் உள்ளவற்றைப்பற்றி விழைகின்றன. இந்த நிலைமையை இயற்கையில் காண்கிறோம்.

புழு, பூச்சி முதலிய உயிர்களுக்கு உணவு பெறுதல் ஒன்றே வாழ்க்கையின் இலக்கு எனல் வேண்டும். உண்டு விட்டால் போதும் மகிழ்ச்சி அடையும். பிறகு இன்பம் அடைந்து உயிர்களைப் பெருக்க முயலும். அதன் பிறகு வாழ்க்கையின் நோக்கம் முடிவடைந்து இறந்துவிடும். ஆடு, குதிரை முதலிய விலங்குகள் குளிர் தாங்க முடியாமல் மயிரை வளர்த்திக் கொள்ளும். அதனாலே அவைகள் இன்பம அடையும். குருவி காக்காய் முதலிய பறவைகள் வசிக்க இடம் தேடிக் கூண்டுகட்டி வாழும். அதனாலே அவைகளுக்கு இன்பம் வருகிறது. பெரிய காட்டு விலங்குகளாகிய சிங்கம், புலி முதலியவைகளும் இயற்கைக் குகைகளை உறைவிடங்களாகக் கொண்டு வாழ்கின்றன. ஆகவே உயிர் வகைகளில் வயிற்றுக்கு உணவு, குளிர்தாங்க மயிர், உறையக் கூண்டும் குகையும் இவைகளை விரும்பிப் பெறுகின்றன. இவைகள் தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்து வர வர ஏற்படக்கூடிய இன்றியமையாத தேவைகள். ஆகவே உயிர்களிலும் அறிவு ஏற ஏறத் தேவைகள் பெருகுகின்றன.

இதே இயல்பு மனிதனிலும் உண்டு! மனிதன் உயிர்களை விட ஒரு படி உயர்ந்தவன். உயர்ந்த உயிர்களும் ஐந்து அறிவே கொண்டவைகள். தொடுதல், முகரல், கேட்டல், சுவைத்தல், காணல் என்பவை மட்டும் உயர்ந்த விலங்குகளுக்கும் உண்டு. ஒன்றிரண்டே நினைத்தலைச் சிறிய அளவையில் கொண்டுள்



ளன. ஆனால் மனிதனோ பகுத்தறிவு என்பதைப் பெற்று ஆறுயிர் கொண்டவனாக இருக்கிறான். அப்படி உயர்ந்த அறிவைக் கொண்ட மனிதனுடைய இன்றியமையாத தேவைகள் மிகுதியாக இருக்க வேண்டியது அல்லவா. அவற்றைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

பண்டை மனிதன் உயர்ந்த விலங்காகிய மனிதக் குரங்கை விட மிகுதியான அறிவைப் படைத்தவன் அல்லன். விலங்குகளைப் போலவே அவனும் உணவைத் தேடினான். முதலிலே தன்னைவிட வலிகுறைந்த விலங்குகளை வதைத்து அவற்றின் ஊனை உண்டு பிழைத்து வந்தான். ஆகவே வேட்டை ஒன்றே அவனுடைய தொழிலாக ஏற்பட்டது. மற்றும் தானாய் முளைத்த கிழங்கு, காய், பழம் முதலியவைகளைத் தேடித் தின்று பிழைத்து வந்தான். பிறகு அவனுடைய அறிவு முதிர முதிர தேவை மிகுதியாயிற்று. நிலத்தில் பயிர் செய்தலைக் கண்டு பிடித்து உழவுத் தொழிலை மேற்கொண்டான். இவ்வாறு அவனுடைய தேவைகள் மிகுதி ஆக ஆக அவனுடைய தொழிலும் சீர் அடையத் தொடங்கிற்று.

பண்டைய மனிதனுடைய இரண்டாவது தேவை உடை. விலங்குகள் உடை தேடுவதில்லை. சில உயிர்களே இயற்கை மயிர்களையும் இறகுகளையும் பெற்றிருக்கின்றன. மனிதனோ இயற்கைப் போர்வை பெறாதவன். ஆகையால் செயற்கைப் போர்வை தேடத் தொடங்கினான். முதலில் அவன் இலையுடை, மரப்பட்டை உடை முதலியவைகளைக் கட்டிக்கொண்டு குளிரையும் வெப்பத்தையும் தாங்கி வந்தான். இவைகள் இல்லாத நாட்டில் தோலையும் மயிரையும் புனைந்தான். பிறகு அறிவு முதிர முதிர மயிரினாலும் பஞ்சினாலும் பட்டினாலும் நேர்த்தியான உடைகளை நெய்யத் தொடங்கினான். இது உடையின் வளர்ச்சி. இந்த வளர்ச்சியில் இயந்திரங்களும் உண்டாக்கி அவைகளின் மூலம் உயர்ந்த உடுப்புகளைச் செய்ய முயன்றான்.

இனி மூன்றுவதாக உறை உள் அல்லது இருப்பிடம்
ஒரு தேவை. பண்டை மனிதன் விலங்குகளைப் போலவே
முதலில் கற்குகைகளில் பதுங்கிக் கொண்டிருந்தான்.
தோண்டின குகைகளில் வாழ்ந்தான். பின்னர் மண் வீடுகள்
செங்கல் வீடுகள், மாடங்கள், மாளிகைகள் முதலியவற்றை
விருத்தியாக்கிக்கொண்டே வாழ்ந்தான், ஆகவே அவனிருந்த
இருப்பிட வசதியையும் மேன்மைப் படுத்திக்கொண்டான்.

இந்த மூன்று தேவைகளை அடைந்த மனிதன் பல
இன்பத் துறைகளில் புக்கு அவைகளுக்கு வேண்டிய வசதி
களைத்தேடத் தொடங்கினான். முதலில் இன்பப் பொருள்
களாக இருந்தவைகள் பின்னால் தேவைகளாகியும் விட்டன.
பண்டை மனிதனுக்கு இன்பப் பொருளாகி இருந்தவை
நாகரீகம் பெற்றவனுக்கு தேவைகள் ஆகிவிடும். உதாரணமாக
வாகனங்கள் பண்டை மனிதனுக்கு இன்பப் பொருள்களே.
ஆனால் நாகரீக மக்களுக்குத் தேவையான பொருள்களாம்.
இந்த வகை முதிர முதிர, மாட்டு வண்டி குதிரை வண்டி
யாகிப், பின் புகை வண்டியாகிப், பிறகு விசை வண்டியாகும்.
நீரைக் கடக்கக் கப்பலாகியும் ஆகாயத்தைத் தாண்ட விமான
மும் ஆகிவிட்டதல்லவா. இந்த வகையில் மனிதனுடைய தேவை
கள் பெருகுகின்றன. இவைகளை உண்டு செய்யும் அறிவே
கலைஞானம் என்பர். இதனால் தேவையே கலைஞானத்தின்
தோற்றத்திற்கு அடிப்படையான காரணம் ஆகின்றதல்லவா ?
ஆனால் ஒன்று வடுருவி நிற்கக் காண்கிறோம். தேவைகள்
மிகுதியாக ஆக மனிதன் திருப்தி அடைந்தபாடில்லை. கலைகள்
ஓங்கி வளருகின்றன. ஒரு பெரும்போர் ஏற்படுகிறது. இன்பப்
பொருள்கள் எல்லாம் மறைந்து போகின்றன. அடிப்படை
யாக இருந்த உணவு, உடை, உறை உள் என்பவைகளே
மீண்டும் தேவைகள் ஆகி நிற்கின்றன. இப்போது நமது
நாடு இம்மூன்று தேவைகளையும் பெறுவதற்கு எத்தனை



முயற்சிகளைத் தேடுகின்றன ! அறிவாளிகள் அறிவு முழுதும் பயன் படுத்தியும் இத் தேவைகளை மக்களுக்குக் கொடுக்க முடியவில்லையே. ஆகவே தேவைகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டாம் ; உள்ளதே போதும் என்று இருத்தலே நலம் அல்லவா. உண்மையான கலைஞானம் அந்த நிலையில்தான் இருக்கிறது.

---

## 6. கவிப் பகுதி

# ஒருவர்

R. துரைசாமி ஐயர்

உலகில் ஆண்டவனால் படைக்கப்பட்ட பொருள்கள் எண்பத்து நான்கு லக்ஷம் என்று நூல்கள் கூறுகின்றன. "உரை சேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம் யோனி பேதம் நிரை சேரப் படைத்து" என்பர் திருஞானசம்பந்தர்.

ஆயின், இவ்வளவு பொருள்களையும் தனித் தனியே சொல்வதற்குச் சொற்கள் வேண்டுமே. அவ்வளவு சொற்களுக்கு நாம் என்ன செய்வது. சொற்கள் இருப்பினும் அவற்றைக் கற்க நமக்கு ஆயுள் வேண்டுமே. ஆயுளிருந்து கற்றாலும் அவை நினைவில் நிற்குமோ என்றெல்லாம் மனத்தில் கவலை தோன்றலாம்.

அங்ஙனம் கவலை தோன்றுமலிருக்கச் சாத்திரங்கள் இவ்வெண்பத்து நான்கு லக்ஷப் பொருள்களையும் மிக மிகச் சுருக்கி அவன், அவள், அது எனும் முப்பகுப்பில் அடக்கித் தந்துள்ளன. இப் முப்பகுப்பில் அடங்காத உலகப் பொருள் ஒன்று உண்டோ. இப் பரந்த பொருள்களை இங்ஙனம் முப்பகுப்பில் சாத்திரங்கள் அடக்கியுள்ளது நமக்கோர் பேருதவியன்றோ. " அவனவ ளதுவெனு மவைமூ விளைமையின் " என்பது சிவஞானபோதம்.

சேர்க்கவே ஒருவர் என்ற சொல் உண்டாகிவிட்டது. இச்
சொல் இருக்கும் போழ்து நாம் என் வருந்தவேண்டும்.
இச்சொல் ஒன்று என்பதிலிருந்து
இறைவனுக்கும் இறைவிக்கும் திருவுரு ஒன்று என்பதைத் தோன்றுவதால்
தெரிவிப்பதுடன், இருபாலுக்கும் பொதுவாகிய அர் என்னும்
பன்மையில் முடிவதால் அவ்விருவரையும் குறித்தும் நிற்கும்.
இத் தமிழ்ச் சொல் இல்லையானால் இறைவனையும் இறைவியை
யும் சேர்த்து நாம் எங்ஙனம் சொல்ல முடியும். இவ்வாறு
ஒருமையையும் பன்மையையும் குறிக்கும் சொல்லைத்தந்த
நம் தமிழ் வாழ்க ! தமிழ் வளர்க !!

இவ்வொருவர் என்ற சொல்லின் அருமையையும்
அழகையும் குறித்தே திரு. குமரகுருபரர் பின்வருமாறு
சிதம்பர செய்யுட் கோவையில் கூறுகின்றார்.

" அருவருக்கும் உலகவாழ் வடங்க நீத்தோர்க்கு
ஆனந்தப் பெருவாழ்வாம் ஆடல் காட்ட
மருவருக்கன் மதிவளிவான் யமானன் தீநீர்
மண்ணெனுமெண் வகையுருப்பின் வடிவு கொண்ட
ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன்றால் அவ்
வுருவையிஃ தொருத்த னென்கோ ஒருத்தி என்கோ
இருவருக்கும் உரித்தாக ஒருவரென்றோர்
இயற்சொலில தெனின்யான்மற் றென்சொல் கேனே "

---

7. ஆராய்ச்சிப் பகுதி

## சங்க காலத்துச் சிவனடியார்கள்

(கே. எஸ். வைத்தியநாதன், B. A.)

நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையில் " அப்பாலும்
அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன் " என்று போற்றின
தாலும், சேக்கிழாரடிகள் :



" மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோடும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்புதும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல் கொடியான் அடிச்சார்ந்தாரும்
செப்பிய அப்பாலு மடிச்சார்ந்தார் தாமே "

என்றதனாலும், திருத்தொண்டத் தொகையில் கூறாது விட்ட
சிவனடியார்கள் பலர் உள்ளனர் என்பது தெளிவு. சங்க நூல்
களில் கண்டுள்ள 'பத்தராய் பணிவார்கள்' சிலரை இங்கு
கூறுவோம். இவர்களைப் பற்றி அரிய அந்நூல்களுள் புற
நானூறே முதன்மையானது என்பது, தொகை நூல்களுக்கு
அவ்வத்தொகைக்கு ஏற்ற கடவுள் வாழ்த்துக்களைப் பாடிச்
சேர்த்த பாரதம் பாடிய பெருந்தேவனார், இத்தொகைக்கு
சிவபிரான்மீது கடவுள் வாழ்த்துச் செய்யுளை இயற்றியிருத்
தலாலே விளங்கும். சங்க காலத்து விளங்கிய அறுவகை
மதங்களுள் சிவபிரானது வழிபாட்டையே பலவிடத்தும்
முதன்மையாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நூல்
களுள் கண்டுள்ள செய்யுள்களை இயற்றியோர் பொய்யடிமை
யில்லாத புலவர்கள்.

வெறுத்தவேள்வி விளங்கு புகழ் புலவரென்றும்,
பொய்ம்மையில்லாத மெய்யடிமையுடையராம் பெரும் புலவ
ரென்றும், நம்பியாண்டார் நம்பியாலும், சேக்கிழாராலும்
புகழப்பட்டுள்ளனர். 'தமிழ்ச்சங்கமதிற் கபிலர், பரணர்,
நக்கீரர்முதற் நாற்பத்தொன்பது பல்புலவோர்' என்று நம்பி
யாண்டார் நம்பிகள் குறித்துப் போந்தனர். இவருள் கபிலர்
பாண்டியநாட்டுத் திருவாதவூரில் பிறந்தவர். புலன் அழுக்
கற்ற அந்தணாளன். 'அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய,

மறம்புரி கொள்கை வயங்கு செந்நாவின், உவலைக் கூடாக் கவலையினெஞ்சின், நனவிற்பாடிய நல்லிசைக் கபிலன்', 'வெறுத்தவேள்வி விளங்கு புகழ்க்கபிலன்' என்றும் அவர் காலத்துப் புலவர்களாலே புகழப் பெற்றமையின், இவரது மனோவாக்குக் காயங்களின் தூய்மையும், அறம்புரி கொள்கையும், பெரும்புலமையும், அன்பும், நட்பும், அதிகம் படைத்துள்ள பெரியாராக விளங்கினரென்பதும் தெளியலாகும். இவர் வேள்பாரியின் உயிர்த்தோழர். பாரியிறந்தபின் பாரி மகளிரை கோவலூர் மலையனுக்கு மணம் புரிவித்து திருக்கோவலூரில் தீப்பாய்ந்து உயிர்நீத்தனர் என்பது அத்தலத்து வீரட்டானேசுவரர் கோயில் கல்வெட்டொன்றால் தெரிய வருகிறது.

"மொய் வைத்தியலு முத்தமிழ்க் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரி தன்னடைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
அலைபுனலழவத் தந்தரிட்சஞ்செல
மினல் புகும் வீடு பேறெண்ணிக்
கனல் புகுங் கபிலக்கல்லது புனல்வளர்
பேரெட்டான வீரட்டானம்
அனைத்தினும அநாதியானது"

இச்சாசனப் பகுதியால் பெண்ணையாற்றங்கரையில் கபிலக் கல் என்ற துறை ஒன்று இருந்ததெனவும் வெளியாகின்றது: சிவபிரான் அடிபணிந்த செங்குட்டுவனையும், வேள்பாரியையும் பாடத் துணிந்த கபிலர் சிவனடியாரே.

பின்னர், நக்கீரனாரது பெருமை பலவாற்றானும் விளங்கும். அவர் தெய்வசக்தி வாய்ந்த பெரியார். நக்கீரதேவர் என்றும் கூறப்படுவார். இன்னும் மதுரையில் நக்கீரர் கோயில் ஒன்றுளது. திருவாலவாயார் தமிழ்ச்சங்கத்தில் இறையனா



ராகப் புலவர் வேடம் பூண்டு இவரை ஆட்கொண்ட வரலாறு தமிழறிஞர் யாவரும் அறிவர். இவரால் பிரதிட்டை செய்யப்பட்டதென்று கருதப்படும் சிவலிங்கப் பெருமான் நக்கீரநாதர், நக்கீரலிங்கம் என்னும் திருநாமத்தோடு திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கின்றனர். அத்தலத்தில், சிவபெருமான் கைலாயகிரியில் வீற்றிருக்கும் காட்சியை, இறைவனருளால் நக்கீரர் கண்டு கைலைபாதி காளத்தி பாதியென்னும் அந்தாதி பாடி ஈசனைப் போற்றினர். கூடற்பெருமானே இறையனாரென்னும் புலவராகத் தமிழ்ச்சங்கத்தின் பொய்யடிமையில்லாத புலவரிடையே விளங்கினர் என்ற உண்மையை நினைக்குங்கால் புலவரான இச்சிவனடியார்களின் பெருமைதான் எத்தன்மைத்து!

அக்காலத்து வண்தமிழ் நான்மறையாளர்களுள் சிறந்த, சோழநாட்டு வலவையில் தோன்றின பாரசரன் என்னும் அந்தணாளன், பல்யானை செல்கெழுகுட்டுவனது உதவியால் பெருவேள்விகளின் பயனாக பாலைக் கௌதமனார் தன் பத்தினியுடன் மேனிலையுலகம் அடைந்ததையும், சேரனது திருநிலை பெற்ற பெருநாளிருக்கையும், கொடைத்திறமும் கேட்டு, சேரமன்னர்பால் சென்று 'நாவலங்கொண்டு நண்ணாரோட்டிப் பார்ப்பன வாகைசூடி' பெரும்பரிசில் பெற்று, பாண்டிநாட்டுத் தங்கால் என்னும் ஊரடைந்து, அவ்வூரில் வாழ்ந்த வார்த்திகன் புதல்வன் தக்கிணாமூர்த்திக்கு அவன் வேதமுறை பிறழாது கசடற ஓதலைக் கேட்டு வியந்து, புனைகலமும் பூண்கலமும் கொடுத்து, தன் பதி சென்றான். இது பொறாது கோத்தொழிலாளர் சிலர் வார்த்திகனைப் படுபொருள் வெளவிய பார்ப்பனனென்று சிறையிட்டபோது, அவன் பத்தினி கார்த்திகையென்பாள் மிக்க துயரெய்தி பலவாறு புலம்பியதன் பயனாக மதுரையில் ஐயைகோயில் அடைபட்டது. இதனால் கொடுங்கோல் தன்னாட்டுள் உள்ளதென்று பாண்டியன் உண்மையறிந்து

வார்த்திகனை விடுவித்து, தங்கால், வயலூர் என்ற இரண்டு ஊர்களையும் அவ்வந்தணாளனுக்குப் பிரமதாயமாக ஈந்து உற்ற துயரை ஒருவாறாற்றினன். கலையமர் செல்வியின் கோவிற் கதவும் திறந்தது. மேற்குறித்த கௌதமனார், பராசரன், வார்த்திகன் என்ற மூவரும் ஆலமர் செல்வனை பரமசிவனைப் போற்றிவந்த சுருதி மார்க்கம் பிழையாத புலனழுக்கற்ற பெரியார்கள்.

புலவராகத் திகழ்ந்த மற்றொரு சிவனடியார் காரிகிழார். தற்காலத்து இராமகிரி யென்ற காரி என்னும் தொண்டை நாட்டூரிலிருந்த வேளாளர். பரமசிவனை வழிபடும் சிவநேசச் சான்றோர். அறச்செயல்களையும், வேள்விகளையும் புரிந்து பரிசிலர்க்குப் பகைவர் பாற்கொண்ட பல பொருள்களையும் வழங்கிவந்த பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியையே இவர் பாடினவர். அவனால் போற்றப்பட்டு வந்தார். புறநானூறு பதிப்பாசிரியர் மகாமகோபாத்தியாய சாமிநாதய்யரவர்கள் கூறுவதுபோல் 'இவருடைய செவியறிவுறூஉவை உற்று நோக்குகையில் வைதிக வொழுக்கிற் சிறந்தவராகக் கருதப்படுகின்றனர்; இவருடைய சிவநேயத்தையும் பெயரையும் பார்க்கும்பொழுது, பெரியபுராணத்துக் கூறப்படும் காரி நாயனார், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில், 52-ம் திருவிளையாடலில் வந்துள்ள காரியாரென்பவர்களுடைய ஞாபகம் வருகின்றது.'

“மறையாளர் திருக்கடவூர் வந்துதித்து வண்டமிழின்
துறையான பயன்தெரிந்து சொல்விளங்கிப் பொருள்மறையக்
குறையாத தமிழ்க்கோவை தம் பெயராற் குலவும் வகை
முறையாலே தொகுத்தமைத்து மூவேந்தர்பால் பயில்வார்.
அங்கவர்தாம் மகிழும்வகை அடுத்த உரை நயமாக்கிக்
கொங்கலர்தார் மன்னவர்பால் பெற்றநிதிக் குவைகொண்டு



வெங்கணராவொடுகிடந்து விளங்குமிளம் பிறைச்சென்னிச்
சங்கரனா ரினிதமரும் தானங்கள் பலசமைத்தார்.”

மற்றொரு திருத்தொண்டர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இப்புலவர் கரிகாலனையும், தொண்டைமான் இளந்திரையனையும் பத்துப்பாட்டுள் பாடியவர். இவர் பெயராலேயே சிவநெறிச்செல்வரென்று நன்கு விளங்கும்.

சுருங்கச் சொல்லவும் பெரும்பொருளைச் சிறு கவியிலடக்கவும் இயல்பாகவே திறமை பெற்று விளங்கிய இடைக்காடு என்னும் ஊரில் தோன்றிய புலவர் இடைக்காடனார் என்பவர். மதுரைத் திருவாலவாயரின் பத்தருள் ஒருவரென்று திருவாலவாய்ப் புராணத்தாலும், கடம்பவன புராணத்தாலும், பயகரமாலையாலும் விளங்குகிறது. இவர் கபிலருடைய நண்பர். 'ஊசிமுறி' என்னும் நூலை இயற்றியவர். இஃது ஆங்கிலத்திற்குச் சுருக்கெழுத்து (Short Hand) போல், தமிழிற்கு ஏற்படுத்திய நூலோ என்று ஐயம் எழுகின்றது.

ஔவையாரும் சிவனடியாராகத் திகழ்ந்தவர்களுள் ஒருவர் என அவர் பாடிய பாவால் விளங்கும். அதிகமான், கிடைத்தற்கரிதான, உண்போர் நீடூழி வாழச்செய்யும், அருமையும் பெருமையுமுடைய கருநெல்லிக்கனி ஒன்றை, தான் உண்ணாது ஔவையாருக்குத் தந்தருளினபோது அவனை அப் புலவர் “பால்புறை பிறைநுதல் பொலிந்த சென்னி, நீலமணி மிடற்று ஒருவன்போல மன்னுக,” என வாழ்த்தினர். இவரது சிவனடிப் பேரன்பு ததும்புதல் காண்க.

மற்றும் சங்கப்புலவர்களுள் பேரெயின் முறுவலார், சோழன் நல்லுருத்திரன் முதலியோர் சிவபிரானையே போற்றி வந்தனர் என்பது அவர்கள் பூண்ட பெயர்களாலேயே போதரும்.

இனி அக்காலத்துச் சிவனடியார்களுள் மேற்கூறிய பொய்யடிமையில்லாத புலவர்கள் வாழ்த்தின அரசர்களுள் சிலராவர். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி திருத்தொண்டர்களுள் முதன்மையானவர். காரிகிழாராலும், நெட்டிமையாராலும், நெடும்பல்லியத்தனாராலும் பாடப்பட்டார். முக்கட்செல்வராகிய சிவபிரான் கோயிலன்றி வேறொன்றையும் முதுகுடுமி வலஞ்செய்யார். பகைவர்கள் பலரை அறப்போரால் வென்று கைக்கொண்ட பல பொருள்களை பரிசிலர்க்குக் கொடுத்துதவிய வள்ளல். நான்மறை முனிவரால் வாழ்த்தப்பட்டவர். மூவேந்தர்களுள் தலைவனாக பரமேசுவரன் என்ற பெயருடன் விளங்கினவர். கேள்வியந்தணாளருக்கு வேள்விச் சாலைகளில் பான்முறையில் பிரமதாயங்கள் பல நல்கினவர். அவர் காலத்தில் சுருதி மார்க்கம் பிழையாத கேள்வியந்தணாளர்கள், வேள்வி முற்றிய நான் மறை முனிவர்கள் முதலிய சிவநேசச் செல்வர்கள் பலரிருந்தனர் என்று புறநானூறும், வேள்விக்குடி சாசனத்தாலும் தெரிகின்றது.

மற்றொரு சிவபத்தர் சேரவம்சத்துப் பெரும் புகழ்பெற்ற அரசன் செங்குட்டுவேன். இவ்வேந்தன் சிவபிரான் திருவருளால் உதித்தவர் என்றும் இறைவனருளால் விளங்கினவன் என்றும் இவன் தம்பி இளங்கோவடிகளே போற்றுவர். அதனால் நெடுஞ்சேரலாதன் சிவபெருமான் திருவருளை நோற்று இம்மகன் பெற்றதனை அறியலாம். இறைவனைப் பற்றி பிறரை வணங்காச் சென்னியையுடைய பரம பத்தர். எனினும் பிறசமயங்களில் வெறுப்புக்காட்டார். பத்தினிக் கடவுளுக்குக் கற்கொள்வேண்டி இமயத்திற்குப் புறப்படுமுன் சிவபிரான் பாதுகைகளை வணங்கிச் சிரசில் தரித்துக்கொண்டு “கடக்களியானை பிடர்த்தலை ஏறி” நின்ற காலை ஆடக மாடத்து அறிதுயலமர்ந்தோன் கோயிலினின்று சிலர் வந்து பிரசாதத்தை வழங்க, சிவபிரான் திருவடிநிலைகளை தலைமீது



தரித்து செங்குட்டுவன் மஹாவிஷ்ணுவின் சேடத்தை மணி புயத்தில் தாங்கிச் சென்றனனென்று கூறும் கால்கோட்காதையின் பகுதி இவனது சிவபத்தி மிகுதியை தெரிவிக்கிறது. “பாரதி பாடிய பாரதி யரங்கத்துத் திரிபுரமெரியத் தேவர் வேண்ட எரிமுகம் பேரம்பேவல் கேட்ப உமையவளொரு திறனாக வோங்கிய இமயவனுடிய கொடுகொட்டி”யை மிகவும் ஆதரித்து வளர்த்தவர்.

கரிகாற் பெருவளத்தான் முதுகுடுமிக்குப் பிற்பட்ட காலத்தவன். அரசு கட்டிலேறியபோது, பொறாது எதிர்வந்த தாயத்தாரை, செங்குட்டுவன் உதவிகொண்டு வென்றான். அவன் அரசுரிமை பெற்ற செய்தி மூர்த்திநாயனார் அரசுரிமை பெற்ற வரலாற்றைப்போல் உள்ளது. காஞ்சிமா நகரில் சிவாலயத்தைப் பொன்னால் புதுக்கினான் என்று சிலப்பதிகாரத்தாலும், திருவாலங்காட்டுச் செப்புப்பட்டயத்தாலும் சேக்கிழாரடிகள் வாக்காலும் தெளியலாம். கரிகாலன் சங்ககுலத் உதித்த பலரை தொண்டை நாட்டில் குடியேற்றினான் என்றும், காவேரி நதிக்கு அணைகளுங் கரைகளுங்கட்டி சோழநாட்டை செழிக்கும்படி செய்தான் என்றும் பலவகையால் அறிவோம்.

மற்றொரு திருத்தொண்டர் கரிகாலனுக்குப் பின் வந்த கோச்செங்கண்ணனார். இவர் 63 நாயன்மாருள் ஒருவர். கணைக்கால் இரும்பொறை என்னும் சேரமன்னனைச் சிறைப்படுத்தின பெரும்போர் மன்னன். தன் காலத்தில் மூவேந்தரிலும் தலைமைப்பட்டவர். அந்தணர்கள் பலரைச் சிதம்பரத்தில் வசிக்கச் செய்தவர். சிவபிரானுக்குப் பல மாடக்கோயில்களைச் சோழநாட்டில் எடுப்பித்தவர். இவர் காலம் முதல்கொண்டே தில்லை சிறப்புற்று விளங்கியது. இவர் ஞானசம்பந்தரால் புகழ்ப்பட்ட சிவனடியார். முற்பிறப்பில் ஜம்புகேசுவரத்தில் சிலந்தியாகப் பிறந்து சிவலிங்கத்தின்மேல் வெயிற்படாமல் நூற்பந்தரிழைத்து புரிந்து வந்தத் திருத்தொண்டின் பயனாக

முடிமன்னனாகவும், நாயனார்களுள் ஒருவராகவும் பிறக்கும் பாக்கியம் பெற்றவர் என்று மூவர் தேவாரத்தாலும், திருவாலங்காட்டுச் சாசனத்தாலும் அறிவோம். “ தென்னவனாய் உலகாண்ட செங்கணான் ” என நாயனாரைச் சுந்தரரும் சிறப்பித்தார்.

இனி குறுநில மன்னரான வேளிர்களில் விளங்கின சிவனடியாரை வரைவோம். மேற்கூறிய புலனழுக்கற்ற அந்தணாளன் கபிலரின் உயிர் நண்பனும் அவரை ஆதரித்தவனுமான பறம்பு நாட்டுத் தலைவர் வேள்பாரி யென்பார். இவர் தமக்கென வாழா பிறர்க்குரியாளர். தென்னாட்டு 300 ஊர்களையும் பரிசிலர்க்குக் கொடுத்த பெரும் வள்ளல். பொற்பூக்களை பாணர்க்கு நல்கும் வழக்கமுடையார். காட்டில் செல்லும்போது, சிறிய பூக்களை உடைய முல்லைக்கொடி ஒன்று தவழ்வதற்கு ஒன்றுமில்லாமல் காற்றிலசைந்துத் தவித்துக்கொண்டிருப்பதைக் கண்டு உள்ள முருகி தான்சென்றுகொண்டிருந்த பொன்னாலலங்கரிக்கப்பட்ட தேரை அது படருவதற்கு அதனருகில் நிறுத்திவிட்டுத் தான் நடந்து சென்றார் என்றும் சிறுபாணாற்றுப்படைப் புலவர் கூறுவர். இறைவன் ஒளியை இயற்கையின் பல்லுருவங்களுள்ளும் கண்ட முன்னோர்களுள் ஒருவர் அருள்வாய்ந்த இதயத்தின் செயல் இது. சிவபிரான் மீதுள்ள பெரும் பத்தியால் தன்னாட்டுள், பிரான்மலைக்குப் பக்கத்தில் இறைவனுக்கு ஒரு சிவாலயம் கட்டுவித்து வழிபட்டதன் காரணமாக அக்கோயிலுக்கு பாரீசுரம் எனப்பெயர் வழங்கலாயிற்று. மாட்சிமைப்பட்ட இப்பாரியின் வள்ளன்மையைப் பிற்காலத்துத் தோன்றிய சுந்தரமூர்த்தி நாயனார் ‘கொடுக்கிலாதானை பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை’ யெனத் தமது தேவாரத்தில் பாராட்டியுள்ளனர்.

வேளிர்குலத்து மற்றொரு தொண்டர் ஆய் என்பவர். இவர் வேள்பாரிபோல் கடையெழு வள்ளல்களில் ஒருவர்.



சிறந்த வீரர். பொதியின்மலைக்குத் தலைவர். அதனருகேயுள்ள ஆய் குடியென்பது இவரது முதன்மையான ஊர். இவருக்கு அண்டிரன் என்னும் மற்றொரு பெயருண்டு. சுரபுன்னை மாலையையுடையவர். இரவலர்க்கும் பாணர்க்கும் யானைகளையும் பரிசில்களையும் வரையாது கொடுத்த வள்ளல். சிவபெருமான்மீது பெரும் பத்தி பூண்டவர். இவர் வரலாற்றுள் ஓர் ஒப்பற்ற சிவநேயச் செயல் காண்கின்றோம். இதை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் மிகவும் வியந்து பாடியுள்ளார். ஒரு காலத்தில் இவருக்கு ஒரு நாகப்பாம்பு ஒளி விளங்கும் நீல நிறத்தையுடைய உயர்ந்த உடை ஒன்று கொடுத்ததென்றும் அந்த திவ்விய உடையை ஆலமர் செல்வர்க்குத் திருமேனிப் போர்வையாக போர்த்து பெருமகிழ்ச்சியடைந்து இனிதமர்ந்தனன் என்றும் நத்தத்தனார் பாராட்டுகின்றார். இச்சிவநேயச் செல்வரின் அருங்குணங்களை பிற புலவரும் பாராட்டுகின்றனர். இவ்வார்வ நன்மொழி ஆயைத் திருந்து மொழி உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் மிகவும் வியந்து போற்றினார். இச்சிவநேயச்செல்வரின் பெருமைகளைத் தாம் முன்னமேயே அறிந்துகொள்ளாமைக்கு தன்னையுங் குற்றங் கூறிக்கொண்டு மனம் பதைத்தனரென்றால் ஆய் அண்டிரனது பரந்த பக்தியையும் அவர் செயல்களையும் எடுத்துக் கூறவேண்டியதில்லை. வடக்கே இமயம்போல தெற்கே ஆய்குடி விளங்கிற்று என்றும் ஆயையன்றிப் பிறரைத் தன் நா புகழாது என்றும் கூறினார் புலவர். பின்னர் ‘ இம்மை செய்தது மறுமைக்காமென்னும் அறவிலை வணிகன் ஆய் அல்லன் ” என்றும், வானோர் சிறப்பாக ஏற்பர் என்றும், வாழ்த்தினர். ஆய் ஒரு பெருஞ் சிவனடியார் என்பதில் ஐயம் ஒன்றுமில்லை.

# ஐய வினா

க. வெள்ளைவாரணனார்

(நவம்பர் தொடர்ச்சி)

நம்முடைய பொறிகட்குப் புலனாகும் உடல் கருவி முதலிய வற்றின் வேறாக உயிரென்பதொரு பொருள் உண்டு என்னும் மேற்கோளே இச்சூத்திரத்தின்கண் ஆராயப் பெறுகின்றது. இவ்வாராய்ச்சி, காணப்படாத அருவப் பொருளாகிய உயிரைப் பற்றியதாகலின், பொருளுண்மை துணிதற்குரிய அளவைகளாகிய காட்சி, கருதல், உரை என்னும் மூன்றனுள் முதற்கண்ணதாகிய காட்சியளவை அருவப் பொருளாராய்ச்சிக்கு நேர்முறையிற் பயன் படுவதன்றாகலானும், இறுதிக்கண்ணதாகிய வெறும் உரையளவை எல்லாரும் ஒருமித்து ஏற்றுக் கோடற் குரியதன்றாகலானும், யாவரும் ஏற்றுக்கோடற் குரியதாய் இடை நின்ற கருதலளவையொன்றே மெய்கண்ட தேவரால் இவண் மேற்கொள்ளப் பெறுவதாயிற்று. பண்டைத் தமிழ்ப்புலவரும் உயிரின் இயல்புரைக்குங்கால், "காணாமரபிற்று உயிர்என மொழிவோர்" என உயிர் அருவென்பதனைப் பண்டையோர் கருத்தாக உணர்த்திப் போதலும், 'உயிர் எத்தன்மைத்து' என வினாவியவழி, 'உணர்தற்றன்மைத்து' என விடைகூறுவதே செவ்வன் இறையெனச் சேனாவரையர் கூறுதலும் இவண் கருதத்தக்கனவாம். இத்தகைய அருவப் பொருளாராய்ச்சியில் கருதலளவையொன்றே நேர்முறையிற் பொருட்டுணிபு கோடற்குப் பயன்படுவதாம் என்பதனை எல்லா அறிஞரும் உடம்படுவராதலின் இவ்வளவைநெறி பிள்ளையவர்கள் கருதுவது போன்று அத்துணை யெளிதிற் றள்ளப்படுவதன்றென்



பதே அறிஞர்கள் சொல்ல நாங்கள் கேட்டும் அறிந்தும் வருவதாம். ஆங்கில மொழியின் சட்ட நுட்பங்களையும் தமிழ் மெய்ந்நூற்பொருள்களின் மேதகவினையுந் தெளிய வுணர்ந்து ஒப்ப நோக்கி யாராய்ந்த பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளை MA., ML., அவர்களும், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் MA., BL., அவர்களும் எம்முடன் உரையாடும் பொழுது மெய்கண்ட தேவர் உயிருண்மையினை விளக்குதற் பொருட்டு இம்மூன்றாஞ் சூத்திரத்தில் மேற்கொண்ட தருக்க நெறிபோல அநுபவத்தொடு பொருந்திய அளவை முறையினை வேறெங்குங் கேட்டதில்லையென வியந்து பாராட்டினார்கள். இராவ்சாகிபு பிள்ளையவர்களோ இதில் காணுந் தருக்க நெறிகளை மேலைநாட்டு அறிஞர்களுக்கு உடன்பாடாகமாட்டாதென்றும் இதுபோன்ற தருக்க நெறிகளை நாம் நீக்கிவிடவேண்டுமென்றும் நமக்கு அறிவுறுத்துகின்றார்கள். சிறிதேனும் அறியப்படாத பொருளை ஆராய்தலியலாது. உயிரென்ப தொன்றுண்டு என வாழ்க்கையின் அனுபவத்தால் ஒருவாறு புலனாகும் பொருளின் உண்மையை அங்ஙனம் புலனாதற்கு அடிப்படையாகிய அநுபவ வுணர்வானே மெய்கண்ட தேவர் ஏதுக்காட்டி விளக்கி யருள்கின்றார். ஆசிரியர் மேற்கொண்ட இவ்வளவை முறை மேனாட்டார் தருக்க நெறிக்கு எங்ஙனம் மாறுபட்டதாகும் என எமக்கு விளங்க வில்லை. அன்பர்கள் சிந்திப்பார்களாக?

---

ஒழிபு

# 1. சைவப் புலவர் தேர்வு வினாக்கள்

எண் 100] இலக்கியப்பகுதி [நேரம் 3 மணி

1. வாகீசர், அப்பர், நாவுக்கரசர் என்ற பெயர்களைப் பெற்ற வரலாறுகளைக் குறிக்க. 6
2. இடந்தோன்ற விளக்கம் தருக! 9

   i அந்தணரின் மேம்பட்ட அப்பூதி
   ii வருணனும் செய்தனன் முன்பு மாதவம்
   iii இந்தஉடல் தன்னுடனே உயிர்வாழத்தரியேன்

3. நாவுக்கரசர் வரலாற்றில் அகச் சான்றுகளாக இரண்டு பாடல்கள் எழுதி அவை குறிக்கும் வரலாற்றுப் பகுதிகளையும் விளக்குக. 10

4. 'நாவுக்கரசரது வரலாறு இன்றைய உலக வாழ்வோடு பலவகையில் இயைபுடையது' ஆராய்க. 15

5. களவிலும் கற்பிலும் பிரியும் பிரிவுகள் எத்தனை வகைப்படும்? 6

6. இடம் தோன்ற விளக்குக :— 9

   i சிறுபிறைக்கே...மைவார் கருங்கண்ணி செங்கரம் கூப்பு

   ii சுரும்பிவர்சந்தும் தொடுகடல் முத்தும் வெண்சங்கு மெங்கும் விரும்பினர் பாற் சென்று மெய்க்கணியாம்

   iii சிவந்த பைம்போதும் அம்செம்மலர்ப் பட்டும் கட்டார் முலைமேல் சிவந்த அம் சாந்தமும் தோன்றின வந்து திருமனைக்கே.

7. மடலேறுதல் என்பது யாது? அதைத் தோழி எவ்வக் காரணங்கள் காட்டி விலக்குகிறாள்? 8

8. அகத்தியர் தேவாரத் திரட்டில் அடங்கிய பதிகங்கள் எத்தனை? அவற்றுள் அர்ச்சனை, திருமேனிச் செய்திகளை விளக்கவரும் பதிகங்கள் எத்தனை? 8

9. சுந்தரர் திருப்புன்கூரில் பாடிய பதிகத்தில் வரும் வரலாற்றில் ஒன்று எழுதி விளக்குக. 10

10. 'பண்ணிய சாத்திரப் பேய்கள் பறிதலைக் குண்டரை விட்டெண்ணில் புகழீசன் றன்னருள் பெற்றேன்' என்ற அப்பர் கருத்தை ஆராய்க. 10

11. விளக்குக :— 9

   i 'ஐம்புலன் நாலாம் அந்தக்கரணம் முக்குணம் இருவளி யொருங்கிய வானோர் ஏத்த நின்றனை'



   ii வைச்ச பொருள் நமக்காகுமென் றெண்ணி நமச்சிவாய அச்சம் ஒழிந்தேன்

   iii உருவிரண்டுமொன்றோ டொன்றொவ்வாவடி.

எண் 100] **சாத்திரப்பகுதி** [நேரம் 3 மணி

1. சிவஞான போத ஏழாம் சூத்திரத்தை எழுதி, அதன் அதிகரணங்களைத் தனித்தனிப் பிரித்து விளக்குக. 12

2. சிவஞான போதத்தின் பன்னிரண்டாஞ் சூத்திரப் பிண்டப்பொழிப்பு வரைந்து, அதன்பொருள் சமயத் துறையில் கையாளப் பெறும் முறைகளை எழுதுக. 10

3. முழுமுதற் கடவுளை 'சிவசத்து' என்றது எதனால்? 8

4. விளக்குக :— 10

   (அ) உலகிற்கு மூவகைக் காரணங்கள்

   (ஆ) சத்காரிய வாதம்

   (இ) பசுஞானம்

   (ஈ) போக்குவரவு புரிதல்

   (உ) இலது உளது.

5. சிவநெறிப்பிரகாச ஆசிரியரைப்பற்றிச் சுருக்கி எழுதி, இந்நூல் பிறந்த வகையினையும் ஆராய்க. 5

6. நிலம் முதலிய ஐம்பூதங்களின் கிரியைகளும் குணங்களும் யாவை? 8

7. தீக்கை செய்வதற்குமுன் ஆசாரியர் சீடர்களிடம் ஆராய்ந்தறியும் சிறப்பியல்புகள் யாவை? 7

8. பாஞ்சராத்திர மதத்தினுடைய பந்தமுத்தி இலக்கணங்களைத் தொகுத்துக் கூறுக. 8

9. சித்தாந்த அட்டக நூல்கள் யாவை? அவற்றின் ஆசிரியர் யார்? 6

10. விளக்கம் தருக :— 16

   (அ) பொய் இருண்ட சிந்தை பொறியிலார் போதமாம் மெய் இரண்டும் காணார்மிக.

(ஆ) 'முட்டாமல் செய்வினைக்கும் முற்செய் வினைக்கும் செலவு பட்டோலை திட்டும்படி போற்றி'

(இ) காட்சியான் காட்சிக்குங் காணுன் கலைஞான ஆட்சியான் ஆட்சிக்கும் ஆயினுன்

(ஈ) பேதமற நின்றிவனைத் தானுக்கி விடுவன்.

1. சங்கிராந்த வாதி சங்கற்பமும் அதற்கேற்ற நிராகரணமும் யாவை? 10

(அல்லது)

சிவசமவாதி சங்கற்பமும் அதற்கேற்ற நிராகரணமும் யாவை?

---

## 2. பெண்கல்விப் பெருநிலையம்

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்.]

பெண்களுக்குக் கல்வி அதிகம் கூடாது என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்டது. கல்வியில் அதிகம் என்பதே கிடையாது. எவ்வளவு அதிகம் கற்றாலும் கற்றது கைம் மண்ணளவே, கல்லாததோ கடலளவு என்ற உண்மையை நன்கறிந்த ஆன்ரோர் பெண்கல்விக்கு எல்லை வகுப்பதில்லை. பெண்கல்விக்கென்றே பள்ளிக்கூடங்களும் உயர்தரக் கல்லூரிகளும் நமது நாட்டில் நிரம்ப உள்ளன. இவற்றுள் தலைசிறந்து விளங்குவது, தனித் தமிழரசராகிய புதுக்கோட்டை மன்னர் ஆட்சிக்குட்பட்ட கொப்பனுப்பட்டியில் நடைபெறும் கலைமகள் கல்லூரியாகும்.

இக்கல்லூரியானது மிகச் செம்மையான முறையில் பன்னிரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. பெரியார்களுடைய நல்லெண்ணங்கள் நாட்டிற்குப் பெரும் பயனளிக்கும் என்று பல நூல்களிலும் படித்துள்ளோம், மேடைகளிலும் பலர் பேசக் கேட்டுள்ளோம். இக்கல்லூரியின் தோற்றம் இதற்கு ஒரு உதாரணமாகத் திகழ்கின்றது. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் ஈழநாட்டில் ஸர். பொன்



னம்பலம் இராமநாதன் பெண்கல்லூரியைப் பார்வையிட்டனர்.
அதைப்பற்றித் தமது நவசக்தியில் எழுதினர். தமிழ்நாட்டில்
பெண்கல்லூரி ஒன்று தோன்ற வேண்டுமென்ற நல்லெண்
ணத்தை வெளியிட்டனர். பெரியார்கள் நல்லெண்ணங்கள்
வீணுகுமா? நவசக்தியைப் படித்தார் பலர். அவர்களுள் ஒருவர்
திருவாளர் மெய்யப்ப செட்டியாரவர்கள். அவருடைய பண்
பட்ட உள்ளத்தில் இந்த நல்லெண்ணம் நல்வித்தென வீழ்ந்
தது ; தளிரும் வேரும் வெளிவந்தன ; கொப்பனுபட்டி கலை
மகள் கல்லூரி உருப்பெற்று எழுந்தது. செல்வர் சிலர் கையும்
கல்வியாளர் சிலர் கருத்தும் துணைசெய்தன. கல்லூரி மேன்
மேலும் ஓங்கி வளர்ந்து வருகின்றது.

கல்லூரித் தாபகர் திரு. அ. மெய்யப்ப செட்டியாரவர்
கள் கல்வி அறிவு ஒழுக்கம் சிவபக்தி சாந்தம் முதலியன
ஒருங்கே நிரம்பிய பெரியாராவர் தமது வாழ்க்கைத் துணைவி
யாரும் தாமும் இக்கல்லூரியின் வளர்ச்சியையே தங்கள் ஆயு
ளின் பணியாகக் கொண்ட உத்தமர்கள். இக்கல்லூரி மாணுக்
கியர் அனைவரையும் தாங்கள் பெற்ற புதல்வியரைப் போலவே
மிக்க அன்போடு போற்றி வருகின்றார்கள். இக்கல்லூரியில்
தரப்படும் கல்வியின் மேன்மை அவசியம் முதலியனபற்றி
இவர்களுடைய கருத்தை நன்ருக வெளியிட்டுள்ளார்கள்.
" நமது பெண்மணிகளுக்கு எழுதவும் படிக்கவும் சிறிது கணக்
குப் பார்க்கவும் கல்வி அமைப்பு இருந்தால் போதும் என்பது
சிலரது எண்ணம். அதில் சிறந்த பயன் ஏற்படவில்லை
என்பது என் அனுபவத்தில் தெரிந்தது...ஆகவே, ஆரம்பக்
கல்வியோடு அமையாது, நமது தேசத்திற்கும் தமிழ் நாகரிகக்
கலைப்பண்பிற்கும் ஏற்றவாறு, கல்வி அமைப்பானது, உயர்ந்த
முறையில் காவிய உணர்ச்சி பொருந்துமாறும், ஓவியம் இசை
முதலியன கைவருமாறும் நுண்கலைகளைப் போதிப்பித்தல்
வேண்டும்....கணிதம, தமிழ், பொது விஞ்ஞானம், தாய்
நாட்டுச் சரித்திரம், பூகோளம், இராஜாங்க முறை
நூல், குடும்ப சாஸ்திரம் ஆகிய எல்லா பாடங்களும்
தமிழிலேயே போதிக்கப் பெற்று வருகிறது, ஆங்கிலமும்
கற்பிக்கப்படுகிறது......பெண் பாலர்க்கு இன்றியமையாத



உணவு விடுதி

சங்கீதம் ஓவியம் தமிழிலக்கண இலக்கியம் தையல் பின்னல் குடும்ப சாஸ்திரம் என்னும் இத்துறைகளில் அதிக கவனம் செலுத்தப் பெறுகின்றது" என்று இக்கல்லூரியின் அறிக்கை தெரிவிக்கின்றது.

இக்கல்லூரியைத் திரு. வி. க. அவர்களுடன் கண்டு மகிழும் நற்பேறு எனக்கு 3-11-47ல் கிடைத்தது. இல் இகவாப் பருவம் எய்திய நூறு பெண்களும், பருவம் நிரம்பாத நூறு பெண்களும் இங்கு கல்வி பெறுகின்றனர். தமிழிலக்கண இலக்கியங்கள் வேறு எக்கல்லூரியிலும் காண முடியாத அளவு மிகுதியாகப் போதிக்கப்படுகின்றன. கலைச் செல்வி கலைமணி வகுப்புக்களில் இண்டர்மீடியேட் தமிழ்ப்பாட திட்டம், S.S.L.C. ஆங்கிலம், பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, பரணி, உலா முதலிய பிரபந்தவகைகள், நன்னூல் காண்டிகை விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகை, அணியிலக்கணம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரியபுராணம் முதலியன பாடங்களாக உள்ளன. மாணுக்கியர் செய்யுளியற்றுவதில் திறமைமிக்கவர்கள். ஆகுபெயர் அன்மொழித்தொகை முதலிய இலக்கண நுட்பங்களை நன்கறிந்தவர்கள். மாணுக்கியர் உடல் நலமும் உயிர் நலமும் உயிரினும் ஓம்பப்படும் ஒழுக்க நலமும் உடையராய்த் திகழ்கின்றனர். இக்கல்லூரியில் பயிற்சி முற்றிய ஒவ்வொரு பெண்ணும் "இவள் தந்தை என்னோற்றான்கொல்" என்று உலகத்தவர் போற்றும்படி இருப்பாள் என்பதில் ஐயமேயில்லை.

தமிழ் மக்கள் விரைந்து சென்று இக்கல்லூரியைப் பார்வையிட்டுத் தங்கள் புதல்வியரை இங்கு கல்வி பயில அனுப்புவதோடு, இக்கல்லூரிக்கு எல்லா வழிகளிலும் துணை புரிவது தமிழுக்கும் கல்விக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் செய்தற்குரிய பெரும் பணியாகும். கலைமகள் கல்லூரி நீடூழி வாழ்க.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

மாதத் தமிழ் பத்திரிகை

மலர் இருபது

1947

பத்திராசிரியர்கள்

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை (இரண்டு திங்கள்)

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் (10 திங்கள்)

உதவிப் பத்திராசிரியர் :

கி. சிவராமன் (8 திங்கள்)

சைவ சித்தாந்த மகா சமாஜம்

9, வைத்தியராமய்யர் தெரு - தியாகராயநகர்

உ

சிவமயம்

# உள்ளுறை


பொருள் — ஆசிரியர் — பக்கம்.

1. அசுவினிதேவர் —சித்த இளம்பூரணர் 239
2. அரமகளிர் —கோவைகிழார் 323
3. அற்புதக்காதல் —அழகு மதியன் 333
4. ஆதீனங்களின்பணி —பத்திராதிபர் 34
5. ஆற்றல் —கோவைகிழார் 318
6. இருபல்லவ அடியார்கள் { துடிசைகிழார் / அ. சிதம்பரனார் } 246, 295, 437
7. இருவர் பாடிய இலங்கைக் கோயில்
8. இலங்கைக் கந்தகோட்டங்கள் —ம. ரா.
9. உத்தியோகஸ்தர் தேருதல் —ம. ரா. 265
10. எண்ணமும் தொழிலும் பத்திராதிபர் 318
11. எப்போதும் இனியான் —அழகுமதியன் 78
12. வயர்குடிகள் —கோவைகிழார் 433
—கோவைகிழார் 241
13. எழில் 194
—மு. சு. மாணிக்கவாசகனார் முதலியவர்கள் { 292, 332, 430 }
14. என் இந்தக்கஷ்டம்
15. ஐயவினு —கா. ராம.
16. ஒருபாட்டில் கட்கடைகள் இரண்டு —க. வெள்ளவாரணன் 116
447, 480
17. ஒருமுறையிடு —சிவக்கவிமணி
18. ஒருவர் —அ. மு. பரமசிவானந்தம் 188
19. ஒலிபரப்பு —துரைசாமி அய்யர் 137
—பத்திராசிரியர் 65, 97, 129, 467
20. ஒன்றும் மூன்றும் 209, 257 305, 353, 161
21. கலைத்தோற்றமும் பெருக்கமும் —சித்த இளம்பூரணர் 401
22. கல்வெட்டுகளைப்பற்றிய செய்திகள் (திருப்பனந்தாள்) —அழகுமதியன் 227
463
—வைசுந்திரேசவாண்டையார் 428





23. கல்வெட்டு கூறும் சில அரிய செய்திகள் —அழகுமதியன் 373
—அ. கிருஷ்ணசாமி நாயுடு 180
24. கழுவாய் உண்டோ —கே. எஸ். வைத்தியநாதன் 337
25. காடவரும் சைவமும் —R. பஞ்சநதம்பிள்ளை 225
26. காதும் நூலும் —பத்திராசிரியர் 152
27. காரைக்காலம்மையார் —கோவைகிழார் 117
28. கிழவியின் சிவஞானம் 371
29. குடிநிறுத்தத்தில் தொண்டு—கோ. கி. 43
30. கேள்விகள், பண்செய்க —க. ரா. 319
31. கோயில் நுழைவு விதிகள் —கோ. கி. 470
32. சங்க காலத்துச் சிவனடியார்கள் —கோவைகிழார் 277
33. சமயமாற்றங்கள் —பத்திராசிரியர் 1
34. சமாஜப்பணி —க. ரா. 230
35. சாதனங்கள் —கோவைகிழார் 270, 459
36. சாத்திரத் துணுக்குகள்
37. சிவஞானபோதச் சூத்திரக் கருத்து —க. ரா. 272
38. சைவ இளைஞர் மகாநாட்டுத் திறப்புரை —C. M. R. செட்டியார் 17
39. சைவ இளைஞர் மகாநாட்டு நிகழ்ச்சிகள் —பத்திராசிரியர் 27
—
40. சைவஇளைஞர் மகாநாட்டுத் தலைமை உரை —கி. சிவராமன் 157, 204, 250
41. சைவசித்தாந்த மகாசமாஜம் அறிக்கை —செயலாளர் 49
— ,, 45
42. சைவப்புலவர் தேர்வுகள் —
43. சைவர் மகாநாட்டின் நிகழ்ச்சிகள் —செயலாளர் 21
44. சைவர் மகாநாட்டுத் தலைமை உரை —S. வையாபுரிப்பிள்ளை 30, 53, 81
45. சைவ மங்கையர் தலைமை உரை —நடராஜப் புஷ்பம்மாள் 118
46. சைவமங்கையர் திறப்புரை —காஞ்சனமாலையம்மை 19
47. சைவமங்கையர் மகாநாட்டின் நிகழ்ச்சிகள் —செயலாளர் 28
48. சைவர் மகாநாட்டுத் திறப்புரை —சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் 10

49. ஞானிகளும் சிரிப்பார்களா — சிவக்கவிமணி 377
50. தசாங்கம் — வை. குஞ்சிதம்பாதம் பிள்ளை 102
51. தற்காலச் சமயநிலை — கோவைகிழார் 420
52. தாயான ஈசன் — திருமதி புஷ்பம் நடராஜன் 140
53. திருப்பேரூர் — ம. ரா. 362
54. தீர்மானங்கள் — செயலாளர் 29
55. நடையலங்காரி — தாமரைக்கண்ணியம்மையார் 108
56. நம் பணி — அ. கு. காமாட்சிஅம்மையார் 146
57. நமது 42-வது சைவமாநாடு — பத்திராசிரியர் 461
58. நாய்த்தன்மை — புஷ்பம்மாள் நடராஜன் 298
59. நால்வர் திருவுருவங்கள் — கோவைகிழார் 235
60. நூல்வழிபாடு — பஞ்சநதம் பிள்ளை 417
61. நெடும் புத்தகத்து எழுதுதல் — கோவைகிழார் 375
62. பறங்கியர் அழித்தபரமன் கோயில் — ம. ரா. 219
63. பாழறை பள்ளியறை ஆன விந்தை — சிவக்கவிமணி 287
64. புகை நுகரல் — மு. நா. 425
65. பெரியபுராணத்தின் உட்கிடை — சமரபுரி முதலியார் 345, 389
66. பெண்கல்விப் பெருநிலையம் — ம. பா. 484
67. போற்றுகிறேம் — பத்திராசிரியர் 33
68. மங்கையர்க்கரசியார் மாண்பு — ச. சிவகாமி அம்மையார் 71
69. மதிப்புரை — பத்திராசிரியர் 47
70. மிருகேந்திரக் கட்டுரை — ஔவை. துரைசாமிப் பிள்ளை 199
71. முச்சங்கம் — ஆர். பஞ்சநதம் பிள்ளை 368
72. முதலைவாய்ப் பிள்ளைத்தலம் — ம. ரா. 411
73. முழுமையும் முப்பொருளும் — சிவக்கவிமணி 175
74. மேல் நாட்டுத்தத்துவ ஞானிகள் — கா. ரா. 231
75. வணக்கம் செய்யத்தக்கமொழி — ம. ரா. 280
76. வரவேற்பு — கழகத்தார் 8
77. வாழ்க்கை வாழ்வதற்கே — அ. மு. பரமசிவானந்தம் 35
78. வேடன் பூசித்த புனிதத்தலம் — ம. ரா. 169
79. வெண்ணெய்நல்லூர் நடந்த திருத்தலம் — ம. ரா. 456


சக்தி அச்சுக்கூடம், இராயப்பேட்டை சென்னை.

**சைவப் புலவர் தேர்வு:—** 1947 வருடம் நவம்பர் மாதத்தில் நடந்த "சைவப் புலவர்" தேர்வில் Dr. D. R. அண்ணாமலை 2-வது வகுப்பிலும், S. P. சுப்பிரமணியன் 3-வது வகுப்பிலும் வெற்றி பெற்றார்கள்.

## தருமபுர ஆதீனம் சைவசமய நூல்பரிசுத் திட்டம்

1. தருமபுரம் ஆதீனத்து மகாசந்நிதானம் சைவ சமயப் பிரசாரத்திற்காக அடியிற்கண்ட முறையில் ஒரு பரிசு அளிப்பதாகத் திருவுள்ளம் கொண்டிருக்கிறார்கள்.

2. அப்பரிசு ரூ 250க்குக் குறையாமல் இருக்கும். 1947 டிசம்பர் மாதம் 25, 26, 27 தேதிகளில் கோவையில் கூடும் சைவ மகாநாட்டில் இத்திட்டம் வெளியிடப்படும்.

3. சைவ சமயத்தைப்பற்றி ஐஸ்கூலில் மேல்வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் படித்து புரிந்துகொள்ளக் கூடிய உரைநடையில் ஒரு கட்டுரை எழுதப்படவேண்டும். அக்கட்டுரை கிரவுன் சைசில் 100 பக்கங்களுக்குக் குறையாமல் முழுதும் உரைநடையாகவே அமைந்திருக்க வேண்டும். தாளில் ஒரு பக்கத்தில் எழுதப்படவேண்டும்.

4. கட்டுரை எழுதுகிறவர்கள் 1948 - மார்ச்சு - 15-ம் தேதிக்குள் தங்கள் முழுவிலாசத்தோடு அக்கட்டுரையைக் கோவை சைவ மகாநாட்டின் நிதியாளருக்கு அனுப்பவேண்டும். (4/89 - திருச்சி ரோட்டு, கோவை)

5. கட்டுரைகளைச் சீர்தூக்கி முடிவு கட்டுவதற்காக அடியிற் கண்ட குழுவொன்று அமைக்கப்படிருக்கிறது.

அ. திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்
ஆ. திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார்
இ. திரு. குடிசைக்கிழார் அ. சிதம்பரனார்

6. மேற்சொன்ன குழு கட்டுரைகளைச் சீர்தூக்கிப்பார்த்து எது சிறந்தது என்று முடிவுசெய்யுமோ அதனை எழுதிய ஆசிரியருக்குப் பரிசு வழங்கப்படும்.

7. இதனைத் தமிழ்நாடு, இலங்கை முதலிய இடங்களில் சித்தாந்தத்தின் மூலமாகவும் வேறுவிதங்களாகவும் விளம்பரப் படுத்தப்படும்.

8. கட்டுரையின் பதிப்புரிமை தருமபுரத்து ஆதீனத்தைச் சேர்ந்தது. சைவ சித்தாந்த மகா சமாஜத்தாராலும் வெளியிடப்படும்.

9. பிற மதங்களின் நிந்தனை கூடாது.

மேலும் சமய நிலையங்களில் உள்ள பொருள்கள் சமயப்
பணிகளுக்கே போதாமல் இருக்கின்றன. அப்படியிருக்க,
அவைகளைக் குறுக்கி மற்ற வேலைகளுக்கு உபயோகப்படுத்து
வது நியாயமான சட்டப்படி செல்லாது. ஒருவர் ஒரு குறிப்
பிட்ட நோக்கத்திற்கு என்று தானம் செய்திருந்தால் அந்த
நோக்கத்திற்கே அதைச் செலவழிக்கவேண்டும் என்பது
சட்டம். அந்நோக்கம் இயலாத காரியம் ஆகிவிட்டால் முந்திய
நோக்கத்திற்கு ஒத்ததொரு நோக்கத்திற்கே அப்பொருளைச்
செலவழிக்கலாம். நமது சமய நிலையங்களில் உள்ள பொருள்
கள் எல்லாம் தான வகையில் ஏற்பட்ட பொருள்களே. அத்
தான நோக்கங்கள் சமயப் பணிகளே ஆகும். இந்த உண்மைக்
காரணங்களை ஆலயங்களில் உள்ள கல்வெட்டுச் சாசனங்களி
லும் செப்பேடுகளிலும் காணலாம். ஆகவே, அந்நோக்கங்
களுக்கு மாறாக எந்த வேலையையும் செய்யக்கூடாது.
ஒருவேளை எல்லாப் பணிகளையும் செய்தபிறகு மீதி இருக்
கும்பட்சத்தில் அம்மீதிப் பொருளைப் பொருள் இல்லாத
வேறு ஆலயங்களுக்குச் செலவழிக்கலாம். இதைத் தவிர
மற்ற லௌகீகச் செயல்களுக்குச் சமயப் பொருள்களைச் செல
வழிக்க எந்தச் சட்டமும் இடங் கொடுப்பதில்லை.

ஆனால், நமது அமைச்சர் கூட்டமோ அவ்விதமாகப்
பணங்களைத் திருப்புவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறது.
இவ்விதம் முகம்மதியர்கள் கிறிஸ்தவர்கள் முதலான சமயத்
தார்களின் நிலையங்களின் மீதிப் பொருள்களை எடுத்துச் செல
வழிப்பதாகச் சொல்லுவார்களா ? சொன்னால், அச்சமயத்
தார்கள் சும்மா விட்டுவிடுவார்களா ? ஆகவே, இப்பொழுது
இருக்கும்படியான நிலைமை மிகவும் நெருக்கடியானதல்லவா ?
இந்த நெருக்கடியைப் போக்கவல்லவர்கள் யார் ?

நமது நாட்டில் 6, 7-ம் நூற்றாண்டுகளில் இதைப்போல
நெருக்கடி சைவ சமயத்திற்கு வந்தது. நாடு முழுதும் சமண
சமயம் முன்னேற்றம் அடைந்தது. மன்னவர்களும் சமணர்
கள் ஆய்விட்டார்கள். சமணக் குருக்கள் பிரசாரஞ் செய்தார்
கள். சமணப் பள்ளிகளும் மிகுதி ஆயின. அப்போது
சைவத்தை நிலைநாட்ட வந்தவர்கள் இளைஞர்கள் ஆகிய அறி



ஞர்களே. சமயகுரவர்களில் சம்பந்தர் 3 வயதுமுதல் 16
வயதுவரையில் சமயத் தொண்டு செய்தார். சுந்தரர் 16 முதல்
18 வரை சமயப் பிரசாரஞ் செய்தார். பின்னல் சமய சாத்
திரங்களை எழுதின மெய்கண்ட தேவரும் சிறு குழந்தையே.
இதைப்போலவே வைணவத்திலும் காண்கிறோம். ஆகவே,
முன்னாளில் இளைஞர்கள்தான் சமய நெருக்கடியைத் தீர்த்தார்
கள். இதைப்போலவே இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சமய
நெருக்கடியை நீங்கள்தான் தீர்க்கவல்லவர்கள்.

ஆகவே, இளைஞர்களே ! எழுந்திருங்கள், விழித்துக்
கொள்ளுங்கள். சமயப் பணிகளை நன்றாக அறிந்து அதனைச்
செய்ய முன்வாருங்கள். நமது சமய நிலையங்கள் அழியாத
வண்ணம் அவைகள் மக்களுக்குப் பயன்படுமாறு செய்யுங்கள்.
அதுவே உங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் கடமை.

---

## சைவமங்கையர் மகாநாட்டுத் திறப்புரை

[ திருமதி. காஞ்சனமாலையம்மையார் ]

' சைவத்தின் மேற்சமயம் வேறில்லை, அதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வமில்' என்பது உண்மை மொழி. உல
கில் உள்ள எல்லாச் சமயங்களையும் தன்னிடத்து அடக்கி ஒரு
தனிச் சமயமாக இன்றுவரையில் நிலவியுள்ளது ; என்றும்
நிலவும். இச்சமய வளர்ச்சிக்கு வேண்டிய வகையில் ஆவன
செய்ய வழிகாட்டியாக உழைத்துவரும் சைவ சித்தாந்த சமா
சத்தின் 41-வது ஆண்டு விழாவை ஒட்டிய சைவ மங்கையர்
மகாநாடு இன்று திருச்செங்கோட்டில் தொடங்குகின்றது.
இம்மகாநாட்டைத் திறக்கும் பேறு கிடைத்தமைக்கு நன்றி.

அன்றுமுதல் இன்றுவரை சைவம் வளர்த்தது மங்கைய
ரேலேயே என்றால் அதை மறுப்பார் யாரும் இல்லை. பிற சம
யம் புகுந்த நாவுக்கரசரை முறையிட்டால் சைவம் சாரச்
செய்து அவர்வாயிலாகப் பண்ணொன்றப் பாடுவித்து, உலகில்
அந்தப் பாடல்கள் என்றும் இருக்கும்வண்ணம் செய்தவர்
யாவர் ? திலகவதியாரன்றோ ! நாடும் தன் நாதனும் பிற சம

Regd. M. 2330. "SIDDHANTHAM" Vol. 20. No. 1

தற்சமயம் கிடைக்கக்கூடிய

## சமாஜ வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| | | ரூ. அ. |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | ... | 0 14 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு | | |
| திருமந்திரம் | .... | 1 0 |
| சித்தாந்த சாத்திரம் 14-ம் உரையுடன் | ... | 1 8 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை அரும்பத உரையுடன் | ... | 3 10 |
| சீவக சிந்தாமணி | ... | 0 10 |
| சங்கநூற்புலவரகராதி | .... | 1 12 |
| முருகன் முந்நூல் (திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரநுபூதி) | .... | 0 1 |
| தபாற்கூலியுள்பட | .... | 0 3 |

முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

### குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர்கள் (மலர் ஒன்றுக்கு 12 இதழ்கள்) மலர் ஒன்றுக்கு 1 ரூபா வீதம் விற்கப்படும். வேண்டியவர்கள் தபாற் செலவுடன் சமாசச் செயலாளருக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்

மலர் **3 (1930), 4 (1931), 5 (1932), 6 (1933), 11 (1938), 13 (1940), 14 (1941), 15 (1942), 16 (1943), 18 (1945).**

செயலாளர்,
9, வைத்தியராமையர் தெரு,
தியாகராயநகர், சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P. I. Card No. M. S. 110) and Edited & Published by S. Satchithanandam Pillai, B.A., L.T. for the Saiva Siddhanta Maha Samajam, at 51, Thengur Chelva-vinayagar Koil Street, Mylapore, Madras, P. I. Card No. M. S. 81.

487 489

ed No. M. 2330 "SIDDHANTHAM" Vol. 20—No. 2

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க்கங்காகும்'—திருமந்திரம்

20 | விய மாசி 1947 பிப்ரவரி | இதழ் 2

உள்ளுறை — பக்கம்


| | | |
|---|---|---|
| போற்றுகிறோம் | ... | 33 |
| ஆதீனங்களின் பணி 1946 | ... | 34 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | ... | 35 |
| கேள்விகள், பணி செய்க! | ... | 43 |
| சைவப்புலவர் தேர்வுகள் | ... | 45 |
| மதிப்புரை | ... | 47 |
| சைவ சித்தாந்த மகா சமாஜம் 41-வது ஆண்டு அறிக்கை | ... | 49 |
| சைவர் மகாநாட்டுத் தலைமை உரை | ... | 53 |


பத்திராசிரியர்: ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.
உதவிப் பத்திராசிரியர்: கி. சிவராமன், எம். ஏ.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
9, வைத்தியராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2.

# ஜனவரி மாதக் கூட்டம்

சிதம்பரம் பாண்டிய நாயகம் சண்முகநாதன் கோயில் மகா கும்பாபிஷேகம் தை 14 (27—1—47) சிறப்பாக நடைபெற்றது. அதற்கு அங்கமாக 26—1—47 சமாஜ மாதக் கூட்டம் நடைபெற்றது. காலையில் திரு கா. ராமநாதன் செட்டியார் அவர்கள் 'அன்பு எது?' என்பது பற்றியும், திரு பு. ர. சுவாமிநாதன் அவர்கள் 'வேல்' என்பது பற்றியும் பேசினார்கள். மாலையில் திரு இராஜேஸ்வரி அம்மையார் அவர்கள், திரு ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், திருமயிலை காமாட்சி தாசர் சோமசுந்தர முய்யரவர்கள், முறையே 'முருகன் குமரன் குகன்,' 'திருமுருகாற்றுப்படை,' 'அடியார் பெருமை' என்னும் விஷயங்களைப் பேசினார்கள். இடையிடையே தேவாரம் ஓதப் பெற்றது. காலையில் திரு சாஹித்ய சிரோமணி, சாஹித்ய துரீண-ராம. தங்கசாமி தீட்சதர் அவர்களும், மாலையில் புராண ரத்னம், உபன்யாஸ சரபம்-திரு C. S. சச்சிதானந்த தீட்சதர் அவர்களும் தலைமை தாங்கி முன்னும் பின்னும் பல அரிய கருத்துக்களை வழங்கினர். ஒலிபெருக்கும் கருவி அமைந்திருந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் முருகன் பெயர் கூற கூட்டம் இனிது முடிந்தது.

## பிப்ரவரி திங்கட் கூட்டம்

சைவ சித்தாந்த சமாசத்தின் பிப்ரவரி திங்கட் கூட்
டம் வாலாஜாபாத் வள்ளலார் இல்லத்தில் 16-2-47
ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. கூட்டத்திற்குச்
சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்,
உயர்திரு வித்வான் மு. வரதராஜனார் அவர்கள் B. O. L.;
M. O. L. தலைமை வகித்தார்கள். கடவுள் வணக்கத்துக்
குப் பின் தலைவர் அவர்கள் சமயம் வாழ்வோடு எவ்வாறு
தொடர்புடையது என்பது பற்றித் தம் முன்னுரையில் விளக்
கினார்கள்.

பின்னர் ஏழு சொற்பொழிவுகள் நடைபெற்றன. திரு
வாளர்கள் வித்வான் ஆ. நமச்சிவாய முதலியார், இரகு
நாயகம் B. O. L. (Honrs.), ஆ. சி. சானகிராமன், வித்வான்
அன்பு கணபதி, பாஷ்ய ராமானுஜம், லோகசுந்தரம், M. A.
வித்வான் குப்புசாமி ஆகியோர் முறையே 'திருவாசகம்',
'சமய பொது நெறி', 'வாழ்க்கையும் சமயமும்', 'கல்விக்
கோயில்', 'குலசேகரர்', 'திருப்பாவை', 'மாணவரும்
சமயமும்' என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழி
வாற்றினர்.

தலைவர் தம் முடிவுரையில் மக்கட் பணியே சமயத்
துறையில் தலை சிறந்த பணி எனவும், அதுவே சமயத்தை
வாழ்விப்பதெனவும் உலகிடைப் பிறந்தது மக்கள் பணியாற்
றுதற்கே எனவும், அப்பணியில் கருத்திருத்தாதார் நாத்தி
கர் எனவும், இவ்வகையில் பணியாற்றி வாழும் சமயமே
உலகில் உயர்வுறும் என்றும் விளக்கி உரைத்தார். நன்றி கூற
லுடன் கூட்டம் முடிவுற்றது.

இரவு 9-30 மணிக்கு திரு. கா. இராமநாதன் செட்டி
யார் அவர்கள் B. A. B. L. தலைமையில் வள்ளலார்
இல்லத்து மாணவர்களால், திரு. ம. பாலசுப்பிரமணிய
முதலியார் அவர்கள், B. A. B. L. எழுதிய அப்பர் நாட
கம் நடிக்கப் பெற்றது.

அன்று காலை 9 மணிக்குச் சமாசச் செயலாளர் இராவ்
பகதூர் க. அரங்கசாமி முதலியார் அவர்கள் தலைமையில்
வள்ளலார் இல்லத்து மாணவர்கள் உடற்பயிற்சி விளையாட்
டும், உணர்ச்சி மிகுந்த சொல்லாட்டும் நடைபெற்றன.

யர் கண்டு தலைவணக்கும் கள்வர் என்று நான் எழுதியுள்ளேன். ஆனால் அச்சுத் தவறினால் மங்கையரைக் கண்டு கதவடைக்கும் கள்வனேன் என்று மாறிற்று. அதைப்பற்றி வணக்கம் ‘சமணத் துறவிகள் தெருவில் செல்வார்களானால் அவர்கள் நிர்வாண நிலையைக் கண்டு பெண்கள் வெட்கப்பட்டு கதவுகளை அடைத்துக் கொள்வார்கள்! என்பதே ஆகும்.

இனி, துறவு நிலையை நான் வன்மையாகக் கண்டித்துள்ளேன் என்றும், சைவத்தில் துறவுக்கு இடமில்லையா என்றும் ஐயங்கள் என் கட்டுரை மேல் எழுந்தன. மூவர் தேவாரத்தில் வந்துள்ள அடிகளை ஒற்றி, அவர்கள் சமணத்துறவினை எவ்வாறு கண்டித்துள்ளார்கள் என்பதைப்பற்றியே கட்டுரையின் முதல்பகுதி உள்ளது. சமணத்துறவியர்தம் பல இழிசெயல்களை அடுக்கி அடுக்கி அப்பரும் சம்பந்தரும் பேசுகின்றனர். அவர்தம் சொற்களைக்கொண்டே தமிழ் நாட்டில் வெற்புத் துற புகுந்த வழி யாது என யான் ஆராய்ந்தேன். எனவே, கட்டுரையின் முதற்பகுதி அனைத்தும் சமணத் துறவியர்தம்-அதிலும் போலித் துறவியர்தம் இழிநிலைபற்றி மூவர் குறிக்கோள் இவை என்பதை வலியுறுத்துகின்றது.

கட்டுரையின் இறுதியில், துறவு, நாட்டில் புகுந்ததற்கு அமைவுடைய காரணம் என்ன என்று காணவும் முயன்றுள்ளேன். வாழ்விடைவரும் பொய்யும் வழுவும் போக்கலே வாழ்வை வெறுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்ற முடிவினைக் காட்டியுள்ளேன். எந்தப் பொய்யும் வழுவும் வருத்தம் செய்யும் என்று துறவு நிலைகளை மேற்கொண்டு வாழ்வினை விட்டார்களோ, அதே பொய்யினையும் வழுவினையும் துறவுநிலையிலேயும் சிலர் மேற்கொள்வதைக் கண்டு வருந்தாதிருக்க முடியவில்லை. எனவே, அத்தகைய கரவொழுக்கங்கொண்டு துறவு நிலையில் வாழ்வதினும் இல்லறத்தில் வாழ்வதே மேல் என்ற முடிவினை வலியுறுத்தினேன்.



‘ வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று ’

‘ தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமேய்ந் தற்று ’

என்பன போன்ற குறட்பாக்கள் இக்கருத்தினை வற்புறுத்துவன அல்லவோ. இக்கருத்தை என் கட்டுரையின் இறுதி அடிகள் விளக்குகின்றன. ‘துறவு ஒழுக்கத்தே தூய்மை இல்லாதவன் கீழ் மகன், அவனது கூடா ஒழுக்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறார் வள்ளுவர். அவனையே சுந்தரர் துச்சமாக எண்ணி எண்ணி நகையாடுகிறார். அத்தகைய போலித் துறவியர் தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகின்றது ’ என்பன அவ்வடிகள்.

எனவே, நான் சைவசமயத் துறவிகளைக் கண்டிக்கவேண்டு மென்றோ, துறவுநிலை முற்றும் வாழ்க்கையில் வேண்டப்படாத தொன்றென்றோ விரும்பி எழுதிய கட்டுரை அது அல்ல! முதற் பகுதி சமணத் துறைவியர்தம் கூடா ஒழுக்கத்தையும், பிற்பகுதி சைவப் போலித்துறவியர் தம் கூடா ஒருக்கத்தையும் காட்ட எழுந்த கட்டுரை அது. சைவத்தில் மெய்த்துறவிகள் இருக்கின்றார்கள் என்றால் அவர்களை வருக வருக என்று வரவேற்க என்றும் நான் தயங்கேன். ‘பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பும் மிகை’ என்ற உண்மையை ஓர்ந்து ‘அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை’ என்பதற்கு இலக்காகி யான் எனது என்னும் செறுக்கறுத்த, உண்மைத்துறவியர் யாவராயினும் அவர் இருக்கும் திசை நோக்கி முதல் வணக்கம் செலுத்த நான் தயங்கேன்.

எனவே, சைவ அன்பர்கள் உண்மையைச் சிந்தித்துப் பார்ப்பார்களாக! சைவம் வாழ வேண்டும் என்பதே எனது குறிக்கோள். அதை வாழவைப்பது அனைவர்தம் கடமையாகும்.

இவைகள் செய்யப்பட்டன. ஆகவே இவைகளைச் செய்ய வேண்டியது அறநிலைங்களின் சிறந்த நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூட்டத்தார் பேசி முடிவு செய்தார்கள்.

## சமயப் பிரசாரம்

சமய நிலையங்களின் முக்கிய நோக்கம் சமயப் பிரசாரமே. பண்டைநாள் அறநிலையங்கள் அதனைச் செய்தன. அதற்காகப் பெருவாரியான தான தருமங்கள் முன்னைய செல்வவான்கள் தந்திருக்கிறார்கள். சில ஆண்டுகளாக இந்தக் கடமைகளை அறநிலையங்கள் மறந்துவிட்டன. அவைகளை மீண்டும் வற்புறுத்தி நடத்தவேண்டும் என்பது மாநாட்டார் எண்ணம். அதனை அடியிற் கண்டபடி வெளிப்படுத்தினார்கள்.

1. சமயப் பிரசாரகர்களைப் பெருவாரியாக நியமிக்கவேண்டும். அவர்கள் மேலே குறித்த பயிற்சி பெறவேண்டும்.

2. மேற்குறித்த வகையில் ஒழுங்காகப் பயிற்சி பெற்றவர்கள் கிடைக்கும் வரையில், வித்துவான்கள் சிரோமணிகள் இவர்களிலிருந்தே தக்கவர்களைத் தெரிந்தெடுத்து ஒரு வருடத்திற்கு மேற்படாதபடி சமயப்பிரசாரம் செய்விக்கவேண்டும்.

## சமய வெளியீடுகள்

இப்போது உள்ள சமய வெளியீடுகள் போதா. அருமையான சமய நூல்கள் ஆகமங்கள் இப்போது கிடைப்பதில்லை. அவைகளாலே நாட்டிற்குப் பெரும் பயன் உண்டு. அவ்விதச் செலவிற்கு அறநிலையங்களின் பொருள் செலவழிப்பது சரியே. அதனை உத்தேசித்து அடியிற்கண்ட கருத்துக்கள் ஆராயப்பட்டன.

1. அச்சில் கிடைக்காத ஆகமம் முதலிய சமய நூல்களையும் சிற்பம் முதலிய கலை நூல்களையும் அச்சடிக்க வேண்டும்.

2. அறநிலையக்காப்பாளர் கழகம் ஒரு திங்கள் வெளியீட்டைத் தக்கவர்களைக் கொண்டு சமய சம்பந்தமாக நடத்தவேண்டும்.



இவ்வித வெளியீடுகளினால் பலவிதமான ஐயப்பாடுகளை எளிதில் நீக்கமுடியும். அரசியலில் உள்ள ஏனைப் பகுதிகள், சிறப்பாக, உழவியல் கூட்டுறவு முதலிய பகுதிகளில் வெளியீடுகள் வருவதினால் மிகுந்த பயன் உண்டு அல்லவா?

## ஆலோசனைக் குழுக்கள்

அதிகாரிகள் தங்கள் இச்சைப்படி செயல்களை நடத்துவதைக் காட்டிலும் பொதுமக்களுடைய கோரிக்கைகளை அறிந்து செயல்களை நடத்துவதே சிறந்தது. அரசியல் குடிகளுக்காக உள்ளதே அன்றி குடிகள் அரசியலுக்காக இல்லை. ஆகவே எந்தப் பகுதியிலும் குடிகளுடைய நோக்கங்கள் தெரியவேண்டியது அவசியம். உணவு பங்கீடு, துணி பங்கீடு, விவசாயம், கைத்தொழில் முதலிய பல பகுதிகளிலும் இப்படிப்பட்ட ஆலோசனை குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஆகவே பொதுமக்களுக்கென்று இருக்கும் அறநிலையங்களைப் பற்றித் திருத்தம் செய்வதற்கு அதில் அக்கறைகொண்ட அறிஞர்களைக்கொண்ட ஒரு குழு அமைப்பது மிகவும் பயனுடைத்தாகும். அதைப் பற்றிய முடிவுகளாவன.

1. மாகாண அரசாங்கத்திற்கு சமய நிலையங்கள் விஷயமாக பிரேரேபணைகள் செய்யவும், யோசனை சொல்லவும் ஆலோசனைக் கமிட்டி ஒன்று அரசாங்கத்தாரால் நியமிக்கப்படவேண்டும்.

2. மடாதிபதிகளுக்கும் கோயில் ஆணையாளர்களுக்கும் ஆலோசனை சொல்ல முறையே அவ்வம்மடங்களின் சீடர்கள் அவ்வக் கோயிலின் வழிபடுவோர்கள் இவர்களின் பிரதிநிதிகளைக் கமிட்டிகளாக நியமிக்கவேண்டும்.

மடங்களுக்கும் கோயில்களுக்கும் ஆலோசனைக் குழுக்கள் மிக அவசியம். மடாதிபதிகள் சீடர்களின் பொருட்டு எவ்வித நன்மையும் இக்காலத்தில் செய்வதில்லை என்ற எண்ணம் எங்கும் இருக்கிறது. இவ்வித ஆலோசனைக்குழு

காரிரும்பின் சரிசெறிகைக் கருஞ்சிறார் கவர்ந்தோட
வார்சிறுமென் குரைப்படக்கு மரைக்கசைத்த விருப்புமணி"

[கூரிய நகமும் மெல்லிய கால்களுமுடைய கோழிக்குஞ்சுகள்
கூட்டமாகச் சுழன்று வருவன. முற்றங்கள் துள்ளும் நாய்க்
குட்டிகளைக் கரியமேனியுடைய சிறுவர்கள் நாய் இல்லாத
போது கவர்ந்து ஓடி விளையாட அவற்றின் சிறு குரைப்பை
அவற்றின் தாய் கேளாது அச்சிறுவர்கள் இடுப்பில் கட்டிய
இருப்பு மணி ஓசை அடக்கும்.]

இந்த மனக்கண் கொண்டு, முன் சொன்ன பணக்காரர்
மாளிகைமுற்றத்தையும் சுற்றிலும் பார்ப்போம்.ஏன் மனக்கண்?
அந்த மாளிகைப் பக்கம் சாதாரண மக்கள் போக விடாமல்
கோம்பை நாய்களும், புலிக்குட்டிகளும், காடிகள், காட்டுப்
பூனைகள், இனமான இவற்றின் குணமுள்ள மக்களும் சூழ்ந்
துள்ளார்களே! நாம் எப்படி அணுகிக் காணமுடியும்? ஆனால்
நமது மனக்கண்ணைத் தடுப்பதற்கு அமெரிக்கரின் அணுகுண்
டினாலும் முடியாது. அங்கும் நடு அறையின் பின்னால் அப்
புறம் உள்ளறைகள். கோழிகள் வாத்துக்கள் பொறித்த
குஞ்சுகள் பொறிக்க உள்ள முட்டைகள், ஆடுகள், நாய்கள்,
நாய்க்குட்டிகள் முதலிய இவைகளுக்குக் குறைவில்லை.
இங்குள்ள சுரைக்கொடிகளுக்கு நேராக அங்கும் கொடிகள்
அனேகம் உண்டு. ஆனால் அவை பார்ப்பதற்குமட்டும் உதவும்.

குப்பைகளோ என்றால் இங்கு ஒரு அறைக்குக் கொஞ்சம்
குப்பை என்றால் பல அறைகளுக்கு அத்தனை அளவு கூடும்
தானே! முக்கியமான நடு அறையிலோ என்றால் அதற்
கென்று குப்பைக் கூடைகளும் உண்டு (Waste Paper
Baskets). குப்பைகளுக்கும் விலையேறிய இந்நாளில் குப்பைக்
கூடைகளும் அதிகமாகுமல்லவா? முன் சொன்னபடி எலும்பு,
கொம்பு, தோல், நகம், முகம், கால், மயிர் முதலியவை இரண்டுக்
கும் பொது இலக்கணம். மயானத்தை அலங்கரிக்கும் இப்



பண்டங்களை இவர்கள் எடுத்து அவற்றின் வெளிப்பார்வை
யைப் பார்வைசெய்து கொடுத்து அவர்கள் அவற்றுக்குப்
பூணும் வர்ணமும் தந்து காட்சி என்று பேர் பண்ணி நடு
அறையில் வைக்கிறார்கள்; கொன்றுபெற்ற கொலைப்
பண்டங்களை அவற்றின் உண்மையான நிலைகாணாது நிற்கும்
மயக்க இருள் நிறைந்த ஒளி இரண்டிடத்திலுமுண்டு.

இனி, நாம் தொடங்கிய கோடீசுவரரிடம் வருவோம்;
அவருக்கு ஆப்தமான உயிர் நண்பர் ஒருவர் உண்டு. அவர்
மிக நல்லவர்; அவர் இந்தப் பணக்காரருக்கு மட்டுமல்ல;
இவர்களைவிட ஏழைகளிடத்தில் அதிக நண்புடையவர்;
ஏனென்றால் அந்த ஏழைகளுக்கு வேறு பணமும் இனமு
மாகிய துணைகள் இல்லாமையால் அவரை அடிக்கடி அழைக்
கிறார்கள். பணக்காரர்களோ அவரை அப்படி அழைக்கிற
தில்லை. விரும்புகிறதுமில்லை; ஆனாலும் அவர் பெருந்தன்மை
யினாலே அதைப் பொருட்படுத்தாமலே இவர்களிடமும் வந்து
இவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்துவருவார்.
ஆனால் தானிருப்பது தெரியாமல் துணை செய்துவருவது
வழக்கம். அவரிடம் அற்புதமான மாயாசக்தி உண்டு. அவர்
விரும்பிப் பார்த்தாலே உயிர்களின் கண்ணிருண்டு வரும்
மயக்க வியாதி நீங்கி வெளிச்சம் உண்டாகும்: அம்மாதிரி
இந்தப் பணக்காரரின் மதியிருண்ட மயக்க நோய் தீரும்
காலம் வந்தது; அவர் இவரைப் பார்த்துவிட்டார்; இவருக்
கும் அவர் ஒருவர் மறைந்தபடியே உதவிசெய்து வருவது
தெரிந்தது. தன் அறையில் சேர்த்து அழகு என்று அதுவரை
கண்டுவந்த மேலே கண்ட பொருள்கள் எல்லாம் மயானத்தை
அழகுபடுத்தும் குப்பைப் பண்டங்கள் என்று தெரிந்தார்.
குப்பைக்கூடைகளையும், பின்வாசலில் நாடோறும் சேரக்
காணும் ஆபாசங்களையும் அவ்வாறே கண்டார்.

தெளிந்து, அப்பர் முயற்சியால் சைவ மதத்தை மேற்கொண்ட
மன்னன். சைவத்துக் கடிமையான இக்காடவன் சிவனுக்குப்
பலவிடத்தும் கோயில்கள் எடுப்பித்தான். பரஞ்சோதி என்ற
சிறுத்தொண்ட நாயனார், காடவர் மன்னனான குணபரன்
புதல்வன் முதலாம் நரசிம்மனுடைய சேனாதிபதியாக விளங்கி
வாதாபி மன்னனை வெற்றி கொண்டதை யாவரும் அறிவர்.
திருச்செங்காட்டங்குடிக்கு வந்து தம் வாழ்நாட்களை சிவனைப்
பணிவதில் கழிக்கத் துணிந்ததை கேள்வியுற்ற மன்னன்
விடையளித்து அந்நாயனார்க்கு வேண்டுவன தந்து சிவபக்தி
குறையாது நாடெங்கும் விளங்கச் செய்தான். இரண்டாம்
நரசிம்மன் காலத்தும் சிவமதத்திற்கு பணிகள் நடந்தன.
முக்கியமாக காஞ்சியில் ராஜசிம்ம பல்லவேச்சுரம் கட்டுவித்
தான். இவன் பட்டமகிஷி ரங்கபதாகை ஒப்பற்ற மகேந்திரேசு
வரர் கோயிலில் சிவனுக்கு ஓர் அழகிய கிருகம் ஏற்படுத்
தினாள்.

பின்னர் இக்காடவ குலத்தில் தோன்றிய சிவமதத்தின்
பற்றுக்கோடாக விளங்கிப் பிற்காலத்து 63 சிவனடியார்களுள்
இருவராகக் கருதப்படும் தவப்பயன் பெற்ற மன்னர்கள்,
ஐயடிகள் காடவர்கோனும், கழற்சிங்க நாயனாரும் ஆவர்கள்
என்று சேக்கிழார் அருளிச் செய்த பெரிய புராணத்தால்
தெரியவரும். கழற்பெருஞ் சிங்கனார் போரில் பெருவன்மை
யுடைய வீரர் என்றும், வீரக்கழல் அணிந்த அக் காடவர்
கோன் வடநாட்டை தனதாட்சிக்குட் படுத்தினார் என்றும்,
பின்னர் சைவ மதத்தில் தனது நிகரற்ற பக்தியால் சிவனடி
யார்களைப் பெரிதும் பாராட்டினார் என்றும், ஒருமுறை
திருவாரூர் சிவபிரானை தம் பத்தினியுடன் தரிசிக்க வந்த
பொழுது, அவ்வம்மையார் திருப்பூமண்டபத்தின் தரையில்
கிடந்த பூ ஒன்றை அறியாது முகந்த குற்றத்திற்காக
மற்றொரு சிவனடியாரால் மூக்கு அறுபட்டதையும், இரத்தம்
பெருக்குற்றதையும் கண்ட கழற்சிங்கர் சாந்தியடையாது,
குற்றம் செய்தது தன் பத்தினியின் கையன்றோ வென்று தன்
உடைவாளால் அதையும் வெட்டி வீழ்த்தினார் என்றும்,
அதைக் கண்ட சிவனடியார்கள் வியக்க அமரர் பூமாரி



பெய்து போற்றினர் என்றும் பெரிய புராணம் கூறும். மேற்
கூறிய இரு காடவ நாயனார்களை, சரித்திர ஆதாரம் பெற்ற
பல்லவ பரம்பரையிலினுள்ள மன்னர்களுடன் துணிவுடன்
ஒப்புறுதற்கு போதிய சான்றுகள் இன்னும் கிடைத்தில ;
விசனிக்கத்தக்கதே. எனினும் இவர்கள் தஞ்சைச் சோழ
வம்சத்து இரண்டாம் பரம்பரையின் முதலரசரான விஜயால
யனுக்கு காலத்தால் மிகவும் முற்பட்டவரே என்பதில்
ஐயமில்லை.

மற்றொருவர் சிம்மவர்மன் என்ற காடவரசர். இவர்
தனக்குற்ற வெண்குஷ்ட நோயைப் போக்கிக்கொள்ளும்
பொருட்டு, சிவன்மீதுள்ள எல்லையற்ற பக்தியால், தில்லையை
அடைந்து, கோயிலுக்கு எதிரே உள்ள சிவகங்கையில்
மூழ்கினர். அதன் பயனாக அவர் உடம்பு சிவப்புற்று,
நோய் நீங்கி சந்தோஷமடைந்தார் என்றும், சிவமதத்திற்கும்
சிவனடியார்களுக்கும் பலவிதத்தாலும் தொண்டு புரிந்தனர்
என்றும், தலபுராண வரலாறுகளால் போதரும். சிவப்புற்றது
தோன்ற ஹிரண்யவர்மன் எனப் பெயர் பெற்றார்.

பிற்காலத்தில் ராஜமார்த்தாண்டன் என்ற அபராஜிதன்
காலத்தில் திருத்தணியில் உள்ள திருவீரட்டானேசுவரர்
கோயில், நம்பி அப்பியைக் கொண்டு, கட்டுவிக்கப் பெற்றது
என்றதும், திருஒற்றியூர் தலத்துக் கோயிலுக்கு இம்மன்னவன்
காலத்துத் தானங்கள் பல உள என்றும் கல்வெட்டுகளால்
தெரியலாகும்.

இவர்களுக்குப் பின்னர் இக்காடவ குலத்தில் மிகுந்த
சைவ மதப்பற்றுடன் விளங்கினவர் கோப்பெருஞ்சிங்கன்
என்ற பிற்கால மன்னர்.

காடவ குலத்து அபராஜிதன் காலத்திற்கு முன்னமேயே
பல்லவ ஏகாதிபத்தியத்திற்குக் கீழ்ப்பட்ட நிலையிலிருந்த
சோழர் கிளையினர் குலத்துத் தோன்றின விஜயாலயன்
என்னும் வீரன் சோழ பரம்பரையை தஞ்சையில், முத்தரை
யரை வென்று தாபித்தான். அவன் மகனான ஆதித்ய சோழன்
அபராஜிதனைக் கொன்று பல்லவ நாட்டையும் கைப்பற்றினான்.
அது முதல் பல்லவர் ஏகாதிபத்திய நிலையை யிழந்து சோழாதி

இம்முப்பகுப்பையே தமிழ் இலக்கண நூல்கள் அவன், அவள், அவர் அல்லது அவர்கள், அது, அவை என ஐந்தாகச் சொல்லும். இவற்றைமுறையே ஆண்பால்,பெண்பால்,பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்றும் இலக்கண நூல்கள் கூறும்.

ஆயின், இலக்கண நூல் சாத்திரங்களுக்கு மாறுபட்டனவோ ? இலக்கணங்கள் மொழியின் சாத்திரங்கள் தாமே என்ற ஓர் ஐயந் தோன்றலாம். நுட்பமாக நோக்கின் ஐயம் தோன்றாது. ஒன்றோடொன்று சேர்ந்தே இரண்டெனும் எண் உண்டாகின்றதேயன்றி இரண்டென்பது ஓர் தனிப்பெண் அன்று என்பது ஆய்ந்து பார்ப்போர் அனைவரும் அறிவர். அதுபோல ஆண்பால் பலவோ அல்லது பெண்பால் பலவோ அல்லது அவ்விருபாலின் கூட்டமோ சேர்ந்து. பலர்பால் என்பது ஒன்று உண்டாகிறதேயன்றிப், பலர்பால் என்பது தனித்த ஓர் பாலன்று. இங்ஙனமே ஒன்றன்பால் பல சேர்ந்தே பலவின் பால் உண்டாகின்றது. ஆகலின் அதுவும் ஓர் தனிப் பாலன்று.

வடமொழி ஆண் பெண் அலி என மூன்று பாலே சொல்லும், மாதவச் சிவஞான முனிவர் ஆண் பெண் அலி என்றாற்போலும் உலகத் தொகுதி என்பர். தமிழ் இலக்கண நூல்கள் சிறுவர்களுக்கு எளிமையாயிருக்க ஐம்பாலாகக் கூறியதேயன்றி வேறன்று. ஆதலால் இலக்கணங்கள் மாறுபட்டன என்று எண்ணவேண்டா.

எனவே உலகப் பொருள்கள் பலவாயினும் நாம் அவற்றை எல்லாம் இம் முப்பகுப்பில் கூறிவிடுகின்றோம். ஆனால் வாக்கு மனங் கழிய நின்ற மறையோனாகிய இறைவன் முன்கூறிய முப்பாலுமன்றே. ஆதலால் அவனை எப்பாலால் கூறுவது. அவன் ஆணுமன்றே ; பெண்ணு மன்றே ; அதுவும் மன்றே. அவனவ னதுவெனு மவைகளி லொரு பொருள் இவனென உணர்வுகொ டெழுதரும் உருவினன யிற்றே. நமக்குத் தெரிந்த பாலோ இம் மூன்றுதானே. இம்



மூன்றைவிட்டு நாம் அப்பாற் செல்லவும் முடியாதே என்ன செய்வது. ஆதலால் நாமறிந்த ஆண்பாலில் வைத்து அவனென்று கூறிவிடலாமே. அதனால் என்ன குற்றம். ஆண்பால்தானே ஒருவகையில் சிறந்தது என்று தோன்றலாம். ஆனால் அதுவும் கூடாது. ஏனென்றால் இறைவன் ஆணாக மட்டுமில்லையே. பெண்ணாகவுமிருக்கின்றானே. அன்றியும் தக்ஷிணாமூர்த்தியாகிய துறவறக் கோலத்திற் கூடப் பெண்ணை விட்டுப் பிரியாமலே இருந்ததாக "மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து மறையோது மெங்கள் பரமன்" என திருஞானசம்பந்தர் கூறுகின்றாரே. ஆதலால் பெண்ணாகச் சொல்லிவிடலாமே, இதிலென்ன குற்றமிருக்கின்றது என்றும் எண்ணலாம். இறைவன் தனியே ஆண் வடிவத்துடனோ அல்லது பெண் வடிவத்துடனோ இருந்தால் அவனென்றோ அல்லது அவளென்றோ கூறிவிடலாம். ஆனால் இடப்பாதி பெண்ணுருவாகவும் வலப்பாதி ஆணுருவாகவும் இருக்கின்றது. "ஒன்றே உடம்பு அங்கு இரண்டே இடும் பங்கு" என்பர் திரு. குமரகுருபர சுவாமிகள். திருவுருவோ ஒன்று. தன்மையோ இரண்டு. ஆதலால் அவனென்றோ அவளென்றோ கூறமுடியாது. அவனென்னும் சொல்லில் அவள் அடங்காது அவளென்னும் சொல்லில் அவன் அடங்காது. ஆதலால் என்ன செய்வது. முடியாத செயலை விட்டுவிடுவதுதான் அறிவுடைமை என்று எண்ணலாம். ஏன் நாம் ,விடவேண்டும் உழைப்பின் வாரா உறுதிகள் இலவே ஆதலின் உழைப்போம், உறுதி கிடைப்பது உறுதி.

இறைவனும் இறைவிக்கும் திருவுரு ஒன்றுதானே. ஆதலால் ஒன்று என்றே தொடங்குவோம். தொடங்கவே திருவுரு ஒன்று என்பது தோன்றிவிட்டது. பின்னர் ஆணும் பெண்ணும் கூடிய பன்மையைக் குறிக்கப் பலர்பால் விகுதியாகிய அர் என்பதை அவ்வொன்றுடன் சேர்ப்போம்.